A. M. D. G.

# பங்கிராஸ்

அல்லது

## பூர்வீக சுரங்க சபையின்

விநோத

# விர்த்தாந்தம்.

இஃது

சேசுசபைக் குருக்களில் ஒருவரால்

இயற்றப்பட்டது.

திருச்சினப்பள்ளி

அர்ச். சூசையப்பர் கல்விசாஸ்திர மடத்து

அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1896

CUM PERMISSU SUPERIORUM.

# பொருள் அட்டவணை.


| அதிகாரம். | பொருள். | பக்கம். |
|---|---|---|
| | **முதல் பாகம்.** | |
| | **சமாதான காலம்.** | |
| i | கிறீஸ்துவக் குடும்பம், தாயும் மகனும் ... | 5 |
| ii | வேதசாட்சியின் செல்வ புத்திரன் பங்கிராஸ். | 11 |
| iii | தாய் தன் மகனை நேர்ந்தது ... ... | 21 |
| iv | அஞ்ஞானக் குடும்பம், தந்தையும் மகளும் ... | 30 |
| v | செல்வப் பாங்கி, அக்நேசி ... ... ... | 48 |
| vi | விருந்தினர் பந்தி ... ... ... ... | 57 |
| vii | கதாப்பிரசங்க சாஸ்திரியார் ... ... | 63 |
| viii | அக்நேசி, சீரா, செசீலி: உடைமையும் வறுமையும் ஒருவழி செல்லல ... ... | 71 |
| ix | இரண வீர சூரன், சிபஸ்தியார் ... ... | 83 |
| x | தவறி விழுவோர்க்கு ஊன்றுகோல் ... | 96 |
| xi | நரியுங் கோநாயும் ... ... ... ... | 108 |
| xii | மந்தைக்குள் நுழைந்த நரியுங் கோனும் அடாதது செய்பவன் படாதது படுவான்... | 114 |
| xiii | கிராம வனப்பும் வளமையும் ... ... | 127 |
| xiv | குரோமாசியன் கிராமம் ... ... ... | 141 |
| xv | துர்குவாதன்: குடியுஞ் சூதுங் கொல்லும் விஷமாம் ... ... ... ... | 154 |
| | **இரண்டாம் பாகம்.** | |
| | **யுத்தகளம்.** | |
| i | தீயோஜெனன்: சுரங்க ஸ்தலங்களின் விசாரணைக் கர்த்தா ... ... ... | 173 |
| ii | சுரங்கங்களைச்சார்ந்த விவரங்கள் ... ... | 182 |
| iii | இராஜ ஆலோசனைச் சங்கம் ... .. | 190 |
| iv | சகோதர சாமத்துரோகம்... ... ... | 202 |
| v | கன்னிகா இரத்னம்... ... ... ... | 208 |

| அதிகாரம். | பொருள். | பக்கம். |
|---|---|---|
| vi | அக்நேசியின் கிராமம்: துன்பமும் இன்பமுஞ் சுழலுஞ் சக்கரம் ... ... ... | 214 |
| vii | இராஜ சட்டம் ... ... ... ... | 223 |
| viii | இராஜ சட்டம் போன கதி... ... ... | 235 |
| ix | விபரீத வியாக்கியானம் ... ... ... | 242 |
| x | சுரங்கத்தில் நுழைந்த நரிக்கூட்டம்... ... | 252 |
| xi | முதல் புஷ்பம் : செசீலி ஜெயசீலி ... ... | 265 |
| xii | நீதியுந் தயையும்: அரசன் அன்று கொல்லுந் தெய்வம் நின்று கொல்லும்... ... | 280 |
| xiii | பழிவாங்கும் இருவகை வழி ... ... | 293 |
| xiv | ஆஸ்தான சமஸ்தான வேலைகள் ... ... | 366 |
| xv | சிறைக்கூடம் ... ... ... ... | 313 |
| xvi | வழித்துணை ஆதாரம் ... ... ... | 319 |
| xvii | கடைசி யுத்தம் ... ... ... ... | 336 |
| xviii | கிறீஸ்துவப் போர்வீரன் ... ... ... | 350 |
| xix | சிறை மீட்சி ... ... ... ... | 360 |
| xx | போன உயிர் மீண்டும் வரல் ... .. | 372 |
| xxi | வேதசாட்சியின் வெற்றி முடி .. ... | 379 |
| xxii | சிறைக்கூடத்தின் அலங்காரம் ... .. | 389 |
| xxiii | அக்நேசியின் ஜனன நாள் ... ... ... | 400 |
| xxiv | பகையும் பழியும மதியை மயக்கும்... ... | 413 |
| xxv | குருவும் பண்டிதரும் ... ... ... | 429 |
| xxvi | ஞானோதயப் பிரகாசம் ... ... ... | 434 |
| xxvii | மீரியாவின் வரலாறு ... ... ... | 446 |
| xxviii | சுகிர்தானந்த காலகதி ... .. ... | 454 |

## மூன்றும் பாகம்.

### வெற்றிமாலை.

| | | |
|---|---|---|
| i | கீழ்த்திசை அந்நியன் ... ... ... | 463 |
| ii | வேத விரோதியின் அதோகதி ... ... | 470 |
| iii | பாக்கிய சம்பூரணம் ... ... ... | 477 |

அநாதிநம.

# பங்கிராஸ்

அல்லது

# பூர்வீக சுரங்க சபையின் விநோத விர்த்தாந்தம்.

இஃது
சேசுசபைக் குருக்களிலொருவரால்
இயற்றப்பட்டது.

*தெண்ணஞ்சூழியிற செவ்விதட்டாமரைப்பள்ளி
வண்ணம்பார்ப்பொடு மகிழ்வெழத்துஞ்சிய அன்னம
எண்ணந்தூவிய வேடனுசகஞ்சி வந்தெரிகான்
சண்ணம்பார்ப்பொடு கலுழ்ந்தெனமகளொடு கலுழ்வாள்.*

தேம்பாவணி.

TRICHINOPOLY:
ST. JOSEPH'S COLLEGE PRESS

1896

# முகவுரை.

---

திருச்சபையின் ஆதிதுவக்கத்தின் முதல மூன்று நூறு ருண்டுகளில் சத்தியவேதக் கிறீஸ்துவாகள் இருநத நிலை மையும அவர்கள் சீவிய வரலாறும வெகு விநோதமும ஆச் சரியமுமுள்ளது. வேத விரோதிகளான இராஜாக்களுந தே சாதிபதிகளுஞ் சத்தியவேதத்தை முழுதும அழித்து நிர்மூ லமாக்கும்படி தங்கள் சத்துவமெல்லாங் கூட்டிப் பெருங் கலாபனைகளை எழுப்பிக் கிறீஸ்துவர்களை நூறு நூறா யப் பிடித்துச் சிறையில் அடைத்தார்கள். அடிமைகளைப் போல் கடினவேலை அவர்கள் செயயுமபடி தண்டித்தார்கள். இரததம பிரளயமாய்ச் சிநதுமபடி அடித்து வருத்தினார் கள். துன்பவேதனைப்படுத்தி சிததிரவதைசெயது உயிரை அணு அணுவாய்ப் பறித்தார்கள். கிறீஸ்துவர்களோவெ னில் சேசுநாதர்சுவாமிக்காக பாடுபட்டு உயிா இழப்பது த ங்களுக்கு ஆநநதா க்கியமெனறு எண்ணி சநதோஷத்துட ன சகல துன்ப வேதனை நிநதை அவமானங்களைப பொறுத் து சத்தியவேதத்தின உண்மைககுச சாட்சியாகத் தங்கள் உயிரைக்கொடுத்து வேதசாட்சிகளானார்கள.

இந்தப் பூர்வீககாலத்துக் கிறீஸ்துவாகளுடைய தர்ம ந டசகையும் வேதத்தில் அவர்கள் காணபிதத மன உறுதியும எவாககும ஆச்சரியம உண்டாகக ஏதுவானது. இதில வி நோதமும் அற்புதமும் நிறைநத வாததமானஙகள பல உள. இவைகளில் சிலவறறைத தெரிநதுகொணடு சரிததிரமே ரையாய் ஒன்றுககுப்பின் ஒனறு இவைகளைச சரமாயககோ ர்த்து எவர்க்கும் பிரயோசனமாமபடி விவரிததுககாட்ட இ ப்புஸ்தகத்தை எழுதத்துணிநதோம்.

பூர்வீககாலத்துக் கிறீஸ்துவர்களின் விநோதவிர்த்தாந்த நடவடிக்கைகளைக் காட்டும்போது அவர்களைச் சூழ்ந்திருந்த அஞ்ஞான ஜனங்களின் ஆசார ஒழுக்கமுறைகளையும் பகுத்துககாட்டினால், இருவருக்குமுள்ள வித்தியாசம் உள்ளங்கை நெல்லிககனிபோல எவர்க்குந்தெளிவாய்ப் புலப்படுமெனபதால அககாலததிலிருந்த அஞ்ஞானிகளைச் சேர்ந்த விநோதவிர்த்தாந்தங்களையும வாய்நத இடங்கள்தோறும இப்புததகததில் காணலாம. ஆனால் அஞ்ஞானிகளைப்பற்றி நாம இங்கு கூறும வர்த்தமானங்களில அவலக்ஷணமும அயோக்கியமுமான விஷயங்கள் யாவற்றையும நீக்கி சிறுவர் முதலாய் யாதோர் மோசமின்றி வாசிக்கத்தகுந்தவைகளை மாத்திரஞ் சேர்த்துவைத்திருக்கினறோம.

திருச்சபை ஆதியில் முதல் மூன்று நூற்றாண்டில் அஞ்ஞானிகளான கொடுங்கோலமன்னர் செய்த வேதக் கலாபனைகளின் நிமித்தம உரோமாபுரியிலிருந்த கிறீஸ்துவர்கள் பூஜை தேவாராதனை முதலிய வேத ஆசார முறைகளைப் பயமின்றிச் செய்யும்படியாகப் பூமிக்குள் விஸ்தாரமான சுரங்கங்கள் வெட்டி அங்கே இரகசியமாயககூடித் தேவாராதனை நடப்பித்து வந்ததால அந்தக்காலத்துச் சபைக்குச் சுரங்க சபையென்ற நாமஞ் சாதாரணமாய்க் கொடுககப்பட்டது. அச்சபைக்குரிய சில விநோத விஷயங்களை நாம இங்கு விவரித்துக்காட்டப்போவதால் இந்நூலுக்குப் பூர்வீக சுரங்க சபையின் விநோத விர்த்தாந்தம என்ற பெயர் சிறப்புற்றது.

A. M. D. G.

# பங்கிராஸ்

அல்லது

# பூர்வீக சுரங்க சபையின் விநோத விர்த்தாந்தம்.

## முதல் பாகம்—சமாதான காலம்.

## முதல் அதிகாரம்—கிறீஸ்துவ குடும்பம்.

### தாயும் மகனும்.

சேசுநாதர்சுவாமி மனுஷாவதாரமான மூன்றாம நூற்றாண்டின்காலத்தில செல்வத்திலும நாகரீக மேன்மையிலும மிகச்சிறந்து நீர்வளம் நிலவளம யாவும பூரணமாய அமையப்பெற்று உலகத்துக்கு ஓர் ஆபரணமாக விளங்கிய இராஜதானிபட்டணம உரோமை மாநகரே என்று தேசசரித்திர நூலாசிரியர் ஒரே சம்மதமாய எழுதிவைத்திருக்கின்றார்கள்.

அந்தக்காலத்திலிருந்த உரோமானர் இராட்சியபரிபாலன சட்டதிட்ட ஏற்பாடுகளிலும போர்வீர ஆண்மையிலுஞ் சாதுரிய சாமர்த்திய திறமையிலுஞ் சாஸ்திர கலைக்கியான அறிவிலும் அபிவிர்த்திபெற்று மற்றெந்தத்தேச ஜனங்களைப்பார்க்கிலு மிகவுஞ் சிறந்து விளங்கி பேரோங்கிவந்தார்கள்.

இவர்கள் இலௌகீக தந்திர நூற்களில் எவ்வளவு நிபுணராய் மேன்மைபெற்றிருந்தாலுந் தேவ ஞான அறிவின் விஷயத்தில் குருடராய் அடர்ந்த அஞ்ஞான இருளில் அமிழ்ந்தியிருந்தார்கள். இவர்களில் பெரும்பான்மையோரான சமானிய ஜனங்கள் தங்கள் மனஞ் சென்றவழி தினஞ்சென்று இஷ்டம்போல் பற்பலவகையான தேவர்கள் தேவதைகள் குலதெய்வமென்று கோடிக்கணக்கான குரூர ரூபிகளை ஏற்படுத்தி அவர்களுக்கு விதவிதமான ஆலயங்களைச் சிறப்பாய்க் கட்டி பூஜை ஆராதனை தூபதீபஞ் சடங்குமுறைகளைச் செய்துவந்தார்கள். சிறுபான்மையோரான கற்றுத்தேர்ந்த புத்திமான்கள் தங்கள் தேசத்தார் வணங்கி வழிபட்டுவருங் கோடிக்கணக்கான தேவர்கள் சுரீங்கொண்டவன் கண்ட கனவென்று இவர்களை நம்பாமலும் இவர்களின் சிலைகளைக் கையெடுத்து வணங்காமலும் சிலர் தங்கள் மனதுக்கு இசைந்த ஒரு முகூர்த்தத்தை வழிபட்டுஞ் சிலர் வழிபடாமலும் நடந்துவந்தார்கள்.

ஆகிலும் இந்த அஞ்ஞான உரோமர்களின் மத்தியில் சேசுநாதருடைய பரிசுத்த வேதந் திருச்சபையின் ஆதி உற்பவகாலத்திலேயே ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. சேசுநாதருடைய ஸ்தானத்திலிருந்து திருச்சபையை ஆண்டு நடத்தும்படி பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்குள்ளிருந்து தெரிந்துகொள்ளப்பட்ட அர்ச். இராயப்பர் உரோமா அரசாட்சியின் இராஜதானியாகிய உரோமை மாநகரைத் தமது முக்கிய கெடிஸ்தலமாகத் தெரிந்துகொண்டார். அர்ச். இராயப்பருஞ் சின்னப்பரும் இந்தப்பட்டணத்திலேதான் தங்கள் இரத்தத்தைச் சிந்தி உயிரைப் பலியாக ஒப்புக்கொடுத்து வேதசாட்சி முடி பெற்றார்கள். வேதசாட்சிகளின் இரத்தம் வேதத்தின் வித்தானதால் அந்த நாள்முதல் சத்தியவேதந்

கொஞ்சங் கொஞ்சமாய் நாலாபக்கத்திலும பரம்பிவந்தது
பரம்பினாலும் உரோமைமாநகரில இருந்த கிறீஸ்துவர்கள்
கொடுங்கோலரான அஞ்ஞான இராஜாக்களின் துன்பத்துக்
குப் பயந்து தாங்கள் இருக்கும இடந்தெரியாமல ஒளிந்து
மறைந்து வெகு இரகசியமாய சத்தியவேத முறைமை ஒழு
ங்குகளை அநுசரித்துவந்தார்கள்.

இப்படி இருக்குங்காலத்தில உரோமை மாநகரில மகா
பிரபுத்துவ வங்கிஷத்தில் பிறந்த லூசீனு என்னும புண
ணியவிதவை ஒருத்தி இருந்தாள். இவள் சத்தியவேதக்
கிறீஸ்துவளாய அறநெறி ஒழுக்கத்தில் அணு அளவும பிச
காமல் நற்குணம நற்செய்கைகளால சிறந்து விளங்கிவந
தாள். இவளுடைய புருஷன் சில வருஷங்களுக்குமுன் எழு
ம்பிய கொடிய வேத கலகத்தில் கிறீஸ்துவனாயிருப்பது தெ
ரியப்படவே துஷ்டர் இவனைப்பிடித்து கிஷ்டூர அக்கிரமங்
கள் செய்து படாதபாடு படுத்தினபின்பு வேதத்துக்காக இ
வனைக் கொன்றுபோட்டார்கள்.

சிறந்த புண்ணிய சீலரான தாய்தந்தை இருவருடைய
தவப்பேறின பலனாக இவர்களுக்கொரு செல்வ புத்திரன்
இருந்தான். அவன் பெயர் பங்கிராஸ் பிள்ளை நாளொரு
மேனியும பொழுதொருவண்ணமுமாய தாயார் கண்முன
வளர்ந்து புண்ணிய ஒழுக்கப் பயிற்சியில் விடா ஊக்கத்து
டன் நடந்து தன் தாயார் இருதயம் சந்தோஷத்தால பூரி
க்கும்படி செய்துவந்தான்.

பிள்ளைவளர அவனுக்குத் தகுந்த வித்தியாப்பியாசஞ
செய்துவைக்கத் தாயார் வெகு கவலையாயிருந்து அஞ்ஞானி
கள நிறைந்த அந்த ராஜதானி நகரில அறிவும நல்லொழுக்
கமும் கற்றுக்கொடுக்க ஏற்ற பள்ளிக்கூடம எதுவென்று
தேடி விசாரித்தாள். விசாரித்துத் தேடினும ஏற்றபள்ளிக்

கூடம இதுவென்று அறிவது வெகு கடினமாயிருந்தது. கிறீஸ்துவர்கள் எவரொன்று பகிரங்கமாய் வெளியே அறிய கூடாததினிமித்தம எந்தப்பள்ளிக்கூடத்துக்கு மகனை அனுப்பலாமென்று பலநாள் யோசித்து கடைசியில். அங்கிருந்த பல பள்ளிக்கூடங்களில் நல்லொழுக்கப் படிப்பினையில் சற்றுச் சிறந்ததாக பெயர் எடுத்திருந்த ஓர் பள்ளிக்கூடத்துக்கு மகனை அனுப்பினுள.

இந்தப் பள்ளிக்கூடததில் பங்கிராஸ் படித்து வந்தான். நமது சரித்திரந துவக்கும இந்தச்சமயத்தில் அவனுக்குப் பதினலுபிராயம. பதினலுபிராயமாயினும தன வயதுக்குமேல் வளர்ந்தவனுகத் தோன்றினன். சந்திரவிமபம போன்ற அவன் முகம மகா இலக்ஷண வடிவுள்ளது. நீலமொத்த கண்களும மலர்ந்து பூத்த ரோஜாபுஷ்பத்தின் இதழ்போன்ற அவன் உதடும அவன் பேசுங்குரல் சப்தமும நடை உடை பாவனையுஞ் சரீர அசைவாதியந்தமும எல்லாம முறையே பின்ன பேதமின்றி இருப்பதைப் பார்த்தவர்கள் இவன் மகாப் பிரபுவின பிள்ளையாயிருக்கவேண்டுமென்று இயல்பிலே சொல்லுவார்கள். அன்றியும இவனது விரிந்து படர்ந்த நெற்றியின்மேலே தலைமயிர் பொன்சுருள்போல் சுருண்டு திரண்டு தூங்கி விழுவது பிள்ளையின அறிவு விசாலத்தைக் குறித்துக்காட்டும. அவன் முகத்தில் தோன்றும வசீகரகளையோவெனில் அவன் அன்பும அருளுஞ் சிறந்த தயாளமுமுள்ள செல்வ புத்திரனென்று எவர்க்கும் விளக்கும. அக்காலத்திய உரோமானர் வழக்கப்படி முழங்கால்மட்டும தொங்கி விழும நீண்ட உடை உடுத்திகழுத்தில் தங்கத்தாலாய பதக்கமொனறு அணிந்திருந்தான்.

பங்கிராஸ் நாள்தோறும் பள்ளிக்கூடம் விட்டவுடனே முற்றப் பிள்ளைகள் சாதாரணமாய் இங்குமங்கும்போய்

சுற்றித்திரிந்து பேசிச் சிரித்து விளையாடி மகிழ்ந்து வெகு நேரமானபின் வீட்டுக்குப் பொய்ச்சேர்வதுபோலே செய்யாமல் தனக்கு வீடு உண்டு, பள்ளிக்கூடம் உண்டு என்று உடனே தன் வீட்டுக்கு நேரே வந்துவிடுவான். அப்படிச் செய்து வந்தவன் இன்று அஸ்தமித்தாலும் வீட்டுக்கு இன்னம் வரவில்லை. இதுமட்டுமில்லாத தாமதம் இன்று உண்டானது.

ஞானசீலி யென்ற இவன் தாய் வீட்டிலிருந்து சந்திரோதயத்துக்குக் காத்திருக்கும் ஜாதகபட்சிபோல் மகன் வருகைக்கு எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். துன்பத்தின் கையில் பிறந்து வளர்ந்தவள்போல அவள் முகம் களையின்றி துக்க நோக்கமாயிருந்தது. இருந்தாலும், மேலான ஞான அறிவின் சுடர் அவள் முகத்துக்கு ஓர்வகையான உன்னத சிறந்த இலக்ஷண சாயலைக் கொடுத்தாற்போலே தோன்றியது. தலைமயிர் தக்க வயது வருமுன்னும் நரைத்துப் போய் முகத்தில் திரையும் விழுந்திருந்தது. தன்மேல் ஆபரணம் அலங்காரம் யாதொன்றுமின்றி வெகு சாதாரண உடுப்பு அணிந்திருந்தாள். விதவையென்று காட்டும் அடையாளமான ஊதாநாடா ஒன்றுமாத்திரம் தேச வழக்கப்பிரகாரம் அவள் உடுப்பின்மேல் தைத்திருந்தது. அவள் அணிந்திருந்ததில் விலையுயர்ந்த ஆபரணமென்று சொல்லும்படியானதேதென்றால், தங்கச் சரட்டிலே ஏதோ ஓர் சிறு செப்புக்கோர்த்து தன் கழுத்தில் கொஞ்சம் மறைவாய்ப் போட்டிருந்தாள். இச்சிறு செப்புக்குள் உயர்ந்த பொருளொன்று இருப்பதினாலேதான் அந்தச் செப்பை தன்மேலுடைக்குள் வெகு பத்திரமாய் மறைத்து வைத்திருப்பதாகத் தோன்றினது.

நாம வாணிகத் துவக்கும் இந்தச் சமயத்தில் வெகு

விசித்திரமான கைவேலை ஒன்று செய்துகொண்டிருந்தாள். வேலையின் நோக்கத்தைப் பார்த்தால், அவள் செய்வது தன சுய பிரயோசனத்துக்கல்ல. பொன் ஜரிகையாலிழைத்த வஸ்திரத்தினமேல உயாந்த மேல்த்தரமான தங்கச்சரடுகள் கூட்டி அலங்காரமான புஷ்பங்களாக சித்திரித்து சமீபத்திலிருந்த சிறு பெட்டியிலிருந்து முத்துரத்னங்களை ஒவ்வொன்றாய எடுத்து பொன்னுலிழைத்த போாவையில் வைத்து வெகு விசித்திர வேலைப்பாடான தையல் வேலை செய்துகொண்டிருந்தாள். இவையெல்லாம பார்க்கையில் லுசீனு என்பவள் தான் முன சுமங்கலியாயிருந்த செல்வ காலத்தில் அணிந்திருந்த விலை உயாந்த இரத்தினுபரணங்களைத் தேவாராதனைச சிறபபுககு உபயோகிகக எதத்னித்திருப்பதாகத் தோன்றுகினறது. இதின் விவரம இனிப்போகப் போக வெளியாகும.

இதுமட்டுமந் தான்செய்துவந்த வேலையின் பேரில் முற்றும் கவனித்துவந்த லுசீனு என்பவள் நேரம போகப்போக, கொஞசங் கவலையுற்றவள்போல் கலங்கத் துவக்கினுள். சமயத்துககுச் சமயங் கண்களை உயாத்தி கதவின் பக்கம ஏறிட்டுப் பாாப்பாள். ஏதோ சப்தங் கேட்பதாக யுத்தேசித்து உற்றுக் கேட்பாள். திறந்திருந்த சாளரவாயில் வழியாய் சூரியன் அஸ்தமான திசையை நோககிப் பாாப்பாள். மேசையின்மேலிருந்த மணல் மணிகள் விழுவதால் நேரங் காட்டுங் கடிகாரததில மணி என்னவென்றும ஐயோ! பொழுது போயிற்றே எனறும ஐயோ! பிள்ளைககு என்னமோ ஏதோ சமபவித்ததோவென்றும வெகு கவலைப்பட்டு.கண கலங்கி ஜலாந் ததுமபருக்கன் மனதுக்குள் பலவாறாய யோசித்துக்கொண்டிருக்கும்போது, மகள் வருங் காலடிச் சத்தங்

கேட்டு தாய் பூரித்து மகிழ்ந்த மனதுடனே எழுந்திருந்து மகனை எதிர்கொண்டழைக்க நடந்து சென்றாள்.

---

## இரண்டாம் அதிகாரம்.

### வேதசாட்சியின் செல்வபுத்திரன்: பங்கிராஸ்.

---

சருவேசுரன் சிருஷ்டித்து உலகத்தில் வைத்திருக்கும் கோடானகோடி ஜீவராசிகளுக்குள் தாயின் இருதயத்தில் தான்பெற்ற பிள்ளையின்பேரிலிருக்கும் சிநேகத்துக்குச் சமமானது யாதொன்றுமில்லை. அதற்கு அதுவே நிகர். லூசீனாவென்ற செல்வத் தாய் தன் மகன் வீட்டுக்கு வரத் தாமதமானதினிமித்தங் கவலை வருத்தமுற்றிருந்தவள் மகன் வந்தவுடனே அவள் இருதயம் பூரித்து பூரிக்க அவனை அன்பாய்க் கட்டி அணைத்து ஆயிர முத்தங்கொடுத்தபின்பு தன் கிட்டே உட்காரும்படி செய்தாள். பிள்ளை உட்கார்ந்தபின் அவன் அன்று வீட்டுக்குவர ஒரு மணிநேரம் மற்ற நாட்களைப்பார்க்கிலும் தாமதமானதின் காரணம் ஏதென்று அவன் முகநோக்கத்தைப் பார்த்தறியும்படி தாய் மகனை உற்றுப் பார்த்தாள். பார்க்கவே, மகனும் முகமலர்ந்து களங்கமற்ற நெஞ்சின் அறிகுறியாக ஓர் புன்னகை காட்ட தாயார் மனதிலிருந்த கவலையும் துக்கமுஞ் சூரியன் வீசுஞ் செங்கதிர் ஒளிமுன் மாறி மறையும் பனித்துளிபோல அறவே நீங்க தாயார் மகன்கையை தன் கையிலெடுத்து பின்வருமாறு வினவினாள்

"ஆ! என் கண்ணே! அருமை மகனே ஏன் இன்று இவ்வளவு தாமதஞ்சென்று வந்தாய்? வரும் வழியில் ஏதேனும் ஆபத்து நேரிடவில்லையல்லவா?"

"அம்மா! என் இனிய தாயே! அப்படி ஒன்றும் நேரிடவில்லை. எல்லாம் சந்தோஷம்; இவ்வளவு அவ்வளவென்று என்னாற் சொல்லிமுடியாது."

தாயார் தனக்கு நடந்தது யாதென்றறியும்படி காட்டின முகநோக்கத்தைக் கண்ட மகன் கிண் கிணி ஒலித்தாற்போல் புன்னகை கொட்டிச் சொல்லுவான்:—

"நல்லது அம்மா! உங்கள் இஷ்டம்போல் ஆகட்டும். அந்தந்த நாளில் எனக்கு வரும் நலமும் கெட்டதும் இன்னதென்று உங்களுக்கு நான் சொல்லத் தவறிப்போனால் எனக்குத் தூக்கமும் வராது சந்தோஷமுமிராது"

"கெட்டதும்" என்று பிள்ளை சொன்னதைக் கேட்ட தாய் ஏது கெட்டது நடந்திருக்கக்கூடுமென்று தனக்குள் யோசனையாயிருந்தாள்.

"அம்மா! எல்லாங் கேளுங்கள். நான் நேற்று வாசித்தபாடத்தில் சீத்தியரென்ற ஜாதியாரைப்பற்றி ஓர் விசேஷங்கண்டிருக்கிறது. இவர்கள் வீட்டிலே ஓர் கலயம் உறியில் கட்டித்தொங்குமாம். எந்த நாள் நல்ல அதிர்ஷ்ட நாளோ அந்த நாளில் வெள்ளைக்கல்லும் துர் அதிர்ஷ்ட நாளோ கருங்கல்லுங் கலயத்துக்குள் போட்டு மாதமுடிவில் நல்ல நாள் எத்தனை துர்அதிர்ஷ்டநாள் எத்தனையென்று எண்ணிப்பார்ப்பார்களாம். அம்மா நானும் அவ்விதஞ்செய்தால் எனக்கு நடக்கும் யாவும் உங்களுக்கு நான் வந்து சொல்லும் நாளில் வெள்ளைக்கல்லும் உங்களுக்குச் சொல்லாத நாளில் கருங்கல்லும் போடவேண்டியிருக்கும். ஆனால் இன்று எனக்கு நடந்தது எல்லாஞ்சொல்லலாமோ சொல்லத்தகாதோவென்று முதல்விசை எனக்கு ஓர் சந்தேகந் தோன்றுகிறது."

இதைக்கேட்டவுடனே தாயார் நெஞ்சம் வெகுவாய்ப் பதைத்துத் துடித்ததோ அல்லது என்னமோ ஏதோவெ

ன்ற அன்பின் கவலையால் அவளை அறியாமல் கண்கலங்கி ஜலம் ததும்பி நின்றதோ ஏதோ தாயார் இருந்த நிலையைப் பார்த்த மகன் உடனே அவள் கையைப் பிடித்து அன்பா யத் தன வாயில் வைத்து முத்தி செய்து வீணையே குரலெடுத்துப் பேசினாற்போல சொல்லுவான:—

"என மதுரதாயே! ஒன்றுக்கும பயப்படவேண்டாம உங்கள மகன தன் தாயார மனதுக்கு துக்கம வருவிக்கும்படி யாதொன்றுஞ செய்யவில்லை. என்றுஞ செய்யமாட்டான. அம்மா! இன்று எனக்கு நடந்தது யாவும நீங்கள அறியும்படி ஆசையாயிருக்கிறீர்களோ? அல்லது நான் தாமதமாய வரும்படி உண்டான காரணம இன்னதென்பதுமாத்திரம நான உங்களுக்குச சொலலவேண்டுமோ? அம்மா! உங்கள இஷ்டமென்ன?"

"மகனே பங்கிராஸ்! என கணணே! எலலாஞ்சொலலு. உனக்கு நடந்தது யாவும எதுவானாலும உன தாய் நான அறியவேண்டாமா?"

"நலலது அம்மா! எலலாம ஒன்றும விடாமல் உங்களுக்கு நான சொலலப்போகிறேன கேளுங்கள். நான பள்ளிக்கூடத்திற்குப்போய் படிப்பதற்கு இதுதான் கடைசிநாளென்று நீங்கள சொன்னீர்களே! இந்தக கடைசிநாள் எனக்கு வெகு பாக்கியமுள்ள நாள. என்றாலும, பல விநோதமான அசம்பவங்கள் இன்று நடந்திருக்கின்றன. இன்று காலமே சிறந்த நறகுணமுள்ள எங்கள் உபாத்தியாயா காசியூரன் என்பவா சானரோ உரைத்த வாக்கியமாக ஓர் சுலோகத்தைக்கொடுத்து அதற்குச சிறந்த நடையில வியாக்கியானமுரை ஒன்று எழுதும்படி என வகுப்பு மாணாககா யாவருக்கும் கொடுத்தார."

“மகனே! அந்த சுலோக மின்னதென்று உனக்குத் தெரியுமா?”

“அம்மா! ஆத்திரப்படவேண்டாம். எல்லாம உங்களுககுச் சொல்லப்போகிறேன். எங்களுக்குக் கொடுத்த சுலோகமிதுதான்.

சத்தியங் காக்கத் தன்னுயிா கொடுக்கப
புத்திமான் துணிவது யுகதியின்பயனே.

இநத வாக்கியத்துக்கு என் வகுப்பு மாணுக்கா வியாக்கியான உரை எழுதி முறை முறையாய் வாசித்தாாகள். இவர்கள் வாசித்ததைபபோல கேவலமுஞ் சாரமறறதுமான யாதொன்றும நான கேட்டதேயில்லை. அமமா நான் என் தோழரைப்பற்றிக் குறைவாயப பேசுவதாக நீங்கள் நினைக்கவேண்டாம. அப்படி அவாகள் எழுதினல் அது அவாகள் தப்பிதமா? என்ன செயவாாகள்? அஞ்ஞான இருளில் பிறநது அபத்தத்தைப் பாலோடு உணடுவளாநதா இவாகளுககுச சத்தியமாவது ஏதென்று தெரியுமா? தங்களுடைய வீண் சித்தாநதக் கொள்கைகளை ஸ்தாபிககச் உயிரைக்கொடுககும்படி என்ன மனேதைரியம அவர்களுக்கு உண்டாகலாம? ஆனல் கிறீஸ்துவனுக்கு எவவளவோ சிறந்த பொருள்! என் இருதயம் பதைத்து துள்ளித துடித்தது நான எழுதுமபோது நீங்கள் எனக்குச் சொல்லித்தநத உன்னத நறபுத்திகளும நான் என கண்ணல் நாளதோறும பாாத்துவரும அறநெறிபபயிறசியும எலலாம என நினைவில திரணடு கூடி ஊடர்நது மொயததது. வேதசாட்சி முடிபெறற செலவத் தநதையின புத்திரன நான அல்லவா? எபபடி என்மனம மெழுகுபோலிளகிக கரையாதிருககககூடும? அதலை வாசிக்கும்படி என் முறை வநதபோது என் மனதில் அககினிபோல் பற்றி எரிந்த ஆத்திரப்பற்றுதலினிமித்தம் புத்தி

மான்" என்பதற்குப் பதில் கிறீஸ்துவனென்றும் சத்தியமெ ன்பதற்குப பதில நமது பரிசுத்தவேதமென்றும் வாய் தவ றிச் சொல்லி கிறீஸ்துவனானவன் தான் அநுசரிக்குஞ் சத்தி யவேதத்திற்காக தன் உயிரைக் கொடுக்கும்படி துணிந்திரு ப்பது அவனுக்கு அழகென்றும் முறையென்றுங் கடனென் றும வியாக்கியான உரை எழுதி நான வாசித்தேன. நான் வாசித்ததைக் கேட்ட உபாத்தியாயா காசியான என்பவர் கி றீஸ்துவனென்ற மொழியைக் கேட்டமாத்திரந் திடுக்கிட்டு கணகலங்கி என்னைப்பார்த்து இரகசியமாய்: பங்கிராஸ் எச் சரிக்கை இங்கே சில துஷ்டாகள் விழிப்பாயிருக்கிறார்கள் எ ன்று சொன்னார்"

தாயார் இதைக்கேட்டு மகனை நோக்கிச் சொல்வாள்.

"மகனே! அப்படியானால் காசியான் கிறீஸ்துவனாயிரு ககவேண்டும. ஆ! எனக்கு எவ்வளவு சந்தோஷம, இவர் உ பாத்தியாயராயிருககும பள்ளிககூடத்திற்கு உன்னை நான் அனுப்பினதற்காக நித்திய ஸ்தோத்திரஞ் சாவேசுரனுக்கு உணடாவதாக. அப்பா மகனே! இநத ஆபததான காலத்தி ல நமது ஜெனம நாட்டிலும் நாம அநநியனைப்போல் பயந் து ஒளிந்து நமது சகோதரர் முகத்தையும நாம பா்க்காம ல் முகத்தை மூடிக காலக்ஷேபஞ் செயயவேணடியிருககின் றது. காசியான கிறீஸ்துவனென்று இவ்வூரார் அறிந்தால் இன்றே இவர் பள்ளிக்கூடங் கலைநது இருநத இடமும போ ன இடமுநதெரியாமல் அதோகெதியாய் முடிநதுபோகும். அதெல்லாமிருக்கட்டும, அதன்பின் நடநததென்ன? சொல் லப்பா என் கணணே."

"அமமா! நான வியாக்கியான விர்த்தி உரையை வா சிக்கையில் மாற்றிச்சொன்ன சில மொழிகளை அநேகா கவ னியாததால் வாசித்தானவுடனே எல்லாரும என் வாசகமே

கொஞ்சந் தன் பிள்ளையின் பக்கங் கவலையுடன் சாய்ந்து வாய்பதறி: "மகனே! என் உயிருக்குயிரே! அவன் கேட்டதற்கு நீ என்ன பதில்சொன்னாய்?" என, பங்கிராஸ் சொல்வான்:

"அம்மா! அவன் சொன்னதெல்லாம் முழுதும் தப்பிதமென்றும் அவனுக்காவது வேறே எந்தப் பிராணிக்காவது மனதறிய ஒன்றுந் தீமை நான் செய்ததே இல்லையென்றும் அவனிலும் நான் சமர்த்தனென்று பேரெடுக்கக் கனவிலும் நினைக்கவில்லையென்றுஞ் சொன்னேன். இப்படிச் சொன்னபின் அவனைப்பார்த்து: 'கோர்வீனு, நீ என்னைச் சண்டைக்கா கூப்பிடுகிறாய். அப்பா சண்டைக்கு நிற்க இடுப்புக்கட்டுவது என் குணமல்ல விளையாட்டுக்கென்று துவக்குஞ் சண்டை வினையமாய் முடிவது உனக்குத் தெரியுமே. அதுவும் நீ இப்போது என்மேல் கடுங் கோபமாயிருக்கும்போது, விளையாட்டுக்கென்றும் உன்கூட சண்டை செய்வேனு?' என்று இவ்விதஞ் சொன்னேன். இதற்குள் மற்றப் பிள்ளைகள் வந்து எங்களை வளைந்து சுற்றிக்கொண்டார்கள். அவர்கள் நோக்கத்தைப்பார்த்தால் எல்லாரும் எனக்கு விரோதமாயிருந்து என்னை நடுவில் இழுத்துவிட்டு வேடிக்கை பார்க்கலாமென்று எண்ணியிருந்ததாகத் தோன்றினது. இதைக்கண்டு நான் அவர்களைப்பார்த்து மலர்ந்த முகத்தோடு: 'என் இஷ்ட தோழரே! வந்தனம். எல்லா சுக செல்வ பாக்கியம் உங்களுக்கு உண்டாக. இதுமட்டும் உங்களோடு நான் சமாதானமாய்க் கூடி வாழ்ந்ததுபோலே சமாதானமாய் உங்களைவிட்டு நான் இப்போ போகின்றேன்' என்று நான் சொலலும்போது கோர்வீனன் முகங் கோபவெறியால் சிவக்க அவன் சினந்து சீறிச்சொல்வான்: 'அடே என்கிட்ட இதுவெல்லாஞ் செல்லாது; ஆனல்,'"—

பங்கிராஸ் இவ்வளவு சொன்னபின் முகம் வாடி உடல் நடுங்கி வாய் பதறி தேம்பிதேம்பி விம்மி அழுது "அம்மா தாயே! இதற்குமேல் நடந்ததைச் சொல்ல என்றற் கூடாது. எனக்குச் சொல்லத் துணிவில்லை." என்று சொல்லி கோவென்று வாயவிட்டழுதான்.

தாயார் இதைக்கேட்டுத் தன கையை மகன தலைமேல அன்பாய் வைத்து அவனைத் தேற்றிச சொலலுவாள்: "அப்பா மகனே! என் கண்மணியே சொல்லு. எலலாஞ் சொல்லு, சுவாமி முகத்தைப்பார்த்து நடநததெல்லாஞ் சொல்லு, நடநததெலலாம நீ எனககுச சொலலாதேபோனால் என் உடலிலே உயிர் தங்காது. கோர்வீனன் வேறே ஏதாகிலுஞ் சொன்னதுஞ் செயததுமுணடா?"

பங்கிராஸ் கொஞ்சநேரஞ் செபஞ்செயது தைரியமடைநதபின் கணணைத் துடைத்து சொல்வான் "அம்மா! கோர்வீனன் என்னைப்பார்தது அடே அதுவெல்லாம என்கிட்ட செல்லாது. இதுமட்டும் எங்களுககுத் தெரியாமல் எநத மூலையிலோ, சநதுபொநதிலோ முசலபோல பதுங்கிக்கொண்டிருநதாய். ஆனால இனி உன்னை நான எப்படியாவது வெளியே இழுத்துவிடாதேபோனால நானு ஆண்பிள்ளை. அதறகுள்ளே உன்னைப் பழிவாங்கும்படி நான் கங்கணங்கட்டியிருக்கிறேனென்று உனக்கு ஓர அடையாளங்காட்டும்படி இதோ வாங்கிக்கொள் என்று கையை ஓங்கி பலமெல்லாங்கூட்டி என்னைக் கன்னத்தில் அடித்தான. அடியின் பலத்தால் நான் கீழே உருண்டு பிரண்டு சுழன்று வீழ்நதேன். சுற்றிநின்ற பிள்ளைகளெல்லாருங் கொல்லென்று சிரித்து கெக்கலி கொட்டினார்கள்."

பங்கிராஸ் இதைச் சொன்னபின வாய்விட்டு அழவே கண்களிலிருந்து தண்ணீர் மாலை மாலையாய் ஓடிவந்தது.

கண்ணீர் சிந்தி அழுதவுடன் மனதில் உறுதி உண்டாக அப்பால் நடந்ததைத் தொடர்ந்து சொல்கின்றான்: "அம்மா! நான் அவமானமாய் அடிபட்டவுடனே என் தேகத்திலுள்ள இரத்தமெல்லாம் பொங்கிக் கொதித்தது; என்னை அவன் நிந்தித்துச சொன்ன இழிசொல் என் காதுக்குள் விடாது சத்தித்தொலிக்க எனக்கு அந்தச் சமயத்தில் முன் இல்லாத பிலன் வந்ததாகத் தோன்றியதால் என்னை அநியாயமாய் அடித்த அந்தப் பயலைப்பிடித்து கீழே மடக்கி அடிக்கு பதில் அடி வாங்கலாமென்றும் அப்படி நான் துணிந்து செய்தால் என்னைப் பழித்த மற்றப்பிள்ளைகள் என் துணிவைப் புகழ்ந்து என்னை மதிப்பார்களென்றும் இவ்விதமாகப்பலவாறான யோசனை வந்தது. அம்மா! பசாசின் சோதனை பெரும்படைபோல் என்னைச் சூழ்ந்தது. இப்படிப்பட்ட சோதனை எனக்கு என்றும் வந்ததேயில்லை. ஆ! சர்வேசுரா இப்போ அதை நினைக்கப் பயமாயிருக்கிறது."

தாயாரிதைக்கேட்டு வாய் பதறி உடல் நடுங்கி "என் கண்ணே! நீ அப்போ என்னசெய்தாய்?" என்று கேட்க அதற்கு பங்கிராஸ் சொல்வான "அம்மா! எனக்கு வந்த துர்யோசனையை என் காவல் சம்மனசுதான் ஜெயித்தார். அந்தச் சமயத்தில் எப்படி சேசுநாதர் சுவாமி கைப்பாஸ் அரண்மனையில் நிற்கும்போது துஷ்ட யூதன் ஒருவன் அவரைக் கன்னத்திலடித்தானென்றும் சுவாமி அவனைக் கோபியாமல் பொறுமையாய் நின்றானென்றும் நான் நினைத்து என்னை அடித்தவனுக்குச் சமாதானம் பேசி என் கையை நீட்டி சிநேகிதா! நீ செய்ததை நான் என் முழுமனதோடு பொறுத்துக்கொள்ளுகிறேன். சர்வலோக கர்த்தனும் உன்னை மன்னித்து ஆசீர்வதிப்பாராக என்று சொன்னேன். இதற்குள் உபாத்தியாயர் காசியான் தூரத்தினின்று நடந்ததெ

ல்லாம் பார்த்தபின் எங்கள்கிட்ட வரவே பிள்ளைகளெல்லாருங் கலைந்து பிரிந்து நாலாபக்கமும் போய்விட்டார்கள். கோர்வீனன் எனக்குச் செய்த கஷ்ட நிஷ்டூரத்துக்காக அவனைக் கோபித்துத் தண்டிக்கவேண்டாமென்று நான் என உபாத்தியாயனை மிகவுங் கெஞ்சிக் கேட்டேன். அவருங் கடைசியிலே நல்லதென்று சமமதித்தார். ஆ என் மதுர தாயே! இப்போது நீங்களே சொல்லுங்கள்; இந்த நாள் என் சீவியகால நாட்களுக்குள் மகா பாக்கியமுள்ள நாள் என்று நான் சொல்ல ஞாயமில்லையா?"

தாய் தன் மகன் கேட்ட வினவுக்கு மறுமொழியாக அவனை அன்பாய்க் கட்டி அணைத்து ஓர முத்தங் கொடுத்தாள்.

---

## மூன்றும அதிகாரம்.

### தாய் தன் மகனை நேர்ந்தது.

---

தாயும மகனும மேலே கூறியதுபோல சமபாஷித்துக கொணடிருக்கையில இராவிருள நெருங்கி அடாநது வநத தாய் வீட்டின் வேலைக்காரி மெலலென வநது மேஜைமேலிருநத பெருஞ் சுடர்விளககில் தீபமேறறிவநததுபோல சபதமினறி உளளே போனள். தாயாா தன செலவமகனுககு அனறு நடநத விநோத வர்த்தமானததைப்பறறித் தனககுள் சிநதித்துககொணடு மௌனமாயிருநதாள் ஆயினும இருதயம உளளொழுமபிப மனோசலனப்பறறுதல நிமித்தம கலங்கிப் பொங்கிறறபோலிருநததறகுக் காரணம், தாய என்ற ஏக்கமுமல்ல, அல்லது தன பிரியமகனுககு மிக அரிதான வேதமுறையும் நல்லொழுக்கமும் வெகு கவலையாயப

படித்துக்கொடுத்தபின் அவனும் அதற்கு இசைவாய்,கஷ்ட காலத்திலும் அணு அளவும பிசகாமல் நடந்தானென்கிற சிலாக்கிய எண்ணமுமல்ல, அல்லது சுவாமி தனக்குக் கொடுத்த ஏகபுத்திரன் இவ்வளவு பால பிராயத்திலேயே அறநெறி ஒழுக்கத்தில் வீரசூர ஆண்மையைக காட்டினனென்பதைப்பற்றி அவளடைந்த மகிழ்ச்சியுமல்ல. ஆகிலும் இவையெல்லாம் தாயாருக்குச் சந்துஷ்டியும் ஆனந்தமு முண்டாக்க ஏற்றவைகளல்லவா? "ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும், தன் மகனைச் சான்றோனெனக கேட்டதாய்" என்ற அநுபவித்தாநத வாக்கியம லூசீனவென்ற பாக்கியவதியினிடமாத்திரம பயனில்லாமற்போகுமா?

ஆனால் இந்தச்சமயத்தில லூசீனவென்ற புண்ணியவதியின் மனதிலெழும்பிய பற்றுதல் மகா உன்னதமானது. இந்த உஜிதகாலத்திறகாகவே வெகு ஆவலாய் அநேகவருஷம் காத்திருந்து சர்வேசுரனை இடைவிடாமல் மன்றாடி தனஜெபத்திற்கு அநுகூலங்கொடுக்கப் பிரார்த்தித்துவநதாள். அநேக குடும்பங்களில் பத்தி விசுவாசமுள்ள தாயானவள் தான்பெற்ற பிள்ளை தொட்டிலில் தூங்கும்போதே அதைச் சர்வேசுரனுடைய ஊழியத்துக்கென்று நேர்ந்துவிட்டபின் பிள்ளை வளர வளர அவன் கருத்தும் நோக்கமும் ஆசையுந் தேவ ஊழியத்திறகுச் சார்ந்ததாயிருக்கினறதோவென்று ஆவலாய்ப்பாாத்துச் சாவேசுரனுக்காகத் தன்பிள்ளையை வளர்த்துவருவாள். கடைசியில் தாயார் ஆசைப்பிரகாரம் பிள்ளை தேவபணிவிடைக்கு அமர்நது குருவாய் அபிஷேகம்பெற்று பீடத்திலேறி சேசுநாதரைக் கையிலேந்தும பாக்கியமடைநதால் தாயாரிருதயத்துக்கு இதுவே மோக்ஷமாகும். இவ்விதந தாயார் சாவேசுரனுடைய ஊழியத்துக்காக நேர்நத பிள்ளை தனக்கு ஏகபுத்திரனானல், தன் உயி

ருக்கு உயிரும் தள்ளாப்பிராயத்தில் தனக்கு ஒரு ஊன்று கோலுமாயிருக்கவேண்டிய பிராணபதமான மகனுல் தாயார் சர்வேசுரனுக்குச் செய்யும் இந்த நேர்ச்சி சகல நன்கொடைகளிலு மிகச் சிறந்ததென்றுஞ் சகல பலிகளிலும் அதிசிரேஷ்டமென்றும எவர்க்குந் தானேவிளங்கும! பூர்வ காலத்திலிருந்த சிமபோரோசா, பாககியவதியென்ற பக்தியுள்ள கிறீஸ்துவத் தாய்மாாகள் ஒரு பிள்ளையையல்ல, தங்களுக்கிருந்த பல பிள்ளைகளைச சாவேசுரனுக்கு முழுத் தகனபலியாகக் கொடுத்தார்களல்லவா? அவர்கள் மனத்துணிவு எத்தன்மைத்தென்று யாா சொல்லத் தரம்?

இதைப்போன்ற யோசனை லுசீனுள் மனதிலுணடாக அவள் தன் கண்களை மேலேயுயர்ததி மோக்ஷத்தைப்பார்த்துத் தனக்கு இச்சமயத்திற்கு வேண்டிய மனத்துணிவு உண்டாகும்படி பிரார்த்தித்தாள். தன உயிருக்குயிராகிய இனிய மகனைச் சர்வேசுரனுககுப் பூரணபலியாய் ஒப்புக்கொடுக்க பலநாள் ஆசையாயிருநதாலும அதை நிறைவேற்றுங் காலஞ் சமீபத்தில் வரவர அவள் மனதும் புண்ணுய் நைந்து பதைத்துத துடித்தது.

தாயார் மகனைப்பற்றி இவ்விதம யோசிததுக்கொண்டிருக்கையில் மவுனமாய் நின்ற மகன் எதைப்பற்றி யோசித்துக்கொண்டிருநதானே? தனக்கு வரவிருந்த உன்னத பதவியைப்பற்றி அவன் கனவிலும நினைக்கவில்லை. தான் இனி பெரிய அர்ச்சியசிஷ்டவராகி வணங்கப்பட தன் பெயரால் கட்டப்படுந் தேவாலயத்தில் திருயாத்திரைக்காரர் பலதிசையிலுமிருந்து வருவார்களென்னும எண்ணம அவனுக்கு அப்போது உண்டாகவில்லை. தன் பெயரைப் பூமியின் கடைசி எல்லையிலிருக்கும இதர ஜனங்களுமறிந்து தன் சரித்திரத்தை தத்தம்பாஷையில் வாசித்துத் தன்னைப்புகழ்ந்து ஸ்து

திப்பார்களென்று அவன் அப்போது அறியவுமில்லை. பங்கிராஸ் களங்கமுங்கபடமு மற்ற நெஞ்சுடையவனானதால் சர்வேசுரன் கட்டளைபபிரகாரஞ் சரியாய் என்றும நடப்பது தன கடனென்றும அன்று தன் கடமையை நிறைவேற்றுவதில கொஞ்சங் கஷ்டப்பட்டும பிரமாணிக்கந் தவராதிருந்தது தன் பாக்கியமென்றும நினைததானேயன்றி தன்னை பெருமையாயெண்ணி மகிமைபாராட்டி கர்வங்கொண்டவனல்ல.

இவ்விதந தனக்குள சிந்திததபின்பு மகன் தன கண்களை உயர்த்தி தாயாரைப் பாரத்தான. தாயின் முகத்தில் தான முன்பாரராத தேவப்பிரகாச மகுதத்துவந துலங்ககக்கண்டான். தேவதரிசனமபெறற தேவலோக தூதன் முகம்போல தாயினமுகம தோன்றினது. இநதப்பரமகாக்ஷிமுன் மகன, தாயார் தன்னை தற்காதத காவல்தூதன் என்றாற்போலவோ, தனக்கு அறநெறி ஒழுக்கம படித்துத்தநத தாமகுரு என்றாற்போலவோ, அன்பே அவதாரமாகித தனக்குமேல வரிசைசட்டமாய முன்னின்ற தேவஉருவென்றாற்போலவோ, தன்னையறியாமல தாயார்முன முழங்காலிலிருந்தான். தாயும அன்புந தயையும பொங்கும இருதயத்தோடு மகனை மனங்கனியப்பாரததுச சொல்லுவாள்:—

"என் உயிரினும இனிய மகனே! வெகுகாலமாய் நான் ஆவலாய்த்தேடி என்றும பிரார்த்தித்துவநத பாக்கியம நின்றநத நாள் இன்று வநதது. சிறு பருவமுதல் உன் இருதயததிலிருநது ஒவ்வொன்றாய் புஷ்பித்தலாநத புண்ணிய மலாகளை நான் என கண்ணாரப்பார்த்து அவைகள் பூக்கப் பூக்க சுவரிமிக்கு நான நன்றியறிந்த ஸ்தோத்திரஞ் செய்து வந்தேன. உன்னிடம விளங்குந் தேவவிசுவாசமும உலக அநித்திய வாழ்வின்பேரில் உனக்குள்ள அரோசிகமும வெ

றுப்பும தரித்திரருககு நீ காட்டுந தயாள குணமுமெல்லாம் எனக்குச் சநதோஷம வருவித்தது. நீ காட்டும் அமைவுந் தாழமையும பகதியுஞ் சிநேகமுமெல்லாம அநநத அக்களிப் புடன நான பாாத்துவநதேன். ஆனுல் மகனே! என் ஏக்க முமகவலையுமேதென்ருல நீ உன தாயாரிடந தோன்றுஞ் சாதாரணமான அறபசொறப புண்ணிய தர்மங்களைமாததி ரஞ் செயவாயோ அல்லது வேதசாட்சி முடி பெற்ற உன் தநதையின உன்னதநிறைநத வீர சூர செளரிய தாமசெய் கைகளைப் பினபறறி நடப்பாயோவென்று அறியத்தக்க உ சிதசமயம எப்போவருமென்று எதிர்பார்த்துக்கொணடிருந தேன். அநதசசமயந தேவாநுககிரகததால் இன்று வந்த தைப்பார்த்தேன" எனறு தாய சொன்னுள். அதற்குப் பங்கிராஸ் :—

"அமமா நீஙகள என்ன சொலலுகிறீாகள்? என்னைப் பறறி நீஙகள இவ்விதம புகழநதுபேசுமபடியாய் நான் என் ன நூதன அறபுதஞ் செயதேன?" எனறு கேட்டான.

"கேள் மகனே! தயவுள்ள சாவேசுரன் உன படிப பின் கடைசிநாளாகிற இன்றைக்கு உனககு ஓர சிறநத நற படிப்பினைச் சொலலிககொடுககச சித்தமானுா. இனி நீ புத் திவிவரமறியாச சிறு பிள்ளைபோல நடவாமல் தானு யோசி தது தன யுக்தியாயச செயபவனைப்போல நடக்கவேணடு மென்பது அவா சித்தம. மகனே! அப்படியே நடக்க உன ஞற் கூடுமெனறு நீயும இன்று காட்டியிருக்கிருய"

"அமமா! இதெல்லாமென்ன? அாத்தம ஒனறுமு எ னக்கு விளங்கவிலலையே"

"மகனே! இனறு காலமே நீ எழுதிய வியாக்கியான உ ன்னதமான தர்மயுகதியோசனை உன மனதில் எவவளவாய் நிறைநதிருக்கின்றனவெனறு காட்டின். தன் வேதத்துக்

காக உயிரைக்கொடுப்பது கிறீஸ்துவனுடைய சிறந்த கடமையென்பதை நீ மெய்யென்று நம்பி உன் மனதிற் சார உணராதிருந்தால் அப்படி நீ எழுதி வாசித்திருக்கமாட்டாய"

"அதுவும மெய்தான அம்மா! அவ்விதமே நான் என் மனதில் பூர்த்தியாய் விசுவசித்து நன்றய் உணர்ந்திருக்கிறேன. தன் வேதத்திற்காய் பிராணதியாகஞ் செய்வதைப் பார்க்கிலும மேலான பாக்கியங் கிறீஸ்துவனுக்கு இந்த உலகில் வேறே என்னவுண்டு?"

"வாஸ்தவம, என் செல்வமகனே, நீ சொல்லுவது மெய்தான்; ஆனல் வெறும்வார்த்தைமாத்திரம எனக்குத் திர்ப்தி தந்திருக்கமாட்டாது. அதனபின் நடநத சங்கதிகள், சொல்லும் வினையும் ஒத்திருக்கின்றனவென்று தெளிவாய காட்டின. துன்ப வருத்தமாததிரமல்ல, உனனைப்போலொத்த செல்வ பிரபுத்துவ உரோமானர் பிள்ளையால் தாழுயேலாத அவமானமுள்ள பழிச்சொல்லையும, பிறர நகைப்புக்குப் பயமினறித் துணிந்து மனப்பூரணமாயப் பொறுத்தாய், உன் கன்னத்தில் நிந்தையாய் நீ பட்ட அடியையும் உன்னைச் சூழ்ந்துநின்று சற்றும உன்மட்டில் அநுதாபமின்றி கைகொட்டின பிள்ளைகளின் கொடுமையையுஞ் சந்தோஷமுடன் மன்னித்தாய். இதுவுமன்றி உன் சத்துருவானவர்களைப் பொறுக்கவும் அவர்களுக்காக சாவேசுரனைப் பிரார்த்திக்கவும் உனக்குப்போதுமான மனத்துணிவிருந்தது. இன்று நீ மகனே நமது தேவ ஆண்டவருடைய சிலுவையை உன் தோள்மேல் வைத்துக் கல்வாரிமலையின் கடுமபாதையில் நடக்கத்துவக்கினுய், இன்னம் ஒரு அடி உயர எடுத்துவை; மலையின் உச்சியிற்சென்று சிலுவையை நாட்டுவாய். வேதசாட்சி முடிபெற்று இப்போது மோக்ஷத்திலிருக்கும் உன் செல்வத்தந்தைக்கு யோக்கியபுத்திரனென்று இ

ன்று.நீ காட்டினாய். அவரைப்போலிருக்க உனக்கு ஆசை யோ, என் கண்ணின் மணியே ?"

இதைக்கேட்ட பங்கிராஸ் பதைத்துத் துடித்து ஆத்திர மிகுந்து சொல்வான் :

"ஆ அம்மா, அம்மா ! என் அன்புள்ள தாயே ! என்ன கேள்வி என்னைக்கேட்டீர்கள் ? வேதசாட்சியான தந்தைபெ ற்ற பிள்ளை நானாயிருக்க அவரைப்போலாக நான் ஆசைப்ப டாமலிருக்கலாமா ? அவரை நான் விவரமாய் அறியுமுன் அ வர் இறந்துபோனாலும் அவருடைய ரூபம் என் கண்முன் என்றுமிருக்கிறதில்லையா ? இவ்வித தந்தைக்கு நான் புத்தி ரனாயிருப்பது என் சிலாக்கியமல்லவா ? அவர் சர்வேசுரனு க்காகத் தமது இரத்தம் சிந்தி உயிரைக்கொடுத்த வருஷாந் தரத் திதி வரும்போது அவர் மோட்சத்தில் சம்மனசுக்கள் மத்தியில் தூயவெண்மையான உடையணிந்து சேசுநாதர் சுவாமியின் சமீபத்திலிருந்து எவரும் பாடாத இனிய கீதங் களைப்பாடி ஆனந்தபாக்கியம் அநுபவிக்கிறாரென்று நான் நினைக்க என் மனம் வாக்கு மெய் சந்தோஷ அக்கினிப்பால் துள்ளிக்குதிப்பது எனக்குத் தெரியாதா ? என் பிரியதந்தை யிடம் நான் அநுதினங்கேட்கு மன்றாட்டு இன்னதென்று அம்மா உங்களுக்குச் சொல்லவுமவேணுமோ ? 'அப்பா ! உ ங்கள் மகனுக்கு மகிமையும் வேண்டாம், பெருமையும் வே ண்டாம், உலகபாக்கிய செல்வசுகமும் வேண்டாம், இவை யாவிலும் மேலானதொன்று அவனுக்குத் தேவை. நீங்கள் உலகத்தில் விட்டுப்போன ஒரேகாரியம் உங்கள் விருப்பப் படி உத்தமபிரகாரமாய் உபயோகிக்கப்படும்படியாய் நீங்க ள் உதவி செய்யவேண்டும்' இதுதான் அம்மா என் அநுதின ஜெபம் "

"மகனே உன் தகப்பனா விட்டுப்போன காரியமென்றாயே, அதென்ன ?

பங்கிராஸ் மறுமொழி சொல்வான்: "தாயே அது அவருடைய இரத்தம், அந்த இரத்தம இன்னம என்னுடலில மாத்திரந்தான ஓடி உலாவி உயிர கொடுத்துக்கொண்டிருக்கிறது. எப்படி என் பிரியதந்தை தமது உடலிலிருந்த இரத்தத்தை சேசுநாதர்சுவாமிக்காகச் சிந்தினாரோ அப்படியே என்னுடலில் இபபோது ஓடுந தமது இரத்ததகதையும சேசுநாதாசுவாமிக்காகவே நானுஞசிநதுமபடி ஆசையாயிருக்கிறெனபதற்குஞ சநதேகமா ?"

மகன் சொன்ன இநத உநநதமொழிகளைக் தாயாா கேட்கவும் அவள் மனங்களிநது இளகி ஆனநதபபரவசமாகி அன்பேகுரலெடுத்துப் பேசினறபோலே சொல்லுவாள்:—"இனிய என் மகனே ! நலலது, மெத்தவும நலலது, நீ கழுத்தில் அணிநதிருக்கும அநதப் பதககததைக் கழற்று. அது சிறு பிள்ளைகளின ஆபரணம; அதிலும உயாநததொனறு நான் உனக்குக் கொடுக்கபபோகிறேன்" .

பங்கிராஸ் தன் தாய சொறபடி பதககததை உடனே கழற்றினான். அப்போது தாய் முன்னிலும அதிகமாய அன்பும அருளும பொங்குமனதோடு வீணைவாயக் குரலோடு பேசிசசொல்வாள்:—"கேள் என் செல்வமகனே ! உன தநதையினிடமிருநது பேரும பெருமையும அளவற்ற ஆஸ்தியும சீருஞ செலவாககும இவையெலலாம பிதிராாச்சித செல்வமாய உனக்கு வநதிருககினறன. ஆனால அவா உனககுச் சாசனமாய் விட்டுபபோனவைகளில் விலையுயாநத பொக்கிஷமொன்றை இதுவரையிலும உனககு நான காண்பியாமல் மறைத்துவைத்திருந்தேன. தங்கம பொன்னிலும் முத்து நவரத்னங்களிலும உயர்நத பொருள அது என்மகனே.

இப்போது அதையும நான் உனக்குச் சுவாதீனமாய்க் கொடுக்கப்போகிறேன்."

தாயார் இதைச்சொன்னபின் தன கழுத்திலிருந்த தங் கச்சரட்டை கைநடுங்கக் கழற்றி அதிலே வெகு விசித்திர வேலைப்பாட்டில் முத்துரத்னங்கள் பதித்திருந்த செப்பை எடுத்துத் திறந்தாள். அதற்குள் இரத்தத்தில் தோயந்து கறைபட்டிருந்த பஞ்சு இருந்தது அப்போது லூசீனாள் கண்கலங்கி தண்ணீர் வடிந்தோட சத்தந தடுமாறி வாய்பத றிச் சொலவாள்:—

"மகனே, பங்கிராஸ், இதுவும உன் தந்தையின் இரத் தந்தான். அவர் சாகுயபோது நான் உடைமாற்றி அவர் அருகில்நின்று சர்வேசுரனுக்காக அவர் பட்ட காயங்களிலிருந்து இரத்தம வடிந்து ஓடிவரும்போது அந்த இரத்தத்தில் இந்தப பஞ்சைத் துவைதது எடுத்தேன். என்கண்முன் அவர் தமது இரத்தத்தில ஸ்நானஞ்செயது ஆசசிக்கப்பட்டு இறந்தார்." இப்படிச சொன்னபின லூசீனாள் இரத்தந்தோயந்த பஞ்சை அன்பாய்ப்பார்த்து பக்தியாய முத்திசெய்தாள். அவள் கண்களிலிருந்து ததும்பி ஓடிய தண்ணீர்த் துளிகள் அந்தப் பஞ்சில விழவே இரத்த திருமபவும் உருகி இளகிச் சிவக்க அப்போதுதான வேதசாட்சியின் உடலிலிருந்து ஓடி வந்ததாகத் தோனறினது.

அன்புள்ள தாய தனமகனும அதை முத்திசெயயும்படி அவன வாயில் வைத்தாள். அன்று அவன் உதடுகள் ஆசசிக்கப்பட்டன. தன் தகப்பன் சிந்தின பரிசுத்த இரத்தத்தை மகன் அனபாய் முத்திசெய்து வணங்கினவுடனே அவருடைய சுபாவமும் குணமும் பக்தியும உறுதியுந தனக்கே வந்ததுபோலவும் அவனைப்போல் தானுந தன் இரத்தத்தைச் சர்வேசுரனுக்காகச் சிந்தத் துணிவுகொண்டது

போலவுந் தோன்றினன். தாயார் செப்புக்குள் பஞ்சைத் திருமபவும வைத்து தன மகன் கழுத்திற்போடும்போது சொல்வாள்:—"என் இனிய மகனே, இநத இரத்தம இன் னம் ஒருவிசை நனைநது இளகிச்சிவக்கும்போது என்னைப் போன்ற ஓர பெண்பிள்ளை கண்ணிலிருநது வடிநதுவிழுஞ் சொற்பத் தண்ணீராலல்ல; இதிலும் மேலான செல்வமக ளுஞ் சௌரியவீரனின் இரததமே தநதையின இரத்தத் தோடு கலநது கூடி சேரக்கடவது."

தாய் இப்படிச் சொன்னாலுஞ் சர்வேசுரன் அப்படி நினைக்கவில்லை. இனி வேதசாட்சிமுடி பெறவேண்டிய மக ன் தகப்பன் சிநதிய இரத்தத்தோடு தாயார் சிநதிய கண ணீருங் கலந்து அமைநத தேவ தைலத்தால் அனறு அர்ச்சி க்கப்பட்டு அபிஷேகமபெற்றான்.

---

## நான்காம் அதிகாரம்.

### அஞ்ஞானக் குடும்பம்—தந்தையும் மகளும்.

மேறகூறிய சங்கதிகள யாவும பதிவிரதை லூசீனாள் வீட்டில் நடநதேறிவருங்காலையில் இவள்வீட்டுக்குச் சற்றுத தூரத்தில் குயிரீனல் என்ற மலையின்சார்பில் சௌக்கிய அ பிவிர்த்திக்கு அநுகூலமாய வாய்க்குமிடத்தில் உயர்நது எ ழும்பிய சிறநத மாளிகை ஒன்றில் போன அதிகாரங்களில் வர்ணித்துக்காட்டிய சங்கதிகளுககு முழுதும விருத்தமான வேறே சஙகதிகள் நடநதுவநதன.

இந்தச் செல்வமாளிகையின் எஜமான் பெயா பாபிய ன். இவன் மகாப்பிரபுவின் கோததிரத்தான். அளவற்ற திரவி

யங்களும் இணையறற செல்வாக்குமுள்ளவன். இவனிருந்த வீடு இராஜ கிரகங்கள்போல் வெகு விஸ்தாரமாயும அலங்காரமாயுமிருநதது. இதிலேயுள்ள மாடமாளிகைகளும கூடசாலைகளும பல விசித்திர வேலைப்பாடுகளாலும விநோத சித்திரங்களாலும சிங்காரிக்கப்பட்டிருநதன.

ஐரோபபாவின பற்பல தேசங்களிலுண்டான அதி அற்புத பொருட்களுங் கீழததிசைத் தேசங்களிலிருக்கும வெகு அபூாவமான ஜாமானகளும இநத வீட்டில் அலங்கார காட்சியாய சித்தஞ்செய்யப்பட்டிருநதன. பேர்சியா நாட்டின் உயாநத கமபளங்களும சீனதேசத்தின மஹமமல் பட்டும பபிலோனியா பட்டணததின் பல வர்ணபபுடவைகளும இநதியாவின முதது ரதனம பதித்த ஆபரணங்களும முத்து ஹாரஙகளும இவ்வீட்டில விநோதகாட்சியாகச் சேரத்து ஒழுங்கொழுஙகாய வைககபபட்டிருநதன. இவைகளன்றி தநதத்தாலும பலவகை உலோகங்களாலும வெகு சாமர்த்தியமாயச செய்யப்பட்ட பெட்டிவகைகளும உருவங்களும இநதியாவுக்கபபால வெகுதூரத்தில் வாழும இராக்ஷஸ கோத்திரததாரால் செய்யப்பட்டதாக வதநதியுமிருநதது.

இததனமைத்தான திரவிய பொக்கிஷ விநோதங்களையாவற்றிற்கும எஜமானுயிருநத பாபியன் கவலையற்று காலக்ஷேபஞசெய்து இவ்வுலகிலிருககும எல்லாவகைச் சுகபாக்கியங்களைச் சாகுமுனனே அநுபவித்துப பாாக்கலாமென்று திண்ணமாயெணணி நடநதுவரும நாஸ்திகரில் இவனுமொருவன். இநத உலக ஜீவியததுககுப்பின எதுவும உண்டென்று இவன் கனவிலும நினைததிலலை. இவன் யாதொன்றும தானே நம்பாவிடினும அந்தநதக் காலாகாலஙகளில் வரும தேசத்தின தேவர்களின் உத்சவநாட்களை எல்லா

ளைப்போல் ஊருடன் ஒத்துவாழ் யெனபதற்கிசைவாய் அநுசரித்துவருவான். இதினிமித்தம அயலார அணடைவீட்டார் யாவரும இவன் சுசீல ஒழுக்கமுள்ள பிரபு என்று மெச்சுப்பேசுவார்கள். இவன் செய்துவந்ததிலு மின்னம் அதிகஞ் செய்யவேண்டுமென்று எவனும் எண்ணினதுமில்லை; இவனிடஞ் சொன்னதுமில்லை, கேட்டதுமில்லை. உரோமானரின் தர்ம நீதிப்பிரகாரம தேச ஆசார சட்டப்பிரமாண விதிகளை அநுசரிப்பவனே நல்லவன். மற்ற விஷயங்களில் அவன் நடக்கை எப்படியிருந்தாலும் வெளிக்கு எல்லார் கணமுன எதார்த்தவாதியென நடித்தால் போதும, அவனே நல்ல மனுஷன்.

பாபியன் அந்தந்த நாளின் பெரும்பாகத்தை ஸ்நானஜாகைகளென்ற மண்டபங்களிற் போய் செலவழித்துவருவான். இந்த மண்டபங்கள் ஸ்நானம பண்ணுமபடிமாத்திரம் ஏற்பட்டவைகளல்ல இங்கேதான சபா கூடுவதும கிரந்தங்கள் வாசிப்பதும தேச ஏற்பாடுகளைப்பற்றித் தர்க்கிபதும் சூது விளையாடுவதுங் களரியாடுவதும மல்லயுத்தவித்தை கற்றுக்கொள்ளுவதும இவைமுதலிய காரியங்கள் நடந்துவந்தன. பாபியன் இங்குசென்று ஸ்நானஞ் செய்தானபின ஊர்ச் சமாச்சார விநோதங்களைபபற்றி வாசித்தும பலரோடுகலந்து தமாஷாய்ப் பேசியுங் காலத்தைப்போக்குவான் இதில் கொஞ்சஞ் சலிப்புவந்தால் வாயச்சாலகத்திறமையுள்ள வித்துவான்கள் உபந்நியாசஞ் செய்யும சாலைகளுக்குப்போய்க் கேட்டுவருவான்; அல்லது உத்தியான வனத்திற்குப் போய், சூரியாஸ்தமயன சமயத்தில் பிறைப்பார்க்கவுந் தங்களைக் காட்டவும நன்றாயுடுத்தி வாசனைத்திரவியங்கள் கம கமவென்று பரிமளிக்க வந்துகூடும் ஆண் பெண பலரையுங் கண்டுபேசி உல்லாசமாய் மகிழ்ந்து காலத்தைக்

கழித்து இராவிருள் வருமுன் தன் வீட்டுக்குத் திரும்பிவருவான்.

இவன் வீட்டில் நாள்தோறும் விருந்தினர் பல இடங்களிலிருந்து வருவார்கள் குளத்தில் நீர் இருந்தால் கொக்கும் குருவியும் நாலு திசையிலுமிருந்து வந்துகூடும். சில தர்மிஷ்ட புண்ணியசீலர்கள் உடம்பு வளைந்து வேலைசெய்வது கௌரவக் குறைவென்றெண்ணி எவன் வீட்டில் இன்று நுழைந்து வயிறு நிறையச் சாப்பட்டுப்போகலாமென்று ஏற்றசமயம பாாத்திருப்பவர்கள். இப்போப்பட்டவர்கள் பாபியன் அழைக்குமுன்னே தாங்களே தங்களை அழைத்துக்கொண்டு விருந்து சாப்பிட அவன் வீட்டுக்கு வருவார்கள். இவர்களும் இன்னும பாபியனே அழைத்த இஷ்டர் மித்திரர் சுற்றத்தாரும வீட்டில் கூடி எஜமான் வருகைக்கு எதிர் பார்த்திருப்பாாகள்.

பாபியனுந தர்மகுண சிந்தையுள்ளவன் ஆனதால் எவரையும பட்சத்தோடும அனபோடும பாதுகாத்து வருவான். வீட்டின்வேலை செயயுமபடியாய அக்காலத்து உரோமானர் வழக்கப்படி பிரதேச அடிமைகள் அநேகரை வைத்திருந்தான். ஸ்தூலதேகமுள்ளவனும வெகு செல்வமாய் வளர்நதவனுமானதால அற்பப் பிரயாசை வருத்தத்துக்கும அஞ்சுவான். உரோமானருக்கு இயல்பாயுள்ள திட காத்திரமுஞ் சௌரிய வீரமும இவனுக்குக் குறைக்கொயபாகி விட்டது. தன் வீட்டின் காரியங்கள் பெரும் நஷ்டமின்றி அமைவாகவுஞ் சற்றுச் சீராகவும நடப்பது மாத்திரம் போதுமென்றெண்ணி மற்ற யாவும எப்படிப்போனாலுங் கவனிக்கமாட்டான்.

இந்தப் பிரபுக்கு ஒரு மகள். இப்பெணமணி தந்தையின் ஏக பிள்ளையானதால் தகப்பனுடைய சொத்து எல்

லாவற்றிற்கும் இவளே சுதநதரக்காரி. இவளுக்கு உரோமா ளர் வழக்கம்போல் தகப்பன் பெயரால் பாபியாவென்றும செல்வப் பெயராய் பபியோலாவென்றும் நாமம இருநதது. வீட்டின் மேன்மாடியில் இவளுக்கு ஓர் அறை உணடு. சிங் காரவனப்பெலலாம் ஒருங்கு கூடி அதில சோநதிருந்தாற போல் அது விளங்கினது. பறபல பூஞ்செடிகளும விநோத காட்சிப் பொருள்களும் ஒழுங்கொழுங்காய் வைக்கபபட்டி ருந்தன. வீட்டின மத்தியிலிருநத முற்றததில தெளிநத சுனையிலிருநது வநத குளிாநத ஜலம கல கல வென்று ஒலி த்து மேலே எழும்பி விரிநது படாநது பொரிவாணமபோல் நாலாபக்கத்திலுங துளித் துளியாயச சிதறிச் சிநதும. வீ ட்டில் எல்லாருங் கூடிச சாபபிடுநேரம அடுததிருபபதால் பபியோலா சுத்தமான விநோத உடை அணிநது அலங்கா ரமாய்த் தன்னைச் சிங்காரிககப் பிரயததனஞ் செயதுகொ ணடிருநதாள. அறையின சுவறறில பள பளவென்று மின்ன லும வெள்ளிததகட்டில தன முகரூப இலெக்ஷண சாயலைப் பார்த்துப் பாாதது மகிழநது நிறபாள். அடுத்த மேஜை யில் சநதனமரப் பலகையில் வெகு நாஜூககாய் செயயப பட்ட சிறு பெட்டிகளில பலவகையான இரததுபரணங் கள் அநதநத நாளின நோககத்துககுந தன இஷ்டததுககுந தக்கதுபோல தன்னை அலங்கரிததுக கொள்ளுமபடி சிதத ஞ்செய்யப்பட்டிருநதன. செலவ மாதரசி பபியோலாவுக குச் சுமார் இருபது வயது. ரூபலாவாணிய அலங்காரத்தில் இணை அறறவள. குபேரசமபததுளள அற்புத சுநதரி. இத னல் இவளை மணமபுரிய அநேக பிரபுககள் விடாமுயறசி செய்து வநதார்கள். ஆனல் இவள் குணம தநதையின கு ணத்துக்குப் பரஸ்பர விரோதமுள்ளது. அகங்காரமும பெருமையும மேட்டிமையுமுள்ளவள். தான் என்ற ஆணு

வந்த தலைமட்டுங் கொண்டவள். பெருங் கோபக்காரி கோபம் வந்தால் தூஷணாஸ்திரங்களைச் சரமாரியாய்ப் பொழிவாள். ஒன்றிரண்டு பேர் நீங்கலாக மற்ற எவரையுஞ் சீறிச் சினந்து கடுஞ்சொற்சொல்லிப் பேசுவாள். இவள் பிறந்தவுடனே தாயார் பிரசவ வேதனையால் இறந்துபோனதால் ஐயோ! தாயில்லாப் பிள்ளையே என்று எல்லாரும் அநுதாபப்பட்டு வெகு செல்வப்பிள்ளையாகப் போஷித்து வளர்த்தார்கள். பால பிராயத்திலேயே இளமையிற்கல் என்ற விதிப்படி இவளுக்கு வித்தியாப்பியாசஞ் செய்துவைத்து அவள் யாதொரு கட்டுப்பாடுமின்றி, இஷ்டம்போல் எதையுஞ் செய்ய விட்டுவிடுவார்கள். அவளும் இஷ்டம்போல் கொட்டம்போடுவாள்.

வெகு தீக்ஷண்ய புத்தியுள்ளவளானதால் பற்பல சாஸ்திர நூற்களைக் கற்றிருந்தாள். விநோத விர்த்தாந்த கதைகளை வாசிப்பது அவளுக்கு ஆனந்தம். கிறீஸ்துவர்களைப்பற்றியாவது அவர்கள் அநுசரிக்கும் வேதத்தைப்பற்றியாவது ஏதேனும் அவளுக்குத் தெரியாது. இவளுக்குத் தெரிந்ததெல்லாம் ஆக்கக்கூடி அந்த மதம் இழிவானதென்பதும் நீசர் மதமென்பதும் அறிவில்லா மூடர்கள் வேதமென்பதுமேயன்றி வேறு ஒன்றுந்தெரியாது. இவ்வித தப்பெண்ண நிமித்தம் கிறீஸ்து வேதத்தை நன்றாய்ப் படித்து அறியும்படி அவளுக்கு ஆசையாவது மனசாவது வந்ததே இல்லை. இந்த அநித்திய உலக சீவியமன்றி வேறு நித்திய சீவியம் உண்டென்று அவள் என்றுங் கவனித்து யோசித்ததே இல்லை. ஆனால் இவளிடமிருந்த உயர்ந்த கௌரவ சிந்தை ஓர் போர்க்கவசம்போல பெண்ணின் ஆபரணமாகிய கற்பை காப்பாற்றி வந்தது. அக்காலத்து அஞ்ஞான உரோமானர் சீர்குலைந்து தம் நிலையினின்றிழிந்தவர்களானதால் அவர்கள்

மத்தியில் அவலக்ஷண அக்கிரமங்கள் நிறைந்து கூடியிருந்தது. பபியோலா இவைகளைச் சீ! என்று வெறுத்துத் தூர அகற்றுவாள். இவளைக் கலியாணஞ் செய்யும்படியாய் வந்த வாலிபர்களின் காதல் குறிகளையும் அவர்களுடைய விகார நடக்கைகளையும் கண்டு பழித்து நகைப்பாள். இவள் பட்சம் பாநதவம் இல்லாதவளென்று மாத்திரம் எவரும இவள்மேற் குறை கூறுவார்களே அன்றி துன்மார்க்கச் சிந்தை உள்ளவளென்று ஒருவருஞ் சொல்லமாட்டார்கள்.

நாம் இவ்வாறு வர்ணித்து விரிவாய் எழுதுவது அயுக்தமென்றும அநாவசியகமென்றும் ஒருவருங் கருதவேண்டாம. ஏனெனில் இனிவருங் விநோத விர்த்தாநதங்களை நன்றாய்க கண்டுபிடிக்கும்படி அககாலத்தியவர்களின் குணகுண பேதங்களைத் துலக்கமாய் விவரித்துக காணபிபபது அத்தியா அவசியம.

பபியோலாவென்ற பெண நாயகம முன் கூறியது போல் ரத்ன கஜித மஞ்சத்தின்மேற் சாயநதுகொண்டு ஒரு கையில் முக ரூபங்காட்டும வெள்ளித் தகடும வேறே கையில் தநதப்பிடியில சித்திரவேலையால் அலங்கரிக்கப்பட்ட எழுத்தாணிபோன்ற கூர்மையுள்ள ஓர் ஆயுதத்தையும வைத்திருநதாள். உரோமமையின செல்வ மாதுக்கள் தங்கள் வீட்டு வேலை செய்யும் அடிமைகள் யாதேனும அறப சொறப தப்பிதஞ்செயது கோபாக்கினியைத் தூண்டி எழுப்பினுல கையிலிருக்கும இநதக் கூர்மையான ஆயுதத்தை கண காது பாராமல் அவர்கள்மேல் சுழற்றி எறிநது இவ்வகையாய் பொங்கிய தங்கள் கோபத்தைத் தணிப்பது அவர்கள் வழக்கம்.

பபியோலா காலாவிட்ட வேலையைக் கையால் முடிக்கும்படி அடிமைகளாக மூன்று பெண்கள் அவள் ஏவல் கே

ட்க என்றும் ஆஜீராய்ச் சுற்றி நிற்பார்கள். இம்மூவரும் பல தேசத்தவாகள். அந்தத் தேசத்தின் பெயரோ அவரவர்கள் சிறப்புப் பெயராய் வழங்கிவந்தது. இவர்களில் ஒவ்வொருவருக்கும உள்ள விசேஷ சாமர்த்திய திறமையைப் பற்றி இவர்களைப் பாபியன் வெகு பணங்கொடுத்து அடிமைகளாக வாங்கினன். ஒரு வேலைக்காரி ஆபிரிக்கா தேசத்திலிருந்து வந்தவளாதலால் அவளுககு அபிராயி அல்லது அபிரா எனற பெயர் வாய்நதது. சற்றுக் கருத்த முகம; கண்கள் மணிபோல் விளங்கும. பூண்டு செடிகளின் குணங்களும் பச்சிலை மருநது வகையும வாசனைப பதார்த்தங்கள் கூட்டும் வகையும நன்றாய்க் கற்றவள். இன்னும பாஷாணம் நஞ்சு வகைகளிவளுக்கு மனப்பாடம். இரண்டாம வேலைக்காரி கிரீஸ் தேசத்தவள், அதினுல் கிரோசியா என்று இவளுக்குப் பெயர். படிப்பிலும நாகரீக சுசிகர சுத்தத்திலும் அலங்கார விநோத உடுப்புகள் செய்வதிலுஞ் சமர்த்தி; தன் ஜென்ம பாஷையை வெகு சுத்தமாயுந தெளிவாயும பேசுவாள். கபடு சூது வஞ்சனை இவளுககு ஜாதிக்குணம.

மூன்றுவது வேலைக்காரியின் பெயா சீராயி அல்லது சீரா ஆனதால் இவள் ஆசியாவிலிருநது வநதிருக்கவேணடும. சித்திரத் தையல்வேலையில் மிகவுந் தோநதவள். எநத வேலை செய்வதிலும ஜாக்கிறதையுங் கவனமுமுள்ளவள். இச்சமயமு பபியோலா மெத்தையில உல்லாசமாய்ச் சாய்ந்திருக்கும்போது சீராயி மௌனமாய பரபரப்பினறி தனககு இட்ட வேலையைச் செய்துவநதாள். மறறிய இருவருநு கடும விஷங்கக்கும அகமுள்ளவாகள், பேச்சுககு முதலத்தரம, காரியம்பார்த்து காலம நோககி குணமறிநது இசசகஞ் சொலலி வெகு சமாத்தாய்ப் பேசுவார்கள். அடி நாக்கு நஞ்சு, நுனி நாக்கு அமுதம. அறப சொற்ப வேலை செய்தா

லும் அதை மெச்சிப் பேசி அணுவை மலையாக்குவார்கள். என்றும் இடைவிடாமல தங்கள் பெண் நாயகத்தை உத்தமி என்றும் இலச்சுமி என்றும் புகழ்ந்து கொண்டாடி முகஸ்துதி கூறுவார்கள்; அல்லது அவளை மணம்புரிய விரும்பிவரும் வாலர்களின் குணபேதங்களைத தாங்கள் வாங்கிய கைக்கூலி அளவில் வியந்தும நயந்தும குறைத்தும் வளர்த்தும் எடுத்துப் பேசுவார்கள்.

அபிரா வேலை செய்வதுபோல் நடித்துக்கொண்டு பயியோலாவின கிட்ட வநது மெதுவாய்ச் சொல்வாள்:—"அம்மா சர்வ குணாலங்கிரத பூஷணி! உங்கள் கண்ணுக்கு இநத கரும்மையை நான் செயவதில் பட்ட பிரயாசம் இவ்வளவல்ல. இந்த மைக்குச் சமானம எங்குங்கிடைக்காது. நீங்கள் இபபோது போஜன சாலைக்குள் வருகையில் அங்கு கூடி இருபபவாகள் எல்லாரும் உங்கள் முக வடிவை கண்டு புகழ்நது பேசப்போகிறாகள. நான் செயத மையால்தான் இவ்வித அலங்காரம உணடாகும".

இதைககேட்டு கிரேசியா சொல்லுவாள்: "ஓ பெண்களின் ரத்னமே! எனககு அவ்வளவு பேராசை யிலலை. நான் புதிதாய் தைத்த இநதப பட்டு உடையை நீங்கள் அணிநது கொண்டு போஜன சாலைக்குள் பிரவேசிக்கும்போது நான் கதவின் ஓரத்தில் நின்று உங்கள் உடை அழகைப் பார்க்கும் பாககியம எனக்குக் கிடைத்தால் போதும். ஆ! ஆ! அம்மம்மா! நான் என்ன சொல்லுவேன். இநதச் சிறந்த உடைக்குச் சமானம எங்கும உணடா? பட்டு முதல் தரந்தான். ஆனால அதை அலங்காரமாய் வெகு யுக்தி யோசனையோடு சேர்த்து தைததிருக்கிறேனே அதிலேதான் எல்லாச் சூட்சுமும இருக்கின்றது. உடையென்றால 'அப்படி அல்லோ இருக்கவேண்டும.'"

சீரா யாதொன்றும் பேசாமல் தன் வேலையை மெத்தக் கரிசனமாய் செய்துகொண்டிருந்தாள். தன் நடை உடை பாவனை வடிவலங்காரத்தை எல்லாரும் புகழ்ந்து பேசும்படி ஆவலுற்றிருந்த பபியோலா சீராயியை சற்றுக் கோபமாய்க் கூப்பிட்டுச் சொல்லுவாள்: "சீரா! நீ என்ன ஊமையா? என்றும் நீ மௌனஞ் சாதிப்பதுதானா உன் அலுவல்! உன் நாக்கு அழுகியாபோயிற்று? நீ செய்ததைப்பற்றிப் புகழ்ந்து பேசும்படி ஒன்றுமில்லையா?" என்றதற்கு சீரா வெகு அடக்கம் மரியாதையோடு கபடு வஞ்சனையின்றி எதார்த்தமாய்ப் பேசி சொல்வாள்:—

"அம்மா! நீங்கள் என்றும் நன்றாயுஞ் சுகமாயும் பாக்கியவதியாயும் இருப்பதுதான் எனது ஆசை. நான் செய்யும் வேலையைப் புகழ்ந்து பேசும்படியாய் அதில் என்ன விசேஷமிருக்கின்றது? உங்கள் அடிமை நான் செய்யவேண்டிய கடமையைச் செய்கிறேனே அன்றி அற்புத நூதனமாய் ஒன்றுஞ் செய்ததில்லை. காரணமின்றி வீணாய்ப் புகழவும் என் நாக்கு எழமாட்டாது."

எதார்த்தவாதி வெகு ஜனவிரோதி என்பதற்கொப்ப சீரா சொன்ன எதார்த்த மறுமொழி கர்வநிறைந்த செல்வமாதுக்குப் பிரியப்படவில்லை. அதனால் அதட்டிப் பேசி சீராயிக்குச் சொல்வாள்: "சீரா! உன் வாயிலிருந்து புகழ்ச்சியான வார்த்தை என்றும் வந்ததேயில்லை. ஆ! ஆ! மகத்துவமே! யாரையும் புகழ்வதென்றால் உனக்குக் கசப்பாயிருப்பதுபோலத் தோன்றுகிறது."

அதற்குச் சீரா சொல்லுவாள்: "அம்மா! நீங்கள் மாதுசிரோமணி. வாச்சாலகரான வித்துவான்கள் அலங்கார மொழிகளால் உங்களைப் புகழ்ந்து பேசும்படியான பேறு பெற்றவர்கள். இப்படியிருக்க அற்ப அடிமையாகிய நான்

உங்களைப் புகழ்ந்து பேசுவதால் பலன் என்ன? ஆகிலும் அவர்களும் இவர்களும் உங்கள் முகத்துக்கு முன் முகஸ்துதி கூறிச்சொல்லும் இனிய மொழிகளை அவர்களும் எதார்த்தமென்று நம்புகிறதில்லை, நீங்களும் உண்மையென்று திண்ணமாய் எண்ணுவதுமில்லை.''

இதைக்கேட்ட இரண்டு தோழிகளும் பல்லை நெருநெறென்று கடித்து உதட்டைப் பிதுக்கி விழியைக் காட்டி சீராயியை உறுக்கிப்பார்த்தார்கள். பவியோலாவும் இவ்விருவரைப்போல முகத்தைச் சுழித்து வீட்டின்வேலை செய்யும்படியாய் விலைக்கு வாங்கின அடிமைக்கு இவ்வளவு ஆணவமா? வெகு சமார்த்தியைப்போல ஞாயம் எடுத்துப் பேசுகிறாளேயென்று தன் வாய்க்குள் முணங்கிக்கொண்டு பின் உள்ளே பொங்கின கோபத்தை அடக்கமாட்டாமல் சொல்லுவாள் :—

'' அடியே சீரா! நீ என் அடிமை என்பதை மறந்துபோனாய்! நீ என் விருப்பப்படி நடக்கும்படி அல்லவா விலைகொடுத்து நான் உன்னை வாங்கினேன். உன்னுடைய இரண்டு கைகளும் எப்படி எனக்குச் சொந்தமோ அப்படியே உன் நாக்கும் எனக்குச் சொந்தமல்லவா? நான் இட்ட வேலையை எவ்விதம் நீ உன் கையால் செய்கின்றாயோ, அவ்விதமே நீ என்னை மெச்சுப் புகழ்ந்து பாடி ஸ்துதிக்கும்படி நான் ஆசைகாண்பித்தால் அப்படிச் செய்வது உனக்கு இஷ்டமோ அல்லவோவென்று யோசியாமல் என் விருப்பப்படி நீ செய்யவேண்டாமா? அடிமைக்கு சுயமனதுண்டா? இதென்ன காலாகோலம்? எனக்கு இஷ்டபூர்த்தி செய்வதல்லவா உன் தொழில்? அடியே! உன் உயிரும் ஜீவனும் என் கையில் இருக்கின்றதென்பதை மறந்துபோகாதே.''

சீரா இதைக்கேட்டு சற்றுங் கலங்காமலும வாய் பதருமலும விவேக நிலையுடன் மறுமொழி சொல்வாள்: "அமமா நீங்கள் சொல்லுவது வாஸ்தவம. என் உயிர் உங்கள் கையிலதான் இருககிறது உயிரொன்றல் இந்த அநித்திய உயிரோடு கூடிய காலமும சுகமும் தேகமுந்தான். இவைமெலலாம நீங்கள் பணங்கொடுதது விலைக்கு வாங்கியிருப்பதால உங்களுககே சொநதபபொருளாயிறறு. ஆனல், எனக்கு சொந்தமானதொன்று எனனிடமிருக்கிறது. எநத இராஜாவும இதைத் தனககென்று வாங்கக்கூடாது. காசுபணம எவ்வளவுதான கொடுத்தாலும அதின விலைக்கு வரமாட்டாது. அதுக்கு விலஙகுபோட்டு கட்டி வைகக ஆவது அதைச் சிறையில அடைத்து அடகக ஆவது யாராலும ஏலாது. முத்துரத்னங்களிலும அதிக விலையுள்ளது கண்ணுக்குக் காணப்படும் எநத வஸ்துவிலும் அது மேலானது."

"அபபடியா? என? விடுகதைபோலிருக்கின்றதே. அதென்ன? சொல்லேன பார்க்கலாம."

"அமமா அதுக்குப் பேர ஆத்மா."

பபியோலா எநத அடிமையும இப்படி ஒரு பொருள் தனக்குச சொநதமென்று சொனனதைக் கேட்டதேயில்லை. ஆனதால் தனககொரு ஆத்மா சொநதமென்று சீரா சொல்லவும இடியோசைகேட்ட நாகமபோல் சீறிச் சினநது சீராயியைப்பாாத்துச் சொலலுவாள் :—

"ஓ! ஓ! அடிமைக்கிருக்கும ஆணுவத்தைப் பாருங்களே உனககு எனன சொநதம? ஆதமாவா? ஆதமா என்றால என்ன? கருப்பா சிகப்பா? நீ பார்த்தியா?".

வேலைக்காரி சறறு மவுனமாயிருநது மனதுக்குள் சர்வேசுரனைத் தியானித்தபின் அமர்ந்து பேசுவாள்:—

"அம்மா பெண் அரசே! கற்றுத் தேர்ந்த சாஸ்திரியைப்போல் அலங்காரமாய மொழிகளை அடுக்கி எடுத்துப் பேச எனக்குத் தெரியாது. நான் அறிவில் எளியவள். ஆகிலும் எனக்குத் தெரிந்தமட்டும் ஆத்மா இன்னதென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் கேளுங்கள். எனக்குள் இருந்து நான் உணரவும், பொருளின் அர்த்தத்தைக் கிரகித்துக் கண்டுபிடிக்கவும், நினைத்து யோசிக்கவும், இது வேண்டும் அது வேண்டாமென்று தெரிந்துகொள்வதற்குரிய ஸ்வாதீனங் கொடுப்பதுமாகிய இவ்வித சக்தியுள்ள அரூபியான வஸ்துவே ஆத்மா எனப்படும். இது பங்கு பாகமின்றி பகுக்கப்படாத ஓர் பொருளாதலால் என்றும் அழியமாட்டாது."

சீரா இவ்விதமாய ஆத்துமத்தின் இயல்பையும் அதின் அழியா இலக்ஷணத்தையும் விவரித்துப் பேசும்போது அவளுடைய இரு தோழிமார்களும் ஒரு வார்த்தையுங் கண்டுபிடிக்கமாட்டாமல் ஒருவரொருவரைப் பார்த்து சாடை சமிக்கை காட்டி சீராயின் அகங்கார கர்வத்தை எப்படி அடக்கலாமென்று யோசித்துக்கொண்டிருந்தார்கள். பபியோலா முதலில் சற்று ஆச்சரியப்பட்டு பிரமித்து நின்றாலும் பின் உள்ளே பொங்கி எழும்பிய கோபத்தை அடக்கமாட்டாமல் மிக ஆத்திரத்தோடு சொல்லுவாள்:—

"சீரா! இந்தப் பயித்தியம் உனக்கு எப்படி வந்தது? இவ்விதம் பித்துக்கொண்டவள் புலம்புவதுபோல் வாயில் வந்ததெல்லாஞ் சொல்ல யார் உனக்குக் கற்றுக்கொடுத்தது? நானோ பல வருஷங்களாய் பல பல சாஸ்திர நூற்களைத் தீர வாசித்து ஆழ்ந்து யோசித்துப் படித்தபின்பு அறிந்த விசேஷமேதென்றால் இந்த ஜீவனுக்குப் பின் வேறு ஜீவன் உண்டென்பதும் அழியாத ஆத்மா ஒன்று நமக்கு இருக்கி

றதென்பதுங் கவி பாடும புலவர்கள் அலங்கார அணியாய் ஏற்படுத்திய இலக்கண மொழியே அனறி எதார்த்தமாயிருக்கும பொருள்கள் அலல. அறுபதிநாலு கலைகளியான நூறகளையும ஆராயநது படிதத நானே, இவைகளெல்லாம் அபத்தமென்று எண்ணி இவைகளிலொனறையும நமபுகிற தில்லை. இபபடியிருகக நீ, படிப்பு சாஸ்திரம ஒனறுமறியாத பரம மூடாதமா, நீயா எனனிலும அதிக சமாதகி என்றுறபோல வீண வாகருவாதம என்னோடு வளாக்க வந்தாய். ஆ! ஆ! பேதை, உனனைப்போலொதத நீச அடிமைகள நன்றாய வெறி எடுககுமட்டும் குடித்து உருணடுபோனபிறபாடு அலலது அடி உதைபட்டு அதோகதியாய் மாண்டுபோனபினபு உன பிரேததததை குளியிலே தள்ளி குப்பையைக் கொட்டி நெருப்பு மூட்டி சுட்டுக கொழுத்தி சாமபலாக்கி காறறிலே பறக்கத தூறறிவிட்ட பின்பு, நீயா! கழுதையைபபோல பொதி சுமக்கும நீயா! உயிருள்ள ஆத்துமாவோடு உயிா வநதெழுநது ஸ்வாதீன பாககிய சநதோஷமுள்ள புது ஜீவன ஜீவிப்பாய!"

சீரா பபியோலா சொனன நிநதையான மொழியைக் கேட்டு மனதில கலங்காமல முன்னிலும அமைநத மனதோடு மறுமொழி சொலலுவாள்:—

"ஓ செல்வ மாதரசே! "எனனில் உள்ளதில எல்லாஞ் சாகா" என்று உங்கள் விததுவானகளே சொல்லவில்லையா? அப்படியே நான் இறநதபினபு என ஆத்மா சாகாமல் நிததிய பாககிய சநதோஷமுள்ள புது ஜீவன் பெறும் எனபது எனது திண்ணிய எணணமும மாறா நமபிககையுமாகும. இன்னங் கேளுங்கள். நீஙகளே இப்போ வர்ணித்துச் சொனனதுபோல் என சரீரம வெநது கருகிச்சாமபலாய்ப்போய் காற்றிலடிபட்டு சுழன்று சிதறி நாலு திசை

யிலும் பறந்துபோனபின்பு சர்வ வல்லபரான ஒருவர் என் உடலைச்சேர்ந்த ஒவ்வொரு பாகத்தையுங் கூட்டிச் சேர்ப்பார். பூமியின் நாலு திசையிலுஞ் சண்டமாருதமாய் வீசி அடிக்குங் காற்றைத் தம்முன் அழைத்து அது அடித்துக் கொண்டு போன என் தேகத்தின் ஒவ்வொரு அணுவையுந் தம்முன் கொண்டுவரும்படி கற்பிப்பார். அப்போது இந்த என் சரீரம் திரும்பவும் உயிரோடு நிற்கும். நின்றால் உங்கள் அடிமையைப்போலுமல்ல, வேறு எவருடைய அடிமையைப்போலுமல்ல, பூரண ஸ்வாதீனமுள்ளவளாய் ஆனந்த சந்தோஷங், குறையா மகிமையோடு என்றும் ஸ்நேகித்து இன்பமாய் சிநேகிக்கப்பட்டு நித்திய காலமாய் வாழுவேன். அம்மா! இந்த நிச்சய உறுதியுள்ள நம்பிக்கை என் மனதில் ஸ்திரமாய் ஊன்றியிருக்கிறது."

பபியோலா இதைக் கேட்டபின் சொல்வாள் :— "ஆ இதென்ன காலக்கொடுமை! பித்துக்கொண்டவள் பினற்றுவதுபோல் அசம்பவ விஷயங்களைச் சொல்லுகிறாள். அடிமைவேலை செய்கிறவளுக்கு இப்படிப் பேசுவது தகுமா? உன்னைப் பிடித்த இந்தப் பயித்தியம் எப்படி நீங்கப்போகின்றது? சீரா எந்தப் பள்ளிக்கூடத்தில் இவ்வித மூடபுத்தி படித்தாய்? நான் கிறீக் பாஷையிலும் இலத்தீனிலும் அநேக கிரந்த நூற்கள் வாசித்திருக்கிறேன். நீ சொல்வது போல எதிலும் நான் வாசித்ததில்லை."

"அம்மா நான் படித்த பள்ளிக்கூடம் என் ஜென்ம நாட்டைச் சேர்ந்தது. அதிலே உயர்குலமென்றும் இழிகுலமென்றும் மகிஷி என்றும் அடிமை என்றும் வித்தியாசமில்லை."

பபியோலா இதைக்கேட்டவுடன் மனதில் ஆக்ரோஷம் பொங்க அதட்டிப் பேசிச் சொல்வாள்; "அப்படியா!

இறந்தபின்பு இன்னமும் ஜீவிப்பேனென்று சொன்னது பற்றுதென்று இப்போதே நீ எனக்குச் சமானமானவளென்று சொல்லவோ துணிந்தாய். ஏன்? சமானமாத்திரமல்ல, என்னிலும் நீ உயர்ந்தவளென்று சொல்லுவாய் போலும். நல்லது நீ இப்போது உன் உள்ளத்தில் உள்ளதை, உள்ளது போலச் சொல், ஈரர்த்தம் படப்பேசாதே; நமமிருவரில் யார் உயர்ந்தவள் நீயோ நானோ? நீ நினைப்பதைச் சொல்."

"அம்மா செல்வமாதே! குலத்திலுங் குணத்திலுஞ் செல்வாக்குச் சிறப்பிலும் அறிவிலுஞ் சாஸ்திர நூலிலும் சகலவித செல்வ பாக்கியத்திலும் மாது சிரோமணியாகிற நீங்கள்தான் ஏழையாகிய என்னிலும் பதின் மடங்கு உயர்ந்து விளங்கி மேன்மை பெற்றவர்கள். முகலக்ஷண வடிவிலும் நடை உடை பாவனையிலும் நாகரீகத்திலும் உங்களுக்குச் சமமாகும்படி அடிமையாகிய நான் கனவிலும் நினைப்பேனோ? ஆனால் நீங்கள் என்னிடங் கேட்ட கடைசிக் கேள்விக்கு நான் பதில் சொன்னால் உங்களுக்கு வருத்தமுண்டாகலாம். (பபியோலா அவள் சொல்லும்படி சாடை காட்டினதின்பேரில்) "அம்மா நான் சொல்வதை ஆத்திரப்படாமல் முழுதுங் கேட்டு அதன்பின் நீங்கள் சொல்வதைச் சொல்லுங்கள். நானோ பரம ஏழை; உங்கள் அடிமை; ஆகிலும் என்னிடத்திலே என்றுஞ் சாகாத ஓர் ஆத்மா உண்டென்றும் அதற்கு அறிவும் புத்தியும் ஸ்வாதீன தந்திரியமும் இருக்கின்றதென்றும் அதன் ஜென்ம நாடு உயர்ந்த வானமண்டலமென்றும் அதற்குச் சரியான சாயல் சர்வலோக கடவுளே என்றும் இவ்விதம் எண்ணி பூரணமாய் நம்பியிருக்கும் நான், இந்த அற்ப அநித்திய உலகந்தான் தன் கெதி என்றும் தன்னிடம் எவ்வளவு புத்தி சாமர்த்திய அறிவு இருந்தாலும், ஊர்வன பறப்பனவாகிய அற்ப

ஜெந்துக்கள் கேடி சுகித்துவருஞ் சந்தோஷந் தனக்குப் போதுமென்றும், கூட்டுக்குள் அடைபட்டு இரும்புக் கம்பியில் மோதி சிறகு முறிந்து கிடக்கும் பறவையைப்போல் உலக மாயையின் வலையிற் சிக்கி ஆசாபாசமென்னுந் தளைகளாற் கட்டுண்டு, தானிருக்கும் பரிதாப நிலைமை அறியாத மாது சிரோமணியைப்பார்க்கிலும், நான் தாழ்ந்தவளென்று எண்ணுவது எனக்குத் யோக்கியமாகுமா? நீங்களே நடுவு நிலைமையோடு இரண்டையுஞ் சீர்தூக்கி யோசித்து சொல்லுங்கள்."

சீரியா இப்படிப் பேசும்போது பபியோலாவின் கண்கள் நெருப்புப் பொறி பறந்தாற்போல் சிவந்து பொங்கி எரிந்தது. இத்தனை முதல்விசை அடிமை ஒருத்தி பபியோலாவோடு எதிரில் நின்று ஞாயம்பேசி தனது அபிப்பிராயக் கோட்பாட்டை ஜெயமாய் நிலைநிறுத்தினது. கடுங்கோப மனதிலெழும்ப தன் கையிலிருந்த கூர்மையான ஆயுதத்தைத் தான் செய்யப்போவது இன்னதென்று அறியுமுன்னே பலமாய்ச் சுற்றிச் சுழற்றி எறிந்தாள். சீரா தன்மேல் வந்த ஆயுதத்தைத் தடுக்க உடனே தன்னை அறியாமலே கையைத் தூக்கினாள். ஆயுதத்தின் கூரியமுனை அவள் கையிற் பாய்ந்து பெரிய காயமாக்க இரத்தம் மளமளவென்று ஓடிவந்தது. சீரா வலியின் கொடுமையைப் பொறுக்கமாட்டாமல் கண்ணீர் சிந்தினாள். பபியோலா தான் யோசியாமற் செய்த நிஷ்டூர செய்கையின் இழிவை நினைத்து மனதில் வெட்கினாள்.

சீரா வடிந்து ஓடும் இரத்தத்தைத் துடைத்துக்கொண்டிருக்கும்போது பபியோலா சொல்லுவாள்.—

"சீரா, நீ உடனே யுபுரோசினாள் வீட்டுக்குப்போ. அவள் காயங்கட்டி மருந்து கொடுப்பதில் வெகு சமர்த்தி.

உனக்கு நான் இப்படி பெரிய காயம் வருவிக்கவேண்டுமென்று எண்ணவில்லை. ஆனால் கொஞ்சநேரத்தில்" என்று பின் மேஜைமேலிருந்த பலவகை ஆபரணங்களுக்குள் முத்துப் பதித்த தங்கமோதிரம் ஒன்றை எடுத்து சீராயிக்குக் கொடுத்து: "இந்தா உனக்குச் சந்தோஷமாக இதை கொடுக்கிறேன். இன்று சாயங்காலம் நீ வீட்டு வேலைக்கு வர அவசியமில்லை. போ:" என்று சொல்லி அவளை அனுப்பினாள்.

பபியோலா தான் செய்த கிஷ்டூர செய்கைக்குப் பரிகாரமாக இவ்வளவு செய்தது போதுமென்று கவலையற்றிருந்தாள். ஆனால் சினந்தாற்போல அறுத்த மூக்கு சிறித்தாற் போலொட்டுமா? சீரா காயத்தின் உபத்திரவத்தால் வெகு வருத்தப்பட்டாள். அடுத்த ஞாயிற்றுக்கிழமை கோவிலின் உண்டியலில் இருந்த காசுகளை குருசுவாமியார் எடுக்கும் போது அவைகளுக்குள்ளே தங்கமோதிரம் ஒன்று இருப்பதைப்பார்த்து வெகு ஆச்சரியப்பட்டு இந்தக் காணிக்கையை பெருஞ் செல்வமுள்ள உரோமைப் பிரபுவின் மகள் கொடுத்திருக்க வேண்டுமென்று தனக்குள் சிந்தித்துக்கொண்டார். ஆனால் எங்கும் பிரசன்னமாய் வியாபித்திருந்து எல்லாவற்றையும் பார்த்துவருஞ் சர்வேசுரன், காயம்பட்ட கையோடு எவரும் பாராத சமயத்தில் கோவிலில் வந்து பபியோலா கொடுத்த தங்கமோதிரத்தை உண்டியலிற் போட்ட சீரா என்பவளைப் பார்த்து அதற்கு மோக்ஷத்தில் நித்திய பாக்கிய சம்பாவனையை அப்போதே திட்டஞ்செய்து ஏற்படுத்தினார்.

## ரு-ம் அதிகாரம்.

### செல்வப்பாங்கி: அக்நேசி.

---

போன அதிகாரத்தில் சொல்லியவாறு பபியோலாவுஞ் சீராவுஞ் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் இவர்கள் அறியாமல் பூங்கொடிபோன்ற ஒரு செல்வமாது சப்தஞ் செய்யாமல் மெல்லென வீட்டுக்குள் வந்தாள். உரோமாரின் வீடுகளின் உள் அறைகள் சாதாரணமாய்க் கதவுகளின்றி வெறுந் திரையால் மாத்திரம் பிரிக்கப்பட்டிருந்ததால் உள்ளே இருப்பவர்கள் கலந்து கூடிப் பேசிக்கொண்டிருக்கையில் அவர்கள் அறியாமல் வீட்டுக்குள் பிரவேசிப்பது மிக எளிது. அவ்வாறே இந்தச் சமயத்தில் சம்பவித்தது.

சீரா மோதிரத்தை வாங்கிக்கொண்டு வெளியே வரும்போது கதவின் திரையின் அருகே நின்றுகொண்டிருந்த செல்வமாதைப் பார்த்தாள். பார்த்ததும் நின்றவள் யாரென்று உடனே அறிந்துகொண்டாள்.

அங்கு நின்ற பாலிய சுந்தரி ௰௩-வயதுள்ள சிறு பெண். அவள் அணிந்திருந்த உடை துமைப் பூப்போல் தூய வெண்மையானது. அவள்மேலே ஆபரண அலங்கார அணி என்பது மருந்துக்குங் கிடையாது. சிறு பிள்ளைகளுக்குரிய கள்ளங் கபடு அற்ற குணமும் பெரியவர்களுக்கு இயல்பான தீக்ஷண்ணிய புத்தியும் அவள் முகத்தின் இலக்ஷணமாய் விளங்கின. அவளிரு கண்கள் புறக்கண் போல் மனத்துக் கண் மாசற்றவளாயிருப்பதைக் குறித்துக் காட்டினதுமன்றி அன்பும் ஸ்நேகமும் நிறைந்ததாகவும் அவள் மனதின் பட்சம் யாவும் ஐம்புலன்களின் நுகர்ச்சி எல்

வாங்கடந்து எங்கும் பிரசன்னராய் வியாபித்திருக்குந் தனி முதற் கடவுளைச் சார்ந்ததாகவுந் தோன்றும். அவளுடைய விரிந்து அகன்ற நெற்றி எதார்த்தம், சத்தியம், திறந்த குணம், நிறைந்தஅறிவு ஆகிய குணங்கள் உறையும் வாசஸ்தலமாய்த் தோன்றினது. அவளுடைய வதன கமலம் என்று மலர்ந்து விரிந்து சுகந்த பரிமளம் வீசுவதாகக் காணும். அடுத்தது காட்டும் பளிங்குபோல் அவள் மனதில் உற்பத்தியாகும் பற்பல பற்றுதல், உணர்ச்சி, விருப்பமுதலிய யாவும் முகத்திலே எழுதிய சித்திரமபோல் துலக்கமாய்க் காணலாம். இவள் யாரென்று அறிந்தவர்கள் யான் எனதென்னும்பற்றை முழுதும் அறுத்தவளென்றும், அவள் நினைவுங் கருத்தும் விருப்பமும் பிறரைப்பற்றியதாவது அல்லது தன் உயிருக்குயிராகிய தன இனிய அன்பனைப்பற்றியாவது எப்போதுஞ் சாரந்திருககுமெனறு சொல்லுவார்கள்.

இவ்வித வனப்புப் பொருந்திய தரிசனம வானலோக தேவ தூதன்போல் தன முன நிறபதை சீரா பார்த்ததும பிரமித்து பின் அடியெடுதது ஸ்தமபாகாரமாய நிற்க மோக்ஷ வடிவலங்காரம பெற்ற இச்சிறு பெண் சீரா கையைப் பிடித்து வணக்கமாய் முதகி செய்து: "சீரா! பயமேன்? நடந்த யாவும் நானே பார்த்தேன். நான் காரியமுடித்துத் திருமபி வரும்போது உன்னிடத்தில நான் சில விசேஷஞ் சொல்லவேண்டுமே. அதோ அநதச் சிறு அறையில் சற்று நில்"—என்று சொல்லி திரையை நீக்கி வீட்டுக்குள்ளே பிரவேசித்தாள்.

அழகே அவதாரமானாற்போல் தோன்றிய இச்சிறு பெண் வருவதைப் பிசியோலாக் கண்டவுடனே சற்றுத் திடுக்கிட அவள் முகம் மாறிச் சிவநதது. தன் வீட்டின அடிமையைக் கொடுமையாய்க் கோபித்து அவளுக்குச் செ

ய்த க்ஷிப்ர செய்கையை இச்சிறுமாது அறிந்தாளோ, பார்த்தாளோ, என்னமோ, ஏதோ, என்ற பயம் மனதில் போராட தன்முன் கைகட்டி காத்திருந்த அடிமைகளிருவரையும் அப்பால் போகும்படி கையால் சமிக்கை காட்டியபின் எழுந்து தன் பிரிய பாங்கிக்கு எதிரே போய் ஆசார உபசாரஞ் செய்து கூட்டிவந்து உட்காரச் செய்தாள். காவம் நிறைந்த பபிலோலா யார் எவரென்று பாராமல் எல்லாரையும் அகங்கார பேட்டிமையோடு நடத்தினலும் இன்று தன் வீட்டுக்கு வந்த இச்சிறு செல்வியை மாத்திரம் வெகு பிரீதி பக்ஷத்தோடு கவனித்து அவள் வருகைக்கு என்றும் எதிர்பார்த்திருப்பாள். இருவரும் உட்கார்ந்தபின் பபிலோலா ஏதும் விசேஷம் ஒன்றுந் தன் வீட்டில் நடவாததுபோல் மெல்லிய குரலோடு பகற்பல பேசிச் சொல்வாள்:—

"அக்நேசி இன்று என்வீட்டில் விருந்து சாப்பிட வாவென்று ஒரு வார்த்தை சொல்லி அனுப்பினவுடனே நீ வந்தது எவ்வளவு தயவு. விருந்துணணும்படி என் தகப்பஞர் இரண்டு மூன்று அந்நியரை இன்று அழைத்திருக்கின்றார். அவர்கள் வருவதால் எனக்குத் துணையாயிருக்கும்படியாய் உன்னைக் கூப்பிட்டேன். இன்று வரும் விருந்தினர்களுக்குள்ளே புல்வியனென்று ஒரு வாலிபப் பிரபு இருக்கிறானாம். இவன் தேகவளர்த்தியுஞ் சிறந்த இலக்ஷண வடிவும் உள்ளவனாம். செல்வப் பொருள் கல்விப் பொருளில் குன்றாவற்றவனாம். என்றாலும் இவன் யார், எவ்விடம், குணமென்ன, நடவளமை ஏது, இவை முதலிய விஷயங்கள் ஒருவருக்கும் நன்றாய்த் தெரியாதாம்."

பபிலோலா வர்ணித்துச் சொன்ன விஷயங்களிலொன்றும் அக்நேசி கவனிக்கவில்லை. அவள் பேசி முடிந்தவுடனே அக்நேசி சொல்வாள்:—"என் செல்வப் பாங்கியே

உன் வீட்டுக்கு வருவது எனக்கு என்றும் ஆனந்தம். என் தாய் தந்தையும் யாதும் விக்கினஞ் செய்வதில்லை. ஆனதால் நீ என்னை அழைத்ததற்குக் காரணம் யாதொன்றுஞ் சொல்வது அவசியமில்லை.”

இதற்குப் பபியோலா சற்றுத் தமாஷாய்ப் பேசி சொல்லுவாள் :—

“ஆ! ஆ! அப்படியா அக்நேசி! நீ என்றுஞ் சுத்த வெள்ளையான ஆடை அணிந்து ஆபரண அலங்காரமின்றி புதுமணப்பெண்போலவா என் வீட்டுக்கு வருகிறாய்? உன் முகக்களையையும் ஆனந்த பூரிப்பையும் பார்த்தால் நீ நித்திய கல்யாண அமர்க்களத்திலிருப்பதுபோலத் தோன்றுகின்றது. ஆனால் இதென்ன? ஐயோ அய்யோ காயமா? அக்நேசி! பார் சிவப்பாயிருக்கிறது! இரத்தமா? எப்படிக் கறை விழுந்தது! வா இந்த உடையை மாற்றிப்போடலாம்.”

அதற்கு அக்நேசி சொல்வாள் :—“என் உடையை மாற்றவா? வேண்டாம். இதுதான் இன்று என் உடுப்பின் மேல் நான் அணியும் முத்துரத்னம்; எனக்குச் சிறந்த ஆபரணமிதுதான். இது இரத்தத்துளி! அதுவும் ஓர் அடிமையின் இரத்தம். என்றாலும், பபியோலா, உன் உடலில் ஓடும் பிரபு புத்திரியின் இரத்தத்தைப் பார்க்கிலும் இது என் கண்ணுக்கு அதிக இரமணீயம் உள்ளது.”

பபியோலா இதைக் கேட்கவும் அவள் முகஞ் சோம்பி வாடினது. சீராவோடு நடந்த சங்கதியாவும் அக்நேசி பார்த்திருக்கவேண்டும். கடைசியில் அவள் மனதிலெழும்பின கலக்கத்தையும் வருத்தத்தையும் பொறுக்கமாட்டாமல் அக்நேசியைப் பார்த்துச் சொல்லுவாள் :—

“ அப்போ நான் எவ்வளவு கடுங் கோபக்காரி என்றுங் கொடிய துஷ்ட சிரோமணியென்றும ஊரெல்லாம் அறிய பறை அடித்துச் சொல்லவோ போகிறாய் ?”

“ அப்படி அல்ல பபியோலா ! ஓா அடிமையினிடத்தி லிருந்து இன்று நான் படித்த மனத்துணிவுந், தயாள சிந் தையும, அணு அளவும பிசகாத தாம ஒழுக்கமுமாகிற நீதி நூல பாடத்தை இனி என்று மறநதுபோகாதபடி என் ஞாபக அறிகுறியாக இதைக் காப்பாற்றி வைத்திருக்கப்போ கிறேன். மேனகுலத்திற் பிறநத நமதுதேச சாஸ்திர கியா னிகளிடத்திலும் இவ்வித நல்லொழுக்கப் பாடத்தைக் கா ண்பதரிது.”

“ அக்நேசி நீ சொல்வது என்ன விநோதமுள்ளது. நமது வீடுகளில் நீசவேலைகள் செய்துவரும அடிமைகளை நீ ஏதோ ஒரு பொருட்டாய மதித்து எனறும அவாகளைப் பு கழ்ந்து மெச்சுப் பேசுகிறாய. அவர்கள் எப்படி நடநதா லும அடிமை அடிமைதானே. ஜென்மக் குணஞ் செருப்பா லடித்தாலு மாறுமா ?”

“ பபியோலா, அப்படி அடிமைகளை இழிவாய எண் ணாதே. மானிடராய்ப் பிறநத எல்லாருக்கும ஒரே அறிவும, ஒரே பற்றுதலும, ஒரே இநதிரீய சுகாநுபோகமும உண் டென்று நீயும ஏற்றுககொள்வாயல்லவா ? அப்படியானால் அவர்களும நாமும் மனுஷஜென்மமாகிற இநதப் பாரி குடும் பத்தைச் சேர்நதவர்கள அல்லவா ? சர்வஜீவ தயாபரரான தனிமுதற் கடவுள் நமமையும் அவாகளையுஞ் சிருஷ்டித்த வரானால் நமக்கும் அவர்களுக்கும அவரோ தந்தை அல்ல வா ? தந்தையானால் இந்த அடிமைகளும் நாமுஞ் சகோதர முறை யுள்ளவர்களாகின்றோ மென்பதற்குச் சந்தேகமா?”

இதைக் கேட்டதும் பபியோலா இடியோசை கேட்ட நாகம்போல் பதறி உதறி சீறிச் சினந்து சொல்வாள் :—

" ஓ! தோஷம! தோஷம்! அக்ரேசி! செல்வ பிரபுத்துவ உரோமானர் கோத்திரத்திற் பிறந்த நீ இப்படிப் பேசலாமா? ஈனவேலை செய்து காலக்ஷேபஞ் செய்துவரும் நீச அடிமைகள் நமக்குச் சகோதரிகளா! இவர்கள் ஆடுமாடுகளைப்போல் நமக்குச் சொந்தமான சொத்துக்களல்லவா? இவர்கள் இஷ்டம்போல் நடப்பதற்கு மனஸ்வாதீனம இவர்களுக்கேது? இவர்களின் எஜமானர்களாகிற நாம இவர்களை எப்படி ஓட்டுகின்றோமோ அப்படியே போவது அவர்களுடைய கடன். சாஸ்திரமும அவ்விதமே முறையிடுகின்றது."

இதைப் பதறாமல் கேட்டுக்கொண்டிருந்த அக்ரேசி வீணை பேசினாற்போல பூரண சித்த சமாதானத்துடன் சொல்லுவாள் :—

" நல்லது! அதெல்லாமிருக்கட்டும; நாமிருவரும இது விஷயத்தைப்பற்றி வாக்குவாதஞ் செய்யப்போகிறதில்லை. ஆனால் பபியோலா, நான் கேட்கும ஒரு கேள்விக்கு எதார்த்தமாய் மறுமொழி சொல்: நீ சீராவோடு செய்த வாக்குவாதத்தில் ஞாயம எடுத்துப் பேசுவதிலும உண்மையைச் சொல்லுவதிலும மனத்துணிவிலும நீ அல்லவா தோல்வி அடைந்தது? ஏன மறைக்கிறாய்? உன கண்களிலிருந்து ஓடிவிழும இந்தத் துளி தண்ணீரோ தோல்வி அடைந்தது நீதான என்று சொல்லுகிறது. ஆனால போனது போகட்டும நான் உன்னிடம ஓர் உபகாரங் கேட்கிறேன? இல்லை என்று சொல்லாதே."

" அக்ரேசி! கேள். நீ எதை என்னிடத்தில் கேட்டாய் எதை நான் இல்லையென்று உனக்குச் சொன்னேன்? மந்தி

ரத்தால் மாங்காய் விழுமா என்பார்கள். ஆனால் உன் மந்திரத்தால் மாங்காயும் விழும் தேங்காயும் விழும்."

"நல்லது உன்னிடம் வேலைசெய்து வரும் இந்த அடிமையை எனக்கு நீ விற்கவேண்டும். அவள் உன்னிடம் இனி வேலைசெய்வது உனக்குஞ் சம்மதமாயிராது. அவளுக்கும் பிரியமாயிராது."

"அப்படி அல்ல அக்னேசி; என் சம்மதங் கேட்டால் சீரா என் வீட்டில் தான் இருக்கவேண்டும். என் கோபத்தை இனிமேலடக்கி அவளை முன்னிலும் அதிகமாய் மதித்துக் கொஞ்சங் கௌரவமாய் நடத்துவேன்."

"ஆனால், பபியோலா, சீரா என் வீட்டுக்கு வருவாளாகில் உன்னிடம் அவளிருக்கும்போதிருந்ததைப் பார்க்கிலும் அதிக பாக்கிய சந்தோஷமுள்ளவா யிருப்பாளென்று நான் எண்ணுகிறேன்."

"அது வாஸ்தவந்தான் அக்னேசி; என்னமோ உன் வீட்டில் உன்னோடுகூட இருப்பவர்களெல்லாரும் எப்போதும் மலர்ந்த முகமாய் இருக்கிறார்கள். உனக்கு என்ன மந்திர வித்தை மாயவித்தை தெரியுமோ நான் அறியேன். சீரா எனக்குச் சொன்ன தாமநீதி வாக்கியங்களின்படி நீ நடக்கிறாய்போலத் தோன்றுகிறது. அம்மா அக்னேசி! உன் வீட்டில் உயர்குலமென்றும் இழிகுலமென்றும் வித்தியாசமே இல்லை. எல்லாரும் ஒரு குடும்பத்துப் பிள்ளைகள்போலே கலந்து கூடி மகிழ்ந்து பேசி சமாதானமாயுஞ் சந்தோஷமாயும் இருக்கின்றார்கள் தலைக்குத் தலை தறுதலையாயிருந்து தானே ஒன்றுஞ் செய்யாமல் மற்றவர்களுக்குக் கட்டளை கொடுத்து எவரையுங் கொடுமையாய் நடத்துயபடியாய் உன் வீட்டிலுள்ளவர்களில் ஒரு பிராணிக்கும் யோசனை

வரமாட்டாது. அகநேசி! பெண்களின் இரத்தினமே! சொல்லு என்ன ஜாலவித்தை நீ கற்றிருக்கின்றாய்?”

அக்நேசி இதைக் கேட்கவும் புன்னகை காட்டி: “பபியோலா எனக்கு மந்திர வித்தையுந் தெரியாது; தந்திரமும் நான் அறியேன். ஆனால்......”

“ஆனால் கேள் அகநேசி! உன் வீட்டுக்குள்ளே அந்தரங்க அறை ஒன்று இருக்கிறதல்லவா? அதற்குள்ளேதான் உன்னுடைய மந்திர தந்திர இந்திர ஜாலமெல்லாம் நீ மறைத்து வைத்திருக்கவேண்டும். நீ கிறீஸ்துவ மதத்தைச் சேர்ந்தவளாயிருந்து உன்னை மிருகங்களுக்கு இரையாக்கும்படி போடுவார்களானால் ஏன் சிங்கமும் புலியுந் தங்கள் துஷ்ட சுபாவத்தை மாற்றி உன் காலடிகிட்ட ஆட்டுக்குட்டிகள் போல வந்து படுத்துக்கொள்ளும். ஆனால் அகநேசி! உன் முகம் ஏன் இதற்குள் இப்படி மாறிப்போனது? என்மேல் உனக்கு மனவருத்தமா? அப்படி ஒன்றும் எண்ணாதே. இதுவெல்லாம் வெறுந் தமாஷ்.”

அக்நேசியோ, பபியோலா கிறீஸ்துவென்றும் சிங்கம் புலியென்றும் பேசும்போது தனக்கு இனிவருந் துன்ப வேதனை அக்கினைகளைக் காட்சியிற் பார்த்தாளோ ஏதோ, பிரஞ்ஞை தப்பிப் பரவசமானவள்போல நின்றாள். அவளிருகண்கள் யாரையோ பார்ப்பதுபோலவும் அவள் வாய் யாரோடோ பேசுவது போலவுந் தோன்றின. சற்று நேரத்திற்குப் பின் அக்நேசி தன் ஸ்வயஸ்திதிக்கு வர பபியோலா அவளுக்குச் சொல்லுவாள் —“ அம்மா என் செல்வபாங்கி! நான் சொன்னதெல்லாம் வெறும் விளையாட்டுக்கு. நீ மனதில் வருத்தப்படவேண்டாம். நீ கிறீஸ்துவளாகவுமாட்டாய். உன்னை மிருகங்களுக்கு இரையாய்ப்போடும் பெரும் ஆபத்து உனக்கு வரவுமாட்டாது. சீரா வே

லைசெய்வதில் வெகு பற்றுதலும பிரீதியும் உள்ளவளென்று எனககு நன்றாய்த் தெரியும். நான் சுரம வந்து வருத்தப்பட்டிருநதபோது மற்ற ஊழியர்களெல்லாம பயந்துகொண்டு எனகிட்ட அணடவிலலை. கோபககாரி, திட்டுவாள, அடிப்பாளென்று தூர நின்றார்கள். இநதச சிராமாத்திரம என்னைவிட்டு இராப் பகல பிரியாமல கிட்டவே இருந்து எலலா உதவியுஞ் செயதுவநதாள். இவளுடைய விடாமுயறசியாலதான தப்பிப பிழைத்தேன."

"பபியோலா! இநத அடிமை உனக்குக் காட்டின இவ்வித பரோபகார சிந்தையைப் பற்றியும மாறுதவி செய்ய முடியாத பேருதவியைபபற்றியும நீ அவளைச சிநேகிக்கவிலலையா?"

"ஓ சிநேகிககவா! ஓர் அடிமையையா! இல்லை இல்லை, அக்கேசி. அவள் செய்த உதவிக்குச் சநதோஷமாக அவளுககுப் பணங்காசு கொடுத்ததே அன்றி அவளை நான் சிநேகிக்கவிலலை. ஆனால இநத மூடாத்துமா தான் சமபாதிக்கும பணங காசுகளைத் தனககென்று ஒன்றுஞ செலவிடுகிறதுமிலலை, சிறுவாடாயச் சேர்தது பின்னுக்கு உதவுமேயென்று, வைககிறதுமிலலையாம. அன்றியும அவள் பங்காக நாளதோறும வரும போஜன பதாாததங்களை தானே சாப்பிட்டு பசியை ஆற்றாமல அதை வெளியே எடுத்துககொண்டுபோய் கணணில்லாத கபோதியான ஒரு பிச்சைக்காரி உடன் உட்காாநது இருவருமாகச் சாப்பிட்டு வருகின்றார்களாம. இந்தப் பேதைப்பெண செய்வதெல்லாம் வெகு விகாரமாய்த் தோன்றுகின்றது."

"ஆ! பபியோலா! பேதை என்று நீ சொல்லும் இந்த வேலைக்காரியை நீ எப்படியாவது எனக்கு விற்றுப்போட

த்தான் வேணும். கிரயம என்ன சொல். உடனே விலை தீர்த்து முடித்துப்போடலாம்.''

"உன் இஷ்டம்போலாகட்டும். அம்மா அக்நேசி உன் வாக்குக்கு எதிர்வாக்குணடோ? விலை பிற்பாடு பார்த்துக் கொள்வோம். என காரியஸ்தனிடம உன் வேலைக்காரரில் ஒருவனை அனுப்பு. எல்லாம ஒழுங்காய் முடியும். நல்ல துவா, நேரமாகின்றது விருந்தினர் எல்லாரும இதற்குள் வந்து கூடியிருக்கவேணடும்.''

---

## கூ-ம் அதிகாரம்.

### விருந்தினர் பந்தி.

---

பபியோலாவும் அக்நேசியும மெல்லென இறங்கிப் போஜன சாலைக்குச செலல அங்கே விருந்தினர் பலர் அஜீராய் வந்து கூடியிருந்தாரகள். போஜன பதார்த்தக் கறிவகைகள் சமபூரணமாய் சித்தஞ் செய்யப்பட்டிருந்தன. இவ்விரு மாது சிரோமணிகளும உள்ளே வநத உடன பாபியன் தன் மகள் அலங்கார வஸ்திர பூஷணாதிகளின்றி வெகு சாதாவான உடையோடு சபை நடுவில் வந்ததைக்கணடு விசனமுற்று மகளை நோககி: "என் செல்வமகளே, இதென்ன கோலமு; காமதஞ் சென்று நீ வநதாலுந தக்க உடையின்றி வரலாமா? வழக்கமாய நீ அணிந்திருக்கும ஆபரணாதிகள் முதலாய் இன்று உன்மேல் இல்லையே. ஏன் இந்த ஞாபகப்பிசகு'' என்றதற்கு பபியோலா வெட்கிக் கலங்கி மறுமொழி சொல்ல வகையின்றி நின்றாள். தான் நச்சுநாகம் போல் சீறிச் சினந்து சிராவுக்குச் செய்த கொடுமையையுந் தன்னைத்தானே பழிவாங்கும்படியாய் எடுத்த இந்த அவக்

கோலத்தையும நினைத்து ஸ்தம்பாகாரமாய நிற்கையில், அக்நேசி தன் பாங்கிக்கு இதமாய்ப் பேசி சொல்லுவாள் :—"மாமா உங்கள் மகள் இப்படி அலங்கோலத்தோடு வருகிறதற்கு நானதான் காரணம. அவளோடு நான வீண வம்பு வளாதது்ப் பேசிக்கொண்டிருந்ததால அவள தக்க ஆடை ஆபரணங்கள அணிந்துவருமபடி சமயமில்லை. அந்நேல என்னைப்போல சாதாவான உடை உடன் அவள வரலாயிற்று."

இதற்கு பாபியன் சொல்லுவான் —"அகநேசி நீ உன் இஷ்டபபோல எதுவுஞ் செய்யலாம. ஆகிலும உள்ளதை உனக்குச்சொல்லவேண்டுமானால் இவ்வித உடை நீ சிறு பெண்ணாயிருக்குங்காலத்தில் ஏற்றதாயினும இப்போது ஏற்றதல்ல. உனக்கு கல்யாண பாவம வந்திருப்பதால் நீ நன்றாய் உடுத்தி அலஙகார ஆபரணங்கள பூண்டு யௌவன புருஷாகள உன்னைக் கண்டு மகிழும்படியாய ஜோடித்து வருவது உனக்கு அழகு. உன வீட்டில அலங்கார விநோத உடுப்புகளுக்கும முத்து ஹாரங்களுக்கும பொன நகைகளுக்குங் குறையென்ன ? ஆனால அகநேசி நான சொலவதை நீ கவனமாய்க கேட்கிறதில்லை. உன் மனமுங் கருத்தும எங்கேயோ போகின்றது. நீ யார்பேரிலாவது காதல் வைத்திருக்கவேண்டும. "

பாபியன இவ்விதம் உலக சமபந்தமான விஷயங்களைப் பற்றிப்பேசும்போது அக்நேசி பிரஞ்ஞை அற்றவளாய்வேறு யாரோடோ சம்பாஷிப்பதுபோல் தோன்றினாலும மலாந்து சிரித்தமுகத்தோடு தன்னை பாபியன் கேட்ட கேள்விக்கு பதில் சொல்வாள் : "ஓ மெய்தான் மாமா. என் காதல் யாவும என் இனிய அன்பர்மேல் நான் வைத்திருக்கிறேன். அவா

தம கலயாண மோதிரத்தை எனக்குக் கொடுத்து சிறந்த ஆபரணங்களால் என்னை அலங்கரித்திருக்கின்றார்."

"அக்நேசி அப்படியா! இன்னம அவர் உனக்குக்கொடுத்ததென்ன?

அக்நேசியின் முகங்காந்தியாய் சுடர் விட்டுப் பிரகாசிக்க களங்கமற்ற மனதோடு சொல்லுவாள். "அவர் என் கழுத்துக்கும் கைகளுக்குமம விலை உயர்ந்த பொன ஆபரணங்கள் கொடுத்திருக்கிறார். என காதணிகள் நவமணிபதித்த நகைகளாகும்."

"ஓ அக்நேசி! இவர் யாரா இருக்கலாம்? உன் காதற்குரிய இவா யாரொன்று நீ எனக்கு இரகசியத்தில வந்து சொல்லு. இவருக்கும உனக்குமுள்ள ஸ்நேகம நிலைபெற்று வெகு காலம நீடித்திருக்கக்கடவது"

"நித்தியகாலம நீடித்திருப்பதாக" என்று அக்நேசி சொன்னபின்பு அந்த இடத்தைவிட்டு பபியோலாவுடனே பேசும்படி போனாள். அக்நேசி தன இருதயத்தின் இனிய பத்தாவைக்குறித்துப பேசினவா மனிதரை இரக்ஷிக்கும்படி அவாகளை அனபோடு தேடி வந்த சேசுநாதா சுவாமிதான் எனபதை அஞ்ஞான இருளில அமிழ்ந்திய பாபியன் எப்படி கண்டுபிடிப்பான்? பபியோலாவும இதைக் கேட்டிருந்தால் அக்நேசி யாரோ ஒரு வாலிபன்பேரில் காதல் கொண்டு அந்த இரகசியத்தைத தனக்கு இதுமட்டுஞ் சொல்லாமல் மறைத்துவைத்திருந்தாளென்று மனதிலெண்ணி வெகுளாய் வருத்தமுற்றிருப்பாள.

அக்நேசி இவ்விதம பாபியனோடு பேசிக்கொண்டிருக்கையில் பபியோலா வீட்டுக்குள் விருந்தினரை உபசரித்துக் கொண்டிருந்தாள. அப்போது அங்குகூடியிருந்தவாகளிற் சிலா இனிவருஞ் சங்கதிகளின் நிமித்தம நாம வர்ணித்து

அவர்களின் குணங்களை எடுத்துக் காண்பிப்பது வாசிப் போருக்கு நலமாயிருக்கும்.

விருந்தினராக அன்று வந்தவர்களில் ஒருவன் பெயர் கல்பூரணன். உதித்துஊதிய பாரி சரீரமும், பெருத்துவிரிந்த தொந்தியும், உருண்டு திரண்டு சிவந்த கண்விழிகளும இவனுடைய இலக்ஷணமாயிருந்தது. இவன் தனக்குச் சகலமும் பரீக்ஷாரமாய்த் தெரிந்தாற்போலே எந்த விஷயங்களைப்பற்றியும் வாய் சலியாமற் பேசுவான். இவன் சொல்லுவதில் எவ்வளவுதான் அபத்தமிருந்தாலும இவன் வாக்குக்கு எதிர்வாக்கில்லை யென்றாற்போலே எல்லாருந்தலை வணங்கிக்கேட்பார்கள். இவனுக்குள்ள வாய்சாலக சாமபிரதாயம நிமித்தம் சாஸ்திரியார் என்னுஞ் சிறந்தபட்டம இவனுக்குச் சூட்ட மிக்க சம்மானமும் பிரதிஷ்டையும் எங்கும் பெற்று வந்தான்.

வேறொருவன் பெயர் புரோகசுலன. இவன் பேருண்டிப்பிரியன. விலாப்புடைக்க உண்டுகளிக்குமபடி நாக்கை நீட்டி நெட்டிவிட்டுக்கொண்டு நான முன்னே நான் முன்னே யென்று பரபரபபுடன் சாப்பாட்டு நேரம் பார்த்து ஓடிவருவான்.

இவர்களன்றி இன்னம் வேறு இருவர் இவ்வீட்டுக்கு வரப்போகப் பழக்கமுள்ளவர்கள். இவர்களிலொருவர் இரர்யன் அரண்மனையில் இராணுவ உத்தியோகஸ்தரில் மகா சிறந்தவர். முப்பது வயது சரியாய் ஆகுமுன்னே ரணசூரனென்று பெயர்பெற்று பல்யுத்தங்களில் பகைவரைத் துணிவு குன்றாது எதிர்தது பொருது சிதறடித்து அபஜயப்படுத்தி அற்புத வீர தீரனென்று அழியாப்புகழ்நாட்டிய தன்புத்தி. கீழ்த்திசைத தேசங்களை ஆண்ட தியோக்கிலேசியானுக்கும் உரோமையின் சககரவர்த்தியாகிய மாக்சிமியா

னுக்கும் வெகு இஷ்டமுள்ளவர். அழகுவடிவில் எந்த வா லிபர்க்கும் தாழ்ந்தவரல்லாத போதிலும அவரிடத்தில் ந டை உடைபாவனையில் விகாரம் யாதொன்றுமில்லை. சம் பாஷணையில் சொல்வளமம் பொருள்நயம்பட மாதுரியமாய் பேசுவராயினும் மற்றவர்களைப்போல் உலக விஷயமான வீண் சங்கதிகளைப் பற்றிப்பேசார். கௌரவமேன்மையுஞ், சிறந்த தயாளமும மன ஊக்கமும் தீக்ஷண்ணிய புத்தியுமு ள்ள செல்வ புருஷோத்மன். இவருடைய பெயர் சிபஸ்தி யார்.

இவருக்கு எவ்வகையிலும பாஸ்பரவிரோதமுள்ள வன் பபியோலா முன் குறிதது்ப் பேசிய புல்வியன். இவன் உரோமைப்பிரபுக்களின் சபையில் புதிதாய் உதித்த கிரகம் போல் தோனறினவன. வெகு அலங்கார விநோதமாய்த் த னனைச் சிங்காரிதது விரல்கள ஒவ்வொனறிலுமின்னுங்களை ஆழிபூணடு தான் அணிந்திருந்த வஸ்திரங்களிலேயும இங் குமங்கும் பூஷணுதிகளை இடுக்கித் தலையை ஆட்டி உடலை அசைத்துக கமபீரமாய்ப் பேசி எதறகுந தன விரல்களை விரித்து நாலாபககமும மோதிரங்கள் தோன்றக்காண்பித் து ஒய்யாரமாய் நடந்துவருவான். இவன் அபபட்டணத் தான் அல்லாதேபோனுலுங் கையில் கொஞ்சம பசைஉள் ளவன் ஆதலால் குளிதநில நீருளளமட்டுங் கொக்குங்குருவி யும வநதுகூடுதல் போல இவனுக்கு அநேகர் இஷ்டாகளா க,இவர்களோடு சேர்நது வெகு டமபமாய் விருந்திலும்வே டிக்கையிலும் பணத்தைச் சிலவழித்துவருவான். அக்கால த்திய அஞ்ஞானரோமானர் அநேகமாய் சீர் குலைந்து தம் நி லையினின்றிழிந்த ஸ்திதியிலிருந்தவர்களாதலால், புல்வியன் பணக்காரனென்பதைப்பற்றி இவன் நடக்கையைக் கவனி

யாமல் சற்சனசாதுக்கள் சங்கத்திலும் இவனை சகஜமாய்க் கலந்து இருக்கும்படி விட்டு விடுவார்கள்.

இவனுக்கு ஏற்ற துணையாய் முதிர்ந்த வயதுள்ள ஒருவனிருந்தான். இவ்விருவரும் மற்றவர் அறியாத அந்நிய பாஷையில் தங்களுக்குள் பேசிக்கொள்வார்கள். இவனுடைய முகரூபமும் விளக்கொளிபோல் எரியும் இவனை இருவிழிகளும், இவன் அங்கத்திணைந்து ஆடை அணிந்த கோலமும் எல்லாம் பார்க்கிறவர்களுக்கு அச்சமுண்டாக்க ஏதுவானவைகள். இவர்கள் குடியிருந்த வீடு வெகு சம்பிரமமாயுங் கண்ணுக்குப் பகட்டாயும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஆனால் புலவியனுடைய காரிய பாகங்களை உள் ஆராய்ந்து கவனித்துப் பார்த்தால் இவனுக்குள்ள குணபேதங்கள் பரிஷ்காரமாய் வெளியாகும். சகலமும் ஆராய்ந்தறியவேண்டுமெனனுந் தீராத ஆசையால் விநோத தந்திரப் பிரியனென்பதுவு சமயாசமயம் இவன் தன்னை மறந்தாற்போலிருக்கும் வேளையில் நெற்றியைச் சுருக்கி, புருவத்தைத் வளைத்து, கண்ணை உருட்டித் திரட்டி விழிப்பதும், உதட்டைப் பிதுக்குவதும், பல்லை நெருநெரென்று கடிப்பதும் ஆகிய இவ்வித சேஷ்டைகள் இவன் வெளிக்கு மகா யோக்கியனாகத் தோன்றினாலும் உள்ளத்தில் கபடமும் வஞ்சகமும் நிறைந்தவனென்றும் இவைகளை மறைக்கும்படியாய் வெளிக்கு வேஷமெடுத்தவனென்றுந் தெரியவரும்.

நாமிங்கு வர்ணித்துக் குறித்துக் காட்டிய இவர்களுட இன்னுமற்றநேகரும் போஜனசாலையில் பந்தி அமர்ந்து உல்லாசமாய்ச் சாப்பிட்டுக் கொஞ்சம் பசி ஆறியவுடன் பற்பல சமாச்சாரங்களைப்பற்றி பேச ஆரம்பித்தார்கள்.

# ௭-ம். அதிகாரம்.

## கதாப்பிரசங்க சாஸ்திரியார்.

---

கர்பூரண சாஸ்திரியார் அங்கே கூடியிருந்தவர்களை நோக்கிக் கேட்பார்: "மித்திரரே! இன்று பட்டணத்தில் என்ன சமாச்சாரம்? விசேஷம் ஏதாகிலுமுண்டா? எனக்குள்ள பலபல ஜோலிகள் நிமித்தம் இவ்வித விஷயங்களைப் பற்றி விசாரிக்க சமயமில்லை"

இதற்கு புரோகிதன் சொல்வான்: "சாஸ்திரியாரே! ஒரு நல்ல சமாச்சாரம் ஒன்றுண்டு. ஏன் உங்களுக்குத் தெரியாதா? நமது தேசத்து இராஜாக்களின கொலுமண்டப வேலையை இப்போது தொடர்ந்து செய்து இன்னம் மூன்று வருஷங்களில் முடிக்கப் போகிறார்களாம்."

பாபியா இதை மறுத்து: "நீர் சொல்வது அசாத்தியமாய் எனக்குத் தோன்றுகிறது. நேற்றையத்தினம் நான் என் உத்தியோக ஸ்தலத்திலிருந்து வீட்டுக்கு வரும்போது நடந்திருந்த வேலையைப் பார்த்தேன். வேலை வெகு சொற்பமாய் நடந்திருக்கின்றது. வேலையோ பாரிய வேலை. கொலுமண்டபத்தை முடிக்கும்படியாய் இன்னும் அநேக கற்றூண்களும் சதுரக் கற்களும் கட்டட சாமான்களும் அவசியம்."

இதற்குப் புலவியான் சொல்வான்: "நீர் சொல்வது வாஸ்தவம். ஆனால் இராஜ உத்தரவுப் பிரகாரம் இஸ்பானியா,* சாதீனியா, கோர்சோகீசஸ், என்ற தேசங்களிலுள்ள கைதிகளெல்லாரையும் இங்கே கட்டட வேலைக்கு அனுப்பும்படி நிரூப சட்டம் பிறந்திருக்கின்றது. சில ஆயிரம் கிறிஸ்துவர்களை இப்படி ஐரோப்பாய் வேலைக்கு அனுப்பினால் வேலையும் அதிசீக்கிரத்தில் முடிந்துபோகும்."

பபியோலா விநோதார்த்தமாய் எப்படி குற்றவாளிக ளான கைதிகளைப் பார்க்கிலுங் கிறீஸ்துவர்கள் கட்டிட வேலைக்கு அதிகத் தகுந்தவர்களென்று கேட்க புல்வியன் வஞ்சகமாய் கொஞ்சம் புன் சிரிப்புக் காட்டிச் சொல்வான் : "அது ஏனோ நான் அறியேன். ஆனால் எவ்வகைக்கடும் வேலைக்குங் கிறீஸ்துவர்கள் தகுந்தவர்கள் என்பது எல்லா ரும் அறிந்தவிஷயம். ஐம்பது கைதிகள் கூடி வேலைசெய்து கொண்டிருக்கையில் அவர்களுக்குள்ளே இவன்தான் கிறீஸ் துவனென்று புள்ளி போட்டாற்போல் நான் சுட்டிக் காண் பிப்பேன்."

இதைக் கேட்ட பலபேர்கள் அது எப்படி எப்படியெ ன்று ஆச்சரியத்தோடு வினவ புல்வியன் சொல்லுவான் :—

"மித்திரரே எப்படியென்று கேளுங்கள் ; கைதிகளுக் குச் சாதாரணமாய் வேலையென்றால் வேப்பங்காய், அவர்கள் குனிந்து வளைந்து வேலை செய்யும்படி சாட்டை அடியும பிரப்பம்பழமும தாராளமாய்க் கொடுக்கவேணடும். தெப் பல் விழுந்தால் தான அப்பால் நடப்பார்கள். காரியஸ்தன் கண் கொஞ்சம் மட்டாயிருந்தால் வேலைக்குச் சொட்டுவரும். அன்றியும் இவ்வித வேலைக்காரர் நாகரீகமென்னுஞ் சூரிய கிரணஞ் சற்றும் புகப்பெறாமல் மௌடீகமென்னும் அந்த காரத்தில் அமிழ்ந்திக் கிடக்கும் மிலேச்சர், தெருச்சண்டை யென்றால் இடுப்புக் கட்டிவருஞ் சண்டாளர். ஆனால் கிறீ ஸ்துவர்களை விலங்கில் மாட்டி வேலைக்கு அநுப்பினாலோ இவர்கள் சொன்னபடி செய்து எவர்க்கும் பணிந்து நடந்து என்றுமலர்ந்த முகத்தோடு இட்ட வேலையைத் திட்டமா ய்ச் செய்வார்கள. நான் கீழ்த்திசைத் தேசங்களிலிருக்கும் போது மேன்குலத்திற் பிறந்து செல்வமாய் வளர்ந்த கிறீ துவ வாலிபர் அநேகர் விலங்குமாட்டி வேலைசெய்வதைப்

பார்த்திருக்கின்றேன். இவர்கள் கைகள் அதற்குமுன் கோடரியேனும் மண்வெட்டியேனுந தொட்டிராது. இவர்கள் தோள் சுமையேனும் பாரமேனும் பொறுத்தறியாது. பிரபுக்களாய் பிறந்து வளர்ந்த இநதக்கிறீஸ்துவர்கள் பிடிபட்டு விலங்கு மாட்டி வேலை செய்வதைப் பார்த்தால் இவர்கள் தங்கள் ஜென்ம ஊரில் சதா கைப்பாடுபட்டு வேலைசெய்து ஜீவனம பண்ணி பிழைதது வநதவாகள்போல் சநதோஷகரமான மனதோடு எநதக கஷ்ட வேலையையுஞ் செய்வார்கள். ஆகிலும இநதக கிறீஸ்துவாகள் எவ்வளவு மனப்பூரணமாயக் குறிதத வேலையைத திருத்தமாய்ச செய்தபோதிலுஞ் சவுககடியுஞ சாட்டைப்பூசையுஞ் சமபூரணமாய் இவர்கள் முதுகில் படைப்பாாகள். நமது தேவீத்துவ இராஜாக்கள் சித்தப்பிரகாரம அநதக கிறீஸ்துவாகளை எவ்வளவு கொடுமையாய் நடததக்கூடுமோ, அவ்வளவு கொடுமையாய் நடத்துவதே நமது தேசத்தின் சட்டம். ஆனால் எவ்வளவுதான் அநீதமாயுங் கொடுமையாயும் இவாகளை நடத்தினாலும் இநதப் பேதைக் கிறீஸ்துவர்கள் ஐயோவென்று முறைப்பட்டதை நான் கேட்டதேயிலலை.''

புல்வியன் சொன்ன யாவறறையும உற்றுக் கவனமாய்க் கேட்டிருந்த பபியோலா கொஞசம ஆததிரததோடு பேசிச் சொல்வாள்:—"இவ்வகையான சட்டப்பிரமாணம் எநத நீதியைசசேர்நததோ நான் அறியேன். கொடுங்கோன்மை என்பதின் அர்த்தம இது அல்லாதேபோனால் வேறு ஏதுவாயிருக்கலாம? ஆனால இவ்வளவு பேதையான கிறீஸ்துவர்கள் என்ன விகார ஜாதியாராயிருக்கவேண்டும. இவர்கள் யாரென்றும், எங்கிருநது வருகிறாகளெனறும, நமது இராஜதானி நகருக்கு எப்படி வநதார்களென்றும, எப்படிப் பரம்பினார்களென்றும, அறிநதவர்கள் ஒருவருமில்லையா?''

இதைக் கேட்கவும் புரோக்குலன் இங்கிதமாய் வஞ்சகம் பேசிச்சொல்வான்: "இதோ நமது கல்பூரண சாஸ்திரியார் இருக்கிறாரே! அவருக்குத் தெரியாதது ஏதாகிலும் உண்டா? சகல கலைக்கியான நூற்களையுங் கற்றுத்தேர்ந்து கரைகண்ட கவிராய சிங்கமல்லவா? எந்த விஷயத்தின்பேரில் இவரிடத்தில் வியாக்கியானங் கேட்டாலும், அது கடுகைப்போல் நுண்ணியதாயினும் மலையைப்போல் வளர்ந்து உயர்ந்ததாயினும நமது சாஸ்திரியார் அவர்கள் வாய் சலியாமல் ஐந்து மணி நேரம் பேசுவாரென்பது லோகப்பிரசித்தமான சங்கதி. கடுகைத் துளைத்து கடலைப் புகட்டுஞ் சமர்த்துள்ளவர் இவர்தான் என்றால், அது மிகைபடக்கூறல் என்னும் வழுவாகாது"

கல்பூரண சாஸ்திரியார் இவ்வித சிறந்த புகழ்ச்சி மொழிகளைக் கேட்கவும உள்ளங்குளிர்நது புன்னகை காட்டி தான் புரட்டிக்கொண்டிருந்த ஓர் பெருங் காப்பியத்தை அப்பால் வைத்து எல்லாந தீர்க்கமாய் அறிந்தவர்போலே விரிந்து அகன்ற தமது வேசரி வாயைத் திறந்து நாலு பக்கமுஞ் சுற்றிப்பாரதது வெகு சிலாக்ய ஒய்யாரததோடு உபநியாசம பின் வருமாறு செய்யலானார்:—

"மித்திரரே! கிறீஸ்துவ ஜனங்கள் யாரென்றும் அவர்கள் மதங், கொள்கை, ஏற்பாடு முதலியவைகளின்னபடியென்றும் நான் அநேக கிரநதங்களில் வாசித்து தீர்க்க ஆராய்ந்து படித்திருக்கின்றேன். கேளுங்கள்: கிறீஸ்துவர்கள் ஒரு மதஸ்தர். இவாகள் மதம் பிரதேசத்தில் உற்பத்தியூரி முதலில் தோன்றியது. இதை ஸ்தாபித்தவன் கல்தேயா தேசத்தில் பிறந்து வளர்ந்தவன். இவனுடைய மதக் கோட்பாட்டை நமது தேவத்துவ வெஸ் பேசியான் அரசாண்ட நாளில் கூடப்பிறந்த சகோதரராகிய பேதுருபவுல்

என்ற இருவர் இந்த இராஜதானி நகரில் பிரசங்கிக்கும்படி யாய் வந்தார்கள். சில சரித்திர நூலாசரியரின் அபிப்பிராயப்பிரகாரம் பேதுருபவுல என்றாலும, மோசேஸ் ஆரோன் என்றாலும ஒன்றுதான். இவ்விருவரும இரட்டைப்பிள்ளைகளாய் ஒருவன் காலை வேறொருவன் பிடித்துக்கொண்டு பிறநதார்கள். இவ்விருவரில் ஆரோன் என்பவன் தனக்குரிய ஜேஷ்ட புத்திரனின் சுதந்தரத்தை தன் தமபிக்கு விற்றுப் போட்டானும். இப்படி சாசுவத தானஞ் செய்ததின் காரணமேதெனில் ஆரோன தன் காலுககு மிதி அடி செய்யும படி ஆட்டுக்குட்டியின் தோல் அவசியமாயிருநததாம். அதற்காக புத்தியில்லாப்பேதையாய் மேற்கூறியவாறு செய்தானும். ஆனல் பேதுரு பவுல் என்பதும மோர்சேஸ் ஆரோன் என்பதும் ஒன்றுதான் என்று சொல்வது என் புத்திக்கு நிஷ்காரணமாகத் தோன்றுகின்றது. ஏன என்று கேட்டீர்களோ? இந்த யூத ஜாதியாருடைய வேத புத்தகத்தில் சொல்லி இருப்பதுபோல் மோசேஸ் ஆரோன் என்ற இருவரும் ஒரு பலி கொடுத்தார்களாம். மோசேஸ் கொடுத்த பலியிலே நல்ல அதிர்ஷ்டந் தோன்றினதாம. இதனல் ஆரோன் மனதில் பொறாமையுறறு சமீபத்தில் கிடநத ஒரு கழுதையின் அலகெலுமபை எடுதது வீசி நமது தேச ரோமுலூஸ் என்பவன் ரீமஸ் என்பவனைக் கொன்றதுபோல் தன் தமபியை ஓரே அடியில் அடித்துக் கொன்றுனும. இந்தக் கொடுந்துரோகத்திற்குத் தக்க தண்டனை அப்போதே அவனுக்கு வந்தது. எப்படியெனில் மசேதோனியா தேசத்து மன்னனுகிய மர்தோககேயன் தன் தமக்கை ஜூடித் என்பவள் செய்த விண்ணப்பத்துக்கு இரங்கி ஆரோனை ஐமபது முழ உயரமான ஓர் கழுமரத்தில் தூக்கிக் கொன்றுபோட்டானும். ஆகிலும் பேதுருவும் பவுலும நான் முன் உங்க

ளுக்குச் சொன்னதுபோல் நமது இராஜதானி நகர் உரோமைக்கு வந்தார்கள். பேதுரு அதற்குமுன போன்சியுஸ் பிலாத் என்ற நமது நகராதிகாரியின வீட்டில் அடிமை வேலை செய்துவநதவன. ஆனால் எப்படியோ தன் எஜமான் வீட்டை விட்டுத் தப்பிததோடிப்போக கடைசியில் அகப்பட்டு அவன் எஜமான கட்டளைபபடி சிலுவையில் அறைபட்டு இறநதான. இவ்விருவருந தங்களுக்கு சீஷராய அநேகம போகளை மயககிச் சோத்தார்கள. இவாகள் தங்கள் குருவான பேதுரு சிலுவையிலே மாண்டானென்பதின அறிகுறியாக சிலுவையைத தங்கள் தெய்வமாக நாளைக்கும ஆராதித்து வருகின்றார்கள். இதுவுமன்றி அடி உதை படுவதும, பழி வசை தூஷணந தாங்குவதும், கொடும்வதை உடன் இறப்பதும, இவர்களுக்குப் பரமானநத பாக்கியமாம. இப்படி மரித்தால் ஏதோ மேகங்களுக்குள்ளே போய் சீருஞ் செல்வமுஞ் சிறப்பும பெறுவாாகளாம."

இவ்விதமாக கலபூரணன் சேசுநாதர்சுவாமி ஸ்தாபித்த பரிசுத்த வேதம இன்னதெனறு காட்டும்படி செய்த இநத கதாப்பிரசங்கததை அங்கே கூடியிருநதவர்களில இருவர் தவிர மறறச் சகலருமு திறநத கண்ணும் விரிந்த வாயுமாய்க் கேட்டுக்கொண்டிருநதார்கள.

அக்நேசியின் முகங் கோவைப் பழம்போல் சிவநது இரத்தம் பொங்கிக் கொதிப்பதுபோல் தோன்றினது. இரண வீர சூரனான சிபஸ்தியார் தன் மனதில் நெருப்புபோல் பற்றி எரிநத கோபத்தை வெகு பிரயாசையுடன் அடக்கி சேசுநாதாசுவாமி ஸ்தாபித்த சத்தியவேதம இன்னதென்று அறியாமல் முனனே நடந்ததும பின்னே நடந்ததும எலலாம் ஒன்றாய்க் கலந்து சகலமும அறிநதவன்போலே அபத்தத்தைக் கக்கி பித்தங்கொண்டவன்போல் பிதற்றின கல

பூரணின் முழு மூடத்தனத்தைப்பற்றி அநுதாபப்பட்டவ ராகத் தோன்றினர்.

சாஸ்திரியார் தான் செய்த இந்த உபந்நியாசம் எல்லா ருக்கும் திர்பதிகரமா யிருக்கிறதென்றறிந்து கடைசி முடிவாக, "மித்திரரே கிறீஸ்துவர்கள் யார் எவரென்று நீங்க ள் இப்போது நான் செய்த உபநநியாசத்தால் வெள்ளிடை மலேபோல் தெளிவாய் அறிநதிருக்கிறீர்கள். இப்பேர்ப்பட்ட கிறீஸ்துவர்களிடம் வேலேவாங்கினல் இராயர் கொலுமண டபமும் மிருகங்களின மாலுஞ் சீக்கிரமுடிவாகும, அதின் பின் அங்கே விநோத வேடிக்கைகள் காட்டுவார்களென்றே சொல்லுகிறீர்கள் ?"

இதற்கு மறுமொழியாக புல்வியன சொல்வான." திரு நாளும பெருநாளுஞ சமீபததில வருவதால அபபோது பற் பல விநோத வேடிககைகள் காட்டுவது வழககம. இதற்கா கவே சிங்கங்களேயும புலிகளேயும பிடித்து இருமபுககூடுக ளில் அடைத்து இராஜதானி நகருககு அனுப்புமபடி நூமி தியா தேசத்து அதிகாரிககு இராஜ முதகிரையுளள கட்ட ளேயொன்று அனுப்பியிருககின்றது", இவை சொன்னபின பு புல்வியன் சடுதியில திருமபி ராணுவவீரன சிபஸ்தியா ஞா வெகு கபடமாயப் பாாத்துச சொலலுவான்:—"ஓ ப ராக்கிரம சேனுகிபதியே தங்களேப்போலொத்த வீரசூரனு க்கு இவ்வித துஷ்ட மிருகங்களின வேடிக்கையைப் பார்ப் பது வெகு ஆனநதமாயிருககும். அதிலும இநத துஷ்ட மி ருகங்களே இராஜ துரோகிகளான கிறீஸ்துவாகள்மேல ஏவி விட்டு அவைகள் அவாகளேக கீறி வகிர்நது கடித்து தினப தைப பார்ப்பது இராஜபக்தியுள்ள தங்களுக்குப் பரமான ந்தமாயிருக்குமல்லவா ?"

புல்வியன் பேசும்போது சிபஸ்தியார் உறையில் கிடந்த தம் வாளை ஊன்றி சாய்ந்திருந்தவர் நன்றாய் நேரே நிமிர்ந்து வஞ்சகமாய்த் தம்மை வினவின புல்வியனுக்கு கலங்காமுகத்தோடு மறுமொழி சொல்வார்:—

"புல்வியா! கொடிய துஷ்ட மிருகங்களோடு சிறு பிள்ளைகளையும் பெலனற்ற பெண்பிள்ளைகளையும் விட்டுப் பார்ப்பது சண்டையாகுமா? சண்டை என்றாலும், இவர்கள் சிந்தும் இரத்தத்தை நான் சந்தோஷமாயப் பார்த்துக்கொண்டு நிற்பேனாகில் நீ எனக்குத் தந்த வீரசூரனென்னும் பட்டஞ் செல்லாது. நமது இராட்சிய விரோதிகளை எதிர்த்து அவர்களோடு யுத்தந் தொடுக்கவேண்டுமானால் இதோ நான் மனப்பூரணமாய் என் வாளை உருவிப் போராடுவேன். ஆனால் குற்றமில்லாதவர்களைக் கொல்லும்படி சிங்கத்தையுஞ் சிறுத்தையையும் இராஜனே ஏவிவிட்டாலும் நான் அந்த மிருகங்களைக் கொன்று மனிதர் உயிரைக் காப்பாற்ற என் வாளைக் கையிலெடுப்பேனே அன்றி, வேடிக்கை பார்க்கும்படி நிற்பது என் சுபாவமல்ல" என்று சிபஸ்தியார் சொல்லவும், புல்வியன் பேச வாயின்றி எழுந்திருந்து போகப்போகும்போது சிபஸ்தியார் அவன் கையைப் பலமாய் இறுகப்பிடித்து சொல்லுவார்:—

"புல்வியா! இன்னம் முடியக்கேள். நான் உனக்கு இப்போது சொன்ன யுக்தி நானாய் உத்தேசித்துச் சொலலும் அபிப்பிராயமென்று நீ எண்ணவேணடாம். நமது வாய் சாலகவித்வான் சீசரோ என்பவரின் கோட்பாடாக்கும. அவருடைய எண்ணமும என் எண்ணமும் இது விஷயத்தில் இசைந்திருப்பதால் எனக்குப் பயமென்ன?"

அதற்கு புல்வியன் கொஞ்சந் தமாஷாய்ப் பேசுவது போல்:"அப்படியானால் தளபதியே! மிருகங்கள் வேடிக்கை

காட்டும் மாலில் தங்களைப் பார்க்கும் பாக்கியம் எங்களுக்கு இனி வாய்க்காதோ?'' என்றதற்கு செபஸ்தியார் சொல்லுவார்: "புல்வியா! அங்கே நீ என்னை எப்போதாவது பார்க்க நேரிடுமாகில் ஆதரவற்ற நிர்ப்பாக்கியரைக் காப்பாற்றும்படி வருவேனே அன்றி, துஷ்ட மிருகங்களைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கும்படி வருவதை நீ பார்க்கமாட்டாய்?'' என்று சொன்னதைக் கேட்ட பபியோலா "சபாஷ் சபாஷ்'' என்று கரகோஷஞ் செய்ய புல்வியன் உள்ளெழுந்து பொங்கிய கோப மிகுதியால் ஒன்றும் பேச ஏலாமல் உதட்டைக் கடித்து மிழித்துப் பார்த்தான்.

அங்கு கூடியிருந்த எல்லோரும் நேரமாயிற்றென்று எழுந்து தத்தம விடுதிக்குச் சென்றார்கள்.

---

## அ-ம். அதிகாரம்.

### அக்நேசி, சீரா, செசீலி.

### உடைமையும் வறுமையும் ஒரு வழி செல்லல்.

---

பந்தியில் அமர்ந்திருந்தவர்கள் மேற்கூறிய பிரகாரந் தங்களுக்குள் சமபாஷித்துக்கொண்டிருக்கும்போது பாபியன் தனியேயிருந்து அக்நேசியின விஷயத்தைப்பற்றித் தனக்குள் சிந்திக்கலானான். அஃதெவ்வாறெனில், "மாதர்களுக்குள் நடுநாயகமான சுந்தரி அக்நேசியின்மேல் காதலுற்று' அவள் மனதைக் கவர்ந்துகொள்ளக்கூடுமானவன் யாராயிருக்கலாம? அவளுக்கு அத்தனை விலைபெற்ற ஆபரணங்கள் கொடுக்க யார் தாம? இந்த இராஜதானி நகரிலுள்ள பாலிய பிரபுக்கள் அநேகமபேரை நான் அறிவேன். அவர்களில் எவனும் இவ்வித சிறந்த ஆபரணங்களைத் தேடிச் சம்

பாதித்திருந்தால் எனக்கு இது விவரந் தெரியாமலிராது."

இப்படியாய் தனக்குள் சிந்தித்துக்கொண்டிருக்கையில் வகை வகையான விநோத ஆபரணங்களுடன் உரோமைப் பிரபுக்கள் சபையில் நவமாய்த் தோன்றின புல்வியன் ஞாபகம பளிச்சென்று பாபியன் மனதில் தோனற அக்நேசியின் காதற்குரியவன இவனாயிருக்கவேண்டுமென்று தீர்மானித்துக்கொணடான். இதற்கிசைவாக புல்வியன வாய்நத சமயநேசாறும இரகசியமாய் அக்நேசியைக் கண்டுகளிகக அவாவுற்றிருநதது பாபியனுக்குத் தெரிநத விஷயநதான். ஆனதால் இவ்விருவர் மனதையுஞ சரிவர இசையுமபடி செயது மணமுகூர்த்தம அநுகூலமாய் முடியத தான் முயற்சி செய்ய எத்தனிததான.

இவாகளைச் சாாநத விஷயங்களை இங்கு நிறுத்தி, சீராவுக்கு நடந்த சங்கதிகளை எடுத்து காணபிப்போம. சீரா காயங்கட்டுமபடி யுபுரோசினாளைத தேடிப்போய தன காயத்தை அவளுக்குக் காணபிகக அவள் பார்த்து திடுக்கிட்டு "அமமா ! இதென்ன ? காயம பெரிதாயிருக்கிறதே ! இது எப்படி உணடானது ? நீ என்ன செய்தாய ? பபியோலா பெருமாட்டியின வீட்டில் இபபடிக காயம வராதே ! சீரா! நீ ஏதாவது பெருந தப்பிதஞ் செயதிருக்கவேண்டும" என்று இவ்வாறுய்ச் சொலல, அதற்கு சீரா: "அமமாயி! நீ சொல்வது மெய்தான; எல்லாம என தப்பிதம்; அறிவிற சிறநத பபியோலாவோடு நான் ஏன் வாககுவாதஞ் செய்யவேண்டும?" என்று சொன்னாள்.

"சீரா ! வாக்குவாதமா ! நீயா ஓர் அடிமை ! கலைக்கியான நூலெல்லாங் கற்றுத தேர்ந்து சாரதா பீடமென்று எல்லாருஞ் சொல்லும பபியோலாவோடு வாக்குவாதம் பண்ணுவது ! அம்மம்மா ! நமது கல்பூரண சாஸ்திரியாரும்

அவளோடு தாக்கஞ் செய்வதென்றால் சற்று அஞ்சித்தான் நிற்பார். காரியம் இப்படியானால் உனக்கு இந்தக் காயம் வந்தது ஏன் என்று கேட்பானேன? ஆனால் இந்தக் காயத்தை நீ மறைத்து ஒருவருக்கும் காண்பியாதிருக்கவேண்டும். உன் கையைச் சுற்றி அழுந்தக் கட்டினதுபோல் காட்ட ஓர் பட்டுத்துண்டு அல்லது சீரி உனனிடமில்லையா? ஆனால் உன்னைக் கேட்பது வீண். மற்ற வேலைக்காரிகளிடம் எது கேட்டாலுமிருக்கும். நீயா இவைகளைப்பற்றிச் சற்றுங் கவனிப்பதில்லை. நல்லது வா தேடிப் பார்க்கலாம்."

இருவரும் வேலைக்காரர்களும் அறைக்குள் போய் சீராவின் பெட்டியைச் சோதித்துப்பார்க்கையில், எல்லாத்துக்கும் அடியில் வெகு நேர்த்தியான சித்திரத் தையல்வேலையால் சிங்காரிக்கப்பட்ட ஜரிகை போட்ட துண்டு ஒன்றிருப்பதைக் கண்டு அதை எடுத்து சீராவின் காயமபட்ட கையைசசுற்றி பார்வைக்கு வெகு அந்தமாயக் கட்டி அனுப்பினாள்.

உடனே சீரா அன்று தனக்குப் பசியோலா அனுப்பின இனிய பதார்த்த போஜன வகைகளை ஒரு சிறு கூடையில் வைத்து தன் அறைக்குச் சற்று அப்பாலிருந்த ஒரு கூடத்துக்குப் போனாள். போகவும் அங்கே இவளுக்காக எதிர்பார்த்திருந்த சுமார் பதினாறு பிராயமுள்ள ஓர் இளமங்கை சீரா வந்ததும் அவளைக் கட்டி அணைத்துக் கொஞ்சுவதைப் பார்த்தவர்கள் இவள் கண்ணில்லாக் கபோதியென்று சொல்லவேமாட்டார்கள்.

சீரா அவளை உட்காரச் செய்தபின் வெகு பட்ச பாந்தவத்தோடு சொல்வாள்: "செசீலி இன்று உனக்கு நல்ல விருந்து நான் கொண்டுவந்திருக்கிறேன். பசியாற ருசியோடு நீ நன்றாய்ச் சாப்பிடலாம்."

"அதெப்படி சீரா ? எந்த நாளும் நான் சாப்பிடுவது விருந்து போஜனம். இன்றுமாத்திரம் என்ன விசேஷம்?"

"செசிலி இன்றைக்கு விசேஷந்தான், என் செல்வ பெருமாட்டி தான் சாப்பிடுங் கறிவகைகளிலிருந்து நல்ல பதார்த்தம எனக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதை உனக்கென்று நான் கொண்டுவந்திருக்கிறேன்"

"ஆ சீரா ! நீ எவ்வளவு தர்ம குணமுள்ளவள். ஆனால் உனக்கு அனுப்பிய பதார்த்தத்தை நீ அல்லோ சாப்பிட வேண்டும்"

"செசிலி உள்ளதை ஒளியாமல் உனக்குச் சொல்லுகிறேன கேள், நீ, கணணில்லாத ஏழை, சாப்பிடுவதை நான் பார்ப்பது நானே சாப்பிடுவதைப்பாாக்கிலும எனக்கு அதிக ஆனந்தங் கொடுக்கினறது."

"ஆ சீரா! நீ சொல்வது சரியலல. சர்வேசுரன் என்னை ஏழையாய் உணடாக்கி வைத்திருக்கிறார். அவர் சித்தப்பிரகாரம நான் ஏழையாயிருநது ஏழைகள் சாப்பிடும் பிச்சைச் சாப்பாட்டை ஆவலோடு தேடி சாப்பிடுவது எனக்கு அழகாகும். நீ எனக்கு கஞ்சியாவது கூழாவது ஊற்றினால் அதைத் தாமமாக நீ எனககுக கொடுககிறாயென்று நான் சந்தோஷமாய் வாங்கிச் சாப்பிடுவேன். ருசியுள்ள உயர்ந்த சாப்பாடு எனக்கு ஏறறதல்ல"

"ஆ! செசிலி உன பக்தியும புத்தியும எவ்வளவு மேலானது. உன் ஆசைபோலாகட்டும. நலலது இதோ நீ வழக்கமாய்ச் சாப்பிடுங் கஞ்சி. இதை நீ சாப்பிட்டுக்கொண்டிரு. நான் போய் இநத ருசியான பதார்த்தங்களை என் தோழிமார்களுக்குக் கொடுத்துவருகிறேன்."

"மெத்த உபகாரம என் பிரிய சகோதரி, நீ வருமட்டும் நான் உனக்காகக் காத்திருக்கிறேன்."

சீரா வேலைக்காரிகளிருக்கும அறைக்குப் போய் தான் கொண்டுவந்த கறிவகைகளை அவர்களுக்குக் காட்டினவுடனே காய்ந்த மாடு கம்புக்கொல்லையில் பாய்வதுபோல் அவர்கள் சீரா கையிலிருநததைப் பறித்து எனக்கு உனக்கு என்று அடித்துககொண்டு முடித்துவிட்டாாகள். சீரா அந்த அறையைவிட்டு வெளியே வருமபோது தன் கையில் சுற்றியிருந்த ஜரிகைத் துண்டு நெகிழநது விழ அதைச் சரிப்படுத்திககொண்டிருக்கையில் அநதப பக்கமாய் புலவியன வரக் கண்டு பாமபைக கண்ட தேளைபோல் உடல நடுங்கி முகம் வேர்த்து பதுங்கி நினறுள். உடனே தன் நெஞ்சில் சிறுவை அடையாளம வரைய தன கண்முன் தோனறிய மாயா ஜாலம மறைநதது. தாமதமின்றி அடுதத அறைக்குள் நுழைநதாள்.

புலவியன் சீரா நினற இடத்தில் சோநதான். ஏதோ கீழே ஒனறு கிடப்பதைப் பாாத்தான. பாாககவும அவன் காலகள் படபடவெனறு ஆடின. இங்குமங்கும் சுற்றிபபாாததான. சமீபத்தில ஒருவருமிலலே. ஆனால எங்கும பிரசன்னமாயிருநது எல்லாவற்றையும அறிநது இருளிலு மருளிலா பாாப்பவா ஒருவர் உணடெனபதை அவன கவனிக்கவில்லே. கீழே கிடக்கும பொருளை உறறுப்பார்த்தான். அதை எடுக்குமபடி பலமுறை குனிநதான். குனிநதவன் அதை எடுகக அஞ்சினன். அசசமயத்தில் ஓர் போர்வீரன் ராணுவ நடையோடு வருஞ் சப்தங்கேட்க கீழே கிடந்த சீராவின் ஜரிகைத்துண்டை எடுத்து சுருட்டி மடக்கி அக்குளில் அடககி பரமயோக்கியன்போல் பலலே இறுகக் கடித்துக்கொண்டுத் தன விடுதிக்கு பரபரப்புடன் நடநது சென்றுன். சென்றதும தன் வேலைக்காரரெல்லாரையும அப்பால் போகும்படி துறத்தின பினபு நமபிக்கையுள்ள எவு

ரோட்டஸ் என்பவனைமாத்திரம உள்ளே நிறுத்தி தான் கொண்டுவந்த ஜரிகைத்துண்டை விரித்தான். அதிலே இரத்தக்கறை இருப்பதை இருவரும் பார்த்தார்கள். பார்க்கவும் இருவர் முகமும இரத்தப்பசை அற்று வெளுத்துப் போக அசைவற்று நின்றார்கள்.

கடைசியாய் எவுரோட்டஸ் "இந்தத் துண்டு அவளுடையதுதான். ஆனால அவள் இறந்துபோனது வாஸ்தவம்" என்றதற்கு புலவியன "இறந்துபோனாளென்று உனக்கு நிச்சயமாயத தெரியுமா?" எனக்கேட்க எவுரோட்டஸ் சொல்வான் :

"ஒருவன்தானே பார்க்காத காரியத்தைப்பற்றி எவ்வளவு நிச்சயமாயிருக்கக்கூடுமோ அவ்வளவு நிச்சயமிது. ஆனால இதை நீ எங்கே எடுத்தாய? இதில இரத்தத்துளி எப்படி உண்டானது?"

"நாளை இவையெல்லாம உனக்குச் சொல்வேன். இன்று என் மனம பலவாறாய வெருவிப்பதறி இருக்கின்றது. இந்த இரத்தக் கறையைப பார்த்தால் நமது மேல்பெரும் பழிவருமபோல தோன்றுகிறது. அந்த இரத்தம இப்போ சிந்தின இரத்தமல்லவே."

"க்ஷேம! வீணான யோசனைகளுக்கு இடங்கொடாதே. ஆனால் இதை நீ எடுக்கும்போது யாராவது பார்த்தார்களா?"

"நான் அறிய ஒருவரும பார்க்கவில்லை."

"அப்படியாகில மோசமில்லை. இராத்திரிப் படுத்து நன்றாய் நித்திரை செயதால் காலமே எல்லாந தெளிவாயிருக்கும்."

இருவரும் ஒரே அறையில் அன்றிரா படுத்திருந்தார்கள். புல்வியன் இரா முழுதும நல்ல தூக்கமின்றி தன் கட்

டியில் உருண்டு பிரண்டு பயங்கர சொர்ப்பனங்கண்டு புலம்
பினான். சிறந்த ஓர் பட்டணம் அவனுக்கு சொப்பனத்தில்
தோன்றியது. அதின் சமீபத்தில் தெளிந்த ஜலமுள்ள நதி.
இந்நதியில் ஒரு கப்பல். கப்பலில் ஒரு மாயாரூபம் ஜரிகைத்
துண்டு ஒன்றை வீசி இவனை வரும்படி சமிக்கைக் காட்டி
னது. அதன் பின் காட்சி மாற கப்பல் நடுக்கடலில் அலை
கள் நடுவில் அலைந்து சுழல அதின் பாயமரத்தின் உச்சி
யில் ஓர் ஜரிகைத்துண்டு கொடிபோல சுழன்று ஆடினது.
பின்னர் கப்பல் ஒரு பாறையில் மோதி உடைந்துபோக
கொடிமரமும் அதின் பட்டுக்கொடியும் எல்லாத்திற்குமே
லாய் உயர எழும்பி நின்றது. மாயாரூபம் ஒன்று தோன்றி
கையில் தீவர்த்தி பிடித்து தன் சிறகைத் தட்டி விரித்துப்
பறந்து கோப முகத்தோடு ஜரிகை கொடியில் பழிபழி
என்று எழுதியிருப்பதை யாவர்க்கும் காட்டினது. புலவி
யன் இவ்வித சொப்பனங்கண்டு புத்தி தடுமாறி பினறிக்
கொண்டிருந்ததை எவுரோட்டஸ் கேட்டு பயந்து மனதில்
கவலையுற்றிருந்தான்.

இது நிற்க, பாபியன் வீட்டு சமாச்சாரங்களைச் சொல்
லிக்காட்டச் சமயமாகின்றது.

சீரா புல்வியனைக் கண்டதும் தன் அறைக்குள் சென்
று கதவைச் சாத்தி சுவாமியைப்பார்த்துக் கொஞ்சம் பிரா
ர்த்தித்தபின் செசீலியின் கிட்டப்போனாள். அக்காலத்துக்
கிறீஸ்துவர்களின் ஆசாரப் பிரகாரம் தண்ணீர்கொண்டு
செசீலியின் பாதங்களைக் கழுவித் துடைத்து அவள் தலை
மயிரை வகிர்ந்து சீவி தன் மகளைப்போலப் போஷித்து ஆ
தரித்து வந்தாள். செசீலியும் அன்பாய் மகிழ்ந்து இனிய
மொழிசொல்லி ஆனந்தம் பொழிந்து நின்றாள். இவ்விதம்
இருவரும் பேசிக்கொண்டிருக்கையில் அக்னேசி பபியோலா

வோடு சம்பாஷித்தானபின் வெளியே வந்தாள். வந்தவள் சற்றுத் திரையை நீக்கி உள்ளே யிருந்த இருவரையும பார்க்க, உடனே சப்தமின்றிப் போய் பபியோலாவையுங் கூட்டிவந்து இருவரு மறைவில் நின்று கண்ணிலலா ஓர் ஏழைக்கு சீரா செய்த ஊழியத்தைப் பார்த்தார்கள். பபியோலா இவ்வித சிநேக பாந்தத்துவம் உலகில் இருக்கக்கூடுமென்று நினைத்ததில்லை. மாறுதவி தேடாத பேருதவி என்றால் இது தானென்று தனக்குள் சிந்தித்து சீராபேரில் முன்னிலும் அதிக கௌரவ எண்ணங்கொள்ளத் துவக்கினாள்.

பபியோலா தன் அறைக்குச் சென்றபின் அக்நேசி செசீலியினிடஞ் சென்று சொல்வாள்: "செசீலி உன் இரகசியமெல்லாம்" எனக்கு இப்போத தெரியவநதது. நான் உன்னை என் வீட்டில் வநது சாப்பிடும்படி கூப்பிடும்போது பலவகையான வீணபோக்குகள் சொலலி வரமாட்டேனென்றது நீ சீராவோடிருநது சாப்பிடுமபடி அல்லவா? நல்லது, நீ சாப்பிடும போசனம ருசியாயில்லாவிடினும் உன் தோழி என்னிலும் அதிக நற்குணசாலி."

"அமமா அப்படி சொலலாதேயுங்கள். உங்கள் வீட்டில் தாமஞ் செய்யுமபடி உங்களுக்கு அநேக நல்ல சமயங்களுண்டு. சீரா தாமஞ்செயதால தன்னிலும பரம ஏழையாயிருக்கிற எனக்குமாத்திரநதான் செய்யலாம்."

"அதிருக்கட்டும செசீலி, ஓா நலலசேதி சீராவுக்கு நான் சொல்லவநதிருக்கிறேன. அது உனக்கும வெகு சநதோஷமான செயதிதான். சீரா! இனிமேலாக நீ பபியோலா வீட்டில் அடிமைவேலை செய்யமாட்டாய். என் வீட்டிலே நீ இருக்குமபடியாய் தகக ஏற்பாடெல்லாஞ் செய்து முடிநதுபோயிற்று. நாளை முதல் நீ என பிரிய சகோதரியாய் என்னோடுகூட இருக்கபபோகிறாய்."

செசீலி இதைக் கேட்கவுந் துள்ளி மகிழ்ந்து சீராவைக் கட்டி அணைத்து: "ஓ சீரா! என்ன நல்ல அதிர்ஷ்டம்! உன் கஷ்டகாலமெல்லாம் இன்றோடே முடிந்துபோயிற்று." என்று சொல்ல சீராமாத்திரம் மனங்கலங்கி முகஞ் சோம்பி வாய் பதறி: "ஓ செல்வ பெருமாட்டி, பெண்களின் மணியே! என்னைப்போலொத்த ஏழைகளைப்பற்றி நீங்கள் இவ்வளவுதூரம் நினைத்ததற்காக நான் மெத்தவும் நன்றியறிந்திருக்கிறேன். ஆனால் அம்மா கோபித்துக்கொள்ளாமல் கேளுங்கள்: நான் இருக்கும் இடத்திலே கடைசிமட்டும் இருப்பது என் ஆசை; இதற்கு நீங்களொரு விக்கினமுஞ் செய்யாதபடிக்கு உங்களை நான் பிரார்த்திக்கிறேன்."

அக்னேசி ஆச்சரியத்துடன்: "சீரா ஏன் உன்னை வெகு கொடுமையாய் நடத்தும் பயியோலா வீட்டில் இருக்க இவ்வளவு ஆசைப்படுகிறாய்" என்று கேட்க சீரா சொல்லுவாள்:

"அம்மா செல்வமாதே! உங்களுக்குத் தெரியாதது நான் என்ன சொல்லப்போகிறேன். சாவேசுரன் நம்மை எந்த ஸ்திதியிலே வைக்கச் சித்தமாயிருக்கிறாரோ, அந்த ஸ்திதியிலே இருப்பது அதி உத்தமமல்லவா? ஆகிலும நான் இப்போ இருககும ஸ்திதி என பிறப்பால் வந்ததென்று நான சொல்லுகிறதில்லை." இவ்வளவு சொன்னபின் அவளை அறியாமல் கண்களிலிருந்து கணணீா முத்து முத்தாய்க் கீழே விழுந்தது. கண்ணைத் துடைத்து மனதைத் தேற்றினபின் சொல்லுவாள். "ஆகிலும நான் இப்போதிருக்கும் ஸ்திதியிலிருந்து சாவேசுரனுக்கு ஊழியஞ் செய்வது அவருடைய சித்தமென்று எனக்கு நன்றாய்த் தெரியும். ஆனதால் எப்படி நான் இதைவிட்டு வேறிடம போகலாம்?"

அக்நேசி முன்னிலும் அதிகமான பற்றுதலோடு சொல்லுவாள்: "சீரா அப்படியானால் நீ என் வீட்டில் அடிமையைப்போலாகிலும் வந்திருக்கத் தடை என்ன? உன் ஸ்திதியை நீ மாற்றுகிறதில்லையே?"

"அம்மா அதுவுங் கூடாது. ஏனென்று கேளுங்கள். எஜமான்கள் சாதுக்களானாலுங் கோபக்காரரானாலும் அவர்களுக்குப் பணிந்து நடப்பது ஊழியா கடமை என்பது வேத வாக்கியமல்லவா? என பெருமாட்டி பபியோலா பெருங் கோபக்காரி யென்று நான் சொல்ல வரவில்லை. ஆனால் அமமா நீங்கள் நிரமபவுஞ சாது. உங்கள் வீட்டில் நானிருந்தால் எனக்குத் துன்பமாகிற சிலுவை எங்கேயிருநது வரும்? எனக்கு அகங்காரமும முறட்டுக்குணமும முதிாநதிருப்பது உங்களுக்குத தெரியுமே. இநதக் கெட்ட சுபாவத்தை உங்கள் வீட்டில் நானிருந்தால் அடகக வழியென்ன?"

இதைக் கேட்கவும அகநேசி முன்னிலும் அதிக ஆச்சரியப்பட்டு புண்ணிய பயிற்சியில் இவ்வளவு தோநதிருக்கும பாக்கியவதியைத் தன் வீட்டில் வைததிருப்பது தனககு எவ்வகையிலும நலமாயிருக்குமென்று மனதிலெண்ணி அவளைப்பாாத்து சொலவாள்: "சீரா என வீட்டுக்கு நீ எப்படியாகிலும வரவேண்டும. நீ எனககு தர்ம நடக்கையில மேல்வரிச் சட்டமபோலிருபபாய. உன்னைப்போல நானும் புண்ணியவழியில் நடக்கப் பிரயாசப்படுவேன்." அதற்கு வேலைக்காரி: "அமமா நான் என் செலவபெருமாட்டியின் வீட்டிலிருக்குமபடி எனக்குள்ள காரணத்தை நீங்கள் அறிவீர்களாகில் அதற்கு நீங்கள் விக்கினம் ஒன்றுஞ் செய்யமாட்டீாகள். பபியோலா எவ்வளவு சிறந்த நற்குணமுள்ளவளென்று உங்களுக்குத்தெரியுமே. அவளுடைய விவேக விளக்கமும் சிறந்த அறிவும எதாாத்த நடக்கையும் நீங்கள்

அறிந்ததுதானே. இவைகளெல்லாவற்றிற்கும மேலாய் பெ ணகளின் சிறந்த ஆபரணமாகிற கற்பு அவளிடத்தில் நடு நாயகமாய் விளங்குவதை நாம எல்லாரும பார்த்து அதிசய ப்படுவதில்லையா? இவ்வளவு உனனத சுவாப நற்குணங்க ளுள்ள செல்வமாது கிறீஸ்துவளானல் அவள் பெறும உத் தம சாங்கோபாங்கம எத்தனமைத்தெனறு யாரால் சொல் லக்கூடும?"

"சீரா நீ சொல்வதெலலா மெயதான. ஆனல் பபியோ லா கிறீஸ்துவளாவாளென்பதைப்பற்றி உனககு என்ன ஆதாரமும் நமபிக்கையுமுண்டு?"

"அமமா அதுதான் என ஏக கவலை; இராப்பகல் அ றுபது நாளிகையும அதே எண்ணமாயிருக்கிறேன. பொறு மையாலும விடாமுயற்சியாலும இனறு நடநதாறபோல அவளோடு வேத விஷயமாயத் தாககஞ் செயவதாலும அவ ள் மனநதிரும்புமபடி வருநதுவேன. இவையெலலாம அநு கூலப்படாவிடில் இனனமொரு ஏது என கையிலிருககி றது."

"அதெனன சீரா?"

"நமது செலவபெணநாயகம கிறீஸ்துவளாகுமபடி யாய என ஜீவனைச சாவேசுரனுககு ஒரு பலியாய ஒப்புக் கொடுப்பேன. என்னைபபோலொதத ஈன அடிமைகள வேத சாட்சிகளாய் மரிக்க சமயம வரமாட்டாது. ஆகிலும என னமோ ஒரு கொடிய வேதகலகம வருமெதாக எலலாரும பே சிக்கொள்ளுகிறார்கள். அபபோதாகிலும எனனைபபோனற அடிமைகளைப பிடித்துக கொலலமாட்டாாகளா? அது எ ப்படியிருந்தாலும என உயிரைப் பபியோலாவின ஆத்தும த்தை இரக்ஷிக்க ஓர் பலியாய் சாவேசுரன கையில் வைதகி ருக்கிறேன்."

இதைச் சொன்னபின் சீரா எழுந்து அக்நேசியின் முன் முழங்காலிலிருந்து அவளிரு கைகளில தன் கண்ணீ ரை முத்து முத்தாயச சிந்தி: "அமமா தர்மகுண சுநதரி என் ஆசையைத் தடுக்காதேயுங்கள். இநத ஆத்துமததை எப்படியாகிலும இரக்ஷிககவேண்டும" என்று அழுது சொ ன்னாள்.

அக்நேசியு மன துருகி கணணீர சிநதி சீராவைப் பார் த்து: "சீரா உன் மனமபோலாகட்டும. நான் ஒன்றுந் தடை செய்யமாட்டேன்; இவ்வளவு உன்னத தாமகுண சிநதை தப்பாமல் அநுகூலமாய முடியும," எனறு சொனனாள்.

இதெலலாங் கேட்டிருநத செசீலி சொல்வாள்: "ஆ ஆ! சீரா நீ இன்று சீராட்டை ஏதோ இட்டுககட்டி இலலாத தைச சொல்லி என்னை ஏமாறறினையலலவா?"

"அதெனனசெசீலி? சொலலேன பார்ககலாம" என சிரித்து க்கொணடு சீரா கேட்க செசீலி சொல்வாள்:

"நீ எனக்குக கொடுத்த ருசியான பதார்த்தம என்ன த்திற்கு? ஏழைகளுக் தகுநத போசனமலலவெனறு நான சொன்னபோது நான என்னமோ உன்னைப்பார்க்கிலும ப த்தியும புத்தியுமுள்ளவளெனறு நீ என்னை உசசநதலே குளி ரநதுபோகப் பேசிப புகழவில்லையா? ஆனால நீ, உன்னை சற றும் இரக்கமின்றி கொடுமையாய நடததிவருங் கோபககாரி யின ஆததுமத்தை இரக்ஷிககததக்கதாக, உனக்கு வநத ஸ்வைதீனததையும பாககிய சநதோஷத்தையும உன உயி ரையும் முதலாய இஷ்ட பலியாக சாவேசுரனுககு ஒப்புக் கொடுத்திருககிறாய. புணணியமென்றால் இதுவல்லோ புண் ணியம."

அககேசி தன் வீட்டுக்குப் போகக நேரமானதால், அங் கு கூடியிருநத செலவப் பிரபுவின மகளும, ஈன அடிமை

யும், இராந்து சாப்பிடும் ஏழைக் கபோதியும், ஆகிய இம்மூன்றுபேரும் ஒருவரொருவரிடம் அன்பாய் சகோதரவாஞ்சையோடு செலவு பெற்றுக்கொள்வதைப் பார்த்தவர்கள் அதிசயப்பட்டு முன் அநேகந்தரஞ் சொன்னதுபோல: "ஆஹா! இந்தக் கிறீஸ்துவர்கள் எவ்வளவு அந்நியோந்நிய பட்சத்தோடு ஒருவரொருவரை சிநேகிக்கிறார்கள்" என்று சொல்லியிருப்பார்கள்.

## கூ-ம். அதிகாரம்.

### இரண வீரசூரன்: சிபஸ்தியார்.

உரோமை மாநகரின் பற்பல மலைகளுக்குள் பலாத்தீன் என்ற மலை மகாச் சிறந்தது. இதிலேதான் உரோமானரின் சக்கரவர்த்திகள் உயர்ந்த அரணமனைகள், விநோத மாடமாளிகைகள், கூட கோபுரங்கள், முதலியவைகளை மிக அலங்காரமாய்க் கட்டி அம்மலையைச் சிறப்பித்தார்கள். இம்மலையின் ஓர் பாகத்தில் இராணுவ சேவகர், தளபதிகளுக்காக பல அறைகளாய்த் தடுக்கப்பட்டு கட்டியிருந்த விடுதி வீடுகள் பல இருந்தன. இவைகளில் சற்று தனிப்புறமாயிருந்த ஓர் வீட்டில் சிபஸ்தியார் இராணுவ சேனையின் முதன்மையான உத்தியோகஸ்தரொன்பதினை நிமித்தம் வாசஞ்செய்தார். இவரிருந்த வீடு மிகச் சாதாரணமாயுங் கிறீஸ்துவ வீரனுக்கு இசைந்ததாயு மிருந்தது. இவர் வீட்டிலிருந்த வேலைக்காரரும், இவருடைய பட்டாள வகுப்பின் சேவகரில் பலரும், இவரைப்போலவே கிறீஸ்துவர்கள்.

இராயனுக்குச் சிபஸ்தியார் கிறீஸ்துவனாயிருப்பது தெரியாததால் அவன் இவர்பேரில் வெகு பிரீதியாயிருந்து இவ

ருடைய நற்குண மேன்மையையுங், கௌரவ ஒழுக்கத்தை யுஞ் சௌரிய வீர அணமையையும்பற்றி இவருக்குத் தன் இராட்சியத்தில் மிகுந்த அதிகாரமுஞ், செல்வாக்கும, சம மானமும் பூரணமாயக கொடுத்திருந்தான்.

சிபஸ்தியார் இராயன் தமககுக கொடுத்திருந்த வலல மையை வெகு சாதுரிய சாமாத்தியததோடு செலுத்தி சத் தியவேதம விாததியாகுமபடி கூடியவரையிலும இரகசிய மாய் முயன்று வருவாா. சிறையில அடைபட்டிருந்த கிறீ ஸ்துவாகளைச் சநதிப்பதும அவாகளுககுத தக்க ஆறுதல சொல்லி அவரவருக்குத் தேவையான உதவி கூடுமான போது செய்வதும சிபஸ்தியாருக்கு அநுதின அலுவல்.

இவருககும பங்கிராசுககும வெகு சிநேகம. பசுமபயிா போலிருந்த பங்கிராசை சிபஸ்தியார் வெகு கவலையாய்க க ண்ணுறறு தாயாா ஊட்டிய ஞானப்பால பையன் மனதில நன்றுயச சாாநது பலன் கொடுக்குமபடியாய் தன்னுற் கூ டிய யாவுஞ் செய்துவருவாா. பாலிய வயதுக்கியல்பான அவிவேக ஆததிரகிமித்தம பங்கிராஸ் ஆயாநதோயாநது பா ராமல் சில சமயங்களில் மிதந தபபியும வரமபு கடநதும எதையுஞ செயது பின் பெரும ஆபததுககுள்ளாவாாென்று சிபஸ்தியாா பயநது அவனை வெகு கவலையோடும், ஜாக்கிர தை பற்றுதலோடும், பராமரித்து வருவார். பங்கிராசுஞ் சிபஸ்தியாரிடம விளங்கிய தயாளம, எதாாத்தம, விவேகவி ளக்கஞ், சாதுரிய சாமாததியமாகிய இச்சிறந்த குண இலெ க்ஷணங்களின் நிமித்தம அவரை நன்குமதித்து தனக்கொரு மேல்வரிச் சட்டமாய் அவரைத் தெரிநது எதற்கும அவர் யுக்தி யோசனை கேட்டு நடநதுவருவாா.

இப்படியிருக்குங்காலையில் ஒருநாள் இருவருமாக பட் டணத்தின தெருவீதி வழியாய் நடநது செல்லுகையில் பங்

கிராஸ் செபஸ்தியாரிடங் கேட்பார்: "அண்ணு இன்னம் எத்தனைகாலம நாம் எல்லோரும இப்படி ஒளிந்து மறைந்து அநியர்போலச் சோமபித் திரிவோம்? இந்த இராஜதானி அஞ்ஞான இருளைவிட்டு சேசுநாதர்சுவாமியின் தேவப்பிரகாச ஒளியில் வநது சோநது அவரை அறிநது ஆராதித்தால் எவ்வளவோ சிறப்புஞ் செல்வமுமுளளதாகும. அப்போது இந்தக் கோபுரங்களு மண்டபங்களுஞ் சர்வேசுரன் வாசஞ் செயயும பரிசுதத ஆலயங்களாக மாறிப்போகும அல்லவா? அண்ணு! இநத அதி அறபுத மாறறம உணடாகுமென்பதறகு நமபிக்கை இலலையா?"

"தமபீ கேள: நமபிக்கை மனுஷனுக்கு ஆதாரமான ஊன்றுகோலாதலால எனறும அதைக விடலாகாது. ஒரு நாள் இநத இராஜகானி நமது பரிசுத்த வேதத்தின முக்கிய ஸ்தலமாகிப் பிரபல்யமடையும. பசாசின ஆராதனைக்காக நமது உரோமானா கட்டிய இத்தனை கூட கோபுரங்கள் சாவேசுரனுடைய வாசஸ்தலமாய மாறிப்போகும. ஆனல் அநத அதிர்ஷ்ட நாள் எப்போ வருமெனறு கேட்பாயோ? அது சாவேசுரனுககு மாததிரந தெரிநத நாள். அவரால் மாத்திரம இநத உநநத மாறறம வரக்கூடும. ஆகிலும கேள் பங்கிராஸ், நான் ஒரு சேதி சொலலபபோகிறேன. நீ அறியும இரகசியததை ஒருவருக்குஞ் சொலலககூடாது. நமது ராயன் அரண்மனையில இராஜ வமசத்தைச சோநத சிலா கிறீஸ்துவர்களாவாாகளெனறு நமபுமபடியான சில ஆதாரமிருககினறது. ஆனல் மெதுவாய் ஆத்திரமின்றி சாவேசுரன் சிததப்படி நடப்பது யாவும அவா குறிதத காலத்தில் நடக்கும்படி நாம் விட்டுவிடவேணடும. நீ இநத விஷயத்தைபபற்றி எவரோடும பேசாதே" என்று செபஸ்தியார் சொன்னர்.

இவ்விதம் இருவரும் பேசிக்கொண்டு நடந்துபோகை யில் சிறந்தோங்கிய மண்டபங்களும் அடுக்கடுக்காய் கட்டப் பட்ட மாளிகைகளும வரிசை வரிசையாய் நிறுத்திய தூண் களுந் தலைநிமிர்ந்து உயர மேலே எழும்பி சூரியன் இளங் கதிர் படவே நவமணி பதித்த தங்கத் தகடுபோல் துலங்கி மினன சிபஸ்தியார் இவ்வதிசய காட்சியைக் கவனித்துப் பார்த்து பின் பங்கிராசை நோககிச சொல்வார் :—

"தமபி ! அதோ பாா, பசுமபொன் தகட்டில் இரத்தின க்கோலமிட்டதுபோல் அநதக் கோபுரங்களும, அவைகளின் கும்பங்களும், பொற்கலசங்களும விளங்கிப் பிரகாசிக்கின் றன. ஆகிலும் இவைகள் எவ்வளவு அலங்கார ரூபமாயிரு ந்தாலுஞ் சேர்திமண்டலததின் சுந்தரப் பிரகாசமுன் இ வையாவுஞ் சூரியன்முன்னே மின் மினிபோல அற்பமாக வே தோன்றுகின்றன."

"மெய்தான் அண்ணு ! பாவிகளான நமது அற்ப கண் கள்மட்டும எட்டும் மோக்ஷ மண்டலத்தின் கீழ்ப்பக்கம் இ வ்வளவு அழகாயப் பிரகாசிக்குமாகில் அதற்கு மேலே ஜெக சோதியாய் எங்கும பிரசன்னரான சாவேசுரன் கண்ணுக்கு நேராயிருக்கும மோக்ஷமண்டலத்தின் மேற்பக்கம் எவ்வள வோ திவ்ய அலங்காரப் பிரகாசமா யிருக்கவேண்டும். அநத மேல்பக்கந் தங்க நூலால் இழைத்து இரத்தினுபரணங்களை இடையிட்டு நெய்த சித்திரபபூ அமைந்த கம்பளமாகவும அதிலிருநது தொங்குஞ் சில நூல் இழையின் நுனிமாத்தி ரம் இந்தக் கீழ்ப்பக்கத்தில் நமக்குத் தோன்றுவதாகவும நான் உத்தேசிக்கிறேன். மேல்பக்கத்துத் தட்டில் தேவதூ தர்கள் உலாவித் திரிவதாலும் மோக்ஷ பாக்கியம பெற்ற நல் லோர் வாசஞ் செய்வதாலும அந்த ஸ்தலம் எவ்வளவோ ரா ஜயோக்கிய செல்வபாக்கியம நிறைநததாயிருக்கவேண்டும."

"பங்கிராஸ்! இது வெகு உஜிதமான யோசனை. இப் பிரபஞ்சத்தில் உழைத்து வருந்தும் நமக்கும் வெற்றி முடி சூடிய மோக்ஷ சபைக்கும் மத்தியில் ஓரேயொரு திரை மாத் திரமிருக்கிறதென்றும் அத்திரையை எளிதில் கடந்து அப் பால் செல்லலாமென்றுஞ் சொல்வதல்லோ உன் கருத்து."

"அதுதான் அண்ணு; ஆனால் இடி முழக்கம்போல் தொனிக்கும இந்த உக்காரமுங் கர்ச்சிப்பும எங்கேயிருந்து வருகின்றது?"

"அதோ அங்கேயிருக்கும மாலிலுள்ள சிங்கங்களும் புலிகளும் இப்படி கர்ச்சிக்கின்றன. ஆபிரிக்கா தேசத்திலி ருந்து இந்தத் துஷ்ட மிருகங்கள் நேற்றுத்தான் வந்திருக்க வேண்டும்."

"அண்ணே! இந்தச் சிங்கங்கள் செய்யும் பேரொலி முழக்கம் நாம் யுத்தஞ் செய்ய தயாராயிருக்கவேண்டுமென்று முன்னிதாய் நமக்கு அறிவிக்கும் எக்காளத் தொனி அல் லவா?- இந்த மிருகங்களின் பற்களாகிற திரிகையிலே கிறீஸ் துவர்களாகிற நாம் அரைபட்டுப் பின மோக்ஷத்தில் சர்வே சுரனுக்குப் பிரியமான அப்பமாவோம் என்று நான் நினைக் கும்போது என் உள்ளம பூரித்து மகிழ்கின்றது. ஆனால் அ ண்ணே! உங்களிடம் ஓர் ஆலோசனை கேட்கவேண்டுமென் று சில நாளாய் யோசித்துக்கொண்டிருக்கிறேன். இங்கே கி ட்ட ஒருவருமில்லையே."

"ஒருவருமில்லை, என்னப் பிரமாதங் கேட்கப்போகி ருய்? எனக்குத் தெரிந்த அளவில் உனக்குச் சொல்லுகி றேன்."

பங்கிராஸ் சற்று வெட்கமுங் கூச்சமும் முகத்தில் தோன்ற, நின்று நின்று, இங்குமங்கும் பார்த்துச் சொல் வான்;

"அப்போ கேளுங்கள், ஆனால் நான் புத்தியில்லாமல பினற்றுகிறேனென்று எணணவேண்டாம். அண்ணே! எங்கள் வீட்டிலே ஒரு பிரயோசனமுமில்லாத உடைகளும நகைகளும் தட்டு முட்டு ஜாமான்களும ஏதேஷ்டமாயிருப்பது உங்களுக்குத் தெரியுமே. தரித்திரரைப்போல் வெகு சாதாரணமாய் ஜீவனஞ் செயதுவரும எங்களுக்கு இவையெல்லாம் உதவாத பொருட்களல்லவா? வீட்டிலுள்ள பிகிராரச்சித சொத்துக்களும வஸ்திர பூஷணுதிகளெல்லாம அப்படியே பெட்டிகருள் பூசணமபூதது துருப்பிடித்து வெறுமனே கிடக்கின்றன. அமமா இவைகளை என்றும் பிரயோகிக்கவேமாட்டார்கள். அப்படியானல் யாருக்கு இனி இவைகள் உபயோகப்படும? என்னையனறி வேறு பிள்ளைகளுங் கிடையாது. நான்தான் எங்கள் குடுமபததின் கடைசிப பிள்ளை. அப்படியே கடைசியாயிருக்க நானுந் தீர்மானிததிருக்கிறேன். இப்பேர்பபட்ட ஸ்திதியில் கிறீஸ்துவன சொததுக்கு யார் பாத்தியஸ்தரொன்று நீங்களே எனககு ஒரு நாள் சொன்னீாகளே. விதவைகளும அநாதப்பிள்ளைகளும ஆதரவற்றவாகளுந தரித்திரரும் இவாகள்தான் சுதநதரக்காரரா. அப்படியானல் இவர்கள் ஏன் தங்களைச் சாாநத பொருளை அநுபோகஞ் செய்யுமபடியாய் நான் சாகுமட்டுங் காத்திருக்கவேண்டும்? கொடும வேதகலாபனை அடுத்துவருவதால் துஷ்டர் நமது சொத்துகளைப் பறிமுதல் செய்து அநியாயமாய் அபகரித்துககொள்ளுவார்கள். அப்படி அநீதர் வாய்க்கு இரையாகுமுன் சுதநதரக்காரரான பாத்தியஸ்தருக்குப் பொருளைச் செலுத்திவிடலாமே."

பங்கிராஸ் சொன்னதையெல்லாம் வெகு கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்த சிபஸ்தியார் சொல்வார்:—

"பங்கிராஸ் இந்தத் தர்ம யோசனையை நீயே உன் வா

யால் முழுதுஞ் சொல்லுமட்டும உன்னை நான் தடுக்காமல் சமாதானமாய்க் கேட்டுவந்தேன. ஆனால் தமபி நீ செய்ய எத்தனித்ததை எனக்குச் சொல்வதற்கு ஏன் இவ்வளவு தூரம யோசித்து அஞ்சினவன்போலிருந்தாய்?”

“ஏனென்றால் தனனிடமுள்ள சம்பததுப் பொருட்களை வறியோருக்குத் தானஞ்செய்வது மகா மேலான பரோபகார தாமமென்று மறறவர்கள் எண்ணியிருப்பதால் நான் இப்படி செய்வதைப் பாாக்கிறவாகள என்னை வீண் சிலாக்கிய டமபாசசாரியென்று எண்ணுமபடி ஏதுவுண்டாகுமெனகிற பயநதான். ஆனால அணணே உங்களுககு என மனதில் வஞ்சகமின்றி எதாாதததைதச சொலலுகிறேன். இநத ஜாமான்களையும நகைகளையும பெடடியில் பூட்டிவைத்திருப்பதால் எனக்கு என்ன பிரயோசனமுணடு? தரித்திருககு இந்த கஷ்டகாலததில தாமமாகக கொடுததால அவாகளுக்கு இது, காயநத பூமியில் பெயநத மழைபோல, எவவளவோ நனமை பயககும.”

“ஆனால் தம்பி இதறகு அமமா சமமதம வேணடுமே.”

“அதற்கும ஆக்ஷேபனையா? அமமா அநுமதியின்றி அரைக் காசும வெளியே போகாது. ஆனால அணணேன் நீங்களொரு காரியம எனக்குச் செய்யவேணடும. தாமஞ்செய்கையில வலது கை செயவதை இடது கை அறியவேண்டாமென்று சேசுநாதர் சுவாமி நமககுப் படிபபித்திருபபதால இநதத் தாமத்தை என் பெயரைச சொல்லியாவது எங்கள் வீட்டிலேயாவது செய்யக்கூடாது. வேறே வீட்டுக்கு எங்கள் ஜாமான்களையெலலாங் கொண்டுபோய் இன்னொன்று பெயர் சொல்லாமல் தனக்காக தரித்திரர் வேண்டுதல் கேட்கும் ஒருவன் இந்தத் தாமஞ் செய்கிறானென்று பொதுவில் சொன்னால் போதும்.”

"உன் இஷ்டமபோலாகட்டும், ஆனல் கேள் பங்கிராஸ், யாரோ பபியோலாவின் பெயர் சொன்னது உன் காதில் விழவில்லையா?"

இருவரும் சப்தம் வந்த இடமாய்ச் சென்று உற்றுக் கேட்டார்கள். அடுத்த வீட்டுக்குள் இரண்டு பேர் வெகு இரகசியமாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். செபஸ்தியார், குரல் சப்தத்தைக கேட்ட உடனே அது பபியோலாவின் வேலைக்காரி அபிரா என்பவள் குரல் என்று சொல்ல, பங்கிராஸ் சொல்வார்: "அவளோடு பேசிக்கொண்டிருக்கிறவன் குரல் யாருடையதென்று எனக்கு நன்றாய்த் தெரியும். அது என் பள்ளிக்கூடத் தோழன் கோர்வீனன் குரல். இவ்விருவரும பபியோலாவைப்பற்றி ஏதோ வஞ்சகமாயப் பேசிக்கொண்டிருப்பதால் அவளுக்கு மோசஞ் செய்ய உத்தேசிப்பதாகத் தோன்றுகின்றது. ஆபத்து வருமுன் அதைத் தடுப்பது உத்தமம." என இவ்வாறு பங்கிராஸ் சொல்ல இருவரும வீட்டின் சமீபத்தில நின்று காதில் விழுந்ததெலலாங் கேட்டாாகள். ஆனல் அவர்கள் கேட்டதெல்லாம இங்கொரு வார்த்தையும அங்கொரு வசனமுமாகத் தொடர்பின்றி இருந்ததால் சங்கதி இன்னதென்று விவரமாய் விளங்கவில்லை. ஆகிலும் அவ்விருவா அந்தரங்கமாய்ப் பேசிய விஷயம நமக்குத் தெரியுமெனபதால் நாம அதை வெளிப்படுத்தப்போகின்றேம் இதைச் சொல்லுமுன் இவர்களைச் சார்ந்த சில விசேஷங்களை முந்தி அறிவது அவசியம்.

கோர்வீனனுடைய தகப்பன் பேர் தேர்த்துல்லியன். இச்சமயத்தில் இவன் நகராதிகாரியின் உத்தியோகம் வகித்துவந்தான். இந்த அலுவல் மகா கஷ்டமானது. சிறையிலிருக்கிறவர்களுக்குச் சித்திர வதை செய்து உயிரைக் கொல்லும்படியாய் அமைக்கப்பட்ட புறபல ஆயுதங்களின் மத

தியில் நாள்தோறுமிருந்து, விருத்தாப்பியர், வாலிபர், பெண் பிள்ளைகளைத் துன்ப உபாதைப்படுத்துவதும், துன்பப்படு கிறவர்களின் பரிதாபக் குரலையும் பெருமூச்சையுஞ் சற்றும் இளகா மனதோடு கேட்பதுங், கூர்மையுள்ள ஆணிகள் அடர்ந்த சக்கரத்தில் ஒருவனைச் சேர்த்துக் கட்டி சுழற்றும் போது கிட்ட நின்று கேள்வி கேட்பதும, இவ்வளவு கொடிய நிஷ்டூரங்களையெல்லாம பார்த்தபின்பு இராத்திரி தன் வீட்டுக்குப் போய் பசியோடு சாப்பிடுவதுங், கவலையின்றித் தூங்குவதும, மறுநாள் காலையிலெழுந்து முந்தின நாள் செய்ததுபோலவே மனுஷ இரத்தத்தில் நீந்தப்போவதும, ஆகிய இவைகள் எல்லா வகைப் போவழிகளுக்கும் இன்பங் கொடுக்கும் அலுவலல்ல. இப்போப்பட்டவன் நெஞ்சு, வன்னெஞ்சோ, இரங்கா மர நெஞ்சோ, இருப்பு நெஞ்சோ, வைரக் கன்னெஞ்சோ எத்தன்மையுள்ளதென்று வரையறுப்பது அரிது.

இவ்வகையான நெஞ்சுடைய தகப்பனுக்குத் தக்க யோக்கிய புத்திரன் கோர்வீனன். பிறரைக் கொடுமையாய் உபாதிப்பதென்றால் இவனுக்கு ஆனந்தம. புத்தியில் பெரும மந்தம. சுபாவ நாட்டத்தில் மிருகம. இவன முகம ஊதிப் பெருத்து கண்கள் பிளை சாறி இருந்ததால பார்த்தவர்கள் இவன் துன்மார்க்க சிந்தை உள்ளவனென்று சொல்லுவார்கள். நாகரீகம, சுத்தம, நல்லறிவு, என்பவைகளின மணமும அறியான். கபடநாடகம, வஞ்சனை சூது, மந்திர தந்திரம, தேகவலிமை இவைகளில் ஏற்றம பெற்றவன். நற்குணமென்று ஒன்றை இவன அநுஷ்டித்ததுமில்லை. தீயக்குணமென்று ஒன்றை இவன் அடக்கினதுமில்லை. தனக்குத் தீங்கு செய்த எவனையும் இவன் க்ஷமித்ததுமில்லை. அவன் குடியைக் கெடுக்க முயலாதிருந்ததுமில்லை. இவன் கொடும் ப

கைக்கு இலக்காயிருந்தவர்கள் முக்கியமாய் இருவர். அவர்களில் முதல் இவன் படிக்குங் காலத்தில் பாடம படியாத நிமித்தம இவனைத் தெண்டித்த இவன் உபாத்தியாயர் ; இவருக்குப்பின் இவன் செய்த அக்கிரமத்தைப் பொறுத்து இவனை வாழ்த்தி ஆசீர் வசனங் கூறிய இவன் உடன்மாணாக்கன். இவனுக்கு ஒருவன் செயவது நன்மையோ தீமையோ நீதியோ தயையோ எல்லாம ஒன்றுதான். பகைப்பதும் பழி தீர்ப்பதும் இவனுககுப பாக்கியம.

இவன் தகப்பனிடம மகனுக்குச் சாசனமாய்க் கொடுக்குமபடியான சொத்து ஒன்றுமில்லை. மகனுக்குந தானே முயன்று சமபாதிக்க வேண்டியமனமுமில்லை. மனமுண்டானாலும் உடம்பு வளையாது. ஆனதால யார் எவர் வாயிலும மண்போட்டு பணங் காசு தட்டிப் பறிக்கவேணடுமென்று தீர்மானித்துக்கொண்டான். பணமுண்டானல் மனமபோல் சுக போக இன்பங்களை அனுபவித்து ஜீவிக்கலாமென்று திண்ணமாய் எண்ணி இதற்கு அனுகூலமாக பணக்காரி ஒருத்தியை மணமபுரிந்து அவள் பணத்தை எத்தாய் அபகரித்துக்கொள்ள வேணடுமென்பது இவனுடைய கோரிக்கை. ஆனல் இவனுடைய விகார முக ரூபமும மிலேச்ச செயகையும இதற்குப் பெரும விக்கினமாயிருந்தன. இதினலே கோர்வீனன் தன் சுபாவத்துக்கு இசைவான ஓர் வழி தேடி பணம பெறுமபடி துணிந்தான். அவன் எடுத்த உபாயம இன்னதென்று பின் வருஞ் சமபாஷணையால் அறியலாம்.

"நான் உன்னைக் கணடு பேசுமபடியாய் இத்தோடு நாலாமுறை இந்த ஏகாந்தமான நேரத்தில் வந்திருக்கிறேன். உனக்குச் சொன்ன சங்கதியைப்பற்றி என்ன முடிவு?"

"முடிவா ? என் ? வெறுங் கை முழம போடுமா ? நாளை பபியோலா தன் கிராமத்திற்குப் போகிருள். நானும

அவளோடு கூடப் போகிறேன். உன் காரிய முடியு இன்ன ம் பணங் கொடுக்கவேண்டும"

"இன்னம பணமா? என் கையிலிருந்த பணமெல்லாம் உன் கையில போட்டுவிட்டேனே".

"கிணற்றின ஆழத்துக்குத தக்க தாமபுக்கயிறு வேண டாமா? பபியோலா எப்போபபட்டவளென்று உனக்குத் தெரியுமா?"

"ஆமா, இந்த இராஜதானியில் திரண்ட ஆஸ்தி சமப த்துள்ளவள் அவள்தான."

"வாஸ்தவம, ஆனல் வெகு பெருமையும மேட்டிமை யுமுள்ளவள். அவளை நீ கலயாணம பண்ணுவது எளிதல்ல"

"ஆனல அபிரா நீ பசசிலைச சாறும பாஷாணமும உப யோகிதது எல்லாவறறையுஞ சரிபபடுதுவதாகச் சொல் லவில்லையா? இவைகள சமபாதிகக என்ன செலவு பிடிக் கும்?"

"ஆ! ஆ! சமபாதிபபது உஙகள் வீட்டுக் கிணறுக் கீ ரையென்று எண்ணுகிறயோ? பசசிலை பிடுங்க நடு இராத் திரியிலே சுடுகாட்டுககும மலைககாட்டுககும போகவேண டாமா? இதறகெல்லாம பணம வேணடாமா? ஆனல் நீயும எனக்கு இசைவாய வரவேணடுமென்று நான சொலலவில் லையா?"

"நான் என்ன செய்யலாம? எனககு முக லக்ஷண வ டிவுமில்லை, அறிவு யுக்தி கலவியுமிலலை. என்னல கூடாத து உன மநதிர தநதிரத்தால கூடுமென்றலலோ உன்னை நான் தேடி வநதது."

"அப்படியானல் நான ஒரு வழி உனககுக் காணபிககி றேன். உனக்கு முகததழகுமில்லை, அகததழகுமில்லை. ஆ னல் பணத்தழகு உண்டல்லவா? பபியோலாவை பணத்

தால் மயக்கி உன் வசப்படுத்தலாம. பொன்னால் பெண், பெண்ணால் பொன, என றதை நீ கேட்டதிலலையா ?"

"ஆமா பொன எங்கே இருக்கிறது ?"

அபிரா இதைக்கேட்டு தன் பல்லை ஈ ஈ என்று வரிசையாய்த் திறநது காட்டிச் சொலவாள் : "என கோாவீா? புலவியன் சமபாதிபபதுபோல் நீயும சமபாதிககத் தடை என்ன ?"

"அவன எபபடி சமபாதிககிறான் அபிரா ?"

"உனக்குத் தெரிநதது இவ்வளவுதானா ? கேள் நான் சொல்லுகிறேன். இவன கீழத்திசை தேசங்களிலிருநது இங்கே கிறீஸ்துவாகள் யாரொன்று கணடுபிடித்து காட்டிக் கொடுக்குமபடி உளவாளியாக வநதிருக்கிறான. ஒன்றுமில்லாதபோதும, இவன இராஜ துரோகமென்று, உள்ளேயிருநது இவனே ஊதிவிட்டு அதைப பின கிறீஸ்துவாகள்பேரில சாட்டி பணந தட்டிப் போகிறவன."

"அபிரா ஐயோ எனககு அவ்வளவுகூடத தெரியாதே. பிடிபட்டவாகளைச சித்திர வதை செயவதெனறால் எனககு மிஞசினவன எங்குமிலலை."

"நீ பெரும பேதை, நான் உனக்குச சொலலிக்கொடுக்கிறேன். இனனுஞ் சில நாளிலே கிறீஸ்துவாகளுக்கு விரோதமாய் கொடிய கலாபனை ஒன்று எழுமபபோகிறது. அநதச சமயம நீ நன்றாய்க கண்ணை மிழிததுக்கொணடிரு. ஏழை எளியதுகளைக கவனியாதே கையிலே காசு வைததுக் கொழுத்திருககிறவாகளை மிறித்துப் பாா. சமயம பாாதது லபக்கென்று அவாகளைப் பிடித்து காட்டிககொடு. அவாகள் சொத்துக்களை பறிமுதல் செயயுமபோது நீயும பங்குக்கு வாநது நில்."

"ஓ ! ஓ ! காரியம இதுதானா ? கிறீஸ்துவாகளென்றால்

உனக்கும் பிடிக்காதா?"

"பிடிக்காதா? அவர்களுக்கும் எனக்கும் ஜன்மப பகை. நான் கும்பிடுங் குல தேவதைகள் கிறீஸ்துவர்கள் பெயர் கேட்டால் கூ கூ என்று அலறும். என்னோடிருக்கும் வேலைக்காரிகளிலொருத்தி கிறீஸ்துவளா யிருக்கவேண்டும். நான் அவளைப் பார்க்கும்போதெல்லாம் என் ஈரலக் குலை வேகிறாப்போலிருக்கிறது."

"இதற்குக் காரணமென்ன அபிரா?"

"காரணமா? பயியோலா வீட்டில ஏதோ வம்பிலகப் பட்டுத தப்பித்துக்கொள்ள ஒரு பொய் சொல்லென்றால அந்தச் சிறுக்கி சொல்லவே மாட்டேனென்பாள். அவளாலே எங்களுக்குப பல துன்பங்கள் வருகின்றது."

"இது நல்ல காரணந்தான். இன்னம் உண்டா?"
"இந்தப் பேதை பணங் காசு தேடுகிறதில்லை. அவளாலே எங்களுடைய வருமபடி யடி போகின்றது."

"இது அதிலும் நல்லது."

"இதுவுமன்றி அவள்..." அபிரா சொல்லி முடிக்கு முன் கோவீனன "அபிரா சங்கதி கேட்டாயா? உன ஊரிலிருந்து உன இனத்தார் சிலர் இங்கே வந்திருக்கிறார்கள். ஆ! ஆ! அம்மம்மா! நீயா, அவர்களெல்லாரையுந் தேற்ற கடிப்பாய" என்று சொல்ல அபிரா வெகு ஆத்திரத்தோடு:
"அவர்கள் யார" என்று கேட்டதற்கு கோவீனன் சொல்லுவான் : "ஏன் அபிரா? உன ஆபிரிக்கா தேசத்தாரின சிங்கங்களும புலிகளுங் கரடிகளுந்தான்."
"அடே மூடா! என்னடா என்னைப் பழிக்கிறாய?"
"அபிரா ஏன் கோபம? இந்த மிருகங்கள் உன் பிராண சத்துருக்களாகிற கிறீஸ்துவர்களைக் கொல்லும்படியாகத்தான்

வந்திருக்கின்றது. நல்லது இதோ பணம். உன் பாஷாணம பச்சிலைகளைத் தயார்செய். பணங் கிறீஸ்துவாகளிடமிருந்து தட்டிப் பறிக்கும்படி நீ சொன்னது எனக்குத் தக்க உபாயம்.'' என இவ்விதமாய்ப் பேசினபின்பு இருவரும் பிரிந்து போனார்கள்.

அபிரா சற்றுத் தூரம போய் திருமபிப் பார்த்து தனக்குள்ளே சொல்லுவாள்: "அடா கோாவீரு! மதி கேடா! படு கொடியா! யமகாதகா! அட சண்டாளா! உன் காசுக்காக பபியோலாவென்ற பெண் நாயகத்தை மருந்து கொடுத்துக் கொலவேனென்று நீ நினைககிறாய்?''

இவ்விருவர் சமபாஷணையைக கேட்டிருந்த சிபஸ்தியார் அபிராவின் துா யோசனையைப பபியோலாவுககு உடனே அறிவிக்குமபொருட்டு எததனித்தாா. எத்தனித்தாலும அப்பெண்மணி தன் கிராமததிலிருந்து வருமட்டுங் காத்திருகக வேண்டியிருநதது.

## ١०-ம் அதிகாரம்.

### தவறி விழுவோர்க்கு ஊன்றுகோல்.

போர் வீரசூரனை சிபஸ்தியார்பேரில் இராயன் சர்வ நம்பிக்கையும வைத்திருநததால் அவர் அடைநத செல்வாககு அளவற்றது. இதினிமித்தஞ் சத்திய வேதம அரண்மனைக்குள்ளும் அரண்மனைக்கு வெளியும பரம்புமபடி இவா முக்கிய காரணமாயிருநதாா. காளளவில் பலபோ கிறீஸ்துவர்களானார்கள். இவர்கள் கிறீஸ்துவர்களான வர்த்தமானத்தில் ஒரு அற்புத விஷயமுண்டு.

கிறீஸ்துவர்களுக்கு விரோதமாய் இதற்குமுன் பிரஸ்தாபித்திருந்த சட்டத்தின் நிமித்தம அநேகர் பிடிபட அவாகளில் பிராணத்தியாகமாய் வேதசாட்சி முடி பெற்ற வர்கள்போக மீதிப்பேர் சிறையில் அடைபட்டிருந்தார்கள். இவாகளில் மார்க்கஸ், மார்செலலியான் எனற இரு சகோதரரும் பிராண சிட்சைக்கு நியமிககபபட்டிருந்தாலும அஞ்ஞானிகளான அவர்கள் மாதா பிதாககள், பநது ஜனங்கள், இஷ்ட நேசாகள் இவாகளைப் பாாக்குமபடியாய் வநது கணணீர் சிநதி அழுது அவர்கள வேதத்தை விடும்படியாய் துர்ப்புததி சொலலி அலட்டிவநததால இவ்விருவரும மனங்கலங்கி சிததந தடுமாறி நலலது எனறு நமபிக்கை மொழி கொடுததாாகள்.

சிபஸ்தியாா இதை அறிநது தவறி விழுவோாககுஊனறுகோலாக உடனே அவ்விருவரைத தாங்கிக் காப்பாறறப் புறப்பட்டாா. இவா அடைநதிருநத பிரதிஷ்டையினிமித்தந தடங்கலின்றி மேற்சொலலிய இருவரும அடைபட்டிருநத இருண்ட சிறைக்குள் பிரகாசக கதிரை வீசுந தேவதூதனைப் பிரவேசித்தாா. இசசகோதரா இருவரும நிககோஸ்திராத என்ற அதிகாரியின பராமரிப்பிலிருநததால் இவன் இவாகளைத் தன் வீட்டுக்குச் சமீபததிலிருநத சிறைக்கூடததில் அடைத்துவைத்திருநதான். இவ்வாலிபரின் தநதை திரான்குயிலீனன, தன மக்கள் மனதைக் கலக்கி அவர்கள் வேதததை விடுமபடிசெயய அடிக்கடி சிறைக் கூடத்துக்கு வரபபோக இருநதான்.

சிபஸ்தியார் முயன்ற அலுவல் மகா ஆபத்து நிறைந்ததானதால் அஞ்சாமனத்துணிவே அவருக்கு முக்கிய இலக்ஷணமாய் வேண்டியிருநதது. ஏனெனில் இச்சிறையில் மேற்கூறிய இருவரன்றி இன்னம் மிகு பேர் அஞ்ஞானிகள்

கைதிகளாய் அடைபட்டிருநதார்கள். இவ்விருவரின் மாதா பிதாக்களுந் தங்கள் பிள்ளைகளைக் கட்டி அணைத்துக் கண்ணீர் சிநதி தலைமேல் நிற்குஞ சாவின் தீரவைக்குத் தப்பிக்கும்படி வெகுவாய் வருநதிக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். இன்னமுங் காவல் சேவகனை கிளாதியனும், காரியஸ்தன் நிகோஸ்திராத் என்பவனும், அவன் மனைவி ஜோயே என்பவளும, ஆகிய இவாகள் அனைவோரும அங்கு கூடியிருநதார்கள்.

இத்தனைபேர் கூடியிருநத இடத்தில் செபஸ்தியார் வந்து தான கிறீஸ்துவனாயிருப்பதைக் காட்டினால் அங்குள்ளவர்களில் எவனாகிலும தன் தொழிலின கடமை நிறைவேற்றவாவது, கிறீஸ்துவர்கள்பேரிலுள்ள மதவைராக்கிய பகையின் நிமித்தமாவது, அலலது தான் காட்டிக் கொடுத்தால் மன்னிப்பும் பரிசும் பெறலாமென்னும் நம்பிக்கையை முன்னிட்டாவது செபஸ்தியாா கிறீஸ்துவனென்பதை வெளிவிடமாட்டானென்று நமபுமபடி என்ன ஆதாரமுண்டு? இப்படித் தான் கிறீஸ்துவனாயிருப்பது பகிரங்கமானால் தனக்கு பிராணலயம உண்டாகுமென்பது செபஸ்தியாருக்குத் தெரியாதா? எல்லாம அவருக்குப் பரிஷ்காரமாய்த் தெரிநதிருநதது. ஆனால் இரண வீரசூரன் எதுக்கும அஞ்சுவானோ? சர்வேசுரனுககு ஒப்புக்கொடுக்க இரண்டு பலிக்குப் பதில் மூன்று பலி இருந்தால் அவ்வளவுக்கு சுகிாதநதானே. பலி ஏதேனும இல்லாமற்போமோ என்னும் பயமே அன்றி வேறு பயம அவருக்குத் தெரியாது.

இவாகளிருந்த சிறைக்கூடம் நாலாபக்கமும அடைபட்டிருந்ததால் மேலிருநத துவாரத்தின் வழியாய் வந்த பிரகாசமன்றி வேறு பிரகாசமில்லை. செபஸ்தியாா உள்ளே பிர

வேசித்து அங்கு கூடியிருந்த அனைவோரும தம்மைப் பார்க்க வேண்டுமென்ற நோககத்தால் பிரகாசம உள்ளே பாயும் வழியில் நிற்க, செபஸ்தியார் அணிந்திருந்த தளபதிக் குரிய பொன்மணி பதித்த உடையும அலங்கார சின்னங் களும் பிரகாசவெளிச்சத்தில் தேஜோமயமாய் மின்னித் துலங்கின. அவர் முகத்தில் வீசிய தெளிநத கிரணம அவரது இலக்ஷண சுரூபத்தைத துலக்கி எடுத்துக்காட்டி னலும் வேதத்தில் தத்தளித்திருநத அவ்விருவரையுங் கண்டமாத்திரம மனம புண்ணுய், முகமவாடி வருந்தின தாகத் தோன்ற, உள்ளததில் நிறைநத வியாகுல மிகுதி யால் பேசத்துணிவின்றி சறறு மௌனமாய் நின்றபின் மனதின் ஆத்திரபதறறத்தைப் பொறுக்கமாட்டாமல் சொ ல்லுவார் :—

"என் பிரிய சகோதரரே! சேசுநாதரின் பரிசுத்த வேதத்துக்காக சிறையில் அடைபட்டு காலில் விலங்கிட்டு துன்பப்படுவதால் பாககியமபெறறவாகள நீங்களே. உங் கள்முன் அற்பனுகிய நான் முழங்காலிலிருநது உங்கள் பாதங்களை முத்திசெய்து உங்கள் ஆசீர்வாதங் கேட்க வேண்டுமேயன்றி உங்களுக்கு புததி சொல்லி கணடிததுப் பேசத் துணிவது முறையோ? சுகநத வாசனை வீசும் அலங்கார புஷ்பங்களைக் கோரதது தேவதூதாகள் உங் களுக்காகச் சிறந்த வெற்றிமுடியைப் பின்னி அதில் கடை சிப் புஷ்பத்தைககூட்டி முடிக்க எத்தனிககுமபோது நீங் கள் அவர்கள் கையைத் தடுத்து நிறுத்தினதுமன்றி கோர்த் த புஷ்பங்களையும பிரித்துக் கலைத்து காற்றில் தூற்றி எறி யுமபடி சொல்ல யோசித்திருப்பதாக நான் கேட்ட சமாச் சாரம் மெய்யாயிருக்குமோ? மோக்ஷ வாசலில் ஒரு கால் வைத்திருந்த நீங்கள் வைதத காலையும் பின்னிட்டெடுத்து

இந்தக் கண்ணீர் கணவாயாந் துன்ப ஸ்தலத்தில் இன்ன மிருந்து சுகித்து வாழ நீங்கள் எண்ணங்கொண்டிருப்பது வாஸ்தவமா ?"

சிபஸ்தியார சொல்லுவதைக் கேட்ட வாலிபர் இருவரும் முகநாணி தலை கவிழ்ந்து கண்ணீர் சிந்தி அழுததால் தங்கள் பலவீனத்தை அங்கீகரித்து மனஸ்தாபப்பட, சிபஸ்தியார் அவர்களுக்குச் சொலவார் : —

"சகோதரரே! மகா அற்பனும் என்னை நீங்கள் கண்டமாத்திரம் இவ்வளவு வெட்கப்பட்டு நாணினால் அந்தக் கடைசி பயங்கர நாள் வரும்போது சேசுநாதர்சுவாமி நீதியின் சிம்மாசனமீதிருந்து உங்களை உறுக்கி நோக்கிப் பார்த்து "மனிதருக்குப் பயந்து நம்மை மறுத்து நிந்தித்த துரோகிகளே! நாம் உங்களை அறியோம், அப்பால் போங்கள்" என்று சபித்துத் தள்ளும்போது எவ்விதம் இதைத் தாழ உங்களால் கூடும்? இப்போது நீங்கள் சத்திய வேதத்தில் உறுதியாயிருந்து பிரமாணிக்கந் தவறாது நடந்தால் துஷ்டர் கையில் சில நாள் துன்பம் வருத்தப்பட்ட பின்பு மோக்ஷத்தில் நித்திய மகிமை பாக்கியம் பெறுவீர்களல்லவா? நீங்கள் வேதத்தை மறுப்பதால் இவ்வுலகில் சிலகாலம் உயிரோடிருந்தாலும் வேத விரோதிகள் உங்களை நிந்தித்துப் பழிப்பார்கள் உங்கள் மனசாட்சியே புழுப்போல உங்கள் மனதை என்றும் ஓயாமல் அரிக்க கண்ணில் தூக்கமின்றி காலக்ஷேபஞ் செய்வீர்கள்."

இதைக் கேட்டவுடன் இவ்விருவர் தகப்பன் தார்குயிலீனன் சொல்வான்; "ஓ யௌவன புருஷோத்மா! நீயார் எவராயினும் என மக்களை இவ்விதங் கடிந்து பேசாதே. இவர்கள் மனத்திடனற்ற கோழைகளென்று எண்

ஞுதே. இவர்கள் தங்கள் வேதத்துக்காக வெகு துன்பப் பட்டபின் இவர்கள் தாய் சிந்திய கண்ணீரையும் நான் பட்ட துயரத்தையுங்கண்டு மனமிளகி எங்களுக்கு இஷ்ட பூர்த்தி செய்ய இவ்வளவு தூரஞ் சம்மதித்திருக்கிறார்கள். பிள்ளைகள் தங்களை ஈன்றெடுத்த பிதா மாதாவை துன்பம் இடையூறுக்கு இலக்காய் ஏன் விடவேண்டும்? உன் வேதம் இவ்வளவு கொடுமை உளதோ? "தந்தை சொன் மிக்க மந்திரமில்லை" என்றும் "தாய் சொற்றுறந்தொரு வாசகமில்லை" என்றும் பிரமாணமிருப்பதை நீ அறியாயோ?" என்றதற்கு சிபஸ்தியார் வெகு தயாள அன் போடு சொல்வார் :—

"ஐயா விருத்தாப்பியரான பெரியவரே! சற்றுப் பொறும். உமது பிள்ளைகளுக்கு நான் சொல்லும் ஞாயத்தை அவர்கள் கண்டுபிடிக்கலாம். நீர் இன்னம் நன்றாய்க் கண்டுபிடிக்கமாட்டீர். அதற்குத் தக்ககாலம் தேவ நுக் கிரகத்தால் பின்னால் வரும்.

"சகோதரரே!" உங்கள் தந்தை சொன்னதுபோல சேசு நாதரைப் பார்க்கிலும் உங்களை ஈன்றவர்கள் பெரிதென் றெண்ணி நீங்கள் சேசுநாதரை மறுத்திருக்கிறீர்கள். 'தன் தாயையுந் தந்தையையும் நம்மிலும் அதிகமாய் சிநேகிக்கிற வன் நமக்கு ஏற்றவனல்ல' என்று சேசுநாதர் சொன்ன வாக்கியம் உங்களுக்கு ஞாபகமில்லையா? நீங்களே மோக்ஷத்தை இழந்தால் உங்களைப் பெற்றோர்க்கு எவ்விதம் மோக்ஷ பாக்கியம் உண்டாகும்படி நீங்கள் செய்வீர்கள்? சேசுநாதரை நீங்கள் மறுப்பதால் உங்கள் தாய் தந்தையர் அவரை அறிந்து வணங்கும்படி செய்வீர்களோ? விருத் தாப்பிய திசையிலிருக்கும் உங்கள் மாதா பிதாக்கள் நித் திய பாக்கியமுள்ள மோக்ஷம் பெறும்படி உங்களுக்கு

விருப்பமோ? விருப்பமானால் நீங்களே சத்திய வேதத்தில் உறுதியாயிருந்து வேதசாட்சியின் முடியைக் கைப்பற்றுங்கள். அதன்பின் உங்கள் முடியை சேசுநாதரின் பாதத்தில்வைத்து உங்கள் தாய் தந்தையரின் இரக்ஷணியத்துக்காக பிரார்த்தியுங்கள்."

சிபஸ்தியார் சொல்லி முடித்ததும இருவரும் மனஸ்தாபப்பட்டு சொல்வார்கள்: "இவ்வளவு சொன்னது போதும், போதும் சிபஸ்தியாரே! நாங்கள் வேதத்தில் உறுதியாயிருப்போம. ஓ காவல் சேவகா! வா அநதச் சங்கிலியைக் கொணடுவநது, எங்கள கைகளையுங் கால்களையுங் கட்டு. இராயன் விதித்த சாவின தீர்ப்பை உடனே நிறைவேற்று. ஆ! எங்கள் அன்புள்ள தநதையே! ஆ! எங்களைப் பெற்ற தாயே! நாங்கள் போகின்றோம். சேசுநாதர்சுவாமிக்காக இதோ சாகப்போகிறோம. அழவேண்டாம. உங்களுக்கு மங்களம உண்டாக" என்று சொல்லி முறை முறையாய் தாய் தநதையரைக் கட்டி அணைத்துக் கண்ணீர் மழைத தூவினார்கள்.

தகப்பன மனமிளகினது. தேம்பி தேமபி விமமி அழுது தன் பிள்ளைகளைப் பாாததுச் சொல்வான்: "என் பிரிய மக்களே! நாம இனிப்பிரியமாட்டோம. நானும் உங்களைப் போல் கிறீஸ்துவன. என் பாவிப் பிள்ளைகளுக்கு இவ்வளவு மன உறுதி கொடுக்கக்கூடுமான வேதம் சத்திய வேதமாயிருககவேண்டும. சேவகரே! என்னையும் பிடித்துக் கட்டுங்கள். நானும என பிள்ளைகளோடு சாகப் போகிறேன். நானுங் கிறீஸ்துவன்." இதைக் கேட்டிருந்த தாயுஞ் சொல்வாள்: "ஓ! நானும கிறீஸ்துவள். என் பிள்ளைகளையும என் பத்தாவையும் விட்டு நான் பிரிய

மாட்டேன். பிள்ளைகளே! வாருங்கள் எல்லாருங் குடும்ப சகிதமாய் சேசுநாதருக்காக உயிரைக்கொடுப்போம்.''

இதன்பின் நடந்த சங்கதியை வர்ணித்துச் சொல்ல வார்த்தைகளில்லை. அங்கு கூடியிருந்த எல்லாரும் மனங் கனிந்து கண்ணீர் சிந்தி அழுதார்கள். சிபஸ்தியார் தன்னைச் சூழ்ந்திருந்த ஆண் பெண் அடங்கலும் தேவாநுக்கிரகப் பிரசாதத்தால மனமிளகி நீர வழிப்பட்ட தெப்பம் போல் ஏற்ற ஸ்திதியிலிருப்பதைப் பார்த்தார். ஆகிலும் இங்கு கூடியிருந்தவர்களில ஒருவன் மாத்திரம இளகாமன மோடிருந்தால் சிபஸ்தியாருக்கும மற்ற சபையார் அனைவோருக்கும வரும பெரும ஆபத்தை நினைத்துப் பயந்து நின்றார்கள். தாங்கள் கிறீஸ்துவர்களான தீ.தெரியவருமாகில் பிராணலயம் வருமென்று கலங்கி எல்லாருஞ் சிபஸ்தியாரைச் சூழ்ந்து அவர் பாதங்களையுங் கரங்களையும ஆவலாய்ப் பிடித்துத் தங்களுக்குச சமாதானமும மன உறுதியுங் கொடுக்க அங்கு தோன்றிய வானலோக தூதனைனைப்போல் மனங்கனிந்திருந்தார்கள்.

அங்கிருந்தவர்களில இருவர்மாத்திரந தங்கள் அபிப்பிராயமின்னதென்று தெரிவியாதிருந்தவர்கள். நிகோஸ் திராத்தென்ற காரியஸ்தன் மனம உருகி நின்றாலும் மனந் திரும்பவில்லை. அவன் மனைவி ஜோயே என்பவள் சிபஸ்தியார் முன் முழங்காலிலிருந்து தன் இரு கைகளையும ஆவலோடு விரித்திருந்தாள். அவள வாயிலிருந்து வார்த்தையொன்றும வரவில்லை. இப்படியிருக்க காரியஸ்தன் சிபஸ்தியாரை நோக்கி: "தளபதியே தாங்கள் போகும்படி நேரமாகின்றது. நீங்கள் காண்பித்த தயாளகுணமும் கௌரவ செய்கையும் நான் பார்த்து அதிசயப்பட்டாலும என் அலுவலின் கடைமையைச் சரியாய் நிறைவேற்றவேண்டும்''

என்று சொல்ல, சிபஸ்தியார் அவனைப் பார்த்து: "ஆனால் இவர்களைப்போல நீருஞ் சத்திய வேதம் மெய்யென்று அங்கீகரிக்கிறதில்லையா?" எனக்கேட்க, நிக்கோஸ்திராத் சொல்லுவான்:

"நீங்கள் இவர்களுக்குச் சொன்ன ஞாயங்களெல்லாம் எனக்குப் போதாது. இவைகளிலும் தெளிவான திருஷ்டாந்தம் எனக்குவேண்டும்."

"அப்படியானால் அம்மா ஜோயே நீங்கள்தான் உங்கள் கணவனுக்குப் புத்திசொல்ல வேணும். உங்களைப் பார்த்தால நீங்கள் சேசுநாதருடைய பரிசுத்த வேதத்தை விசுவசிக்கிறீர்களெனத் தோன்றுகிறது."

சிபஸ்தியார் சொன்ன வார்த்தைகளைக் கேட்டவுடனே ஜோயே தன் முகத்தை இரு கைகளால மூடி கூவென்று அழுதாள். அப்போது அவள் புருஷன சொல்வான்:

"சிபஸ்தியாரே நீங்கள சொன்ன வார்த்தை என் மனைவியின் மனதில் அம்புபோல பாய்ந்தது. அவள ஊமையாயிருப்பது உங்களுக்குத் தெரியாதா?"

"ஊமையா? ஐயோ! எனக்கு இது விஷயந் தெரியாதே. சில வருஷங்களுக்கு முன் நான் இவளைப் பார்த்த போது நன்றாய்ப் பேசினாளே?"

"இவள் பேசி இப்போது ஆறுவருஷமாகிறது. ஏதோ பக்கவாதம்போல் கண்டு இந்த ஆறு வருஷம் நாக்கு வழங்காமலிருக்கிறாள்."

சிபஸ்தியார் சற்று மௌனமாயிருந்தார். பின் தமது கைகளைவிரித்து உயரத் தூக்கி வானத்தை 'அண்ணாந்து' பார்த்து எல்லாரும் கேட்க பின் வருமாறு பிரார்த்தித்தார்:—

"எங்கள் தேவனும இரக்ஷகருமாகிய சேசுக்கிறீஸ்துவே! தேவரீா துவக்கிய இநத அலுவலைத் தேவரீரே முற்றும் முடிப்பீராக. உமது தேவத்துவ வல்லமையைக் காணபித்தருளுஞ் சுவாமி. உமது ஊழியரில் மகா அற்பனாயிருக்கும் அடியேன் உமது திருநாமத்தால இவள் நாவின் கட்டவிழ்க்க பெலன தருவீராக. உமது திருச்சிலுவையை நான் ஆயுதமாக ஏநதி உமது விரோதிகளை ஜெயித்து வெற்றிகொளளவேணுக. ஓ ஜோயே! எனனை ஏறிட்டுப் பார்."

எல்லாரும் நிசப்தமாய் அச்சாதிசயமுடன் நிற்க சிபஸ்தியார் சற்று மனதுக்குள் சர்வேசுரனைப் பிரார்த்தித்து பின் தமது வலது கையால ஜோயே என்பவள் வாயில் சிலுவை வரைநது: "ஜோயே உன் நாக்கின கட்டவிழநதது, பேசு, நீயுஞ் சேசுநாதசுவாமியை விசுவசிககிறாயா?" எனறு கேட்க அவள் மெல்லிய குரலோடு தெளிவாய்: "சேசுநாதா மெய்யான சர்வேசுரனெனறு நான் விசுவசிக்கிறேன்" எனறு சொலலி அவா பாததகில விழுநதாள்.

இநத அற்புத நவத்தைக் கணட காரியஸ்தன பிரமித்து சித்தப்பிரமை பிடித்தவனபோல் சற்று நினறபின் சிபஸ்தியார் முன் முழங்காலிலிருநது ஆனநத கண்ணீர சிந்தி "நானும விசுவசிககிறேன்" எனறு சத்தமாய்ச் சொன்னான்.

சிறையிலிருந்த சகலரும மனநதிருமபவே, பூரண அநுகூலமுண்டானது. இவாகளெல்லாருக்கும வெகு இரகசியமாய் வேத சத்திய உபதேசஞ் சொல்லிக்கொடுக்கும்படி காரியஸ்தனுடைய அநுமதிப்பிரகாரம இவாகளை வேறு வீட்டுக்கு கூட்டிப்போய் ஞானோபதேசம கேட்டுப் படித்த பின் ஞானஸ்நானங் கொடுத்தார்கள்.

அச்சமயத்தில் நகர் அதிகாரியாயிருந்த குரோமாசியன் யோக்கியதையும் எதார்த்தகுணமும் உள்ளவனானதால் நடந்த அற்புத விஷயங்களைக் கண்டு மனந்திரும்பி தன் மகனோடு ஞானஸ்நானம்பெற்றான். இவ்விதமாய் சிபஸ்தியார் "இழுக்கலுடையுழி ஊன்றுகோலற்றே, ஒழுக்கமுடையார் வாயச்சொல்" என்ற நீதி மொழிப்படி தவறி விழுவோர்க்கு ஊன்றுகோலாய் வந்து அவர்களைத் தாங்கிக் காப்பாற்றி அவர்களோடு மற்ற அநேகரையுங் கைதூக்கி இரக்ஷித்தார்.

இப்புதுக் கிறீஸ்துவர்கள் மறைவிலிருக்கும் படியாய் தக்க ஏற்பாடு பிரயத்தனங்கள் செய்தார்கள். காலக்கொடுமையாலுங் கிறீஸ்துவர்களைக் காட்டிக்கொடுக்கும்படியாய் உளவாளிகள் பலபோ நடமாடினபடியாலும் வெகு ஜாக்கிறதையுடன் இருப்பது அதகியா அவசியமாயிருந்தது. காப்புவா என்ற பட்டணத்தின் சமீபத்திலுள்ள ஓர் கிராமத்திற்கு இவர்களை அனுப்புவது உசிதமென்று தீர்மானித்தார்கள். இங்கு போகவேண்டியவர்களுக்குத் துணையாகவுங் குருவாகவும் பொலிக்காரப் என்பவரைக் குறித்தார்கள். செய்யவேண்டிய வழிவகையெல்லாஞ் செய்து முடித்த பின்பு சிபஸ்தியாரும் இவருக்குத் துணையாய்ப் போன பங்கிராசும் தங்கள் வீட்டுக்குத் திருமபினார்கள்.

வரும் வழியில் பெருங் கூட்டமுஞ் சந்தடி முழக்கமும் இடி யோசைபோல் எழும்புவதைக் கேட்டு இதென்ன விசேஷமென்று நின்று பார்க்கையில் அஞ்ஞான ஜனங்கள் அவலக்ஷண ரூபமுள்ள சிலையொன்றை இரதத்தின்மேல் வைத்து மாலை சூட்டி தீபங் காட்டி குரவையிட்டு கூத்தாடி தூக்கிக்கொண்டு வந்தார்கள். எங்கும் சத்தமும் இரைசலும் சண்டையுந் தூஷணமுமாய்த்தான் இருந்தது.

பேய் ஆராதனையின் உற்சவ கோலத்தைச் செபஸ்தியார் பார்த்து வெகு துக்கப்பட்டு வானத்தைப் பார்த்து சொல்வார்: "ஆ ஆண்டவரே! இன்னம் எத்தனை காலம் இப்படி அஞ்ஞான இருள் அடர்ந்து சூழ்ந்திருக்கும்! இன்னம் எவ்வளவு நாள் இந்த உரோமானார் நரகப் பசாசுகளைத் தேவர்களாக கை யெடுத்து கும்பிட்டு வருவார்கள். ஆ! உமது சத்திய வேதப் பிரகாசந் தோன்றுதா? உமது பரிசுத்த வேதம் இப்பட்டணத்தில் பிரசங்கிக்கப்பட்டு மூந்நூறு வருஷங்களாகின்றதே! ஆ! நீதியின் சூரியனே! உமது உதயத்துக்காக நாங்கள் ஆவலாயக் காத்துக்கொண்டிருக்கின்றோம். உதித்துத் தோன்றும் ஸ்வாமி."

இதற்கு பங்கிராஸ் சொல்வான்: "அண்ணேன்! அந்த மலையின் உச்சியிலிருந்து நான் கீழ்த்திசையில் சூரியன் உதிப்பதை அநேகமுறை ஆச்சரிய பரவசத்தோடு பார்த்திருக்கிறேன். மலைகளின் சிகரங்கள் தங்க மயமாய் ஜொலிக்கும். பனித்துளிகள் முத்துக்கள் தெளித்தாற்போல சுடர்விடும். நதியின் ஜலப் பிரவாகம் பொன் தகட்டில் ரத்னக் கோலமிட்டதுபோல் துலங்கும். ஆனால் நமது சத்திய வேதம் இப்பட்டணத்தில் பிரகாச ஒளியோடு உதிக்கும்போது இதிலும் அதிக அலங்கார சிறப்பாயிருக்கும். யார் அதுமட்டும் உயிரோடிருந்து பார்ப்பார்களோ தெரியாது. அண்ணேன்! நீங்களும் நானும் மேலுலகத்திலிருந்து இந்த அதி அற்புத காட்சியைப் பார்ப்போமென்று நான் எண்ணி இருக்கிறேன்."

இவ்விதமாக இருவரும் பேசிக்கொண்டு தங்கள் இல்லிடஞ் சென்றார்கள்.

# ௰௧-ம் அதிகாரம்.

## நரியும் கோநாயும்.

அபிரா கோர் வீனனுக்குப் பணஞ் சம்பாதிக்கும்படியாய்ச் சொல்லிக்கொடுத்த உபாயம் விழலுக்கிறைத்த நீர் போல் வீணாய்ப் போகவில்லை. கோரவீனன் புல்லியனை அநேகந்தரம் பல இடங்களில் பார்த்து அவன் நடை உடை பாவனையையும் அவன் சமர்த்தாய்ப் பேசுந் திறமையையுங் கண்டு பொறாமையும் அழுக்காறும் மனதில் கொண்டிருந்தான். புல்லியன் வெளிக்கு எவ்வளவு யோக்கியனாய் நடித்தாலும் உள்ளத்தில் தன்னிலும் அதிக கபடு வஞ்சக நிறைந்த நீசனென்று நன்றாய் அறிந்துகொண்டதால் அவனோடு கூடிக் கலந்து பேசும்படி ஏற்ற சமயந் தேடி வந்தான். புல்லியனிடமுள்ள புத்தி யுக்தியின் சமர்த்தும் தன்னிடமுள்ள தேக புஷ்டியின் பலமும் ஒன்றாய்க் கூட்டிச் சேர்த்தால் இருவருக்கும் வெகு நலமாயிருக்குமென்று கோர் வீனன் உத்தேசித்து அவனோடு எவ்வகையாலாகிலும் ஒரு ஒப்பந்த நிபந்தனை செய்யவேண்டுமென்று தீர்மானித்தான்.

ஒருநாள் புல்லியன் உத்தியான வனத்தில் உலாவிக்கொண்டு அங்கிருந்த பலவகை விருக்ஷ ஜாதிகளையும் தண்ணீர் சுனைகளையும் விநோத அலங்கார சிறப்பாய் வனையப்பட்டிருந்த சிலைகளையும் பார்த்துக் கொண்டிருப்பதை கோரவீனன் கண்டு இதுதான் நல்ல சமயமென்று அவன் கிட்டச் சென்றான். இவனிருந்த பஞ்சைக்கோலத்தைப் பார்த்துப் புல்லியன் கோபாவேசமாய்: "நீ யார்? உனக்கு என்னிடம் என்னவேலை?" என்று கேட்டான்.

அதற்குக் கோர்வீனன்: "உன்னோடு நான் ஓர் விஷயத்தைப்பற்றிப் பேசவேண்டும். அது உனக்கும் எனக்கும் பிரயோசனமாயிருக்கும்."

"ஓ! ஓ! அது உனக்குப் பிரயோசனமாய் இருக்குமென்பதைப்பற்றி ஐயமில்லை. ஆனால் எனக்கு எவ்விதம் பிரயோசனம் பயக்குமோ நான் அறியேன்."

"புலவியா! நானோ ஏதார்த்தவாதி; உனக்கிருக்குஞ் சமாத்தும் நய வஞ்சகமும் எனக்கில்லை. ஆனாலும் நமமிருவருக்கும் ஒரே தொழில் தான். நாம் இருவரும் ஒரே மனமுள்ளவர்கள்."

இவ்வார்த்தைகளைக் கேட்கவும் புலவியன் சற்றுத் திடுக்கிட்டு முகமாறி நின்றாலும் பின் துணிவுகொண்டு தன் கை விரல்களை மடக்கிக் காட்டி, பழிசொல் கூறி, கண்விழிகள் நெருப்பைக் கக்க, சொல்வான். "அடே! நீ என்ன சொல்கிறாய்?"

"புல்வியா! உன் கை விரல்களிலிருக்கும் முத்துப் பதித்த மோதிரங்களை எனக்குக் காட்டும்படியாய் நீ உன் விரல்களை இப்படி மடக்கிக் காட்டினால் போகட்டும். ஆனால் எனக்குப் பயம் உறுத்தும்படி இவ்விதங் காட்டுவது உன் கருத்தானால் உன் கை விரல்களை முன் இருந்தபடியே மேல் வஸ்திரத்துக்குள் மறைத்து வைத்துக்கொள். என் கிட்ட செல்லாது."

"ஓய் போதும், வீண் வமபு வளர்க்காதே. வந்த காரியம் இன்னதென்று சொல்."

"கேள் புல்வியா. உன் பூர்வோத்தரமெல்லாம் எனக்குத் தெரியும். நீ ஓர் உளவன். தெரியுமா? கோட்சொல்லிக்குமரனே."

புல்வியன் இடி யோசை கேட்ட நாகமபோல் தடு மாறினன். ஆகிலுந துணிவு குன்ருது : "அடே! நீ இவ்வி தம் என்பேரில் குற்றஞ் சுமத்திப் பேச உனக்கு எனன அதிகாரமுண்டு?"

"ஏ! கீழ்த்திசை தேசத்தில் இராஜ துரோகமென்று சதிதுரோகமொன்றை நீ உளளிருந்து ஊதிவிட்டு பின்பு பலே கண்டுபிடித்தவனபோல காடடவில்லையா? ஒய் என்னைப் பாாத்து இலலையெனறுசொல், பாாககலாம."

புல்வியன் அவ்வளவில் அவனை நிறுத்தி: "போதும, நீ யாா? உன பெயா எனன?" எனறு கேட்க

"நான் கோர்வீனன. என் தகபபன் பெயா தோத் துல்வியன, இநககர் அதிகாரி."

புல்வியன இநதச் சங்கதிகள் கேட்கவும எல்லாம் அவ னுககுத் தெளிவானது. அதனல் சறறு மரியாதையோடு கோாவீனனோடு பேசிச்சொல்வான :—"கோாவீன! நமது சங்கதிகளேக் கலநது பேச இது தக்க இடமலல. பலபோ போகிற வருகிற இடமிது. நாளை அதிகாலமே அதோ அங்கே இருக்கும மணடபத்திறகு வா. இருவருஞ் சாவ காசமாய் இருநது பேசலாம." என, இதன பின் இருவரும் பிரிந்து போனர்கள்.

மறுநாள் விடியறகாலஞ் சுக்கிரோதயமாகுமுன் கோர் வீனன் தன் வீட்டிலிருநத பழைய துணி ஒன்றை எடு த்து உடுததிக்கொண்டு குறிதத இடத்துக்குப் போய் காத் துக்கொண்டிருந்தான். புல்வியன் சற்றுத்தாமதஞ சென்று வந்ததால் கோாவீனனை நோக்கி "என் பிரிய தோழா! என நிமித்தம உன்னை இவ்வளவு நேரங் காக்க வைத்ததை மன னித்துக்கொள்" என்று வெகுமரியாதையுடன் பேசினன்.

. கோர்வீனன் மனங்குளிர அவனைப் பார்த்துச் சொல்வான் : "புல்லியா! அதோ பார். அதிகாலமே முதற்கொண்டு ஜனங்கள் நாலாபக்கத்திலும் இருந்து அந்த வீட்டுக்குள் பின்புறத்துக் கதவின் வழியாய்ப் போனமணியமாய் இருக்கிறார்கள். ஊரிலுள்ள நொண்டி நுடங்களும, குருடு செவிடுகளும, எவ்வித அங்க ஊனங்களும், கிழக்கட்டைகளும, வந்து கொண்டே இருக்கிறார்கள். அந்த முன்பக்கத்துக் கதவின் வழியாய வேறே வகையான பேர்கள் போயக்கொண்டு இருககிறாகள."

"அநத வீடு யாருடையதென்று உனக்குத் தெரியுமா? பாரி வீடு. ஆனல் வெகு பழசாய்ப் போய்விட்டது."

"அது யாரோ ஒரு உரோமைப் பிரபுக்குச் சொநதமாம. இவன் வெகு பணக்காரனுனலுஞ் சுத்தக் கருமியாம. பார் அதோ இன்னம வேறு சிலபோகள் வருகிறார்கள்."

அச்சமயத்தில் வெகு விருததாப்பியனை கிழவன் கூனி வளைநது தளாநது நடகக அவனுககுத துணையாக ஓர் சிறு பெண முன் நடநது வழிகாடடி வெகு படச பாநதவத்தோடு பேசிககொண்டு போனள் :—

"ஐயா! வநதுவிட்டோம. வீடு அதோ இருக்கிறது. அங்கே போய் உட்காாநது நன்றாய் இளைப்பாறலாம்."

"அம்மா! நீ மெத்த நற்குணசாலி. அதிகாலமே நீ என்னைத்தேடி வீட்டுக்கு வநதாயே, சாவேசுரன்தான உனக்குத் தக்க சமபாவனை கொடுப்பார."

"நீங்கள் இனறைக்கு இநத வீட்டுககு வருவீர்களென்று எனக்குத் தெரியும். நான ஒன்றுக்கும உதவாத ஏழை. உங்களைக்கூட்டிவந்தாலும ஒரு தாமக்கிரிகை செய்யலாமென்றுதான் வநதேன்."

"அம்மா! செசீலி! குருடராயிருப்பவர்களுக்குப் பிறர் சிநேகமிராதென்று சாதாரணமாய்ச் சொல்லுவார்கள். ஆனால் இது உன் மட்டில் செல்லாது."

"ஏன் செல்லாது? நான் உங்களைக் கூட்டிவரும்போது கண்ணில்லாத எனக்கு உங்கள் கண் உதவியாயிருக்கிறது. அப்புறம் உங்களுக்குத் துணையாய் வருவதால் என மனதுக்குக் கொஞ்சம் திருப்தி உண்டாகிறது."

இவ்விதம் பேசிக்கொண்டு இருவரும் வீட்டின் கதவின் கிட்டச் சேர்ந்தார்கள்.

இவையெல்லாம் பார்த்திருந்த புல்வியன் கோவினனுக்குச் சொல்வான்:

"பார்த்தியா, அந்தச் சிறு பெண்ணுக்குக் கண் தெரியாது. அப்படி இருந்தாலும் அவள் எப்படி நேரே நடந்து போகிறாள்!"

"அதிருக்கட்டும். அந்த வீடு என்ன வீடு? ஏழைகள் கூடவும், குருடர் பார்க்கவும், நொண்டிகள் நடக்கவும், எல்லாரும் ஒருங்குகூடி அசமகிழ்ந்திருக்கவும், கட்டப்பட்டிருக்கும் வீடென்று சொல்லுகிறார்களே அது இது தானே? இந்த ஏழைகளைப்பார். எல்லாரும் ஒருவருக்கொருவர் துணையாயிருந்து சண்டைசச்சரவின்றி சந்தோஷமாய்ப்போகிறார்கள்."

"இந்த நூதன விஷயம் இன்னதென்று அறியவேண்டும். இதில் நமக்கு ஏதாகிலும் பணங்காசு வந்தாலும் வரும். இந்த வீட்டுப்பிரபு திரண்ட ஐசுவரியவானென்று சொன்னாய்?

"ஓ! அவன் ஆஸ்தி சொத்துக்குக் கங்கு கரை இல்லை."

"ஆ! ஆ! அப்படியானால் நாம் எப்படி உள்ளே போகலாம்?"

"கேள், நான் ஒரு உபாயஞ் சொல்லுகிறேன். என் மிதியடியை கழற்றிப்போட்டு ஒருகாலை தூக்கித் தூக்கி நொண்டிபோல நடந்து கூட்டத்தோடு கூட்டமாய் உள்ளே நான் போகபபோகிறேன. யார கண்டது?"

"கோர்வீனு! இந்த உபாயம வாய்ககாது. ஏன் என்று கேள். இநத வீட்டுககுள் நுழையும ஒவ்வொருவரும் யார் எவரென்று வீட்டிலிருப்பவாகளுககுத் தெரியும."

"நீ சொல்வது மெயயாயிராது. பாா அங்கே போகிற வர்களில் பலா இது அக்நேசி அமமாள் வீடோ என்று விசாரித்துக்கொணடுபோகிறாாகள்."

"யார் வீடென்று?"

"ஏன புல்வியா இப்படிப்பதறி உதறித்துடிக்கிறாய? இது அக்நேசி அம்மாளின் தாய தநதைவீடாம. என்றாலும, அவளே தநதையின பிதிராாஜித சொத்துககளுக்குச் சுதநதரக்காரி ஆதலால் வழக்கமாய அக்நேசி வீடென்று சொல்வார்கள். இவளுககுளள சொத்தும இவள் பநது பபியோலாவின் சொத்தும ஒரே அளவுள்ளதாம."

இந்த விவரங்களை அறியவும புலவியன சறறு யோசனையா யிருநதான். பின மனநதேறி கோர்வீனனுக்குச் சொல்வான்:

"கோர்வீனு! கேள் இநத வீட்டுக்குள் போகிறவர்கள் வீட்டார் அறியாதவாகளாகில உன் யோசனைபோல் செயயலாம நான் இவ்வீட்டின சுதநதரககாரியை அறிவதால முன் பக்கக்கதவின் வழியாய் போகிறேன். நமமிருவருககும நல்ல யோகம உண்டாகும"

"புல்வியா! நான் இப்போது என்ன யோசிக்கிறே னென்று உனக்குத் தெரியுமா?"

"ஆ! ஆ! அது மகா உஜித யோசனையாய்த்தான் இருக் கவேண்டும்."

"கேள் நாம் இருவருங்கூடி ஒரு காரியந் தொடங்கி ளுல் எப்போதும் நமக்கு இரண்டுயோக திசை அடிக்கும்."

"அதென்ன யோகதிசை காணும?"

"நரியும கோனுயும கூடி ஆட்டுமந்தையில் திருடப் போனுல் அவைகளுக்கு அடிகருநதிசைதான் நமக்கும அடிக் கும்." புல்வியன் தனவிழியைத திரட்டி உருட்டி கோப வெறியோடு, கோாவீனனைப் பாாததான். கோர்வீனனும் அதற்கிசைவாய் ஆநதைபோல் பெருமவிழி விழித்து உறுக் கி நோககினுன். இருவரும் நரியும நாயுமபோல் உறுமிக் கொண்டு திருமபிப் போனுாகள்.

## ௰உ-ம். அதிகாரம்.

### மந்தைக்குள் நுழைந்த நரியும் கோநாயும்.
### அடாதது செய்பவன் படாததுபடுவான்.

அக்நேசியின் கோத்திரததார் பலபல வம்ஸ வரிசை யாய் கிறீஸ்துவர்களாயிருந்தவர்கள். இவர்களில் அநேகர் முந்திய வேதகலாபனைகளில் சத்திய வேதத்தின் உண்மைக் குச் சாக்ஷியாய் மரித்து வெற்றி முடி பெற்று தங்கோத்தி ரத்திற்கு அலங்காரமாய் விளங்கினவர்கள்.

இவள் மாதா பிதாக்கள் அளவற்ற ஆஸ்தி சம்பத்துள் ளவர்கள். விர்த்தாப்பிய திசையிலிருக்குங் காலத்தில் இவர்களுக்குச் சர்வேசுரன் கொடுத்த ஏக புத்திரி அக்நேசி யானதால் இவளை வெகு செல்வமாய் வளர்த்துக் காப்பாற்

றிவுந்தார்கள். அக்நேசியும நல்லொழுக்கத்திலும் அறிவி லும என்றும விர்த்தி அடைந்து வெகு மதுரகுணமுள்ள செல்வியாய எல்லாருக்குங் கண்மணியாய் வளர்ந்து வந் தாள். நூலைப்போற் சேலை தாயைப்போல் பிள்ளை என்றாற் போல் அக்நேசியுந் தன் தாயின் உத்தம தர்ம படிப்பினையை கைப்பற்றி அவளுடைய பிரதிபிமபமென்று சொலலத்தக்க விதமாய் நடந்தாள். இவாகள் வீடு வெகு வசதியாயிருநதா லும வீண் விநோத அலங்காரமெனபது யாதொன்றுமில்லை. அநநியரும அவ்வளவாய இவ்வீட்டுக்குள் வருவதில்லை. பபி யோலா சிற்சில சமயங்களில் வநதாலும அகநேசியே அவள் வீட்டுக்குப் பெருமபாலும போவாள.

அக்நேசி வீட்டின் ஒரு சிறு பாகமாத்திரநதான் வேலைக்கும வரப்போக இருககும இதர ஜனங்களுக்குந் திறநத இடம். மற்றப் பாகமும, வீட்டின் மேன்மாடி யுங் கோவிலாகவும, ஏழை எளிய ஜனங்களை ஆதரிக்க ஏற்ற தர்ம சத்திரமாகவும உபயோகிககப்பட்டிருநதது. இராஜ தானியின் அநதப்பாகத்தைச சோநத கிறீஸ்துவர்களுக்குப் பலமுறை அக்நேசி வீடுதான் கோவிலாயிருநதது. முன் நாம் சொல்லியவாறு பங்கிறாஸ் தன் வீட்டிலிருநத ஜாமான் வகைகளையும் நகை நாணயங்களையுந தரித்திரருக்குத் தன் பெயரைச் சொல்லாமல் தானஞ்செய்யவேணடுமென்று சிபஸ்தியாரிடங் கேட்டுக்கொண்டானல்லவா? அதற்குத் தான் இந்த நாளைக் குறிப்பிட்டிருநதது. இதின் விவரம மற்றப் பாகங்களிலுள்ள ஏழை ஜனங்களுக்கும அவர்களின் விசாரணைக் கர்த்தர்களான தியாக்கோன் பட்டவர்த்தனர் கள் வழியாய் அறிவித்திருநததால அவாகளும அக்நேசி வீட்டுக்கு அதிகாலமே வநதார்கள். சிபஸ்தியார், பங்கி ராஸ், இவர்களைப் போன்ற பிரபுகள் பலர் அன்று கூடும

எளிய ஜனங்களுக்கு வேண்டிய உதவி செய்யும்படியாய் முன்பக்கத்துக் கதவின் வழியாய உள்ளே சென்றூர்கள்.

வேஷம் எடுத்த கோர்வீனன் எளிய ஜனங்கள், வயோதிகர், அங்கவீனராகிய இவர்களோடு உள்ளே பிரவேசிக்கலாமென்று எண்ணி ஏற்ற சமயம் பார்த்திருந்தான். அந்தச் சமயமும் சரியாய் வாய்த்தது. பரம ஏழைகளான சிலர் கூட்டமாய் வரக்கண்டு அவர்களோடு தானும் ஒருவனுய் காலைத்தூக்கி நொண்டி நொண்டி நடந்து நடித்து கூட்டத்திற் சேர்ந்தான். அவர்கள் செய்வதுபோலே தானுஞ் செய்ய அவர்கள் கிட்ட நெருங்கி நடந்து கிறீஸ்துவர்கள் ஆசாரப்படி எதிரில் வந்தவர்களுக்கு 'சர்வேசுரனுக்கு ஸ்தோத்திரம்' என்ற மங்களஞ் சொல்லி எல்லாரோடும் உள்ளே பிரவேசித்தான். வீட்டுக்குள் ஒரு பக்கத்திலிருந்த பெரிய சாலையில் எளிய ஜனங்கள் பலர் முன்னிதாய் வந்து கூடியிருந்தார்கள். ஆண்பாலார் ஒரு பக்கமும், பெண்பாலார் வேறு பக்கமுமாக வகுக்கப்பட்டு நிற்க அவர்களுக்கு எதிரிலிருந்த மேஜையில் தங்கம்பொன்னலாகிய பாத்திரங்களும், முத்து ரத்னங்கள் பதித்த ஆபரணங்களும் நிறைந்திருந்தன. மேஜையின் சமீபத்தில் இரண்டு தட்டார் பொன் வெள்ளியின் மாற்று இன்னதென்று நிறுத்துப்பார்த்து அதின் கிரயத்தை வறியோருக்குப் பங்கிட்டுக் கொடுக்கத் தயாராயிருந்தார்கள்.

கோர்வீனன் இவ்வளவு தங்கம் பொன் நகைகள் முன்பாக, வாயில் ஜலம் ஊற நிற்கும்போது ஒருவனும் பார்க்காத சமயத்தில் தாண்டிக் குதித்து கையில் வந்ததை மடியில் வாரிக் கட்டிக்கொண்டு ஓட்டம் பிடிக்கலாமா என்ற யோசனையும் வந்தது. ஆனல் இவ்விதஞ் செய்தால் தப்பித்து ஓட வழியில்லையே என்று பயமுண்டாக தனக்கு வரும்

பங்குமாத்திரம் இப்போதைக்குப் போதும்; அதற்குப் பின் பார்த்துக்கொள்ளலாமென்று எண்ணமிட்டுக்கொண்டு நிற்கையில் தான் இவ்வீட்டுக்குள் கபடாய் வந்ததின் கொடும் விகாரம் இன்னதென்று இவனுக்கு இப்போதுதான் தோன்றினது. அதெப்படியெனில் அங்கு கூடியிருந்தவரியோரெல்லாம் இங்கும அங்குமாக பிரியத் துவக்கினார்கள். தயாளகுண சிங்தையுள்ள சில பாலியர், மிக துரிதமாய நடந்து தங்கள் தங்கள் பாகங்களிலிருந்து வந்தவர்கள் யார எவரென்று அறிந்திருந்ததால், அவரவர்களைக் குறித்த இடத்துக்குக் கூட்டிப்போய் வரிசை வரிசையாய நிறுத்தினார்கள். கோர்வீனன் இதில் எந்தப் பங்கையும சேராதவனாதலால் எவரும் இவனைக் கவனிக்கவில்லை. அர்த்தராத்திரியில் வீட்டுக்குள் ஒருவரும இல்லையென்று யெண்ணி திருடுமபடி உள்ளே நுழைந்த குறவன் அகப்பட்டுக்கொண்டால் எப்படி மிழிப்பானோ அப்படியே கோர்வீனனும் மிழித்துக் கொண்டு திறந்திருந்த கதவினபக்கம எவ்விதம தப்பித்து ஓடலாமென்று தக்க சமயம பார்த்திருந்தான். இவன் மிழிக்குங் திருட்டு மிழியால் இவன் அநியனென்றும் கபடாய உள்ளே வந்தவனென்றுங் கதவின் கிட்டக் காவலாய நின்ற கிபோஜெனன் என்ற விருத்தாப்பியனும அவனிருகிட்டாத்திரரான பிள்ளைகளும நன்றாய் அறிந்துகொண்டார்கள். இவர்கள் தங்கள் மனதில் பொங்கிய கோபத்தை அடக்கினாலும் முகத்தில் தோன்றிய கோபாக்கினியின் உக்கிரமம கண்களிலிருந்து நெருப்புப் பொறி பறந்தாற்போற் காட்டினது. இவர்கள் அன்றி இன்னுஞ் சில வாலிபா ஓரிடத்தில் கூடி கோர்வீனனைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பதாகவும, குருடர்கள் முதலாய் தன்னை வெறிக்கப் பார்ப்பதாகவும் அவனுக்குத் தோன்றினது. ஆகிலும அங்கு கூடியிருந்த

வர்களில் ஒருவனுங் தன்னை அறியாததால் அவர்களுக்கு ஏதோ ஓர் போக்குச் சொல்லி தப்பித்துப் போகலாமென்று எண்ணிக்கொண்டிருக்கையில் தியாக்கோன் பட்டவர்த்தனர்களிலொருவர் இவன்கிட்ட வந்து: "மித்திரா இன்று இவ்விடம்வரும்படி அழைக்கப்பட்ட பாகத்தை நீ சேராதவன்போல் தோன்றுகின்றது. நீ இருக்கும் வீடு எப் பக்கம?

"நான் பெரிய வீதித்தெருவிலிருக்கிறவன்."

"பெரிய வீதியெனறால் என் பாகததைச் சேர்ந்தது. அதில் உன்னை நான் பாரதத ஞாபகமே இலலை."

இவ்விதம் இருவரும பேசிககொண்டிருக்கையில் கோர்வீனன் கதவின்பக்கமாய்த் திருமபியிருநதவன், ஏதோ பேயையோ பூததததையோ பாரத்தவன் போல ஆவிதடுமாறி, செயல் மறநது, துடித்து துடித்து, மனம விண்டான். இரு விழியும இமைக்காதிருக்க நட்ட கட்டை போல் விறைத்து நின்றான். தியாக்கோன் அத்திசையில் பார்க்கும் போது பங்கிராஸ் வெகு ஆததிரத்துடன் வந்தான். கோர்வீனன் நம்பிக்கையாவும அறவே அற்றுப்போனது. பள்ளிக்கூடத்தில் படிக்குங்காலையில் தான் பகைத்து விரோதித்து அவமானமாய் நிநதித்து அடித்த பாலியன் தன் முன் வந்து நிற்பதைக் கண்டான். இருவரும் பிரிந்து சில மாதந்தான் ஆனாலும் அதற்குள் பங்கிராஸ் தேக வளர்த்தியிலும, அங்க இலக்ஷண வடிவிலும், மிகச் சிறந்தவனாகத் தோன்றினன். இருவரு முன்கடைசிமுறை சந்தித்தாற் போல் இப்போதும் ஒருவருக்கொருவர் எதிர் நின்றார்கள். ஆனால் இநத முறை பங்கிராஸ் தன் இனத்தார் வீட்டிலும் தன் இஷ்டர், சுற்றத்தார் மத்தியிலும் இருந்தான். பங்கி

ராஸ் வந்ததும் அவன் தன்னை நன்றாய் வைது திட்டி தனக்குச் செல்ல வேண்டிய அடி உதையை, தான் முன் சொன்னதுபோல, வட்டியுமுதலுங் கூட்டிச் சேர்த்து பழிக்குப் பழி வாங்குவானென்று கோர்வீனன் திண்ணமாய் எண்ணியிருந்தான். இவ்வித உசித சமயம் தனக்கு அநுகூலமாய் வாய்த்தால், தான் பங்கிராசுக்கு என்ன செய்திருப்பானோ அதுவே தனக்கும பங்கிராஸ் செய்வானென்று நினைத்திருநதான். ஆனால் அவன் எணணிய எண்ணத்துக்கெல்லாம் முழு விரோதமாய் பங்கிராஸ் இவனிடம் வெகு தயவாய்ப் பேசிக் கேட்பான் —

"கோர்வீனா! ஐயோ! எப்படி இநதத் தரித்திர திசைக்கு வந்தாய்? உன் கால் எபபடி நொண்டியானது? உன் தகப்பனார் வீட்டைவிட்டு நீ ஏன் வநதாய்?"

ஜென்மக்குணத்தை செருப்பாலடித்தாலும போமா? இவ்வளவு தயாளத்தைக் கணடதுங் கோர்வீனன் மனதில் துணிவுகொண்டு சொல்வான் :—

"பங்கிராஸ் என்னை இவ்வித ஸ்திதியில் பார்ப்பது உனக்கு ஆனநதமாயிருக்குமென்று எனக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் இவ்வளவு தாழ்வில் நான் இன்னம் வரவில்லை."

"ஓ! அப்படி சொல்லாதே. உன் பேரில் எனக்குப் பகையே யில்லை. கோர்வீனா! நான் உனக்கு ஏதாகிலும் உதவி செய்யக் கூடுமானால் சொல். என்னால் கூடியதெல்லாம் உனக்குச் செய்கிறேன்."

"அப்படியானால் உள்ள காரியத்தை நான் உனக்குச் சொல்லுகிறேன். இங்கே நான் வேடிக்கை பார்க்கலாமென்று வேஷம் போட்டு வந்தேன், வந்ததுபோலே நான் மெதுவாய் வெளியே போகும்படி நீ உதவி செய்தால் போதும்."

பங்கிராஸ் சற்றுக் கோபம் பொங்கின முகத்தோடு சொல்வான் :—

"கோர்வீனு நீ செய்தது பெருந்தப்பிதம். இந்தக் கோலத்தோடிருக்கும உன்னை கட்டி விலங்குமாட்டி உன் தகப்பன் நகராதிகாரி முன் கொண்டுபோய் நிருதகி உரோமை மகா பிரபுவின வீட்டுக்குள் துராகிருதமாய் நீ பிரவேசித்ததற்கு தேச சட்டப் பிரகாரம உன்னைத் தெண்டிக்க வேண்டுமென்று கேட்டால் உன் கெதி என்னமாய்ப் போம்."

"ஓ! பங்கிராஸ் அப்படி ஒன்றுஞ் செய்யாதே. என் தகப்பன் கொடியன்; எனனைக் கொன்றுபோடுவான். எனக்குத் தப்பிக்க வழியிராது. அப்பா! வேண்டுமானுல் சாஷ்டாங்கமாய விழுநது உன் காலைப் பிடித்து கெஞ்சிக் கேட்கிறேன். நான் முன உனககுச செய்ததாகெல்லாம மன்னிப்புக் கேட்கிறேன."

"போதும, போதும, கோாவீனு! முன்னமேயே எல்லாவற்றையும மன்னித்து மறநதுவிட்டதாக நான சொல்லவில்லையா? ஆனால ஒரு வார்த்தை கவனித்துக் கேள். இநத வீட்டுககுள நீ துராகிருதமாய் வநததற்கு நூறு சாட்சிகள் இருக்கிறாகள். ஆகையால இனி நீ இநத வீட்டில் கூடியவர்களைப்பற்றி விபரீதமாய்ப் பேசினுல் அல்லது இவாகளில் எவளாயாவது இதினிமித்தம நீ துன்பப்படுத்தினுல் உன்னை நாங்கள் உன் தகப்பன் முன் கொண்டுவந்துவிட்டுக் குற்றம சாட்டுவோம. நான் சொல்வது உனக்கு விளங்குதா."

இதற்கு கோர்வீனன் பரிதாபக்குரலோடு சொல்வான்!

"நன்றாய் விளங்குது. இனிமேல் என் உடலில் உயிருள்ள நாளளவும் இந்தப்பாழும வீட்டுக்கு வந்த விஷயத்தை

எந்தப் பிராணிக்கும சொல்லவேமாட்டேன். வேண்டுமோ னால் சத்தியமசெய்து..."

"போதும். உன் சததியம் எனக்கு வேண்டாம். நல்லதுவா என்னோடு" என்று அவன கையைப் பிடித்துக் கொண்டு வெளியே கூட்டிப்போனான். போகுமவழியில் நின்றவர்கள் கேட்ட கேள்விகளுககெல்லாம 'இவன் அநநியன் தெரியாமல வநதுவிட்டான்; வேறே விசேஷமில்லை' என்று சொல்லித் தலைவாசலிற் சேர்ந்தபினை அவன் கையை விட்டு அனுப்பும்போது பங்கிராஸ் சொல்வான்: "கோர்வீனு! நம்மிருவருடைய வழக்குத் தீர்நதுபோயிற்று; நீ கொடுத்த வார்த்தைபாட்டை மறநது போகாதே."

கோர்வீனன் அப்பா தப்பிப் பிழைத்தேனென்று பருத்துச்சரிந்த தன் பெருந தொநதியைத் தூக்கிக்கொண்டு எவ்வளவு துரிதமாய் ஓடக்கூடுமோ அவ்வளவு காலடி புட்டத்திறபடுமபடி ஓட்டமபிடித்தான.

இனிப்புல்வியுன போனவழியில் அவன்கதி இன்னதென்று சொல்லவேணடும. முன்நாமசொன்னறபோல் இவன் முன புறககதவின பக்கமபோக, அநநியா எவரும அநதப் பக்கத்தின கதவின் வழியாய வரமாடடாரகளென்பதால், அது திறநதுதானிருநதது. கதவினகிடட ௰௨-வயதுள்ள சிறு பெண காத்திருந்தாள். சமீபததில வேறெவருமில்லை. புலவியன் இவள்கிட்ட வநது, "அம்மா உன் பெயரென்ன? நீ யார்?" என்று கேட்க அவள்: "நான் அக்நேசி அம்மாள் வீட்டில் வளர்நது வருகிறவள். என் பெயர் எம் ரொன்சியானுள்." என்று சொல்ல, நீ கிறீஸ்துவளா என்ற கேள்விக்கு இசசிறுமி தன் கண்களை நன்றாய்த் திறநதுவிழித்துப்பார்த்து இல்லை என்று உள்ளதைச் சொன்னுள். இ

வள் தாய் அக்நேசியின் செவிலித்தாய். தாய் இறந்தபின் அக்நேசி இவளைத்தன் சகோதரியாய் வீட்டில் வளர்த்து வந்தாள். இவள் வந்து இரண்டு மூன்று நாள் மாத்திரஞ் சென்றதால் இன்னம ஞானஸ்நானம பெறவில்லை.

புல்வியன் தனியே என்ன செய்வதென்று அறியாமல் சுற்றுமற்றும பாரத்து நின்றுகொண்டிருந்தான். திரும்பி வீட்டுக்குப்போகவும மனமிலலை. இப்படி நிற்கையில் யாரோ வருங்காலடிச்சத்தங் காதில் விழுந்தது. அங்கு வருவது யார்? இவ்வீட்டின் பெருஞ் செல்வமெல்லாவற்றிற்குஞ் சுதந்தரக்காரியாகிய அக்நேசி அருணோதயமபோல் மலர்ந்து விரிந்த முகத்தோடு பிரகாசம வீசி புலவியன் ஏதோ சமாச்சாரஞ் சொல்ல வந்திருக்கலாமென்று எண்ணி அவன் கிட்டவந்தாள். வரவும புல்வியன் இனிய முகத்தை நீட்டி, மாய நட்புக்குறிகளைக் காட்டிச் சொல்வான்: "அக்நேசி செல்வமாதே! இஷ்டரும், மித்திரரும், இனத்தாரும், வழக்கமாய் வரும நேரத்துக்குமுந்தி நான் உங்கள் முகதரிசனையைக் கண்டுகளித்துப் போகலாமென்று இங்கு ஆவலோடு வந்தேன."

"எங்கள் வீட்டுக்கு எவரும் முகதரிசனைக்கு வருகிறதில்லை. நாங்களும் அவர்கள் வரும்படி தேடுவதுமில்லை"

"அப்படி சொல்லவேண்டாம். இவ்வீட்டின் செல்வங்களுக்கெல்லாஞ் சுதந்தரமுள்ள யௌவன சுந்தரி இருக்குமட்டும் பலபேர் வராமலிரார்கள்."

கள்ளம் கபடமற்ற அக்நேசி புல்வியன் குறித்துப்பேசுகிறவள் தான் என்று நினையாமல் தன் இருதயத்தின் பத்தாவான சேசுநாதனைத் தியானித்துச்சொல்வாள்:—

"ஓ! எங்கள் வீட்டிற்குச் சுதந்தரரான கர்த்தா எல்லார் மனதையும் கவர்ந்துகொள்ளும்படியான அன்பும் அரு

ளுங்-தயையும உள்ளவர். அவருடைய அதிசயவனப்பை சந்திர சூரிய நட்சேத்திரங்கள் வியந்து பார்த்து ஸ்துதிக்கின்றன. அவருக்குத்தான என் ஸ்நேகமும ஊழியமுஞ் சொந்தம."

அக்நேசி இவ்விதமாய் மோக்ஷ பரவசமானவள்போல் உள்ளத்தில் நிறைந்த தேவ சிநேகப்பற்றுதலால் மகிழ்ந்து பூரித்துச் சொன்ன வாக்கியங்களைப் புல்வியன் கேட்டு மதி மயங்கி சித்தந்தடுமாறி புற்றுப்போல சற்று நின்றான். ஆகிலும அக்நேசி பேரில தனக்குள்ள காதலைததிறந்து வெளியிட இது நல்ல சமயமென்றுங் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்வது யுக்தமென்றும எண்ணி கிட்ட நெருங்கி அக்நேசியைப் பாாத்து: "ஓ பெணகளின் ரத்னமே! உங்களைப்பற்றித்தான நான் இதுமட்டும பேசினேன. உங்களைப் பாாதத நாள்முதல் என மனதில சிநேக அக்கினி அகோரமாய் பற்றி எரிகின்றது."

என்று சொலலி முழங்கால்படியிட்டு அவள் கையைப்பிடிக்க முயன்றான். உடனே அக்நேசி நசசுநாகத்தைக் கண்டவள்போல உடல் நடுங்கி உள்ளம பதறி தன் முகத்தைத் திருப்பினாள்.

இச்சந்தர்ப்பத்தில் இரணவீரசூரன் சிபஸ்தியார் அக்நேசியைத் தேடி வநதவர் புல்வியனிருந்த நிலையைப்பார்த்தார். சிபஸ்தியாரைக் கண்ட மாத்திரம அக்நேசி: "சிபஸ்தியாரே! இநதக்கனவான் ஏதோ வழிதெரியாமல் வீட்டுக்குள் வந்துவிட்டார்போலும். அவர் வநதது போலவே வெளியில் போய்விடுவார். இவரைக் கோபிக்கவேண்டாம." என்று சொல்லி வீட்டுக்குள் போனாள்.

சிபஸ்தியார் புல்வியன் கிட்ட வந்து கோபமுகத்தோடு உறுக்கிப்பார்க்க, சிங்க ஏற்றைக்கண்ட நரிக்குட்டிபோல

அவன் கைகால் தளர்ந்து கண் சுருண்டு வாய்குளறி விட விடத்து நின்றான். சிபஸ்தியார் அவனைக் கேட்பார்:—

"புல்வியா! உனக்கு இங்கே என்னவேலை? ஏன் வந்தாய்?"

புல்வியன் சற்றுத்திடன்கொண்டு சொல்வான்:—

"இவ்வீட்டின் செல்வநாயகியை பாபியன் வீட்டில் நானும உம்மைப்போல் கண்டுபேசினபினபு அவள் வீட்டுக்கு மற்றவர்கள் வருவதுபோல் நானும ஏன் வரக்கூடாது?"

"வீட்டுக்கு வருவதென்றால் அதற்கு இது தக்கநேரமல்லவே?

"ஏன்? படையின் உத்தியோகஸ்தனான வாலிபன் ஒருவனுக்குத்தக்க நேரம், இராஜசேவையிலிருக்கும வாலிபனுக்குத்தகாதநேரமாமோ?" எனப்புல்வியன அகங்காரகர்வததோடு கேட்க, சிபஸ்தியார் தமமனதில பொங்கி எழும பிய கடுங் கோபததை அடககிச சொல்வார்:—

"புல்வியா! முனபின யோசனையின்றிப்பேசாதே. இருவா ஒரு வீட்டுக்கு வரப்போக இருநதாலும், இருவரும அவ்வீட்டுக்கு வெகு பாரதூர சமபநதமுள்ளவர்களாயிருக்கலாம். ஆனால் நீ எவ்வளவுதான் இவ்வீட்டின் சுதநதரககாரியுடன் பழகியிருநதாலுஞ் சற்று நேரத்துக்கு முன் நீ அவளிடங்காணபிதத துராகிருதமான செய்கை ஒருபோதுந் தகாது."

புல்வியன் சற்றுப் புன்சிரிப்புக்காட்டி நகைத்தாற் போல் பேசிச் சொல்வான்:—

"ஓ! ஓ! பராக்கிரம தளபதியே! நீர் பபியோலாவை மணம்புரியுமபடி வேணடிய முயற்சியாவுஞ் செய்திருப்பதாக ஊரில் பிரஸ்தாபம. அமமாது இப்போது தன்

கிராமத்திற்குப் போயிருப்பதால் அவள் தப்பினால் இவ்வீட்டுச் செல்வமாதைத் தப்பவிடக்கூடாதென்பதாய் நீ இங்கே வந்திருக்கிறீர்போலும். காரியம் அப்படியானால் என்னை இங்கே பார்ப்பது எதார்த்தத்தில் மனதுக்கு வருத்தமாய்த் தானிருக்கவேண்டும். வில்லின் நாண், ஒன்றுக்கு இரண்டிருப்பது உசிதந்தானே ஒன்றுதப்பினால் வேறொன்று உதவும்.''

புலவியன் சொன்ன இழிமொழி, கௌரவ நிறைந்த வீரசூரனின் மனதில் அம்புபோல பாய்ந்தது. தன் சுபாவ குணத்தை அறநெறி முறையில் அடக்கி, சாந்தம் அமைவுள்ள ஸ்திதிக்கு கொண்டுவந்திருந்ததால் பொங்கிக்கொதித்த தன் இரத்தத்தின் உக்கிரமத்தைத் தணித்து புலவியனைப்பார்த்துச் சொல்வார்:—

"புலவியா கேள், நாமிருவரும் இவ்விடந்தனியே நிற்பது யுக்தம் அன்று. அக்கேசி அம்மாள் மரியாதையுடன் போவென்று உனக்குச் சொன்னது போதாது. நானே அவள் கட்டளையை நிறைவேற்றப்போகிறேன் பார்''— என்று சொல்லி அவன் கையைப்பிடித்து கதவினாகிட்ட அவனை இழுத்து வந்தபின் அவனுக்குச்சொல்வார்:

"புலவியா! நல்லது போ. நீ இவ்வீட்டுக்குள் துராகிருதமாய்ப்பிரவேசித்தது தேசசட்டத்துக்கு விரோதமான பெருந்தப்பிதம். இது நிற்க, நீ யாதொன்றும் இந்நகரில் உனக்கு என்ன தொழில் என்றும் எனக்கு நன்றாய்த்தெரியும். இன்று இங்கே நீ பார்த்தவைகளைப்பற்றி எவரிடத்திலும் பேசாமல் இரகசியங் காப்பாற்றினால் தப்பினாய், இல்லாவிட்டால் தேசசட்டப்பிரகாரம் உன்னைத் தண்டனைக்கு இழுத்து வந்து விடுவேன். இது உன்மனதில் இருக்கட்டும். நல்லது போ.''

சிபஸ்தியார் இதைச் சொல்லவும் யாரோ ஒருவன் தன் பின்வந்து தன்னை இறுகக்கட்டிப்பிடிப்பதாகக் கண்டார். இப்படி நலியாமல் பூனைபோல வந்து புலிபோல் பாய்ந்தவன் எவுரோட்டஸ். புல்வியனுடைய சங்கதியாவும் இவன் அறிந்தவனாதலால் அவன் அன்று அகநேசி வீட்டுக்குக் கபடமாய் வந்தபோது தன் இனத்தானுக்கு ஏதும் மோசம் வருமோவென்று அஞ்சி அவன் பின்னாலே வந்தவன். கதவின் அருகில் சிபஸ்தியாருக்கும் புல்வியனுக்கும் நடந்த விவாதத்தைக் கண்டு சிபஸ்தியார் ஏதும் தீங்கு செய்வாரென்று பயந்து புல்வியனுக்குத் துணையாய்வந்து சிபஸ்தியாரைப் பிடித்தான். புல்வியனும் தனக்குச் சாபாய் வந்தவனோடு கூடி இரணவீரசூரனைப் பிடித்து மடக்கிக்கீழே தள்ளவேண்டுமென்று பிரயாசப்பட்டுப்பார்த்தார்கள். ஆனால் சிபஸ்தியார் மகா பராக்கிரம போர்வீரன். இவரைக் கீழே விழத்தாட்டுவது எவராலும் இயலுங்கருமமல்ல.

இதை அறிந்த எவுரோட்டஸ் தன் இடையில் மறைத்து வைத்திருந்த கட்டாரியை உருவி கையை ஓங்கி சிபஸ்தியாரைக் குத்தப்போகும்போது வேறொரு புஜபராக்கிரம வீரன் சடுதியில் தோன்றி இவன் கையிலிருந்த கட்டாரியைக் கண்ணிமைப் பொழுதில் பிடுங்கி இவனை அத்தாயமாய்த் தூக்கி மூன்று முறை பம்பரம்போல சுழற்றி அடுத்தாப்போலிருந்த தெருவின் மத்தியில் 'பொத்' என்று விழ ஒரு பந்தை எறிவதுபோல எறிந்தான்.

இவ்வித திடகாத்திர சௌரிய வீரன், இராக்ஷஸ பிறப்போ ஏதோவென்று வியக்குமாறு மகா பராக்கிரமம் உள்ளவன், பெயர் குவாத்ராத்கஸ். பட்டாளத்து உத்தியோகஸ்தன். சிபஸ்தியாரின் பிரிய நண்பன். தேவாதீனமாய் அந்தச்சமயத்தில் வீட்டுக்கு வாதவன் சிபஸ்தியாருக்கு வர

இருந்த ஆபத்தை தக்க சமயத்தில் தடுத்து அவனை இரக்ஷித்தான்.

அகநேசி வீட்டுக்குள் கபடாய் நுழைந்த நரியும் கோ நாயும் அவமானமும் வெட்கமும் அடைந்து வாலைக் குழைத்து வந்தவழியே தத்தம் வீட்டுக்குப்போய் சேர்ந்தார்கள். இருவரும் பலமுறை கூடிச் சந்தித்தாலும் இன்று தங்களுக்கு நடந்த சங்கதிகளைப்பற்றி ஒருவனொருவனைக் கேட்டது மில்லை. ஒருவனொருவனோடு பேசினதுமில்லை. போன இருவரும் அடாதது செய்பவன படாதது படுவான் என்ற பழமொழிக்கு உதாரணமானார்கள்.

---

## ௰௩-ம். அதிகாரம்.

### கிராம வனப்பும் வளமையும்.

---

இத்தாலியா நாட்டில் ஒக்டோபர்மாதம் மற்றெந்த மாதத்திலுந் தேஜோமயமாய்த் துலங்குமாதம். சூரியனுடைய உஷ்ண காங்கை குறைந்தாலும் அதின் பிரகாச ஒளி குன்றாது. காலையில் உதயமாகி உதிக்குங்கால் தனது செங்கதிர் கிரணங்களை நாற்றிசையிலுஞ் சரமாரியாய்ப் பொழிந்து சகல ஜீவகோடிகளை ஆழ்ந்த நித்திரையினின்று எழுப்பும், குபேர சம்பத்துள்ள மகுடாதிபதி முடி சூடிய பின் தன் கொலுமண்டபத்தில் பிரவேசிக்குஞ் சுப காலில் அங்கு கூடியிருப்பவர்களுக்கு முத்துரத்னங்களை வாரி இறைத்து தானஞ் செய்வதுபோல ஆதித்தனும் ஒளி நிறைந்த கதிர்மணிகளை எங்கும் பரப்பி புல்மேல் விழுந்த பனித்துளிகளை முத்துக்களாய் மாற்றி உயிர்களையெல்லாம் சந்தோஷிப்பிக்கும். மலைகளின் உச்சிகள் பொன்

முடி சூட்டினறபோல தகதகவெனறு ஜொலிககும. நதி களின ஜலம பொன தகட்டிலே வயிரக கோலமிட்டாற் போல பிரகாசிககும.

இவ்வித பிரகாச வடிவோடு சோ மேலூாநத சூரியன வான மணடல மாாககமாய பவனி செனறபின, மேறறிசைக கடலில, உருககி வாாதத பொனமயமான மஞசததில அயாநது நிததிரை செயயபபோக அமமஞசததின மேற கட்டியாக விசோஷ அலங்காா வடிவுளள மேககக்கூட்டஙகள பலவகை வாணஙகளால சிததிா கோலமிட்டாபபோற் தோன்றும. மரஙகளின இலைகளும தளிாகளும துளிாதது எங்கும பசுமையாயிருககும. குளிாநத தெனறல புஷ்பங களின சுகநத பரிமள வாசனையை நிறைய உணடு எங்கும உலாவி கம கமவெனறு நறுமணம மணககச செயயும பல வாணப் பக்ஷிகள பூஞ்சோலைகளின கிளைகளிலிருநது இனிய சுரலோடு காதகீதஙகள பாடிககளிக்கும. மலைகளி லிருநது துள்ளிககுதிதது வரும நதிகள கல கலவெனறு சபதிதது எஙகும செழிபபும செலவமும பரவசசெயய, வரும வழியில பின வருமாறு பாடிககொணடு ஓடிவரும

ஓடிவரும நதி பாடும பாசுரம

1. பன்னூல்வெனும் பரும்வெற்பினில பதியாயககுடி இருநதேன்
பொன்றூவிய மலைவிட்டிதோ புதிதாகநான இறஙகித
தன் தூய்மையைத தரும் நீரவளம் தரவேஎனை விரைவில
மின் றூய்மையோ டொளிாபாபியன் விளிததே வரவழைத் [தான்

2. காடும்மலைக கரடும்பல கடும்பாதைகள கடந்தேன்
நாடும் பல நகரும் விரி நறும் பூவன நலமும்
வீடும்எலாம் விட்டேவெகு விரைவாய் வழிகடந்தே
நீடுந்தயை நிறைபாபியன் நிலநோக்கியே நடந்தேன்.

3. எங்கும்என்னைத் தேடாமலும் எதிர்பார்த்திடாப் போதும்
உங்கட்கெல்லாம் உணவாககவே ஊற்றின்ஜல மெடுத்து
பொங்குந்தயை புகழ்வாழவும் புதிதாய்போல யாவுந்
தங்கும்படி தனதாகவே ஜலங்கொண்டுநான் வந்தேன்.
4. வேண்டும்அள வெடுத்தேகவே விரைந்தேவரு வீரோ
மீண்டுங்குறை வில்லாமலே வெகுவாய்தினங் கொடுப்பேன்
ஈண்டென்குணம் என்றும்நிலை இருக்கும்இது நிசமே
ஆண்டும்பல சென்றாயினும் அமிர்தம்இது அறிவீர.

இவ்வித சிறப்பு வனப்பு பெறற கிராமததிற்கு பபி யோலா நாம் முன் சொல்லியவாறு வநதிருநதாள். இவளிருநத வீடு மலையின் சார்பில் வெகு வசதியான இடத்தில் கட்டப்பட்டிருநதது. இவ்வீட்டின் மேன்மாடியிலிருநது எதிரிலிருந்த சமுததிரத்தையும அதில் அமஸபட்சிகள் சிறகை விரித்துப் பறநதாற்போல் சதா பாய் விரித்தோடுங் கப்பல்களையும் பாாக்கலாம. பபியோலா இவ்வீட்டிறகு வருஷந்தோறும் இக்காலத்தில் வந்து சிலநாள தங்கியிருப்பாள். அவள் வரும்போது வாசிப்பதற்கேறற சாஸ்திர நூற்களும விநோத விர்த்தாநதங்களும பலகொணடுவநது உததியான வனத்தின் ஒருபக்கத்தில் படாநது வளருங் கொடிப்பூஞ்செடிகளாலாய சௌகரிய இடததில உல்லாசமாய்ச சாய்நது கிரநதங்களை ஒவ்வொன்றாய் இஷ்டமபோல் எடுத்து வாசிப்பாள். ஆனால் இநதமுறை இவளுடன்கூட இருந்தவள் ஸீரோ ஒரு வேலைககாரி. அவளும ஓா அடிமை.

முன் நாம சொல்லியவாறு அகநேசி தன் வீட்டின்வேலைக்குச் சீராவைக் கூட்டிப்போக ஏற்பாடெல்லாஞ் செய்த பின்னும் சீரா பபியோலாவின் வீட்டை விட்டுவரச சம்மதியாததை இச்செலவமாது கேட்டபோது மிக அதிசயப்பட்டாள். அதிலும அவள் அப்படி வர மனமிலலாததின்காரணமேதென்று அறிநதபோது அதிக ஆச்சரியங் கொண

டாள். இவ்விதம் தன்னுடன் இருக்க சீரா பிரீதிகாட்ட தான் ஏதும அவளுக்கு பட்சங்காட்டினதுமில்லை; தான் வியாதியாயிருந்த காலத்தில் தனக்கு அவள செய்த பேருதவிக்கு நன்றிகாட்டினதுமில்லை. அடிமைகள் சில சமையம தங்கள் செல்வ நாயகியின ஊழியத்தில் பிரமாணிக்கம காண்பித்ததாக கதைகளில் வாசித்திருநதாள். கண்ணுல் இதுமட்டுமே கண்டதில்லை. வீண பெருமைக்காக இவ்விதம சீரா நடிக்கிறுளோ எனறு சோதித்தாலோ அவள் தன் அலுவலை எதார்ததமாய் வெகு ஜாக்கிறதை கிரமததுடன் செயதுவநதாளே அனறி மாயங்காட்டி வேஷம போட்டதர்க அடையாளம் ஒனறும தோன்றவில்லை. இது முதல் பபியோலா தன அடிமையை சிநேகிப்பது தகுதியென்றும், மாறுதவி தேடாத பேருதவி செயவது மானிடரால் கூடுமெனறும நிசசயித்துக்கொண்டாள்.

இருவருக்கு முன நடநத வாக்குவாதத்தின் பின் பல சமயங்களில் சீராவுடன் கலநது பேசும்போது இவள் சாஸ்திர கலைக்கியானம கறறவளென்றும, நாகரீக மேன்மையிற் சிறந்தவளென்றும், கிரீக, லத்தீன், பாஷைகளைத் தீர்க்க அறிநதவளென்றும வெளியானது. இது முதல் பபியோலா சீராவுக்கு உயர்நத அலுவல் கொடுத்து தன காரியதர்சியாகவும கிரந்த நூற்களைத் தனக்கு வாசிப்பவளாகவும் தெரிநதுகொண்டாள். எவ்வளவு மேன்மையுள்ள அலுவலை இவளுக்குக் கொடுததாலும் சீரா அகங்காரம் ஆணுவமினறி தான் முன் செய்துவநத தாழ்நத அலுவலையே கூடுமானபோதெல்லாம் செய்துவருவாள.

பபியோலா வாடிக்கையாய் வாசித்துவரும கிரநதங்கள் வெகு நுட்பமான பொருள்கள் அடங்கிய சாஸ்திர நூற்கள். இவைகளைச் சீரா வாசிக்கும்போது இவைக

ளில். இருக்கும் அபத்தங்களை தெளிவாய் இரண்டொரு வார்த்தையில் எடுத்துக் காண்பிப்பாள். அல்லது அதி லும் அதி உன்னத நல்லொழுக்க படிப்பினை ஒன்றை விவ ரிப்பாள். இவையாவுஞ் சீரா வருத்தம பிரயாசையின்றி தனக்கு இயல்பாய் வருவதுபோலச் சொல்லுவாள். இவள் மனதில் ஏதோ ஓர்வகை தவராயுக்தி இருந்து இவள் மனம் மெய்வாக்கு எல்லாவற்றையுஞ் சீரான நிலையில் நிறுத் திவருவதாய் பபியோலாவுக்குத் தோன்றினது. இவ்வித அந்தரங்க யுக்தி இன்னதென்றறிய எவ்வளவு வருந்தியு லும் அவளாற் சாதிக்கப்படவில்லை. சாவேசுரன் தமக்கு ஊழியஞ்செய்கிறவர்களுக்குக் கொடுக்கும் தேவ ஞான அறி வு உலகத்திலுள்ள எவ்வித சாஸ்திரியின அறிவிலுஞ் சிறந் ததென்பது அஞ்ஞான இருளில் அமிழுந்தியிருந்த பபியோ லாவுக்கு எவ்வாறு தெரியும்?

ஒருநாள் இருவரும் உத்தியானவனத்தின் பூப்பந்தலில் உட்கார்ந்திருக்க சீரா மனோதத்துவலக்ஷண சாஸ்திர நூல ஒன்றை வாசித்துக்கொண்டிருந்தாள். அது கண்டுபிடிக்க அரிதாயிருந்ததால் பபியோலா சலிப்படைந்து விநோத கதைகள் அடங்கிய வேறொரு புஸ்தகத்தை எடுத்து வாசிக் கக் கொடுத்தாள். சீரா அதைத் திறந்து பார்த்தவுடனே புஸ்தகம் இப்பேர்ப்பட்டதென்று தெரிந்துகொண்டு செல் வ மாதைப்பார்த்துச் சொல்வாள்:

"அம்மா! அசுசியான விஷயங்கள் நிறைந்த இப்புஸ்த கத்தை வாசிக்கவேண்டாம. இதை வாசிப்பது எனக்கும் நல்லதல்ல, உங்களுக்கும் யோக்கியமல்ல.

இதைக்கேட்டு பபியோலா மிக அதிசயப்பட்டாள். தான் வாசிக்கும் கிரந்தங்களில் இது தக்கது, அது தகா தென்று இதுதான் முதல்விசை வித்தியாசங் காட்டின

தைக் கேட்டாள். அஞ்ஞான உரோமானர் இக்காலத்து அ ஞ்ஞானிகளைப்போலவே யோக்கியாயோக்கியம, இதாகிதம பாராமல் கையில் எந்தப் புஸ்தகம் வந்தாலும அதை வா சிப்பார்கள். அவலக்ஷண சித்திரப் படங்களைத் தங்கள் கோவில்களிலே எழுதியும, அசங்கியமான சிலைகளைச் சமை த்தும், துன்மார்க்க வேசிகளைத் தம தேவர்களின் தாசிக ளாக ஏற்படுத்தியும வருகிறவர்கள் வாசிக்குங் கிரந்தங்க ளில் யோக்கியம அயோக்கியம் பார்ப்பார்களா ?

இவ்விதக்கோட்பாடுள்ள அஞ்ஞானத்தில் பபியோலா பிறந்து வளர்ந்தவளாதலால் சீராவுக்கு புன்சிரிப்புடன் பின் வருமாறு மறுமொழி சொல்வாள்:

"சீரா ! 'இது கெட்ட புஸ்தகந்தான். ஆனல் இதை வாசிப்பதால் உனக்காவது எனக்காவது என்ன தீங்கு நே ரிடக்கூடும ? அசங்கிய சங்கதிகளை நாம வாசித்தால் அதைச் செய்யப்போவதில்லையே. பிறர் இவைகளைச் செய் தார்களென்று அறிவது நமக்கு தமாஷாயிருக்கும."

"அமமா! நீங்கள் வாசிக்கும அசங்கிய செய்கைகளை என்ன காரண நிமித்தமாயினுஞ் செய்வீர்களா ?"

"நானு ? சீ! ஒருபோதும செய்யேன்."

"ஆகிலும நீங்கள் இவைகளைக் கவனமாய் வாசிக்கை யில் அவைகளின் ரூபம உங்கள் மனதில்ப் பதியும். பதிந்த ரூபத்தை நீங்கள் உற்றுப் பார்ப்பீர்கள். பார்த்தால் மன தில் சந்தோஷம் பிறக்கும்."

"பார்த்து சந்தோஷப்பட்டால் என்ன ?"

"மனதில் பதிந்த அந்த ரூபம் அவலக்ஷணம். அதி னல் மனதில் கொண்ட சந்தோஷம் பாவம்."

"பாவமா ? எப்படிப் பாவம் ? பாவமாகும்படி செய் கை அவசியமல்லவா ?"

" அவசியந்தான். ஆனால் நினைவு மனதின் செய்கை அல்லவா? ஒருவனைக் கொல்லும்படி மனதிலுண்டாகுந் துர் ஆசை அம்மனதின் செய்கை. மனதைப்போல் அதின் செய்கையும் கண்ணுக்குத் தோன்றாது. கொல்லும்படி கையை ஓங்கி அடிப்பது சரீர செய்கையாதலால் சரீரத்தைப்போல் கண்ணால் காணக்கூடியது. ஆனால் இவ்விரு வகை செய்கைகளில் எது முந்நகாரணமாயிருந்து கற்பித்துத் தூண்டுவது? எது பணிந்து செய்வது? எது கொலையான செய்கைக்கு உத்தரவாதி?"

" ஓ! ஓ! வெளியில் தோன்றுஞ் செய்கையைப்போல் மனதுக்குள்ளும் ஓர் செய்கை உண்டென்றல்லவோ சொல்லுகிறாய். நல்லது, இச்செய்கைக்கு யாரோ உத்தரவாதி என்றாயே யாருக்கு உத்தரவாதி? வெளியில் தோன்றுஞ் செய்கையானால் சாக்காருக்காவது, ஜனசமூக வாழ்க்கைக்காவது, நீதி பிரமாணத்துக்காவது, உத்தரவாதியாகலாம். மனதின் கிரிகையானால் யார் இதை அறிவார்? யாருக்கு உத்தரவாதி? யார் இதை விசாரித்துத் தண்டிக்க வல்லவா?"

"யாரென்று கேட்கிறீர்கள்? அம்மா! அவர் சர்வேசுரன்."

பபியோலா தான் கேட்ட கேள்விக்கு ஏதோ ஒரு நூதனமான அபிப்பிராய கோட்பாட்டை சிரா சொல்வாளென்று எண்ணியிருந்தாள். சிரா சொன்ன வெகு சாதாரணமான மறுமொழியால் அவள் சித்தம் சலனப்பட அதன்பின் சொல்வாள்:—

" சிரா! நீ கூடவர் ஜூப்பித்தர், ஜூனோ, வீனஸ், பாக்கஸ், என்ற கொடிய துஷ்டரை கும்பிடுகிறாய்? நமது

உரோமானர் தேவர்களாக வணங்கும் அநந்தங்கோடி தேவர்கள், திருடரும், காமாதுரருமான பரமசண்டாளர். இப்பேர்ப்பட்டவர்களுக்கா நாம் உத்தரவாதி? ''

" அம்மா ! செலவமாதே ! இந்தப்பரமதுஷ்டரையா தேவர்களென்று குமபிடுகிறது? எந்த மனிதனுக்கும் இருக்கவேண்டிய யோக்கியதையும் அற்றவர்கள். செய்யாதகொடுமைகளெல்லாம் இவர்கள் வெட்கமின்றிச் செய்தவர்கள். இவர்கள் புராணங்கள் சிற்றின்பலீலைகள். இந்தத் தேவர்களைப்பற்றி நான் பேசவில்லை. ஒரே மெய்க்கடவுளைப்பற்றி நான் பேசினேன்."

" அவருக்கு உன் மதப்பிரகாரம் பெயரென்ன ?

" அம்மா ! அவர் சர்வேசுரன். சர்வேசுரனென்றால் சர்வத்துக்கும் அதிபதி காத்தன். இது அவருடைய சுபாவ இலக்ஷணங்களில் ஒன்று."

" இலக்ஷணங்களென்றுயே அவைகள் எவை ?

"சர்வேசுரன் ஒளியைப்போல் பகுக்கப்படாத சுபாவமுள்ளவர். தனிமுதற்கடவுள். எங்கும் பிரசன்னமாயிருப்பவர். எப்பொருளிருந்தாலும் மாசு குறைபடாமல் நிற்பவர். சர்வ வியாபி. எநதப் பொருளும் உண்டாகுமுன் இருந்தவர். ஆதியுந துவக்கமுமற்றவர். எல்லாப்பொருளும் அழிந்து போனபினனும அவர் அழியாமல் ஒரே நிலையாய் நிற்பவர். அளவற்ற வல்லமை, வரமபிலா ஞானம், கரைகாணாத கிருபாகடாக்ஷம, அன்பு, நீதி, அருள் முதலிய இலக்ஷணங்கள் அவரிடத்தில் அளவு எல்லை எல்லாங்கடந்து சமபூரணமாய் நிறைநதிருக்கின்றன. அவர் ஒன்றுமில்லாதிருக்க ஒன்றை சிருஷ்டிப்பவர். சிருஷ்டித்தவைகளைக் காப்பாற்றுபவர் அல்லது இஷ்டமானால் அழிப்பவர்.

சுயம்பூ அநாதி அசரீரீ
சமஸ்த சுரூப லக்ஷித்தா
அக்கிரசர்வ வியாப்பித்தா
மூலம சாவகிமித்தா நம.

என்பது சர்வேசுரனுடைய இலக்ஷணங்களைச் சுருக்கிக்காட்டு மூத்தோர்வாக்கியம்.''

சீரா தேவ இலக்ஷணங்களை இவ்விதம எடுத்து விவரிக்கும்போது அவள்முகம காநதிவீச, கண்கள் மணிபோல் விளங்க, தேகம் அசைவற்று நிறக, வீணைவாய்க் தரலோடு இனியமொழிகளைத் தேனமாரி பொழிநதாற்போல் சொரிவதைப் பபியோலா கண்டு தான் கிரநதங்களிற் பலமுறைவாசித்திருநத தேவலோகப் பரவசம இதுதானோவென்று தனக்குள் சிநதித்துக் கொண்டாள். இவ்வித மோக்ஷானந்த பரவசஸ்திதியிலே பலமுறை அக்நேசி நிற்பதைப் பார்த்திருநதாள். இதின் காரணம் இன்னதென்று அவளுக்குத் தோன்றவில்லை. சற்றுநேரஞ் சென்றபின் பபியோலா கேட்பாள்:—

"சீரா! நீ விவரித்துக்காட்டிய அநந்த ஞானசுரூபமுள்ள சர்வேசுரன் தம்மில் சகல பாக்கிய சந்தோஷமுள்ளவராயிருக்கவேண்டும். அப்படியானல் கோடானகோடி மனிதருடைய செய்கைகளையும், நினைவுகளையுங் கவனித்துப் பார்ப்பாரென்று சொல்வது ஞாயமா?''

"அம்மா கவனிப்பாரென்றால் அது அவருக்கோர் வேலையென்று அர்த்தம? அப்படியல்ல. நான் அவர் ஒளிக்குச் சமானமென்றேன் அல்லவா? சூரியன் தன் கிரணங்களை இநத ஊற்று ஜலத்தின் அடியிலிருககும் மணல்மட்டும அநுப்புவது அதற்குப் பிரயாசையாமோ? இதோ பாருங்கள். இந்தக்கிரணங்கள் பாய்நதமாத்திரம் அடியிலிருக்

கும மண்ணும மணலும செத்தையுங் குப்பையும எலலாம் வெட்ட வெளியாயத தோன்றுகினறன. இதிலிருககும பொன் நிறமுளள மீனகள் மாததிரமலல, மூலே முடுககுகளில மறைநது ஒளிநதிருக்கும அவலெக்ஷணமுள்ள கிருமிகளும வெளியாகின்றன. இவையெல்லாஞ் செயவதில சூரியனு க்குச் சிரமமுணடா? தனது தெளிநத கிரணஙகளை உள்ளே அடிமட்டும அனுபபாமல தடுப்பதெனறல் அதுதான சூரியனுககுப் பிரயாசையாகும. இநத ஒரு சுனேயிலே சூரியன் செயவதை இதறகடுதத சுனேயிலும இதைப்போல இன்னம பதினுயிரங்கோடி சுனேகளிலும அதே நிமிஷத்தில் அறபவருததமும பிரயாசையுமின்றி செய்துவருகினறது. இச்சுனேகள் எவவளவுதான கோடிக்கணககாய இனனம பெருகினுலும, அகனறு விரிநதாலும, இவைகளெலலாவற்றிற்கும போதுமான கிரணங்கள சூரியனிடமுணடோவென்றும, உளளே மறைநதிருககும எவவஸ்துககளையுந துலககிக்காட்ட அக்கிரணங்களால சாத்தியபபடுமோ வென்றும, சநதேகம நமககுத தோனறவேமாட்டாது."

"சீரா! நீ சொலவதெலலாம வெகு நோத்தியாகவும் விநோதமாகவுந தோனறுகின்றது. இவைகள் சத்தியமாகவும் இருக்கவெணடும. ஆனல் இவை சத்தியமானல் எவவளவு பயமும் அச்சமும மனதில் உண்டாக்க ஏதுவானவைகள். அடி அமமா! எங்கும பிரசனனமாயிருநது எல்லாவற்றையு மறைவின்றித் துலககமாய அறியுஞ்சாவேசுரன் ஒருவரிருந்தால் நாம் எநதக்காலததிலும, இடததிலுந், தனியே ஒருபோதும இருப்பதில்லே அல்லவா? நமது மனதிலுண்டாகும அறபஆசை, அகங்காரமான நினேவு, எல்லாவற்றையுமு அவர் அறிவாரோ. நீ சொல்வது மெய்யானல் இவ்வித அதி உன்னத மகத்துவகாத்தனின் கண்முன் நாம் எங்கே

போனாலும் நிற்கினறேனென்கிற நினைவானது பயம உண்டாக்காதா? இதை ஊன்றிக் கடைப்பிடித்து கவனிப்பவர்கள் பயந்து வெருண்டு, நடுங்கி, அப்பா! உயிரோடிருப்பது பெருந்துன்பமென்று தற்கொலை செய்யமாட்டார்களா?"

இப்படி பபியோலா பேசும்போது அவள் கணகள் இரண்டும் திரண்டு சுருண்டு மயங்கி நின்றன. அகங்காரங்காவ நிறைந்த அவள் மனம் புசலால எழும்பிய அலைகள்மோதுங் கடல போல் கலங்கிப்பொங்கி கொந்தளித்திருந்தது. தன் அந்தரங்கத்தில் உண்டாகும ஆசை, பறறுதல, நினைவுகளை அறிந்து அவைகளை அடக்கவலலவரானவா ஒருவா உண்டென்பதை அவள் நினைகக நினைக்க அவள மனம புண்ணாய் வெந்து நைந்தது. ஆகிலும " சீரா சொலவது ஏதாாதத மல்லவா ? " என்றநினைவு கலங்கிய அவள மனதில, இரா வினிருளில பளிசசென்று மின்னும மின்னலைபபோல, அடிக்கடி தோன்றினது. கடைசியில தானினும் பெரியவரும, தனககு அதிபதி காத்தனாயிருப்பவரும, தன் ஸ்நேகத்துக்கே சிலவிசை உரியவருமான ஒருவா இருககிறாரென்று பபியோலா முதலவிசை தன மனதில சாா உணாந்துவககினாள். தன புத்தியை அவா சமுகமுன தாழ்ததி அவரை முதல்விசை வணங்கி அவா தன எஜமான என்றும கர்த்தா என்றும அங்கீகரிததாள்.

சீரா தன் செலவ நாயகியின சமீபத்தில் நின்று அவள் மனதில் உண்டாகும இவ்வித யுத்ததகதை அறிந்து அது அநுகூலமாய் முடியும்படி சாவேசுரனை வெகு பகதி சிரத்தையுடன் பிராாத்தித்தாள்.

தியானயோகததில் தலை குனிந்திருந்த பபியோலா தன் தலையை உயாததி தயவு அன்போடு சொல்வாள்:

"சீரா! நீ அறிந்திருக்கும் ஞானம அவ்வளவையும் எனக்கு நீ இன்னஞ் சொல்லித்தரவில்லை. இதிலும் அதிகம் உனக்குத் தெரியவேண்டும். இன்று புதிய உலகமொன்றை எனக்குத் திறந்து காட்டினுய். இதுமட்டும நான் அறியாத ஓர் புது ஜீவியத்தை எனக்கு வெளியிட்டாய். நமக்கு மேலாய் அநந்த ஞான சுரூபியான கர்த்தன் ஒருவர் இருக்கிறுர். அவர் நாம செய்யும யாவற்றையும பார்த்து அறிந்து நம செய்கைக்குத் தக்கதுபோல் சமமானமோ தண்டனையோ விதிப்பார். நமது மனதிலுண்டாம அந்தரங்க நினைவுகளெல்லாம அவருக்குப்பட்டப்பகல் போல் தெளிவாயிருக்கின்றன. நாம பூமியின் எததிசையிலே போனுலும இவர் நம்மோடுகூட இருக்கிறுர். இவரைச் சிந்தித்து இவருக்காக ஜீவிப்பது நமக்கு மகிமையும பெருமையும கடமையுமாகும. இவரை மறந்து வேறெதையுஞ் செய்வது அக்கிரமும் அநியாயமும அவகேடுமாகும. இது அல்லவா உன் மதசித்தாந்தபடிப்பினை."

"ஓ! பெண்களின் ரத்னமே! நான் என் புன்மொழியால் அறைகுறையாய்ச் சொல்லிய சத்தியத்தை நீங்கள் எவ்வளவோ தெளிவான மொழிகளால் நன்ருய் விவரித்திருக்கின்றீர்கள்."

"சீரா! நீ இதுவரையில் முகஸ்துதி கூறி என்னை நயந்ததில்லை. இனிமேலும அப்படிக் கூருதே. இன்று நீ படிப்பித்த ஞானம இதுமட்டும நான் கண்டுபிடியாத அநேக விஷயங்களை விளக்கிக் காட்டுகின்றது. உன்மதகோட்பாட்டில் அடிமையென்றும மகிஷி என்றும வித்தியாசமில்லை என, நீ இந்த ஞாயத்தை உபதேசித்தல்லவா அன்று சொன்னுய்? நீ சொல்வதும் ஞாயந்தான். எங்கும் வியாபித்திருக்கும் அதி உன்னத கர்த்தன் முன் மானிடர் யாவரும், யார்

எவராயினும் இயல்பில் சமமான நிலையிலுள்ளவர்கள். அவரவர் செய்யும் புண்ணிய தாம மேன்மையே ஒருவருக் கொருவர் தாரதம்மியம் உண்டாக்கும். அன்று நீ எனக்கு இதைச் சொல்லும்போது இது நிஷ்காரணமாக எனக்குத் தோன்றினது. அதினாலேதான் என் மனதிலெழுந்த கடுங் கோபத்தை அடக்கமாட்டாமல் உன்னை..."

"அம்மா! தாயே! கடந்த விஷயத்தை எடுத்துப் பேசவேண்டாம்."

"சீரா! நான் செய்த கொடுமையை மன்னித்தாயா"- என்று பயியோலா சீராவின் கையை முதல் விசை பிடித்து கண்ணீர் முத்து முத்தாய் உருத்து அவளைக்கட்டி அழுதாள். தன் மனதிலெழும்பிய பற்றுதலைச் சிந்திய கண்ணீரால் ஆறறித்தணித்த பின்பு சீராவைப் பார்த்துக் கேட்பாள்:—

"சீரா! நீ எனக்கு விளக்கிகாட்டிய அதி உந்த சர்வேசுரனை நாம வணங்கி ஸ்துதிக்கலாமா? அவர் உந்த மகத்துவமுள்ளவரானதால் அற்ப மனிதராகிய நமது ஊழியம் அவருக்குத் தேவையா?

"ஓ! அப்படிச் சொல்லாதேயுங்கள், செல்வமாதரசே! அவர் நமக்குத் தூரத்திலிருக்கிறாரென்று எண்ண வேண்டாம். சூரியனுடைய பிரகாசம் எப்படி நம்மைச் சூழ்ந்திருக்கின்றதோ அப்படியே அவர் தயையும் அன்பும் ஞானமும் நம்மைச் சூழ்ந்து நமக்கு என்றும் ஆதாரமாகவும் உயிராகவும் இருக்கின்றன. அவரில் நாம ஜீவித்து அவரால் உயிர்வாழ்ந்து வருகின்றோம். ஆனதால் அவரோடு பேசினால் தூரத்திலிருப்பவரோடு பேசுவதுபோலல்ல. நமது சமீபத்திலிருந்து நம்மைத் தாங்கி அணைத்துக் காப்பாற்றுந் தந்தையோடு பேசுவதுபோலாகும். நாம் சொல்லும்மொழி

கள் அவர் காதிலல்ல, அவா நெஞ்சிலேயே போய் விழு கின்றன."

"ஆனல் இவ்வளவு மகத்வமேன்மையுள்ள அதிபதி கர்த்தனுககுத்தகுந்த வணககம ஆராதனையாக ஏதேனும பலி ஒப்புககொடுககக்கூடாதா? பலியே சகல ஆராதனை களிலும அதி உத்தமமெனபாாகள"

சீரா இதைககேட்டு, திருசசபையில வழங்கி வரும் தேவ பூஜைபலியை அஞ்ஞானிகளுககு சொல்லிக்காட்டுவது அக்கால வழககமல்லாததால, சறறுயோசிததபினபு "அம மா நீங்கள் சொலவது மெயதான. அப்படிப்பட்ட ஓாபலி உண்டு" எனறு பொதுவாயசசொன்னுள்.

"அப்படியானல் நான் இவ்விதபலியை ஒபபுக்கொடு த்து சாவேசுரனை ஆராதிககலாகாதா?"

"அமமா! உங்களால, இபபோக்கூடாது. பலி என்ருல் அது அதி உநநத சாவேசுரனுககுத் தகுதியும யோக்கியமுமான சிறநத பலியாயிருககவேணடும."

"அதுவும வாஸ்தவம. நமது உரோமானர் செய்வது போல் ஜுப்பிததர் எனருல் ஒருகிடாய் வெட்டலாம். பா க்கஸ் என்ருல் ஒரு சாவல அறுககலாம. ருதரன் எனருல அசுவமேதஞ் செய்யலாம. ஆனல் நீ எனககு விளக்கிக் காட்டிய சகல இலக்ஷணசுரூபியான சாவலோக கர்த்தனுக் குத் தகுநததான ஓா உநநதபலிவேணடும."

"அமமா! அப்பேர்ப்பட்ட அதி உநநத பலி அதி உநநத சாவேசுரனுககு இருக்கின்றது. எவ்வகையிலும அவருக்கு யோககியமான பலி."

"அது எனன பலி சீரா?"

"அமமா! அவர்தான் அநதப் பலி."

பபியோலா இதைக் கேட்டவுடன் தன் முகத்தைக் கையால் மறைத்துச் சொல்வாள்:

"சீரா! நீ இவ்வளவுதூரம தெளிவாய உன் மதக் கோட்பாட்டை எனக்குச் சொல்லித்தந்த பின்பு இப்போது நீ கடைசியில் சொன்னதுமாத்திரம நான கண்டுபிடிக்க அரி தாயிருக்கின்றது. இதின அர்த்தம இன்னதென்று தெளி வாய்ச் சொல்லமாட்டாயா?"

"அம்மா! நான் சொன்ன வாக்கியத்துக்குப் பூரண அர்த்தமுண்டு. இது பரம சத்தியம. ஆனால் இதை விவ ரித்து உங்களுக்குச் சொல்ல இது தக்க சமயம அன்று. இன்னம போகப்போக அறிவீர்கள்."

"மெய்தான். நான இதுமட்டும் அறிந்த சத்தியங்க ளைப்பற்றிச் சற்று மனதில் சிந்தித்து யோசித்துப் பார்க்க வேண்டும. இவ்வளவு இன்று போதும."

## ௰௬-ம். அதிகாரம்.

### குரோமாசியன் கிராமம்.

பபியோலாவுஞ் சீராவும முன கூறியதுபோல் கலந்து பேசியபின்பு பபியோலா தன் அறைக்குள் போய் தான கேட்ட விஷயங்களைப்பற்றி யோசிக்கையில் அவள் மனம பாசிபோல் நிலையின்றித தளம்பி சலனப்பட்டிருந்தது. அறநெறி ஒழுக்க மார்க்கத்தை தான் அன்று முதல்விசை அறிந்ததாகவும் இதில் இனிக் கவலையின்றி நடந்து திருப்தி கரம் அடையலாமென்றும ஒருபக்கத்தில் நினைத்தால், வே றுபக்கத்தில இவ்வித நல்லொழுக்கத்தில் பிசகாமல் என் றும் நடப்பது மகா கஷ்டமானதென்றும் தனக்கே வலு வந்தஞ்செய்து ஐம்புலன்களை அடக்கித் தன் சத்துருக்க

ளுடன யுத்தந தொடுத்து என்றும் ஜாக்கிரதையாயிருப்பது அத்தியாவசியமென்றும யோசிக்கும்போது பபியோலா அவதைரியமடைந்து மனஞ் சோமபினாள்.

தன மனதின் சோரவை மாறறும்படியாய், தனக்கு வெகு இஷ்டமுள்ள மாஜீ நகராதிகாரி குரோமாசியன கிராமத்துக்கு வந்திருப்பதை அறிந்து அவரைப் போய் பாாத்து வரலாமென்று உததேசிததாள். முந்திய அதிகாரங்களில் நாம சொன்னறபோல இவா சிபஸ்தியாரால மனந்திருமபியபின் தன வேலையை ராஜிநாமா செய்து போட்டு புதிதாய மனந்திருமபிய சிலரைத தன்னுடன கூட்டிக்கொண்டு தன கிராமததிறகு வந்திருந்தாா. இவா மனந்திருமபிக கிறீஸ்துவனன சங்கதி பபியோலாவுக்குத் தெரியாது. ஆகிலும இவரைப்பறறிப பலவிதமான சமாச்சாரங்களைக் கேட்டிருந்தாள. இவா வீட்டில விநோத வேடிக்கை விருந்து முனபோல நடககிறதில்லையென்றும, வீட்டின் அடிமைகளுககெலலாம ஸ்வாதீனங் கொடுதது இவருடன இருக்க மனமிலலாதவாகளை தங்கள் ஊருக்கு அனுப்பிவிட்டதாகவும, இவா வீட்டில கூடியிருககிறவர்கள் எல்லாரும ஒரு குடுமபததார்போல் சமாதானமாயுஞ சந்தோஷமாயுஞ் சமபூரண திருப்திகரமாயும இருப்பதாகவும இவை முதலிய விநோத விஷயங்களைக கேட்டுத் தானே நேரில போய்ப் பார்த்து இதின் மர்மம் அறியும்படியாய பபியோலா புறப்பட்டாள்.

குரோமாசியின கிராமம மலையின் அடிவாரத்தில் கண்ணுக்கு வெகு ரமணீயமான இடததிலிருந்தது. பபியோலா தோட்டத்துக்குள பிரவேசிததபோது அது முன்னிருந்த ஸ்திதிக்கும தற்கால ஸ்திதிக்கும வெகு வித்தியாசமிருப்பதைப் பார்த்தாள். அப்போது அத்தோட்டத்தின்

ஓர் விசேஷ அலங்காரம் ஏதென்றால் சிறந்த வேலைப்பாட்டில் செய்யப்பட்ட சிலைகளும், சுரூபங்களும், விக்கிரகங்களும், பல இடங்களில் சிங்காரமாய்ச் செய்யப்பட்ட மாடங்களில் வைக்கப்பட்டிருந்தன. இப்போது மாடங்கள் வெறுமனே இருக்க அங்கிருந்த சிலைகள் எப்படியோ மாயமாய் மறைந்துபோயின.

இதின் காரணமேதென்றால் தாக்குயிலீனனும் அவனைச் சேர்ந்தவர்களும் மனந்திரும்பிய காலத்தில் நகராதிகாரியாயிருந்த குரோமாசியன் தனக்கிருந்த ஓர் வகை வாத முழுதும் குணமானால் மனந்திரும்பிக் கிறீஸ்துவனாவதாகச் சொன்னார். செபஸ்தியார், இவருக்கு ஞானஸ்நானம் பெறும்படியுள்ள ஆசை எதார்த்தமோ அல்லவோவென்று சோதிக்க, இவர் தன் தோட்டத்தில் பற்பல இடங்களில் வைத்திருக்கும் சிலைகளையெல்லாம் உடைத்து நொறுக்கிப்போட்டால் பூரண சௌக்கியம் அடைவாரென்று சொன்னார். இந்த நிபந்தனையை நிறைவேற்றுவது வெகு கடினமாய் இருந்தாலும் குரோமாசியன் சம்மதித்தார். இவர் மகன் திபூர்சியான் மாத்திரம் கோபாவேசமாய் தன் தகப்பனுக்கு பூரண சௌக்கியம் வராதபக்ஷத்தில் செபஸ்தியாரையும் பொலிகாரப்பென்ற குருவையும் நெருப்பில் போட்டு சுட்டெரிப்பதாய் சபதம் கூறினான்.

மாஜி நகராதிகாரி தன் கிராமத்திலும் வீட்டிலும் இருந்த சுமார் இருநூறு சிலைகளை உடைத்து நொறுக்கித் தூளாக்கினார். ஆனால் இப்படிச் செய்தபின்னும் சௌக்கியம் வரவில்லை அவ்வீட்டார் செபஸ்தியாரைக் கூப்பிட்டு இதின் காரணம் இன்னதென்று விசாரித்து அவரால் வந்த பெரு நஷ்டத்துக்குப் பரிகாரம் கேட்டார்கள். அதற்கு செபஸ்தியார் சொல்வார்:— "நீங்கள் உங்கள் வீட்டிலிருக்

கும் விக்கிரகங்கள் எல்லாவற்றையும் உடைக்கவில்லை. ஏதோ ஒன்றை ஒளித்து மறைத்திருக்கவேண்டும். வீட்டை நன்ருய் சோதித்துப் பாருங்கள்'' என்று சொல்ல அவர் சொன்னதுபோலே சில பொம்மைகள் வெகு விசித்திரமாய் செய்யப்பட்டிருந்ததால் அவைகளை விநோத காட்சிக்காக ஒளித்து வைததிருந்தார்கள். இவைகளைக் கொண்டுவந்து உடைத்தவுடன் குரோமாசியன் பூரண சௌக்கியமடைந்தார். இவரும் இவர் மகனும் மனந்திருமபி சத்தியவேதத்தில் சேர்ந்து வெகு பக்தி விசுவாசமுள்ள கிறீஸ்துவர்களானுர்கள்.

இந்தச் சங்கதிகள் யாவும் பபியோலா அறியாததால் மாஜிஸ்திரேட்டாகிய நகரதிகாரியைப் பார்த்தவுடனே வெகு ஆத்திரத்துடன் கேட்பாள் :—

" ஐயா நகர் அதிகாரியே! இதென்ன காலாகோலம்! இங்கே முன்னிருநத சிறநத விக்கிரகங்களெல்லாம் எங்கேயோ கோபித்துக்கொணடுபோய் விட்டார்கள்போலும்! நீங்கள் என்ன துரோகஞ் செய்தீகள் ?''

அதற்கு குரோமாசியன் சொல்வார்: " அமமா! பெண் மணியே! ஆததிரப்படாமல் நான் சொல்வதைக் கேள. இந்தச் சிலைகள் இருந்ததால் என்ன பிரயோசனம் வந்தது ?''

" என்ன பிரயோசனமென்று நீங்கள் கேட்டாலும் மற்றவர் அப்படிக் கேட்கமாட்டார்கள். அதிருக்கட்டும் நீங்கள் என்ன செய்தீர்கள் ?''

" ஏன், நான் அவைகளை யெல்லாம் உடைத்துத் தகர்த்து நொறுக்கிப்போட்டேன். தேவர்களும், தேவதைகளும் தூளாய்ப் போய்விட்டார்கள். உனக்கு அவர்களுடைய காலாவது கையாவது வேண்டுமானல் தேடிப்பார்க்க

லாம். ஆனால் கை அகப்பட்டால் விரல்களெல்லாஞ் சரியாயிராது. மூகங் கிடைத்தால் மூகரு இருக்கமாட்டாது."

"ஐயோ! இதென்ன கொடுமை! வயது வளர புத்தியும் வளருமா குறையுமா? குசவனுக்குப் பலநாள் வேலை தடியடிக்காரனுக்கு நிமிஷ வேலை என்பது உங்களிடம் நிறைவேறினது. ஆனால் இப்படி நீங்கள் செய்ய என்னகாரணம?"

"பபியோலா, நான் சொலவதை ஆற அமரக்கேள். மூத்தோர் சொல்லும வார்த்தை அமிர்தம. இதுமட்டும் நான் பார்த்ததில் ஜூபித்தா, ஜூனோ, முதலிய நமது நாட்டுத் தேவாகள், நமமைப்போல வெறும மனிதாகள். புலியைப்பார்த்து நரி சூடினதுபோல் இவர்களைத் தேவாகளென்று நாம வணங்க நமகென்ன கிரக'ரமா?"

"நீங்கள் சொல்வது ஞாயந்தான. நானும அவர்களை அவ்விதமே எண்ணியிருக்கிறேன. ஆனால் சிறப்பாய செய்யப்பட்ட அவர்கள் சிலைகளை உடைப்பானேன்? அவைகளை அலங்காரகாட்சிககாகவென்று காபபாற்றககூடாதோ?"

"அப்படியலல, இந்த விககிரகஙகள தேவாகளாக உருவாக்கப்பட்டிருநததால அவாகள் கள்ள வேஷம எடுத்தவாகள்., ஆனதால் நியாயப்பிரகாரம அவாகள் வேஷத்தைக களைநது உள்ளதை உள்ளதுபோல உலகததுக்குக் காட்டுவது அவசியம. நான் செயததும இதுதான."

"போனது போகட்டும. வேறே ஒரு சங்கதி. ஊரிலே உங்களைபபற்றி என்னென்னமோ சொலலிககொள்ளுகிறார்கள். யாரோ எவரோ உங்கள் வீட்டில வரப்போக இருக்கிறார்களாம. ஏதோ ஒழுங்குகள் ஸ்தாபிக்கபபட்டிருககிறதாம."

"மெய்தானா? மெத்த சந்தோஷம். இன்னம் வேறு என்ன சொல்லுகிறார்கள்?"

"நீங்கள் எல்லாரும் அதிகாலமே எழுந்திருக்கிறீர்களாம். விரதம் பிடிக்கிறீர்களாம. எவரோடும வீண்வம்பு வளர்க்கிறதில்லையாம். ஜெபத்தியானத்திலே புகுந்துவிட்டீர்களாம்."

"மெத்த உபகாரம். ஆனால் பபியோலா! நாங்கள் குடிகாரரென்றும, சூதுவிளையாடுகிறவர்களென்றும், துன்மார்க்கரென்றும், ஒருவரும சொல்வதில்லையே?"

"அப்படி ஒன்றும உங்கள்பேரில் இல்லை."

"ஆ! ஆ! இந்த ஜனங்கள் எங்கள்பேரில் எவ்வளவு அன்புங் கவலையும் பாராட்டிவருகிறார்கள். இதற்கு முன் நான் என் கிராமத்திற்கு வந்தபோது, ஊரிலிருக்குந் துஷ்டரையுங் குடியரையுங் கூப்பிட்டு உண்டு குடித்து உல்லாசமாய் மகிழ்ந்து காலம போக்கும்போது ஒருவரும் என்னைப் பற்றிக் கவனித்ததில்லை. ஆனால இந்த ஆட்டம் பாட்டு எல்லாம் அடக்கி, பிறர் சோலிகருப் போகாமல், என் அலுவலைக் கவனித்துவந்தால, ஊரெல்லாம எழும்பிவந்து, இது என்ன? அது ஏது? என்று விசாரப்பட்டு விசாரிக்க வருவது, ஏன் பபியோலா, உனக்கே மகா விகாரமாகத் தோன்றவில்லையா?

"விகாரந்தான். இதின் காரணமேதென்றால் பொறாமையுள்ள சில புண்ணிய சீலருண்டு இவர்களா, அயலார் வீழ்ந்தால் ஐந்துநாள் பட்டினி இருப்பார்கள். யாரிடத்திலாவது தங்களிடம் இல்லாத நல்லொழுக்கம, யோக்கிதை, இருப்பதைக் கண்டால் மனம் வீங்கி பொறாமை கொண்டு "அது பொய், இது பொய், எல்லாம கள்ள வேஷம" என்று தூற்றுவார்கள். ஆனால் அவர்கள் சொல்வதைச் சொல்

லட்டும். நீங்கள் இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? இதில் உங்கள் அபிப்பிராயமென்ன?"

"அம்மா! கேள். நல்லொழுக்கத்தில் நடப்பதற்கு ஏதுவான முயற்சிகளெல்லாம நாங்கள் செய்துவருகிறோம. அதிகாலமே, சுக்குரோதையமுன நாங்கள எழுந்து ஜெபத்தியானம் முதலிய அனுஷ்டான கிரியைகளைச் செய்த பின்பு, அவரவா இஷ்டப்படி பற்பல அலுவல் செய்வோம. சிலர் வாசிப்பார்கள். சிலா எழுதுவாாகள். சிலா தோட்டத்திலபோய வேலை செயவாாகள. அதன் பின் குறித்த நேரததில எல்லாருங்கூடி தேவஸ்தோத்திர கீர்த்தனைகள் பாடுவோம. எங்களில வாசாலகரான ஒருவர் செய்யும பிரசங்கத்தைக் கேட்போம. எங்கள் உண்டி உணவு வெகு மிதமானது. மரக்கறி பதாாத்தங்கள் முககியம். எது வநதாலும, எது போனாலும எனறும சநதோஷமும திாப்திகாமுமுள்ளவர்களா யிருக்கின்றோம."

"ஓ! ஓ! காரியமஇப்படியா? செட்டுப்பண்ணி பணந தேடிக் கூட்டிவைக்க இது நல்ல ஏற்ற உபாயநதான. செட்டி ஆற்றோடு போனாலும் ஆதாயமினறிப போகானும்."

"அப்பா! பெண்களுக்கு எனன கூர்மையான புத்தி இருக்கிறது! ஒரு வார்த்தை சொன்னால, அதிலிருநது ஒன்பது கிரகித்துக்கொள்ளுவார்கள். ஆனால் என் விஷயத்தில் நீ நினைப்பது தப்பிதம. நாங்கள் வீணசெலவில இறைக்காத பணத்தை வறியோா, எளியோா, இவாகளுக்குத் தாமமாக உபயோகிக்க ஏற்பாடெலலாஞ செயதிருக்கினறோம. எங்கள் கிராமத்தைச் சுற்றியிருக்கும எவ்வித ஏழைகள், பிணியாளிகளையும பராமரித்துக் காப்பாற்றி சமரக்ஷணை செய்யும்படியாய் உததேசித்திருககின்றோம்."

"நீங்கள் செய்வதெல்லாம வெகு நூதனவகையா யிருககின்றது. நமது ஜனங்கள் இவையெல்லாம அறிநதால் உங்களேயும உங்களேச சோநதவாகளேயும இகழநது நிநதிததுப் பரியாசஞ செயயமாடடார்களா ? இதுமட்டும உங்கள பேரில தூறறினது போதாதெனறு இன்னம அதிகம தூற்றப்போகிறூர்கள்."

"தூற்றட்டும. அவாகள் கடைசியில் என்ன சொலலக்கூடும ?"

"ஐயா ! உங்களுககு நான் உள்ளதைச் சொன்னுல் கோபித்துக்கொள்ளவேண்டாம நீங்களெலலாருமம, என்னமோ கிறீஸ்துவாகளானதாக பேசிககொள்ளுகிறூாகள். என் காதில் இது விழுநதவுடன நான இபபடிப பேசுகிறவர்களேக் கோபிதது, இதுவெல்லாஞ் சுதத அபததமான சங்கதியெனறு அவாகளுககுச சொனனேன."

மாஜி நகராதிகாரி இதைக கேட்டு புன் நகையுடன் "அமமா ! பபியோலா ! ஏன அப்படி சொன்னவாகள் மேல் உனக்கு அவ்வளவு கோபம்" எனறு கேட்க, பபியோலா சொலவாள :—

"ஏனு ? உங்களுடைய புத்தியும, யுக்தியும, அறிவும, எனக்கு நன்றாய்த் தெரியும. நீங்களாவது, நீககோஸ்திராததாவது ஜோபே அம்மாளாவது கிறீஸ்துவ மதத்தில் சேரவேமாட்டாாகள். அது அபததங்களும், அக்கிரமங்களும கூடிச் சோநதிருக்கும மதம. மிலேச்ச ஜனங்களுடைய மதம. சற்றும நாகரீகம பெற்றவர்கள அநத மததில சேரமாட்டாாகள்."

"பபியோலா ! ஒரு கேள்வி உன்னிடம் நான் கேட்கிறேன். நீ இவ்விதங் கிறீஸ்துவாக்ளின் மதத்தை இகழநது பேசு முன் அம்மதம இன்னதென்றும் அதின் படிப்பினே,

ஏற்பாடு, ஆசாரம், கொள்கை, இன்னதென்றும், அந்தக் கிறீஸ்துவர்களின் மதக் கிரந்தங்களில் வாசித்ததுண்டா?"

"நான் ஏன் வாசிக்கவேண்டும்? ஊரெல்லாஞ் சொல்லுவது போதாதா? கிறீஸ்துவர்கள் படிப்பு சாஸ்திரம் அறியாதவர்கள், சனமார்க்க விரோதிகள், அக்கிரமமென்றால் நான் ஆயிறறென்று கங்கணங்கட்டி வருகிறவர்கள், என்று இவ்விதமாய் எல்லாருஞ் சொல்லுகிறார்கள்."

"பபியோலா! நானும் ஒருகாலம் உன்னைப்போலவே இந்தக்கிறீஸ்துவர்கள் இப்படிப்பட்டவர்கள் தானென்று மற்றவர்கள் சொன்னதை நம்பி எண்ணியிருந்தேன். இப்போது என் எண்ணமெல்லாம் முழுதும் மாறிப்போய்விட்டது. காதால் கேட்பதிலும் தானே கண்ணால் நேரே பார்ப்பது அதிக உறுதி அல்லவா? அப்படியே நானும் பார்த்தேன்."

"நீங்கள் சொல்வது மெத்த விகாரமாயிருக்கின்றது. ஏனென்றால் நீங்கள் நகராதிகாரியாய் இருந்தபோது இந்தக் கிறீஸ்துவர்கள் நமது தேசச சட்டங்களை மீறி நடந்ததினிமித்தம் அநேகம் பேர்களைத் தண்டித்திருக்க வேண்டுமல்லவா?

நகராதிகாரி இதைக் கேட்டவுடனே தான் அஞ்ஞானியாயிருந்தகாலத்தில் அரச. சின்னப்பரைப்போல் சேசுநாதருடைய சபையை விரோதித்து கிறீஸ்துவர்களை வதைத்துத் துன்பப்படுத்திய கொடுமையை நினைத்து துக்கப்பட்டு கண் கலங்கி இருப்பதை பபியோலா கண்டு தான்சொன்ன சங்கதியால் ஏதோ இவருக்கு மன வருத்தம் உண்டாகும்படி செய்திருக்க வேண்டுமென்று எண்ணி அவரிடம் தாழ்மையாய் மன்னிப்புக் கேட்டாள். அதனபின்பு வேறுவிஷயங்களைப்பற்றிப் பேசத்தக்கதாக

"ஐயா! இங்கிருந்து யாராகிலும இராஜதானிக்குப் போகிறதாயிருந்தால் சொலலுங்கள. நான என் தகப்பனுருக்கு ஓர் காயிதம அனுப்பவேண்டும." என்றுகேட்க நகரதிகாரி சொல்வார்:—

"அமமா! நாளை அதிகாலமே துரகுவாதன் என்ற ஓர் வாலிபன போகுமபடி தயாராயிருககிறுன. உன்காயிதத்தைக கொடுத்தால அவனகொணடு போய்சசோபபான்."

இநதச் சமயததில, துரகுவாதன் ஏதோ எழுதிககொண்டிருநதவன, பபியோலாவைப பாாத்ததும, எழுநதிருநது அவளுக்கு அஷ்டாங்க சாஷ்டாங்க ஆசாரஉபசாரங்கள் செய்து: "அமமா! உங்களுககு எனனுலான உதவியெல்லாஞ் செய்ய எப்போதும தங்கள் அடியான காத்திருக்கிறேன். சில வருஷங்களுககுமுன் நான உங்கள் தகப்பனுரான பிரபுவினிடம வேலே பாாத்து வநதேன. சௌக்கியகுறைவால் அநத வேலையை விடநேரிட்டது." என்று வெகு தாழமையாய்ச் சொன்னுன்.

பபியோலா அங்கேயிருநது தன தநதைக்குக் காயிதம எழுதி மடித்து முத்திரை போட்டு துர்குவாதன் கையில் கொடுத்தபின், அவனுககுப பிற்பாடு தக்க சம்பாவனே கொடுக்கும்படியாய், அவன் பெயா, ஊர் முதலிய விவரங்களே ஞாபக அறிகுறியாக குறித்துக்கொணடாள். வேலே யெல்லா முடித்தபின, குரோமாசியனிடஞ் செலவு பெறறுக்கொண்டு தன் கிராமததுக்கு வண்டியிலேறிபபுறப்பட்டாள். இருவரும பிரியும போது நகரதிகாரியின் மனதில் துக்ககரமான பல நினேவுகள் வநது மொயத்தன: "இது தான் கடைசிவிசை நான் பபியோலாவைப் பார்ப்பதாக்கும. இன்னம் எவ்வளவு நாள் இப்படி இவள் அஞ்ஞானத்தில் இருப்பாள்? சத்தியவேதத்தை இவளுக்கு நான் சொல

விக்கொடாமலிருப்பது யுக்தியா? இவ்வளவு கௌரவமும் நற்குணமுமுள்ளவள் அஞ்ஞான அந்தகாரத்தில் அமிழ்ந்தியிருப்பதை நான் பார்த்துக்கொண்டிருக்கலாமா? ஆனால் இந்த ஆத்துமம் கெட்டுப்போகும்படி சர்வேசுரன் விடமாட்டாரென்பது என் துணிபு. சேசுநாதருடைய பரிசுத்த வேதத்தை இவளுக்கு விவரித்துக்காட்டத்தக்க சமயம் வரும்." என்று இவ்விதமாய்த் தனக்குள் சிந்தித்து அவளை அனுப்பிவிட்டு, தன் அறைக்குள் சென்று, முழங்காலிருந்து, அந்த ஆத்துமத்தை எப்படியாகிலும் இரட்சிக்க கிருபை புரியவேண்டுமென்று கண்ணீர் சிந்தி சர்வேசுரனைப் பிரார்த்தித்தார்.

குரோமாசியன் ஜெபம்.

தேவாரம்

1. வானமுதல மற்றுலகனைத்தும் மாறு ஒழுங்கோடாண்டு வரும்
ஞான நிறைந்த தயா பரனே! நலம்யாவையுங்கொள் ஆண்டவனே!
ஈன நிறைந்த பேயவினையால எழிலார பபியோலா இவளே
ஏனோ இருப்பாள் உனை அறியா? இறைவா இவளுக்கருள் செய்வாய்.

2. சத்தியமறையின போதகத்தைத தவிர்த்து நரகப பசாசடனே
நித்தியதீயில் வேவதற்கு நேராம் வழியாம் பொய மதத்தில்
புத்தி மூழ்கி அமிழ்ந்தி நிற்கும் புண்யமாதாம் பபியோலா
சித்தமிரங்கி மெய்வேதத் திடசைசெ றநீ அருள் செயவாய்.

பபியோலா வண்டியிலேறி தோட்டத்தின் கதவின் கிட்ட வரும்போது தாகுவாதன ஓட்டமாய அவளிடம வந்து, அம்மா! நீங்கள் கொடுத்த காயிதத்தை உடனே தாமதமின்றி உங்கள் தகப்பனாரிடங் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டுமோ? என்று கேட்க, பபியோலா அதிசீக்கிரத்

தில் அவரிடங்கொடுக்க வேண்டுமென்று சொல்ல, துர்கு வாதன்: "அப்படியானால் அமமா என்றால் ஏலாது," என்ற போது,பபியோலா:"நான் உன் பிரயாணத்துக்குவேண்டிய செலவெல்லாம கொடுத்தால் நீ தாமதமின்றிப போவா யோ," என்று வினவ, அவனும, " அப்போது விகஙின மில்லை; உங்களுககு எவ்வகையிலும ஊழியஞ் செயவதே என் பாக்கியம,"என்று மகா யோககியனபோல் மறுமொழி சொன்னான.

பபியோலா தன் பெட்டியைத் திறநது வழிச்செலவுக் கும் மறறச் செலவுக்கும போதுமான பணம அவனுக்குக கொடுக்க, அவன ஆசையோடு இரணடு கைகளையும நீட்டி வாங்கி, கணணிலே ஒத்தி, தலையிலே சூடி, மடியிலே கட்டி முடிநது வைத்துக்கொணடான். இவனுககுப் பதில யூ தாஸ் எனபவனிருநதால அவனும அப்படித்தான் செய திருப்பான்.

பணம வாங்க இவன் காட்டின இநத இழிவான ஆசையைப் பபியோலா கணடு, இவ்வளவு நீசகுணமுள்ள வன் நற்குண பிரபுவான குரோமாசியன வீட்டிலிருக்க அயோக்கியனென்று தனக்குள் எணணிக்கொணடாள்.

துர்குவாதனுக்குச் செல்லவேண்டிய தொகையைச செலுத்திவிட்டதால் அவனைச் சார்நத விஷயங்களை எழுதி வைத்திருநத காயிததத்தை எடுத்து கிழித்து எறியபபோகும போது, அதின் பின் பக்கத்தில் சிலவாக்கியங்கள் எழுதி இருந்ததைப் பார்த்தாள். வாசித்தாள். இவைகளைப் போ ன்ற வாக்கியங்களை அவள் இதுமட்டும எநத நூலிலும வாசித்ததில்லை :

" நாம் உங்களுக்குச சொல்வதேதெனில் நீங்கள் உங் கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள். உங்களைப் பகைக்கிற

வாகளுக்கு நன்மை செய்யுங்கள். உங்கள் பேரில் அபதூறு பேசி உங்களைத் துன்பப்படுத்துகிறவாகளுககாகப் பிரார்த்தியுங்கள் இப்படிச் செயதால் பரமண்டலத்திலிருக்கும் உங்கள் பிதாவுக்கு யோக்கிய பிள்ளைகளாவீரகள். அவர் தமது சூரியனை நல்லோருககுந தீயோருககும பிரகாசிக்கச செய்கிறா. நீதிமான்கள் பேரிலும அநீதாபேரிலும மழை வருஷிக்கிறா." (மத். V. 44.)

இதை வாசித்தவுடன் பபியோலாவின் மனதில் பற்பல நினைவுகள் உண்டானது மலையினின்று ஓடிவரும ஆற்றின கரையோரததில, பளிசசென்று மினனும ஓர் கல்லை பிரயாணி ஒருவன் கண்டு, இது விலையுயாந்த மாணிக்கமோ அல்லது வெறுங்கூழாங் கல்லோ, இதை எறிநதுபோடலாமோ அல்லது இரத்ன வியாபாரியினிடங்காட்டி இதின் நிறை இவ்வளவென்று கேட்கலாமோ, என தனக்குள் யோசிப்பதுபொல் பபியோலாவும பின் வருமாறுதனக்குள் ஆலோசித்தாள்: இநத வாககியங்கள் சததியமா அல்லது அபத்தமா? அதி உன்னத படிப்பினையோ அலலது இழிவுள்ள கோட்பாடோ? இவைகள் அநுசரிக்கக கூடியவைகளோ அல்லது அசாத்தியமானவைகளோ? இவைகளின் பயன் இன்னதென்று சிராவுகககுச சிலவிசை தெரியலாம். அவள் எனக்குச் சொன்ன சில சித்தாநத வாக்கியங்கள் போல் இவைகளுந தோன்றுகின்றன. ஆனால் அவளிடங் கேட்கக்கூடாது. அவள் சொல்லும வாக்கியங்கள் பல முறை கண்டுபிடிக்க அரிதாயிருக்கின்றன. இதை எறிநது போடுவதுதான் உத்தமம. இதோ காற்றோடே போகின்றது. யாரிதை எடுத்துவாசிப்பாரோ அவருக்கு இது விடுகதைபோல் தோன்றும. ஓ! ஓ! வண்டிக்காரா! சற்று

கில். அதோ காற்றோடுபோகும் அந்தக் காயிதத்தைப் போய் எடுத்துக்கொண்டுவா."

வண்டிக்காரன் காயிதத்தை எடுத்து வந்து பயியோலாவுக்குக்கொடுக்கும்போது "அம்மா! நீங்கள் தானே வேணுமென்று காயிதத்தை காற்றோடு பறக்க விட்டபின்பு, என்னைப்போய் எடுத்துவாவென்று ஏன் சொன்னீர்கள்," என்று கேட்டதற்கு பயியோலா: "அதைப் பற்றி நீ விசாரிக்கத் தேவையில்லை. நீ உன் வேலையைப் பார்" என்று கடுகடுத்துப் பேசி அனுப்பிவிட்டாள்.

வாங்கின காயிதத்தை தன் நெஞ்சின்மேல் வைத்தாள். மனப்பதற்றம் யாவும் நீங்கி சமாதானம் உண்டானது.

---

## ௰௫-ம். அதிகாரம்.

### துர்தவாதன்

### குடியுஞ் சூதும் சொல்லும் விஷமாம்.

---

துர்தவாதன் மறுநாள் அதிகாலமே பிரயாணமாவதற்கு வேண்டிய யாவும் மாஜிஸ்தரேகாரி தயார் செய்து, அவன் வழிச்செலவுக்குப் பயியோலா கொடுத்ததை இவர் அறியாததால் இவரும் வேண்டிய பணங்கொடுத்துப் பயணப்படுத்தினார். இவன் புறப்படுஞ் சமயத்தில் அங்கிருந்தவர்களில் அநேகர் வழிவிடும்படியாக கூடி இருந்தார்கள். இவனுடைய நிலையற்ற குணமும், பண ஆசையும், இவ்வளவுவென்று அறிந்த சிலர் இவனைத் தனியே அனுப்புவதால் பெரும் ஆபத்து அவனுக்கும் தங்களுக்கும் உண்டாகும் என்று அஞ்சினார்கள்.

பொலிகாரப என்ற குரு அவனைத் தனியே அழைத்து அவனுக்கு நல்ல புத்திமதிகள் பின வருமாறு சொன்னார்: "மகனே! உன தந்தையின் மொழியைச சாவ்தானமாய்க் கேள். துஷ்டர் சகவாசந் தீமைகருஎது. அஞ்ஞானிக ளோடு அதிகமாய்ப்பழகாதே. போகுமவழியில, விநோத வேடிக்கை பாாக்குமபடி நிறகாதே. சூது விளையாட எவ ரோடுங்கூடாதே. தூாப்பழக்கந் துன்பமும வரும். மது பானம ருசிபாாக்க என்றுந் தொடாதே. நஞசுணபான கள் உணபவன என்ற நீதிமொழியை மறவாதே. சூது கெட் டது. சிறுமைபல செய்து சீாழிக்குஞ் சூது.

வேண்டற்கவென்றிடினுஞ் சூதினை; வென்றதூஉந் தூண்டிற பொன் மீன விழுங்கியற்று.

நீ சூது விளையாடுவதில வெகு சமாத்தனுயினும, உன எதிரியை நீ வென்றபோதிலும விளையாடப்போகாதே. நீ வெல்வதே தூணடில பொன் முள போல் உனனை அற வே கெடுக்கும." என்று பலவாறாய் அவனுக்கு வறபுறுத் திககூறினா அவனும நலலதென்று தலையை ஒப்பாசாரத் திறகு ஆட்டி அசைததான. இவன புறப்படுமபோது குரோமாசியன கதவினகிட்ட வந்து, கணணில ஜலமதது டப, அவனைப் பாாத்துக் கொணடே நினறா. ஊதாரிப்பை யன தன தகப்பன வீட்டைவிட்டுப்போகுமபோது அவன் தகப்பன் இவனைப்போலவே வீட்டின தலை வாசலில் நின்று போகிற மகனை அழுத கணணுஞ் சிந்திய மூக்கு மாய்ப் பாாத்து நினறிருபபாா

துர்குவாதன போகும வழியிலிருந்த ஒரு ஊரில காசி யான் எனபவருக்கு ஒரு சிட்டு இருந்ததால் அவா வீட்டு க்குப்போனான். நமது சந்திர ஆதியில காசியான் வைத் திருநத பள்ளிக்கூடத்தில் புங்கிராஸ் படித்த விஷயத்தைப்

பற்றிச் சொல்லியிருக்கிறோம். இந்தப்பள்ளிக்கூடஞ் சில காலம் நன்றாய் அனுகூலமாய் நடந்து வந்தது. ஆனால் உபாத்தியாயர் கிறீஸ்துவனென்பது வெளியானதாலும வேதகலகஞ் சமீபத்தில் வர இருந்ததாலும ஆபத்து வருமுன் பள்ளிக்கூடத்தை சாத்திவிட்டு தமதுஊருக்கு வந்திருந்தார். தூர்குவாதன கிறீஸ்துவனாயிருந்ததால் அவனுக்குத்தமது வீட்டில் சாப்பாடு கொடுத்த பின்பு இருவருங் கலந்து பேசிக்கொண்டிருந்தார்கள். காசியான தான முன் செய்ததும், இனி செய்ய உத்தேசித்திருப்பதுமாகிய சகல சங்கதிகளையும் அவனுக்குத் திறந்து சொன்னார். வஞ்சகனான துர்குவாதன் இவையெல்லாங் கவனமாய்க் கேட்டு, தான் அறிந்த செய்தியை ஒருநாள் காசுக்கு விறகலாமென்று மனதில் எண்ணிக்கொண்டான். மறுநாள் அதிகாலமே எழுந்திருந்து, அசுவாரூடனாய இராஜதானிநகரில் சேர்ந்தான். சேர்ந்ததும பபியோலா வீட்டுக்குப் போய் காயிதத்தைக் கொடுத்து பாபியன கேட்ட பல கேள்விகளுக்குச் சமயாநுகூலமான மறுமொழிசொல்லி, இராத்திரி தன வீட்டிலிருந்து சாப்பிடும்படி பாபியன கூப்பிட்டதற்கு நல்லதென்று உடனே சம்மதித்து, பின தன கையில பணமிருந்ததால் தங்கும்படி ஒரு நல்ல விடுதி சித்தஞ் செய்யும்படி பட்டணத்துக்குள் போனான்.

பாபியன், தன் மகள வீட்டிலிருக்கும்போது, அவளுக்குப் பயந்து தன யோக்கியதையைக் காப்பாற்றுவான. அவள் வெளியே கிராமத்துக்குப்போய்விட்டால, தன இஷ்டம்போல் எவ்வகையான அயோக்கியா, தூமாாக்கா, குடிகாரர் முதலியபோகளைத் தன்வீட்டுக்குச் 'சாப்பிடும்படி அழைப்பான். அப்பேர்பபட்டவர்களைத் தேடும்படியாய இன்று ஸ்நானஜாகைகள் வழியாய் தனவழக்கம்போல் போ

கையில், ஒரு மண்டபத்தின் அருகிலிருந்த சோலையில் இரண்டு பேர் வெகு இரகசியமாயும், ஆத்திரத்தோடும் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டான். சத்தம் வந்த திசையை நோக்கிப் போய்ச் சற்று நின்று சுவர்க்கோழிபோல் உற்றுக் கேட்டான். அங்கிருந்த இருவர் பின்வருமாறு சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள்.

"அப்படியானால் இந்தச் சமாச்சாரத்தைப் பற்றி ஏதேனுஞ் சந்தேகமில்லையா?"

"அற்பமுங்கிடையாது. நிக்கோமேடியா பட்டணத்தில் கிறீஸ்துவர்கள் நமது ஜூப்பித்தர் ஆலயத்துக்குச் சமீபத்தில் தங்கள் கோவிலைக் கட்டினார்கள். நம்ம ஜனங்கள் கோபாவேசமாய் எழும்பி கிறீஸ்துவர்கள் கோவிலில் நெருப்புவைத்து கொளுத்திப் போட்டார்கள். இன்றுகாலமேதான் இந்தச் செய்தியை என் தகப்பனாருக்கு நம்பிக்கை உள்ள ஒருவன் வந்து அறிவித்தான்."

"இந்தக் கிறீஸ்துவர்கள் எவ்வளவு பரம மூடாத்மாக்கள்! நமது தேவர்களின் கோவில்பக்கத்தில் வந்து தங்கள் கோவிலைக் கட்டும்படி எப்படித் துணியலாம்? நமது சொந்தத் தேசத்தில், நமது நாட்டுத் தேவர்களுக்கு மாத்திரங் கோவில் கட்டலாமேயன்றி அந்நிய தேசத்தார் வணங்குந் தேவனுக்குக் கோவில் கட்டும்படி நமது உரோமானர் சம்மதிப்பார்களா? இந்தக் கிறீஸ்துவர்கள் துணிந்து கட்டினாலும் அந்தக் கோவில் அதோகதியாய்ப் போகாமல் இருக்குமா?"

"நீ சொல்வது ஞாயம் என் தகப்பனாரும் அவ்விதமே சொன்னார். இந்தப் பேதைக் கிறீஸ்துவர்களுக்கு எள் பிரமாணமாகிலும் புத்தி யிருந்தால் பயிரங்கமான ஸ்தலங்களில் வந்து தங்கள் தலையைக்காட்டாமல் மூலை முடுக்கு,

சந்து பொந்துகளைத் தேடி முசல் போல் பதுங்கி ஒளிந்திருப்பார்கள். ஆகிலும இவர்களாலே நமக்கு அதிர்ஷ்டகாலம பிறக்கப்போகின்றது. நமது இராஜதானியில் இந்தக் கிறீஸ்துவர்கள் இருக்குமிடத்தை நாம தேடிப்பார்த்து கண்டுபிடித்தால் நமக்குப் பேரும கீர்த்தியும் உணடாகும். கையிலே கொழுத்த காசும பழுக்கும"

"நல்லது. நம்மிருவர் காரியம எப்படி யிருக்கிறது? நாம் உளவறிந்து பிடிக்குங் கிறீஸ்துவர்கள் பணக்காரராகவும் இராஜ உத்தியோகஸ்தராகவும இருக்குமபக்ஷத்தில், அவாகள் சொத்தை நாம் இருவரும சரிபாதியாய் பகிர்ந்து கொள்ளவேண்டும. ஒருவருக்கொருவா துணையாய் நின்று யுக்தி போசனையால் உதவிசெயயவேண்டும. நீ உன் வழக்கம்போல் கொடுமையான கடும உபாயங்களைப் பிரயோகி. நான் என் இஷ்டமபோல எனக்கேற்ற சாதகங்களை பிரயோகிப்பேன். நமது சமாததால் அறிநது பிடிககுங் கிறீஸ்துவர்களின் சொததுக்கள் சர்க்கார் கையில விழு முனனே நம்மிருவர் கையில் விழும்படி அன வழியெல்லாந் தேட வேண்டும. என்ன? நான் சொல்லுமவழி உனக்குச் சம்மதமா?"

" ஆஹா !. பூரணசம்மதம்."

பாபியன், இவ்விருவர் பேசிய சங்கதிகள் யாவும்கேட்ட பின்பு அவர்களிடஞ் சென்று: "புல்வியா! சௌக்கியமா? உன்னைப்பார்த்து பல தேசகாலஞ் சென்று போனதாகத் தோன்றுகின்றது. நீ இன்று சாயரட்சை என் வீட்டியில் சாப்பிட வரவேண்டும். இஷ்டாகள் பலபேர் இன்று வருவார்கள். யார் அங்கே நிற்கிறது? நகராதிகாரி மகன் கோர்வீனன் அல்லவா? அவனையும் உன்னோடு கூட்டிவா."

கோர்வினை தன் பெயரைக் கேட்டவுடனே, நந்தி மாடு தலையை ஆட்டுவதுபோல் பெருத்த தன் தலையை ஆசார உபசாரமாக ஆட்டி அசைத்தான்.

புல்வியன் மறுமொழியாக: "ஐயா உங்கள் ஆசைப் பிரகாரம நான் சாப்பிட சாயரட்சை வரச் சாவகாசப்படாது. வேறிடத்துக்குப் போவதாய் நிபந்தனை செய்திருக்கிறேன்."

"சீ! இது வீண்போக்கு. இன்று சாயந்தரம் என்னை அன்றி வேறெவரும உன்னைக கூப்பிட்டிருககமாட்டார்கள். ஆனால் புல்வியா! வாஸ்தவத்தில என் வீட்டுககு வருவதெனறால ஏதோ சில நாளாய் உனககு காணு கடோரமாயிருக்கின்றதலலவா? அன்றைககு இரணவீரசூரன் சிபஸ்தியாரோடு நீ வாய் கொடுத்து தப்பிபபிழைத்த நாள் முதல் நீ என் வீட்டுக்கு வந்ததேயில்லை. ஏன்? மந்திரதந்திரத்தால் உன்னை மயக்கிவிட்டார்களோ?"

இதைக் கேட்டவுடன் புல்வியன் முகம் சற்று விழுந்துபோனது. அதன் பின் பாபியனைத் தனியே அழைத்து "ஐயா! நீங்கள் சொல்வதுபோல எப்படியோ நடந்திருக்கிறது. அதினாலே தான் நான் உங்கள் வீட்டுக்கு வருகிறதில்லை" என்று சொல்ல, பாபியன் சொல்வான்: "அப்படியா, இது அபிராமியென்ற மாயினி செய்த வேலைபோலிருக்கிறது. அந்தக் குறச்சிறுககி எப்படியாவது துலைந்து போனாலதான் என் வீட்டுக்கு க்ஷேமமுண்டாகும். ஆனால் இது போகட்டும. உன்னிடததில் ஒரு விசேஷம நான் கேட்கப் போகிறேன். அகநேசியை உனககுத் தெரியுமே நீ அநேக சமயங்களில் அப்பெண் நாயகத்தைப் பார்த்துக களிக்கும படியாய் என் வீட்டுக்கு வந்தது எனக்கு நன்றாய்த்தெரியும். அவள்பேரில் உனக்குக்காதல் இல்லையா?"

"ஒருகால் இருந்தது. ஆனால் அதுவெல்லாம் உங்களுடைய மகளாலே அதோகதியாய் பறந்துபோய்விட்டது."

"காரியமிப்படியா? ஆனால் பபியோலாவுக்கு காதல விஷயங்கள் ஒன்றுந்தெரியாது. அவள் படித்துத்தேர்ந்த சாஸ்திரிபோல் எப்போதுங்கிரந்தமுங்கையுமாயிருக்கிறாள். அக்னேசி உனதுபேரில் எதார்த்தத்தில காதல வைத்திருக்கிறாள். இதுவாஸ்தவம்."

"வாஸ்தவமா? இதுவிவரம உங்களுக்கு எப்படித் தெரிந்தது?

"அக்னேசியே ஒருநாள இதை இரகசியமாய எனக்குச் சொன்னாள்."

"உங்களிடத்திலேயா? என்னைபபற்றியா?."

"அவள உன் பெயரைச சொல்லாதேபோனாலும உன் பூஷணுதிகளை வியந்து அனந்த பூரிப்புடன பேசினாள். உனக்கு நல்ல யோகத்திசை வந்திருக்கின்றது. இன்னம இரண்டொருமுறை அவளிடம பேசி உன கருத்தை வெளியிட்டால, பபியோலா யென்னசொன்னாலும, உன காரியம அனுகூலமாய முடியும என மகள இபபோது கிராமத்தில் இருப்பதால நீ என வீட்டுக்குப் பயமின்றி வரலாம."

"அப்படியானால உங்களவீட்டுக்கு கோர்வீனனோடு நான் தப்பாமல இன்று சாயரக்ஷை வருகிறேன்."

சொன்னதுபோல இருவரும சாப்பாட்டு நேரத்தில ஆஜிராய்வந்து சேர்ந்தார்கள். நன்றாய சாப்பிட்டு மதுபானம பூர்த்தியாயக குடித்தபின்பு பல பல சங்கதிகளைப்பற்றிக் கலந்து இரைந்து பேசிககொண்டிருந்தார்கள். அவர்கள் பேசிய சங்கதிகளில நிகோமேதியா பட்டணத்தில், கிறீஸ்துவர்களின் கோவில அக்கினிக்கு இரையானதும, இராஜ அரணமனையில தீப்பிடித்ததும முக்கியம. இந்த

அக்கிரமத்தை அவ்வூர் அதிகாரிகளே செய்தபின்பு கிறீஸ்துவர்கள் செய்ததாக அபாண்டமாய் அவர்கள்மேல் சுமத்தி தீயோக்கிலேசியனென்ற இராயனுக்கு இதை அறிவித்து கொடிய வேதகலகம எழுப்பிக் கிறீஸ்துவர்களைச் சர்வசங்காரஞ் செய்யும்படி எத்தனித்திருப்பது எல்லாரும அறிந்த விஷயம. பாபியன்வீட்டில அன்றுகூடியிருந்த எல்லோருங் கிறீஸ்துவர்கள்பேரில் தூஷணமும, அவதூறும, பழியும வாய்சலியாமல் கக்கினர்கள. தயாளகுணசிந்தையுள்ளவர்களும, பன்றியோடுகூடிய கன்றும மலந்தின்னும் என்பதற்கொப்ப, கிறீஸ்துவர்களை நிந்தித்து தேசாபிமானம, இராஜபக்தி, அறவே இல்லாத பரமதுரோகிகளென்று வாய்க்கு வந்தபடிபேசினார்கள். இவர்கள் இவ்வாறுபேசிக்கொண்டிருக்கையில் புல்வியன, பந்தியிலிருந்த துர்குவாதனை, கவனித்துப்பார்த்துக்கொண்டிருந்தான.

துர்குவாதன் மௌனஞ் சாதித்தாலும அவன் முகம பச்சோந்தியின் தோல்போல் நிமிஷத்துக்கு நிமிஷம் நிறம மாறி நின்றது. மதுபானம பூர்த்தியாயக் குடித்ததால் குடிவெறியில் மகா தைரியசாலிபோல் தோன்றினன். அவன் கண்கள் இரத்தமயமாய் சிவந்துபோக விழியை உருட்டித் திரட்டுவான். உதட்டைக் கடிப்பான். விரல்களை மடக்கி கையை அசைப்பான். சாப்பிட வைத்த பதார்த்தத்தை எடுத்து நசுக்குவான். பாத்திரத்தில் நிறைய மதுபானம ஊற்றி லவக் என்று குடிப்பான்.

பந்தியில் இருந்தவர்களில் ஒருவன் சொல்வான் :—
"கிறீஸ்துவர்கள் நமது தேச சத்துருக்கள். நம்மைப் பகைக்கிறவர்கள். அவர்களால் கூடுமாகில் இன்றே நமமெல்லாரையும் கொன்று தின்றுவிடுவார்கள்." இதைக்

கேட்டவுடன் துர்குவாதன் சற்று நிமிர்ந்து ஏதோ சொல்ல வாயைத் திறந்தான். ஆனால் திறந்த வாயை மூடி மௌனங்காத்தான்.

வேறொருவன் சொல்வான்: "இந்தக் கிறீஸ்துவர்கள் செய்யாத அக்கிரமம் ஒன்றுமில்லை. நீரோவென்ற நமது தேவத்துவ இராஜன் நாளில் இவர்கள் நமது இராஜதானியைக் கொளுத்தி எரித்துப் போடவில்லையா? ஆசியாவில் நேற்றுத்தான் இந்தக் கொடியர் நமது இராஜன் அரண்மனையில் நெருப்பு வைத்தார்கள்."

துர்குவாதன் கடுங்கோபத்தோடு எழுந்து ஏதோ சொல்வதுபோல் கையை நீட்டினன். நீட்டின கையை மடக்கி பொத் என்று உட்கார்ந்தான்.

"இந்தக் கிறீஸ்துவர்களுடைய கோட்பாடு, பிரமாணங்கள், எல்லாம் ஜனசமூக விதத்திக்கு முழுதும் விருத்தமானவைகள். எங்கும் குளப்பமுஞ் சண்டையும் உண்டாக்க ஏதுவானவைகள். இவர்கள் அருசியான காரியங்களை வைத்து வணங்குகிறவர்கள்."

துர்குவாதன் நெருப்பில் விழுந்த புழுப்போல் நெளிந்தான். எழுந்து நின்று திரும்பவும் கையை ஓங்கி பேசுபவன்போல் வாயை அசைத்தான்.

இவன் சேஷ்டைகளை எல்லாம் கருத்தாய்ப் பார்த்திருந்த புல்வியன் சொல்வான்: "கிறீஸ்துவர்களைப்போல் கொடிய ஜனங்களை நான் பார்த்ததேயில்லை. இவர்கள் தங்கள் கோவிலில் இரகசியமாய்க் கூடி ஒரு சிறு பிள்ளையைக் கொன்று அதின் மாம்ஸத்தையும் இரத்தத்தையும் சாப்பிடுகிறார்கள்." (பரிசுத்த பரம தேவநற்கருணை இன்னதென்று

அறியாத மூட அஞ்ஞானிகள் அக்காலத்தில் இவ்விதமாய் அதைக்குறித்துப் பேசுவார்கள்.)

தாருவாதனுடைய கண்களும மூக்கும் குடியாலும கோபத்தாலும சிவந்துபோக மேஜையைப் பலமாய் அடித்து "நீங்கள் சொல்வதெல்லாம அபத்தம. சுத்தப்பொய்" என்று சொல்ல, புல்லியன்: "அபத்தமா? உனக்கிது எப்படித் தெரியும?" என்றதற்குத் தாருவாதன் கலங்கி வெருண்டு பெருஞ்சத்தத்தோடு, "நான் கிறீஸ்துவன். என் வேதத்துக்காக உயிரைக் கொடுக்க இதோ தயாராயிருக்கிறேன்" என்று கதறினான்.

ஆந்த ராத்திரியில கோடை இடி மின்னுமல இடித்து முழங்கி படீர் என்று விழுந்தால, எவ்விதப பயமும அச்சமும உண்டாகுமோ, அவ்விதமே தாருவாதன் நான் கிறீஸ்துவன என்றதும, அங்கு கூடியிருந்த சமஸ்தரும அரண்டு வெருண்டு சித்தப்பிரமை பிடித்தவர்கள் போல கலங்கி நின்றார்கள். சற்று நேரஞ் சென்ற பின ஒவ்வொருவனுந் தன் மனதிலெழும்பிய உணர்ச்சியை சொல்லத் துவக்கினான். பாபியன், கிறீஸ்துவனான ஒருவனைத் தன் வீட்டுக்குள் வரச் செய்ததற்கு, வெட்கிநாணினான். கல்பூரணன், கிறீஸ்துவர்களைப்பற்றி தனனிலும அதிகம அறிந்தவன்போல் பிதற்றிப் பேசும ஒருவனை தான் இருக்குஞ் சபையில் வரும்படி* செய்தது தனக்குப் பெரும் அவமானம் என்றதுபோல் மனம் பொங்கி வீங்கிப் பதறி உதறினான். வேறொருவன் தன் இருகண்களைத் திரட்டி உருட்டி வாயைத் திறந்து தார்குவாதனை, ஓர் துஷ்ட மிருகத்தை பார்ப்பதுபோல, உற்றுப் பார்த்தான. இன்னொருவன் பரபரப்புடன் எழுந்து இங்குமங்குஞ் சுற்றிப் பார்த்து எவனையாகிலும் பிடித்து அடித்து உதைக்கலாமாவென்று

யோசித்தான். கோர்வீனனோ பகையும் பழியும நிறைந்த நெஞ்சனாய் தன் முன் இருந்த கிறீஸ்துவனை பல்லை நெரித்து தலையை ஆட்டி உறுக்கிப் பார்த்தான் இவனைப் பிடித்து கூர்மையுள்ள ஆணிகள் நிறைந்த சக்கரத்தில் சேர்த்துக்கட்டி, சுற்றிச சுழற்றி, சித்திரவதை செய்ய நல்ல சமயம் வாய்த்ததென்று, எலியைப் பிடித்த பூனைபோல, பூரித்து மகிழ்ந்தான.

இவர்கள் எல்லாரையுமவிட புல்வியன கொண்ட சந்தோஷம பெரும வெள்ளமபோல் மேலிட்டுப் பெருகினது. சிலந்திப் பூச்சி தன நூலையால வலைபின்னி விரித்து அதன் நடுவில் மறைந்து ஒளிந்துகொண்டு நன்றாயக் கொழுத்துப் பெருதத ஈ ஒன்றுதன வலைக்குள் வந்து மாட்டிககொள்ளும படியாய் வெகுநாள் காத்திருந்த பினபு, கடைசியில் அந்தப் பக்கம அகஸ்மாத்தாய்வந்த ஈ வலைக்குள் விழுந்து சிக்கிக கொணடவுடனே, சிலந்திப் பூச்சி அதன்மேல் பாய்ந்து தன நூலையைக் கக்கி அசையாதபடி அதைக் கட்டுவதுபோல், புல்வியனும கிறீஸ்துவனொருவனைப் பிடித்து அவனைப் பசப்பி மயக்கித் தன கைவசப்படுத்தி அவன் வழியாய் தன் துர் எண்ணத்தை நிறைவேற்ற வேண்டுமென்று வெகு காலம் ஆவலோடு காத்துககொண்டிருந்தான். அதற்குத் தகுந்த ஆள் தன் கைக்குள் இப்போது மாட்டிக்கொண்டானென்று புல்வியன் நினைத்து ஆனந்த சந்தோஷமடைந்தான்.

துர்குவாதன் தனக்கு ஏற்ற ஆள் என்று புல்வியன் எப்படி அறிந்தான் என்றாலோ, துர்குவாதன் நல்ல கிறீஸ்துவனானால், மிதந்தப்பி அப்படி குடிக்கமாட்டானென்றும தன் வேதத்துக்காகச் சாகத் துணிந்திருப்பதாய் வீண் சப

தங்கூறி சிலாக்கியத்தோடு சொல்லமாட்டானென்றும் புல்வியன நன்றாய் அறிந்திருந்தான். அங்கு கூடியிருந்தவர்கள் தம சபை நடுவில் ஒரு கிறிஸ்துவன இருக்கிறானென்று அறிந்ததும, பெருங்குஷ்டம பிடித்த ஒருவனைக் கண்டால் எப்படி அவன் கிட்ட நிற்காமல எல்லாரும ஓடிப்போவார்களோ, அப்படியே இங்கும அங்கும் சிதறிப் பிரிந்து கலைந்துபோனார்கள். புலவியனமாத்திரம பாபியனுக்குங் கோர்வினனுககும என்னமோ காதுக்குள ஓதினபின்பு, தூாகுவாதன் கிட்டப்போய: "நான கேட்ட சில கேளவிகளால் நீ யாரென்று சொலலும்படி நேரிட்டது. இந்த விஷயத்தால் உனக்கு பெரும ஆபத்து உணடாகும்" என்று சொல்ல, தூாகுவாதன மனதில கலங்கிப்பயந்து "என்ன வந்தாலும வரட்டும. நான் உறுதியாய நிற்பேன" என்றான்.

"அப்பா! நீ இப்படி இரைந்துபேசாதே. யாராவது கேட்டால் உன்னைக காட்டிககொடுப்பாாகள். அடுத்த அறைக்குள்வா சாவகாசமாய இருந்து பேசலாம" என்று அவன கையைப் பிடித்து இழுத்துககொணடு போனான.

இவர்கள் போன அறை வெகு அலங்காரமாய ஜோடித்திருந்தது. வெள்ளிப் பாத்திரங்களும கிண்ணங்களும, தினுசு தினுசான மதுபான வகைகளுஞ், சம்பூரணமாய சித்தஞ் செய்யப் பட்டிருந்தன. இந்த அறைக்குள, புலவியன் குறித்த நிபந்தனைப்படி, கோர்வினன மாத்திரம வந்தான். பலவாணக்கல்லாலாய மேஜைமேல சூது விளையாடும்படி தாயக் கட்டைகளிருந்தன. புல்வியன பாத்திரத்தில் மதுபானம் ஊற்றி தூாகுவாதனுககுக் கொடுத்தான். அவன் கொடுக்க கொடுக்க, இவனும தாராளமாய் வாங்கிச் சாப்பிட்டான். இவன் கிறீஸ்துவனுக்குமுன பெருங்குடிகாரன்,

தொட்டில் பழக்கம்போல் அவனைவிடாமல் ஒட்டிக் கொண்டே வந்தது. குடிக்க குடிக்க கண்கள் சிவந்துமருண்டது. நாக்கு நன்றாய் அசைந்து நாலுபக்கமும் சுழன்றது. தக்க சமயம் வருமட்டும் காத்திருந்த புலவியன் மேஜையிலிருந்த தாயக்கட்டையை எடுத்து சோதிப்பதுபோல் திருப்பித் திருப்பிப் பார்த்தான். பார்த்தவன் மேஜைமேல் அதை உருட்டினான். உருட்டிச் சொல்வான்; "சீச்சீ! என்னது அதிர்ஷ்டம்! யாரோடாவது விளையாடும்போது இப்படித் தாயம் விழுந்தால் நஷ்டந்தான். துர்குவாதா! எங்கே, நீ போடு பார்க்கலாம்."

துர்குவாதன் சூது விளையாட்டில் சமர்த்தன். குடியுஞ் சூதும் இவனுக்குத் தொட்டில் பழக்கம். புல்வியன் நீட்டிய தாயக்கட்டையை சும்மா பார்க்கும்படி என்று வாங்கினான். வாங்கவும் அவன் கை அக்கினிபோல் கொதித்தது. வாயில் ஜலம் ஊறினது. இதழ்களிரண்டும் படபடவென்று ஆடினது. இவ்விதக் குறிகளைப் புல்வியன் கவனமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தான். துர்குவாதன் தாயக்கட்டையை வாங்கினதும், திருப்பித் திருப்பிப் பார்த்ததும், எல்லாம் அவன் சூது விளையாட்டில் எவ்வளவு பற்றுதல், பிரீதி உள்ளவனென்று காட்டியதைப் புல்வியன் குறித்துக்கொண்டான். ஒருவிசை, அதுவுங் கடைசி விசை, விளையாடிப்பார்க்கலாமென்று துர்குவாதன் மனதில் நினைத்தான். அவன் நினைவை, " அடுத்ததுக்காட்டும் பளிங்குபோல், நெஞ்சம் கடுத்தது காட்டுமுகம் " ஆதலால், முகத்தில் புலவியன் கண்டான். கண்டவன் துர்குவாதனைத் தூண்டி இழுக்கும்படி சொல்வான்: " ஏது? என்னைப்போல் நீயும் இந்த விளையாட்டில் சமர்த்தனல்லப்போல் தோன்றுகின்றது. ஆனால் நீ கோர்வினனோடு ஏதாவது சொற்பபந்தயம்

வைத்து விளையாண்டால் உனக்கு அதிர்ஷ்டம் வந்தாலும் வரும்."

"என்னமோ ஒருகை பார்க்கலாம். ஆனால் புல்வியா! கேள். வெகு சொற்ப பந்தயத்துக்குத்தான் நான் விளையாடுவேன். சூது விளையாட்டு மகா கெட்டது. இதை என்றும் விளையாடுவதில்லை என்று தீர்மானித்திருக்கிறேன். முன்னொரு காலத்தில் நான் . ஆனால் அதைப்பற்றி இப்போது நினைக்கக்கூடாது."

புல்வியன் கோர்வீனனைக் கண் சமிக்கையால் தூண்ட கோர்வீனன் சொல்வான்: "துர்ருவாதா! இதோ தாயக் கட்டை; எடுத்து விளையாடி பார்க்கலாம். யார் கெலிப்பார்?"

இருவரும் வெகு சொற்ப பந்தயம் வைத்து தாயம் போட்டார்கள். துர்ருவாதன் எப்போதும் ஜெயித்து வந்தான். புல்வியன் சமயத்துக்குச் சமயம் பாத்திரத்தில் மது பானம் நிறைய ஊற்றி துர்ருவாதன் கிட்ட வைப்பான். அவன் குடிக்க குடிக்க பேச்சும் அதிகப்பட்டது. அந்தரங்க செய்திகளை யெல்லாம் சொல்லத் துவக்கினான்: "நேற்று நான் உபாத்தியாயர் காசியான வீட்டிலிருந்து பேசிக்கொண்டிருக்கையில் யாரோ ஒருவன் பெயரைச் சொன்னான். ஓ! அந்தப் பெயர் கோர்வீனன். பங்கிராஸ் என்ற செல்வ பாலியனோடு இவன் ஒருநாள் சண்டைக்கு நின்றானாம். உதித்துப் பெருத்த தேகமுள்ள பெருந்தடியனாம்."

கோர்வீனன் இதைக்கேட்டவுடனே கோபவெறியால் மனம் பொங்கிக் கொதிக்கும்போது புல்வியன் அவனைத் தடுத்து சமய உசிதமாய் துர்ருவாதனை நோக்கி: "அந்த காசியான் நன்றாய்ப்படித்துத்தேர்ந்த பண்டிதர் அல்லவா?

அவர் இருக்கிற ஊரின்பெயர் இன்னதென்று உனக்குத்தெரியுமா?" என்று கேட்க தூர்குவாதன சொல்வான்:

"காசியானு? அவா இருக்கிற ஊர் ... ஓ நான் சொல்லமாட்டேன. துரோகம; காட்டிக்கொடுக்கவா? என் உயிர்போனலுஞ சொல்லமாட்டேன."

இவ்வளவு தூரம் தூர்குவாதனை மயக்கினபின்பு, புல்வியன், கோாவீனனுக்குப்பதில் விளேயாடும்படி, வந்தான்: பநதயம வர வர உயாநதது. தூர்குவாதன துவககத்தில் சில சமயம கெலித்தான். பாத்திரத்தில் மதுபானம ஊற்றி இவன் கிட்ட புலவியன் வைப்பான் குடிக்க குடிக்க விளையாட்டில் ஆசைபிறநதது. தொகை ஏற ஏற ஆத்திரம உணடானது. அவன் மனச்சான்று அவனைக் குத்தி எழுப்பினது பொலிககாாப எனற குரு தன் சமீபத்தில நின்று தனக்குப் புத்திமொ கிப்பதாக நினைத்து பதைத்து அஞ்சினன். தேவ இஷ்டபிரசாததத்தை இழநதான. பணப்பிசாசு இவன் மனசில புகவெ இநத பிசாசோடு வேறு ஏழுகொழுத்த பசாசுகளும துணையாய் வநதன. பசாசுகள் குடியேறின மனதில் பரிசுத்தமும் நன்மையும இல்லாமல் மறைநதுபோயின.

தூர்குவாதன மதுபான மிகுதியால் மதியை இழநதான். சூது விளையாட்டில் பணத்தை இழநதான், இவன் கையிலிருநத பணமெல்லாம அதோகதியாய்ப் போய்விட்டது. பாதாளக்குழியில விழுநதபின் அறிவு வந்தது. தன் நிர்ப்பாக்கியத்தைக கண்டு பெருமூச்சுவிட்டான். அவநம்பிக்கையால் பல்லை நெருநெரென்று கொரித்தான. அனலில விழுந்த புழுபோல் நெளிநதான. தன தலைமயிரைப பிடுங்கினுன். யாரோ காதுககுள்: "நீ இன்னஞ் கிறீஸ்துவனு?

எத்தனை பசாசு உன்னைப் பிடித்திருக்கின்றது? வெறி எடுக்குமட்டும் குடித்தாய். குடிவெறியில் அந்தரங்க செய்திகளை எல்லாம வெளியிட்டாய். உன் வேதத்தை மறுத்த துரோகியானாய். படுகுளியில் வந்து விழுந்தாய். இனித்தப்பிக்க வழியிலலை. எங்கேபோனாலும் அகப்பட்டுக் கொண்டாய்.'' என்று இவ்விதஞ் சொல்வதாகக் கேட்டான்.

இவனுக்குக் கொஞ்சம நல்ல அறிவுந துணிவும் வர: "துஷ்ட பசாசே அப்பாலே போ. எலலாம இன்னமுழுகிப்போகவில்லை. கிறீஸ்துவாகள் என்னை மன்னிப்பார்கள். சர்வேசுரன் தயை..." என்று சொல்ல—

"சீ சீ! வெட்கங் கெட்டவனே! அந்தத்தேவ நாமத்தை உன அசுத்த வாயால் சொல்லாதே. தேவ சாபம உன் தலைமேல் நிற்கின்றது. சீ! ஊதாரி, இனியார் உன்னை எட்டிப்பார்ப்பா? குடிகாரா! கையில் ஓடெடுத்து இனி நீ காலக்ஷேபஞ் செய்யவேண்டும். சீ! என்று உன்னை எல்லாருஞ் சிரிப்பாசிரிக்க இந்தப்பாழும உடமபெடுத்தாய். நீயா கிறீஸ்துவன்!"

"யார் என்னை இப்படிப் பழிககிறது." என்று துர்க்குவாதன தலைநிமிரந்து பாரக்க, புல்லியன் பிடிதது வைத்த பிள்ளையாரபோல் எதிரே நின்றான். "இருக்கட்டும் புல்லியா! நீ சொல்வது போல நான இதுவெல்லாம் செய்திருந்தால் உனககென்ன?''

"எனக்கென்னவா? கேள். நீ இப்போது என கைககுள் அகப்பட்டுககொணடாய் உனனுடைய பணமெல்லாம் என் கையில விழுநதது. உன் உயிரும பெயரும் என் கையில் இருக்கிறது. நீ செய்ததையும சொன்னதையும் கிறீஸ்துவர்களிடம வெளியிட்டால் உன்னை சபையை

விட்டு தள்ளிப்போடுவார்கள் நீ தடியனென்ற கோர வீனன உன்னைத் தன் தகப்பனிடம இழுத்துவிட்டால் உன்னைப்படாத பாடுபடுத்தி அணு அணுவாய் உன் உயிரைப் பறிப்பார்கள். ஆஹா! எனக்கென்னவா?"

துர்குவாதன் ஊதாரிப்பையனைப்போல் தன தந்தை வீட்டுக்குத் திரும்பிப் போகத் துணியவில்லை. விசுவாசம நமபிக்கை அவன் மனதினின்று அறவே நீங்கினது. போக்குகதி இன்னதென்றறியாமல மௌனமாய் நின்றான.

புல்வியன் அவனைத் தட்டியெழுப்பி: "நல்லது என்ன யோசிக்கிறாய்? குடி வெறியோடு கிறீஸ்துவாகளிடம போவாயா அல்லது நீதி சாலையில் கைகட்டி நிற்பாயா? அல்லது நான் சொலவதுபோல் செயவாயா?"

"அப்பா! கிறீஸ்துவர்களிடம எபபடி நான் வெட்கமின்றிப் போவேன? சித்திரவதைப்பட என்னால் ஏலாது. உன் இஷ்டமபோல் நான செயகிறேன்"

"ஆஹா! இப்போ புத்தி வநதகா துர்குவாதா? பயப்படாதே. நான் சொல்வதுபோல செய; எல்லாம நன்றாய் முடியும. உனக்குப் பேரும பெருமையும, காசும பணமும் உண்டாகும. எல்லாததிற்கும நான் இருக்கிறேன்."

"அப்போ புல்வியா சொல் நான் என்ன செயயவேணடும்?"

"கேள்; நாளை அதிகாலமே எழுநதிருநது மகா பக்தி சிரத்தையுள்ள கிறீஸ்துவன்போல் உன் மதஸ்தரிடம்போ. யாதொன்றும உனக்கு சம்பவியாததுபோல் அவாகளுடன் சேர்நது கலநது பேசு. அவர்கள் சொல்வதையுஞ் செயவதையும் நன்றாய்க் கவனி. அதன் பின் என்னிடம வநது நடந்ததெல்லாம எதார்த்தமாய்ச சொல்."

துர்குவாதன் பெருமூச்சுவிட்டு: "ஆ! துரோகம்! சதிதுரோகம! நானு! விசுவாசகாதகன! அக்கிரமம்! எநத மனிதனும இப்படிச் செயவானு?" என்றதைப் புல்வியன் கேட்டு சொலவான:

"துரோகமோ ஏதோ? இவ்வளவு தூரம பாதாளத்தில இறங்கின நீ இனனம ஒரு அடி எடுதது வைக்கமாட்டேனென்கிறாய்? தமபி தமபி! இனி தப்பிக்க உனக்கு வழியிலலை. நான் சொலவதுபோல நீ செயயாவிடில் உன கதி அதோகதியாயபபோகும. உன்னைத் துண்டு துண்டாய் வெட்டி உன உயிரைப பறிப்பேன. கோவினன் வெளியில எனககாக காததுககொணடிருககிறான். நேரமாகின்றது. சொல் கடைசி வாாததை என்ன?"

"ஆ! தெயவமே! என்ன செயவேன்! சாகவா எனககு மனமிலலை. அப்போ நீ சொன்னதுபோலச செய்கிறேன."

புல்வியன் வெளியே போனுன். கோவினன் குடிவெறியாலுங் கோபவெறியாலுந் தட்டித தடுமாறி, முட்டி மோதி, கையை உதறி, காலை உதறி, வாயில வநதபடி எல்லாரையுந திட்டிககொண்டிருநதான. புலவியன் அவனுக்கு நல்லது சொல்லி சமாதானம பேசி கடைசியில அவனை இணக்கிக் கொண்டுவநதான.

தூர்குவாதன் தான் இருநத அறையைவிட்டு வெளியே வரவும தலைமயக்கங்கொணடு பமபரமபோல் கிறுகிறென்று சுற்றினுன். கணணைத துடைத்து அங்கும இங்கும நடநது தன்ஸ்வயஸ்திதிககு வருமபடி பிரயாசப்பட்டான். அவனிருநத வீடு மேலுங்கீழுஞ் சுற்றி சுழல்வதுபோல் தோன்றினது. நெஞசம பதைத்துத் துடித்தது. வெட்

கமும், நாணமும், மனக்குத்தும், தன்னைக் கெடுத்தவன் பேரில் பகையும், தன்பேரிலே அரோசிகமும், நரகவாசிக்குரிய அவநம்பிக்கையும், இவன் மனதில் பெரும் அலைகள்போல் எழும்பிப் பொங்கி ஒன்றோடொன்று மோதி உடைந்து கொதித்து கொந்தளித்து இவன் மனதை வெகுவாய் உபாதித்தன. நிற்க சக்தியின்றி அடியற்ற மரம்போல் கீழே விழுந்தான். தன் முகத்தை இரண்டு கைகளாலும் மூடிக் கொண்டு பெருமூச்சுவிட்டு விம்மி அழுதான். குடி வெறியின் மயக்கம் தெளியாததால் இன்னம் வீடுங் காடுஞ் சுற்றிச் சுழல்வதாகத் தோன்றினது. இந்தச் சமயத்தில் புல்லியன் இவன் கிட்ட வந்து இவனைத் தட்டி எழுப்ப துர்குவாதன் திடுக்கிட்டு எழுந்து கண்களை உருட்டித் திரட்டி பேய் ஆவேசம் கொண்டவன்போல் மிழித்துப் பார்த்து: "யார் இது? பேயோ பூதமோ? கனவோ நினைவோ?" என்று திணறிப் புலம்பினான்.

# இரண்டாம்பாகம்—யுத்தகளம்.



## முதல் அதிகாரம்—தியோஜெனன்.

சுரங்கஸ்தலங்களின் விசாரணைக்கர்த்தா.

முதற்பாகத்தில நாம விவரிததுக் காட்டிய வர்த்தமானங்களெல்லாந திருச்சபை வேத கலகமின்றி சமாதான நிலையிலிருநத சுபகாலததில் நடநதவைகள். ஆகிலும் சமாதானகாலமென்றால வெகுகாலம நீடிய சமாதானமென்று எண்ணலாகாது. பிரசணடமாருதமாய் எழும்பி அடித்த புசலுக்குப பின்னும, மின்னலும இடியும மழையும உணடாகுமுன்னும், எங்கும அமரிக்கையும நிர்சபதமும இருப்.

பதுபோல் கொடிய வேத கலகம ஒன்று உண்டான பின்னும வேறொன்று உண்டாகு முனனும நடுமததியில் வரும அறைகுறையான சமாதான காலமிதுவாதலால் நீடித்த நிலேயுள்ள சமாதானமெனலாகாது.

இவ்வித சமாதானகாலத்திலும் இனி வர இருநத யுத்ததகதுக்குரிய பல குறிகள் சிற்சில சமயங்களில் தோனறின. நாம முன சொன்னதுபோல் மிருகங்களின் மாவிலிருந்து சிங்கங்கள் காசசிகதுரு சப்தத்தைப் பங்கிராசுஞ் சிபஸ்தியாருங் கேட்டாாகள். கீழத்திசை தேசங்களில் அஞ்ஞானிகள் மூாககாவேசமாய் எழுமபி கிறீஸ்துவாகளின கோவில்களேயும வீடுகளேயும அககினிக்கு இரையாககின தாக புல்வியனும் கோாவீனனும் தங்களுககுள் பேசிக்கொண்டார்கள்.

என்றும சர்வ ஜாக்கிரதையாயிருநது தன் பிள்ளேகளேப் பராமரித்துவரும திருச்சபை கொடிய வேதகலகம ஒன்று உண்டாகப் போகின்றதென்று பற்பல அடையாளங்களால் அறிநது அந்த யுதத காலததுக்கு ஏற்ற வழி வகை உபாயங்களே முன்னிதாயத் தேடித் தயார் செய்திருந்தது.

எதிரதாக்காக்கும அறிவினாக்கில்லே
அதிர வருவதோர் நோய.

துன்பம் வரு முன்னமே அதற்கு ஏற்ற வழி வகைகளேத் தேடுகிறவர்களுக்கு அவாகள் மயங்கிக் கலங்குமபடியான பொலலாப்பு யாதொனறும வரா என்பது அநுபவ சித்தாநதமல்லவா? இவ்வித யுத்தகாலத்திற்காகத் திருசசபை செய்த பகிரத பிரயத்தனங்கள் இன்னதென்றும 'யுத்தகளத்தில் இறங்கித் துணிவு குன்றாது சர்வேசுரனுக்

காகப போா தொடுத்து, ஜெயங்கொணடு, வெற்றி முடி தரித்தவர்கள் யாரொன்றும இவாகளுக்குக் கொடுங்கோல் அரசன் விதிதத சித்திர ஆக்கினை இத்தன்மைதடுதென்றும் இவை போன்ற பல விநோத விருத்தாந்தங்களை இநத இர ண்டாம பாகததில விரிவாய் விவரித்துக் காட்டப் போகின் றோம.

லூசினுள் என்ற பதிவிரதையின் செல்வ புத்திரன் பங்கிராஸ் பனியுங் குளிரு நிறைநத ஒக்டோபர் மாசத்தில் ஒருநாள் இராவிருள் அடர்ந்து நெருங்கிவருமபோது நன் ருய் போர்த்திககொண்டு இராஜதானியின கடைசி முனையி லிருநத தெருவினவழியாய் ஏதோ ஒரு வீட்டைத் தேடி மகா துரிதமாய் நடநது போனுன். இவன் போன தெரு வில், ஏழை எளிய ஜனங்கள் முக்கியமாய்க் குடியிருநதார் கள. எளிய ஜனங்களாயினும மகா அயோக்கியரும அக்கி ரமிகளுமான இழி ஜனங்கள். பங்கிராஸ், துர்க்கந்தம் நிறைநத பாதைவழி நடப்பவன் துரிதமாய் நடப்பது போல், சற்றும நில்லாமல விரைநது நடநது அநதத தெரு வின கடைசியிலிருந்த வெகு சுததமான வீட்டின்கிட்ட சென்று கதவைக் கையால் தட்டினுன. உடனே நரை திரைவிழுநத விருததாபபியா ஒருவா வநது கதவைத் திறந தார். தேக வளர்த்தியும, விரிந்து அகன்ற தோளும் உள் ளவர். பெரும்பாரச சுமை எடுக்கும வழக்கத்தாலோ, ஏதோ, அவா நடககுமபோது சற்று குனிநது கூனி நடப் பார். தலைமயிர் நரைத்துப் பனிககட்டிபோல் வெண்மை யாகி சுருண்டு, வெளளிச் சுருள்போல் தொங்கி விழுநதது. அவருடைய முக நோக்கும பொதுவில் சாந்தம அமரிக்கை யைக் குறித்தாலும் துக்கமும் கவலையுமுள்ளதாகத் தோனு

றும். இவ்விருத்தாப்பியனைப் பார்த்தவர்கள், இவர் இறந்தவர்கள் க்ஷேமிக்கப்படும் மசான இடத்திலிருந்தாலும், என்றுந் திர்ப்தியுஞ் சந்தோஷமும் உள்ளவரென்று சொல்வார்கள். இவருக்கு மாஜன், சேவேரன் என இரண்டு பிள்ளைகள். இருவரும் வெகு திடகாத்திரமும் புஜபராக்கிரமும் உள்ளவர்கள். பங்கிராஸ் இவர்கள் வீட்டில் வந்தபோது, மாஜன் கருங்கல்லில் சில எழுத்துக்களை உளியால் வெட்டிக்கொண்டிருந்தான். சேவேரன் மரித்த லாசரை சேசுநாதர் சுவாமி உயிர்ப்பித்த புதுமையைக் காட்டும் சித்திரப் படத்தை கருங்கல்லில் உளியால் பதித்துக்கொண்டிருந்தான். தகப்பனும் பிள்ளைகளும் கிறீஸ்துவர்களின் பிரேதங்களைச் சுரங்கங்களில் க்ஷேமித்து அவர்கள் கல்லறைமேல் கருங்கல்லில் பெயர், ஊர், குணம் முதலிய விவரங்களைப் பதிப்பித்து சமாதி கட்டுவார்கள். இந்த அலுவலை செய்யும்படி நியமிக்கப்பட்டிருந்த பலருக்கு கியோஜெனஸ் விசாரணைக் கர்த்தா.

பங்கிராஸ் இவர்கள் செய்த பற்பல வேலைகளையெல்லாம் கவனமாய்ப் பார்த்துக்கொண்டு வரும்போது வெகு பளபளப்பாய் தீட்டிய கருங்கல் சுவற்றோரம் இருப்பதைக் கண்டு அது என்னத்திற்கென்று கிழவனைக் கேட்க, கிழவனர்: மாசற்ற ஓர் சிறு பையன் இறந்த பின்பு புண்ணிய சீலரான அவன் தாயதந்தை தங்கள் பிள்ளையின் ஞாபக அறிகுறியாக இந்தக் கல்லில் அவன் பெயர், ஊர், விவரம் எல்லாம் பதித்து அவனை க்ஷேமித்த ஸ்தலத்தின் மேலிதை வைக்கப் போகிறார்களென்று சொன்னர். பங்கிராஸ் தீபத்தைக் கையிலெடுத்து கல்லின்கிட்டப் போய் அதிலிருந்ததைப் பின் வருமாறு வாசித்தான்.

"மாசற்ற இச்சிறுவன் பெயர் தியோனீசியுஸ்: இவன் இங்கு அர்ச். வாகன மத்தியில் நித்திரை செய்கிறான். சகோதரா! இதை எழுதினவனையும் எழுத்தைக் கல்லில் பதித்தவனையும், உன் ஜெபத்தில் மறக்காதே."

பங்கிராஸ் இதை வாசிக்கவும் மனங்கனிந்து "பாக்கியம் பெற்ற பாலா! இக்கல்லில் எழுதியிருப்பதை வாசிப்பவனுக்காகவும் பிரார்த்திக்க நீ மறவாதே" என்று சொல்ல, சூழ்ந்திருந்தவர்கள் அப்படியே ஆகக்கடவது என்று ஆசிவசனங் கூறினார்கள்.

அதன்பின் கிழவனார், கோடரி எடுத்து வேலை செய்தவர், அதன் பூண கழன்று போனதால அதைத் திருமபமாட்டிக்கொண்டிருந்தார். கண்ணிலிருந்து கண்ணீர் ஒடிவந்ததின் நிமித்தம் பூணைச சரியாய் மாட்டக்கூடாமல் வருந்தப்பட்டுக்கொண்டிருப்பதை பங்கிராஸ் கண்டு: "ஐயா கிழவனாரே! இச்சிறுவனுடைய சமாதிக கல்லின் வாக்கியம் ஏன உமக்கு இவ்வளவு துக்கம உண்டாக்குகின்றது" என்று கேட்க கிழவனார் கண்ணைத் துடைத்துச் சொல்வார் "பங்கிராஸ்! நான் இதை வாசிக்கும்போது என் மனதில் உண்டாகும் யோசனை ஏதென்றால், நமக்கு முன் இருந்த நமது சகோதரர் சேசுநாதசுவாமிக்காக எவ்வளவு துன்ப வேதனைபபட்டார்களென்றும் இப்போது நம்முடன கூட இருப்பவர்கள் இனி எவ்வளவு பாடுபடப்போகிறார்களென்று நினைக்கும்போது என் மனங்கனிந்து உருகுகின்றது. ஆகிலும் இச்சிறுவனுடைய பிரேதத்தை எளிதில் கையில எடுத்து மெழுகு துணியில் சுற்றி வாசனைத திரவியங்கள் கமகமவென்று நிறையப் பரப்பி கல்லறைக்குள் வைக்கலாம். ஆனால் திடகாத்திரமுந்தேக வளர்த்தியுமுள்ள

வாஸிட்டினுடைய சரீரந் துண்டு துண்டாய் வெட்டப்பட்டு, சதைகள் சிதறித்தெறித்து விழுந்துபோனால் இவைகளையெல்லாம் இரகசியமாய்ப் பொறுக்கி எடுத்து ஒன்றாய்ச் சேர்த்து வாசனைத் திரவியங்களுக்குப் பதில், சுண்ணாம்பு நீற்றுத துணியில் சுற்றி ஒரு குளிக்குள்போட்டு, ஆத்திரத்தோடு மண்ணைத் தள்ளுவதென்றால், பங்கிராஸ், இந்தக் கொடும் வேலையை என்னைப்போல கல் நெஞ்சுள்ளவர்கள் மாத்திரம் செய்யத்துணிவார்கள். (கிழவனார் இதைச் சொல்லும்போதே அவர் கண்களிலிருந்து தண்ணீர் ஓடி விழ அவரும் கையால் அதைத் துடைத்தார்.) ஆ பங்கிராஸ்! வேதசாட்சிகளின் சரீரத்தை பக்தியாய் வணங்கி, பூஜிதையுடன் அடக்கஞ் செய்யாமல் இப்படி அவசர ஆத்திரத்துடன் கல்லறைக்குள் போடும்படியான துன்பகாலம் வருகின்றது."

"ஆனால் ஐயா! போர்வீரன் தான் யுத்தஞ் செய்து மரித்த போர்க்களத்திலேயே அடக்கஞ் செய்யப்பட ஆசையாயிருப்பானே அன்றி சிறந்த கல்லறையைத் தேடுவானா? அதிருக்கட்டும். நீர் இப்போது விவரித்துச் சொன்னது போலே வேத கலகம் உண்டாகுங் காலத்தில் துண்டுதுண்டாய் வெட்டுண்டு மரிக்கிறவர்கள் அநேகம் பேர்களுண்டா?"

"ஆ! அநேகம், அநேகம் பேர்களுண்டு. இந்தக் கல்லில் பதிந்திருப்பதை வாசி. ரொஸ்திதூத்தஸ் என்ற வாலிபன் ௰௮-வயதில் வேதசாட்சி முடிபெற்றான். இவன் கல்லறையை நாங்கள் கட்டும்போது ௰௨-வயதுள்ள ஓர் சிறு பையனுடைய சரீரத்தை க்ஷேமிக்க கொண்டுவந்தார்கள். அதைப் பார்த்தால் கல் நெஞ்சும் கரைந்துருகும். துஷ்டர்

இச்சிறுவனை நெருப்பில்ப் போட்டு வாட்டினதால் சதை எல்லாம வெந்து போக எலும்புகள் மாத்திரந் தெரிந்தது. முக ரூபஞ் சாயல் ஒன்றுமில்லை. ஐயோ இச்சிறுவன் எவ்வளவு கொடிய வேதனை அநுபவித்திருக்கவேண்டும். அதை நினைத்து இப்போது நான் அழுது பிரயோசனமென்ன?"

"ஐயா! இந்தப் பையன் என்னிலும் இளையவன்தானே. இவனுக்கு வந்த பாக்கியம் எனக்கும வரமாட்டாதா? கொடிய வேத கலகம் ஒன்று துவக்கப் போகின்றதாம். இவனுக்கு நீர் செய்தாப்போல் எனக்கும சில நாளுக்குப்பின் செய்யும்படி நேரிடமாட்டாதா? கிழவனுரே! என்ன நினைக்கிறீர்?"

தியோஜெனன் தன கண்ணிலிருநது மள மளவென்று திரும்பவும ஓடி வநத தண்ணீரைத் துடைத்துச் சொல்வார் :—

"அப்பா! பங்கிராஸ் அப்படிச் சொல்லாதே. நீ வாலிபனுனதால் இன்னம வெகு வருஷம் இருக்கவேண்டும. நானு கிழவன் உனக்கு முந்தி நான் அல்லோ போகவேண்டும். ஆனல் சில சமயங்களில் கிழட்டு மரங்களைவெட்டாமல் நல்ல இளங் கன்றுகளை வெட்டி விழத்தாட்டுகிறுர்கள்."

"சர்வேசுரன் சித்தம்போல் ஆகட்டும். ஐயா நான் உம்மிடம் வந்த காரியம் இன்னதென்று சொல்ல மறந்து போனேன். நாளை அதிகாலமே நீர் என் வீட்டுக்கு வரவேண்டும். அர்ச். பாப்பும, பங்கு விசாரணைக் குருக்களும், இன்னும் பல உத்தியோகஸ்தரும், அங்கே வந்து கூடப் போகிறுர்கள். வேத கலகம வருவதினிமித்தம அதற்கு முன் தகுந்த ஆலோசனை, ஏற்பாடுகள் செயயப்போகிறுர்கள். சுரங்க ஸ்தலங்களையுந் தயார் செய்யவேண்டும்."

"நல்லது, பங்கிராஸ், தப்பாமல் நான வருகிறேன்"

"இப்போது கிழவனுரே ஓர் உபகாரம உங்களிடங் கேட்கப்போகிறேன, இலலே என்று சொலலக்கூடாது."

"உபகாரமா! எனனிடத்திலா!"

"ஆமா உமமிடநதான. நீா இப்போது சுரங்கங்களு க்குள் அடிக்கடி போக நேரிடும் அல்லவா? அங்கே நான் பலமுறை ஜெபஞ்செய்யும்படி போயிருநதாலும எங்குஞ சுற்றிப் போய்ப் பாாத்ததிலலே. நீா தயவு செய்து என்னே ஒரு நாள் கூட்டிபபோய் எல்லாப் பாகங்களேயுங் காட்டி விவரிக்கவேண்டும. சுரங்கங்களேப்பற்றி உமக்குத் தெரிந த அளவு வேறு எவாக்குந தெரியாதாய."

"பங்கிராஸ்! மெதத சநதோஷத்துடன் உன்னேக் கூட்டிப்போவேன். நான அரச். பாப்புவைப் பார்த்த பி ன்பு, கலிஸ்தா எனற சுரங்கத்துக்குப் போகும்படியான அ லுவலிருக்கிறது. அப்போது நீயுங் கூடவா."

"கிழவனுரே! நான் மாததிரமல்ல. என்னேடு கூட புதிதாய் ஞானஸ்நானம பெறற இரண்டு வாலிபாகளும வ ருயபடி மெத்தவும் ஆசையாய் இருக்கிறுர்கள். அவர்கள் வருகிறதற்கு ஏதும் விக்கினமில்லேயே?"

"பங்கிராஸ்! உனக்கு சிநேகிதராயிருப்பவர்கள் எவ ரும் விக்கினமின்றி வரலாம. ஆகிலும் இந்த ஆபத்தான காலத்தில் கொஞ்சம் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது அவர்கள் பெயர் இனனதென்று உனக்குத் தெரியுமா?"

"ஒருவன் மாஜி நகர்அதிகாரி குரோமாசியனுடைய மகன், திபூர்சியன். வேறெருவன் பெயர் துர்குவாதன்."

துர்குவாதன் பெயரைக் கேட்டவுடனே, சேவோரன் திடுக்கிட்டு: "பங்கிராஸ் அநதத் துர்குவாதன் நம்பிக்கை

யுள்ளவனு? சுரங்கத்துக்குள் அவனைக் கூட்டி வருவதில் ஆபததில்லையா?'' எனறு கேட்க, கிழவனர் தன மகனைத் தடுதததுச் சொல்வார்: "அப்பா! மகனே பங்கிராஸ் கூட யார் எவா வநதாலும அவன் நமபிககையுள்ளவனுய்த்தான் இருக்கவேண்டும. நீ ஒன்றுககும பயப்படாதே."

அதற்கு பங்கிராஸ் சொலவான். "நிபூாசியனை நான் நனறுய் அறிவேன. சிறநத நற்குணமுள்ள செல்வன். பக்தியும் புத்தியுமுள்ளவன். துர்குவாதனைபபறறி அவ்வளவு நன்றுய்த் தெரியாது. ஆனால அவன நமமைச் சாாந்த சகல விஷயங்களையும அறியவேணடுமெனறு தீராத ஆசையாய் இருககிறுன. சேவேரா! நீ அவன் நிமித்தம பயபபட ஏது காரணம?"

"ஓ! அறபக் காரியம. இன்றுகாலமே நான சுரங்கதது க்குப் போகும்போது ஸ்நான ஜாலைககள பககம போனேன."

பங்கிராஸ் சிரித்துககொணடு: "ஓ! ஓ! பிரபுகளுந துரைகளும வநது கூடும ஸ்நான ஜாகைகளுககு நீயுங் கூடவா போகிறுய?'' எனறு கேட்க, சேவேரன சொல்வான்: "பங்கிராஸ் அதறகாக அலல, அநத ஜாகைகள் கிட்ட காவற்காரன வீடு ஒனறு இருககிறதலலவா? காவறகாரனும அவன மனைவியுங் கிறீஸ்துவாகள. அவாகளைப் பார்க்கும்படியாய்த்தான் நான போனேன்."

"ஆ! அவர்கள இருவருங் கிறீஸ்துவாகளா? ஏன்? இப்படியானுல நமம கிறீஸ்துவாகள் பட்டணம எங்கும பரமபியிருக்கவேணடும. ஆனுல நீ துாகுவாதனைப்பற்றி அலலோ பேசிக்கொணடிருந்தாய. அதனபின நடநததென்ன?"

"நான் அநதப் பக்கமாய் வரும்போது துர்குவாதனு ங் கோர்வீனனுங்கூடி வெகு இரகசியமாய் காதுககுள்

ஏதோ சொல்லிக்கொண்டிருந்தார்கள். இந்தக் கோர்வீனன் யாரென்று உனக்குத் தெரியுமா? அக்நேசி வீட்டில் சில நாளைக்கு முன் ஏழை எளிய ஜனங்களுக்கு யாரோ ஓர் புண்ணியவான் பேரால தர்மங் கொடுக்கும்போது இந்தக் குறப் பயல் நொண்டியைப்போல் வேஷமெடுத்து வீட்டுக்குள்ளே வந்தான. இப்போப்பட்ட எமகாதகனோடு கூடியிருப்பது கிறீஸ்துவனுக்கு யோக்கியமாகுமா?

"துர்குவாதன் புதுக் கிறீஸ்துவனானதால் இந்த விஷயம இவனுடைய பழைய சிநேகிதர்களுக்குத் தெரியாமலிருக்கலாம். ஆனால் போகப் போக அவனுக்கு நல்ல புத்தி வரும்."

இரண்டு சகோதரரும பங்கிராசோடு துணையாகமேற் சொன்ன தெருவின் கடைசிமட்டுங் கூடப்போய் க்ஷேமமாய் வழிவிட்டபின் தங்கள் வீட்டுக்குத் திருமபிவந்தார்கள்.

---

## உ-ம். அதிகாரம்.

### சுரங்கங்களைச் சார்ந்த விவரங்கள்.

---

இச்சரித்திர ஆரம்பத்தில் லூசீனாவென்ற பதிவிரதையின் நற்குணம் நற்செய்கைகளைப்பற்றிச் சுருக்கமாய் சில விஷயங்களைச் சொன்னபின்பு அவளைப் பின் நாம் முற்று மறந்து போனதாக சிலருக்குத் தோன்றலாம். இப்பாக்கியவதி பகிரங்கமான வெளி விஷயங்களில் ஒன்றுங் கலந்து கொள்ளாமல் தன் வீட்டுக்குள்ளிருந்து, இல்லறப் பயிற்சியில் நிறை தவறாது ஒழுகி வந்தவளாதலால் இவளைப் பற்றி விரிவாய்ச் சொல்ல ஏற்ற சமையம் வரவில்லை. இவள் வீட்

டின் ஒருபாகம், இராஜதானியில் அப்பக்கம் இருந்த கிறீஸ்துவர்களுக்குக் கோவிலாயிருந்ததுமன்றி இவள் வீடே வேத கலகம் நடக்குங்காலத்தில் அரச. பாப்புவுக்கு வாசஸ்தலமாயும் இருந்தது.

லூசீனுளுக்கு சுமார் நாற்பது வயதாகும் போது தியாக்கோன சபையிற் சேர்ந்து, பெண்பாலாரான தரித்திர ஏழை எளியவர், வியாதிஸ்தர், முதலியவர்களுக்கு உதவி ஊழியஞ் செய்வதும், தேவாராதனை பூசைக்கு உரிய வஸ்திராபரண பாத்திரங்களைச் சம்பாதிப்பதும், சம்பாதித்தவைகளைக் காப்பாற்றுவதுஞ், சிறு பிள்ளைகளுக்கும் ஞானஸ்நானம் பெற ஆயித்தஞ் செய்யும் பெண்களுக்கும் ஞானோபதேசங்கற்றுக் கொடுப்பதும், ஆகிய இவ்வித தாம செய்கைகளில் தன் ஜீவிய நாட்களைச் செலவழித்து வந்தாள். இவளுடைய செல்வ புத்திரன் பால பிராயத்திலேயே தன்னை முழுதும் தேவ ஊழியத்துக்கு ஒப்புக்கொடுத்து சத்திய வேதத்துக்காகத் தன் இரத்தத்தைச் சிந்தத் தயாராயிருந்ததால் இவ்வித பக்தி சிரத்தையுள்ள மகனைப் பராமரித்துக்காப்பாற்றி அவனுக்காக அநுதினஞ் சுவாமியைப் பிரார்த்திப்பது தாய்க்கு அதி ஆனந்தமேயன்றி பிரயாசை இதில் ஒன்றுமில்லை.

நாம் மேற்சொன்னதுபோல் குறித்தநாளில் ஆலோசனை சங்கத்தார் லூசீனுள் வீட்டில் வந்து கூடினார்கள். சுரங்கங்களின் மராமத்துக்காகவும், இறந்தவர்களைத் தக்கவகையாய் க்ஷேமிக்கவும், வேதகலகக்காலத்தில் துன்பப்படுகிறவர்களுக்கு உதவி செய்யவுஞ், சிறையிலுள்ளவர்களைப் போஷிக்கவும், வேதசாக்ஷிகளாய் மரித்தவர்களின் சரீரங்களை விலைக்கு வாங்கவும், இன்னும் பல செலவுக்கும் வேண்டிய.

பணந் தர்மமாக வாங்கிச் சேர்க்கும்படி ஏற்பாடுகள் பல செய்தார்கள். இதுவுமன்றி ஆங்காங்கு நடக்குஞ் சங்கதிகளையும், அதிசய விசேஷங்களையுங், குறிக்கும்படியாய் ஒவ்வொரு பாகத்திற்கும ஓர காரியதரிசியை நியமித்தார்கள். சிறையில் அடைப்பட்டிருபபவர்களுக்குத் தகுந்த நாட்களில் தேவ சற்பிரசாதங் கொணடுபோய்க் கொடுக்கவும, அந்தந்த சுரங்கங்களில பூஜை தேவாராதனை நடத்தவும, பங்கு விசாரணைக் குருககளையும நியமித்தாகள்.

சுரங்கஸ்தலங்களைப் பற்றிய ஏறபாடுகள் இவையென்று அறிநதபினபு, தியோஜெனன், சாவேசுரனுக்காகச் சற்று ஜாக்கிரதையுடன வேலை செய்யுமபடிக்கான காலம வந்ததால, மனதில் சநதோஷங்கொண்டு அவரும அவர் பிள்ளைகளும வெளியே வநதாாகள். அங்கே இவாகளுக்காக மூன்று வாலிபா காத்துககொண்டு நிற்க அம்மூவரையுந தியோஜெனன் தன்னோடு கூட்டிக்கொண்டு இரண்டு மயில் தூரம நடந்த பின்பு கடைசியாய் எல்லாருஞ் சுரங்கத்தின் வாயிலில வநது சோநதாாகள். அதில் இறங்குவதற்கு அவசியமான தீபமும், வெளிச்சமும், எத்தனங்களும, எல்லாந தயாராயச் சித்தஞ் செய்யப்பட்டிருந்தன. உள்ளே இறங்கும்போது, இரணடு இரணடு பேராய் மாத்திரம போகக் கூடுமாதலால், சேவேரன தான் துர்குவாதனோடு துணையாய்ப் போவதாக ஒப்புககொணடான். இவன் இப்படி ஏற்பட்டதற்குக் காரணம இன்னதென்று நாம சொல்லத் தேவையில்லை.

பூமியின் கீழிருக்கும சுரங்கங்களில் இறங்கும்படியாய் பலபடிகளுண்டு. இப்படி இறங்கிப் பாறைபோல் கெட்டியாயிருக்கும் தரைமட்டும் போனால் அது சுரங்கத்தின்

முதல் அடுக்கு. அதிலிருந்து படிகள் வழியாய் இன்னுங் கீழே இறங்கினால் இரண்டாம அடுக்குக்கும அதன் பின் மூன்றும அடுக்குக்கும போகலாம். சுரங்கத்தின பல அடுக்குகளெல்லாம ஒரே அளவாயும ஒழுங்காயும வெட்டப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு அடுக்கிலும போக வர நடுவே சிறு பாதையும் இருபக்கத்திலுஞ் சிறு அறைகளும இங்கும் அங்கும் கோவில்களும இருக்கின்றன. நடுவில போகும்பா தை நீண்டதாகவுஞ் சில இடங்களில் இருவா மாத்திரஞ் சேர் ந்து நடக்கும்படியான குறுகிய அகலமுள்ளதாகவும இருக் கும. பலபாதைகள் பல இடங்களில் வந்து கூடி ஒன்றோ டொன்று கலந்தும, பிரிந்துஞ் சேர்ந்துஞ், சுற்றுஞ் சுழலு மாயிருப்பதால் இச்சுரங்கபாதைகளின விவரம அறியாத வன் உள்ளே நுழைந்தால் அவன் தப்பிப்பிழைத்து வெளி யே வருவது அசாத்தியம.

இப்பாதைகளின் இருபக்கத்திலும, படிகளிருக்கும் இடத்திலும, பிரேதங்களை க்ஷேமிக்கும்படி பெரிதுஞ் சிறி துமான துவாரங்கள் ஒன்றின்மேலொன்றாய் வெட்டி இரு க்கின்றன. இந்தத் துவாரத்துக்குள் பிரேதத்தை வைத்த பின்பு கருங்கல்லால் அதன் வாயை நன்றாய அடைப்பார் கள். இந்தக் கல்லின்மேல்தான் இறந்தவன் பெயர், ஊர், வயது முதலிய விவரங்களைப் பதிப்பது வழக்கம.

சேசுநாதர் சுவாமி மரித்தபின்பு அவர் சரீரத்தைப் பாறையில் வெட்டியிருந்த அறைக்குள் வைத்து அடக்கஞ் செய்ததின் ஞாபக அறிகுறியாக ஆதிகாலத்துக் கிறீஸ்துவர் களும் இறந்தவர்களை க்ஷேமிக்க பூமிக்குள் சுரங்கங்கள வெ ட்டி, கல்லில் சிறு அறைகள் தடுத்து, அவைகளில் க்ஷே மித்ததாகச் சில சரித்திர நூலாசிரியர் சொல்லுகிறார்கள்.

இதினிமித்தமே நமது தேசத்துக்கிறீஸ்துவர்களும இறநத வாகளை அடக்கஞ் செய்யும இடத்தை நாளதுமட்டும் கல் அறை என்பாாகள். அறை என்பதால, இறநதவாகள் சேசு நாதர்சுவாமி தஙகளை ஆத்தும சரீரத்தோடு உயிாப்பிக்கும நாள் மட்டும, இச்சிறு வீட்டில ஆவலோடு காததிருககிறுர் கள் என்கிற நமபிககையைக் குறிப்பிடுகின்றது.

நாம் இங்கு வெகு சுருக்கமாய் விவரித்த விஷயங்களைத் தியோஜெனன் தன்னேடு கூட வநத மூவர்கசூம விரிவாயுந தெளிவாயும் அநதந்த இடங்களைக கையாற் சுட்டிக் காண பித்துஞ் சொல்லிக கொணடு வருமபோது, தூர்குவாதன் திகில்கொண்டவனபோல் நாலு பக்கமுஞ் சுற்றிப்பார்த்து கேட்பான்:

"நாம் இநதப் பாதையை விட்டுப் போகுமுன்னே எத்தனை விசை சுற்றிசசுற்றி வநதிருக்கின்றேமென்று க ணக்கில்லையா?"

இதற்குச் சேவேரன சுழித்த முகத்தோடு சொல்வான்:

"நாம் வநத சுறறுக்குக் கணக்கு வழக்கில்லை."

"ஆனல் எத்தனை சுற்று இருக்கலாம? இருபதா? முப்பதா?"

"அதுவுமிருக்கலாம்; அதற்கு மேலும் இருக்கலாம"

"இபபடி வலது பக்கமாய்த திருமபவேண்டுமென்று ஏதாகிலும அடையாளமுண்டா? அதோ ஒரு மாடம். அது எனனத்திற்கு?"

இப்படிக் கேட்டுக்கொண்டே தூர்குவாதன் அவ்விடத் தில் ஒரு குறி இரகசியமாய்ப் போடுவதைச் சேவேரன அறிந்து கொண்டான்.

" தூர்குவாதா ! வா, நேரமாகின்றது. இல்லாவிடில் நமக்கு முந்திப் போகிறவர்கள் எந்தப்பக்கம் போகிறார்களென்று நமக்குத் தெரியமாட்டாது. திரும்பும் இடங்கள் தோறும் தீபம வைக்கும்படி ஓர் மாடம் இருப்பதை நீ பார்க்கலாம். ஆனால் எங்களுக்கு இந்தச் சுரங்கத்திலுள்ள மூலை முடுக்குகள், சந்துபொந்து எல்லாம் மனப்பாடமாய்த் தெரியும். விளக்கு அவசியமில்லை."

தூர்குவாதன் தீபம வைக்கும இடங்களைப் பார்த்ததுங் கொஞ்சஞ் சந்தோஷமடைந்தான. தான் வந்த சுற்றுப் பாதைகள் இத்தனையென்று கணக்காய் எண்ணிப்போனது மன்றி சில விசேஷ இடங்களில கரியால் அடையாளமும தெரியாதபடி போட்டுக்கொண்டு போனான். ஆனால் இவனோடு துணையாய்ப போன சேவேரன் இவன் செய்த ஒவ்வொன்றையுங் குறித்துப பாரத்துககொணடான்

இப்படி எல்லாரும நடந்து போய் கடைசியில் ஒரு பெரிய அறைக்குள் வந்தார்கள். இதில் பல வேதசாக்ஷிகளின் சரீரங்களை க்ஷேமித்து அவரவா திருநாள் வரும் போது பூஜைசெய்து ஒபபுக்கொடுப்பது வழக்கம. இந்த அறையின சுவறறிலும், மேல தட்டிலுஞ், சித்திரங்கள் பல எழுதியிருந்தன. இவைகள் வேதத்தின் பல வர்த்தமானங்களையும, விசுவாச சததியங்களையும விவரித்துக்காட்டின. தூர்குவாதன் மேல்தட்டிலே இடையன் ஒரு ஆட்டுக் குட்டியைத் தன் தோள்மேல் போட்டு நிற்கும் பாவனையைப் பார்த்து இதின் விவரம இன்னதென்று தியோஜெனனைக் கேட்க, கிழவனா சுவிசேஷத்தில் சேசுநாதர்சுவாமி சொலலிய, நல்லமேய்ப்பன் உவமையை விவரித்து, பாவிகள பேரில் சேசுநாதருக்குள்ள சிநேகமும் கவலையும் இம்மிரத்

திரமென்று துலக்கிக்காட்டுமபடி செய்த சித்திரமென்று சொல்லும்போது, துர்குவாதன் மனமிளகினவன்போல் நின்றான்.

துர்குவாதன்மனதில் தோன்றிய மாற்றத்தைக் கருத்தாய் பார்த்து வந்த சேவேரன், சர்வேசுரனுடைய அநுக்கிரகப் பிரசாத உதவியின் உசித சமயம் இதுவென்று நினைத்து, அவன் மனந்திரும்புவதற்கான புத்திகளைச் சாடையாயச் சொன்னான்.

" ஓ! சேசுநாதாசுவாமி எவ்வளவோ அன்புள்ள நல்லமேய்ப்பன்! எவ்வளவுதான் ஒருவன் பாவங்களைச் செய்து அவரை விட்டுப்பிரிந்து ஓடிப்போனாலும இந்த நல்ல மேய்ப்பன் ஓடிப்போன ஆட்டைத் தேடிபபோவார்."

துர்குவாதன் பெருமூச்சு விட்டு, நின்று நின்று, சத்தந்தடுமாறப்பேசிச் சொலவான: " ஆனால எனககொரு சந்தேகந் தோனறுகிறது. அஞ்ஞானியான ஒருவன் கிறீஸ்துவனான பின்பு, துரோகியாய தன் வேதத்தை மறுத்து, பாவத்தின் பாதாளத்தில தான விழுந்து கெட்டதுமன்றி, தன சகோதரரையே காட்டிககொடுகக எத்தனித்திருந்தால் இப்பேர்பட்டவன் மனந்திருமபி திருச்சபையாகிற தாயைத் தேடி வருமபோது இந்தத் தாய் அவனை ஏற்றுக்கொள்வாளா?"

" ஏற்றுக்கொள்வாள் என்பதைப்பற்றி அற்பமுஞ் சந்தேகமில்லை: திருச்சபை தாய்களுக்குள் உத்தமதாய்."

துர்குவாதன் கணணில ஓர் துளி ஜலம் ததும்பி நின்றது. தன் குற்றத்தை அங்கீகரித்துப் பொறுத்தல் கேட்க அவன் உதடுகளை அசைய நாக்கை எடுத்தான். ஆனால் கடும நஞ்சு தொண்டைக் குழியட்டும்,ஏற திக்குமுக்கடைந்தவன்

போல் திணறினான். இளகத்துவக்கின தன் மனதைக் கல்லாய் மாற்றி, கண்களை உருட்டித் திரட்டி, உதட்டைக் கடித்து: "யாருக்கிது தேவையோ அவனுக்கிது ஏற்ற புத்தி" என்று தன பலலுக்குள் சொல்லிக்கொண்டான.

துர்குவாதன் முகத்தில தோனறிய பல அடையாளங்களை எல்லாம் பாாத்து வந்த சேவேரன, சாவேசுரன அவனுக்குக் கடைசி மட்டும அனுப்பிய அநுக்கிரகப்பிரசாத உதவியை நிர்பபாக்கியமாய இழந்து போனானே என்று வெகு விசனப்பட்டான்.

வீட்டுக்குப்போக நேரமாயிற்றென்று திருமபும வழியில், ஒரு சிறு கோவிலிருந்தது. அதில தேவமாதா தன் திவ்விய பாலனைக் கையிலேநதியிருக்க, கீழ்த்திசை தேசங்களிலிருந்து வந்த அரசாகள் அவனை ஆராதிக்குஞ் சித்திரம இருப்பதை எல்லாரும ஆச்சரியத்துடன நின்று பாாத்தார்கள்.

இன்னும வேறு இடங்களைக் காட்டுமபடி கபடற்ற கிழவனார் போகுமபோது சேவேரன் அவனைத் தடுத்து அவ்வளவு போதுமென்று எல்லாரையுஞ் சுரங்கத்திலிருந்து வெளியே வேறே பாதை வழியாயக் கொண்டு வந்து விட்டான்.

அவரவர் தங்கள் வீட்டுக்குச் சென்ற பின்பு, சேவேரன் துர்குவாதன் சங்கதியை எல்லாம தன் தம்பிக்குச் சொல்லி இருவருஞ் சுரங்கத்துக்குள் திரும்பவும் போய், துர்குவாதன் போட்டிருந்த அடையாளங்களை எல்லாம் அழித்ததுமன்றி இவனைக்கூட்டிப்போன பாதையையும் முழுதும் அடைத்துப் போட்டு வேறு பக்கத்தில் பாதை திறக்கும்படி எத்தனித்தார்கள். இதற்காக வேறோரிடம்

தில் குவித்து வைத்திருந்த மண் எல்லாம் இங்கே கொண்டு வந்து உள்ளே வரும் கிறீஸ்துவர்களுக்குத் தங்கள் எண்ணத்தை முந்தி அறிவித்தபின்பு பாதையை அடைக்கவேணுமென்று தீர்மானித்துக்கொண்டார்கள்.

## ௩-ம். அதிகாரம்.

### இராஜ ஆலோசனை சங்கம்.

உரோமான அரசாட்சிக்குள்ளிருந்த கீழ்த்திசை தேசங்களில் கொடுங்கோல் செலுத்திய தியோகிலேசியன், கிறீஸ்துவர்கள் விர்த்தியாகாதபடிக் கொடிய வேத கலகம் எழுப்பிக் கிறீஸ்துவர்களை அகோரமாய் உபாதித்து வருத்தினதுபோல் மேல்திசையிலும் வேதகலகமென்னும் பெரும் அக்கினியை வளர்த்து மூட்டவேண்டுமென்று தன் சகோதரனாகிய மாக்சிமியனுக்கும் ஓர் திருபம் எழுதி அனுப்பினான்.

மாக்சிமியன் புலிப்பால் உண்டு வளர்ந்த வன்னெஞ்சனாதலால், கிறீஸ்துவர்களைச் சர்வ சங்காரஞ் செய்து அடியோடும் வேரோடும் அழிப்பதே யுக்தமென்று தீர்மானித்தான். இதற்காக பிரதமத்தில் இவர்களுக்குத் தலைமையாகவுங் குருக்களாகவும் இருப்பவர்களைப் பிடித்து வதைத்துக்கொன்றபின் மற்றச் சமானிய ஜனங்களை எளிதில் மடக்கிக் கொடுமையாய் வருத்திக்கொல்லலாமென்று எண்ணியிருந்தான். இந்த கிஷ்டூர அலுவலை அநுகூலமாய் முடிக்கும்படிக்கான வழிவகைகளைத் தேடவும், இந்த வேலைக்காகத் தெரிந்துகொள்ளப்படுகிறவர்கள் எல்லாரும் ஒன்றாய்க் கூடி ஒரு மனமாய் நடக்கவும், இக்கொடிய அலுவல், இராஜ சட்

டப் பிரமாண முத்திரையுடன் சமபிரமமாய் நடந்தேறவும், ஏற்ற சாதனக கருவிகள் இன்னதென்று ஆலோசிக்கலா• னுன்.

இதின் அநுகூலத்திற்கு, இராஜ சட்டத்தை மேல் திசைத் தேசங்களிலுள்ள சகல பட்டணங்களிலும ஏக காலத்தில் பிரசுரமபணணுமபடியாய், அதை எவருககும் காட்டாமல் கடைசிநாள்மட்டும மறைதது வைப்பது நலமென்று தோனறியது. இடியு மினனலுஞ் சூலாககொணட கரும மேகங்கள் இரா விருள் மறைவில் பலதிசைகளிலிருநது தலைமேல வநது கூடிசசோநத பினபு, அதிாநது முழங்கித் தொனித்து, இடி பலடொனறு விழுவதுபோலக் கிறீஸதுவாகளைச சர்வ சங்காரஞ்செயய ஏதுவான கொடிய ஏறபாடுகளெல்லாம வெகு இரகசியமாயச செயது முடிதத பினபு, சடுதியில் அவர்கள் எலலாரையும பிடித்துககொள்ளலாமெனறு கொடிய அரசன தன் மனதில திணணமாய் எணணியிருநதான.

மாகசீமியன் தனது இராஜ சமஸ்தான ஆலோசனை சங்கத்தாரை நவமபா மாததநில் வநது கூடுமபடி அழைத்ததால் பல இடங்களிலுமிருநது மநதிரி, பிரதானிகள், உத்தியோகஸ்தரான பலபோகள் வநதாாகள். இராஜதானியின் நகர் அதிகாரி தேர்த்துல்லியன் தன் மகன கோவீனனையுஞ் சங்கத்துக்குக கூட்டிவநதான. கிறீஸ்துவர்களைத் தேடிப் பிடித்து இழுததுக்கொண்டுவருமபடியாய் நியமிக்கப்பட்ட முழு முரடரும மூடருமான சேவகர்களுக்குத் தலைவனுயிருக்கும்படி இநதக கோவீனனை இவன தகப்பனே குறித்திருநதான. இனனும இஸ்பானியா, கலலியா, சிசீலி முதலிய நாடுகளிலிருநது அதிகாரிகளுஞ், சாஸ்திரிகளும்,

வித்வான்களும், வாசாலகத் திறமையுள்ள பண்டிதோத்தமர்களும், வந்திருந்தார்கள். இங்கு கூடிய சாஸ்திரிகளுக்குள்ளே 'மஹா சாஸ்திரிவாள்' என்று சிறந்த பட்டம் பெற்ற நமது கஸ்தூரண சாஸ்திரியாரும் இருந்தார். இவர்களன்றி, கோவில் பூஜாரிகளும் தம்பிரான்களும், கிறீஸ்துவர்கள் பேரில் அபாண்டமான பழி சுமத்தி அவர்களைச் சர்வ சங்காரமாகக விண்ணப்பம் பண்ணவேண்டுமென்று மாக்சீமியனே அழைத்ததின்பேரில், இவர்களும் வந்தார்கள்.

இவர்கள் எல்லாருஞ் சங்கங்கூடும்படி மகா அலங்காரமாய்க் கட்டியிருந்த விஸ்தாரமான ஓர் அரண்மனையைச் சித்தஞ் செய்தார்கள். இவ்வரண்மனை மலையின் சாரலில், நல்ல வசதியான இடத்தில், நாலாபக்கத்திலுமிருந்த விநோத காட்சி தோற்றவனப்பால் கண்ணுக்கு வெகு இரமணீயமான ஸ்தானத்தில், அமைக்கப்பட்டிருந்தது. இவ்வித சிங்கார வனப்பமைந்த இடத்தை, மாக்சீமியன் தன் வாசஸ்தலமாகத் தெரிந்துகொண்டதால், அவன் அலங்கார கல்பன சக்தியுள்ளவனென்று எண்ணலாகாது. இம்மலையின் சமீபத்திலுள்ள காடுகளில் கரடி, கோநாய், முதலிய துஷ்ட மிருகங்களை எளிதில் வேட்டை ஆடலாமென்பதின் நிமித்தமே இந்த இடத்தை அவன் தெரிந்துகொண்டான்.

இராஜ பட்டத்தில் இப்போது அதிர்ஷ்ட வசத்தாலிருந்த மாக்சீமியன், ஸ்களாவோனியா நாட்டில நாகரீகஞ் சற்றும் புகப் பெறாத மிலேச்ச வம்சத்தில பிறந்து, சேவகத் தொழில் பிரவேசித்து, அதில பலவிதமான நிஷ்டூர செய்கைகளாலுந் தேக வலிமையாலும், சமர்த்தனென்று பெயர் பெற்று கடைசியில் இவனுடைய சகோதரனை நியோக கிலேசியனால் இராஜ பட்டத்துக்கு உயர்த்தப்பட்டான்.

அவனைப்போலவே இவனும் இழிகுணனும், பொருளாசை கொண்டவனும, ஊதாரியும, அயோக்கியமும் அருசியுமுள்ள துரச் செய்கைகளுக்குச் சாரபுளளவனும, நீதி, தயை, பரோபகார முதலிய இராஜ தாமங்களும மனுஷீக லெக்ஷணமுஞ் சற்றுமில்லாதவனுந தன கருததுககு இசைவாய வராத எவரையுங் கெடுத்து, வதைதது, உயிரை வாங்க கங்கணங்கட்டிபவனுமான சுபாவமுள்ளவன். இவ்வித நிஷ்டூர குணமுள்ளவனுக்குச சமீபத்தில் வர இருநத வேத கலகம, பேருண்டிப் பிரியனுக்குப பநதியிலிருநது விலாப் புடைக்க விருநதுப் பருக்கை சாபபிடுஞ் சமயம எவ்விதம பரிபூரண ஆனநதமாயிருககுமோ, அவ்விதமே இவனுக்கு மனரமமியங் கொடுத்தது. மாகசீமியன் இராக்ஷஸ பிறப்புப்போல் பாரிதேகமுளளவன். இவனஜாதியாரகரு இயலபாயுள்ள ஊகி உதிதது பெருத்த முகமுந, தலையிலும முகத்திலும அடர்நது வளாநது சடையாய பின்னிய மஞ்சள நிறமுள்ள ரோமமுந, துனமாாக்கங, கொடுமை, ஐயுறலாகிய இவைகளைக் காட்டும உருண்டு திரண்டு மருண்டு சுருளும இரண்டு கணகளும இவன இலக்ஷணமாயிருநதன. இவ்வித கோர ரூபமுள்ள கொடுங்கோலனைக கிறீஸ்துவன் தவிர மற்றெவனும பாரத்தால் பயநது நடுங்கி கைகால விட்டவிட்டுது, "கொடுங்கோன் மன்னன வாழு நாட்டில், கடும்புலி வாழுங் காடு நன்றே" என்று தனக்குள்ளே சொலவான். இநதத் துர ஆதமா கிறீஸ்துவாகளை ஜனமபபகை யோடு பகைத்தானென்று சொல்வதும அவசியமோ?

வேதவிரோதிகளான கொடிய அரசனும, அவன் மநதிர ஆலோசனை சங்கததாருங் கிறீஸ்துவாகளைச் சாவ சங்காரமாக்கும்படி கூடிய சபாமணடபம, பிறகாலத்தில் இரா

களும இவர்கள் ஆராதித்துவந்த ஜுபிதர், ஜுனோ முதல் பலகோடி குட்டித்தேவர்களை, தேவதைகளுங், கெட்டழிந்து சுட்ட சாமபலான பின்பு, இவர்கள் பகைத்து, விரோதித்த கிறீஸ்துவர்களின் பிரதான ஆலயமாகவும், அவர்களை ஆண்டு நடத்திவரும அர்ச். பாப்புவின் வாசஸ்தலமாகவும மாறிப்போகுமென்று அன்று சபதங் கூறிக்கூடிய மாக்சீமியனும் அவன மந்திரிமார்களுங் கனவிலும நினைக்கவில்லை.

சங்கமாய் வந்து கூடினவர்களில், தமபிரான்கள் எல்லாருக்கு முந்திப் பேசும்படி சுதந்தரம பெற்றிருந்ததால் ஒருவனுக்குப்பின் ஒருவனாய எழுந்து, தான இருக்கும பட்டணத்தில கிறீஸ்துவர்களாலே வந்த பல துன்பங்களை, இட்டுக்கட்டி சமயத்துக்கு இசைவாய் விரிவாய் வர்ணித்தான்.

இந்தப் பட்டணத்திலே ஓர் நதி பிரவாகமாய்ப் பெருகி தன் கரையை உடைத்து எங்கும பரவி வயல்களுக்குங் குடிகளுக்கும் பெருஞ் சேதம வருவித்ததாம. அந்த ஊரிலே பூகமபம ஒன்று உண்டாகி, அதிர்ச்சியால வீடுகள் விழுந்து பட்டணம நாசமானதாம. வடபாகத்தில் மகா துஷ்டரான மிலேச்ச ஜாதியார் படை எடுத்து வர பிரயத்தனஞ் செய்கிறார்களாம. தெற்கே பெருந் தொத்து நோய் ஊர் எங்கும் பரவி ஜனங்களை உபாதித்து, கொள்ளையோ கொள்ளையென்று உயிர்களை வாரிக்கொண்டு போகின்றதாம. இத்தியாதி துன்பங்களுக்குக் காரணமேதென்று தங்கள் சிலைகளைக் கேட்டபோது, இவைகளெல்லாங் கிறீஸ்துவர்களாலேதான் வருகின்றதென்றுங் கிறீஸ்துவர்களைத் தண்டியாமல் தயாளமாய் நடத்துவதால் தேவர்கள் கோபமா

யிருக்கிறார்களென்றும், கிறீஸ்துவர்களுடைய மந்திர தந்திரங்களால இவ்வளவு கஷ்ட நிஷ்டூரங்கள உண்டாகின்றதென்றும், தேவர்கள் சொன்னார்களாம. இன்னுஞ் சில இடங்களில், இந்தக் கிறீஸ்துவர்கள் ஆராதிக்கும பரிசுத்தரான சுவாமி அங்கிருக்கு மட்டும், தாங்கள் வாய் திறந்து பேசமாட்டார்களென்றும, அப்படிப் பேசாதபடிக்கு அவர் தங்கள் வாயை அடைத்துப்போட்டாரென்றும, சில சிலைகள் வெட்கமின்றி சொன்னதுகளாம.

தமபிரானகள் சொன்ன கதைகள் முடிந்த பின்பு சாஸ்திரிகளும, வாசாலக நிபுணருந், தாங்கள் அறிந்ததையுங் கேட்டதையும் விரிவாய் எடுத்து, கட்டியுங் கூட்டியும, பெருக்கியுந் துலக்கியும, விஸ்தரித்துப் பேசினார்கள். இவர்கள் இப்படி கதாப் பிரசங்கஞ் செய்கையில் மாக்சீமியன தன் சலிப்பைக் காட்ட பலமுறை பெருங் கொட்டாவி விட்டு இங்கும அங்கும் அசைந்து கண்ணைத் துடைத்து விழித்துப் பாரபபான். இந்தச் சாஸ்திரிகள், கிறீஸ்துவர்கள்பேரில வழக்கமாய்ச் சொல்லும பொய்யான விஷயங்களைப் பிரமாதமாய் எடுத்து புதிதாய் நடந்ததுபோலே சொன்னார்கள. அப்படியே, கிறீஸ்துவர்கள் அநீதர் என்றும், கொலைக்கு அஞ்சாத பாதகரென்றும, சிறுபிள்ளைகளைக் கொன்று சாப்பிடும மாம்ச பக்ஷணிகளென்றுங், கடவுளை வணங்காத நாஸ்திகரென்றும, இவைபோன்ற அபாண்டப் பொயகளைச் சொல்லும்போது கூடியிருந்த சங்கத்தார் எல்லாரும: "ஆ! தோஷம! ஆ! அக்கிரமம!" என்று வாயில அடித்து பரம யோக்கியரைப்போல் இரண்டு காதையுங் கையால் பொத்திக்கொண்டு உருத்திராட்ச பூனைபோல் அபிநயித்தார்கள். இந்தக் கதைகளை இட்டுக்கட்டிச் சொன்னவர்கள் இலைக

ளெல்லாஞ் சுத்தப் பொய் என்று அறிந்திருந்தாலுங் கிறீஸ் துவர்கள்பேரில் பகையும் பழியும எழுப்புவதற்கு ஏற்ற சாச னங்களென்று அறிந்ததால இவைகளை வாய் கூசாமல் சொ ல்லத் துணிந்தார்கள்.

இவர்கள் எல்லாரும பேசி ஆனபின்பு கடைசியில் ப ண்டிதோத்தமர்களுக்குள் மறறா பண்டிதனென்ப் பெயர் பெற்ற சாஸ்திரியார் எழுந்திருந்தார. இவா கிறீஸ்துவர்களின வேதாசாரம, ஒழுங்கு, கோட்பாடுகளையும, அவாகளுடைய மந்திர தந்திர மாயா ஜாலங்களையும, அவாகளுடைய மதக் கிரந்தங்களிலேயிருந்து வாசித்தவராம. இவர் எடுத்துக் கூறும் ஞாயங்கள் கிறீஸ்துவர்களின் வாயை அடைத்து அவர்கள் பேசாதபடி செய்யும பலத்த ஞாயங்களாம. இவ ர் எந்த விஷயத்தைப்பற்றியாவது ஞாயம எடுத்துப் பேசு மபோது பெரிய தமபிரான முதலாய் அவர் சொலவதைத் தடுத்து அது சரியல்லவென்று சொல்லத் துணியமாட்டா ராம. இவ்வித சாமாத்திய திறமையுள்ள சாஸ்திரியார பெ யா லோகப் பிரசசித்தமானதால் நாம அது இன்னதென்று சொல்லவும வேண்டுமோ ?

கல்பூரண சாஸ்திரியார் எழுந்தவுடனே, எங்கும் ஏக மௌனம உண்டாகச், சற்றுத் தூரத்திலிருந்தவர்கள இவ ர் வாயிலிருந்து வரும திவ்வியமான வார்த்தைகளை எலலாம ஒன்றுந தப்பவிடாமல் கேட்குமபடியாய் மெதுவாய்க் கிட் ட நகர்ந்து வந்து, இரண்டு கைகளையுந் தங்கள செவியின பின் விரித்துக் கண்ணைத திறந்து மூச்சுவிடாமல, உற்றுக கவனமாய்க் கேட்டார்கள். சாஸ்திரியார் எழுந்து சொல்

வா

"தேவத்துவ இராஜனே! கௌரவ நிறைந்த மந்திர ஆலோசனைச் சங்கத்தாரே! சகல சாம்பிராச்சியமும் உங்களுக்கு உண்டாகுக. யான் கிறீஸ்துவர்களுடைய மதப் பிரபந்தங்களையும் இவர்கள் முன்னோராகிய யூத குலத்தாச்சாரியர் எழுதிய கிரந்தங்களையும் ஆதியோடந்தமாய் மூல பாஷையிலே வாசித்திருக்கிறேன். இவர்கள் தாங்கள் முன் இருந்த நாட்டில், கொம்ம பஞ்சம் ஒருகால் வந்ததால் அதை விட்டு எஜிப்த தேசத்துக்குக் குடியாய் வந்தார்கள். இவர்களுக்குத் தலைவனாயிருந்த மோசேசு என்பவன் கபடமாய் அங்கிருந்த தவச தானியங்களை எல்லாம் வாங்கிக்கொண்டதால் அந்நாட்டு அரசனான பாலதசார் என்பவன் இவனைச் சிறையில் அடைத்து, இவர்கள் [illegible]ன் தேசத்துத் தானியங்களைச் சாப்பிட்டதற்குத் தண்டனையாக வைக்கோலால் செங்கல் செய்து பெருமண்டபம் ஒன்று கட்ட வேண்டுமென்று கற்பித்தான். அன்றியும் இவர்கள் தங்கள் ஜாதியாரைப்பற்றி மகா விநோதம் நிறைந்த கதைகள் சொல்வதைத் அரசன் கேள்வியுற்று இவர்களில் மகா சாஸ்திரிகளான மோசேஸ், ஆரோன், என்ற இருவரையும் பிடித்து அவர்களுடைய மீசையையுந் தாடியையும் பாதி மாத்திரஞ் சிரைத்து கோட்டைகதவ அடைத்து தங்கள் ஜாதியார் சரித்திரத்தை, கிரீக பாஷையில் எழுதச் செய்தான். சங்கத்தாரே! இவர்கள் எழுதிய அருமையான கிரந்தங்களை யான் வாசித்திருக்கிறேன். யான் உங்களுக்குச் சொல்லுவதெல்லாம் அவர்கள் பிரபந்தங்களிலிருந்து எடுத்துச் சொல்வதேயன்றி வேறில்லை. இந்த ஜனங்கள் மகா துஷ்டர். தாங்கள் போகும் வழியிலிருந்த சகல ஜனங்களோடுஞ் சண்டைசெய்து அவர்களை ஜெயித்து குடிகளை நாசமாக்கினார்கள். இவர்கள் வேத்ரகம கறபனைப் பிரகாரம் எந்த

ஊரைப்பிடித்தாலும் அதிலிருக்குந் தமது ஜனங்களை எல்லாம் ஒருவரையுந் தப்பவிடாமல் கத்திக்கு இரையாக்கவேண்டும்.

"இவர்கள் இவ்விதஞ் செய்யும்படி இவர்களைத் தூண்டி ஏவி விடுபவர்கள் இவர்களுடைய குருக்கள். பேராசை கொண்டவர்கள் ஒருகாலத்தில் இவர்களின் இராஜாவாயிருந்த சவுல் அல்லது பவுல் என்பவன் சிறையாக்கப்பட்ட அன்னிய தேசத்து அரசனுகிற ஆகாக் என்பனை விடுதலை செய்தபோது இந்தக் குருக்கள் கூடி தங்கள் அரசனைக் கண்ட துண்டமாய் வெட்டிக் கொன்றுபோட்டார்கள்.

"சங்கத்தாரே! இந்தக் கிறீஸ்துவர்கள் நாளது வரையிலுந் தங்கள் குருக்களின் கொடுங்கோன்மைக்குள் இருக்கின்றார்கள். இவர்களின் குருக்கள் ஒரு வார்த்தை சொன்னால்போதும். இவர்கள் நமது உரோமை அரசாட்சியை அடியோடு அழித்து நம்மெல்லோரையும் பட்டணத்தோடு சுட்டெரித்துப் போடுவதுமன்றி, தேவர்க்களான நமது இராஜாக்களின் திவ்விய சிரசையுங் கொய்து அவர்கள் இரத்தத்தையுஞ் சிந்த அஞ்சமாட்டார்கள்."

இதைக் கேட்டவுடன் எல்லாரும் மயிர் சிலிர்த்து, உடல் நடுங்கி, வாய் புதைத்து "ஆ தோஷம்! தோஷம்!" என்று வாயோடு சொன்னார்கள். அதன்பின்பு இராஜனே எழுந்து நின்று சொல்வான:

"மந்திராலோசனை சபையாரே! இந்தக் கிறீஸ்துவர்களை நாம் பகைத்து அழிக்கும்படி நமக்கு வேறோர் காரணமுண்டு. இவர்கள் இராஜ துரோகிகள். நமது இராட்சிய மத்தியில், நமது இராஜதானி நகரில், நமது அதிகாரத்துக்குள் அமைந்திராத வேறோர் மேலான ஞான அதிகாரத்தை ஸ்தாபித்திருக்கிறார்கள். உலக சம்பந்த விஷயங்களிலும

வேத விஷயங்களிலும நாம பரிபூரண அதிகாரஞ் செலுத்தி வருமபோது, இந்தக் கிறீஸ்துவர்கள் நமது அதிகாரத்தைக் குன்றத்து நமககுப பதில் வேறெருவனை வேத விஷயங்களில் தலைமையாய் நியமிப்பது தேச சட்டத்துக்கு முழுதும விரோதமானது. நமது பிரஜைகளான இந்தக் கிறீஸ்துவர்கள் இரணடு பரஸ்பர விரோத அதிகாரிகளுக்குக் கீழ்ப்பட்டு வருவதால இவர்கள இராஜ பக்தியுள்ளவாகளாகவுந், தேசாபிமானிகளாகவும இருப்பது கூடாத காரியம. தோளிலிருநது செவியைக் கடிபபதுபோல் நமது தேசத்திலிருநதுகொணடே இவ்விதமாய் நமது இராஜாங்கததுக்குப் பழுது எண்ணுபவாகளை நாம பாாததுக்கொணடிருப்பது தகுமா? இநதக் குருககளில் எவனும மது இராஜதானியில் அதிகாரஞ் செலுததுவதை நாம் பாாப்பதைவிட, நமக்கு விரோதியாய ஒருவன வநது நமது செங்கோலைக் கையினின்று பறிபபதை பாாப்பது நமககு அதிக சமமதம.”

மாக்சீமியன், பெருந குரலோடு, கொச்சைச் சொல்லால் பேசினுலுஞ் சங்கததார் எலலாருங் கரகோஷடஞ் செய்து ஆர்ப்பரித்து “சபாஷ், சபாஷ்” எனறு சொலலிப் புகழ்ந்து, இராஜ கட்டளையை மேறறிசைத் தேசங்களில் ஏக காலத்திலே பிரசுரஞ் செய்து, கிறீஸ்துவாகள் எல்லாரையும் பிடித்து இருநத இடமும போன இடமுந் தெரியாமல் அழிககுமபடி தக்க ஏறபாடு எலலாஞ் செய்தார்கள்.

அதன்பின் இராயன் தேர்த்துல்லியன் பக்கஞ் சடுதியில திருமபிக் கேட்பான்:

“ நகர் அதிகாரி ! இநத வேலையைப் பார்த்து நடத்தவும் கிறீஸ்துவர்களை இரக்கமின்றி உபாதிக்கவும் தக்க ஒரு

வன் இருப்பதாகச் சொன்னாயே. அவன் இங்கே வந்திருக்கிறானா?"

"மகா இராஜா! இதோ அஜீராய் நிற்கிறான். அவன்தான் என் மகன் கோவீனன்" என்று சொல்லி தோத்துலியன் தன் மகனை அரசன் முன் கூட்டிவிட, கோர்வீனன் முழங்கால் படியிட்டு இராய தேவத்துவத்தை வணங்கினான்.

மாக்சீமியான் தன் முன் நின்ற பெருந் தடியனை உற்றுப் பார்த்தபின், குலுங்கக் குலுங்கச் சிரித்துக்கொண்டு சொல்வான்:

"ஆஹா! வேலைக்குத் தகுந்தவன்தான். நகர அதிகாரி! ஏன்? உனக்கு இவ்வளவு கோர ரூபமுள்ள மகன் உண்டென்று நாம் நினைக்கவில்லை. தடி அடி வேலைக்குத் தகுந்த ஆள். பாவம் பழிக்கு அஞ்சாத பரமதுரோகிக்கு உள்ள குணங்களெல்லாம் இவன் முகத்தில் அச்சுப்போல் பதிந்திருக்கின்றதே!"

இதைச் சொன்னபின் கோவீனன் பக்கமாய்த் திரும்பினான். கோவீனன் முகமோ கோபத்தாலும், வெட்கத்தாலும், பயத்தாலும், கோவைப் பழம்போல் சிவந்துபோக அவன் தலை குனிந்து நின்றான்.

"அடே குறவா! நன்றாய் நிமிர்ந்து பாரடா. நமது குணம் இன்னதென்று உனக்குத் தெரியுமா? இட்ட வேலையைத் திட்டமாய்ச் செய்ய வழ வழப்பும், அரை குறையும் வரப்படாது. முட்டாள்ப்பயல்போல் குட்டிச் சுவரிலே முட்டிக்கொள்ளாதே. வேலைக்குத் தக்க கூலி. இட்டவேலையைச் செய்வதில் சொட்டு வந்தால் நீ பட்டு அறிவாய். நாம் சொல்வது விளங்குதா? அற்ப சொற்ப தப்பி

தஞ் செய்தால் அதற்கு உன் முதுகில் தெப்பல். அதற்கு மேல், தலைக்குப் பைசல் பார், நமது சேவகர்கள் கையில் தடியுமுண்டு தலையைக் கொய்ய கோடரியுமுண்டு.”

இவ்விதஞ் சொன்னபின் எழுந்திருந்துபோகும்போது புலவியன் ஒரு மூலையிலே மறைந்தாற்போல் நிற்பதைக் கண்டு: “ஓ! ஓ! நீர், கீழத்திசைப் பிரபு! சற்றுக் கிட்ட வாடா” என்று சொல்ல,

புலவியன், வெளியில் சந்தோஷமாய் வருவதுபோல் நடித்தாலும், புலியினிடம் பயந்து நடுங்கிப் போகிறவனைப் போல் கிட்ட வந்தான். இவன் இராஜதானிக்கு வந்த நாள் முதல் ஏது காரணத்தினாலேயோ இவன் மீது மாக்சீமியன் வெறுப்பாகவே இருந்தான். இவன் உளவாளியாய் அனுப்பப்பட்டதால், சிலவிசை நாமேன் சொல்வதையுஞ் செய்வதையுங் குறிப்பாய்ப் பார்த்து நியோக்கிலேசியனுக்கு இரகசியமாய் அறிவிக்கும்படி வந்திருக்கலாமென்று நினைத்தானோ ஏதோ அவனைக் காணும்போதெல்லாம் அரசன் மனதில் கோபமும் பகையும் பொங்கும். புலவியனை இவ்விதங் கடிந்து சொல்லால் பேசினதைக் கோவினன் கேட்டு இராயன் இருவருக்கும் ஒரே அளவாய் அளந்ததால் மனசில் கொஞ்சஞ் சந்தோஷங் கொண்டான்.

மாக்சீமியன் புலவியனைக் கூப்பிட்டுச் சொல்வான்: “அடே அந்தக் கள்ள வேஷம் எல்லாம் நமது கிட்டச் செல்லாது. உள்ளது உள்ளதுபோல் இருக்கவேண்டும். ‘காரியம் பெரிதன்றி வீரியம் பெரிதல்ல’ நீ இங்கே உளவாளியாயிருந்து இராஜத்துரோகிகள் யார் எவரென்று காட்டிக் கொடுத்து அவர்கள் சொத்துக்களை நம்முடைய கையில் சேர்க்கும்படி வந்தவனல்லவோ? இது மட்டும் நமக்கு [illegible]

றும் உன்னால் வந்ததில்லை. நீ பணம் மாத்திரம் செலவுக்கு வாங்கினதே அன்றி நமக்குப் பணம் வந்த வகையைக் காணோம். அடே! கிறீஸ்துவர்களிடமிருந்து நல்ல கொள்ளை அடிக்கலாம். நன்றாய் விழித்துப் பார். நம்முடைய சங்கதி உனக்குத் தெரியுமல்லவா? சற்று ஜாக்கிரதையாயிரு; இல்லாவிடில் பிரம்பும் கழியும் உன் முதுகில் சுரீர் சுரீர் என்று விழும். குற்றவாளிகளாய்ப் பிடிபடுகிறவர்களின் சொத்து நமக்குப் பாதியும் பிடிக்கிறவனுக்குப் பாதியுமாகப் பகுக்கப்படும். என்றாலும் விசேஷ காரணமிருக்கும் பட்சத்தில் சொத்து முழுதும் நமக்கே வந்து விடலாம். நல்லது நீ இப்போது போகலாம்.”

இராயன் விசேஷ காரணமென்றபோது, எப்போதும் அந்தக் காரணமுண்டாகி அவன் வாயிலே பறிமுதல் செய்யுஞ் சொத்தெல்லாம் விழுமென்று அங்கிருந்தவர்கள் அர்த்தம் பண்ணிக்கொண்டார்கள்.

---

## ௪-ம். அதிகாரம்.

### சகோதர சாமத்துரோகம்.

---

உடன் பிறந்தார், சுற்றத்தார் என்றிருக்கவேண்டாம் உடன் பிறந்தே கொல்லும் வியாதி, என்று ஔவையார் நாம் சிறுபிள்ளைகளாய் இருந்தகாலத்தில் நமக்குப் படித்துக்கொடுத்த இந்தப் பாசுரம் பலமுறை மெய்யாய் நடந்தேறிவருவதை நாம் அநுபவவாயிலாய் அறிந்து துக்கித்திருக்கின்றோம். நமக்குச் சுற்றத்தாரும், சொந்தத்தாரும், சகோதரருமாயிருக்கிறவர்களே நமக்குள்ளிருந்து நம்மை விரோதித்து நமக்குக் கேடு வருவிக்கத் தேடுவதை நாம் பார்க்

குடபோது, சில சமயம இருதயம வெடிதது பிளநதுபோ வதுபோல் அவஸ்தைப்படுகிறேமலலவா? இப்படித் து ரோகம் நினைப்பவாகள மனுஷ ஜெனமததிலும சோநதவர் களா? துாகுவாதன் இவ்வித சகோதர சாமத்துரோகம நினைத்து முடிதத கேவல மானிட விலங்கு.

குடிவெறியால் மயங்கிக கிடநதவன மறுநாள் காலை யில் மயககநதீாநது எழுநதான். எழுநதவன் கிடட புல்வி யன, புதையல காக்கும பூதமபோல, காத்திருநதான். துஷ் டசுபாவமுளள வைரியைப பிடித்தவன் அதுககு நல்ல இரைகொடுதது, பழகி வைதது, அதைககொணடு பின்னல் கபடற்ற புறவைப பிடிகக எத்தனிபபதுபோல, புலவி யனும துர்குவாதனைத தன் கைவசப்படுத்திய பினை அவனைக் கொண்டு கிறீஸ்துவாகளைப் பிடிககலாமென்று எணணி, அவன் மயக்கந தெளிநது எழுநதிருககுமட்டும காததிருந தான்.

துாகுவாதன் கணணைத் திறநது விழித்ததும, முந தினராத்திரியில நடந்த சங்கதிகளையெலலாம் புலவியன் அவனுக்கு ஞாபகப்படுத்தினுன்: அவன் குடியும் வெறி மயக்கமும, சூதுவிளையாடினதும, பணமெல்லாந தோற் றுப் போனதுந, தப்பிக்குமபடியாய இவன் காட்டின வழி யும, எல்லாம ஒன்றும் விடாமல் எடுத்துக் கண முன் வை த்தான்.

துாகுவாதன் தன் நிாபபாக்கிய ஸ்திதியை நினைத்து மதிமயங்கி, மனநதடுமாறி, செய்வது ஏதென்றறியாமல் மலை ததுப் புலமபுவான்: "ஐயோ தெய்வமே! இனி நான் என்ன செய்வேன்? கிறீஸ்துவர்களோடு நான போனுல் இந்த அஞ்ஞானிகள் என்னைப்பிடித்து சித்திரவதைசெய்து

இரக்கமின்றிக் கொன்றுபோடுவார்கள். புல்வியனோடு செய்த ஒப்பந்தப்படி நடந்தால துன்பமின்றி சுகமே வாழலாம். ஆனாலிப்படிச் செய்வது..."

தூருவாதன் இவ்விதங் கலங்கி மயங்கி நிற்பதைப் புல்வியன் கண்டு, இவனை வெளியே சற்று காற்றாட உலாவ வரும்படி கூப்பிட, அவனும் நல்லதென்று சம்மதித்து இருவரும் போகும்போது, கோாவினன் ஏதோ அகஸ்மாத்தாய் வருவதுபோல வந்துகூடி இருவருக்கும் ஆசார உபசாரஞ் செய்த பின்பு சொல்வான்

"உங்களை நான் இங்கே சந்தித்தது நல்ல அதிர்ஷ்டம். என் தகப்பனுடைய ஆயுதசாலையைப் பார்க்கும்படி என்கூட வாருங்கள். மகா விநோத காட்சி அது."

அதற்கு தூருவாதன: "ஆயுதசாலையா? அதென்ன?" என்று கேட்க, கோாவினன் சொல்வான:

"ஆயுதசாலையென்றால் நமது தேசச் சத்துருக்களாகிற கிறீஸ்துவர்களை வதைத்துக் கொல்லும்படியாய் பலவகையான ஆயுதங்களைச் சித்தஞ் செய்திருக்கிற இடம். அதோ நிற்குங் கிழவன், காவலன், நம்மை உள்ளே கூட்டிப்போய் ஆயுதங்களையெல்லாம் நமக்குக்காட்டி விவரிப்பான்."

எல்லாரும் உள்ளே பிரவேசித்தார்கள். விஸ்தாரமான அந்தச் சாலையில பல வகையான கொடிய எத்தனங்கள் வரிசை வரிசையாய் இருந்தன. இவைகளைப் பார்த்துத் தூருவர்தன் பயப்படுவதைக் காவலன் கண்டு: "மித்திர! நீ ஏன் பயப்படுகிறாய்? கிறீஸ்துவனாயிருந்தால்த்தான் பயப்படலாம். ஆ! இவைகளை நெருப்பில காய்ச்சி அக்கினிமயமாயிருக்கும் போது நீ பார்த்தால அப்போதல்லோ நடுநடுங்குவாய்."

கோர்வீனன் சொல்வான். "கதுலா! இந்த ஆயுதங்களெல்லாம் எப்படி உபயோகிக்கும்படியாய் செய்யப்பட்டிருக்கின்றனவென்று இவனுக்குக் கொஞ்சம் விவரித்துச்சொல்."

கதுலன் வெகு சந்தோஷத்தோடு ஒவ்வொரு ஆயுதமாய்க்காட்டி அதின் குணமின்னதென்று சொல்லிக்கொண்டு போகும்போது, ஓரிருசமயத்தில் தன்னை மறந்தாற்போல், தான் விவரிப்பதற்கு உதாரணமாக ஆயுதங்களைச் சுழற்றும்போது துராசுவாதனுடைய கண்ணுக்குங் காதுக்குஞ் சில சமயங்களில் பெரும் ஆபத்துவருவதாயிருந்தது.

கூர்மையுள்ள அணிகள் நிறைந்த சக்கரங்களுஞ், சதையைப் பிடுங்க குறடுகளும், உருக்கின ஈயத்தை வாயில் ஊற்ற அகப்பைகளும், இரும்புக்குண்டுகள் நுனியிலுள்ள சவுக்குகளும், வளையங்களுஞ், சங்கிலிகளும், வாள், ஈட்டி, கோடரி, கட்டாரிகளும் இன்னும் பலவிதமான பயங்கர ஆயுதங்களும் இருந்தன. கதுலன் இவைகளை ஒவ்வொன்றாயக் காட்டி, இரத்தத்தைக் கண்ட புலியைப்போல், பூரித்த மனத்தோடு விவரித்தான்.

இவைகளைப் பார்த்தபின்பு, துராசுவாதனை ஸ்நான ஜாகைக்குப் பக்கங் கூட்டிப்போய் வழியில் சம்பூரணமாய்ச் சாப்பிட்டு நன்றாயக் குடிக்கச் செய்தார்கள். அதன்பின் சூது விளையாட உட்கார்ந்தார்கள். துராசுவாதன் விளையாட்டிலெல்லாம் தோற்றுப்போனான். புல்லியன் இவனுக்கு வேண்டிய பணங்கொடுத்து, கொடுக்கக் கொடுக்க ஒரு சீட்டில் இவ்வளவென்று பதிந்து கொள்வான். இப்படி விளையாடும்படி இம்மூன்றுபேரும் அதிகாலையிலும் சாயரக்ஷையிலும் அந்தரங்கமாய் வந்து கூடுவார்கள். மற்றநேரத்தில் துரா

வாதன் தன்னைப்பற்றிக் கிறீஸ்துவர்கள் சமுசயப்படாதபடி அவர்களோடு கலந்து போவான்.

இராஜ சட்டம் பிரஸ்தாபமானவுடனே கிறீஸ்துவர்கள் பேரில் சடுதியிற பாய்ந்து அவர்களெல்லாரையும் பிடிக்கும்படியாய் கோவீனன் எத்தனித்திருந்ததால அதற்கு முன், குருக்களும் கிறீஸ்துவர்களும் தேவ ஆராதனைச் சடங்குகளுக்கு வந்து கூடுகிற சுரங்கம இன்னதென்று தாருவாதன வழியாய அறியும்படி இவனைத தன பக்கமாய இணக்கினுன். தாருவாதன் இதினிமித்தந்தான பங்கிராசோடு, நாம முன் சொன்னதுபோல, கலிஸ்தாவென்ற சுரங்கத்துக்குள் போய் அடையாளம பல இடங்களில் கபடமாய்க குறித்து வந்தான் அப்போது நல்ல மேய்ப்பன் சித்திரத்தைப் பார்த்தபோது அவன மனந்திரும்புவதாகத் தோன்றினுலும கதுலன் காட்டிய கொடிய ஆயுதங்களும புலவியனுடைய கடன முறிகளும நினைவில வரவே கெட்டுப்போகும வழியைத தேடத் தீர்மானித்தான.

சுரங்கத்தைப பற்றித தாருவாதன் சொன்ன பல விஷயங்களைக் கோவீனன குறித்துககொண்டு இராஜசட்டம் பிரசுரமான நாளிலேயே இந்தச் சுரங்கத்துக்குள் போய் கூடியிருக்கும் கிறீஸ்துவர்கள எல்லாரையும் பிடிப்பதாகத் திட்டஞ்செய்தான.

புல்வியன் கிறீஸ்துவர்களைப பிடிக்க எடுத்தது வேறே உபாயம். இராஜதானியிலிருக்கும குருக்களையும் கிறீஸ்துவர்களில் பிரதானமானவர்களையும முகத்தைப் பார்த்து இன்னரென்று அறிந்துகொள்வதுதான் , தனக்கேற்ற வழியென்றும இப்படி அறிந்தால இந்தக் கிறீஸ்துவர்கள் எங்கே இருந்தாலும, எவ்வளவுதான் வேஷம் போட்டுக்

கொண்டு வெளிப்பட்டாலும், அவர்களை எளிதில் கண்டுபிடிக்கக்கூடுமென்றும் அறிந்து கொண்டான். இதற்காக, கிறீஸ்துவர்களும் குருக்களுஞ் சுரங்கக் கோவிலில் கூடி ஜெபஞ் செய்யும்போது தனக்குத் தப்பாமல் அறிவிக்கவேண்டுமென்று துர்குவாதனைக் கபடாய் இணக்கினான்.

துர்குவாதன் தன் சகோதரர்களைக் காட்டிக்கொடுக்கும் இந்தக் கொடிய துரோகத்திற்குச் சம்மதித்து, ஏற்ற சமயம் இன்னதென்று பார்த்துக்கொண்டிருந்தான். அப்போப்பட்ட சமயமுஞ் சமீபத்தில் வந்தது. துர்குவாதனோடு மனந்திரும்பின மார்க்கஸ், மார்செலியான், என்ற இருவருக்குந் தியாக்கோன் பட்டமும், இவர்களுள் தகப்பன் திரான்குயிலீனஸ் என்பவருக்குக் குருப்பட்டமுங் கொடுக்குஞ் சடங்கு சுரங்கக் கோவிலில் நிறைவேற்ற நாள் குறித்திருந்தார்கள்.

குறித்த நாளில் துர்குவாதன் பக்தி விசுவாசமுள்ள கிறீஸ்துவனைப்போல வேஷமெடுத்து, தன்னுடனே புலவியனையுங் கிறீஸ்துவனைப்போல உடுத்திக் கூட்டிக்கொண்டு, இரகசிய பாதை வழியாய்க் கோவிலுக்குள் கூட்டத்தோடு கூட்டமாய் வந்தான். புலவியன் கோவிலுக்குள் கிறீஸ்துவர்கள் செய்வதுபோல வெகு சமர்த்தாய்ச் செய்து எல்லாரையும் நன்றாய்ப் பார்க்கும்படி ஏதுவான ஓர் இடத்தில் இருவரும் நின்றார்கள். அப்போது பாப்புவாயிருந்தவர் பெயர் மார்செல்லீனஸ். வெகு விருத்தாப்பியர். அவர் புண்ணியமுஞ் சாந்தமும் அவதாரமானதுபோல தோன்றினார். வெளியிலிருக்கும்போது வேதக் கலகம் நிமித்தம் எல்லாரைப்போல வித்தியாசமின்றி உடுத்தியிருந்தாலுங் கோவிலில் விசேஷ சடங்குகள் செய்யும் நாளில் நமது காலத்தில் அணியும்

உடைகளுக்கு ஏறக்குறைய சமானமான வஸ்திரங்களை அணிந்திருந்தார். வஞ்சகனான புல்லியன் இவரை முக்கிய மாய்க குறிப்பிட்டுப் பார்த்தான். அவர் உயரம், முகரூபம், கண்களின் நோக்கம், நடை உடைபாவனை, சத்தம் குரல் பேச்சு முதலியவைகளை வெகு நுணுக்கமாய்ப் பார்த்துக் குறித்தபின்பு வெளியே வரும்போது தனக்குள்ளே சொல்வான்: "அந்தக் கிழவன் யாரென்று தெரியும். இனி இவன் வெளியே எப்படித்தான் வேஷம்போட்டு மறைந்து வந்தாலும் என் கண்ணுக்குத் தப்பமாட்டான்."

## ரு-ம். அதிகாரம்.

### கன்னிகா இரத்னம்.

குருப்பட்டங் கொடுத்த சடங்கு முடிந்த மறுநாள் அக்னேசி நித்திய கன்னிமையின் வார்த்தைப்பாடு கோவிலில் எல்லார் முன் கொடுக்குஞ் சடங்கு நடந்தது. கொடிய வேத கலகம் வர இருந்ததால் துஷ்டர் பிலனமற பெண்களையும், ஏழை எளியவர்களையும் முதலாய் தப்பவிடமாட்டார்களென்று அக்னேசி யோசித்து, சேசுநாதரிடம் வெற்றி மாலை சூடி, கையில் ஜெயவிருது ஏந்திப்போகும்போது, பரிசுத்த கற்பின அறிகுறியாக சுகந்த வாசனை வீசும் லீலி புஷ்பத்தையுங் கொண்டுபோக அவாவுற்றிருந்ததால் வேத கலகந் துவக்குமுன்னே பரிசுத்த கன்னிமையின நித்திய வார்த்தைப்பாட்டை சேசுநாதர் சுவாமிக்குக் கொடுக்க இன்று கோவிலுக்கு வந்தாள்.

அக்னேசி,சீராவின் உன்னத தர்ம ஒழுக்கத்தை அறிந்து நாள் முதல் அவளை நன்கு மதித்து அன்பாய் ஆதரித்து

வந்தாள். இன்று தான் கன்னிமை வார்த்தைப்பாடு கொடுக்கும்போது தன்னோடு சீராவுங் கொடுத்து சேசுநாதருக்கு முழுதும் சொந்தமாய் இருக்கும்படியாக அவளையும் இந்த நாள் சடங்குக்குத் தயார் செய்திருந்தாள்.

அக்நேசியுஞ் சீராவுந் தங்களுடைய பாக்கியமான சுப செய்தியை ஒருவருக்குஞ் சொல்லாமல் கடைசிமட்டும் மறைத்து வைத்திருந்தார்கள். கடைசிநாளில் சீரா தனது பாக்கிய அதிர்ஷ்டத்தை செசீலிக்குச் சொல்லும்போது, செசீலி சொல்வாள்:

"நல்லது, நல்லது, சீரா! இப்படித்தான் நல்ல சமாச்சாரங்களை ஒருவருக்குஞ் சொல்லாமல் நீயா வைத்துக் கொள்ளுகிறது! இதுதானு சகோதர வாஞ்சை?"

சீரா அவளைத் தேற்றிச் சொல்வாள். "செசீலி! வருத்தப்படாதே. நான் வார்த்தைப்பாடு கொடுக்குஞ் செய்தி இரகசியமாய்க் காப்பாற்றவேண்டியிருந்ததால் நான் ஒருவருக்குஞ் சொல்லவில்லை."

"அப்படியானால் நான் இந்தச் சடங்குக்கு வரக்கூடாதோ?"

"ஆ செசீலி! சுகமே வா. வந்து எல்லாம் நன்றாய்ப் பார்."

"நான் பார்க்கிறது இருக்கட்டும் சீரா, ஆனால் நீ என்ன உடுப்புப் போட்டிருப்பாய்? இந்த சடங்குக்கு என்னென்ன அவசியம்?"

சீரா தான் போடவேண்டிய உடுப்பு, அதின் அளவு, நிறம், நடக்குஞ் சடங்கு, எல்லாவற்றையும் விவரமாய் அவளுக்குச் சொன்னாள்.

"ஓ சீரா! எவ்வளவு நோத்தியான சடங்கு. இன ளம் ஒரு கேள்வி மாததிரநதான் : கோபிததுககொள்ளா தே. இநதச் சடங்கு எப்போது, எநத இடததிலே நடக் கும்? நாளை வரலாமென்று நீ சொனனதால நான் வருமபடி யாக இடமும நேரமும அறியவேணடாமா?"

சீரா, இடம, நேரம, எல்லாஞ் சொன்னபின்பு செசீ லியைப் பார்த்து: "ஏன? செசீலி இனறைக்கு நீ கேள்வி மேல கேள்வி கேட்டு எலலாம அறியுமபடி விநோத பிரிய மாயிருக்கிறாய. உலக கவலை உன மனதிலே வருகிறதோ? காரணமென்ன?" என்று தமாஷாய கேட்க, செசீலி சொல வாள்:

"நல்லது, நல்லது, சீரா! ஆனைக்கொருகாலம வநதா ல் பூனைக்கொருகாலம வருமெனபார்கள். உனக்கு ஏதோ இரகசியம உணடென்று நீ அதை ஒருவருக்குஞ் சொல்லா மல் ஒளித்து வைத்தாயலலவா? இப்போ எனக்கும ஒரு இரகசியம் உண்டு. நான் அதை ஒருவருக்குஞ் சொல்ல மாட்டேன்."

கபடு சூது அறியாத செசீலி இப்படிப் பிரமாதமாய்ப் பேசுவதைக் கேட்டு சீரா குலுங்க குலுங்கச் சிரித்தாள். செசீலி சிலவு பெறறுககொணடு, தன்னை அன்பாயத் தாய் போல் ஆதரித்துவரும லுசீனாள் வீட்டுக்குப்போய் அநத அம்மாள் காலில் விழுநது தேமபித தேமபி விம்மி அழு தாள். லுசீனாள் அவளைத் தூககி அணைத்து, கண்ணைத் துடைத்து, ஆறுதல் சொல்லி இவள் துககத்தின் காரணம இன்னதென்று அறிநத பினபு, இருவரும 'தியோனிசியுஸ் என்ற குருவினிடம போய்ப் பேசி அவர் சமமதம் பெற்ற பிற்பாடு வீட்டுக்குத் திரும்பி வநதார்கள். செசீலியின்

முகஞ் சம்மனசுவின் முகம்போல் சந்தோஷத்தால மலாந்திருந்தது.

அக்நேசி வார்த்தைப்பாடு கொடுக்கும்படி குறித்த நாளிலே, லூசிஞளும், அவள் செல்வ புத்திரனும், அக்நேசியின விருத்தாப்பியரான தாய தந்தையரும, சிபஸ்தியாரும, அந்தச் சடங்கைப் பாாக்கும்படி வந்திருந்தார்கள் பீடம வெகு அலங்காரமாய ஜோடிக்கப்பட்டிருந்தது. தங்கம் வெள்ளியால செய்யப்பட்ட சுடா விளக்குகள தெளிந்த பிரகாசம எங்கும வீசின. பீடத்தின மேற்படியில அர்ச. இராயப்பா இருந்த சிறந்த ஆசனம ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

கன்னியமங்கைகள் இருவரிருவராய வரிசையுடன் வர இவர்கள் மத்தியில் இரண்டு போ தூய வெண்மையான உடை அணிந்து பீடத்தின அருகில் சோநதவுடனே அர்ச. பாப்புவின் முன முழங்காலிலிருந்தாாகள்.

இச்சமயத்தில் மோக்ஷ மதுர இன்பத் தொனியோடு, வான தூதாகளே பாடினதுபோல், தேவ ஸ்தோத்திர கீர்த்தனைகள் பாடுஞ் சப்தங் கேட்டது. பாட்டுமுடிந்தபின் இவ்விருவரிடத்தில அாச. பாப்பு சில கேள்விகளைக் கேட்க அவர்களும தக்க மறுமொழி சொன்னாாகள். அர்ச். பாப்பு கன்னியாஸ்திரி அந்தஸ்தின மேன்மையையும, பாக்கியத்தையும் பற்றி புத்தி சொல்லி, அவாகள் இனி ஆத்தும சரீர சுத்தத்தோடு சம்மனசுகளைப்போல் ஜீவிக்கவேணடுமென்றும, தேவமாதா அவர்களுக்கு நன்மாதிரிகையாய் முன் நடந்து வழி காட்டுவாளென்றும், இந்தக் கன்னியர்தான், வேத புஸ்தகஞ் சொல்வதுபோல், தேவசெம்மறிப்புருவைப் போகும இடந்தோறும பேர்வார்களென்றும, இவாகள நேசு

நாதனைத் தங்கள் பிரிய பத்தாவாகத் தெரிந்துகொண்டதால், உலக ஸ்நேகம், பற்று, எல்லா முற்றும் நீக்கி சேசுநாதர் ஒருவரையே ஸ்நேகித்து அவர் ஒருவருக்கே பிரியப்படும்படி பிரயாசப்படுவது அவர்கள் முக்கிய கடமையென்றும் இவ்வாறாய் பல புத்திகளைக் கூறினார்.

இந்தப் பிரசங்க முடிவில் அர்ச். பாப்பு இவர்கள் அணிந்துகொள்ளவேண்டிய உடையை ஆசீர்வதித்துக் கொடுக்க, இவர்கள் தோழிமார்கள் உதவி செய்ய, அதைமேல் அணிந்த பின்பு அலங்கார புஷ்பங்களால் செய்யப்பட்ட முடியை இவ்விருவர் தலைமேல்வைத்தார்கள்.

அக்னேசியுஞ் சீராவுந் தங்களுக்கு வந்த உன்னத பாக்கியத்தை நினைத்து ஆனந்தக் கண்ணீர் சிந்தி சர்வேசுரனுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரஞ் செய்து கொண்டிருக்கையில் யாரோ கூட்டத்தின் நடுவில் பரபரப்புடன் வருஞ் சத்தங் கேட்டார்கள். யாரென்று பார்க்கையில் செசீலி மகா ஆவல் ஆத்திரத்தோடு அர்ச். பாப்புவின் முன் முழங்காலில் இருப்பதைக் கண்டார்கள். அர்ச். பாப்பு செசீலியைப் பார்த்து: "மகளே! உனக்கு என்னவேணும்" என்று கேட்க, செசீலி: "பரிசுத்த பிதாவே! நான் சேசுநாதருக்கு என்னை முழுதும் ஒப்புக் கொடுத்து மரணமட்டும் கன்னியாஸ்திரியாய், இங்கே இருக்கும் இந்த இரண்டு பேரைப் போல், நானும் இருக்க ஆசையாயிருக்கிறேன்." என்று சொன்னாள்.

அக்னேசியுஞ் சீராவும் அடைந்த சந்தோஷம் இமமாத்திரமென்று வர்ணிக்க வார்த்தைகளில்லை. செசீலி எப்படி இவ்வளவு சீக்கிரத்தில் தன் ஆசையை அநுகூலமாய் முடித்தாள் என்று இருவரும் ஆச்சரியப்பட்டார்கள்.

சடங்கு முடிந்து போர்வையும் உடையும் அணிந்த பின்பு தலையில வைக்கும்படி முடி கொண்டு வந்திருக்கிறாளாவென்று கேட்டதற்கு, செசீலி தன் உடைக்குள் மறைந்து வைத்திருந்த முள்ளால பின்னிய முடியை எடுத்துக் காண்பித்து சொலவாள்·

" பரிசுத்த பிதாவே! என் திவ்விய பத்தாவுக்கு நான் கொடுக்குமபடி எனககுப் புஷ்பங்களிலலை. அவரும என் நிமித்தம புஷ்பங்களால செயயப்பட்ட முடியை அணியவில்லை. நான் பரம ஏழை. ஆகையால என திவ்விய பத்தா தமது தலையில் வைத்திருந்த முடியைப் போல் எனக்கும ஒரு முடி கொடுக்கவேணடுமெனறு நான கேட்டால அவர் மனதில் வருத்தப்படுவாரா? இதுவுமனறி புஷ்பங்களால் பின்னுமுடி புண்ணியங்கள் உணடெனபதின் அடையாளம. ஆனால் பத்தியினறி வரணடுகிடககும என் இருதயத்தில் முள்ளுகளனறி புஷ்பஙகள கிடையாது."

செசீலி இபபடிச சொலலுமபோதே அக்நேசியுஞ் சீராவுந தங்கள் தலைமேலிருந்த புஷ்ப முடியை எடுதது அவள் தலைமேல் வைப்பதைக் கணணிலலா செசீலி பார்க்கவில்லை.

அன்று கோவிலில் நடந்த இநதச சடங்கைப் பார்க்கும்படி கூடியிருந்த அனைவோருஞ் சாவேசுரனுககு நனறி அறிதலான ஸ்தோத்திர கீதததைபாடினபின்பு அாச். பாப்புவின் ஆசீாவாதம பெற்றுத தங்கள் வீட்டுக்குத் திரும்பிப் போனார்கள்.

## சுr-ம். அதிகாரம்.

### அக்நேசியின் கிராமம்.

### துன்பமும் இன்பமுஞ் சுழலுஞ் சக்கரம்.

உரோமாபுரிக்கு கிழக்கே சுமார் இரண்டு மயில்த் தூரத்தில் அக்நேசிக்குச் சொந்தமான நொமெந்தான் என்ற சிறந்த கிராமம் ஒன்றுண்டு. இந்த கிராமத்துக்கு, நித்திய கன்னிமை வார்த்தைப்பாடுகொடுத்த மூன்றுபாக்கியவதிகளும், இந்த சுபநாளை ஜெபத்திலும், அமரிக்கையிலுஞ் செலவழிக்க வேண்டுமென்று, சடங்கெல்லாமுடிந்த பின்பு வந்தார்கள்.

அக்நேசியின் கிராமம் எவ்வித வனப்பும் வளப்பமும் அமையப் பெற்று, சப்தம சந்தடியின்றி பூரண சமாதான நிலையிலிருந்தது. அக்காலங் குளிர்காலமானதால், சமீபத்திலிருந்த அப்பெனீனு வென்ற மலையின் சிகாம வெண்பனிக் கட்டியால் மூடப்பட, ஆகாயந் தெள்ளிய பிரகாச ஒளியால் விளங்க, வானமண்டலம் மேக மறைவின்றி நீல போர்வை அணிந்ததாகத் தோன்றும். இந்தக் கிராமத்திலுள்ள ஜீவ பிராணிகளெல்லாந் தங்கள் செல்வ பெருமாட்டியை அறிந்து அங்கீகரித்தாற்போல் அவளுக்கு அன்பும் பட்சமுங் காட்டின. புறுக்கள் அக்நேசி தலையிலுந் தோளிலும் வந்து உட்காரும். ஆட்டுக் குட்டிகள் அக்நேசி வருவதைக் கண்ட க்ஷணமே துள்ளிக் குதித்து ஓடி வந்து அவள் கையில் வைத்திருக்கும் பசும்புல்லை பறித்துச் சாப்பிடும். ஆனால் இவைகளைப் பார்க்க, வீட்டின் காவலாயிருந்த சிங்கம் என்ற பாரி வேட்டை நாய் காட்டின அறிவும் பட்சமும் அதிக மேலிட்டது. கதவோரத்தில் சங்கிலியால் கட்டியிருந்த

இந்த நாயின் கிட்ட வேலைக்காரரில ஒன்றிரண்டு பேர் மாத்திரந்தான் அண்டலாம். அக்நேசி அதன் கிட்ட வந்தால் அது கீழே படுத்து, வாலை ஆட்டி தன்னை அவிழ்த்துவிடும்படி கெஞ்சுவதுபோல் சத்தஞ் செய்யும். அவிழ்த்து விட்டால் அவள் போகும் இடமெல்லாம ஓர் ஆட்டுக்குட்டிபோல் சாதுவாய கூடவே வரும். அவள் உட்கார்ந்தால் அதுவும அவள் காலின கிட்டபபடுத்து அவள் முகத்தை உற்றுப பார்த்து அந்தச சுந்தர மாது தன்னைக் கொஞ்சும்படி காத்திருக்கும.

சேசுநாதருக்குத் தங்களைச சொந்தமாய் ஒப்புக்கொடுத்த மூன்று கன்னிகாரத்னங்களுந தாங்கள் அன்று பெற்ற பாக்கிய அதிஷ்டத்தின்பேரில் உட்கார்ந்திருந்து கலந்து பேசி, அதற்கு மேலான பாககியம, அடுத்த நாள் காலையில், வானமணடலங்களுககு மேலாயிருக்கும மோக்ஷமண்டலத்தில சேசுநாதர் கொடுக்கும நித்திய பாக்கியந்தானென்று சொல்வார்கள். சில சமயத்தில், செசீலி தங்களை ஏய்த்துப் போட்டதைப்பற்றி அவளோடு வாதாடி தமாஷாயுஞ சந்தோஷமாயும பேசுவார்கள். செசீலி வெள்ளிககலசம ஒலித்தாற்போல் கிண் என்று சிரித்து மகிழ்ந்து அவர்களைப் பார்த்து: "நல்லது, நலலது. உஙகளை நான் இவ்வளவோடு விட்டேனோ? அடுத்த நாள் காலையில வரும இதிலும மேலான பாககியத்துககு யார முந்திப்போவார்கள்? பார்க்கலாம. உஙகளுக்கு முந்தி நான போகாவிட்டால் நானு கபோதி செசீலி" என்று சபதங் கூறுவாள்.

இவ்விதம மூவரும் பேசிககொண்டிருக்கையில், பபியோலா அக்நேசியைப் பார்க்கும்படியாய் வந்தாள். பபியோலாவின் தந்தை,பாபியன் இதற்குச் சில நாளுக்குமுன்

இறந்து போனான். தந்தை இறந்ததின் நிமித்தம் வெகு வாய்த துககப்பட்டு வீட்டுக்குள் பபியோலா இருநதகாலத் தில், அக்நேசி கேதம விசாரிக்க அவளிடஞ்சென்று ஆறுத லான பல வாாதகைதகள சொலலி மனதைத் தேற்றினள். அக்நேசி சொன்ன ஆறுதலான மொழிகள, மற்றெவா சொ ன்னதைப்பாாகிலும, பபியோலாவின் மனதில நன்றாய்ச சார்ந்து ஆறுதல் தநதது. கபடு களங்கமற்ற மாசற்ற இந் தச் சுநதரிவதனம தேவ வரப்பிரசாத கதிாவீச, இவள் சொல்லும வார்த்தைகள் இருதயத்திலிருநது நேரே வந்த தால் இவைகள் துக்கம நிறைநத மனதுககு எதார்த்ததில ஆறுதல் கொடுத்தனவெனபது ஆசசரியமோ ?

தோட்டத்துக்குள்ளே பபியோலா வருமபோது அத ன் ஒரு பக்கத்தில மூனறு கனனிகா ரத்னங்களும ஒன்று கூடி ஆனநதக்கடலில் ஆடியிருபபதைக்கணடு சற்றுப் பின வாங்கினள். செல்வ அக்நேசி, தன அடிமையோடுங், கண ணில்லாத பரம ஏழையோடுங் கலநதுகூடி சகோதர வாஞ சையோடு மகிழநது இருப்பதை பபியோலா பாாதது, இவ ர்கள் மத்தியில் தான் போவது யுக்தம அலலவென்று வநத வழியே கொஞ்சந்தூரஞ் சென்று தனக்குள் யோசிப்பாள் : “ இநத மூன்றுபேரும எவ்வளவு பாக்கிய சநதோஷமாயிரு க்கின்றார்கள். இதன காரணமென்ன ? நானும இவர்களைப போல் சநதோஷகரமாய ஏனிருக்கக்கூடாது? ஆ ! எனக் கும் இவர்களுக்கும் நடுவில் ஏதோ கடக்கக்கூடாத பெருஞ் சமுத்திரம இருப்பதாகத் தோன்றுகின்றது.” இவ்வாறு தனக்குள் சிநதிதது அப்பால் போனள்.

முள்ளில்லா ரோஜா புஷ்பமும் இல்லை. துக்கக் கல பபில்லாத சநதோஷமும இல்லை. அக்நேசிக்கு இவ்வளவு

பிரகாச ஒளியோடு துவக்கின நாள் முடியுமுன்னே கார் மேகங்கள் வந்து கூடி பிரகாசத்தை சற்று மறைத்தன. அஃதெவ்வாறெனில் அக்நேசியைப் பார்க்கும்படி பபியோலா புறப்பட்ட அதே நாளிலே புல்வியனும், பாபியன தனக்குச் சொன்ன உறுதிமொழியை நம்பிக்கொண்டு, அக்நேசி இருந்த கிராமத்திற்கு வந்தான்.

மந்தப் புத்தியுள்ள பாபியன், அக்நேசி தன் இனிய பத்தாவாகத் தெரிந்துகொண்ட சேசுநாதா சுவாமியைப் பற்றி ஞான அர்த்தத்தில் சொன்ன மொழிகளை லோக அர்த்தத்தில் எடுத்து, அவள் புலவியனை அணிந்திருக்குங் கணை ஆழிகளின் நிமித்தம் அவன் பேரில் காதல் வைத்திருக்கிறாளென்று புலவியனுக்குச் சொன்னதை இவன் மறந்து போகவில்லை. தன் கருத்தைத் துலக்கமாய் வெளியிட்டு அக்நேசியின் சம்மதம் பெறும்படி தக்க சமயம் எப்போ வருமென்று காத்திருந்தான். அக்நேசி தனியே கிராமத்தில் வந்திருக்கிறாளென்று அறிந்த மாத்திரம் இதுதான் உசித சமயமென்று உடனே புறப்பட்டான். தோட்டத்துக்குள் வந்து காவற்காரனிடம் அக்நேசியுடன் தான் தனியே, ஓர் முக்கிய சங்கதியைப்பற்றிப் பேசவேண்டுமென்று பலமுறை அலட்டிக்கேட்டதினபேரில அவன் கடைசியாய் அக்நேசியிருந்த இடத்தைக் காட்டினான். அப்போது சூரியன் அஸ்தமிக்கும் வேளை அக்நேசியின் தோழிகள் தங்கள் அலுவலைப் பார்க்க இங்குமங்கும் போய்விட்டார்கள். அக்நேசி, பூங்கொடிகள் அடர்ந்து எங்கும் படர்ந்து, குளும் நிழல் செய்யுமிடத்திலிருந்து புஷ்பங்களை ஒவ்வொன்றாய் எடுத்து சரமாய்க்கோர்த்து மாலை கட்டிக்கொண்டிருந்தாள். அவள்கிட்ட சிங்கம் தன் வழக்கம்போல் படுத்திருந்தது.

வேற்றாள் வருவதைக்கண்ட சிங்கம் தலையைத் தூக்கி சற்று மெதுவாய் உறுமிப்பார்த்தது. அகநேசி தன் கை விரலைக் காட்டவும் சப்தம அமர்ந்தது. புல்வியன் மரியாதையாய் வந்தாலும் தன் எண்ணம அநுகூலமாய் முடியுமென்ற பூரண நம்பிக்கையாலோ, தன் சொந்த வீட்டுக்கு வருவதுபோல தாராளமாய வந்து அகநேசியுடன் சொல்வான் :

"செல்வ அக்நேசி! உங்களைக் கண்டுபேசி என் மனதில் உங்கள் மட்டிலுள்ள நல் எண்ணத்தை வெளியாக்க உங்களைத் தேடிவந்தேன். நான் வந்த நாளும அதிஷ்டமுள்ள நாள்.",

அக்நேசி அன்று காலமே தன்க்கு வந்த அதிர்ஷ்டத்தை நினைத்துச் சொல்லுவாள :

"ஓ! இந்த நாள் என் ஜீவிய நாளின் பாக்கிய நாள். என் மனம சந்தோஷத்தால பூரித்திருக்கின்றது. இதிலும அதிக பாக்கியமுள்ள நாள் இன்னம ஒன்றுமாத்திரம இருக்கின்றது."

புல்வியன் இதைக்கேட்டு, அக்நேசி தான் வந்ததைப் பற்றி இப்படிப் பேசுகிறாளென்று மனதில அக்களிப்படைந்து மறுமொழி சொலவான் :

"அக்நேசி! பூங்கொடி மாதே! நீங்கள் சொலலும அந்தப் பாக்கிய நாள், உங்கள் மனதைக் கவர்ந்துகொண்ட புருஷோத்மனோடு மங்கல விவாக முடிக்குஞ் சுபநாளாய்த் தானிருக்கவேண்டும."

"ஆ! அந்த ஞான விவாகமும இன்று முடிந்தது. இது என் இனிய அன்பரின் சுப்நாள்."

"இந்த சுப நாளை உத்தேசித்தோ அந்த அலங்கார புஷ்ப முடியை அணிந்திருக்கிறீர்கள்?"

"ஆம். அவரையன்றி வேறெவரையும் நான் சிநேகி யேன் என்பதின் அறிகுறியாக இதை நான் வைத்திருக்கி ன்றேன்."

"இந்தப் பாக்கியம் பெற்ற அதிர்ஷ்டசாலியார்? நா ன அல்லோ இதற்காக காத்துக்கொண்டிருந்தேன். எனக் கல்லோ நீங்கள் நம்பிக்கை வாக்குக் கொடுத்தீர்கள். உங் கள் நினைவிலும் நெஞ்சிலும் பதிந்திருக்கும் ரூபம் என் ரூப ம அல்லவா?"

அக்நேசி புலவியன் சொன்ன மொழிகளை முற்றுங் கவனிக்கவில்லை. களங்கமற்ற மாசற்ற கன்னி ஆனதால் லோக சம்பந்தமான விஷயங்களைப்பற்றி சற்று நினையாமல் தன் இருதயத்தின் திவ்விய பத்தாவாயத் தெரிந்துகொண்ட சேசுநாதரைச் சிந்தித்து அவர்பேரில் கருத்தாய் இருந்தாள். அவளுடைய வதன கமலம் மலர்ந்து பிரகாச வடிவோடு காந்தி வீசினது. அவள் இரு கண்கள் மோக்ஷ பரவசமா னவள் கண்கள்போல் துலங்கினது. இந்த ஆனந்த பரவ சத்திலிருந்த அக்நேசி எழுந்து நின்று, தன் முன் கலங்கிப் பதறி இருந்த புல்வியனை உற்றுப் பார்த்து மகத்துவ மே ன்மையோடு சொல்வாள்:

"என் இனிய அன்பர் என் இருதயத்தின் பத்தா. அவர் இதழ் தேனும் பாலுஞ் சொரியும். எனக்கு அலங் காரமும் ஆபரணமுமானவர் அவரே."

புல்வியன் இதன் அர்த்தம் இன்னதென்று அறியமா ட்டாமல், இவள் உன்மத்தங் கொண்டவளோவென்று த னக்குள் சிந்திக்கும்போது, 'அக்நேசியின் சுந்தர வதனமும்

களங்கமற்ற பார்வையும் இவன் அஞ்சி நடுங்கும்படி செய்ய, அப்பெண்மணி தன் கண்ணுக்கு மாத்திரந் தோன் றும ஒருவரோடு பேசுவதாகத் தோன்றினள். பரவச ஸ்திதி முடியவும அக்நேசி தன் சுய நிலைக்கு வநதாள். புல் லியன துணிவுகொணடு திரும்பவுந் தன் அபிப்பிராயத்தை வெளியிட முயனறன் :

"அக்நேசி! என் கருததை நீங்கள் இன்னம நன்றய் அறியவில்லைப்போல் காணுது. உங்களுடைய மனதை ந ன்றய் அறிநத ஒருவா நீங்கள் என்பேரில் காதல கொண் டிருப்பதாகவும, உங்களை நான கல்யாணஞ செய்யும்படி நேரில் வந்து கேட்டால் எனனை ஏற்றுககொள்ள நீங்கள சமமதமாயிருப்பதாகவும, பலமுறை எனக்குச சொலலியி ருக்கிறா. இதினலேதான் உங்களிடந தாராளமாய மண முகூர்த்தங் கேட்க நான வநதேன. நான கேட்கும வகை முறை தப்பினதாகத தோனறினும, எதாாததமாயுஞ் சிநே க வாஞ்சையோடுஞ சொலலுகிறேன் என்பதைப்பறறி சந தேகபபடவேண்டாம."

அக்நேசி மனங் கலங்காமல கௌரவ மேன்மை முகத தில் துலங்கச் சொல்வாள் :

"அழிவுக்கு இரையான அயோக்யா! துர்க்கந்தமே! சீ! அப்பாலே போ. என் இருதய சிநேகத்துக்கு ஒருவா மாத்திரம உரியவர். அவருக்கு நான் பிரமாணிக்கமாய இருப்பேன. அவர் சிநேகம பரிசுத்தம. அவர் என்னை அணைத்தால் என கற்பு நிலை குன்றது. கன்னி புஷ்பம வாடாது."

புல்லியன் தான் பேசி முடிந்தவுடனே அக்நேசி முன் முழங்காலிலிருந்தவன், அக்நேசி இவ்வாறு தன்னை வெறு

த்துப்பேசி தள்ளினதைக்கண்டு, புண்ணில் அழல்வேல் வைத்தாற்போல் துடித்துக்கோபாவேசமாய்ச்சொல்வான்:

"ஆ ஹா! இப்படி என்னை நிந்திக்கலாயிற்று! நம்பிக்கைமொழி தந்தபின்பு என்னை வெறுத்து துறத்தும்படி வந்ததா! இது போதாதென்று, எனக்கு முந்தி இங்கே ஒருவன் வந்து மணமுகூர்த்த முடித்தானென்று என முகத்துக்கு முன்னே சொல்லவும் வேண்டுமோ? அவன் யார்? சிபஸ்தியான் அல்லவா?"

புலவியன் இவ்வாறு இரைந்து பேசும்போது, பபியோலா சத்தஞ் செய்யாமல் மெதுவாய் அகநேசியிடம் வந்தவள், அவன் சிபஸ்தியானைப்பற்றி இழிவாய்ச் சொன்ன வார்த்தையைக் கேட்டவுடனே கடுங் கோபத்தோடு புல்வியனிடம் சென்று சொல்வாள்:

"கௌரவ வீரன் சிபஸ்தியான் பேரில் இப்படி அயோக்கியமாய்ப் பேசத் துணிந்தவன் யார்? அவருடைய தர்ம ஒழுக்கம் அணுப்பிரமாணமும் நெறி தவறாதது என்பது எல்லாரும் அறிந்த விஷயம் அல்லவா?"

புல்வியன் பபியோலாவைக் கண்டவுடனே நாணி வெட்கி சித்தப் பிரமை பிடித்தவன்போலாகி, அவன் முகம் வாட, கை நடுங்க, மேனியெல்லாம் வேர் வரும்ப, மனது பதைக்கப் பதுங்கி நின்றான்.

பபியோலா கோபாக்கினி இருவிழிகளினின்று கக்க அதட்டிப் பேசிச் சொல்வாள்

"அடா, கொடியா! படுபாவி! முன்னொரு விசை என் செல்வப் பாங்கி அக்நேசி வீட்டில் துராகிருதமாய்ப் பிரவேசித்து அப்பெண் நாயகத்தை மதியாமல் பேசின

துஷ்டன் நீ அல்லவா? இப்போது அவள் தன்னந் தனிமையாய் கிராமத்துக்கு வந்திருக்கையில் நீ அவளிடம் இந்தத் தகாத வேளையில் வந்து அவளை அவமானப்படுத்தவோ துணிந்தாய்?"

பாம்பின் வாய்த் தேரைபோல் நடுங்கி நின்ற புல்லியன் கொஞ்சந் துணிவுகொண்டு சொல்வான்:

"இது உன் வீடா? நான் வேறொருவர் வீட்டிலிருக்கையில் காறு பாறு செய்யும்படி வந்தவள் நீ யார்?"

"நான் எனக்குச் சொந்தப் பந்துவின் வீட்டிலிருக்கிறேன். நீயோ அன்னியன், இழி குலத்தான். பிறர் குடியைக் கெடுக்க வந்த பரம சண்டாளன். இந்த வீட்டில் உனக்கு வேலையில்லை. வெங்கலக் கடையில் நாய்க்குப் பணி என்ன? மறு வார்த்தை சொல்லாமல் வந்த வழியே போ. இல்லாவிட்டால் அதிகாரிகளிடம் உன்னை இழுத்துப் போய் தேச சட்டப்பிரகாரம் உன்னைத் தண்டிக்கச் செய்வேன்."

பபியோலா இப்படி கோபித்துப் பேசும்போது, சிங்கம் நடந்த சங்கதி இன்னதென்று அறிந்தாற்போல எழுந்து நின்று வாலைச்சுழற்றி உறுமிக்கொண்டு புல்லியனை வெறித்துப் பார்த்தது. அகநேசி அதைத் தன் கையால் மெதுவாய்த் தட்டி அடக்காவிட்டால் புல்லியன் ஜென்மா ஜென்மத்திலும் அங்கே திரும்பவும் வந்திருக்கமாட்டான்.

புல்லியன் எழுந்து போகும்போது பல்லை நெருநெரென்று கொரித்து உதட்டைக் கடித்து சொல்வான்:

"ஆஹா! அவ்வளவா! ஆணவங்கொண்ட பேதைப் பெண்ணே! இன்று நீ எனக்குச் செய்த அவமானத்துக்கு நான் பழிவாங்காமல் உன்னைச் "சும்மா விடுவேனோ? நான

ஆணையிட்டு சபதங்கூறி பழியெனருல் பழியாய்த்தான் முடியுமென்பஙத நீ ஒருநாள் அறிவாய."

## எ-ம். அதிகாரம்.

### இராஜ சட்டம்.

கிறிஸ்துவாகளைச சாவ சங்காரமாககி அவர்கள் பெயா முதலாய் இலலாதபடி செயய இராஜ சட்டம ஏக காலத்தி லேயே எஙகும பிரஸ்தாபப்படுத்தவேணடுமென்று முன் மந்திராலோசனை சபையாா செயதிருந்த தீாமானத்தை நிறைவேறறக காலம வநதது. கோாவீனன் இதறகு முதன் மையாயிருநது வெகு சாமாததிய திறமையோடும பூரண அநுகூலததோடும இதை நடததுமபடி வேணடிய பிரயத் தனஙகளெல்லாம செயதிருநதான். இதறகுமுன ஒருவிசை நீககோமேதியாவெனு நகரில இராஜ சட்ட விளமபரம ஒன்று பிரஸ்தாபமாய ஸ்தாபிததபோது, கிறிஸ்துவப் போர் வீரன் ஒருவன, அந்தரங்கததில் அதை எடுத்துத் துண்டு துண்டாய்க் கிழித்து நெருப்பில்ப் போட்டு எரிததாகக் கோர்வீனன கேட்டிருநதான. இவ்வித அககிரமம இராஜ தானியில நடவாதபடி சர்வ ஜாககிரதையாயிருப்பது, தன் உயிரைக காபபாற்ற, இன்றி அமையாத சாதனமென்று கோர்வீனன் திணணமாய் அறிநதிருநதான. இதினிமித்தம இராஜ சட்டததைப பதப்படுததின தோலில பெரிய அக்ஷரங்களால பதித்து பலகையிற சோத்து ஆணி அறைநது, பலப்படுத்தி; ஜனங்கள் வநதுகூடும சநதையில, இராததிரியில் கூட்டமெலலாங் கலைநது அவரவர் வீட்டுககுப போன பின்பு, கோர்வீனன் • தன் ஆட்களோடு நவியாமல் வநது,

ஒரு ஸ்தமபம நாட்டி, அதன்மேல் பலகையை அடித்து வைத்துப்போனான். இவ்விதம இராத்திரியிலே ஒருவரும பார்க்காதபோது செய்தால், மறுநாள் அதிகாலமே ஜனங்கள் வநதுபார்த்து வாசிக்கையில், மினனுமல இடி விழுந்தாற்போல், பயநது நடுங்கி நிறபார்களெனறு கோர்வீனன் எண்ணியிருந்தான்.

இராஜ சட்டத்துக்கு ஏதேனும மோசம வராதபடி அந்த இராத்திரியில ஸ்தமபத்தைச் சுறறிக் காவலாய இருக்கும்படியாய் சில சேவகாகளை நியமித்தான இவன நியமித்த சேவகர்கள் பன்னோனியா தேசத்தாரான கோர ரூபமுள்ள கொடியர். மீசையுந தாடியும ஏகமாய் மண்டி சடையாய்ப பின்னிக் கரடி ரோமமபோல் தொங்கிவிழ, இவர்கள் முகம ஊதிப் பெருத்து, பல்கள நீண்டு, மூக்குத் துறட்டிபோல் கோணி வளைநது, பாரக்கிறவர்கள் பயபபடும படியாயிருநத மிலேச்சா. இவாகள் இதர தேசத்தாரானதால் உரோமானர் பேசும லத்தீன பாஷையைப் பேச அறியார்கள். இவர்களை நடததுயபடி இவாகள் தேசததார்களே தளபதிகளாக நியமிககப்பட்டாாகள். இத்துஷ்டர் எவ்வித கொடும் பழிககும பயப்படாமல எதையுந துணிநது செய்வாாகள்.

இவ்வித கொடிய சேவகரைக் கோர்வீனன் ஸ்தம்பத்தின் நாலு திசையிலுங் காவலாய் நிறுத்தி, இராவில் கிறீஸ்துவாகளில யார் எவன் வநதாலும அவனைத் தங்கள் ஈட்டியால் ஒரே குத்தாய் குததிக் கொல்லும்படி கணடிப்பாய் கட்டளை கொடுததான். யுத்தகாலத்தில் சத்துரு எவன் மித்திரர் எவர் என்று அறியத்தக்கதாக ஓர் இரகசிய வாக்கியத்தைத் தங்களைச் சோநதவர்களுக்கு மாத்திரஞ் சொல்

சிக்கொடுப்பது வழக்கம். அதுபோலவே கோவினனும் வெகு யுக்தி அறிவோடு கிறீஸ்துவர்களில் எவனுஞ் சொல்லமாட்டாத ஓர் வாக்கியத்தைத் தெரிந்துகொண்டு, அதைத் தன் சேவகர்களுக்குச சொல்லிக்கொடுத்து, அதைச்சொலலாத எவனையும அநத இடத்திலே குததிக்கொலலுமபடி கண்டிப்பாய்ச் சொன்னான். கோவினன தெரிநத இரகசிய வாகக்கியமேதெனில "இராஜனே தெய்வம்." எநதக் கிறீஸ்துவன் தேவ தூஷணமான இநத வாககியத்தைச் சொல்வான் ?

கோர்வினன் பநதோபஸ்து எல்லாஞ் செயது இராத்திரி தன் வீட்டுக்குப் போகுமுன, சேவகாகள் தஙகளுககுக் குறித்த இடத்தில ஆஜராயிருககிறாககளாவெனறு சுற்றிப போய்ப் பார்த்து, தான் முன் கொடுதத கட்டளையைத திரும்பவுங் கொஞ்சம் அழுத்தமாய்ச சொன்னபின்பு இராஜசட்டமிருநத ஸ்தமபத்தின கிட்ட காவலாய் நின்ற தாசிய குலத்தானன சேவகனிடம வநது, அவனுககு மறறவர்களுக்குச் சொன்னதைவிட அதிக கணடிபபாயச சொலலி, வெகு ஜரூராய காககுமபடி வறபுறுத்தினான் இநதத தாசியன் பேயோ, பூதமோ, இராக்ஷஸ பிறப்போ, எனறு ஐயுறும் வகையாய் தேக புஷ்டியும, விகாரரூபமும், மிலேச்ச செய்கையுமுளள தோர் ஆததுமா. யாா எவன வநதாலும அவனைக் கம்பத்தின கிட்ட விடக்கூடாதென்றும, வருகிறவனிடமு இரகசியவாக்கியம இன்னதெனறு கேட்க வேணடுமென்றும, அதைச் சொல்லாதவனை நின்ற இடத்திலேயே குத்திக் கொலலவேண்டுமென்றுங், கோவினன் சொன்னபின்பு அந்த வாக்கியம இன்னதென்று தாசியன நன்றாய் அறியுமபடியாய் அதைப் பல்முறை அவனுக்குச் சொல்லிக்காட்டி கடைசியில் தன் வீட்டுக்குப் போனான்.

இந்தச் சேவகன் பாதி குடிவெறியயக்கத்திலிருந்த தால் கோர்வீனன் சொன்னதை அறைகுறையாய்த்தான் கண்டுபிடித்தான். யாரையோ குத்திக் கொல்லவேண்டு மென்பது ஒன்றுதான் அவன் புத்தியில் பட்டது. நீண்ட ஈட்டியைக் கையிலப் பிடித்து, சமயத்துக்குச் சமயம் ஒரு கலயத்திலிருந்த சாராயத்தை வாயக்குள் ஊற்றி மனதைத் திடப்படுத்தி, எவனைக் கொல்லலாம, எந்த ஊருக்கு நெருப்பு வைக்கலாம, யாா குடியைக் கெடுக்கலாம, பணங்காசு எங்கே கொள்ளையடிக்கலாம என்ற இவ்வித நினைவுகளை மனதில் சிந்தித்து, இங்கும அங்கும உலாவிக்கொண்டிருந்தான.

ஸ்தமபத்சருகில இவை யாவும நடக்கும்போது, அதன் சமீபத்திலிருந்த வீட்டில் திமோஜெனனும, அவன் இரு பிள்ளைகளும சாப்பிடுமபடி உட்காந்தாாகள். அப்போது யாரோ வீட்டின் கதவைத் தட்டுந சப்தம் கேட்க கிழவனா மெதுவாய் எழுந்துபோய கதவைத் திறக்கையில், தமக்கு அறிமுகமான இருவாலிபனைக் கண்டு, மரியாதையுடன உள்ளேவருமபடி அழைத்தபினபு சொல்வார் :

"செலவ பிரபுகாள ! ஏழைநானிருக்கும இந்தக் குச்சு வீட்டுக்குள நீங்கள் வந்தது என பாக்கியம. நாங்கள் இப்போது சாபபிடுமபடி உடகாாநதோம. ஏழைகள சாப்பிடும இந்தப போசனத்தை நீங்களும எங்களோடு கூட உட்கார்ந்து சாப்பிடப் பிரியமானால எங்களுக்கு ஆனநதம்."

வந்த இருவரில் மூத்தவனான இராக்ஷஸகுல குவாதராத்துஸ் சொல்வான் :

"ஐயா ! நானும பங்கிராசும உங்கள் வீட்டில் சாப்பிடும்படியாய்த்தான் வந்தோம. ஆனால் சாப்பிடு முன்னே, அதோ அந்த மூலையில், சந்தை கூடுமிடத்தில், ஓர் முக்கிய

வேலை இருக்கிறது. அது முடிந்தவுடனே உங்கள் வீட்டு க்குப் பசியோடு வந்து சாப்பிடுவோம்: சாப்பிடும்படியாய் நல்ல போஜன பதார்த்தங்கள் கடையிற்போய் வாங்கி வரு ம்படி உங்கள் மகனை அனுப்புங்கள். இதோ பணம்."

அதன்பின் எல்லாருஞ் சற்றுநேரம் உட்கார்ந்தார்கள். பங்கிராஸ் ஏதாகிலும் பேசவேண்டுமேயென்று கிழவனு டைப் பார்த்து: "ஐயா பெரியவரே! லவுரென்சியார் என் பவர் வேதசாட்சியாய் மரிக்கும்போது நீங்கள் கிட்ட இருந் து பார்த்ததாக செபஸ்தியார் எனக்குப் பலமுறை சொன் னார். அவரைப்பற்றி உங்களுக்குத் தெரிந்ததை எனக்குத் தயவுசெய்து சொல்லுங்கள் உங்கள் வாயாலே நான் கேட்கவேணும்."

"அப்பா பங்கிராஸ்! அவர் மரித்து இப்போது சற்று வருஷங்கள் சென்றாலும், அவர் பட்ட பாடுகளுந் துன்பங் களும் எல்லாம் இன்னம் என் ஞாபகத்தில், நேற்றுத்தான் பார்த்தாற்போல, தெளிவாய் பதிந்திருக்கிறது. ஆ! லவு ரென்சியார் எவ்வளவு அழகுள்ள வாலிபன்! எவ்வளவுசாது! எவ்வளவு தயாளகுணமுள்ளவர்! அவர் பேசும்போது எவ் வளவு அடக்கம்! எவ்வளவு மரியாதை! ஏழை எளியவர் களைக் கண்டால் உயிரை விடுவார். எவ்வளவு கனிந்த மன து! இவருடைய ஞானப் பிதாவான சிகஸ்டஸ் என்ற குரு வைக் கொல்லும்படி கொலைஞர் கூட்டிப்போகும்போது, லவுரென்சியார் அவரை வழியிற் கண்டு: ஓ உத்தம குரு வே! உங்கள் சீஷனைத் தனியே விட்டு நீங்கள் முந்திப்போ வது சரியல்லவே என்று முறையிட்டுப் புலம்பித் தவிக்கும் போது நான் கிட்டே இருந்தேன்."

"ஐயா! அந்தக்காலம் விசுவாசமும் பக்தியுமுள்ள தைரியசாலிகளின் காலம். நாமோ இப்போது மனத்துணிவின்றி, முசலைகளைப்போல் பயந்துகொண்டு, மறைந்து பதுங்கி, இருக்கிறோம். அவர்களுக்கும் நமக்கும் எவ்வளவு பார தூர வித்தியாசமிருக்கிறது. நான் சொல்வது மெய்யா பொய்யா?"

இராக்ஷஸவீரன், பங்கிராஸ் கேட்டவினவுக்கு, மறுமொழியாக புன்னகைகாட்டியபின், கிழவனுனைப் பார்த்து லவுரென்சியார் சங்கதியைத் தொடர்ந்து சொல்லவேண்டுமென்று கேட்க, அவருஞ் சொல்வார்:

"ஆ! லவுரென்சியார் வெகு தாமகுணமுள்ளவர்! வேதகலகந்துவக்குமுன்னே தேவாலயத்திலிருந்த, தங்கம் பொன்னுலாகிய பாத்திரங்கள், அளவற்ற தூண்டாவிளக்குகள், தூபககலசங்கள், முதலியவைகளை உருக்கி வார்த்து அவைகளின் கிரயத்தை ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்தார் ஆ எப்போப்பட்ட பாத்திரங்கள்! எவ்வளவு விலையுயர்ந்த ஜாமானகள்! இவைகளைப்போல் நான் எங்கும் பார்த்ததில்லை."

"இதிருக்கட்டும் கிழவனுரே. அவர் தமது கடைசி வேதனையை எப்படி அநுபவித்தார்? எல்லாரும் அதைத்தான் வெகுவாய்ப் புகழ்ந்து பேசுகிறார்கள்."

"ஆ பிள்ளைகளே! நான் கிட்ட இருந்து அவர்பட்ட துன்பங்களையெல்லாம் என் கண்ணுல்ப் பார்த்தேன். ஆ, சுவாமி! எவ்வளவு பயங்கர வேதனை! வேறொருவரானுல இவ்வளவுதூரம் பொறுத்திருக்கமாட்டார். முந்த அவரை ஒரு கொடிய எந்திரத்தில் கிடத்தி, கைகால்களின் மூட்டுகளை கயிறுகளாற் கட்டி பிலமாயிழுத்தார்கள். அவர் ஐயோவென்று பெருமூச்சும் விடவில்லை. அதன் பின் ஒரு இருப்

புக கட்டிலேக் கொண்டுவந்து கீழே நெருப்புமூட்டி, நன்ருய் சிவந்து பழுக்கக் காய்ச்சின பின்பு அதன்மேல் லவுரொன்சியாரைப் படுக்கச் செய்தார்கள். அவர் சதை துடித்துப் பொடித்து, குறுக்கேயிருந்த இருப்புப்பாளங்களால் பிளந்து வெடித்தாற்போல தோன்றினது. அவர் சரீரத்திலிருந்து வந்த ஆவி, கொதிக்கும் வெந்நீரினின்று குப்குப் என்று புறப்படுவது போல மேலே சுழன்று எழும்பினது. கீழே இருந்த அக்கினி சுவாலித்து எரிந்தது சரீரத்தின் தோல் வெந்து சுருங்கி, நரம்புந்தாதுந் தசையுந்துடித்து பதைத்து இசி வெடித்து முடங்கிப்போக, அவர்பட்ட அவஸ்தையை, ஆ சுவாமி! இப்போது நான் நினைக்கும் போது என் உடல் நடுங்கி மயிர் சிலிர்க்கின்றது. இவ்வளவு அகோரமான வேதனையை நான் பார்த்துமில்லை, கேட்டதுமில்லை.''

சற்று நேரம் நின்று தமது கண்களிலிருந்து வடிந்தோடிய தண்ணீரைத் துடைத்தபின்பு தொடர்ந்து சொல்வார்:

“ஆனால் இவ்வளவு அவஸ்தைப்பட்ட லவுரொன்சியார் முகத்தைப் பார்த்தால், நெருப்புக் கட்டிலில் கிடந்தவர் அவர்தானென்று சொல்லமாட்டார்கள். அவர் தலை சற்றே உயர நிமிர்ந்திருக்க, மோக்ஷவாசல் தம கண் முன் திறந்திருப்பதை, அரச முடியப்பர் பார்த்ததுபோல, தாமும் பார்ப்பதாகத் தோன்றினார். அவர் முகம் உஷ்ண காங்கையால் ஜொலிக்க, வேர்வை துளித் துளியாய் விழுந்தாலும், கீழே இருந்து மேலே தாவி எழும்பிய அக்கினி சுவாலையின் பிரகாசம் அவர் தலையைச் சுற்றிலும், சிறந்த கதிர் முடிபோல் விளங்கினதால் மோக்ஷ உன்னத பதவியை முன்னிதாய் அடைந்தவர்போல் தோன்றினார். அவர் இருந்

த இவ்வித மோக்ஷானந்த பரவச நிலையை நீ, பங்கிராஸ், பார்த்தால அவருக்குப் பதில் நீயே சாக ஆசைப்பட்டிருப்பாய்.”

“ஓ! இது தான் என் ஆசை. இராப்பகலாய இதுவே என் சிந்தனை. அவரைப்போல் அஞ்சாமனத்துணிவோடு வேதனைப்பட என்னால கூடாதென்பது மெய்தான். அவர! மகா பராக்கிரமமுள்ள போர்வீரன. நான் துர்ப்பலமுள்ள சிறுவன். ஆனால நமக்குத துன்பகாலம வரும போது அதற்குத் தக்கதுபோலே மன உறுதியுஞ் சர்வேசுரன் கொடுப்பாரல்லவா? குவாத்ராத்துஸ், உன சம்மதமென்ன? உனக்கா, பயம ஒன்றுமில்லை. யுத்தகளத்தில் முதல் அணியிலிருந்து துணிவுடன்று பகைவரை எதிர்த்து முறிய அடிக்குஞ சமாத்துள்ள போர்வீரன நீ. வருத்தமோ, துன்பமோ, காயமோ, சாவோ, ஒன்றுக்கும அஞ்சாத சிங்க ஏறு மலைசரிந்து நிலைபெயரினும மனநிலை அழியாத தீரன நீ. நானோ? எனக்கிருப்பதெல்லாம ஆகக்கூடி நல்ல மனசு ஒன்றுதான. இது மாத்திரம போதுமா?”

இதைச் சொன்னபின், பங்கிராஸ் எழுந்து நின்று தன் கையை இராக்ஷஸவீரன தோளமேல வைத்து அவனை மனங்கனிய உற்றுப்பார்க்க, குவாத்ராத்துஸ் சொல்வான்:

“பங்கிராஸ்! சர்வேசுரன் நம்மிடத்தில் நல்ல மனசு ஒன்றுதான் கேட்கிறார். மனசோடு நாம் துவக்கினால் வேண்டிய உறுதியுங் கொடுப்பார். ஆனால தம்பி நாம் வந்த வேலையை மறந்துபோகக்கூடாது. இந்தப் போர்வையை எடுத்து இப்படிச் சுற்றி நன்றாய் மூடிக்கொள். இராத்திரியில பனியும குளிருமெத்த. ஐயா கிழவனாரே! நாங்கள் திரும்பி வரும்போது குளிர்காயும்படி அடுப்பில் விறகுக்

கட்டைகளைப்போட்டு நன்றாய் கணகணவென்று இருக்கும்படி செய்யும. சாப்பிடவேண்டிய பதார்த்தங்களுஞ் சித்தமாயிருக்கட்டும, அரை நாழிகையில நாங்கள் திரும்பி வருவோம. கதவு கொஞ்சந திறந்தாற் போலிருக்கட்டும."

கிழவனுர் அவ்விருவருககும ஆசீர்வசனங்கூறி சொல்வார்:

"ஆ என் செல்வ மக்களே! நீங்கள் செய்யப்போகும் அலுவல் எதுவாயிருந்தாலும அது நல்லதாயத்தானிருக்கும. சர்வேசுரன் அதை ஆசீர்வதித்து அதற்குப் பூரண அநுகூலங் கொடுப்பாராக."

இவ்விரு வாலிபருஞ் செலவு பெற்றுக்கொண்டு நன்றாய் போர்வையால மூடி, இருள் மூடிய தெருவீதி வழியாய் விரைவில நடந்து ஸ்தமபம நாட்டியிருந்த திசையை நோககிச் சென்றாாகள.

இவர்கள் போய் சற்று நேரமானபின்பு, சிபஸ்தியார இவ்விருவருஞ் செய்யபபோவது ஏதென்று தறசெயலாய் அறைகுறையாய் அறிநதவுடனே இவாகளைததேடி தியோஜெனன் வீட்டிகரு வெகு ஆக்கிரதநோடு வநதார. வந்து விசாரிததபோது, இருவரும வநது கொஞசநேரம இருநத பின்பு, ஏதோ அலுவலாய வெளியே போயிருககிறாாகளென்றும, போனவாகள திருமபிவரவும் நேரமாயிறறென்றுங் கிழவனுர சொனனுர்.

இவாகள் கூடி இவ்விதம பேசிக்கொண்டிருக்குமபோது யாரோ துரிதமாய் ஓடிவருங் காலடிச சத்தங் கேட்டார்கள். கதவைத் தள்ளிக திறநது உள்ளே வநத பின்பு, நன்றாய்ச் சாத்தி தாழப்பாளிட்டு, இராக்ஷஸ வீரனும பங்கிராசும் உள்ளே வநதார்கள்.

பங்கிராஸ் தன் போரவையில் கட்டிவைத்திருந்த தோ ஸிற்பதிந்த அக்ஷரங்களை வெளியே எடுத்து, வயறு புண் ணாக, குலுங்க குலுங்க விழுந்து சிரித்துச் சொல்வான்:

"ஓ! ஓ! பாருங்கள்! பாருங்கள்! வந்து பாருங்கள்!" சூழ நின்றவர்கள் எல்லாரும் "என்ன? என்ன?" என்று ஆசையோடு கேட்க, பங்கிராஸ், வெண்கலப் பாத்திரம் கிண கிண என்று ஒலிப்பதுபோல சிரித்து மகிழ்ந்து சொல் வான்:

"என்னவா? இராஜசட்டம். இதோ வந்துபாருங்கள்: "தியோக்கிலேசியன், மாக்சீமியன், நம்மை அளும் தேவாக் கள், ஜெயவெற்றிவீரர், அற்புததீரர், அழியாப் புகழ்கொண் டோர், பேராண்மை உடையோர், பெருந்தகைவள்ளல்", மற்ற தும், மற்றதும், ஓ! ஓ! பாருங்கள்! போகின்றார்கள், அக்கினி கருள்ளே"—என்று சொல்லி அவ்வக்ஷரங்களை நெருப்பி லேபோட, தியோஜெனுடைய தேக பலாஷ்டிகரான இர ண்டு பிள்ளைகளுஞ் சிரித்து மகிழ்ந்து, பெருங்கட்டைகளைத் தூக்கி நெருப்பிலப்போட்டு, திகு திகுவென்று கொழுந்து விட்டெரியத் தூண்டிவிட்டார்கள். இராஜ சட்டம் எழு தியிருந்த பதப்படுத்தின தோல் நெருப்பில் வெந்து, சுரு ண்டு, மடங்கி, மட மடவென்று வெடித்துப் பொடித்து, இராஜாக்களுடைய புகழ்ச்சியுங் கிறீஸ்துவர்களுக்கு விரோ தமாய் எழுதியிருந்த தேவ தூஷணங்களும், எல்லாம் ஒன் றுக்குப்பின் ஒன்றாய் வெந்து கருகி, தீய்ந்து பொசுங்கி, சாம்பலானது.

சத்திய திருச்சபையை விரோதித்து அதை அழிக்கு மபடியாய்த் துணிந்து முயன்ற அகங்காரங்கொண்ட அர சர்களும், அதிகாரிகளும், இவ்விதமே கெட்டு அழிந்து சா ம்பலாய்ப்போகாமலிருப்பார்களா? இவர்கள் நிலை நிறுத்து

மடியாய் வருந்தும் அஞ்ஞான மதம் சீரழிந்து, சிரிப்புக்கிடமாகி, நிலைகெட்டு விழுந்து, வெந்து கருகிய சாம்பலைப் போலாகாமல் நிற்குமா? அழியாப் புகழ் நாட்டிய வெற்றிவீரனென்று பொய்யாய்ப் பெயரெடுத்த இந்த அஞ்ஞான இராயர்கள், அநீதம், அக்கிரமம், கொடுங்கோன்மையாலே ஸ்தாபித்த இராட்சியமும், சில காலத்துக்குள், இன்று நெருப்புக்கிரையான அவர்கள் சட்டத்தைப் போலவே, அழிந்துகெட்டு ஒழியமாட்டாதா? இப்போது இடிந்து தகர்ந்து கீழே பாழாய்க் கிடக்கும் அவர்களுடைய ஆலயங்களும், அரண்களுங் கோட்டை கொத்தளங்களும், சர்வத்துக்கும் அதிபதி கர்த்தனாய், இராஜாக்களுக்கெல்லாம் இராஜாவான சர்வவல்லபமுள்ள சர்வேசுரன் ஒருவரே இருக்கிறாரென்றும், அவரை மேற்கொள்ள எந்த மனுஷனாலுங் கூடாதென்றுங் காண்பிக்கிறதில்லையா?

இவைகளைப்போன்ற யோசனைகள், வெந்து சாம்பலான இராஜ சட்டத்தைச் சிபஸ்தியார் பார்த்துக்கொண்டு நிற்கும்போது, அவர் மனதில் பிறந்தன. இராஜ சட்டத்தை நெருப்பிலே போட்டு எரித்தது வீண் விளையாட்டுக்கல்ல. அது சர்வேசுரனுக்கு விரோதமாய்த் தேவ தூஷணங் கக்கிக்கொண்டு, சந்திச் செருவில் நின்றதைப்பற்றித்தான். இந்தப் பெரும் பாதகன் அலுவலைச் செய்யும்போது பிடிபட்டால், தங்களைச் சித்திரவதை செய்து உயிரை அணு அணுவாய் வாங்குவார்களென்று அந்த இருவருக்கும் நன்றாய்த் தெரியும். ஆனால் திருச்சபையின் ஆதிகாலத்துக் கிறீஸ்துவர்கள், வேதசாட்சிகளாய் மரிக்க ஆயத்தஞ் செய்கையில், சாவு எவ்விதம் வருமென்று கவனித்ததில்லை. சேசுநாதர்சுவாமிக்காக சாகப்போகும்போது, அச்சாவு எளிதானதோ, கடுமையுள்ளதோ, கொடுங்கோரஞ் செ

ல்லுமோ, நிமிஷத்தில் முடியுமோவென்று, மனததராசில் நிறுத்துப் பார்க்கமாட்டாாகள. யுத்தகளத்தில போராடு மபடி வரும வீரன, கூாமையுள்ள வாளால் ஒரே வெட்டி ல சாவானே அலலது சரீராதி எங்கும காயமபட்டு, இரத் தஞ் சிந்தி, கைகால வெட்டுணடு, தன் உதிரததில் தோய நது புரண்டு கடைசியில் சாவானேவெனறு முன்பின் யோ சிப்பானே?

சிபஸ்தியார், இவ்விருவருஞ் செய்த பெரு மோசத்து க்கு ஏதுவான வேலையைப்பற்றி யோசிநது நிற்குமபோது, அவாகளைக் கடிந்து கோபிகக மனமிலலே. இவாகள் செய் ததில் சிரிப்புககு இடமான சில விஷயங்களிருநததால் இ தைப்பறறி தமாஷாயப பேசுவது நலமென்று எண்ணினர். பங்கிராசும இராக்ஷஸ வீரனும சிபஸ்தியார் என்ன சொல் லுவாரோவென்று கொஞ்சம அரணடுதான் நின்றாகள். ஆனல் சிபஸ்தியாா சிரிதது நகைத்துப் பேசினவுடனே அவர்கள் பயமும் நீஙகிபபோக, எலலாருமாய்ச் சோநது நடநத சங்கதிகளைபபறறிக் கலநது பேசி, பசியோடு போஜ ன பதாாத்தங்களைச சாப்பிட்டார்கள். சாபபிட்டு முடிந த பினபு மூன்று விருநதினரும தியோஜெனனுக்கும அவர் பிளளைகளுககும உபசார வாாததைகள் சொல்லி தங்கள் வீட்டுக்குப போனாாகள். பங்கிராஸ் அன்றிரவில படுக் கப்போனபோது நடநத விநோத சங்கதிகளை நினைத்து நினைத்து வயறு புணணாகச சிரிததுககொண்டிருநததால் நித்திரையின்றி இராவைப் போக்கினன்.

# ௮-ம். அதிகாரம்.

## இராஜ சட்டம் போனகதி.

---

மறுநாள் சுக்கிரோதயமாகுமுன் கோர்வீனன் விழித்தெழுந்தான். இராஜ சட்டத்தை வெகு புத்தி யுக்தி சாமர்த்தியத்தோடு தான் பிரஸ்தாபப் படுத்தியதால், உரோமை சக்கரவர்த்தி தன்னை மெச்சுப் புகழ்ந்து பரிசளிப்பான் என்ற சிலாக்கிய எண்ணத்தோடு கம்பீர ஜன்னிகொண்டவனாய், இராவிருள் இன்னமூடி இருந்தாலும் தான் நட்ட ஸ்தம்பத்தைப் பார்க்கும்படி புறப்பட்டான். ஸ்தம்பத்தைச் சுற்றிலுங் காவலாய் வைத்த சேவகர்கள் எல்லாரும், அவனவன் தன் தன் இடத்தில், ஆஜராய் நின்றார்கள். இவர்களைக் கடந்து இராஜ சட்டமிருந்த ஸ்தம்பத்தின் கிட்ட வந்து பார்த்தான். ஸ்தம்பத்தின்மேல் வெறும் பலகைமாத்திரம் இருந்தது. அதிலே ஆணியைத்த இடத்தில் இங்குமங்கும் சில துண்டுத் தோல்கள் தொங்கினது. இந்தக்காலக்கோலத்தைக் கண்ட கோர்வீனன் இளிக்கின்ற குரங்குபோல் ஏமாறிப்போய் விழித்து நின்றான். கோபமும், பகையும், குரோதமும் மனதில் பொங்க, கண்களிலிருந்து நெருப்புப் பொறி பறக்கத் தாசியனென சேவகனை உறுக்கிப் பார்த்தான். அவனோ யாதொரு விசேஷமும் நடவாததுபோல் ஸ்தம்பத்தின்முன் காவலாய், புதையல் காக்கும் பூதம்போல், நின்றுகொண்டிருந்தான்.

இம்மிலேச்ச தாசியன் நின்ற நிலையைப் பார்த்த கோர்வீனன் அவன்மேல் புலிபோல் பாய்ந்து தொண்டையை நெறுக்கிக் கொன்றுபோடலாமா வென்று யோசித்தான். ஆனால் அத்தாசியனுடைய கண்ணோக்கம், இரத்தத்தைக்

குடித்த துஷ்டப் புலியினை நோக்கம் போலிருந்ததால் கோா வீனன் பயந்து அவனைத் தொடாதே போனாலும் உள்ளத்தில் பொங்கிய கோபவெறியை அடக்கமாட்டாமல் தாசியனைப் பார்த்துக் கேட்பான் :

" அடா! மூடா! இராஜ சட்டம் எங்கேடா? உள்ளதைச் சொல் "

தாசியன் சற்றுங் கலங்காமலும் இருந்த இடத்தை விட்டு ஓடி அசையாமலும் மறுமொழி சொல்வான் :

" குறவீன் துரை ! ஆத்திரம் வேண்டாம். மெள்ள மெள்ள. என்ன எங்கே? இராஜசட்டமா? அதோ பார், நான் காக்கும்படி நீ வைத்த சட்டம்."

" எங்கேடா மூடா சட்டமிருக்கிறது? கிட்ட வந்து கண்ணை விளக்கிப் பாரடா."

தாசியசேவகன் கிட்ட வந்து முதலிலிசை அங்கிருந்த பலகையை உற்றுப்பார்த்தான். நன்றாயப் பார்த்த பின்பு சொல்வான் :

" குறவீன துரை ! நேற்று கம்பத்தின்மேல் நீ வைத்துப் போன சட்டப் பலகை இது அல்லவா?"

"ஆமடா தடியா? இது சட்டப்பலகைதான். ஆனால் இதிலே எழுத்துகளிருந்ததே. அந்த எழுத்துகளெங்கே? அதை அல்லோ காக்கும்படி நான் உன்னை வைத்தேன்."

" குறவீன துரை ! எழுத்து எனக்குத்தெரியாது. நான் பள்ளிக்கூடத்தில் படிக்கவில்லை. ஆனால் இந்த இராத்திரி மழை ஓயாமல் பெய்துகொண்டிருந்ததால் நீ வைத்த எழுத்துகள் கரைந்து போயிருக்கலாம்."

"ஆஹா! வெகுநேர்த்தி! அப்புறம காற்று வீசின படியால் எழுத்துகளை அடித்துக்கொண்டுமே போயிருக்க லாம்! ஏ! அப்படியா?"

"அப்படித்தான் குறவீன் துரை. நீ சொன்னதே சரி."

"அடே! இது விளையாட்டுக் காரியமல்ல. நடந்த தைச் சொல. யாரா இங்கே நேற்று இராத்திரி வநதது?"

"வநதா? இரணடு, இரணடு, குறவீன் துரை."

"என்ன இரணடடா?"

"இரண்டு பேயோ, பூதமோ, மாயாரூபமோ, யாருக் குத்தெரியும்?"

"அடே மடபபயலே! உள்ளதைச சொல். கள்குடி யன்போல் உளறுதே."

தாசியபேசவகன குடிவெறியில மருண்ட தன் கண்களை உருட்டி மிழித்து, மீசையை முறுக்கிக் கோர்வீனனைப் பார்த்தான். கோாவீனன சற்று மரியாதையோடு கேட்பான்:

"நலலது, வீரதாசியா, இங்கே வநதவாகள் யார்? அவாகள் என்ன செயதாாகள்?"

"ஒருவன நலல வாலிபப பையன. கொஞசம வளாந தவன், மெலிநத உடல், நான வேறொருவனோடு பேசிககொ ணடிருக்குமபோது இவன கமபததைச சுறறி சுறறிப போ னான். நீ காணுமென்று சொலலுமநத இவனதான எடுத்திரு ககலாம"

"உன்னோடு பேசிக்கொண்டிருநதவன யாா? எப்படி இருநதான?"

தாசிய சேவகன தன் வாயையுங் கணகளையுந திறந்து கோாவீனனை விழித்துப் பாாத்து சொல்வான்:

"எப்படியா இருந்தான? அவன் எங்கள் குலதெய்வம சத்தருசாயிராவிட்டால அவன தமபியாயிருக்கவேண்டும. ஓ! அவனுககு என்னபிலன்?"

"தன் பிலனைக்காட்ட அவன் என்னடா செய்தான்?"

"கேள் குறவீன்துரை. அவன் என் கிட்ட. வந்து வெகு பிரியமாயப் பேசி, மழைபெயயுது, குளிரடிககுது, இருளிருககுது, என்று சொல்லுமபோது, என்கிட்டவரும எவனையும் குத்திக கொல்லுமபடி நீ சொனனதை நினைத்து......"

"அப்படித்தான செயயவேணடியது. நீ ஏண்டா செய்யவிலலை?"

"ஏனு? அவன் எனனைத தடுததுப்போட்டான. நான அவனைப் பாரத்து: 'ஓய், கிட்டவராதே, போ, இல்லாவிட்டால் உன்னைககுததிக கொலலுவேன' என்று என் ஈட்டியை எடுததேன். அபபோது அவன ஏதோ மநதிர ஜாலதததால் என கையிலிருநத ஈட்டியைத் திரிகிப பறித்து முழங்காலில் வைத்து, காயநத சுப்பியை முறிப்பதுபோல், ஒடித்து, அதோபார, நூறு அடி ககப்பால் எறிநதுபோட்டான."

"அப்போ நீ ஏண்டா உன வாளை உருவி அவனமேல் பாய்ந்து கொல்லவில்லை. ஆனல் உன வாள எங்கே? உறையில் இல்லையே."

அப்போது தாசியன் அடுக்குப்பானை உருண்டாற் போல் மடமடவென்று சிரித்துக் கிட்ட இருநத ஒரு மணடபத்தைக் காட்டிச சொலவான் :

"குறவீன்துரை, பார் அதோ மண்டபத்தின்மேல் விடியறகாலை வெளிசசத்திலே, பளிச்சு பளிச்சென்று மின்

னுகிறது." கோர்வீனன் அந்தப பக்கமாயப் பார்க்கும்போ
ட ஏதோ கிடபபதாகத தோனறினது கோபம மனதிலே
அதிகமாயப பொங்கக கேட்பான :

"அடா முட்டாள்பபயலே! அவ்வளவு தூரம எப்
படிடா போனது?"

தாசியன தன மீசையைத திரிகி முறுக்கி வெறிக்கப
பாரத்தான. கோர்வீனன சறறு சாதுவாயப பேசிக கேட்
பான்

"வீரதாசியா, உன்வாள் அங்கே எப்படிபபோனது?"

"என் கிட்டவந்த அவன அலலது அது எப்படியோ
மாயமாயப் பறித்து, நீ பந்தை எபபடி எளிதாய எறிவா
யோ, அபபடியே பார அதோ, அங்கே எறிநதான."

"அதனபின அவன் எனனடா செயதான?"

"அதன்பின்னு? அவனும அவனோடு வநத சுட்டிப்
பயலும வநததுபோல மாயமாய மறைநதுபோனுர்கள்."

"இதெனனடா அகாதயான கட்டு விஷயமாயிருக்கி
றது! அதிலும இவன் சொலவது மெய எனறு நமபுருஜ
வுமிருககிறது. ஆனால நீ ஏனடா சத்தம் செயது மற்றவா
களைத துணைககுக கூபபிடவிலலை?"

"குறவீனதுரை! ஆததிரப்படாமல மெதுவாய்ப்
பேசு. எங்கள் ஊரில நாங்கள் உயிரோடிருக்கும மனுஷ
ரோடு சண்டைக்கு நிறபோம. பேய்களோடும பூதங்களோ
டும் சண்டை செய்யமாட்டோம அபபுறம என வீண் சண
டை? அந்தச் சட்டப்பலகையைக் காககும்படி அல்லவா
எனக்கு நீ சொன்னுய்; அதோ பலகை இருக்கிறது."

'கோர்வீனன தன் பலலுக்குள்ளே, கேட்காதபடி
முணங்கிக்கொணடு; சாவு முட்டாள்' என்றபினபு தாசி

யனைப் பார்த்து: "அடே நீ செய்தது பெரிய தப்பிதம், கடின தண்டனை வரும்."

"என்னவரும்? திரும்பச் சொல்லு."

"எப்படிடா நீ உன் கிட்ட வந்தவனிடத்தில் நான் கொடுத்த இரகசிய வாக்கியத்தைக் கேளாமல் விடலாம?"

"குறவீன்துரை, ஆக்திரமவேண்டாம். ஆக்திரம் வந்தால் புத்திமட்டு. யார நான் கேட்க வில்லையென்று சொன்னது? நான சொன்னேனா?

"உன கிட்டவந்தவன நான் கொடுத்த வாக்கியத் தைச் சொன்னால் அவன கிறீஸ்துவனாயிருக்கக் கூடாது."

"அவன் என்னிடம நேரே வந்து நன்றாய்த் திருத்த மாய இராஜனே தீபம் என்று சொனனான."

"எப்படி சொன்னான்?"

"இராஜனே தீபம்"

"மூட்டாள் பயலே! நான கொடுதத வாக்கியம, இராஜனே தேய்வம் என்பதல்லவா?"

"போ ஐயாபோ; தெயவம், தீபம், எல்லாம ஒன்று தான. ஒரெழுத்திலே என்ன பிரமாதம வநதது. கேள், என் பெயர் ஏர்மன்; நீ ஊர்மன் என்று கூப்பிடுகிறாய். நான் சண்டைக்கு வருகிறேனா? எல்லாஞ் சரிதான். உன் பாஷை யிலிருக்கும எழுத்து வித்தியாசம எனக்கென்னதெரியும."

கோர்வீனன் இதைக்கேட்டு பாஷை அறியாத இந்த மூடனைத் தெரிந்தது பெரிய தப்பிதமென்று நினைத்து மன ஸ்தாபப்பட்டான. இந்த அந்நியனுக்குப் பதில் உரோமான னான சௌரிய வீரன் ஒருவனைக் காவலாய் வைத்திருநதால் இந்த மோசம் வந்திருக்கமாட்டாதென்று இப்போது தான்

பட்டறிந்தபின் கண்டு பிடித்தான். ஆகிலுமனதில பொங்கிய கோபத்தில சேவகனைப பார்த்துச சொலவான :

“ அடாதாசியா ! நீ செய்த இந்தத் தப்பிதத்துககு நமது இராயரிடம நீ தான உத்தரவாதியாயிருபபாய்.”

“குறவினைதுணை ! யார உத்தரவாதி? நானா? நீயா? திருமபச சொல்லு. தமபீ தமபீ! நாம இருவரும் ஒரு வலையிலே மாட்டிககொணடோம நீ தப்பிககவேணடுமொனு லநானும தபபிககுமபடி ஏதாவது வழி செய ஏ ! அந்தச சட்டத்தையோ, பலலககையையோ காககுமபடியாய உனனை அலலவா இராயா குறிததார ?”

“ வீரதாசியா, நீ சொலவது நாயம். அபபோ, தப்பித்துக்கொள்ளுமபடி நான ஒரு உபாயஞ சொலலுகிறேன. நீ போய் இரணடு மூனறுநாள் வரையில எஙகேயாவது தலையைக்காடடாமல பதுங்கிக்கொள். வேணடிய சாராயம் உனக்கு நான வாஙகிக் கொடுக்கிறேன். நான படடணத்திலே போய், இராத்திரியில நீ காவலாயிருக்குமபோது ஆயுதபாணிகளான சிலகொடியா வந்து உன்னை அடித்துக கொனறுபோடடதாக பிரஸ்தாபப படுத்துகிறேன ”

அதுபோலவே, தாசியனன சேவகன குடிக்குமபடி பணம வாஙகால போதுமெனறு, போய் ஒளிந்து கொணடான். சிலநாளைக்குப்பின தீபேரி ஆற்றின கரையில ஓர பிரேதங்கிடப்பதைக் கணடு, அதை எடுத்து சோதித்துப் பாாக்கையில தாசியனுடைய பிரேதமெனறும ஏதோ ஒரு சண்டையில காயமபடடு இறந்ததாகத் தோன்றின தென்றுஞ் சொனனாாகளேயனறி, எபபடி அத்தனைகாயங கள் வந்தது, யாருடன் சண்டை செய்தான என்று ஒருவரும் விசாரிக்கவிலலை. இவனைச் சார்ந்த விஷயங்களை

எல்லாம் நன்ருய் அறிந்தவன் கோர்வீனன். இவன் இச் சமயத்தில கபசிப் என்று வாயை மூடிக்கொண்டு பரம யோக்கியனைபோல இருந்துவிட்டான. கோர்வீனன் ஸ்தம பம் நட்டிருந்த இடத்தை விட்டுப போகுமுன நாலுபக்க முஞ் சுற்றிப பாாக்குமபோது, ஸதம்பத்தின் அடியில ஓா கத்தி விழுந்து கிடபபதைக் கணடு அதை எடுத்துப பாாக் கையில், தான் முன பள்ளிககூடத்தில படிக்கும நாளி ல் தனனுடன படித்த ஓா மாணுக்கன கையில பார்த்த தாக ஞாபகம வநதது. இநதக்கத்தி இனிமேல தன் பழி யைத் தீாக்க உதவுமென்று மனதில எணணி, அதைப்ப தனப்படுத்தி, இராஜ சட்டத்தைத் திருமபவும எழுதிப் பிரஸ்தாபிக்கக் கோர்வீனன விரைநது நடந்தான்.

---

## ௬-ம். அதிகாரம்.

### விபரீத வியாக்கியானம்.

---

மறுநாள் அதிகாலமே ஜனங்கள் பெருங்கூட்டமாய் நாலு திசையிலுமிருந்து இராஜ சட்டம் இன்னதென்று அறிய ஆசையோடு சநதைகூடுமஇடத்துக்கு வநதார்கள். ஏதோ கொடிய சடடம ஒன்று வரப்போகின்றதென்று பலநாளாய்க் கேள்விப்பட்ட பின்பு, கடைசியாய் அன்று அதிகாலையில பிரஸ்தாபிக்கபபோகிறதாகப் பட்டணத்து ஜனங்கள் அறிநதிருந்தார்கள். ஆனல காலமே வந்து பா ர்க்குமபோது வெறும பலகை மாத்திரந் தொஙகக்கண்டு, கத்தி கை கொட்டி, கூக்குரலிட்டு, கலகஞ் செய்தார்கள். சிலா, கிறீஸ்துவாகளை மெச்சிப் பேசி, இவர்கள் இயலபிலே திடனற்ற பரம கோழைகளானலும் இந்த விசையில உ ரோசமுள்ளவர்களாகக் காண்பித்தார்கள் என்ருர்கள்.

சிலர், கிறிஸ்துவர்கள் பழிபாவத்துக்கு அஞ்சாத பரம சண்டாளரென்று கோபாவேசமாய் அவர்களை வாய் சலிக்கத்திட்டினார்கள். வேறு சிலர், இராஜ சட்டத்தை பிரசித்தமாக்கும்படி ஏற்பட்ட உத்தியோகஸ்தனைப் பழித்து நிந்தித்துப் பகடி பண்ணினார்கள். இன்னுஞ் சிலர், கிறிஸ்துவர்களைச் சிங்கங்களுக்குப் போடுவதைப் பார்க்கும் தமாஷாவுக்கு இன்னம் அதிக நாள் செல்லுமேயென்று துக்கித்தார்கள்.

ஸ்நான ஜாகைகளில் அன்று கூடினவர்களெல்லாரும் இராஜ சட்டம் போன கதியைப்பற்றித் தங்களுக்குள் சம்பாஷித்தார்கள். அங்கு கூடினவர்களில், நமக்கு அறிமுகமுள்ள கல்பூரணன், புலவியன், புரோக்குலஸ் முதலிய கிருபண சிரோமணிகளும் இருந்தார்கள்

"இராஜ சட்டத்தைப்பற்றிய சங்கதி என்ன விநோதமானது!" என்று ஒருவன் சொல்ல, அதற்குப் புலவியன்

"விநோதமா? துரோகமென்று சொல். தேவர்களான நமது இராஜாக்களுக்கு விரோதமான காதக துரோகம்."

"சங்கதி என்ன? நடந்த விஷயங்கள் எவை?"

அதற்குப் புரோக்குலஸ் சொல்வான் "ஏன்? உனக்குத் தெரியாதா? ஊரெங்கும் பிரஸ்தாபம், கேள் இராஜ சட்டமிருந்த ஸ்தம்பத்தைக் காக்கும்படி பராக்கிரம வீரனைத் தாசிய சேவகன் ஒருவனைக் காவலாய் நேற்று வைத்தார்கள். இன்று அவன் பிரேதமாய்க் கிடக்கிறான். அவன் சரீரத்தில் உடைவாள் ஈட்டிக் குத்துகளிருந்தது. அவைகளில் மிகு குத்துகள் பெரிய காயங்கள். அதில் ஒன்று மாத்திரம் உயிரைக் கொல்லப்போதும்."

இதற்கு துஸ்கன் என்ற ஒருவன் சொல்வான் :

"நீர் சொன்னதெல்லாஞ் சுத்தப்பொய். வெட்டுங் குத்துஞ், சண்டை சல்லியம், ஒன்றுமில்லை. எல்லாம் மந்திர ஜாலத்தால் நடந்தது. நடந்த சங்கதி நாலு வார்த்தையில் இதுதான். காவலாயிருந்த தாசியனிடம் இரண்டு மாயினிப் பெண்கள் வந்தார்கள். சேவகன் தன் ஈட்டியால் ஒருத்தியைக் குத்தினான். ஈட்டி அவளை ஊடுருவிப் பாய்ந்து அப்புறம் வந்து தரையில் அழுந்தினது. அவளுக்கு காயமேயில்லை. இன்னொருத்தியைத் தன் வாளாலே வெட்டினான். ஆனால் பாறையை வெட்டினால் பாறைக்குச் சேதமா வாளுக்கு மோசமா? அப்போது அந்த மாயினி தாசியன்மேலே ஏதோ ஒருவகைப் பொடியைப் போட்டாள். அவன் உடனே உயரப் பறந்துபோய் அடுத்திருந்த மண்டபத்தின் மேலே விழுந்தான். விழுந்தாலும் அவனுக்குக் காயம் ஒன்றுமில்லை. இன்று காலமேதான் ஒரு ஏணி வைத்து அவனைக் கீழே இறக்கிவிட்டார்கள். என் இஷ்டர்களில் ஒருவன் வீட்டிலிருந்து வரும்போது அங்கே சாத்தியிருந்த ஏணியைத் தன் கண்ணாலே பார்த்தான்."

இந்த விவரத்தைக் கேட்டவுடனே கூடியிருந்தவர்கள் ஒருவாய்போலப் பேசி, "என்ன அற்புத அதிசயமிது! இந்தக் கிறீஸ்துவர்கள் எவ்வளவு மந்திர தந்திரங் கற்றவர்கள்!" என்று கூவினார்கள்.

அப்போது புரோக்குலன் சொல்வான்: "துஸ்கன் சொன்னதில் ஒரு வார்த்தையும் நிஜமல்ல. மந்திர வித்தைக்கு அவ்வளவு சக்தியில்லை. அன்றியும், நம்மவர்களுக்குத் தெரியாத மந்திரவித்தை அந்தப் பேதைக் கிறீஸ்துவர்களுக்கு எப்படித் தெரியலாம்? ஆனால் கலபூரண சா

ஸ்திரியாரே! நீங்கள் வாசித்துக்கொண்டிருக்கும் அந்தப் பண்டைய காலத்துத் தூசி அடைந்த பெருங் காப்பியத்தைக் கொஞ்சநேர மூடிவைத்து எங்களுடைய சந்தேகத்தைத் தயவு கூர்ந்து நிவாரணம் பண்ணுங்கள். கிறீஸ்துவர்களைப்பற்றிய பல சங்கதிகளை, நான் பலவருஷங்களாய், பலகிரந்த நூல்களிலிருந்து வாசித்து அறிந்ததைப் பார்க்கிலும், நீங்கள் ஒருநாள் செய்த உபந்நியாசத்தைக் கேட்ட பின்பு அதிகமாய் அறிந்தேன். ஓ சாஸ்திர பண்டிதோத்தமரே! உங்கள் புத்தியும், உங்களுக்கிருக்கும் ஞாபக சக்தியும், எவ்வளவோ அதிசய வியப்புக்குரியது! உங்களுடைய சாஸ்திரப் பயிற்சியும், நுட்ப அறிவும், யுக்தி உபாயமும், வாசாமகோசரம். இந்த மிலேச்சருடைய பாரம்பரை வரலாறெல்லாம் எப்படி நீங்கள் இவ்வளவு நுணுக்கமாய் வாசித்து ஞாபகத்தில் வைத்திருக்கிறீர்கள்! நுஸ்கன சொன்னது வாஸ்தவமாய் இருக்கக்கூடுமோ? உங்கள் அபிப்பிராயமென்ன?"

சாஸ்திரியார் அவர்கள், இவ்வளவு புகழ்ச்சியான மொழிகளைக் கேட்டு, மனங்குளிர்ந்து, பெரும ஏப்பமிட்டு, நாலு பக்கமுஞ் சுற்றிப்பார்த்து, தாம வாசித்த கிரந்தத்தை மூடி, மறுமொழி சொல்வார்

"மந்திர வித்தையால மனிதன ஆகாசத்தில் பறப்பது கூடாதென்று சொல்லல யுக்தம அன்று ஏனெனில் மந்திர வித்தையின சக்தி இவ்வளவு தான எட்டும், அதற்கு அப்பால எட்டாதென்று வரை அறுத்துச் சொல்வது எவராலுங் கூடாது கூடாதானால், ஆகாசத்தில மனிதன் பறக்கும்படி செய்ய மந்திர வித்தையால சாத்தியப்படாதென்பதும் என் புத்திக்கு நிஷ்காரணமாகத் தோன்றுகின்ற

து. மனிதன் ஆகாசத்தில பறக்கும்படியாய், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம, என்ற பஞ்ச பூதங்களில வாயு எந்தப் பூண்டில் ஜாஸதியாயிருக்கிறதெனறு சோதித்து அறியவேண்டும. பித்தகோரஸ் என்ற மஹா வைத்திய சாஸ்திரியார் கோட்பாடடின பிரகாரம, பயறு வகைகளில வாயு அதிகமாய் உணடாம. இவ்வித பூண்டு இன்னதென்று அறிந்தபின், சூரியன் துலாம என்ற இராசியில நடந்து, புதன் என்ற கிரகத்தோடு சங்கமமாயிருக்கு மங்கல முகூர்த்தததில இந்தப பூணடுகளைப் பிடுங்கவேணடும. இந்தச் சமயம ஏன் நலல முகூாததவேளையெனில், துலாம் என்ற இராசியில சூரியன வருஙகால, கனமுள்ள எநதப் பொருளும் லகுவாக, துலாக்கோலில வைதது நிறுத்ததுபோல், உயர எழுமபி ஆகாசததில பறக்கும. இநதச் சுபநேரத்தில் பிடுங்கின பூண்டை வெயிலில உலர வைத்து உரலில்ப போட்டு நன்றாய் இடிததுப் பஸ்மமாக்கவேணடும. அநத உரல் செய்யுங்கல ஆகாசத்திலிருநது சில சமையஙகளில் விழும் வெள்ளைக் கலலாயிருபபது அவசியம. இவ்வித கல்லால் செய்த உரலில காய்நத பூணடைபபோட்டு பஸ்மமாக்குங்கால், மகா தோநத மநதிரவாதி அநுகூலமான சில மந்திரஙகளை ஓதி, நாலு திசையை நோக்கி அஷ்டாஙக சாஷ்டாங்கஞ் செய்து, பஞ்சகெளவியம சாப்பிடவேண்டியது. இவ்வித சாதனங்களோடு செய்த பொடியால மனிதர்கள் உயர எழுந்து பறக்கலாம். வடதேசங்களிலிருக்குஞ் சில மாயினிகள் இவ்வகையாய்த்தான் ஆகாசமாாக்கமாய்ப் போயத் தென் தேசததிலிருக்குந் தங்கள் இனத்தாரை சந்திக்கிறாகள். இந்த மாயாஜாலப்பொடி செய்யும் வகை வைத்திய சாஸ்திர நூலிலிருப்பதை நான் சொல்

வதற்கு ஆதாரமாக, மேற்கோளாய் எடுத்து கூறுகிறேன் கேளுங்கள்.

ஆகாசந் தனிலெழுந்து பறக்கவேண்டில்
ஆன ஒரு மூலிகை நான் சொலவேன் கேளாய்,

வாகான சூரியன்வான் மேலே ஊர்ந்து
வந்து துலாம் எனும்ராசியை யடுகும்போது,

மேகாதி தனிலிருந்து விழுந்த கல்லில்
விதமான பூண்டு ல இடித்துப பஸ்மம்

ஆகவே செயுநசாலே மந்திரமோதி
அணு போல லகுவாய் நீ பறப்பாய் சொன்னேன்.

மித்திரரே! கிறீஸ்துவாசள் இவ்வித மந்திர வித்தையி ல் வெகுவாய்த தோந்தவாகள் எனபதைப்பற்றி அணு அ ளவும் ஐயமிலலே. யான முனனொரு விசை உங்களுக்கு விரிவாயச் செய்த உபந்நியாசததில கிறீஸதுவர்கள் பிரதம த்தில் கலதேய தேசந்தவாகளென்று சொன்னது உஙக ளில பலருக்கு இன்னம ஞாபகத்திலிருக்குமலலவா? இந் தக் கலதேய தேசம் ஆதிகாலந தொட்டு மநதிர வித்தை யில் மிகப் பிரசசித்தி பெற்றது. இதற்குத் திருஷ்டாந்தம் தேசசரித்திரத்தில் ஒன்றுண்டு. அதுவும நமது இராஜதா னியில் நடந்தது. பல வருஷஙகளுக்குமுன், சீமோன் எ னப் பெயருள்ள ஓர் மநதிரவாதி இருந்தான். இவனைச் சி லர் சீமோன் பேதுருஸ் என்றும வேறு சிலர் சீமோன் மா கஸ் என்றுஞ் சொல்வார்களா. இவன் நமது ஜனஙகள் பா ர்த்திருக்க தன் மந்திரத்தால் ஆகாசத்தில் எழும்பினன். ஆனால் இவனது துர் அதிர்ஷ்டம், இடையில கட்டியிருந்த ம ந்திர மூலிகை நழுவிக் கீழே விழ இவன் உயரயிருந்து வி ழுந்தான்; இவன் கை கால்கள் முறிந்துபோயின. இந்

காக இவனை ஓர் சிலுவை மரத்தில் தலை கீழாயுங் கால் மேலாயும் அறைந்து கொன்றார்கள்."

"அப்படியானால், சாஸ்திரியாரே, கிறீஸ்துவர்கள் இயலபிலே மாந்திர வாதிகளோ?"

"ஆக்ஷேபனையா? மந்திர தந்திர மாயா ஜாலம அவர்கள் மதத்தின மூலப்பிரமாணங்களிலொன்று. அவாகள் குருக்களுக்கு என்னமோ அதி அற்புதமான வல்லமை இருபபதாகச் சொலவாாகள். இதற்கு ஒரு உதாரணங் கேளுஙகள். கிறீஸதுவாகள் தணணீாில ஸநானஞ் செய்தால் அவாகளுடைய ஆத்மா மகா சுத்தமாக, அவாகளுக்குப் பலவகையான சுதநதர உரிமைகள் உண்டாகுமாம. இப்போப்பட்டவாகள் அடிமைகளாலுல தங்கள் எஜமான்களுக்கும் தங்களை ஆளும இராஜாக்களுக்கும மேலானவர்களாகின்றாகளாம்."

இந்த விசேஷத்தைக் கேட்டவுடனே எல்லாருந "தோஷம, தோஷம," என்று வாயில அடித்துக்கொணடாாகள்.

"மித்திரரே! இநதக் கிறீஸதுவாகள் செய்யாத அக்கிரமம் ஒன்றுமிலலை. நேற்று இராத்திரித்தானல்லவா தேவாக்களான நமது இராஜாக்கள் பிரகாரஞ் செய்த சட்டத்தைக் கிறீஸ்துவாகள் துராகிருதமாய் எடுத்துக் கிழித்துப் போட்டார்கள். இவ்வளவு தானா? கொடும்பழி நிறைந்த இராஜ துரோகம் ஒன்றை இவர்கள் எண்ணி, நமது தேவத்துவ இராஜனைக் கொன்று போடும்படியாய்த் துணிந்தாலும், தாங்கள் செய்த துரோகத்தைத் தங்கள் குருக்களில் ஒருவரிடம் போய் காதுக்குள் சொன்னால் அந்தத் துரோகத்துக்கு உடனே மன்னிப்புப்பெற்று மாசற்றவர்களாவார்களாம்."

"ஓ! கொடுமை! கொடுமை!" என்று எல்லாருங் கூவினார்கள்.

"இவ்வித கோட்பாடுள்ள மதம் ஒரு தேசத்திலிருப்பது அந்தத் தேசத்துக்கே பெரும் ஆபத்து. யாரொருவன், தான் செய்யும் எவவித அக்கிரமங்களையும், இன்னொருவன் மன்னிப்பானென்று எண்ணினால, இவன் செய்யத் துணியாத துரோகம் ஏதேனும உணடோ?"

அதற்குப் புலவியன் சொலவான: "இது காரணத்தினாலதான கிறிஸதுவாகளுக்கு விரோதமாய் இவ்வளவு கொடிய சட்டம பிரஸ்தாபிக்கபபட்டது நமது வாசாலக சாஸ்திரியார் கிறீஸ்துவாகள் நடக்கையைபபறறி விரிவாய்ச் சொன்னவைகளைக் கேட்டபினபு அவாகளை எவ்வளவு கொடுமையாய் நடத்தினாலும அது வரமபுகடந்ததென்று எவருஞ் சொலலமாட்டாாகள்."

இவாகள் இவ்விதம் பேசிக்கொண்டிருக்கையில் சிபஸ்தியாா வநதாா. வந்தவனைப் புலவியன கவனமாய்ப் பாாத்துக்கொணடிருநதான். பேசி முடிநத பினபு சிபஸ்தியானை நோக்கிப புலவியன கபடமாய்க் கேடபான்: "சிபஸ்தியாரே! நாஙகள் சொலவது ஞாயமாக உமக்குத் தோனறுதல்லவா?"

"கலபூரணசாஸ்திரி சொலவதுபோல கிறீஸ்துவர்கள் கொடிய மநதிர வாதிகளானால, அவர்கள் பூமியில் இல்லாதபடிக்கு அழித்து சர்வ சங்காரமாக்கவேண்டும். ஆகிலும் அவர்கள் தப்பிக்கும்படி ஒரு வழி அவாகளுக்குக் காட்டலாம."

புலவியன் புன்சிரிப்போடு அந்தவழி ஏதென்று கேட்க, சிபஸ்தியார் சொல்வார்:

"கிறீஸ்துவர்கள் பேரில் எவன் குற்றஞ் சாட்டுகிறானோ அவன் தான்முதலில் குற்றமற்றவனென்று ஒப்பிக்குமட்டும், அவர்களைத் தண்டிக்கும்படி கேட்கக் கூடாது. எவன் துர்மார்க்கனோ, வஞ்சகனோ, குடியனோ, அக்கிரமியோ, வீபசாரியோ, திருடனோ, அவன் கிறீஸ்துவர்களுக்கு விரோதமாய் கையெடுக்கக்கூடாது. இவ்விதகுற்றங்களை எவனும்கிறீஸ்துவர்கள் பேரில சுமத்துகிறதில்லை."

செபஸ்தியார இப்படிப் பலவகையான பாதகங்களை ஒவ்வொன்றாய்ச் சொல்லும்போது, புலவியனைக் கோப முகத்தோடு உறுக்கி நோக்கிபபாாதது, கடைசியில "திருடன்" என்றதை சற்று அழுத்தமாய்ச் சொன்னபோது, புலவியன திடுக்கிட்டு திகைதது விழித்தான். பாபியன வீட்டில கீழே கிடநத சீராவின ஜரிகைத்துண்டை சுருட்டி மடக்கி அக்குளில அடக்கிக்கொண்டு போகும்போது செபஸ்தியார தனனைப்பாாததாரோவென்று சந்தேகம இவன் மனதில உணடானது. இதுமுதல, செபஸதியாாபேரில இவனுக்கு முன் உணடாயிருநத வாமமும பகையும முற்றிபபோக இனித் தன்பழியை இரத்தஞ் சிநதுவதாலத் தான் தீாக்கக் கூடுமென்று நிச்சயித்துக்கொண்டான்

செபஸ்தியார் ஸ்நான ஜாகையைவிட்டு வெளியேபோகும்போது தன்மனதில எழும்பிய பெருந்துயாத்தை ஆற்ற சர்வேசுரனைப்பார்தது பிரார்த்தித்துக்கொண்டு நடந்தார்:

"ஆ சுவாமீ! இன்னம் எத்தனைகாலம் செல்லும! இந்த விஸ்தாரமான இராட்சியத்திலுள்ள அஞ்ஞானிகள் மனந்திரும்புவாாகளென்பதைப்பற்றி என்ன நம்பிக்கை இருக்கிறது! இவர்களுக்குள் புத்திசாலிகளும், யோக்கியதை உள்ளவர்களும் முதலாய், மற்றவர்கள் கிறீஸ்துவர்

களைப்பற்றிச் சொல்லும் அபாண்டமான அபதூறுகளை எல்லாம் மெய்யென்று நம்புகிறார்களே! உமது சத்திய வேதத்துக்கு விரோதமாய் அபத்தப் பொய்களை எங்கும் பிரஸ்தாபப்படுத்துகிறார்களே! இதினிமித்தம், உமது வேதத்தைப் பரிசோதித்தறியுமுன் அது அபத்தமதமென்று இவர்கள் எண்ணுவதால், இவர்கள் மனந்திரும்ப என்ன வழியுண்டு? ஆ சாவேசுரா! இன்னம் எத்தனைகாலம் அஞ்ஞான அந்தகாரம் இப்படி அடர்ந்து மூடியிருக்கும்."

சிபஸ்தியார் தமது மனதின் ஆத்திரப்பற்றுதல் நிமித்தம் சத்தமாய் இப்படி ஜெபித்துக்கொண்டுபோகும்போது தீயகுரலோடுபேசிய ஓர் மாதினை சப்தம் தன் காதில் விழுவதாகக் கேட்டார்: "கௌரவவீரா! உமது குரல் சத்தத்தால் நீயாரென்று எனக்குத் தெரியும். சேசுநாதர் சுவாமி ஓர் குருடனுக்குப் பார்வை கொடுக்கும்படி களிமண்ணை அவன் கண்ணில் தடவவில்லையா? நாம் களிமண்ணை எடுத்து கண்ணில் பூசினால் உள்ள கண்ணும் போய்விடும். ஆகையால் சேசுநாதர் நம்மைக்கொண்டு இந்தத் தேச ஜனங்களுக்குச் சத்தியவேதப் பிரகாசங் கொடுக்கும்படி நாம் ஆசையாயிருந்தால், நாம் அவர் பாதத்தின் கீழ் தூசிபோல தாழ்ந்து மிதிபடவேணும். நாம் தாழ்த்தப்பட்டு, துன்பப்பட்டு, காலில் மிதிபடுந் தூசிபோலானால் சேசுநாதர்சுவாமி இந்த மணணை உபயோகித்து விசுவாசத்தின் பிரகாசம் அஞ்ஞானிகளுக்கு உண்டாகும்படி கிருபை செய்வார்."

"அம்மா செசிலி! நீ என்னைக் கண்டித்துச்சொன்ன இந்த நல்ல புத்திக்காக நான் மெத்தவும் நன்றி அறிந்திருக்கிறேன். ஆபத்தான இந்த நாளிலே நீ எங்கே இவ்வளவு விரைவாய் நடந்து போகிறாய்?"

"கலிஸ்தாவென்ற சுரங்கத்துக்கு என்னை வழிகாட்டியாக நியமித்திருக்கிறார்கள், என்வேலையை நான் உடனே துவக்கப் போகிறேன். செபஸ்தியாரே! வேதகலகமாகிற புஷ்பகாலந்துவக்கப் போகின்றது. நான் மோக்ஷத்தில் மலரும் முதல் புஷ்பமாகும்படி எனக்காக பிரார்த்திக்க உங்களைநான் கேட்டுக் கொள்ளுகிறேன்."

செசீலி ஆனந்த சந்தோஷத்தால பூரித்தமனதோடு தேவஸ்தோத்திர கீர்த்தனை பாடிக்கொண்டு தீவரித்து நடக்கும்போது, செபஸதியார அவள சற்று நேரம நிறகுமபடியாய் மிகவுங் கேட்டுக்கொணடார.

## ய-ம் அதிகாரம்.

### சுரஙகத்தில் நுழைந்த ரிதகூடடா.

இராஜ சட்டம் அந்தா கதியாய்ப போனதின்பின், அந்த இராத்திரியிலேயே கிறீஸ்துவாகள் தத்தம் பங்குக் கோவிலகளில, பூஜை, தேவாராதனை சடங்குகள் செயது, வேதகலககாலத்தில உறுதியாயிருக்குமபடி ஏதுவான புத்தி பிரசங்கங்கள் கேடகத தக்கதாக, வநது கூடியிருநதார்கள். தேவநறகருணையாந திவ்விய போஜனத்தை சாப்பிட்டு, அக்கால வழக்கப்பிரகாரம், உயிரும உறுதியுந தரும் இந்த ஜீவிய அப்பத்தை, அவரவர் தங்கள் வீடுகளுக்குக்கொண்டுபோய், வெகு பூஜித வணக்கத்தோடு காபபாற்றி, அநுதினந் தாங்களே உட்கொள்ள, வேண்டிய அளவுக்கு வாங்கினார்கள். இதுமுதல் வேதகலகம் முடியும் நாள் மட்டும், பூஜை தேவாராதனை முதலிய சடங்குகள் சுரங்கங்களின் கோவில்களில் நடக்குமென்று சமஸ்தருக்கும் அறிவித்தார்கள்.

கிறீஸ்துவர்களோ, யுத்தஞ் செய்ய போர்க்களத்துக்குப் போகும் அஞ்சாத் துணிவுள்ளவீரர்களைப் போலிருந்தார்களே அன்றி சாவின் தீர்ப்புப் பெற்று கொலைக்களத்துக்குப் போகுங் குற்றவாளியைப்போல பயந்து நடுங்கவில்லை. இந்தக் கஷ்டகாலத்தில இவர்களுக்கு அவசியமான ஆயுதமும், பலமும், உறுதியும், போஜனமும், தேவசற்பிரசாதத்திலிருந்தது. இந்த ஸ்ரீயபோஜனத்தைச் சாப்பிடுவதால மன உறுதியற்ற கோழைகளும உறுதியுந் தைரியமும பெறுவார்கள. நமது காலத்தில இப்போது நடக்குந் திவ்விய பூஜைபலியின பிரதான சடங்குகளும், பலி ஒப்புக்கொடுக்குந் தரு சொல்லும ஜெபங்களும், அக்காலத்தில இதேவகையாய்த்தான இருந்தன. இதனிமித்தம, பூஜை இக்காலத்தில காணும நாம, திருச்சபையின ஆதிகாலத்திலிருந்த கிறீஸ்துவர்களோடு ஒன்றித்து, அவர்கள் சர்வேசுரனுக்கு ஒப்புக் கொடுத்த அதேபலியை, அதே பாஷையில, நாமும ஒப்புக்கொடுக்கிறோம்.

இன்று தத்தம பங்குக் கோவில்களில கூடிய ஜனங்களெல்லாருந் தேவாராதனை முடிந்தபின், ஒருவரொருவரோடு செலவு பெற்றுக்கொள்ளும்போது, என்ன சம்பவிக்குமோ, இனி எல்லாருமாக இப்படி கூடுவோமோ ஏதோ, என்னமோ என்று நினைத்து, தகப்பன் தன் மகனைக் கட்டியும, தாய் தன் மகளை அணைத்தும், சகோதரர், சிற்றத்தார் ஒருவரொருவரைப் பார்த்துங் கண்ணீர் சிந்தி அழுதார்கள்.

கிறீஸ்துவர்கள் தங்களுக்குத் தேவையான திவ்விய அப்பத்தை தூய வெண்மையுள்ள துண்டில் வாங்கி, நன்றாய் மடித்து, தங்கத்தால் செய்யப்பட்ட சிறுசிமிழில்

வைக்கும்போது, சீரா தான் இந்தச் சமயத்தை உத்தேசித்து வெகு பதனமாய்த் தன் பெட்டியின் அடியில் வைத்திருந்த ஜரிகைத் துண்டு காணமற் போனதை இப்போது நினைத்து வெகு துக்கப்பட்டாள். சடங்குகளெல்லாம் முடிந்தபின்பின் கோவிலிற் கூடிய ஜனங்களெல்லாரும் விடியும் முன்னே பிரிந்து கலைந்து போய் விட்டார்கள்.

தூர்குவாதனும் அவனுடைய இருதோழரும், ஞான ஜாகைக்கு இதற்கு முந்தின நாள் வந்திருக்கும்போது, தாங்கள் செய்யவேண்டிய பிரயத்தனங்களைப்பற்றி அந்தரங்கமாய்ப் பேசிக்கொண்டிருந்ததை, அடுத்த வீட்டிலிருந்த கிறீஸ்துவன் குக்கூமியன் கேட்டிருந்தான். இவர்கள் அப்போது செய்த நிபந்தனைப் பிரகாரம் இராஜ சட்டம் பிரசுரமான பிற்பாடு மறுநாள் சில சேவகரைச் சேர்த்துக்கொண்டு சுரங்கத்துக்குள்ப் போய் கிறீஸ்துவர்களைப் பிடிப்பதாய் எண்ணியிருந்ததால், கிறீஸ்துவர்கள் இந்த முதல் நாளிலே சுரங்கத்தில் இறங்கி தேவாராதனை உற்சவ நிவேசஞ் செய்வது யுக்தமென்று யோசித்து இதற்குவேண்டிய பிரயத்தனங்களெல்லாஞ் செய்திருந்தார்கள்.

ஆனால் கோர்வீனன், இராஜ சட்டங் கெட்டழிந்த பின் தன் வீட்டுக்குப்போய் வேறொன்று தயார் செய்து, அன்றிராத்திரி நடந்த அவகேடான சங்கதிகளைக் கொடுங்கோல் மன்னன் அறிந்தால் தன் உயிருக்கே மோசம் வருமென்று பயந்து, இராஜசமுகம் போகுமுன்னே, அந்த நாளிலேயே ஏதாகிலுஞ் சௌரியவீர ஆண்மையைக் காட்டுஞ் செய்கை ஒன்று செய்து தன் சமர்த்தைக் காட்டித் தனக்கு வந்த வெட்கத்தை ஒருவாறு பரிகரிக்கவேண்டுமென்று கருதினான். இந்நிமித்தம் அடுத்தநாளில் சுரங்

கத்துக்குள் போவதாய் உத்தேசித்திருந்ததை மாற்றி அன்றுதானே போகும்படி தீர்மானித்தான்.

இந்த யோசனையோடு அதிகாலமே ஸ்நான ஜாகைகளுக்குப்போக, அங்கே புலவியன் துர்குவாதனோடு இவனுக்காகக் காத்திருந்தான். இந்த மூன்று மதி யூகிகளுங் கூடி ஆலோசித்து தீர்மானித்ததேதெனில், கோர்வீனன் சில சேவகரோடு கலிஸ்தாவென்ற சுரங்கத்துள் போகிறது; துர்குவாதன் இவர்களுக்கு வழிகாட்டியாய் கூடச் சென்று, கையில் அகப்படும் குருக்கள், கிறீஸ்துவர்கள், எல்லாரையும் பிடித்துக் கட்டி வெளியே இழுத்து வருகிறது; புலவியன் வேறு சில சேவகரோடு சுரங்கத்தின் வாசலில் காத்திருந்து, உள்ளேயிருந்து வெளியே வரும் கிறீஸ்துவர்களைப் பிடிக்கிறது; முக்கியமாய் புலவியன் முன் குறிப்பாய் பார்த்திருந்த ஆச். பாபு கூட்டத்தோடேதப்பிப்போகாதபடி எச்சரிக்கையாயிருக்கிறது. இந்த ஏற்பாடுகள் புலவியனுக்குச் சம்மதமானதால அவன் தனக்குள் சொல்வான். "அந்த மட்டிப்பயல்கள் எலிகளைப் பிடிக்க நரிகளைப்போல வலைக்குள் போகட்டும். நான் வெளியே நின்று வீர சிங்கம்போல வேட்டையாடுவேன்."

இவ்விதமாய் இம்மூவருங் கூடிச் செய்த யோசனையைக் குக்கூமியன் கேட்டபின்பு, இதை ஒரு சீட்டில் எழுதி உடனே சுரங்கக் கோவிலிலுள்ளவர்களுக்கு அனுப்பும்படி தக்க சமயம் பார்த்துக்கொண்டிருக்கும்போது, நல்ல அதிர்ஷ்டமாய், செபஸ்தியார் ஸ்நான ஜாலைகளுக்கு அன்று காலமே வந்தார். அவரோடு அந்தரங்கமாய்ப் பேசினால் சமுசயம் உண்டாகுமென்று குக்கூமியன் எண்ணி, செபஸ்தியார் ஸ்நானஞ் செய்கையில், அவர் மேல்போர்வைக்குள் தான் எழுதிய காகிதத்தைக் குண்டூசியால் தைத்தான்.

சிபஸ்தியார் ஸ்நானஞ் செய்தபின், அங்கு கூடியிருந்தவர்கள் இராஜ சட்டம போன கதியைப்பறறி பேசிக்கொண்டிருக்கும்போது சற்று நேரம நின்று கேட்டு அதன்பின் சலிப்படைந்து வெளியே வருகையில தமதுபோர்வைக்குள் ஏதோ காயிதந தைத்திருக்கக் கணடு அதை எடுத்து வாசித்தார். சங்கதி தெரிந்தது. இச்சீட்டை உடனே சுராங்கத்துக்கு அனுப்பும்படியாகத்தான செசீலியைச் சற்று நேரம நிற்குமபடி கேட்டுக்கொணடார.

'தியோஜெனஸோடு கலிஸ்தாவென்ற சுரங்கத்துக்குள் முன் நாம் இறஙகினபோது, அங்கேயிருந்த ஓா கோவிலே த் தா்குவாதனுக்குக் காட்டுமபடி கபடற்ற கிழவனா போகும்போது செவேரஸ அவனைத் தடுததது இன்னம ஞாபகம இருக்குமல்லவா? அந்தக் கோவிலிலேததான் இனறு கிறீஸ்துவாகள் கூடியிருநதாாகள்

இநதச் சுரஙகக் கோவிலில இரண்டு நீண்ட சாலேகள் ஒன்றுக்கொன்று எதிரே இருநதன. இவ்விரண்டுக்கும மத்தியிலப் போக வர ஓா சிறு பாதை இருந்தது. அக்கால வழக்கப பிரகாரம ஆணபிளளேகள் ஒரு சாலேயிலும பெண்பிள்ளேகள் வேறுசாலேயிலும இருநதாாகள். ஆணபாலார் சாலேயின ஓா முனேயில அர்ச் பாப்புவின சிம்மாசனமுங குருக்களிருப்பதற்கு வேண்டிய ஆசனமுமிருந்தது. பூஜை பலியின பீடம இருசாலேயிலுள்ளவர்களும பார்க்கும்படி நடுமத்தியிலிருந்தது.

சுரங்கத் தேவாலயத்துக்குள் அன்று கிறீஸ்துவர்கள் வந்து கூடியிருக்குமபோது, கோர்வினனும் அவனுடைய எம தூதர்களுஞ் சுரங்க வாயிலின் கிட்ட வந்து சேர்ந்தார்கள். இவர்களுடைய வழிகாட்டியுான தார்குவாதனுக்குத்

தெரிந்தபாதை இதுதான். இடிந்து பாழாய்க்கிடந்த ஒரு வீட்டிலிருந்து, படிப்படியாய் கீழே இறங்க வேண்டியிருந்தது. எல்லாரும் வந்து சேர்ந்தபின் இறங்கும்படி வேண்டிய பிரயத்தனங்கள் செய்தார்கள்.

புல்வியன் பனிரெண்டு சேவகரோடு சுரங்க வாயின் கிட்ட காவலாயிருந்தான். கோரவீனனுந் துர்குவாதனும் எட்டு சேவகரோடு கீழே இறங்கினார்கள்.

கொஞ்சந் தூரந் தட்டித் தடுமாறி, முட்டி மோதிக்கொண்டு, இறங்கின பின்பு, போனசேவகர்களில் தாடியும் மீசையும் நரைத்த ஒரு கிழவன் சொல்வான்.

"இது என்னடா முட்டாள் வேலையாய் இருக்கிறது? எலிவளைக்குள்ளே நண்டுபோல் நகர்ந்துபோக நான் என்ன குறவனா? ஜெயவெற்றிகொண்ட உரோமானர் பட்டாளத்து சேவகன் நான் எவனோடாவது சண்டை செய்யென்றால் போர்க்களத்தில் இறங்கி எதிரியோடு நேரே நின்று ஒருகை பார்ப்பேன். சந்துபொந்தில் என்னைக்கொண்டுவந்து, மூச்சுவிட இடமின்றி திக்குமுக்காடும்போது, நான் யாரோடு சண்டை செய்யலாம்?"

கிழவன் இவ்விதமுணங்கிப் பாடத் துவக்கவும், மற்றச் சேவகரும் இவன் பாட்டுக்கு இசைவாய் தாளம் போட்டு ஆடத்துவக்கினார்கள். ஒருவன் சொல்வான்:

"சீ! இதென்னவேலை! கண்ணைக்கட்டி காட்டில் விட்டவனைப்போல் போகிற இடம் இன்னதென்று தெரியாமல் நடக்கிறோம். இந்தப்பாழும் சுரங்கத்தில் கிறிஸ்துவர்கள் ஆயிரக்கணக்காய் பதுங்கிக்கொண்டிருக்கலாம். நாம் என்ன ஒருகைப்பிடி அளவுதானே?"

இதைக்கேட்டு வேறொருவன் சொல்வான்:

"என்னடா இது வம்பாயிருக்கிறது? குறவன் வேலையைச் செய்யவா நான் படையில் சேர்ந்தேன்?"

"கிறீஸ்துவாகளைப் பிடிக்கவேண்டுமானால் இந்தக் காடிக்குகைக்குள்ளேயா வரவேண்டும்? அவர்கள் இங்கே இருந்தால மாந்திரத்தாலே தாசியனுக்குச் செயதாற்போல், நம்மையும் ஆகாசத்தில பறக்கவைக்கமாட்டார்களா?"

கோர்வினன் தனது வாசாலக சமர்த்தெல்லாம் கூட்டி அநத சேவகாகளுக்குச் சமாதானஞ் சொல்வான்:

"போர்வீரரே! ஒனறுக்கும பயப்படவேண்டாம. இந்தக் கிறீஸ்துவாகள் பரம கோழைகள். நீங்கள் வருகிறீர்களென்று அறிந்தால் முசல்போல ஓடி ஒளிநது பதுங்குவார்கள். இங்கே நாம நல்ல கொள்ளை அடிக்கலாம். கிறீஸ்துவாகளுடைய கோவிலில் தங்கப்பாத்திரங்களும் வெள்ளி ஜாமான்களும் ஏதேஷ்டமாயிருக்கின்றன. எடுப்பதெல்லாம் உங்களுக்குத்தான். ஒரு வருஷமட்டும் நீங்கள் பூர்த்தியாய்க் குடிக்குமபடி வேண்டிய பணம் இன்று கொள்ளை அடிப்பீாகள். இதோ வந்து விட்டோம." என்று இவ்வாறு அவர்கள் மனதைத் தேற்றிக் கொஞ்சந தூர நடந்தார்கள். தூரத்தில் மின்மினி போல தீபவெளிச்சம் இருப்பதைக் கண்டு சந்தோஷபபட்டு கோர்வினன் சொல்வான்:

"சேவகரே! அதோ பாருங்கள்! அங்கேதான் கிறீஸ்துவர்கள் கூடி இருக்கிறார்கள். நமது கையில் அகப்பட்டுக்கொண்டார்கள்."

இப்படிப் பேசிக்கொண்டு நடக்கையில் ஒரு சேவகன் சொல்வான்:

நின்று கேட்டார்கள். பாலியனொருவனுடைய தீங் குரல் கிண்கிணி ஒலித்தாற்போல தெளிந்த தொனியோடு தூரத்திலிருந்து வந்தது. அச்சம், பயம் இன்னதென்று அறியாத சௌரிய வீரன் சப்தம். அவன் பாடின தேவசங்கீத வாக்கியத்தின் ஒவ்வொரு மொழியும், வெள்ளி பாத்திரத்தின் தூய ஓசைபோல் கணீர் எனக் காதில விழுந்தது :

“ஆண்டவர்தான் எனது பிரகாசம. அவரோ என் இரக்ஷணியம. யாருக்கு நான் அஞ்சுவேன் ?”

“ஆண்டவரே என் ஜீவனைக் காப்பவர். எவனுக்கு நான் பயப்படுவேன்?”

இவன் தனியே பாடினபின்பு, பலநூறுபேர்கள சேர்ந்து கூடிபாடின ஓசை, கடலின அலைகள், அலைகள்மேலெழுந்து மோதி உடைநது ஒலிப்பதுபோல, சப்திக்க, அவர்கள் சொன்ன ஒவ்வொரு வார்த்தையுந தெளிவாய் காதில விழுந்தது :

“என்னை வதைத்துத துன்பப்படுத்தி, என் மாம்ஸத்தையே சாப்பிடும்படி துஷ்டா எனனை அடுத்துவரும்போது, என்னைப்பகைக்கும விரோதிகளே தாபபலங் கொண்டு மருண்டு விழுநதார்கள்.”

அஞ்சா மனத்துணிவின் அறிகுறியான இவ்வாக்கியத்தைச் சேவகர்கள் கேட்கவும், வெட்கி நாணி பிரமைபிடித்தவர்கள் போல் நிற்கையில, முதலில் பாடிய பாலியன் குரல், வீணையின் நரம்பு சுரமெடுத்து பாடினாற்போல், காதில் கிண் என்று ஒலித்தது :

“அணி அணியாய் வகுத்த பெரும்படை என்னை எதிர்த்து போர் செய்யவரினும், என் மனங் கிஞ்சித்தேனும் அஞ்சாது.”

இந்தக்குரல் சப்தத்தை கோர்வினன் உற்றுக் கேட்டபின் சொல்வான் :

"அந்தக் குரல் யாருடையதென்று எனக்கு நன்ருய்த் தெரியும். இவன் ஆயிரம பேர்கள் மத்தியிலிருந்து பேசினலும் அவன் இன்னனென்று நான அறியவலலேன். இந்தப் பயல் என் காலில் தைத்த முள். நேற்று இராத்திரி எனக்குச் சனியனுய வநத எமதூதன். நான இன்றுபடும் அவஸ்தைக்கு முதல்பாதக. இராஜ சட்டத்தைக் கிழித்தெறிநத கொடியன், பங்கிராஸ் அவனதான் சேவகரே! நடங்கள், நடங்கள். யார அவனைப் பிடிப்பாரோ அவனுக்கு அவன் கேடகும பரிசு கொடுப்பேன்."

இதற்கு ஒரு சேவகன் சொலவான் : இநத இருட்டு வளைக்குள்ளே முட்டி மோதிக் கொணடு போவதைப் பார்க்கிலும் தீவர்த்தி ஏற்றி வழியைப் பார்த்தாவது நடக்கலாம்.

வேரெருவன சொலவான : "அதோ ! என்ன சத்தம் ! யாரோ வெட்டிச் செதுக்குவதுபோலிருக்கிறது."

தூகுவாதன வெகு தைரியசாலிபோல நடிந்துச் சொலவான் : "ஒன்றுக்கும பயப்பட வேண்டாம. அநதச் சத்தம, இந்தச் சுரங்கத்திலிருக்கும் ஒரு கிழப்பயலும அவனிரு பிள்ளைகளும், நாம் பிடித்துக் கொலலப்போகிற கிறீஸ்துவர்களை க்ஷேமிக்குமபடி, குளிகள் வெட்டுஞ் சத்தம். வேறென்றுமிலலை."

சுரங்கத்தில இறங்குகிறவாகள் வழக்கமாய் மெழுகு வத்தி ஏற்றிக்கொண்டு போவாாகள். இந்தச் சேவகாகளோவெனில் பெருந தீவர்த்திகள் கொண்டுவந்திருந்ததால் இவைகளைக் கொளுத்தி தாழ்ந்திருந்த சுரங்கப்பா

தை வழியாய் நடக்கும்போது, நெருப்புச் சுவாலை மேலே தாவி புகையுங் கெந்தக நாற்றமும ஏகமாய மண்டி, உஷ்ணம் அதிகரித்து, கண்களிலிருநது தண்ணீா கபகபவென்று ஓடி வர, திக்குமுக்காடி, திகைத்துப் பதைத்து, கண்பாாவை மங்க, கால்கள் தடுமாற, முன்னே இருப்பதும் பின்னே இருப்பதும் ஒன்றும் அறியாமல குருடனைப் போல் தடவிப் பிடித்துக் கொண்டு நடநதார்கள். துர்குவாதன் எலலாருக்குமுன்னே வழிகாடடி நடநது, தான் முன் எண்ணிவைத்திருநத சுற்றுகள் எத்தனை கடந்தாயிற்றென்றும, தான் குறித்துவைத்த அடையாளங்கள் எங்கே இருக்கினறனவென றுஞ் சுவற்றின் கிட்டப்போய் தேடிப் பாாத்துப் போனன். போகபபோக அவன் முன்போட்ட அடையாளங்களெலலாம அழிநதிருப்பதைக் கண்டு புத்தி தடுமாறி மனஞ் சோம்பி, திணறித் திகைதது நடக்கும போது அவன பேோன பாதை முழுதும அடைப்பட்டுப் போனது.

இதன் காரணமேதெனில், சேவகாகள் சுரங்கத்துக்குள் வருவாாகளென்று, செவோனும அவன் சகோதரனும் இன்னுஞ் சில தேகபலாஷ்டிகாான வாலிபர்களும், இவர்கள் வருகைக்குக் காத்திருநதாாகள். அவர்கள் வரும் பாதையை அடைப்பதற்குத் தேவையான கலலும் மண்ணும் முன்னிதாய் செவோன் தயார் செய்து, சேவகர்கள் முதல் தட்டின் கடை சிமுனையில் வருஞ் சமயத்தில், மண்ணையுங் கலலையும் இருபக்கத்திலுமிருநது தள்ளி, வெகு ஜாக்கிரதையோடு வேலை செயது, அரை நாழிகைக்குள் பாதையை முழுதும அடைத்து, அதன் பின்னே கிநீலது வவேலைக்காரா இருந்து, சேவகர்கள் ஒருவரொருவரைத் திட்டி தூஷணிப்பதைக் கேட்டு, சிரிப்படக்கமாட்டாமல்

நின்றார்கள். இவர்கள் மண்ணைச் செதுக்கித்தள்ளின சத்தத்தைத்தான் சேவகர்கள் வரும்போது கேட்டார்கள்.

வழிமறிக்கப்பட்டு நின்ற சேவகர்களுங் கோர்வீனனுங் கோபவெறியில் துர்குவாதனைத் திட்டி, வாயில் வந்தபடி வைது தூஷணித்தார்கள். மடப்பயலென்றுந், தங்களைக் கிறீஸ்துவர்கள் கையில் காட்டிக் கொடுத்த துரோகியென்றும், பாமபுக்குத தலையும மீனுக்கு வாலுங் காட்டுஞ் சுறுமீன என்றும், இப்படியாய்த் திட்ட, துர்குவாதன் மனங் கலங்கி புத்திதடுமாறி, போகும வழி இன்னதென்று அறியாமல இருந்தாலும் அவர்களுக்குச்சமாதானம் பேசி:

"பயப்படவேண்டாம. எனக்கு வேறொரு பாதை தெரியும். நீங்கள் இங்கே சற்று நில்லுங்கள். நான அந்தப் பக்கம்போய் வேறுபாதை உண்டோவென்று பார்த்து வந்து சொல்லுகிறேன்" எனச் சொல்லி இடதுபக்கத்திலிருந்த அடுத்த தட்டின பக்கம துரிதமாய் ஓடினான். போனவன்தான், மாயமாய் மறைநது போனான.

சேவகர்கள் துர்குவாதன் வருவான் வருவானென்று காததிருநதார்கள் துர்குவாதா, துர்குவாதா என்று கூப்பிட்டார்கள் அவன் போன பாதையில கொஞ்சந் தூரம போய்த் தேடினார்கள். எப்படி மறைநதானென்று தெரியவில்லை. இதுவெல்லாம மாயாஜாலம, மநதிரவித்தையென்று தீர்மானித்து, இனித் தங்களுக்கும என்னமோசம் வருமோவென்று பயநது, தங்களை இந்தப் பாழுஞ் சுரங்கத்துக்குள் கூட்டி வந்த கோர்வீனனை வைது: "போதும், போதும, இந்த எலி வளைக்குள்ளேபட்ட அவஸ்தை எங்கள் ஜென்மா ஜென்மத்துக்கும்போதும். துர்குவாதனும் இந்தக் கோர்வீனனுமாகக்கூடி சதிதுரோகமாய் நமமைக் கொல்

லும்படி இங்கே கூட்டி வந்திருக்கிறார்கள். ஆபத்து வரு முன்னே வந்த வழியே திரும்பிப் போவதுதான் புத்தி" என்று சொலலி, கெமபீரஜன்னிகொண்டு, மூர்க்காவேச காய், சபதங்கூறி, மீசையை முறுக்கிச் சுரங்கத்துக்குள் வந்த இந்த வீர சிங்கங்கள், இபபோது வெடகிநாணி, தலை கவிழ்ந்து, கண் மருண்டு இருணடுபோக, வாலைக் குழைத்து, பல்லை இறுகக் கடித்து, திருமபிப்போனார்கள். அவாகள் வந்தபாதை நோபாதையானதால, போகும்போது தீவர்த்திகளை இங்கும் அங்கும் எறிநது போட்டாாகள். சற்றுத் தூர நடந்த பின்பு திருமபிப் பாாக்கையில அச்சுரங்க ஸ்தலமுழுதுந திவ்யமான பிரகாசம வீசி, ஜெயவெற்றி கொண்டதின அறிகுறியாக தீபாலங்காரம்•ஏற்றினதுபோல தோன்றினது பாதையின் இருபக்கத்திலும இருந்த கல்லறைகளின் பலவாண சற்கள், தேஜோமயமாய்த்துலங்கும பிரகாசத்தில, மஹாமல படடால ஜோடிக்கப் பட்ட சுவற்றில் தங்கத் தகடுகள் பதித்தாற்போல விளங்கின.

வேதகலகந்துவக்கின இநத முதல நாளிலே, அஞ்ஞானிகளில கொடிய துஷ்டாகள, வேதசாடசிகளுடைய சரீரத்துக்குச் செய்த பூஜித வணக்கத்தின் அறிகுறியாக தீபாலங்காரம் ஏற்றினதுபோல இநதக் காட்சி இருந்தது. கிறீஸ்துவர்களை நெருப்பில சுடடெரிக்குமபடி கொளுத்தின தீவர்த்திகள், அவாகளுடைய புணணிய நிறைந்த தர்ம ஒழுக்கத்தைத் துலக்கி எவர்க்குங காடட ஏற்றிய தீபம் போலாயின.

வெட்கி.வெருண்டு, தலை கவிழ்ந்து நடந்த சேவகர்கள் சுரங்க வாசலிற் சேருமுன்னே தங்களுக்கு எதிரே தோன்றிய விநோத காட்சி ஒன்றைக் கண்டு பின்னிட்டா

ர்கள். பிரதமத்தில் இது சுரங்கவாயிலிருந்து வந்த பிரகாசம் என்று எண்ணினார்கள். ஆனால், இது தீபவெளிச்சம் என்று பின்னால் கண்டு கொண்டார்கள். அங்கு ஓர் உரூபம் கருப்பு உடை அணிந்து, அசையாமல நின்று, தீபத்தைத் தூக்கிப் பிடித்திருந்ததால, பிரகாசம் முழுதும அந்த உரூபத்தினமேலே விழுந்தது இது அசைவின்றி நிற்பதைப பார்த்தவாகள் இது ஜீவப்பிராணியோ, அல்லது வெண்கலத்தால் வார்த்த சுரூபமோ என்று ஐயுறும படி தோன்றினது. சேவகா இந்தக் காட்சியைக் கண்டு ஒருவனொருவனைப் பாரத்து அச்சாதிசயத்தோடு கேட்பான் :

" அதென்ன அது? யார நிற்கிறது? மனுஷஜீவனா? அலலது பேயா? பூதமா? என்ன ?"

" ஓ! அது மாயினிபோலிருக்கிறது?"

" மாயினி அலல இந்தக் குகையைக் காக்கும்பூதம்"

"பூதமுமலல. அது ஒரு மாயா ரூபம."

இபபடிக் கேட்டுக்கொணடு நிசப்தமாய் அதன்கிட்ட வரும்போது அவாகள் வருவதை அந்த ரூபம அறியாத தாகத் தோனறினது அதன கணகளில அசைவுமில்லை. ஒளிவுமில்லை. பாரக்கவேணுமென்ற ஆவலுமில்லை. இரண்டுபேர் கிட்ட வந்து அதைபிடித்தாாகள். பந்திக்கு முந்திக்கொள் படைக்குப் பிந்திக் கொள் என்ற பழமொழிப்படி எலலாருக்கும பின் நினற கோாவினன் முன்னே வந்து கோபாவேசமாய் : நீ யார்? என்று கேட்டான்.

அதற்குச் செசீலி பூரித்து மகிழ்ந்தவளாய், வீணையினும் இனிய குரலோடு: "நான், கிறீஸ்துவள்" என்று சொன்னாள்.

அப்பொழுது ஜோர்வினன் சொல்வான்: "கிறீஸ்துவ ளா? ஆ! ஆ! சேவகரே! இவளைப் பிடித்துக் கட்டி வெளியே இழுத்து வாருங்கள் நாம் இந்தப் பாழுஞ் சுரங்கத்தில் வேட்டையாட வந்ததற்கு ஒரு பிராணியாவது நமக்குக் கடைசியில் அகப்பட்டது."

## ௰௪-ம். அதிகாரம்.

முதல் புஷ்பம்: செசீலி (ஜெயசீலி.)

செசீலி சிபஸ்தியார் கொடுத்த சீட்டை வாங்கிக்கொண்டு சமீபத்திலிருந்த குறுக்குப் பாதை வழியாய்ச் சுரங்கத்துக்குள் இறங்கினாள். சேவகர் கொளுத்திய தீவர்த்திகளின் துர் நாற்றத்தை நுகர்ந்ததும், வேத விரோதிகள் உள்ளே வந்து விட்டார்களென்று செசீலி அறிந்து, துரிதமாய் நடந்து, சுரங்கத் தேவாலயத்தில் கூடியிருந்தவர்களுக்குச் சீட்டைக் கொடுத்து சேவகர் சுரங்கத்துக்குள் இறங்கி இருப்பதையும் அறிவித்தாள். சிபஸ்தியார் அனுப்பிய சீட்டில், அங்கே கூடியிருப்பவர்கள் வெளியே வராமல் எல்லாத்துக்கும் அடியிலுள்ள கடைசித் தட்டில் போயிருக்கும்படி சொன்னபின், அர்ச். பாப்புவை எவ்வகையிலும் பிடிக்கும்படி துஷ்டர் எண்ணி வருவதால், அவர் சுரங்கத்தை விட்டுத் தான் சொல்லுமட்டும் வெளியே வராமல் அங்கேயே இருக்க, தாழ்மையாய் அவரைக் கேட்டுக்கொண்டார்.

செசீலியும் மற்றவர்களோடு தப்பித்து ஒளிந்துகொள்ளும்படி பங்கிராஸ் சொன்னதற்கு அவள் சொல்லுவாள்:

" பங்கிராஸ், நான் அப்படி செய்யமாட்டேன். சுரங் கத்தின் பாதையில் நின்று உள்ளே வருகிறவர்களுக்கு வழி காட்டுவது என் அலுவல் அல்லவா ?"

" சரிதான். ஆனால் செசீலி உள்ளே துஷ்டர் வந் தால் உன்னைப் பிடிப்பார்களே."

செசீலி புன் நகை காட்டிச்சொல்லுவாள் : "பிடிக் கட்டும். என்ன பிரமாதம்? என்னைப் பிடித்தால், மற்ற வர்களைக் கவனிக்கமாட்டார்கள். நல்லது, எனக்கொரு விளக்குக் கொடு."

" விளக்கா? என்னத்துக்கு? அந்த வெளிச்சத்தில் உனக்குக் கண் தெரியுமா?"

" எனக்குத் தெரியாவிட்டாலும் மற்றவர்களுக்குத் தெரியுமே."

" ஆனால் அப்படித் தெரிந்து வருகிறவர்கள் உன் சத் துருக்களாய் இருக்கலாம்."

" இருக்கட்டும் என்னைப் பிடிப்பவர்கள் இருளில் என்னைப் பிடிக்கக்கூடாது. என் பரிசுத்த பத்தா இந்த இராவிலே என்னைத் தேடி சுரங்கத்துக்குள் வந்தால ஏற் றின தீபத்தோடு நான் அவருக்கு எதிரே போக வேண் டாமா?"

அப்படியே செசீலி தீபத்தை எடுத்துக்கொண்டு சுர ங்க பாதைக்குப் போய் அதைத் தூக்கிப் பிடித்துக்கொ ண்டு நிற்கும்போதுதான் சேவகர்கள் நாம் முன் சொன் னதுபோல் அவளைப் பிடித்து வெளியே கொண்டுவந்தார் கள்.

கெம்பிர ஜன்னிகொண்டு சுரங்கத்துக்குள்ப் போன வீர சேவகர்கள், வளைக்குள்ளிருந்து எலிக்குஞ்சைப் பிடி

த்து வந்ததுபோல், ஒரு பேதைப் பெண்ணை மாத்திரம் பிடித்து வந்ததை வெளியே நின்ற புல்வியன் கண்டு, ஆக்கு ரோஷங்கொண்டு பதறி உதறி கோர்வீனனைத் திட்டி வைய, அவனும் கோபம் பொங்கி வாயிலிருந்து நுரையைக் கக்க, இருவரும் எலும்புத் துண்டுக்குச் சண்டைபோடும் நாய்களைப்போல உறுமிக்கொண்டு பலலைக் காட்டினார்கள். துர்குவாதன் மாயமாய் மறைந்து போன சங்கதியைச் சேவகாகளில ஒவ்வொருவனும், இராஜ சட்டங் காணுமற் போன சங்கதியைப்போல, விபரீதமாய்ச் சொல்ல, புலவியன் வெகு விசனபபட்டு அநதச் சதிதுரோகி தன்னை ஏய்த்துப்போட்டு சுரஙகத்தின பல சுற்றுகளுக்குள்ளே மறைந்திருக்கவேண்டுமென்று தனக்குள். தீர்மானித்துக் கொண்டான. காரியம இப்படியானல், அவளைச் சார்ந்த விஷயங்கள் இவளுக்குத் தெரியவேண்டுமென்று நினைத்து இவளைத் தன் முன் நிறுத்தி சுழித்த முகத்தோடு அவளை வெறிக்கப் பார்த்து கேட்பான்.

"ஏ! பேதைப பெண்ணே! என்னைப் பார்த்து உள்ளதைச் சொல்."

அப்போது செசீலி மலாநது விரநத முகத்தோடு, யாழிசை பாடினுற்போல இனபமாய்ப் பேசி சொலவாள்:

"ஐயா! உமமைப் பாாக்காமல நான் உள்ளதைச் சொல்லவேண்டும். நான் கணணிலலாக் கபோதி என்பது உமக்குத் தெரியாதா?"

சூழ நின்றவர்கள் எல்லாரும் ஒன்றாய்ப் பேசி 'நீ கபோதியா?' என்று கேடடார்கள். புல்வியன் முகத்தில் மாத்திரம், பசுமையான நாற்றுகள் விளைந்த வயலில் இளந் தென்றல் மெதுவாய் உலாவுவதுபோல், சொற்ப அசைவு

தோன்ற, தேடிப்போன மருந்து காலில் அகப்பட்டாற் போல் சந்தோஷம் அடைந்தான்.

அதன் பின்பு புல்வியன் சொல்வான்: "சேவகரே கேளுங்கள். நாம் இருபது பேர் சேவகர், இராஜதானி தெரு வீதியின் வழியாய் இந்த ஏழைக்குருடியைக் கூட்டிப் போனால் நம்மைப் பார்த்தவாகள் எலலாருஞ் சிரிப்பார்க ள். ஆகையால் நீங்கள் எல்லாரும் உங்கள் விடுதிக்குப் போங்கள். உங்களுக்கு வேண்டிய சம்மானஞ் செய்யுமப டி நான் ஏற்பாடு செய்கிறேன். கோர்வீனா, நீயும் இந்தக் குதிரை மேல் ஏறி உன் தகபபனா இடம முந்திப்போய் நடந்த சங்கதிகளைச் சொல். நான் இவளோடு வண்டியில வருகிறேன்."

கோர்வீனன், கைக்கு எட்டினது வாய்க்கு எட்டவி ல்லையே என்று மனஞ் சோம்பிச் சொலவான:

"புலவியா! வஞ்சகம் வேண்டாம். புளை சுருட்டு பண்ணாதே. நமது ஒப்பந்த நிபந்தனையை மறவாதே."

"நீ ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம், கோர்வீனா! எல்லாத்துக்கும் நான் இருக்கிறேன்."

துர்குவாதனைத் தன் உளவாளியாகப் பிரயோகித்த துபோல் இந்தப் பேதைப் பெண்ணையும் பசப்பி மயக்கி தன் கைக்குள் மடக்கலாமென்று புல்வியன் எண்ணி, அவ ளோடு தனியே வண்டியிலிருக்கும்போது, நயமும் பயமுங் காட்டி அவள் மனதைக் குளப்பிக் கலக்க வருந்தினான். ஆனால் இவ்வேழைப் பெண்ணின் பார்வையற்ற கண்களைப் பார்த்து மயங்கி அயர்ந்தான். வீண் சபதங்கூறி சூது விளையாண்ட குடி வெறியனுக்கும், யாசகஞ் செய்து கால க்ஷேபஞ் செய்து வந்த குருடிக்குமுள்ள வித்தியாசம் இன்

னதென்று கண்டறிந்தான். செசீலியைப் பார்த்து நய வஞ்சகம் பேசி புல்வியன் கேட்பான்:

"அம்மா சுந்தரமாதே! நீ எவ்வளவு காலம் இப்படி கண் தெரியாமல் இருக்கிறாய்?"

"நான் பிறந்த நாள் முதல் இப்படித்தான் இருக்கிறேன்."

"உன் சரித்திரம என்ன? நீ பிறநத ஊர் எது?"

"எனக்குச் சரித்திரமிலலே என தாய் தந்தை மெத்த எளியவாகள் எனக்கு நாலு வயசாகுமபோது என்னைத் தூக்கி இநதப் படடணததுக்குக் கொணடுவந்து அவர்கள் ஒரு வேத சாட்சியின கோவிலில் செய்த நேர்ச்சியை முடிக்கப்போனாகள். அப்போது வேத விரோதிகள் சடுதியில வநது கோவிலில இருநத எலலாரையுங் கொன்று போடடாாகள். அன்று மரிதத வேத சாட்சிகளுக்குள் என் தாயுந் தகப்பனும இருநதாாகள்."

"அதன் பினபு நீ எபபடி ஜீவிதது வநதாய்?"

"அதுமுதல சாவேசுரன்தான எனக்குத் தகபபன். அவருடைய கத்தோலிக்கு சபை என் தாய். சர்வேசுரன் ஆகாசத்தில பறக்கும பட்சிகளைப் போஷிக்கிறா. திருச்சபை அநாதப பிள்ளைகளை ஆதரிக்கிறது. இப்படியிருக்க எனக்கு என்ன குறைவுண்டு?"

"ஆனால நீ உனக்குக் கண் பார்வை இருந்தாற்போல தெருவீதிகளில் பயமின்றி நடநது போகிறாயே, அதெப்படி?"

"நான் அபபடி நடப்பது உமக்கு எப்படித தெரியும்?"

"நீ இப்படிப் போவதை நான் ஒரு விசை பார்த்தேன். சில மாதங்களுக்கு முன், ஒருநாள் அதிகாலமே விருத்தாப்பியனுன ஒரு நொண்டியைக் கூட்டிக்கொண்டு நீதான் அலலவா அதோ அந்தப் பாதை வழியாய்ப் போனது?

செசீலி இதைக்கேட்டு மறுமொழியின்றி மௌனமாய் இருந்தாள்.

"நீ கிறீஸ்துவளென்று சொன்னுய்?"

"ஆமா, எப்படி இல்லையென்று நான் சொல்லலாம்?"

"அப்படியானுல, அன்று நீ போன வீடு கிறீஸ்துவர்கள் வீடாய் இருக்கவேண்டும்."

"அதற்கும ஆடசேபனையா? இல்லாவிடில, நான் ஏன் அந்த வீடடுக்குப போகவேணும?"

இதைக் கேடட புலவியன தனக்குள் சொல்வான்: "காரியம் இப்படியா? சங்கதி விசதமானது. அக்நேசி கிறீஸ்துவள். இனி இரண்டிலே ஒன்று"

இவ்விதம் யோசித்த பின்பு செசீலியைப் பார்த்துக் கேட்பான்:

"நீ இப்போது எங்கே போகிறுய் என்று உனக்குத் தெரியுமா?"

"இந்தப் பட்டணத்து அதிகாரியினிடம என்னைக் கூட்டிப்போகிறீராக்கும். அவர் என்னை மோக்ஷத்துக்கு அனுப்புவார்."

"ஓ! ஓ! அவ்வளவு சுலபமாய்ப் போகலாமென்று எண்ணுகிறுயோ?"

"சுலபமாயா? சந்தோஷமாய் என்று சொல்லும. இது தான் என் கல்யாண நாள்."

செசீலியினிடம் இருந்து தான் அறியவேண்டிய விஷயத்தை புல்வியான் அறிந்துகொண்டதால் அவளைக் கோர்வீனன் வசம் ஒப்புவித்து தன் வீட்டுக்குப் போனான். புலிப்பால் குடித்து வளர்ந்த அகோதிகாரி ஆயுதங்களின் நடுவில் உட்கார்ந்துகொண்டு, யாரைக் கொல்லலாம், யார் இரத்தத்தைக் குடிக்கலாமென்று எண்ணம் இட்டிருந்தவன, செசீலியைக் கண்டவுடனே இவளுக்கு நயமும் பயமுங் காட்டி, எளிதில இவளுடைய மத வைராக்கியத்தை மாற்றலாமென்று கருதி, சூழ நின்றவர்கள் சப்தமின்றி மௌனமாயிருக்க அடையாளங் காண்பித்தான். சப்தமில்லாததால் செசீலி அங்கே ஜனங்கள் பெருங் கும்பலாய்க் கூடியிருந்தார்கள் என்று நினைக்கவில்லை.

தேர்த் தலவியன வெகு அன்பாய் அவளைக் கேட்பான்:

"அம்மா, பெண் மணியே உன் பெயர் என்ன?"

"என் பெயர் செசீலி."

"செசீலி என்பது சிறந்த கோத்திரப் பெயர். அந்தக் கோத்திரத்தைச் சேர்ந்தவளா?"

"என் கோத்திரஞ் சிறந்ததல்ல. என் தாய் தந்தை எளியவர்கள். சாவேசுரனுக்காக அவர்கள் தங்கள் உயிரைக் கொடுத்து வேத சாட்சிகளானதுதான், எங்கள் கோத்திர மகிமை. எனக்குக் கண் இல்லாததால் என்னை வளர்த்தவர்கள் சேக்கா அலலது குருடியென்றும், செல்வப் பெயராய் செசீலி என்றுங் கூப்பிடுவார்கள்."

"போனது போகட்டும், செசீலி, அந்தக் கிறீஸ்து வேதத்தை நீ விட்டு விடு, அவர்களோடு இருக்குமட்டும் நீ ஏழையுங் குருடியுமாயத் தான்இருந்தாய். எங்களோடு

வா, உனக்குப் பாக்கியம் எல்லாம் வரும். நமது தேவத்துவ இராஜாவின் கட்டளைக்குப் பணிந்து இந்த நாட்டுத் தேவர்களைக் கை எடுத்து கும்பிடு. அவ்வளவு போதும். உனக்குப் பணமுங் காசும் உணவும உடுபபும் எல்லாம் வரும். மகாக் கெட்டிகாரனை வைத்தியனைக் கூப்பிட்டு உன் கண்ணுக்குப் பார்வை உண்டாக வேண்டியமெதல்லாஞ் செய்வார்கள்."

"ஐயா! நான் என் சர்வேசுரனுக்குத் துரோகஞ் செய்யவேண்டுமாகில் இதைப்பார்க்க நல்ல ஞாயங்களை எனக்குக் காட்டவேணும். நீர் எனக்குக் குறைவென்று எண்ணுகிற இவைகளுக்காகவே நான சர்வேசுரனுக்கு அநுதினம் நன்றி அறிந்த ஸ்தோத்திரஞ் செய்கிறேன."

"என்ன நீ சொல்லுகிறாய்?"

"ஐயா! நான் பரம ஏழையாய் உடுக்க வஸ்திரமும உண்ண சாப்பாடுமின்றி வருத்தப்படுவதற்காகவே என் சுவாமிக்கு ஸ்தோத்திரஞ் செய்கிறேன். ஏனெனறால் இவ்வித கஷ்ட துன்பங்களைப் படும்போது என் திவ்ய பத்தாவான சேசுநாதனைப்போல நானும் இருக்கிறேன்."

"புத்தி கெட்ட பேதையே! கிறீஸ்துவாகளுடைய அபத்தங்களை நீ அதுக்குள் படித்துக்கொண்டாயா? உங்கள் சுவாமி உன்னைக் கண்ணில்லாமல் உண்டாக்கினதுக்காகவும் நீ நன்றி அறிந்திருக்கிறாயோ?"

"அதற்குத்தான் முக்கியமாய், நாள்தோறும், நிமிஷந்தோறும் அவருக்கு ஸ்தோத்திரஞ் சொல்லுகிறேன்."

"அதெப்படி? மனுஷர் முகத்தையுஞ், சந்திர சூரிய நட்சேத்திரங்களின பிரகாசத்தையும், அலங்காரமுள்ள கோடான கோடி வஸ்துகளையும், பார்க்காமல் இருப்பது

பாக்கியமென்று நினைக்கிறாய். என்ன மதி கேடான யோசனை."

"ஐயா அப்படிச் சொல்லவேண்டாம். உமக்கு இருள்போல தோன்றுவதின மத்தியில எனக்கொரு தெளிந்த பிரகாசம் இருக்கிறது. உமக்குச் சூரியனைஎப்படியோ, அதிலும் இது எனக்கு அதிக சிரேஷ்டம. பிரகாசமுள்ள இந்து வஸ்து கதிரை வீசி மலாந்த முகத்தோடு என்னை என்றும் பார்க்கிறது. இந்த வஸ்துவாா? இவர்தான என் ஸ்நேகத்துக்கு பூரண சுதந்தரமுள்ளவா. என் இருதய பட்ச முழுதும அவா மேல வைத்திருக்கிறேன. இந்த் தேவ பிரகாசம என் முன இருக்குமபோது எனக்கு வேறு பிரகாசம அவசியமில்லை. இவருடைய அலங்கார வடிவை மறைக்குமபடியாய வேறே எந்த வஸ்துவும நடுவில வரக்கூடாது. அவா சமுக முன இருபபது எனக்குப் பாக்கியம. அவரை என இருதயத்தோடு ஸ்நேகிப்பது என சர்வ ஆசை."

"போதும், போதும பயித்தியம்கொண்டவள்போல் புலம்பாதே. இராஜ கட்டளைக்கு நீ கீழபபடிவாயா? அல்லது உன்னைப் பாடு படுத்த வேணடுமா?"

"பாடு படுத்தவா?"

"ஆமா, பாடு படுத்தத்தான். இது இன்னதென்று உனக்குத் தெரியாதுபோல இருக்கிறது. இதற்கு முன் உன்னை யாராகிலுங் காயப்படுத்தினது உண்டா?"

"இல்லை, இல்லை, கிறீஸ்துவாகள் ஒருவரையும் காயப் படுத்தமாட்டார்கள்"

தோர்த்துலலியன்முன்னே உபாசையின் ஏந்திரமிருந்தது. கதுலனுக்குச் சமிக்கை காட்டி செசிலியை அதன்

மேல் கிடத்தச் செய்தான். அவன் அதன்மேலே அவளைத தள்ளி அவளுடைய கைகால்களின் கணுக்களில கயிறு கட்டி வளையங்களுக்குள் மாட்டினான். கண்ணில்லா செசிலி இதுவெல்லாஞ் செய்தவன் தன்னோடு பேசிககொண்டிருந்தவனென்று எண்ணியிருநதாள். சூழயிருநத ஜனங்களுஞ் சப்தமின்றி மூச்சுவிடாமல் பாரத்துக்கொண்டு நின்றாகள். செசீலியின் இதழ்கள் மாததிரம அசைய அவள் சர்வேசுரனைப் பிராாத்தித்தாள்.

அதிகாரி முன்னிலும அதிக கோபத்தோடு சொல்வான்: "இன்னம் பிடிவாதமாயிருப்பாயா? நான் சொலவதுபோல் செய்யமாட டாயா? சொல, இலலாவிடில் உன்னைக் கொடுமையாய் உபாதிப்பேன."

பலியைப்போல கைகால கட டப்பட்டிருந்த செசீலி மன உறுதியுடன தைரியமாய்ப் பேசி சொலவாள்:

"எவ்வளவு கொடுமையாய் என்னை உபாதித்தாலும் என் சேசுவை நான மறுக்கமாட டேன். சாவேசுரன் ஒருவருக்கே நான் ஆராதனை செய்வேன். நீா வணங்கும் நாட்டுத் தேவர்கள் நரக பசாசுகள்."

அதிகாரி கதுலனுக்கு அடையாளங கொடுக்க, அவன் உபாதை எந்திரத்தின் இருசக்கரத்தையும் பெலமாய்ச் சுற்றினான். செசீலியின் கணுக்களில் கட்டியிருந்த கயிறுகள் பெலமாயிழுக்கப்படவே, மூட்டுகள் பிசகிப்போனது போல் விண்விண் என்று தெரிக்க, மகா உக்கிரமமான வேதனை அனுபவித்தாள். அவள் உடல் முழுதும் பதைத்துத் துடித்து இரத்தஞ் சிந்தி முகம் வெளுத்தது. கல் நெஞ்சனான அதிகாரி சொல்வான்:

"ஆஹா! உறைக்குதா! நல்லது; இவ்வளவு போதும், எங்கள் தேவனைக் கும்பிடு, உன்னை நான் விட்டுவிடுகிறேன்."

செசீலி அவன் சொன்ன வார்த்தையைக் கவனிக்கவில்லை. அவளுடைய மனமுங் கருத்தும் மோக்ஷத்திலிருக்க தேனினும இனிய குரலோடு தன் இருதயபததாவை நோக்கி பின் வருமாறு பாடினாள் :

1. ஆதிபரப்பொருளே-உலசெல்லாம்-ஆளும் அருள்பரனே!
சோதிப் பிரதாபமாய் எஙகுநிறைந்திடுஞ் சுத்த அரூபியனே!
நீதிதனை உடையாய்-அணிந்தொளிர்-நிமலாநான் உன் அருளால்
வேதனை துன்பங்கள் யாவும் பொறுத்திட, வேண்டும்வரங்கொடுப்பாய்.

2. சந்தோஷ காலத்திலும்-சுகமுள்ள-தாழ்வில்லாகாலத்திலும்
தந்தை நீ என்றுன்னை அண்டி நேசித்தேன் ஸ்வாமி நீயே அறிவாய்
நிந்தையுந் துன்பமிக-இப்போதென்னை-நெருக்கிவரும்போதும்
உந்தன் பதத்தை நான் சந்ததம் போற்றுவேன் உன் தயைப் பாடிடுவேன்.

அதிகாரி வெட்கி நாணி கோபம் பொங்கச் சொலவான் :

"ஆஹா! நான் தயாளங் காண்பிக்கிறேன் என்று நீ என்னைப்பழிக்கிறாய்! அப்படியா? இதிலுங்கொடிய ஆக்கினை நான் இடப்போகிறேன் கதுலா! ஒரு பந்தத்தைக் கொளுத்தி அவளுடைய இருபக்கத்தையுஞ் சுடு அபபோ பாடுவாளோ பார்க்கலாம்."

சூழ நின்றவர்கள் இவ்வளவு நிஷ்டூர வேதனைப்படும் ஏழைப் பெண்பேரில் அநுதாபப்பட்டு, இதுமட்டுஞ் சப்தி

மின்றிமௌனமாயிருந்தவர்கள் இப்போது தங்கள் துக்கத்தை "ஐயோ! கொடுமை! கொடுமை!" என்ற பரிதாப மொழியால் வெளியாக்க, செசீலி இதனால் தன்னைச் சுற்றி ஜனக்கும்பலிருக்கிறது என்று அறிந்தாள். அறிந்ததும், அவள் கொண்ட நாணத்தால், இதுமட்டும் இரத்தப்பசையற்று வெளுத்திருந்த அவள் முகமும் மிடறும் இரத்தமாய்ச் சிவந்திருப்பதை ஜனங்கள் கண்டு முன்னிலும் அதிகமாய் அநுதாபப்படும்போது, அதிகாரி அவர்களைக் கண்டித்து மௌனங் காக்கும்படி கற்பித்தான்.

செசீலி தன் மனதில் நிறைந்த தேவஸ்நேகத்தின் பெருக்கத்தைப் பொறுக்கமாட்டாமல மோக்ஷானந்த பாக்கிய ஆசையால முன்போல இனிய குரலோடு, வீணையின் இசையும், பாலின் சுவையும், மாங்குயில குரலுமொப்பாக பின் வருமாறு பாடினாள்

1. வானமும் உலகம் மற்றெல்லாம் ஆக்கி
வகுத்து ஆண்டரு திரிப்பரனே!
ஞானமே அணியாய்ப் பூண்டொளிர் தேவா!
நலம் நிறை உன் பதம் ஸ்துதியே!
ஈனர் மானிடர்க்காய் கொடுஞ் சிலுவையிலே
இணையில்லாத துயர் வதை உற்றாய்,
நான் உனக்காக வேதனைப்படவே
நல்வரம் அளித்ததால் ஸ்தோத்திரம்.

2. துன்ப வேதனைகள் படுவது எனக்கு
சுகமும் ஆநந்தமும் ஆகும்,
இன்பமார உன்னைப் போல நானிருப்ப
தெனக்கு பேர் பாக்கியமாகும்;
அன்பிலா இந்த ஜனங்கள் முன் வெட்கம்
அடைவதைத் தாழ நான் மாட்டேன்

என் திரு பத்தாவாகிய உன்னோ
டேழையை அழைத்திடாய் சுவாமீ.

செசீலி பாடின பாசுர இனிமையைக் கேட்ட ஜன ங்கள் ஐயோவென்று பரிதாபிக்க, அதிகாரி கோபமிகுந்து வாயிலிருந்து நுரையைக்கக்கிச் சொலவான,

"அடே கதுலா! முட்டாள்ப பயலே! என்னடா இன் னஞ் செய்கிறாய். எரிகிற அந்தப் பந்தத்தை எடுத்து அவ ளுடைய இருபக்கத்தையுஞ் சுடடா"

கதுலன் பந்தத்தை எடுத்துக்கொண்டு செசீலியின் கிட்டப்போய் அவள் இருபக்கத்தையுஞ் சுடும்படி அவளு டைய மேல வஸ்திரத்தை நீக்கத் தன் கையை நீட்டினன.

நீட்டின கையைப பின்னெடுத்து அதிகாரியைப பார்த்து "ஐயா! எல்லா முடிந்து போயிற்று. இறந்து போனாள்" என்று சொலல, தோத்துல்லியன கதறி அல றிச் சொலவான்.

"இறந்தா போனாள்? அதுக்குள்ளேயா? சக்கரத் தை ஒருவிசைதானே நீ சுழற்றினாய். பார நன்றாய் இன் னஞ் செத்திருக்கமாட்டாள்."

கதுலன் சக்கரத்தைபபின்னே சுற்றி சரீரத்தின கிட் டப்போய் பாாத்தான. செசீலி இறந்து மெய்தான துன பம் நிறைந்த கொடிய எந்திரத்திலிருந்து, இனபம பொழி யும நித்திய மோக்ஷபதவியிலும், துஷ்ட அதிகாரியின கொடுங் கையிலகின்று தன திவ்விய பத்தாவின திருக்கை யிலுஞ், செலவ செசீலி ஜெயசீலியாய்ச் சோந்தாள். அவள் செய்த ஜெபத்தினின்றெழுந்த சுகந்த தூபவர்க்க நறும் புகைபோல அவள் ஆத்துமமும உயர எழும்பினதோ, அல்லது, அவளுடைய கற்பு நிலைகுன்றா காணத்தால்

அவள் இருதயத்திலிருந்து முகத்தில் பாய்ந்தோடிய இரத்தம் தரும்பவுந் தன் உயிர் நிலையாகிய இருதயத்துக்கு வராத குறைவால் உயிர் பிரிந்ததோ? ஏதோ?

எங்கும் ஏக மௌனமாய் அச்சாதிசயமுடன் எல்லாரும் நிற்கையில், கதவின் கிட்ட கூடியிருந்த கும்பலிலிருந்து ஓர் சப்தம், மணி ஓசைபோல, தெளிவாய் ஒலித்தது: "அடா! துஷ்டா! கொடுங்கோலா! நீ கொன்ற அந்தக் கபோதிப்பெண் உன்னிலும் அதிக சக்தி உள்ளவளென்று நீ அறியாயா? யார் கடைசியில் ஜெயித்தது, நீயா, அவளா?"

"அந்தப்பயலைப் பிடியுங்கள். இராப் பகல் அறுபது நாழிகைக்குள் மூன்றுவிசை எனக்கு குறுக்கே சனியனாய் வந்திருக்கிறான். அடா இந்தவிசை நீ தப்பமாட்டாய்."

இவ்விதமாய் கதறித் தூஷணஞ் சொல்லிக்கொண்டு, அதிகாரியின் பக்கத்தில் நின்ற கோர்வீனன் தன் தொங்கியைத் தூக்கி, தாண்டிக் குதித்து கும்பலின் மேலே விழுந்து குருடனைப்போல வரும்போது அவன் போனவழியில் தேகபலாஷ்டிகனும் புஜபராக்கிரமமுள்ள இராக்ஷஸ குலவீரன் ஒருவன் அகஸ்மாத்தாய் வருவதுபோல் எதிர்ப்பட, அவன்மேல் கோர்வீனன் தடுமாறி மோதிச் சுழலும்போது, அவனை இராக்ஷஸவீரன் கெட்டியாய் இறுகப் பிடித்துக்கொண்டு சொல்வான்:

"ஓ கோர்வீனா! என்ன சங்கதி? ஏன இவ்வளவு ஆத்திரம்? காயம் ஒன்றுமில்லையே?"

"காயமில்லை. ஆனால், குவாத்ராத்துஸ், என்னைத் தடுக்காதே; கையைவிடு; அந்தப் பயலைப் பிடிக்கவேண்டும்."

"எந்தப்பயலே? யாரவன்? வா, நானுங்கூட வருகி றேன்."

"என்னைவிடு, அவன் ஓடிப் போவான்."

"யார் ஓடிப் போவான்?"

"அவன்தான் பங்கிராஸ், படுசுட்டி; என் தகப்பனை நிந்தித்து ஓடுகிறான்."

இராக்ஷஸவீரன் பிடித்தபிடியை விடாமல் பின்னாலே திரும்பிப் பார்த்து, பங்கிராஸ் கண்ணுக்குக் காணாமல் தப்பித்து ஒளிந்து கொண்டானென்று அறிந்த பின்பு மாத்திரங் கையை விட்டுச் சொலவான்.

"பங்கிராஸா! யாரவன? உன் தகப்பனை நிந்திக்க லாச்சா! எங்கேயிருக்கிறான், ஓடிப் போய் அவனைப் பிடித்து வா."

கோர்வீனன் அசைந்து ஆட்டிப் போகிறதுக்குள்ளே பங்கிராஸ் சமீபததிலிருநத தியோஜெனன் வீட்டுக்குள்ப் போய் கதவை நன்றாய் சாாத்திக கொண்டான்.

இவையெல்லாங் கண்ட நகரதிகாரி நாணி, கதுலனைப் பார்த்து செசீலியின் பிரேதத்தை எடுத்து திபேரி ஆற்றில் எறிந்துபோடும்படி கற்பிததான. கதுலன போகும்போது படைவீரஷ் ஒருவன் அவனுக்கு சமிக்கை காட்டி அந்தா ங்கததில கூபபிட்டு அவன் கையில பணப்பையை வைத்து சொல்வான: "கதுலா, அஸதமித்து ஒருமணி ஆனபின்பு இந்த பிரேதத்தை லூசினாள் வீட்டுக்கு, மேலண்டைப் பாதை வழியாயக் கொணடுவா."

"நல்லது சேனாபதியே! உங்கள் இஷ்டம்போல் அட்டியின்றி கொண்டு வந்து சேர்க்கிறேன்."

ஜனங்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிப் போகும்போது, அன்று பார்த்த கொடுமையைப் பற்றிபேசிக்கொண்டு போனார்கள். ஒருவன் தன்னுடன் வந்தவனைப் பார்த்துக் கேட்பான் :

" அந்த ஏழைப் பெண் எதினிமித்தம் அவ்வளவு சீக்கிரத்தில இறந்து போனாள் ?"

" ஓ ! பயப்பிராந்தியால அவள் இறந்திருக்கவேண்டும்."

இவர்களிருவரும் பேசிக்கொண்டு போனதைக் கேட்ட வேறொருவன் அவர்களுக்குச் சொல்வான் :

" பயத்தினலல்ல. கிறீஸ்துவப் பெணகளுக்கு இயல்பாயுள்ள காணத்தாலத்தான் அவள் அவ்வளவு சீக்கிரத்தில இறந்தாள்."

## ௰௨-ம். அதிகாரம்.

நீதியும் தயையும்.

அரசன் அன்று கொல்லுந் தெய்வ நின்று கொல்லும்.

நகா அதிகாரி இராஜ சட்ட விஷயமாய் நடந்த அவக்கியாதியான சங்கதிகளை மாக்சீமியனுக்கு அறிவிக்கும்படியாய் அடுத்தநாள் இராஜ பேட்டிக்குப் போனன். அரசன் ஏதோ காரணத்தால கோபாவேசமாயிருந்ததால் அன்று காலமேகோர்வினன் இவன கிட்ட மாத்திரம் வந்திருந்தால் அவனைப் பிடித்துக் கடித்து தன் நகங்களால வகிர்ந்து கொன்றிருப்பான். தோததுல்லியன் வந்த சமயத்தில் செபஸ்தியாரும் ஏதோ வேலையை உத்தேசித்து அரண்மனைக்கு வந்திருந்தார்.

நகர் அதிகாரியைப் பார்த்த உடனே அரசன் பொங்கின வெகுளியோடு கேட்பான்: "எங்கே, உன் மகன் அந்த முட்டாள்ப் பயல்?"

"மஹா இராஜா! அவனுடைய துர் அதிர்ஷ்டம், துவக்கினவேலை அநுகூலப்படாததின் நிமித்தம தங்களது தேவத்துவத்துக்கு உண்டான கோபத்தைத் தணிக்கும்படியாய், தங்களது திவ்ய தரிசனத்துக்கு வெளியே காத்துக் கொண்டு நிற்கின்றான்."

"துர் அதிர்ஷ்டமா அவனுடைய சுத்தமட்டித்தனமா? பளா! பளா! மகா சமாத்தன் உன் மகன்! அவனுக்குத் தக்க சம்மானங் கொடுக்கவேண்டும். அவனை உள்ளே வரச் சொல்லு."

கோர்வீனன் பயந்து நடுங்கி விடவிடத்து உள்ளே வந்து அரசன் பாதத்தில் சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்காரஞ் செய்யும்போது மாக்சீமியன் அவனுக்குப் பலமாய் ஒரு உதைகொடுக்க, கோர்வீனன் ஓர் பந்துபோல் உருண்டு பிரண்டு அந்தக் கொலுமண்டபத்தின் மத்தியில் போய் விழுந்தான். இதைக் கண்டு இராஜ மகத்துவம் மடமட என்று சிரிக்க, அவனுடைய கோபஞ் சற்றுத் தணிந்தது. அதன் பின் சொல்வான்.

"அடே எழுந்திருந்து கிட்ட வாடா, மட்டிப் பயலே. நடந்த சங்கதியைச் சொல. இராஜ சட்டம் போனகதி என்ன?"

கோர்வீனன் தன்மேல குற்றம வராதபடி, சங்கதியைக் கூட்டியுங் குறைத்தும் இட்டுக்கட்டிச் சொல்லும் போது, மாக்சீமியன், கிறீஸ்துவர்கள் சமாத்தாய் செய்ததைக் கேட்டு, பலமுறை குலுங்க குலுங்கச் சிரித்தான். கோர்வீனன் சொல்லி முடித்தபின் அரசன் சொல்வான்.

" நல்லது போனது போகட்டும். உன் பேரில் நாம் தயவாயிருப்போம். சேவகரே அந்த ஆயுதத்தை எடுங்கள்."

உடனே சேவகர் கோடரியை எடுத்துத் தீட்டிக் கருக்காக்கினார்கள். கோர்வீனன் கீழே சாஷ்டாங்கமாய் விழுந்து அலறிப் பதறிச் சொல்வான் :

"ஓ தேவத்துவ இராஜனே ! என்னைக் கொல்லவேண்டாம. என் உயிரைக் காப்பாற்றினால் ஒரு முக்கிய சங்கதி தங்களுக்கு நான அறிவிப்பேன."

" அரைக்காசு பெறாத உன் உயிர் யாருக்குத்தேவை சேவகரே ! கோடரி இருக்கட்டும. பிரம்பை எடுத்து நன்றாய்த் திருப்பகள. இதன ருசி இவன் பார்த்தால் போதும"

சேவகர் உடனே கோர்வீனன் மேலவஸ்திரத்தைக் கழற்றி, அவன் கைகளைப் பின்னால் சேர்த்துக் கட்டி, இரண்டு பேர் பிரம்பெடுத்து மாற்றி மாற்றி பளீர் பளீர் என்று அவன் முதுகில பொழிந்தார்கள். கோர்வீனன் துடித்துத் துள்ளி, நெருப்பில விழுந்த புழுபபோல் நெளிந்து வளைந்து சுழன்றான். இதைக் கண்டு இளகிய மனமுள்ள மாக்சிமியன் சிரித்து மகிழ்ந்தான். கடைசியில் அவனை நோக்கி அரசன் கேட்பான் :

" இப்போ, சொல்லுடா, ஏதோ பிரமாதமான சங்கதி உண்டென்றாயே. அதென்னடா ?"

" மகா இராஜா ! இராஜ சட்டத்தை எடுத்துக் கிழித்தவன் யார் என்று எனக்குத் தெரியும."

" ஆஹா ! தெரியுமா ! யார் அவன் ?" .

"அவன் ஒரு வாலிபப் பயல், பெயர் பங்கிராஸ், தமபத்தின் அடியில் அவனுடைய கத்தி விழுந்து கிடந்தது."

"அப்படியானால் நீ ஏன் அவனைப் பிடித்து நீதிசாலைக்குக் கொண்டு வரவில்லை?"

"இன்றைக்குள்ளே இரண்டுவிசை என்கையில் அகப்படுவதாயிருந்தான். ஆனால் தப்பித்தோடிப் போய்விட்டான்."

"மூடா! இன்னம் ஒருவிசை அவனை நீ தப்பவிட்டால் அவனுக்குப் பதில் உன் தலையைக் கொண்டு வரும்படியாய் நேரிடும். ஆனால் நீ எப்படி அவனை அறிந்தாய்?"

"மகா இராஜா! காசியான் என்ற ஒரு உபாத்தி வைத்திருந்த பள்ளிக்கூடத்தில், அவனும் நானும் முன்னொரு காலத்தில் படித்தோம். அந்தக் காசியானுங் கிறீஸ்துவன்."

"கிறீஸ்துவனா? ஓ! அக்கிரமம்! நமது இராட்சியத்தில், நம்முடைய பிரஜைகளுக்கு, ஓர் கிறீஸ்துவன் உபாத்தியாயராயிருக்கத் துணிந்தானா? அவன்தானல்லவா நமது சட்டத்தை மீறி நமது தேவர்களைப் பழிக்க அந்தப் பயலுக்குக் கற்றுக் கொடுத்தது? அவன்தானல்லவா நாம் ஸ்தாபித்த சட்டத்தைக் கிழிக்கும்படி பங்கிராஸ் என்ற சுட்டிப் பயலுக்குச் சொல்லித் தந்தவன்? அந்த உபாத்தி எங்கே இருக்கிறானென்று உனக்குத் தெரியுமா?"

"தெரியும் மன்னனே! அந்த இடம் இன்னதென்று துர்குவாதன் என்ற ஒருவன் எனக்குச் சொன்னான்."

"இந்த துர்குவாதன் யார்?"

"இவன் குரோமாசியனோடும் அவனைச் சேர்ந்த கிறீஸ்துவர்களோடுஞ் சிலநாள் அவன் கிராமத்திலிருந்தவன்"

"ஓ கொடுமை! கொடுமை! விசாரிக்க விசாரிக்க எல்லாம் அக்கிரமமாய்த் தோன்றுகின்றது. என்ன? மாஜி நகராதிகாரி குரோமாசியன் கிறீஸ்துவனா?"

"ஆமா, மகா இராஜா. அவனுடன் அநேகருங் கம்பானியாவென்ற கிராமத்தில் இப்போது குடியிருக்கிறார்கள்."

"ஓ! துரோகம்! எல்லாருங் கிறீஸ்துவர்களா! இனி யாரை நம்பலாம்? அதிகாரி, உடனே சேவகர்களை அனுப்பி இவர்களையுங் காசியானையுந் தூர்குவாதனையும் பிடித்துக் கட்டி வரும்படி செய்."

"இராஜனே! தூர்குவாதன் இப்போது கிறீஸ்துவன் அல்ல."

"அது நமக்கு என்ன? எத்தனை பேர்களைப் பிடிக்கக் கூடுமோ அத்தனை பேர்களைப் பிடித்துவா. எவனையும் விடாதே. நல்லது நீங்கள் எல்லாரும் வெளியே போங்கள். நாம் சாப்பிட நேரமாகின்றது."

கோர்வீனன் வீடடுக்குப் போய் தன முதுகுக்குப் பற்றுப்போட்டு பட்ட வலியின் உபத்திரவத்தைத் தணிக்கும்படி பார்த்தான். இராத்திரி முழுதுங் கண்ணில நிமிஷமுந் தூக்கமின்றி உடம்பெலலாம நெருப்புப்போல எரிய அவஸ்தைப்பட்டான. மறுநாள் அதிகாலமே எழுந்திருந்து, தனக்கு வந்த அவமானத்துக்கு ஒருவாறு பரிகாரம பண்ணவேண்டுமென்று தன் தகப்பனிடத்தில சொலலி, குரோமாசியன் இருந்த கம்பானியாவுக்குச் சடுதியிலப் போய் அங்கே இருப்பவர்கள் எலலாரையும் பிடிப்பதென்று உத்தேசித்தான்.

கோர்வீனன் தன் எண்ணம் அனுகூலமாய் முடியும்படி பகிரத பிரயத்தனங்கள் செய்வதால் இவன் சரித்திரத்தை இங்கே நிறுத்தி, இவனுடைய உடன்கூட்டாளி தூர்குவாதனுடைய சங்கதி இன்னதென்று சொல்லவேண்டும். இந்தச் சகோதர சாமத்துரோகி சேவகர்களைக் கூட்டிக்

கொண்டு சுரங்கத்துக்குள்ப் போகும்போது, போன வழி அடைபட்டுப் போனதால், அங்கே சேவகனை விட்டு வேறு வழி பார்க்கப்போனவன், மாயமாய் மறைந்து போனுன் என்று முன் நாம் சொன்னேமே அல்லவா? அவன் மறைந்த விதம் இதுதான். அவன் ஓடின பாதையில் பாழாய் இடிந்து கிடந்தபடிகளிருந்தன இப்படிகள் வழியாய் கீழ்த்தட்டுக்குப் போக ஓர் பாதை இருந்தது. துர்குவாதன் கையில் தீபம் பிடித்துக்கொண்டு முன்பின் பாராமல் ஓடினவன், இந்தப் பாழும் படிகளில் தலைகீழாய் விழுந்து தேகமெல்லாம் தப்பி மூர்ச்சையாய் விட்டான். இந்த ஸ்திதியிலிருக்கும்போது இவனோடு வந்தவர்கள் கூப்பிட்டதும் பேசினதும் ஒன்றுங் கேட்கவில்லை. அவர்கள் வெளியே போய் வெகுநேரமானபின்பு மூர்ச்சை தெளிந்து தன் ஸ்வய ஸ்திதிக்கு வந்தான் வந்தும் தான் இருந்த இடம் இன்னதென்று அறியக்கூடவில்லை. எழுந்து இங்கும் அங்குந் தட்டித் தடவி, முட்டிமோதி, நடக்கும்போது, தான் சுரங்கத்துக்குள் இருப்பதாக அப்போதுதான் அறிவு வந்தது. ஆனால் எவ்விதம் இங்கே தனியே வந்தானென்றும், எப்படி இருட்டுக் கெபிக்குள் விழுந்தானென்றும் அவனுக்குத் தோன்றவில்லை. அப்போது தன்னிடம் மெழுகுவத்தியுஞ் சக்கிமுக்கிக் கல்லும் இருப்பதாக நினைவு வர, இவைகளை எடுத்து வெளிச்சம் ஏற்றி, சுற்றிப்பார்க்கையில், தான் பாதையை விட்டு எங்கேயோ வந்திருப்பதாக அறிந்தான். அவனிருந்த இடத்தைப்பற்றி ஒன்றும் அறியாததால் நடந்து போகப்போக, பாதை சுற்றும் சுழலுமாயிருந்தது. திக்குத் திசை அறியாமல் திகைத்துத் திண்டாடினன்.

தன் கையிலிருந்த வத்தி அவியு முன்னே ஒரு பாதையைப் பிடித்து எப்படியாகிலும் வெளியே வந்துவிடலாமென்று நம்பியிருந்தாலும் வர வர பயம் அதிகரித்தது. வத்திகளும் எரிந்துபோக இன்னம் ஒன்றுமாத்திரந்தான் இருந்தது. இதுவுமன்றி அன்று காலமேமுதல ஒன்றும் சாப்பிடாத பசியினாலே களையால் நடக்க சக்தியின்றி கைகால் தளர்ந்துபோக, அனேக நாழிகை நடந்துபோன பின்பு திரும்பவும முன் தான் நின்ற இடத்துக்கே சுற்றி வருவதாகக் கண்டான்.

ஆதி முதலில தன்னைச் சுற்றி இருப்பவைகள் இன்னதென்று அவன கவனிக்கவில்லை போகப்போக சுற்றுமற்றும் பார்த்தான். வேதசாட்சிகளின் கல்லறைகளும அவைகள்மேல பதித்திருந்த கருங்கற் பலகைகளும தோன்றின. ஒருகல்லில 'இவன் சமாதானத்தில இளைப்பாறுகிறான்' என்றும, வேறொன்றில், 'இவன் சேசுக்கிறீஸ்துவினிடம் நித்திரை செய்கிறான' என்றும் இப்படிப் பலவாறாய் எழுதியிருந்ததை வாசித்தான அந்தச் சிறு அறைகளுக்குள் பரிசுத்தவான்களின் பிரேதங்கள் உலகத்தின் கடைசி நாள்மட்டும காத்திருக்கின்றனவென்றும், அந்த ஈறுந்த நாளில எக்காள சப்தம் கேட்டவுடனே, எழுந்திருந்து வெளியே வருவார்களென்றும யோசித்தான். தானும் இன்னம் சில நாழிகைக்குள் அவர்களைப்போல பிரேதமாய்க் கிடப்பானென்று பயத்தோடு நினைத்து, தன்னிடமிருந்த கடைசி வத்தியைக கொளுத்தி, அங்கே குவிந்திருந்த குப்பைமேலே, நிற்க சக்தியின்றி, உட்கார்ந்தான. ஆனால் மரண நித்திரையில் அங்கிருக்கும் பரிசுத்தவான் களைப்போல சமாதானத்தில் இளைப்பாறுவானா? அந்த இருண்ட சுரங்கத்தில் எவரும் அறியாமலும், யாரும் அறு

தாபப்படாமலும், யாருதவியுமின்றி, தனியே செத்துக் கிடந்து நாயைப்போல நாறவேண்டுமா? பிற்காலத்தில் யாராகிலும் தற்செயலாய் அங்கேவந்து சிதறி நாறிக்கிடக்கும் எலும்புகளைக் கண்டால், இவை திருட்டுத்தனமாய் சுரங்கத்துக்குள் நுழைந்த தேவதுரோகியின் எலும்புகளாயிருக்க வேண்டுமென்று நினைத்து எடுத்து வெளியே எறிய மாட்டார்களா?

அவ்வித துர்ச்சாவு இப்போது அடுத்து வந்தது. அவன் தலை கிறு கிறென்று சுற்ற, இருதயம் படபடவென்று அடிக்க, கொடுங்கோலன் எமராஜன் வரும் சப்தம் கேட்பதாக நினைத்தான். கையில பிடித்திருந்த வத்தி அடிமட்டும எரிந்து வந்ததால அதைப் பிடிக்கக் கூடாமல் கிட்ட இருந்த ஒரு கல்லினமேல வைத்தான். இன்னம் இரண்டு நிமிஷந்தான் எரியலாம. ஆனால் மேலேயிருந்து தூசியோ கசிந்துவிழும தண்ணீர்த்துளியோ ஏதோ அதன்மேல் விழ, அதுவும் அவிந்தது. இரணடு நிமிஷம் அது எரியக்கூடுமெனபதால, இரணடு நிமிஷமாவது உயிர் தரும் பிரகாசத்தைப் பாாக்கலாமே என்று நினைத்து மகா ஆசையோடு சக்கிமுக்கிக் கலலைத் திருமபவும் எடுத்து, கால்மணிவரையில, தட்டித்தட்டித் தீபமேற்ற வருநதினான். பயத்தால் அவனுக்குண்டான வேர்வையின் நிமித்தம் கையுங்கலலும நனைநதிருந்ததால நெருப்புப் பொறி சீக்கிரம் வரவிலலை. கடைசியாய் வத்தியைக் கொளுத்தினான். கொளுத்தினவன சுற்றிப் பாாத்து பாதையைத் தேடாமல் உன்மத்தனைப்போலே விளக்கை உற்று வெறிக்கபபார்த்து, அது அவியும்போது அத்தோடு தன் உயிரும் அவிந்துபோகுமென்றுறற்போல காத்திருந்தான். அந்த

வத்தியும் மின்மினிபோல எரிந்த பின்பு பட்டென்று வெடித்து அவிந்தது.

துர்குவாதனுடைய ஜீவனும் அவிந்துபோனதோ? ஏன் அவியவில்லை? சாவின் அந்தகாரம் அவனைச் சுற்றிச் சூழ்ந்திருந்தது. ஜீவப்பிராணிகளின் கூட்டுறவிலிருந்து நீக்கப்பட்டு இந்தக் கல்லறைக்குள் வந்தான். இவனுடன் சேர்ந்தவர், இறந்தவர். இவனுக்கும் இவர்களுக்குமுள்ள வித்தியாசமேதெனில் இவன் இருந்த கல்லறை அவர்கள் இருந்ததிலும் அதிக விஸ்தாரமானது. இருளுந்தனிவாசமும் இருவருக்கும் பொது.

துர்குவாதனுக்கு இன்னஞ் சாவு வரவில்லை அவன் மனதுக்குள் புழுவொன்று உற்பத்தியாகி அதை அரித்து மேய்ந்தது. வரவரப் பெரிதாகி அழுலவிரியன்போல அவன் மனதைக் கவ்விப்பிடித்தது சந்தோஷகரமான விஷயங்களை நினைத்தான். குரோமாசியன்கிராமத்திலிருக்கும்போது தன் மனதிலிருந்த பரிபூரண திருப்தியும், பொலிகார்ப் என்ற குரு கடைசியிலே சொன்ன நற்புத்தியும், ஞாபகத்தில வந்தது. வந்தவுடனே, தான் அவர்களைப் புலவியனுக்குங் கோவினனுக்குங் காட்டிக்கொடுத்த துரோகம் மின்னலைப்போல பளிச்சென்று அவன் நினைவிலேத் தோன்றினது. இதிலிருந்து இவன் செய்த பல வகையான அக்கிரம செய்கைகளெல்லாம ஒன்றுக்குப் பின் ஒன்றாய் இவன் மனதில கூடி மொயத்தது. அவன் குடியும், சூதும், துர்மார்க்கவேலையும, கள்ள வேஷமும், வேதத்தை மறுத்த துரோகமும், அக்கிரமமும், அநியாயமும், அன்றுகாலமே செய்ய எத்தனித்த பழிபாதகமும், எல்லாங் குட்டிப்பேய்கள்போல் கூடிச் சேர்ந்து, கைகளை

க்கோர்த்து, கூத்தாடி குரலையிட்டு, கத்திக் கதறி, சிரித்து நகைத்து, கெக்கலி கொட்டி, கைகளை மடித்துப் பழிப்பதாக இவனுக்குத் தோன்றினது.

தூர்குவாதன் மயங்கிச்சோர்ந்து, கீழே விழுந்து, தன் கண்களைக் கையால மூடிச்சொலவான : "இதுதான் கொடிய நரகம். நான் இப்போது செத்துப்போய் இருக்கலாம். நரக பாதாளக் குழியில இதினும என்ன அதிக துன்பம் உண்டு?"

இருதயம் பதைத்தது. தேகஞ் சுருங்கினது. நாடி விழுந்தது. உயிா இதோ அதோ போகுதென்று அவன் நினைக்கும்போது தூரத்திலிருநது சப்தம வருவதாகக் கேட்டான். இது கனவோ, நினைவோ, ஏதுவோவென்று மனதில் போராடினன். ஆனுல அநத இனிய ஓசை அவன் காதில் திருமபவுஞ சபதித்தது. எழுநது நின்று உற்றுக் கேட்டான. சப்தம வரவர தெளிவாயிருநதது. தேவ லோகத்திலிருநது வான தூதாகள் இறங்கி வந்து நாத கீதஞ்செய்து ஆனநதமாய்ப பாடினதுபோல் மதுரமாயிருநதது. இதைக் கேட்ட தூர்குவாதன் சொலவன் : "என்ன அதிசயம் இது? நரகத்துக்கு இவ்வளவு சமீபத்தில் மோடசம இருக்கிறதெனறு யாா நினைத்திருப்பார்? ஓ! சிலவிசை எனக்குத் தீர்ப்புச் சொல்லும்படியாய்ச் சுயஞ் சீவியரான நியாயாதிபதியோடு தேவ தூதாகள் எல்லாரும் வருகிறார்களோ?"

தீப வெளிச்சம தூரத்தில தோன்ற, அவாகள் பாடிய தேவ சங்கீத வாக்கியங்கள் தெளிவாய் சப்தித்தன :

"என் ஆண்டவரிடத்தில் சமாதானமாய் நான துஞ்சி இளைப்பாறுவேன்."

துர்குவாதன் சொல்வான் : "இந்த வாக்கியம்எனக்கல்ல. வேதத்துக்காகத் தன் உயிரைக் கொடுத்த வேதசாட்சிக்கு ஏற்ற வாக்கியம் இது. தன் வேதத்தை மறுத்த துரோகிக்குச் செல்லமாட்டாது."

பிரகாசம் அதிகரித்தது. இராவிருள் அடர்ந்த பூமியில் கீழ்த்திசை சிவந்து, அருணோதயம் வருவதுபோல் இருந்தது. அங்கு தோன்றிய காட்சி விநோதாலங்காரமுள்ள தேவ காட்சி. நீண்ட உடை அணிந்த பலரூபங்கள் அணி அணியாய் அடக்கம் மரியாதையுடன நடந்துவந்தார்கள். பிரதம வரிசையில கன்னியமங்கையாகள் கையில தீபம் ஏந்தி அமாந்து மெதுவாய் நடந்தார்கள். அவர்களுக்குப் பின் நாலு பேர, வெள்ளைத துணியால் மூடி தலையில முண்முடி சூடியிருந்த ஏதோ ஒனறைத் தூக்கி வர அவாகளுக்குப பின தாாசீஸ் எனற சீஷன, தூப வாக்கத்திலிருந்து பரிமள நறும புகை குப் குப என்று மேலே எழும்பக் கலசம் ஒன்றை ஏந்தி நடக்க, அவனுக்குப் பின் குருக்களுஞ் சந்நியாசிகளும வரிசை வரிசையாய் வர, இவாகளுக்குப் பின் அர்ச். பாப்பும அவா இருபக்கத்திலும இரு குருக்கள் துணைவராய் நடக்க, இவர்களுக்குப பின் தியோஜெனனும அவன் இருமக்களும், சிபஸ்தியாரும் இன்னும அநேகம் பேர்களுந் துக்க முகத்தோடு நடந்து வந்தார்கள். இவர்களில் அநேகா கையில தீபம் ஏந்தி வந்ததால் ஏதோ திவ்யமான பிரகாச வெளிச்சத்தில் எல்லாரும் அசைவதாகத் தோன்றினார்கள்.

இவாகள் துர்குவாதன் நின்ற இடத்துக்குச் சமீபத்தில் வரும்போது தேவசங்கீதத்தின் அடுத்த வாக்கியத்தைப் பாடினார்கள் :

"ஏனெனில், ஆண்டவரே ! நீர்தான் என்னிடத்தில்

நம்பிக்கை ஊன்றி நிற்கும்படியாய், விசேஷ கிர்பை செய்தீர்.”

துர்குவாதன் இதைக்கேட்கவும் இதுதான் எனக்காகப் பாடின வாக்கியம். இதுதான் எனக்கு, என்றநினைவோடு முழங்காலிலிருக்க, அவன் முன்கேட்டிருந்த வேதபடிப்பினைகளெல்லாம் இப்போது அவன் ஞாபகத்தில வர, தன் சத்துவமெல்லாங்கூட்டி எழுந்து ஊர்ந்து நகர்ந்து, எல்லாருக்கும் பின்னே மறைவில் சற்றுத் தூரமாய்க் கூடப் போனான். அவர்கள் ஒரு அறைக்குள்ச் சேர அதிலிருந்த பல தீபவெளிச்சத்தில் நல்லமேய்ப்பன் படம் துர்குவாதன் கண்முன் தோன்றினது. உள்ளேபோகத் துணிவின்றி வெளியே நின்று, மனஸ்தாபத்தால தன் நெஞ்சைத்தட்டி இரக்க நிதியாஞ் சாவேசுரனைப பிரார்த்தித்தான்.

கன்னியா தூக்கிவந்த பிரேதத்தைக் கீழேவைத்து, தேவசங்கீத கீர்த்தனைகளை, ஆனந்த சந்தோஷம், பூரண நம்பிக்கையைக் குறிக்குங் கீததொனிகளில் இன்பமாய்ப் பாடி, ஜெபங்கள் செய்தபின்பு, பிரேதத்தை தயார் செய்திருந்த தக்க இடத்தில் க்ஷேமித்தார்கள். இந்தச்சடங்குகளைச் செய்து கொண்டிருக்கையில், கிடடநின்ற ஒருவனிடம் துர்குவாதன் மெதுவாய்ப் போய், அவன்காதுக்குள் பேசி, அப்பா, இது யாருடைய பிரேதக்ஷேம உற்சவம் என்று கேட்டான்.

அதற்கு அவன் சொலவான்: “இது பரிசுத்தகன்னியாம்கபோதி செசீலி அம்மாளின் க்ஷேம உற்சவம். இன்று காலமேதான் சேவகர்கள் சுரங்கத்துக்குள் வந்து அவளைப் பிடித்துக் கொண்டுபோய் கொன்று போட்டார்கள்.

இப்போது அந்தப் பாக்கியவதி மோக்ஷ பதவியில் இருக்கிறாள்."

தூர்குவாதன் பெருமூச்சுவிட்டு: "ஆ! நான்தான் அந்தக் கன்னியைக் கொன்ற கொடும் பாவி!" என்று சொல்லி மயங்கிச் சோர்ந்து அர்ச். பாப்புவின் பாதத்தில் விழுந்தான். உள் எழும்பிய துக்க மிகுதியால் பேசக்கூடாமல் சற்றுக் கீழே கிடந்தபின், தான் சொல்லும் படியாய் உத்தேசித்து வந்த வார்த்தைகளையே தூர்குவாதன் சொன்னான்:

"என் தகப்பனே! பரலோகம் சாட்சியாய் இருக்க உமக்குத் துரோகமாய் நான் பாவத்தைச் செய்தேன். இனி உமது பிள்ளை என்று சொல்லப் பாத்திரமல்லாதவன் நான்."

அர்ச். பாப்பு அவனை வெகு பட்சத்தோடு தூக்கி தமது இருதயத்தோடு சேர்த்து அணைத்து, அன்பே குரலெடுத்துப் பேசினதுபோல் சொல்வார்.

"என் பிரிய மகனே! நீ யார் எவராயினும் உன் தந்தை வீட்டுக்குச் சுகமே வா. பயப்படாதே. ஆனால், அப்பா பிள்ளாய், நீ மெத்தவுங் களைத்துச் சோர்ந்திருக்கிறாய். சாப்பிட்டு இளைப்பாறி அதன்பின் உன் சங்கதியைச் சொல்லலாம்."

உடனே அவனுக்குக் கொஞ்சஞ் சாப்பிட்டு கொண்டு வந்தார்கள். ஆனால் தூர்குவாதன் தான் செய்த அக்கிரம பாவங்களை அதிபோட்டமாய் எல்லாரும் அறியும்படி சொல்லி பொறுத்தல் கேட்டு, பொதுப் பாவசங்கீர்த்தனஞ் செய்து, சர்வேசுரனுடன் சமாதானமான பிற்பாடு மாத்திரந்தான், சாப்பிடுவதாகவும் தீர்மானித்திருந்ததால் சற்றுத் தாமதஞ் சென்றது.

தந்தை வீட்டை விட்டு ஓடிப்போன ஊதாரி திரும்பி வந்ததாலும், மந்தையை விட்டுத் தப்பிப்போன ஆட்டுக்குட்டி மந்தைக்குள் திரும்பவுஞ் சேர்ந்ததாலும் எல்லாருஞ் சந்தோஷம் அடைந்தார்கள். அக்நேசி மோக்ஷ பரவசமானவள்போல, சேசுநாதருடைய சிம்மாசனத்தின் சமீபத்தில், செசீலி ஜெயசீலியாய் நிற்பதையும், அவள் இரு கண்கள் மாணிக்க தீபம் போல பிரகாசம் வீச, அவள் தனக்கு வேத சாட்சி முடிபெறுவித்தவனுக்காக பிரார்த்திப்பதையும் பார்ப்பதாகத் தோன்றினாள். செசீலி ஜெபத்தின் பலனை கைமெய்யாய்க் கண் முன்கண்டு ஆனந்த பூரிப்படைந்தாள்.

தியோஜெனனும் அவன் இரு பிள்ளைகளுமாக தூர்குவாதனைப் பராமரிப்பதாய் ஏற்றுக்கொண்டு அவனுக்கு மோசமும் ஆபத்துஞ், சோதனை தந்திரமும், வராதபடி வேண்டிய பிரயத்தனங்கள் செய்தார்கள். தூர்குவாதன் தன் பாவங்களுக்குப் பரிகாரமாக வெகு காலம் ஜெபதபஞ் செய்து உத்தரித்த பின்பு, கடைசியில் திருச்சபையிலுள்ள நன்மை வரங்கள் பலன்களுக்கெல்லாம் பூரண சுதந்தரம் பெறும்படியாய் சபைக்குள் அங்கீகரிக்கப்பட்டான்.

---

## ௫௩-ம். அதிகாரம்.

### பழிவாங்கும் இருவகை வழி.

---

செபஸ்தியார் சுரங்கத்துக்குள் செசீலியின் பிரேத க்ஷேம உற்சவத்துக்குப்போனபோது, அர்ச். பாப்பானவரைக் கண்டு பேசி, வேத விரோதிகள் அவரையே முக்கியமாய்ப் பிடிக்கத் தேடுவதால, அவர்கள் கையில் விழா

வண்ணம் ஏற்ற வழி வகை இன்னதென்று இருவரும் யோசித்துப் பார்த்தார்கள். புல்வியனுடைய கபடமான கருத்தையும் தூகுவாதன் வாயால் அறிந்து, அர்ச். பாப்புதாம் வழக்கமாய் இருக்கும் வீட்டிலிருப்பது யுக்தம் அன்றென்று நினைத்து, இராயன் அரணமனைக்குச் சமீபத்திலிருந்த இரேனே என்ற கிறீஸ்துவளான ஓர் செல்வ பெருமாட்டியின் வீட்டிலிருக்கும்படி தீர்மானித்தார்கள். சமீபமிருந்தால சமுசியா தோனரு, எனபதறகு ஒப்ப, சிபஸதியாரும இராக்ஷஸ வீரனும அாச். பாபபுவை மேற்சொன்ன வீட்டுக்கு உடைமாற்றிக் கூட்டிபபோனார்கள்.

மறுநாள் அதிகாலமே சிபஸ்தியார பங்கிராசைக் கூபபிட்டுச் சொல்வார "பஙகிராஸ், நீயுங் குவாத்ராத்தும் தாமதமின்றி புறப்பட்டு கமபானியாவின் கிராமத்துக்குப் போகவேண்டும. உங்கள் பிரயாணத்துக்குத் தக்க குதிரைகள் நான சித்தஞ் செய்திருக்கிறேன."

"அண்ணேன, என எனனை இநதச் சமயத்தில உரோமையை விட்டு அனுபபுகிறீாகள்? நான் வேதத்தில் உறுதியாய் இருபபேனோ அலலவோவென்று உங்களுக்கு ஏதேனுஞ் சந்தேகம உண்டா?"

"பங்கிராஸ், இதுவெலலாம் இபபோது கேட்காதே பிற்பாடு நீ அறிவாய். நீ அங்கே போய் ஏது செய்யவேண்டுமென்பதை மாத்திரம் உனக்கு நான சொல்வேன அவ்வளவு உனக்குப் போதும. கோர்வீனன குரோமாசியனையும அவரோடு கூட இருப்பவர்களையும பிடிக்கும்படி இராஜ உத்தரவு பெற்றுக் கமபானியாவுக்குப் போக சன்னத்தனாயிருக்கிறான். அங்கே இருக்கிறவர்கள் எல்லாரும் புதுக்கிறீஸ்துவாகள். புதுக்கிறீஸ்துவன் தூர்குவாதன் சஙகதி உனக்குத் தெரியுமே. இதுவுமன்றி உன் உபாத்தியா

யர் காசியானையும் பிடிக்க எத்தனித்திருக்கிறான். ஆன தால் நீ முந்திப்போய் இது சங்கதியை அவர்களுக்கு அறிவிக்கவேண்டும்."

பங்கிராஸ் தன் பேரில செபஸ்தியாருக்கு நம்பிக்கை இருக்கின்றதென்று இதனால் அறிந்து சந்தோஷப்பட்டுச் சொலவான் :

" அண்ணேன், என் உபாத்தியாயனை ஆவது வேறு எந்தக் கிறீஸ்துவனையாவது காப்பாற்றும்படி பூமியின் கடைசி எல்லைக்கு என்னை அனுப்பினாலும் நான் போகத் தயாராயிருக்கிறேன்."

உடனே பங்கிராஸ் தன் தாயாரிடஞ் செலவு பெற்றுக்கொண்டு இராக்ஷை வீரனோடு குதிரை மேலேறி, நேர் பாதைபோனால் ஆபத்து வருமென்று, சுற்றுப் பாதை வழியாய் குரோமாசியன் இருந்த கிராமத்துக்குச் சென்றான்.

கோர்வீனனோ, குரோமாசியனையும் அவரோடிருக்கும் கிறீஸ்துவர்களையும், தானே சேவகருடன் போய் பிடித்தால் தனக்கு மகிமையும் பெருமையும் விசேஷமாய்ப் பணமும் வருமென்று எண்ணி, இதன அநுகூலத்துக்குச் சாதனமானவைகளைத் தயார் செய்யவும், இன்னுங் கொஞ்சம் பற்றுப்போட்டு தன முதுகின் வலியைத் தணிக்கவும இரண்டு நாள் தாமதித்திருந்தான்.

பங்கிராஸ் கம்பானியா கிராமத்தில சேர்ந்தவுடன், அங்கிருந்தவர்கள் கொடிய வேத கலகம வருமென்று பயந்து அரண்டு நிற்கையில் அவர்களுக்குச் செபஸ்தியார் எழுதிய நிருபத்தைக் கொடுத்து ஆறுதல சொன்னான். எல்லாருங் கோவிலிற்கூடி ஜெபஞ் செய்து, அதன்பின், ஆலோசனை பண்ணி, அவ்வீட்டை விட்டு நாலா பக்கமும்

ஆபத்தில்லா இடம் பார்த்துப் போவது யுக்தமென்று தீர்மானித்தார்கள். அதுபோலவே வெகு பிரமாணிக்கமுள்ள வேலைக்காரனை ஒரு கிழவனை மாத்திரம் வீட்டுக்குக் காவலாய் வைத்து மற்றெல்லோரும் தங்கள் ஜாமான்களை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்

பங்கிராசும படை வீரனுஞ் சற்று அவ்வீட்டிலிருந்து இளைப்பாறின பின்பு, காசியான இருந்த ஊருக்குப்போய், தாங்கள் வந்த காரணத்தை அவருக்கு அறிவித்து ஆபத்து வருமுன்னே வேறிடத்துக்குப் போய் ஒளிந்து கொள்ளும்படி சொன்னார்கள் அதற்கு பக்தி விசுவாசமுள்ள காசியான் சொல்வார் :

" சகோதரரே ! நான் அப்படிச் செய்வது சரியன்று. நானோ விருத்தாபபியன். ஆசிரியனாய் பலவருஷம் இந்த அஞ்ஞானிகளுக்குப் படித்துக் கொடுத்தும் ஒரு பிரயோசனமும் இதுமட்டும் நான் கண்டதில்லை. இந்த ஊரில் நானும் என் ஊழியனும் ஆக இருவர் மாத்திரம் தான் கிறிஸ்துவர்கள் இப்பட்டணத்தில் செல்வமுஞ், செல்வாக்குமுள்ள மேன் குலத்தார், தங்கள் பிள்ளைகள் என் பள்ளிக்கூடத்தில் படிப்பதால் கூடிய வரையில் நல்லொழுக்கத்தில் சீர்ப்படுவார்களென்பதின் நிமித்தம், என்னிடத்தில் அனுப்புகிறார்கள். நானும் இப்பிள்ளைகளைக் கண்டிப்பாய் நடத்துவதால், இவர்களில் ஒருவனுக்காவது என்பேரில் பிரீதியில்லை. உரோமானருக்கு இயல்பாயிருக்கும் யோக்கியதையும் இவர்களுக்குக் கிடையாது. நாகரீகம் என்பதின் மணமும் இவர்கள் அறியார்கள். என்னைத் தங்கள் கைகளால் குத்திக் கொல்லும்படி இவர்களுக்கு உத்தரவு மாத்திரங் கொடுத்தால் இவர்களிற் சிலர் வெகு சந்தோஷமாய்த் துணிந்து செய்வார்கள்."

" ஆ ! கொடுமை ! கொடுமை ! இப்பேர்ப்பட்ட பரம துஷ்டரோடு இருப்பது உங்களுக்கு எவ்வளவு கஷ்டமாயிருக்கவேணடும். இவாகளில யாராவது கிறீஸ்துவர்களாவார்களா ?"

" ஆவார்களென்பதைப் பற்றி இப்போதைக்கு நம்பிக்கையிலலே. எனன செய்வார்கள் ? அஞ்ஞானத்தில பிறநது, அபத்ததததைப பாலோடு உண்டுவளாநதவர்கள். இவாகள் சாதாரணமாய வாசிக்குங கிரநத நூற்களும், இவாகளுடைய மத சித்தாநத புராணங்களும, அசுசியும், அவலக்ஷணமும, அக்கிரமமுமுள்ள வீண கதைகள். இவர்களுடைய கோவில, தாசிகள் குடியிருக்கும் வீடுகள். இவர்கள் வணங்குங் தேவாகளுந தேவதைகளும வெட்கமும் நாணமுமின்றி காமலீலைகளில புரண்டவாகள் இவாகள் திருநாள் உற்சவங்கள துாாக்கைகளைச் சிறுவர்க்கும் படித்துக் கொடுக்கும பளளிக்கூடஙகள. இவாகள் பாவமென்று ஒன்றைப் பகைப்பதும இல்லை, புண்ணியமென்று ஒன்றைச் செய்வதுமிலலை. இவவித குணமுள்ள பிள்ளைகளுக்கு நான் என்ன செய்யலாம ? விழலுக்கிறைதத நீர் போலுங், கடலில கரைத்த புளிபோலுங், காட்டில எறித்த நிலவு போலும, என வாாத்தைகள் பயனினறிப போகினறன. என் இரத்தத்தை இவர்களுக்காகச் சிநதி என உயிரைச் சாவேசுரனுக்குப் பலியாய் ஒப்புக்கொடுப்பேன். சர்வேசுரன என பலியை ஏற்றுக்கொண்டு, இவாகள்பேரில இரக்கமாயிருந்து, இவர்கள் சத்திய வேதத்தில சேருமபடி கிர்பை செய்வாராக."

பங்கிராஸ் தன் உபாத்தியாயா சொன்ன உன்னத மேன்மை நிறைந்த கௌரவ மொழிகளைக் கேட்டு, மனங் கனிந்து கண்ணீர் சிந்தி, தானும் அவரோடு கூட இருந்து

வேதத்துக்காகத் தன் உயிரையுங் கொடுக்க ஆசையாயிருந்தாலும், சிபஸ்தியார் அநுமதியின்றி ஒன்றுந் தானுய்ச் செய்யமாட்டேனென்று அவருக்கு வாக்குக் கொடுத்திருந்ததால், அப்படிச் செய்யாமல, அவ்வூரிலேயே இருந்து கடைசி முடிவைப் பார்க்கும்படி தீர்மானித்தான்.

கோர்வினன் தனக்கு வேண்டிய ஆட்களைத் தயார் செய்து இரண்டாம நாள் அதிகாலையில குரோமாசியன் கிராமத்துக்கு குதிரை வண்டியில அதி வேகமாய் சவாரி வந்தான். வந்ததும வீட்டுக்கு நேரே போய் பார்க்கையில அங்கே ஒருவரும் இலலை. இங்கும அஙகும நுழைந்து மூலை முடுக்கு எல்லாவற்றையும சலலடைபோட்டு சலித்தான். ஒரு பிராணியாவது, ஒரு ஏடாவது, கிறீஸ்துவாகளின் ஒரு அடையாளமாவது மருநதுக்குங் கிடைக்கவிலலை. மயங்கிச் சோம்பி கோபாக்கிரநதனாய் வாயிலிருநது நுரை நுரையாய் கக்கினுன். வெளியே வநது தோட்டத்தைச் சுற்றுமற்றும் பாாக்குமபோது ஒரு மூலையில கிழவனொருவன் வேலை செய்வதைப பாாத்து அவனிடமபோய் கோப வெறிகொண்டவனுய்க் கேட்பான :

" அடா கிழவா ! உன எஜமான் எங்கேடா ?"

வேலைக்காரனை கிழவன், பிரதேசத்தானுனதால கோர்வினன பேசின பாஷையைத் திருத்தமாய்ப பேச அறியாதவன. பின் வருமாறுமறுமொழி சொலவான் :

" ஆயா, அபம எசமான்க எங்கேணு நீ கேள்? என்கு சொல்லு இலலை."

" அடே மூடாத்மா ! என்னைப் பரியாசமாடா பண்ணுகிறுய் ? உன் எஜமானும் அவனோடு கூட இங்கே இருந்தவர்களும எநதப் பாதை வழியாய்ப் போனுர்கள் ?"

" ஆயா, அங்கிடு நீ பார், அதோ கதவு, தெரியும்? அதுக்கால் போ."

" அதற்குப் பின் எங்கேடா போனார்கள் ?"

" எங்கேடா ? எனக்குத் தெரியுமா ? நீ பார் கதவு? சரி ; அபபால் பாா ? தெரி இலலே ; நான் இங்கிணு வேலே செய், நான அங்கிணு பார் அபபால் பார் தெரி இல்லே."

" அவாகள் எப்போ இநத விடடைவிட்டுப் போனா கள் ? இதாவது உனக்குந் தெரியுமோ ?"

" எப்போ ? ஆ ஆ ! படட ணம இருந்து கிணு இரண் டுருவா ; வந்துதுணு, எல்லாா போ."

" என்ன இரண்டு ? எப்போதும் இரணடுதானு ? யார் அந்த இரண்டு போகள் ?"

" யாா ? கேள். ஒன்றுக்கு, நலல நலலபையன். ரொம்ப ரொமப அழகு, நன்றாப் குயிலபாடு. வேறுக்கு, புஷ்டி, நீ போல, இராக்ஷஸன, பிலன் ரொமப ரொமப. ஆயா நீ பார் அநதமாம அவன் தலேபபிடுங்கு, வோ மேலேவா. ஏ! நான் இநத மண்வெட்டி எபபடித தூக்குணு,அப்படிகு அவன் அது செய்யுணு "

"எங்கே போனலும இநத இரண்டு பயல்கள்தானு? இவாகள் தான் இராஜ சடடததைக் கிழித்தெறிந்த சுட்டிகள். அந்தப் பஙகிராஸ் நான் போகும இடத்துக்கெல்லாம் என் சனியனுய வந்து கெடுக்கிறுன. நலலது இருக்கட்டும். ஒருநாள் இலலாவிடடால ஒருநாள் அகப்படுவான்."

கோர்வீனன் ஒரு விடுதி வீட்டிலப் போய் கொஞ்சம் இளேப்பாறினபின்பு, காசியாா் இருந்த ஊருக்குச் சென்று, அவர் தப்பித்து ஒளியுமுன், அவரையாவது பிடிக்க

லாமென்று புறப்பட்டான். போகிற வழியிலே, தனக்குப் புத்தி கற்பித்த உபாத்தியாயனைப் பிடித்து, எப்படி வதைத்துப், படாதபாடு படுத்திக்கொல்லலாமென்று எண்ணமிட்டுக்கொண்டு போனான். ஊரில சென்றவுடனே விசாரித்தபோது காசியான இருககிறானென்று அறிந்து வெகு சந்தோஷப்பட்டு அவ்வூர அதிகாரியிடம் போய் காசியான் கிறீஸ்துவனானதால், அவனைப் பிடிக்கும்படி தனக்கிருந்த அதிகார பத்திரத்தை அவனிடங் காட்டினபோது, அந்தக் காருண்யரான பிரபு, தனக்கு அதுவெல்லாம் அவசியம் இல்லையென்று, கோாவினன் தன் இஷ்டம்போல் எதுவுஞ் செய்ய பூரண அதிகாரங் கொடுத்ததுமன்றி அவனுக்கு உதவியாகச் சேவகாகள் தேவையாயிருநதால தான அனுப்புவதாகவும ஏற்றுக்கொண்டான்.

கோாவினன் அவனுக்கு வந்தனஞ் சொல்லித், தனக்கு அவசியமான சேவகாகளைக் கூட்டிக்கொண்டு பந்தோபஸ்தோடு காசியான் வைததிருந்த பள்ளிக்கூடத்துக்குப போனான். போனதுங் கதவைச் சாாத்தச் செய்து உபாத்தியாயனைப் பள்ளிப் பிள்ளைகள முன் வாயில வந்தபடி வைது, அவா தேச சத்துருவென்றும், பரம துரோகியென்றுங, கிறீஸ்துவனென்றும, பலவாறாய்ப் பேசினான். இதைக் கேட்ட பிள்ளைகள் யாவருங் கை கொட்டி, குரவையிட்டு, கொல் என்று சிரித்து மகிழ்ந்தாாகள். கோாவினன் இவ்வடையாளங்களால அங்கிருந்த மாணாக்கா, வயதில் சிறியவராயினும் புலிகளைப்போல கொடிய நெஞ்சுள்ளவர்களென்றுந் தன்னைப் போலவேத் தங்கள் உபாத்தியாயனைப் பழித்துப் பகைக்கிறவாகளென்றும் அறிந்துகொண்டான். அதன்பின் அவர்களை நோக்கி சத்தமாயப் பேசிக் கேட்பான் :

“பிள்ளைகளே! இந்தக் காசியான் ஒருகாலத்தில் எனக்கும் ஆசிரியனாயிருந்தவன். பலநாள் பழி அவன் மேல் எனக்கு இருக்கின்றது. உங்களுடைய சங்கதி என்ன?”

பள்ளிக்கூடத்தின் நாலு பக்கத்திலும் இருந்து பழி, பழி என்ற சப்தம் இடிபோல் முழங்கினது.

“அப்படியா? மெத்த சிலாக்யம். உங்களுக்கு ஒரு நல்ல செய்திகொண்டு வந்திருக்கிறேன். நமது தேவத்துவ இராஜேந்திரனாகிய மாக்சீமியனுடைய உத்திரவுப் பிரகாரம் உங்களுக்கு எது இஷ்டமோ, அதை இவனுக்குப் பயமின்றி நீங்கள் செய்யலாம்.”

இதைக் கேட்டவுடனே, ஒவ்வொருவனும் தன் கையில வைத்திருந்த ஏட்டையோ, எழுதும பலகையையோ, எழுத்தாணியையோ, கத்தியையோ, கண காது பாராமல உபாத்தியாயாமேல எறிந்தான. காசியான் கை கட்டிக் கொண்டு, முகங் கோணாமலுஞ் சற்றும அசையாமலுந, தன்னைக் கொலலும்படி வந்த கொலை பாதகன் முன் நின்றா.

அப்போது கோர்வினன சொலவான். “பிள்ளைகளே ஆத்திரப்படவேண்டாம. செய்வதெல்லாம் ஒழுங்கோடு செய்யவேண்டும ஆற்றிலே போட்டாலும அளந்துபோடு, அடித்துக் கொன்றாலும எண்ணி அடி, என்ற பழமொழியை நீங்கள் கேட்டதிலலையா?”

கோர்வினன் தான் பள்ளிக்கூடத்தில படித்தகாலத்தை அப்போது நினைத்தான். அநேகா தாங்கள் சிறு பிள்ளைகளாய் படித்த காலத்தைப் பிற்பாடு ஞாபகப படுத்தும் போது, நிர்பந்திகரமான ஆனந்த சந்தோஷப்படுவதுண்டு. தங்களோடிருந்த தோழர்களையும், அவர்களோடு கூடிப்

பேசிச் சிரித்து அடைந்த மகிழ்ச்சியையும், படித்த பாடங்களையும், பிற்பாடு நினைக்கையில் அவர்கள் மனம் ஆனந்தக் கடலில் ஆடுவதாகத் தோன்றுவார்கள். கோர்வினன் தான் படித்தபோது தன் ஆசிரியனுக்கு எலதச் செய்திருந்தால் தனக்கு அப்போது சந்துஷ்டி வந்திருக்கும என்று யோசிக்கையில, தன்னை உபாத்தியாயர் அடித்த ஒவ்வொரு அடியையும், அவருக்குத் திரும்பவும ஒற்றைக்கு இரட்டியாய்க் கொடுத்து, அவா தனக்குச் சொன்ன வசை மொழிகளை அவா தேகத்தில இரத்த எழுத்துகளால எழுதினால்தான் சம்பூரண திருப்திகரமாயிருந்திருக்குமென்று இவன் புத்தியில தோன்றினது. தோன்றினதுபோல் நிறைவேற்ற இப்போது உசித சமயம வாய்த்ததென்று இவன் நினைக்கையில வாயில ஜலம் ஊறினது.

வேதசாட்சியான காசியான் அநுபவித்த கொடிய துன்ப உபாதையை நினைக்குமபோது மயிர் சிலிர்த்து தேகம் நடுங்கும். கொடிய சேவகா இவருடைய கைகால களைக் கட்டி பள்ளிக்கூடம் நடுவில் நிறுத்த அங்கு கூடியிருந்த மாணுக்கர், புலிக்குட்டிகள்போல ,அவர் மேல் பாய்ந்து, தங்கள் கத்திகளாலும, எழுத்தாணிகளாலும், அவர் சரீரத்தில எழுத்துக்கள் வெட்டி சரீரதி யெங்கும் காயப படுத்தினார்கள். காசியான் தமது இரத்தம எலலாஞ் சிந்தினதாலும் வேதனையின் கொடுமையாலும், நிற்கப் பெலனி லறிக் கீழே சோர்ந்து விழுந்தார். சூழநின்றகன்னெஞ்சா கெக்கலி கொட்டி சிரித்து அவரை நிந்தித்து தூஷணித்த பின்பு, நடந்த சங்கதியைத் தங்கள் வீட்டிற் போய்ச்சொல்ல வெளியே ஓடினார்கள். இவையெல்லாம் நடக்கும் பொது, கோர்வினன் கிட்ட நின்று சமயத்துக்குச் சமயம அக்கொடியரை ஏவிவிட்டு, காசியான்பட்ட அவஸ்தையை

கண் குளிரப் பார்த்துக் கடைசியில் அவர் கீழே சாகும்படி விழுந்தபோது, நல்லது சாகட்டும் என்று சபித்துக் கொண்டு வீட்டுக்குப் போனான். அவன் போனவுடனே வேதசாட்சியின் ஊழியன் வந்து அவரைத் தூக்கிப் பாய் மேல் கிடத்தி பங்கிராசுக்கு இது செய்தியை அறிவித்தான். உடனே பங்கிராஸ் ஓடி வந்து, தன் பிரிய ஆசிரியர் இருந்த பரிதாப நிலைமையைக்கண்டு கண்ணீர் சிந்தி அழுது அவர் கையை எடுத்து முத்தி செய்தான். காசியான் கண்களைத் திறந்து தன் செல்வ மாணுக்கனைப் பார்த்து புன் நகை காட்டி பேசக்கூடாததால் அவன் கையைத் தமது கையிலெடுத்து நெஞ்சின்மேல் வைத்தார். பட்ட காயங்களால மிகவும் வருத்தப்பட்டாலும், தம்மைப் பாடு படுத்தினவாகள்பேரில் ஒன்றுங் குறைகூறுமல் எல்லாம் பொறுமையுடன் அனுபவித்து, மறுநாள் காலையில சமாதான அமரிக்கையுடன மரணமாஞா. கிறீஸ்துவர்களின் பிரேதக்ஷேமத்துக்குரிய ஜெபஙகளைச் சொல்லி நல்லடக்கஞ் செயதபின், பங்கிராஸ் காசியானுடைய கொடிய மரணத்தைப்பற்றி துக்கமும், அவரை இவ்வளவு நிஷ்டூரமாய்க் கொன்ற கோர்வீனன்பேரில் கோபமுமனதில் நிறைந்தவனுய் அவ்வீட்டைவிட்டுப்போனான்.

கோர்வீனன தன் விடுதிக்குச் சென்றவுடனே அவன் செய்த அக்கிரமமான செய்கையின் நிஷ்டூரமெல்லாம் அவன் புத்தியில் தோன்றினது. மாக்சிமியன் காசியானைப் பிடித்து வரச்சொல்லியிருக்க,இவனே அவரைக் கொன்று போட்டான். அதுவும், பள்ளிக்கூடத்திலே, பிள்ளைகள் தங்கள் கைகளால், தங்களுக்குப் பாடங் கற்பித்து அறிவு புகட்டிய ஆசிரியனை குருவைக் கொல்லும்படி செய்தது, மிலேச்ச ஜாதியாருஞ் செய்யத் துணியாத செய்கை

யென்றும், இப்பிள்ளைகளுடைய தாய் தந்தைகள் இதை அறிந்தால தன்னை சும்மா விடமாட்டார்களென்றும், கோர்வீனன் நினைத்து தனக்கு ஏதும் மோசம வருமென்று பயந்து உடனே வண்டி பூட்டும்படி கற்பித்தான். வண்டிக்காரன் ஏதோ அலுவலாய் வெளியே போயிருந்ததால், தன் மனக்கவலையையும் பயத்தையும மறக்க, சாராயம் வாங்கிபூர்த்தியாய்க் குடித்தான. அதன்பினபு இராத்திரியான போது வண்டியிலேறி ஊருக்குத் திரும்பினுன். அன்று மழை விடாமல் பெய்ததால, பாதையின் இருபக்கத்திலும் இருந்த கால்வாய்களில தண்ணீர் நிறைந்து ஓடினது. கோர்வீனன் போகுமபோதே வண்டியில் இருந்துகொண்டு இன்னம ஒரு புட்டி சாராயம மடமடவென்று விட்டான். தலை மயக்கங்கொண்டு, செய்வது இன்னதென்று நன்ருய் அறியாமல் குதிரைகள் சீக்கிரம் ஓடும்படி சவுக்கால பலமுறை அடித்தான். குதிரைகள் நாலு கால் பாய்ச்சலோடு சேறுஞ் சகதியும் எங்கும் பளாபளாவென்று தெறிக்க, திம் திம் என்று ஓடுமபோது, பின்னே குதிரை வண்டி ஒன்று வாயு வேகத்துடன் வருஞ் சத்தங்கேட்டு, முன்னிலும அதிக துரிதமாய், அடங்கா முரண்கொண்டு ஓட, வண்டி ஒரு மரத்திலே மோதி கீழே கவிழ்ந்ததால், அதிலிருந்த கோர்வீனன் தண்ணீர ஓடைக்குள் தலை கீழாய் பொத் என்று விழுந்தான்.

வண்டி மோதிக் கீழே விழுந்த சப்தம் பின்னுல் வந்த பங்கிராசும் இராக்ஷஸ வீரனுங் கேட்டு அதிசீக்கிரந் தங்கள் வண்டியை நடத்தி என்ன விசேஷமென்று பார்க்க வந்தார்கள். தண்ணீர் நிறைந்த அந்தக் கால்வாயில் கோர்வீனன் விழுந்து சேற்றில் கால் புதைய எழுந்திருக்கச் சக்தி

யின்றி வருத்தப்படுவதைக் கண்டார்கள். தண்ணீர் வரவர அவனை ஆழத்தில் இழுத்துப் போவதாயிருந்தது.

கோர்வினனிருந்த நிலையைக்கண்ட இராக்ஷஸ வீரன்: "வேணும், அந்தக்கொடிய துஷ்டனுக்கு, காசியானைக் கொன்று சிந்தின இரத்தக் கறையைக் கழுவும்படிக்கு இவ்வளவு ஜலப் பிரவாகமும் இவனுக்குப்போதாது," என்று சொல்ல, பங்கிராசஸ்: "ஐயோ! பாவம், அப்படிச் சொல்லாதே, குவாத்ராத்துஸ். வா, இங்கே நீ உன் காலை ஊன்றிநில். நான் உன் கையைப் பிடித்து கீழே இறங்கி அவனை வெளியே இழுக்கிறேன்," என்று சொல்லி பங்கிராஸ் தண்ணீரில இறங்கி கோர்வினன் ஆழத்தில் அமிழ்ந்தப்போகுஞ் சமயத்தில் அவன் கையைப் பிடித்து, இருவருஞ் சேர்ந்து வெளியே இழுத்தாகள். கோர்வினன் குடிவெறியாலுங் குளிர மிகுதியாலுந் தேக ஸ்மரணையின்றிக் கிடந்ததால் அவன் தன் ஸ்வய ஸ்திதிக்கு வருமபடி அவன் கைகளையுங் காலகளையுஞ் சூடு பிறக்கு மட்டும் நன்றாய்த் தேய்த்து, அவன் ஊழியாசள் வநதவுடனே, அவர்கள் கையில் கோர்வினனை ஒப்புவித்து, நழுவி விழுந்த அவன் பணப் பையை அவாகள் கையில கொடுத்தாகள். பங்கிராஸ் ஸ்தம்பத்தின் கிட்ட காணுமல் போட்ட தன் கத்தி அந்தப் பையிலிருந்ததால அதை மாத்திரம் எடுத்துக்கொண்டு, இருவருமெ இராஜதானிக்குச் சென்றாகள்.

கோர்வினன் மயக்கந தெளிநது எழுந்தபோது அவன் ஊழியர், தண்ணீரில் விழுந்து கிடந்தவனைத் தாங்களே தூக்கி வெளியே விட்டதாகவும், அவனுடைய பணப்பையை தண்ணீர் அடித்துக் கொண்டு போய்விடடதாகவுஞ் சொன்னார்கள். 'அவனை எடுத்து அடுத்த ஊருக்குக்

கொண்டு போய் அவன் அயர்ந்து நித்திரை செய்யும்போ துஊழியர்கள் சாராயக் கடைக்குப் போய், கோர்வீனன் பையிலிருந்த பணத்துக்கு மதுபானம் வேண்டிய மட்டும் வாங்கிக்குடித்து உல்லாசமாய்ப் பாடி ஆடி கும்மாளங் கொட்டினார்கள்.

இவ்விதமாக, அஞ்ஞானி பழி வாங்கும் வகை ஏதென்றும், சத்தியவேதக் கிறீஸ்துவன் பழி வாங்கும் வகை இத்தன்மைத் தென்றும், ஒரே நாளில கண் கூடாய் காட்டப்பட்டது.

## ௰௪-ம். அதிகாரம்.

### ஆஸ்தான சமஸ்தான வேலைகள்.

உரோமைமா நகரின கொடுங்கோன் மன்னனாகிய மாக்சீமியன் தன் இராஜதானியில் பலவகையான விநோத காட்சி சாலைகளும் மண்டபங்களுங் கட்டி அப்பட்டணத்தை அலங்கரிக்கும்படி உத்தேசித்து, இவ்வேலையை ஜரூராய்ச் செய்து முடிக்க, கிறீஸ்துவர்களைப் பல இடங்களிலிருந்து அனுப்பும்படி செய்திருந்தான். இவர்கள்தான் பாரமான கற்களையுந் தளபாட ஜாமான்களையுந் தூக்கிப் போவதும், பாறையைப் பிளந்து கல் அறுப்பதும், மரங்களை வெட்டுவதுஞ், சுண்ணாம்பு நீற்றுவதுஞ், சுவரெழுப்புவதுமாகிய இவ்வித ஈனவேலைகளைச் செய்பவர்கள். இவர்களில் அநேகர் மேன்குலத்திற் பிறந்து வீட்டில செல்வமாய் வளர்ந்த பிரபுகள். இப்போது இவர்கள் சேசுநாதர் சுவாமிக்காக சிறையிலிருந்து, எவ்வளவு கடினமான வேலை செய்த போதிலும், இவர்களை உபாதிக்குந் துஷ்டர், இவர்களோடு கூட வேலை செய்யுங் குதிரைகளுக்கும் மாடுகளுக்கும்

அளக்கும் படிதான், இவர்களுக்கும் அளப்பார்கள். இவர்கள் படுக்கும் இடம் மாட்டுத் தொழு; குளிருக்கும் பனிக்குந் திறந்த இடம். இவர்களுக்குக் கொடுக்கும் போசனம் பசியின் கொடுமையைச் சற்றுத் தணிக்கவும், அதன்பின் கடின வேலை செய்யவும், இன்றி அமையாத அளவுள்ளது. காலில் பாரமான விலங்கு மாட்டியிருக்க அதை இழுத்துக் கொண்டு நடப்பார்கள். இவர்கள் பலவகுப்பாய் வேலைசெய்யப் பிரிந்திருக்க, ஒவ்வொரு வகுப்புக்கும் ஓர் காரியஸ்தன் தலைமையாயிருந்து வேலை வாங்குவான். இக்காரியஸ்தர்கள் எவ்வளவுக்குக் கொடுமையாய் இரக்கமின்றி கிறீஸ்துவர்களை அடித்து உதைத்து நடத்துவார்களோ, அவ்வளவுக்கு இவர்களின் மேலதிகாரிகள் இவர்களை மெச்சிப் பேசுவார்களென்பதால், இவ்விதபரோபகார சிந்தையுள்ள தாமிஷ்டர், கையில் சாட்டையாவது பிரம்பாவது எடுத்துக்கொண்டு, கிறீஸ்துவர்கள் நன்றாய் வேலை செய்யும்போதும், இங்கே சொத்தை அங்கே சொள்ளை என்று, குறை கூறி, தூஷணஞ் சொல்லி, நன்றாய் அடித்துத் தங்கள் பகையைத் தீர்ப்பார்கள்.

ஆனால் இராஜதானியிலிருந்த கிறீஸ்துவர்கள், இவ்வளவு துன்பப்பட்ட பரிசுத்த வேதசாட்சிகளை வெகு அன்போடுங் கவலையோடும் பராமரித்து தங்களால் கூடிய உதவியெல்லாஞ் செய்து அவர்கள் படுங் கஷ்ட நிஷ்டூரங்களைக் குறைக்க எவ்விதமும் முயன்றார்கள். சிறைகாக்குஞ் சேவகர்களுக்குக் கைக்கூலி கொடுத்து, குருமார்களும் வாலிபர்களுந் துணிந்து சிறைக்குள் போய், குளிரைத் தாங்க ஏதுவான வஸ்திரங்களும், பசியை ஆற்றப் போதுமான நல்ல சாப்பாடுங் கொடுத்து வருவார்கள். இவர்களை நடத்தி விசாரிப்பவர்களுக்குப் பணங் கொடுத்து அவ்வ

ளவு கொடுமையாய் இராதபடி இணக்குவார்கள். வேத சாட்சிகளின் விலங்குகளை முத்திசெய்து அவர்கள் தங்களுக்காகச் சர்வேசுரனைப் பிரார்த்திக்கும்படி மன்றாடி, அவர்கள் ஆசீர்வாதங் கேட்பார்கள்.

கொடுங்கோலனான அரசன் கிறீஸ்துவர்களை இப்படிச் சிறையில் அடைத்து வைத்திருப்பதில வேறொரு கருத்துமுண்டு. அஞ்ஞானிகள், தங்கள் தேவருக்குப் பலியிடும்படி ஆடுமாடுகளைத் தொழுவில அடைத்து தீனி கொடுத்துக் காப்பாற்றுவது போலவும், விநோத காட்சிக்குக் கொடிய மிருகங்களை இருப்புக்கூடுகளில அடைத்து வளர்ப்பதுபோலவும், கிறீஸ்துவர்களை வேலைக்கென்று கூட்டி சிறையில அடைத்திருந்தால், உரோமானருக்குச் சந்தோஷகரமான திருநாள் உற்சவம் வரும்போதாவது தங்கள் துஷ்ட தேவதைகளின் கோபத்தைத் தணிக்க நரபலி வேண்டும்போதாவது, அல்லது அரசனும் ஜனங்களுஞ் சிந்தியோடும் மனுஷ இரத்தத்தைக் கண்ணால பார்த்து பரிபூரண திர்பதி அடையவேண்டுமென்று ஆசைப்படும் போதாவது, எந்தச் சமயத்திலுஞ் தேவையான கிறீஸ்துவர்களைக் கொன்று தம் கருத்தைச் சம்பூரணப்படுத்தலாம என்பது தான.

இவ்வித உஜித சமயமும அடுத்து வநதது. வேத கலகந் துவக்கியும இன்னங் கிறீஸ்துவர்களில் முக்கியமானவர்களில் ஒருவனையும் பிடிக்கவில்லை. கோர்வீனன் சபாங்கத்துக்குள்ப் போயும் ஒன்றும் அநுகூலப்படவில்லை ஜனங்கள் தங்களுக்கு ஏதாவது தமாஷா வேண்டுமென்று முறையிட்டுக் கேட்டார்கள். "அன்றியும் மாக்சீமியனின் வருஷாந்திர ஜனனநாள் சமீபத்தில் இருந்ததால் அன்றுவ

து நூதன காட்சியிருக்குமென்று எண்ணியிருந்தார்கள். ஆபிரிக்காவிலிருந்து வந்த சிங்கங்களும் புலிகளும் மாலுக்குள்ளிருந்து கர்ச்சித்துப் போட்ட முக்காரத்தொனியை செபஸ்தியாரும் பங்கிராசும் பலமுறை கேட்டார்கள். அதைக்கேட்ட அஞ்ஞானிகள் கிறீஸ்துவர்களைச் சிங்கங்களுக்குப் போடுங்கள் என்பதாய் அந்தத் தொனிக்கு அர்த்தம் பண்ணினார்கள்.

இப்படி இருக்கையில் ஒருநாள் கோர்வீனனுங் கதுலனுங் கைதிகளிருந்த காராக்கிரகத்துக்குப் போய் சிறைக்கூட விசாரணைக் கர்த்தாவான ரபிரானைக் கூப்பிட்டு கோர்வீனன் கேட்பான் :

"ரபிரா! நமது இராஜேந்திர மாக்சிமியனுடைய ஜனனநாள் சமீபத்திலிருப்பது உனக்குத் தெரியுமே. அன்று சிங்கங்களோடு சண்டை செய்யும்படியாய் உன் காவலிலிருக்குங் கிறீஸ்துவர்களில் தகுந்தவர் யாராவது உண்டோவென்று பார்க்கும்படியாய் நான் வந்திருக்கிறேன். இதற்கு இராஜ முத்திரையுள்ள பத்திரம் எனக்கு உண்டு."

இதைக்கேட்ட ரபிரான் சொல்வான். "ஐயா! உமக்கு இஷ்ட பூர்த்தி செய்ய என்னால் இப்போது சாத்தியப்படாது. ஏனென்றால் இந்தக் கட்டிட வேலையைக் குறித்த தவணைக்குள் நான் முடிக்கவேண்டும். வேலையாட்கள் குறைந்தால் வேலை எப்படி முடியும்?"

"அது என்னமோ எனக்குத் தெரியாது. உனக்கு ஒருவன் போனால் வேறொருவன் வருவான். நல்லது கூட வா ரபிரா, சுற்றிப் போய் பார்த்து வரலாம்."

ரபிரான் தலையைச் சொறிந்து, என்னடா வம்பாய் இருக்கிறதென்று வாய்க்குள் முணங்கிக்கொண்டு இருவரை

யுங் கூட்டிப்போனான். சிறையிலிருந்தவர்கள் விஸ்தாரமான ஓர் பாரி மண்டபத்தைக் கட்டுவதில் வேலையாய் இருந்தார்கள். நாலு மூலையிலும் பெருங் கருங்கல் தூண்களை நிறுத்தும்படியாய் கயிறு கட்டி வைத்திருந்தார்கள். அங்கிருந்தவர்களில், இரண்டு வாலிபர் ஈன அடிமைகளைப் போல் இடுப்பில் மாத்திரம் ஓர் துணியைச் சுற்றி நிற்பதைக்கதுலன கோர்வீனனுக்குச் சுட்டிக்காட்டினான். இவ்விருவரும பவளக்கொடிபோல உருண்டு திரண்ட வடிவுள்ள தேகமுடைய பாலியர்கள். கோர்வீனன் ரபிரனை நோக்கி: "ரபிரா அந்த இரண்டு பேரும எனக்குத் தகுந்தவர்கள். அவர்கள் சந்தோஷத்தோடு ஜாக்கிரதையாய் வேலை செய்வதைப் பார்த்தால அவர்கள் கிறீஸ்துவர்களாய் இருக்கவேண்டும்" என்று சொல்ல, ரபிரன் சொல்வான:

' "அவர்கள் கிறீஸ்துவர்கள் தான். ஆனால நான் இந்தச் சமயத்தில அவர்களை உமக்குக் கொடுக்கமாட்டேன். அவர்களிருவரும் ஆறு ஆள் வேலை எனக்குச் செய்கிறார்கள். இந்த மண்டப முடியுமட்டுங் காத்திருந்தால், அதன் பின் உமக்கு அவர்களைத் தானஞ் செய்கிறேன."

"நல்லது. உன் இஷ்டம் போலாகட்டும். அவர்கள் பெயரென்ன? நான் குறித்துக்கொள்ளுகிறேன். அதுமட்டும் அவர்களை நீ நன்றாய்ப் பார்த்து வா."

" அவர்களில ஒருவன் லார்கஸ், வேறொருவன் சுமார்க்தஸ். மேன் குலத்தில பிறந்த செல்வர்கள். இங்கே வந்தபின், கூலி வேலை செய்து பிழைப்பவர்கள்போல நன்றாய் எந்த வேலையுஞ் செய்கிறார்கள். உம்மோடு வருவதென்றால் மனப் பூரணமாய் வருவார்கள்."

"அப்படியா? அவர்கள் ஆசைப்படி ஆகும்."

அதுபோலவே அவ்விருவருஞ் சிலகாலைக்குப்பின் வேத சாட்சி முடிபெற்று இப்போது திருச்சபையில அர்ச். வர்களாய் வணங்கப்படுகிறார்கள்.

ரபிரன் கோவினைக் கூட டிக்கொண்டு மேற்பக்க மாய்ப் போகும்போது அங்கே நரைதிரை விழுந்த மகா விருத்தாப்பியர் ஒருவர் இருந்தார். அவருடைய நீண்ட தாடி நெஞ்சுமட்டும வளர்ந்து தொங்கினது. தயையும் இரக்கமும், அன்பும, அருளும, அவர் முகத்தின இலக்ஷணமாய் விளங்கின. அவருக்கு வயது எணபதுக்கு மேல் இருந்தாலும, அவர காலில இரணடு பாரமான சங்கிலிகள் போடடிருந்தார்கள். அவர் இருபக்கத்திலும இரண்டு பாலியர் தங்களுடைய வேலையைச் செய்து கொண்டு அவருடைய பளுவான சங்கிலியைத தூக்கி அவருக்கு ஆறுதல வருவிப்பார்கள். இவரைச் சுற்றிலும அநேகம பேர்கள் உட்கார்ந்து இவர சொன்ன ஏதோ ஒர இனப நிறைந்த சங்கதியைக் கேடடுக்கொணடிருந்தார்கள். மத்தியான வேளை ஆனதால, சிறையில இருந்தவர்கள் சற்று இளைப் பாறுமபடி குறித்த நேரமிது.

கிழவனார் தமமைச் சூழ்ந்திருந்தவர்களுக்குச் சொன்ன அதிசய சங்கதி எதுவோ? அவர்கள் அப்போது அஞ்ஞான இராயனுக்காக வருந்தி உழைதது கஷ்டப்படடுக் கட்டிய அப்பெரிய மண்டபம பிற்காலததில பிரமாண்டமான தேவாலயமாகச் சிங்கார வனப்புப் பெற்று உயரும என்றும், அதை மகா சாமாத்திய திறமையுள்ள சிற்ப நூல் சாஸ்திரிகள் பலவகை விநோத காடசியைக் காடடுஞ் சித்திரங்களாலுஞ் சுரூபங்களாலும் அலங்கரிப்பார்களென்றும், அக்கோவிலில் தேவாராதனை பூஜை அநுதினமு நடக்கும் என்றும், உலக இரக்ஷகரின் தாயாராகிய பரிசுத்த

தேவ கன்னிமரி இவ்வாலயத்தில விசேஷ வணக்க ஸ்துதி பெறுவாள் என்றும், எதிர் வருங் காரியங்களைத் தூர திஷ்டி சக்தியால் அறிந்ததுபோல, அன்று தம்மைச் சூழ்ந்திருந்த கிறிஸ்துவர்களுக்கு, வேத சாட்சியின் முடிபெற ஆவலாய்க் காத்திருந்த சதுாநீன் என்ற அந்த விர்த்தாப்பிய குரு விவரித்துச் சொன்னாரோ?

கோர்வினன் இநதக் கும்பலைச் சற்று நின்று பாாத்து அங்கு கூடி இருந்தவாகள் யாரெனறு ரபிரனைக் கேடக அவன் சொலவான்.

" அவர்கள் எலலாருங் கிறீஸ்துவாகள். மத்தியானம வேலை முடிநது இளைப்பாறு நேரத்தில அவாகள் எலலாரும் அந்த விருத்தாபபியனைச் சுற்றி உடகாாந்திருந்து ஏதோ பேசிக்கொணடிருப்பது அவாகள் வழக்கம. உமக்கு இஷ்டமானல் அநதக் கிழவனைக் கூட்டிபபோகலாம்."

அதற்குக் கோாவினன் சொலவான்:

"மெத்த உபகாரம ரபிரா! அந்தக் கிழட்டுச் சவம் எனக் கென்னத்திற்கு? சிங்கம், புலியை, இவனு எதிாப்பான்? நம்ம ஜனங்கள், தேகபுஷ்டியும பலமுமுள்ள வாலிபனைச் சிங்கம பிடித்து வகிாந்து கீறி அவன் இரத்தத்தைக் குடிப்பதைப் பாாக்க ஆசையாய் இருக்கிறாாகள். இந்தக் கிழவனே சிங்கத்தைப் பாாத்தால் பயந்து நடுங்கிச் சாவான். ஆனால ரபிரா, அதோ ஒருவன் அநதப் பக்கமாய்த் திரும்பிக்கொண்டு ஏதோ வேலை செய்கிறான். அவன் உடை, சிறையிலிருப்பவாகள் உடையைப்போல இல்லையே. அவன் காலிலும் விலங்கு கிடையாது, யார் அவன்?"

" அவன் யாரோ எனக்குத் தெரியாது. வெகு அல ங்கார சௌந்திரியமுள்ள வாலிபன். பெரிய வீட்டுப் பிள் ளையாய் இருக்கவேண்டும். ஏறக்குறைய நாள் தோறும் இங்கே வந்து சிறையில இருப்பவர்களோடு கலந்து பேசி, அவர்களுக்கு ஆறுதல சொல்லி, சிலசமயங்களில் அவர்க ளோடு இவனுங் கூடி, இப்போது அவன் செய்வதுபோல, பெரும்படியான வேலைகளுஞ் செயவான். இவ்விதம் இவ ன் தன் இஷ்டம்போல வரப்போக இருப்பதற்கு வேண்டும் நிதி தாராளமாய் எங்களுக்குக் கொடுப்பதால நாங்கள் அவன் யார் எவனென்று விசாரிக்கிறதில்லை."

அவனை உற்றுக் கவனித்துப் பாாத்திருந்த கோர்வீ னன், நீ விசாரியாவிட்டால நான விசாரிப்பேன் என்று சொல்லி, விரைவாய் நடந்து போகையில அங்கு தன் வே லையில் கவனித்து நின்ற வாலிபன், யாரோ வருஞ் சப்தங் கேட்டு திரும்பிப் பாாக்க, கோர்வீனன ஒரு துஷ்ட காடி யைப்போல் அவன் மேல பாய்ந்து தன் இரணடு கைகளா லும் அவனைக் கெட்டியாய் கட்டிப பிடித்து ஜெயவெற்றி கொணடவனைப்போல உரத்த சபதமாய் கத்திப் பேசி சொலவான்.

" சேவகரோ! சஙகிலி கொணடு வாந்து இந்தப பயலை நன்றாய்க் கட டுங்கள். அடே பங்கிராஸ்! இந்த விசை என் கையை விட்டு நீ தப்பிக்கமாட்டாய்."

## ௫௩-ம். அதிகாரம்.

### சிறைக் கூடம்.

திருச்சபை ஆதிஉற்பவகாலத்தின் முதல மூன்று நூற் றாண்டுகளில், நமது முன்னோராகிய கிறீஸ்துவாகள் சத்திய

வேதத்துக்காக அனுபவித்த கஷ்டநிஷ்டூரங்கள் இம்மாத்திரமென்று அறிய அவாவுற்றிருப்பவர்கள் அவர்கள் இருந்த சுரங்க ஸ்தலங்களைப் பார்ப்பது மாத்திரம் போதாது, அவர்கள் பட்ட பாடுகளின் வரலாற்றைக் கருத்தாய் வாசித்தால் அவர்கள் எவ்வளவு துன்பவருத்தம் அடைந்தார்களென்று கொஞ்சமேனும் அறியலாம்.

அஞ்ஞானம் அடர்ந்திருக்கும் இந்த தேசத்தில் ஜீவிக்கும் நாம், சத்திய வேதத்தின் நிமித்தம் பல முறை அவமானமும் நிந்தையும் துன்பவருத்தமும் படும்போதும், நமது மனங்கலங்கி அவதைரியமாகிச் சலிப்பாயிருக்குங் காலேயிலும், நமது முன்னோர்கள் வேதகலகக்காலத்தில் தங்களைச் சூழ்ந்திருந்த அஞ்ஞானிகளாலே எவ்வளவு கஷ்ட வாதைபபட்டார்களென்று அறிந்தால், நாம படுவது அவர்கள் அநுபவித்த துனபவருத்தங்களுக்கு முன் வெகு அற்பமாகவே தோன்றும். அக்காலத்துக் கிறிஸ்துவர்கள் பட்டபாடுகள் எத்தன்மைத்தென்று இனிவரும அதிகாரங்களில் ஒருவாறு காணலாம்.

கோர்வினன் பங்கிராசைப் பிடித்துச் சங்கிலிகளாற் கட்டி, அவனோடுகூட வேறு இருபது கிறிஸ்துவர்களையுஞ் சேர்த்து, எல்லாருக்கும் விலங்குமாட்டி பட்டணத்தின தெருவீதி வழியாய் சிறைக்கூடத்துக்கு அடித்து உதைத்து அவமானமாய் நடத்திக்கொண்டு போனான். இப்படிப் போகும வழியில சிலர் கால் தடுமாறி, நடக்க சக்தியின்றி கீழே விழும்போது, துஷ்ட சேவகர் இரக்கமின்றி அவர்களைச் சாட்டைகளால் அடித்து காலால் உதைத்து நடக்கச் செய்வார்கள். வழியில் நிற்பவர்களுந் தூஷணஞ் சொல்லி, காறி உமிழ்ந்து, கையாலும், கழியாலும், கையில வந்த எதாலும், அடிப்பார்கள். 'கடைசியில் இவர்கள

மமர்த்தீன் என்ற சிறைக்கூடத்துக்கு வந்துசேரவே, அத ற்குள் எல்லாரையும் பிடித்துத் தள்ளினார்கள். பங்கிராஸ் உள்ளே போகுமுன தனக்குச் சமீபத்திலிருந்த ஒருவன் கையில் தன பணப்பையைக் கொடுத்து, தான பிடிபட்ட செய்தியை தாயாருக்குஞ் சிபஸ்தியாருக்கும் அறிவிக்கும்படி கேட்டுக் கொண்டான்.

கிறீஸ்துவர்களை அடைத்த மமர்த்தீன் என்ற சிறையை இன்னம் உரோமை நகரில காணலாம. சிறைக்கூடமெனில், நமது காலத்தில கைதிகளுக்காகக் கட்டியிருக்குங் காராக் கிரகங்கள்போலென்று எண்ணவேண்டாம். மமர்த்தீன் சிறைக்கூடத்தில சதுரவடிவுள்ள இரண்டு அறைகள், ஒனறின்மேலொன்ருய், பூமிக்குள் வெட்டி, ஒவவொனறின் உச்சியில வட்டமான ஓா துவாரம் விட்டிருந்தார்கள். இத்துவாரத்தின் வழியாய்த்தான், பிரகாசமும், ஆகாயமும், உண்டி உணவும. மனுஷரும், போகவேண்டியிருநதன. முதல அறையில சிறையாளிகள் நிறைந்திருந்தால அவாகளின் கீழிருப்பவாகளுக்குப் பார்க்க பிரகசமேது? சுவாசிக்க ஆகாயமேது? உண்ணும்படி உணவேது? சுற்றியிருக்குங் கற்சுவரில வளையங்கள் அடித்து அவைகளில் சிறையிலிருபபவாகளைக் கட்டிவைப்பாாகள். சில சமயங்களில் அவாகளைக் கீழே கிடத்தி காலகளைத் தொழுவில் மாட்டுவாாகள். அவர்கள் இருக்குந் தரையில் ஓடுகளையுங் கூழாங் கற்களையும பரபபி, பட்ட அடியால சரீரமெங்குங் காயமாயிருக்குமபோது, அதன்மேற் படுக்கச் செய்வார்கள். இநதக் கொடும உபாதையைப் பொறுக்கமாட்டாமல் அநேகா, வேறு ஆக்கினைப்படுமுன்னே, இசிவெடுத்து இறந்துபோவாாகள். வேறு சிலர், பலவிதமான துன்பப்பட்டு சாகும் ஸ்திதியிலிருந்தவாகள், சிறைக்

குள் வந்த தக்ஷணமே, யாதோர் அவுழ்தப் பிரயோகமி ன்றி, பூரண சௌக்கியம் பெறுவார்கள். அன்றியும் இவர் களுக்கு இராஜதானிக் கிறீஸ்துவாகள் தங்களாற்கூடுமான எவ்வித உதவியுஞ் செய்து, அவர்களுக்கு ஆறுதல் கொடு க்க முயற்சி செய்வார்கள்.

உரோமானரின் நீதிசட்டப் பிரகாரங் குற்றவாளியை த்தண்டிக்குமுன் அவனை விசாரணை செய்து வெளிக்கா வது நியாயம் வாதிக்கவேண்டும். இதன் நிமித்தம் சிறை யில் அடைபட்டிருந்த கிறீஸ்துவர்களை நீதிசாலைக்குக் கூட் டிப் போனாகள். இவாகளைக் கேட்ட கேள்விகளும், அவர் கள் சொன்ன மறுமொழிகளும, எலலாம் விவரமாய் வேத சாட்சிகளின் சரித்திரத்தில காணலாம.

நியாயாதிபதி விருத்தாப்பியனை ஒரு கிறீஸ்துவனைப் பார்த்துக் கிறீஸ்துவர்கள் வணங்குந தேவன் யார் என்று கேட்டபோது, அவன் கௌரவ மேன்மையுடன், "நீ அவ னா அறியப்பாத்திரன் ஆனால அறிவாய்" என்று சொன னான். சிலசமயங்களில வேதத்தின்பேரில தாக்கம் உண் டாகும். அப்போது கிறீஸ்துவன் தான் விசுவசிக்கும் வே தசத்தியங்களைச் சுருக்கமாயுந தெளிவாயும் எடுத்து விவ ரிக்கும்போது, அதிகாரி என்ன சொல்வதென்று அறியா மல் பேதைபோல் விழிப்பான்.

பங்கிராசும் அவனுடன் பிடிபட்டவர்களும் நீதி சாலை யில் வந்து நிற்கும்போது, அதிகாரி ஒருவனைப் பார்த்து, நீயார் என்று கேட்க, அவன் சர்வேசுரனுடைய கிருபாக டாக்ஷத்தால், நான் கிறீஸ்துவன், என்று சொன்னான். அதன் பின்பு அங்கு நின்றவர்களில் வயோதிகரான ஒரு குருவை நோக்கிச் சொல்வான் :

" விருத்தாப்பியா ! நான் சொல்லும் பிரகாரஞ்செய். இராஜ சட்டத்துக்கும், உரோமானா தேவர்களுக்கும் பணிந்து நட."

" நான் என் இரட்சகரும் ஆண்டவருமாகிய சேசுநாதருக்குமாத்திரம பணிந்து நடப்பேன்."

" நீ படித்த சாஸ்திர நூல எப்போபபட்டது?"

" நான் பல சாஸதிர நூற்களைபபடிதது ஆராய்நதேன. அவைகளெலலாஞ் சாரமற்றதென்று கண்டு, கடைசியில சேசுநாதா படிப்பித்த சததியங்களை அஙகீகரித்திருக்கிறேன்."

" அந்தச் சத்தியங்கள் எவை?"

" கிறீஸ்துவாகளாகிற நாஙகள் விசுவசிக்குஞ் சத்தியஙகள் ஏதெனில், பரலோகம பூலோகமும அவைகளிலுள்ள ரூபமும அரூபியுமான வஸ்துக்கள் அனைத்தையுஞ் சிருஷ்டித்துக் காப்பாற்றுஞ் சாவேசுரன ஒருவரே. அவருடைய ஏககுமாரன சேசுக்கிறீஸ்துநாதா சுவாமி மனுஷரை இரட்சிக்க மனிதனாய்ப் பிறநது, தமது சத்தியவேதத்தைப் போதித்து, உலகத்துக்கு இரக்ஷணிய பலியாய்த் தமது உயிரைக் கொடுத்தாா இவருடைய தேவ இலடசண இயல்பையும மகத்வமேன்மையையும விவரித்துச் சொல்ல அற்ப மனுஷரால என்றால் ஏலாது"

" நீ தப்பறையான மதத்தைப் படித்துக் கெடுப்பவன். ஆனதால உன்னை மற்றவர்களிலும அதிக கடினமாய்த் தண்டிக்கவேண்டும். சேவகரே ! இவனைக்கூட்டிப்போய் கைகால்களில் கயிறு கட்டி கணுக்கள் பிசகிப் பிரிந்து போகுமட்டும் இழுங்கள்."

இவ்விதம ஒவ்வொருவராய்க் கேட்டபின்பு பங்கிராஸ் பக்கந் திரும்பி அதிகாரி சொலவான் :

" அடா துஷ்டா ! நமது தேவாக்களான இராஜாக்க ளின் சட்டத்தைத் திருடிக் கிழித்தவன் நீ அலலவா ? நல் லது. எங்கள் தேவர்களை நீ கை எடுத்துக்கும்பிடு. உனக் கும் நான் மன்னிப்புக் கொடுப்பேன். நீ இன்னம் இளை ஞன். நீ பக்தியும் புத்தியுமுள்ளவனென்று எல்லாருக்குங் காண்பி."

அப்போது பங்கிராஸ் அாச். சிலுவை வரைந்து அம ர்ந்து சாதுவாய் மறுமொழி சொல்வான்.

" நான் சேசுக்கிறீஸ்துவின் ஊழியன். அவரை என் மனதில் சிந்தித்து, வாயால் ஸ்துதித்து என்றும் ஆராதிப் பேன். நான பாவியனாயினும் நித்தியரான ஏக சர்வேசு ரனை ஆராதித்தால விருத்தாப்பியருக்கு இருக்கும ஞான மும் அறிவும் எனக்கும இருக்கும உமது தேவாகளும அவர்களை வணங்குபவாகள் யாவரும நரக நெருப்புக்குக் குறிக்கப்பட்டவாகள்."

அதிகாரி வெகு கோபத்தோடு சொலவான .

" அவன் தூஷணஞ் சொன்னதற்காக அவனை வா யில அறைந்து கழிகளால் நன்முய் புடையுங்கள்."

இதைக் கேட்ட செலவன் பங்கிராஸ் வெகு சாதுவா ய்ப்பேசிச சொலவான்:

" என் ஆண்டவரான சேசுநாதரே சுவாமி ! தேவ ரீர் எனக்காக பட்டபாடுகளில் சிலது நான் படும்படி நீா கிருபை செய்வதால உமக்கு நான் நன்றி அறிந்திருக்கி றேன்."

அதிகாரி நியாயத்தீர்ப்பு வழக்கம்போல் வாசித்தான்: " லுசியானஸ், பங்கிராஸ், ருஸ்திகஸ், என்பவர்களும் இவர்களைச் சேர்ந்தவர்களும் தாங்கள் கிறீஸ்துவர்களென்று அங்கீகரித்து தேசசட்டத்துக்குக் கீழ்ப்படியோமென்றும் உரோமானர் தேவர்களை வணங்கோமென்றுஞ் சொல்வதால் இவர்கள் எல்லாரையும் துஷ்ட மிருகங்களுக்கு இரையாய்ப் போகும்படி நாம் தீர்ப்புச் செய்கிறோம்."

இந்த வாசகங் கேட்டவுடனே சூழநின்ற ஜனங்களெல்லாரும் ஜெயம், ஜெயம், என்று கரகோஷஞ்செய்து, ஆர்ப்பரித்து தங்களுக்குண்டான சந்தோஷ மிகுதியைக் காட்டி, கிறீஸ்துவர்கள் சிறைக்கூடத்துக்குப் போகும்போது அவர்களோடு கூட, வாத்தியங்கள் வாசிப்பவர்கள்போல, வசைபேசி கூக்குரலிட்டு துவக்கத்தில நடந்தாலும், போகப்போக கிறீஸ்துவர்களிடத்தில தோன்றிய கௌரவ மேன்மையும், முகக்களையையுஞ், சாது அமரிக்கையையுங் கண்டு, அச்சாதிசயமுடன, சப்தம் அடக்கி சற்று மௌனமாய் நடந்தார்கள். சிலர் கிறீஸ்துவர்களைச் சுற்றிலுஞ் சுகந்த மதுரவாசனை கம கமவென்று வீசுவதைக்கண்டு, இவர்கள் பரிமளவர்க்கங்களைத் தமமேல் பூசிக்கொண்டு போகிறார்களோவென்று ஒருவரொருவரைக் கேட்டார்கள்.

## ௰௬-ம். அதிகாரம்.

### வழித்துணை ஆதாரம்.

துஷ்டமிருகங்களுக்குக் கிறீஸ்துவர்களை இரையாய்ப் போகும்படி உரோமை அதிகாரி தீர்ப்புப் படித்த பின்பு, கிறீஸ்துவர்கள், மமர்த்தீன் சிறைக்கூடத்துக்கு வந்து, சர்

வேசுரனுக்காகச் சாகும் அந்தப் பாக்கிய நாள் எப்போவருமென்று ஆவலோடு காத்திருந்தார்கள். இவர்கள் மத்தியில் சமாதானமுஞ், சந்தோஷமும், பூரண அமரிக்கையும் இருந்தது. இரு அறைகளிலும் இருந்தவர்கள் மாற்றி மாற்றி தேவ சங்கீதக் கீர்த்தனை ஜெபங்களைப் பாடினார்கள்.

கிறீஸ்துவர்களை மிருகங்களுக்குப் போடும் நாளுக்கு முந்தின நாள் அவர்களுக்குக் கொஞ்சம் தயாளமும் இரக்கமுங் காட்டுவது உரோமானர் வழக்கம். அன்று அவர்களின் பந்துக்களும் இஷ்டர் மித்திரருந் தாராளமாய் வந்து பேசலாம. இதின் நிமித்தம் அநேகர் அந்தக் கடைசி நாளில் சிறைக்கூடத்துக்கு வந்து பரிசுத்த வேதசாட்சிகள் தங்களை மறந்துபோகாமல் மோக்ஷத்தில் தங்களுக்காக வேண்டிக்கொள்ளும்படி கேட்பார்கள். அன்று சாயரட்சையில் சிறையிலுள்ளவர்களை வெளியே கூட்டிவந்து பந்திவைத்து விருந்து கொடுப்பார்கள். இவர்கள் சாப்பிடும்போது அஞ்ஞானிகள் சூழநின்று, அடுத்த நாளில் மிருகங்களுக்கு இரையாகும இவர்கள் எப்படி இருக்கிறார்கள், என்ன பேசுகிறார்களென்று விநோதப பிரியராய் வந்து பார்ப்பார்கள். கிறீஸ்துவர்களோ சத்தஞ் சந்தடி இன்றி, வீண் வீம்பு பேசாமல, சந்தோஷ முகத்தில் துலங்க, சாதுவாய் ஒருவரொருவரோடு பேசித் தங்கள் சொந்த வீட்டிலிருப்பதுபோல் இருப்பார்கள். பங்கிராஸ் மாத்திரம், கிறீஸ்துவர்களை இப்படிக் குறுவிழி விழித்துப் பார்த்து நின்ற அஞ்ஞானிகளை ஒரிருவிசை கோபித்தார்போல பேசி சொல்வான்:

"என்ன பார்க்கிறீர்கள்? நாளைக்கு நாங்கள் மிருகங்களின் வாயில் பதைத்துத் துடிப்பதைப் பார்ப்பது போதா

தென்று, இன்றைக்குங்கூட எங்களைப் பார்த்து உங்கள் பழியையும் பகையையுந் தீர்க்கலாமென்று வந்திருக்கிறீர்கள். நலலது, எங்கள் முகத்தை இப்போது நன்றாய்ப் பாருங்கள். உலகத்தின் ஈறாந்த நாளில் பொதுத் தீர்வைக்கு எல்லாரும் வநது கூடுமபோது, நாங்கள் எநதப் பக்கம் இருப்போம், நீங்கள் எநதப் பக்கம் இருப்பீாகளென்று அறிவீாகள்."

இந்த வாாத்தைகளைக் கேட்ட அஞ்ஞானிகளிற் பலர் தலை கவிழ்ந்து வெட்கிப்போனாாகள். அவர்களிற் சிலர் பின் மனந்திருமபுவதற்கு இது காரணமாய் இருநதது.

சாகப்போகிற கிறீஸ்துவாகளுக்கு அஞ்ஞானிகள் விருந்து செய்யும்போது, தாயிலும உத்தம'தாயாகிய திருச்சபை தன் பிள்ளைகளுக்கு மோட்ச மதுரம நிறைந்த ஞானவிருந்து, இவாகள் வழிக்குத் துணை ஆதாரமாகத் தயார் செயது அனுபபினது. சிறையிலிருபபவாகளுக்குப் பரிசுத்த தேவநற்கருணையைக் கொணடுபோய்க் கொடுக்கும்படியாய் சில குருக்களை நியமித்திருநதாாகள். ஆனால் இச்சமயத்தில கிறீஸ்துவர்கள்பேரில அஞ்ஞானிகள் பொங்கிய கோபத்தோடு இருநததால, சிறையில இருந்தவாகளுக்குச் சற்பிரசாதங் கொணடுபோகுமபடி ஓா குருவை அனுப்புதல பெரும ஆபத்துக்கு ஏதுவானதென்று தோன்றினது. ஏனெனில புலவியன கபடமாய் முன் கோவிலுக்குள் சென்றபோது, அங்கே குருக்களை விசேஷமாய்க் குறித்துப் பார்த்து தனனைச் சோநத உளவாளிகளுக்கும் இதைச் சொல்லிக் கொடுததிருந்தான்.

அன்று குரு பூஜை செய்து முடிந்தபின்பு, சற்பிரசாத ஓஸ்திகள் அடங்கிய பாத்திரத்தை எடுத்து யாா

கையில் ஆபத்தின்றி சிறையிலுள்ளவர்களுக்குக்கொடுத்து அனுப்பலாமென்று திரும்பிப் பார்கையில, வேறு யாரும் வருமுந்தி, தார்சீஸ் என்ற சிறு பையன் குருவின் முன் வந்து முழங்காலிலிருந்து இரு கைகளையும் விரித்து, தன்னிடத்தில கொடுக்கவேண்டுமென்று மகா பக்தி ஆசையுடன் விண்ணப்பஞ் செய்தான். இந்நிலையில் நின்ற மாசற்ற பையனுடைய முகம் வானலோக தூதன் முகம்போல் துலங்கிப் பிரகாசித்தது.

குரு, தம்முன் நின்ற இச்சிறுவனைப பார்த்து அதிசயப்பட்டு, "மகனே, நீயா சிறுவன், உன் கையில தேவ மகத்துவ சற்பிரசாதத்தைக் கொடுப்பது யுக்தமா?", என்றதற்கு, தாரசீஸ், "சுவாமீ! நான் சிறுவன் தான், அதின் நிமித்தமே என் கையில கொடுத்தால் மோசம் ஒன்றும் வரமாட்டாது," என்று பிரார்த்திக்கும்போது அவன் இரு கண்களிலிருந்து தண்ணீர் அருவி ஓடி வர, "சுவாமீ! சுவாமீ! எப்படியாவது என் கையில கொடுக்கவேண்டும்," என்று வருந்திக்கேட்டான். குரு நல்லதென்று சம்மதித்து பாத்திரத்தை வெள்ளைத் துணியால் நன்ருய் மூடி, அச்சிறுவன்மேல ஒரு போர்வையைப்போட்டு, அவன் கையில் வெகு பதனமாய் வைத்து அனுப்பும்போது சொல்வார்: "மகனே தார்சீஸ்! நீ கொண்டுபோகுந் தேவ பொக்ஷம் எவ்வளவு உன்னதமானது என்பதை மறவாதே. ஜன சந்தடியிருக்குந தெருவீதி வழியாய்ப் போகாதே. பரிசுத்த பொருளை நாய்களுக்குக் கொடுக்கலாகாது. முத்து ரத்னத்தைப் பன்றிக்கு முன் எறியக்கூடாது. மகனே, இந்தத் தேவ.உன்னத பரிசுத்தத்தை மகா எச்சரிக்கையுடன் கொண்டு போய்ச் சேர்ப்பாயா?"

" ஆம் சுவாமி! பதனமாயக் கொண்டுபோவேன். இதை அஞ்ஞானிகள் கையில் கொடுப்பதைப பார்க்க என் உயிரை நான் ஆயிரம் விசை வேணடுமானல் கொடுப் பேன், பயப்படவேண்டாம்," என்று சொல்லி அன்போ டுமெ பூஜித வணக்கத்தோடும், பாத்திரத்தை இரு கைகளி லும் வாங்கி, தன் நெஞ்சோடு சேர்த்து அணைத்து சிறைக் கூடத்துக்குப் புறப்பட்டான.

ஜனங்கள் நடமாடுந் தெருவீதிகளையும, ஆபாசமுள்ள தனிப்பாதைகளையுந தவிர்த்து, தாசீஸ் விரைநது நடந்து போகுமபோது அவன் முகத்தில, பாலப் பிராயத்துக்கு இயலபாய் இராத ஓாவித கௌரவ மேன்மை விளங்கி னது.

அவன் போகும் பாதையில் சிறந்த மாளிகை ஒன்றி ருந்தது. அதிலே புத்திர சநதானப் பேறிலலாத ஓர் செ ல்வப் பெருமாட்டியிருந்தாள். தாசீஸ் தன வீட்டின் பாதை வழியாய் மிக்க மரியாதை அடக்கத்துடன், இரு கரங்களையும் நெஞ்சின்மேல் சோத்து வெகு துரிதமாய் நடந்து வருகையில் அவன் முகத்தில ஜொலித்த சிறந்த இலக்ஷண வடிவை இம்மாது கண்டு ஆச்சரிய பரவசமாய்ச் சற்று நின்றபின், அவனைக் கூப்பிட்டு, வழியை மறித்துச் சொல்வாள் :

" அப்பா குழந்தாய்! என் அருமை கண்மணியே! சற்றே நில்லு. நீ யார்? உன் பெயரென்ன? உன் தாய் தந்தை எவர்? உன் வீடெங்கே? சொல்லப்பா. "

" அம்மா! என் பெயர் தாசீஸ். நான் அநாதப் பிள் ளை. எனக்குச் சொந்தமான வீடுவாசலில்லை."

" அப்படியானல், என் வீட்டுக்குவா. உன்னை நான் வளர்க்கிறேன். என் வீடு உன் வீடு. வா, உன்னேடு நான்

பேசவேண்டும். ஓ! உன்னைப்போல் எனக்கொரு அழகுள்ள பிள்ளையிருந்தால் எவ்வளவு பாக்கியம்!"

"அம்மா, தாயே, இப்போது நான வரக்கூடாது. என்னை ஒரு உன்னத அலுவல நிமித்தம் அனுப்பியிருக்கிறார்கள். நான் தாமதமின்றிப் போகவேண்டும். எனக்கு இப்போது நேரமில்லை."

"அப்பா, என கண்ணே! இபபோது வாக்கூடாவிட்டால நாளைக்காவது வருவாயா? வருவேனென்று சொல இதுதான் நான இருக்கும வீடு."

"அம்மா, நாளைமட்டும் நான் உயிரோடு இருந்தால வருவேன்." என்று சொல்லி முன்னிலும அதிக விரைவாய் தான் ஏந்திபபோன சேசுநாதாசுவாமியைச் சிந்தித்து நடந்துபோனான். அந்தச் செலவமாது பையன் போவதைச் சற்றுநேரம் வெளியே வந்து பாாத்துக்கொண்டிருந்தபின் அவனுக்குப்பின்னால போகலாமாவென்று யோசித்தாள்.

சிறுவன் தார்சீஸ், திரண்ட ஐசுவரியமுள்ள செல்வப் பெருமாட்டிக்குத் தான் சுவிகார புத்திரனாகும அதிர்ஷ்டத்தைப பற்றி நினையாமல, சேசுநாதர்சுவாமியே தனக்குப்போதுமான பாக்கியமென்று அவரைத் தியானித்து நடந்தவன், ஒரு மைதானத்தில சேர்ந்தான். அந்தச் சமயம், பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள், பாடம் படித்து ஒப்பித்தபின்பு, விளையாடும்படியாய், கத்திக்கூப்பிட்டு, பெரும் இரைச்சலிட்டு வெளியே வந்தார்கள். வந்ததும் பந்துவிளையாடும்படி இருகட்சியாகப் பிரிந்து விளையாடத்துவக்கினார்கள். அப்போது அவர்களிலொருவன் மாத்திரந் தனக்

குச் சோடியின்றி தனியே நிற்கையில, தாரசீஸ் அந்தப் பாதை வருவதைக் கண்டு துள்ளிக் குதித்து சொல்வான் :

" ஆஹா ! நல்ல அதிர்ஷ்டம் அதோ தார்சீஸ் வருகிறான். பந்து அடிப்பதில வெகு சமாத்தன். அடே தார்சீஸ் ! இங்கே வாடா. உனனைப பார்த்து பல தேசகாலமானதுபோல் தோன்றுகிறது. எஙகேடா, இவ்வளவு ஆத்திரமாய்ப் போகிறாய் ?"

" எனக்கு நேரமிலலை. வேலையிருக்கிறது."

" இருககட்டும வாடா. நலல பிள்ளைபோல் சொன்றைபோல்கேள். ஒரு விளையாட டு ஆடினபின்பு போகலாம்." இவ்விதஞ் சொலலி அவன கையைப் பிடித்து இழுத்தான்.

" அப்பா நான் வரமாட்டேன். என்றாலே கூடாது. வெகு அவசியமான வேலையின் நிமித்தம நான் போகிறேன். விளையாட எனக்கிது சமயமலல "

தார்சீலை விளையாடக் கூப்பிட்டவன் தேக பலாஷ்டிகனானதால அவனைப் பலாத்காரமாய்ப் பிடித்து இழுத்துச்சொல்வான் : " அடே நான் கூப்பிடுமபோது வரமாட்டேனென்று சொலலுகிறாய் ? தமபி, என்னிடததில் இது வெல்லாஞ் சாயாது. வாடா."

தார்சீஸ் அழுதுகொண்டு, அவனை மன்றாடிப் பிரார்த்தித்து, " அப்பா, அண்ணேன, உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன். எனக்கு அவசரமான வேலை இருக்கிறது. நான் போகவேண்டும்," என்று சொல்ல,

" அப்ப்டியா ! நான் கூப்பிடும்போது போகவா ? அடே அதென்னி மறைத்துக் கொண்டு போகிறாய்?

ஏதோ இரகசியச்சீட்டு யாருக்காவது இருக்கின்றதோ? அரை நாழிகைப் பிந்திப்போனால் என்ன பிரமாதமுழுகிப் போகும்? வாடா, தார்சீஸ், அதை என் கையில் கொடு. நான் பதனமாய் வைத்திருந்து, விளையாட்டு முடிந்தபின்பு உனக்கு நான் கொடுக்கிறேனே." இப்படிச் சொல்லி, தார்சீஸ் கையிலிருந்ததைப் பறிக்கப் போகும்போது, தார்சீஸ், "ஓ! நான் கொடுக்கமாட்டேன், என் உயிர்போனாலுங் கொடுக்கமாட்டேன், என்று அழுதுகொண்டு சொல்ல, அந்தத் துஷ்டன்: அப்படியா, நான் அந்த இரகசியம் இன்னதென்று அறியாமல் உன்னை விடுவதில்லை என்று சொல்லி அவனைப் பிடித்து இழுத்துப் பறிக்கும்போது, அவ்வழிபோனவர்களெல்லாரும், இதென்ன விசேஷமென்று வந்துபார்த்தார்கள். பார்க்கையில், ஒரு சிறு பையன் தன் கைகளை நெஞ்சோடு சேர்த்து அணைத்திருக்க, இவனிலும் பெரியவனும் பலனுள்ளவனுமான தடியனொருவன், இச்சிறுவன் கையிலிருப்பதை பலாத்காரமாய்ப் பிடுங்கப் பார்க்கும்போது, அவன் தன் கையை விடாமல் கெட்டியாய்க் கட்டிக்கொண்டு, அடிக்கும் உதைக்கும் அசையாமல் நிற்பதைக் கண்டார்கள். இச்சிறுவனோ அடிக்கு அடி வாங்காமலும், தூஷணஞ் சொல்லாமலுங், கோபங் காண்பியாமலும், பொறுமையாயிருந்து தன் கைப்பிடியை விட்டவில்லை.

சூழநின்றவர்கள் அதிசயப் பட்டு அச்சிறுவன் எதை இவ்வளவு இரகசியமாய் மறைத்துக் காட்டாமல் வைத்திருக்கிறானென்று ஒருவரொருவரைக் கேட்டார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் அப்பக்கமாய் வந்த புலவியன், தார்சீஸை தான் தூர்குவாதனோடு கோவிலுக்குப்போனபோது பார்த்த ஞாபகமிருந்ததால், இவன் கிறீஸ்துவர்களுடைய பரம இரகசியத்தைக் கொண்டுபோகிறான் என்று பரியாசமாய்ச்

சொல்லி அப்பாலே போனான். கிறீஸ்துவர்களின் இரகசியமென்றதை அங்கு கூடிய அஞ்ஞானிகள் கேட்டவுடனே அது இன்னதென்றறியும்படி விநோதப்பிரியராய், எப்படியாகிலும் அவன் தங்களுக்கு அதைக் காட்ட வேண்டுமென்று இரைந்து கேட்டார்கள். என் உயிர்போனாலும் நான் காட்டமாட்டேனென்று, சிறுவன் சொல்ல, கிட்டநின்ற பெருமுரடன் ஒருவன் தன் கையை ஓங்கிப் பலமாய் சிறுவனை அடிக்க, மற்றவர்களும் அப்படியே அடிக்கும்போது, தார்சீஸ் கீழே துடித்துப் பதைத்து விழுந்தான். விழுந்தாலுங் கட்டியிருந்த தன் கையை எடுக்கவில்லை. இரத்தம் அவன் மூக்கிலும் வாயிலுமிருந்து கப கபவென்று ஓடிவந்தது. துஷ்ட இரக்கமின்றி நாய்களைப்போல தார்சீஸ் மேலே விழுந்து அவன் கையில் வைத்திருந்த தேவமகத்துவ சற்பிரசாதத்தை வலுவந்தமாய்ப் பறிக்கப்போகுஞ் சமயத்தில், யாரோ ஒருவன் இராக்ஷத பிறப்புபோல் அங்கு சடுதியில் வந்து, கூட்டத்தில் பாய்ந்து, இங்கே ஓர் அடி அங்கே ஓர் உதை கொடுத்து, எதிரே நின்றவர்களைப் பிடித்துத் தள்ள, அடி உதைபட்டவர்கள் கரணமடித்து, ஐந்தடி அப்பால உருண்டோட, வேறு சிலரை அத்தாயமாய்த் தூக்கி ஓர் பந்தை எறிவதுபோல தூர எறிய, மற்றவர்களெல்லாருந் திக்கு முக்காடி, பேயோ பூதமோ யாரோ என்று அஞ்சி நடுங்கி, வழிவிட்டு ஒதுங்கி நிற்க, இந்த இராக்ஷதகுலப்போர்வீரன் தார்சீஸ் கிட்டப்போய் முழங்காலிலிருந்து, மயங்கிச் சோம்பிக் கிடந்த சிறுவனைத் தாயைப்போல் தன் கையில் அணைத்துத் தூக்கி, கண்களிலிருந்து, மள மளவென்று தண்ணீர் அருவி ஓடிவர, தார்சீஸைப் பார்த்து, அப்பா, தார்சீஸ், உன்னை நிரமபவும் அடித்து காயப் படுத்தியிருக்கிறார்களா? என்று கேட்கும

போது, தார்சீஸ் தன் கண்களைத்திறந்து பார்த்து, மோக்ஷ திவ்விய பிரகாசம் அவன முகத்தில் துலங்கச் சொல வான் :

"அண்ணேன்! அவ்வளவு காயமில்லை. ஆனல் இதோ என் கையில தேவ நன்மைப் பாத்திரமிருக்கின்றது சிறைக்கூடத்துக்கு எனனை அனுப்பினார்கள்."

போர்வீரன இதைக் கேட்டவுடனே, முன்னிலும பதின்மடங்கு அதிகமான பூஜிதவணக்கத்துடன், இச்சிறு வனை மாத்திரமலல, இவனோடு மனுஷர் இரட்சணியத்துக் காக தேவபலியாயிருக்கும அதி உன்னத மகத்துவமுள்ள சர்வேசுரனையே தன் கைகளில பத்தியாயத் தூக்கித் தன் தோள்மேல் வைக்க, தாரசீஸ் இராக்ஷஸ வீரன் மேல் பய மின்றிச் சாய்ந்து தேவநற்கருணைப் பாத்திரத்தை ஏந்தி இருந்தான்.

இவ்விதந் தூக்கிப போகுமபோது, யாரும் வழியில் தடுக்கவுமிலலை, எவனுங் கேள்வி கேட்கவுமில்லை. ஆனால முன்சொன்ன செலவப் பெருமாட்டி வீட்டின் கிட்ட வரு கையில, அம்மாது தாரசீஸ இருந்த ஸ்திதியைக் கண்டு ஐயோவென்று பதறி நடுங்கி, "இதென்ன கோலம், கொ ஞ்ச நேரத்துக்கு முன் நான் பார்த்த அழகுள்ள பையன் இவன் தானே? யார இந்த நிஷ்டூரஞ் செய்தவன்" என்று கேட்டாள்.

அதற்கு துவாரபாலகன் "அம்மா! இந்தச் சிறு பையன் கிறீஸ்துவனென்று இவனைக் கொன்று போட்டார் கள்." என்று சொலல, அந்தப் பெண் நாயகங் கிட்டவந்து பையன் முகத்தை உற்றுப்பார்த்தாள். தாரசீஸ் தன் கண் களைத் திறந்து அம்மாதைப் பார்த்து, ஓர் புன் நகை

காட்டி உயிரை விட்டான். அச்சிறுவன் பார்வையால் அவளுக்கு விசுவாசத்தின் பிரகாசம உண்டாகவே அவ ளும் உடனே கிறீஸ்துவளானுள்.

போர்வீரன் இறந்த பாலியனைக் கோவிலுக்குக் கொண்டுபோக, குரு வந்து சமமனசுவைப்போல் நித்திரை செய்த அந்த மாசற்ற பையனைப பார்த்தார. தாம் ஒரு மணிக்குமுன் அச்சிறுவன கையில கொடுத்த தேவ பாத்திரங் கொடுத்தாற்போல இருப்பதைக் கண்டு, வெகு பூஜித வணக்கத்துடன் சேசுநாதரை ஆராதித்துப பாத்திரத்தை எடுத்தார. வேதசாட்சியாய் மரித்த இச்சிறுவன் பிரேதத்தை இராக்ஷவீரன தன கையில ஏந்தி, கிறீஸ்துவர்கள் பலபேர் சூழ்ந்துபோக, கலிஸ்தாவென்ற சுரங்கத்துக்குக் கொணடுபோய் க்ஷேமித்தாரகள். பிற்காலத்தில அவன் கலலறைமேல கருங்கல பதித்து தமாஸகஸ் என்ற ஆச். பாப்பு செய்த சரம கவியை அக்கலலில வரைந்தார்கள். அச்சரம கவியின தமிழ்ப பயனிது:

சேசுவின் சற்பிரசாதத் திரவியந்தனைக்கைஏந்தி
பூசித்தவணக்கத்தோடு போனதார்சைக்கண்டு
நீசராங்கொடியர்சூழ்ந்து நிர்தைசெடதடித்துக்கொன்றார்
ஆசையாய்ச்சிறுவன் தூய ஆவியைபபலியாய ஈந்தான்.

இந்தத் துக்ககரமான சங்கதியைச் சிறையிலிருந்தவாகளுக்கு இராக்ஷவீரன் சொன்னபோது, எல்லாரும் வெகு விசனப்பட்டு, தஙகள் வழிக்குத துணை ஆதாரமான தேவ போஜனம வாவிலலையே என்று மனஞ் சோமபி இருக்கும் வேளையில சிபஸ்தியார் வநதார். இவாகள் துக்கத்தின் காரணம் இன்னதென்று அறிந்ததும அவர்களுக்கு ஆறுதல் சொலலி, அங்கிருந்த தியாக்கோனான இரேப்பாரத்துஸ் என்பவனைக் கூப்பிட்டு அவருக்கு ஏதோ இர

கசியமாய்ச் சொல்ல, அவரும் விரைந்து வெளியே போனார்.

இரணவீரசூரனை செபஸ்தியானை சிறையின் காவற சேவகனொருவன் அறிந்திருந்ததால அவர் தமது இஷ்டம போல் உள்ளே வரவும வெளியே போகவும் விக்கினஞ் செய்யவில்லை. இதனால சிறையில் இருந்த கிறீஸ்துவர்களுக்கு அயராமல வேண்டிய உதவியெல்லாஞ் செய்து வருவார். இந்த விசை தமது பிரிய சிநேகிதன் பங்கிராசைக் கடைசி முறை பார்த்துப பேசும்படியாய் அவரை அந்தரங்கமாய்க் கூப்பிட்டு, இருவரும ஓரிடத்தில் உட்கார்ந்த பின் பங்கிராஸ் சொல்லுவான.

“அண்ணேன! முன்னொருவிசை நாம இருவரும் அந்தப பாதை வழியாய்ப போகும்போது, மாளிலிருந்த சிங்கங்கள் காச்சித்த சத்தத்தைக் கேட்டோமே அது உங்களுக்கு ஞாபகம இருக்கிறதா?

“பங்கிராஸ! அது இன்னம என ஞாபகத்தில அப்படியே இருக்கிறது. அந்த சத்தத்தை நீ அன்று கேட்டவுடனே உன இருதயா துள்ளித் துடித்ததல்லவா? நாளைக்குச் சமபவிக்கப்போவதை நீ முன்னமே அறிந்தாற்போல அன்று சந்தோஷப் படவில்லையா?”

“மெய்தான அண்ணேன் இந்தக் கொடிய மிருகங்களுக்கு இரையாகுங் கிறீஸ்துவர்களுக்குள் நான முதலவனாய் இருப்பேன என்று அன்று எனக்குத் தோன்றினது. அந்தப் பாக்கியமுள்ள நாளும இதோ வந்திருக்கின்றது. ஆகிலும் இவ்வளவான பேறு பெறும்படி நான் பாத்திரன அல்லவேயென்று நினைக்கையில் இது ஒரு கனாவுபோல காண்கிறது. அண்ணேன்! சர்வேசுரன் எனக்கு இந்த

உன்னத வரங் கொடுக்கும்படி நான் என்ன செய்திருக்கிறேன்?"

"பங்கிராஸ்! அனந்ததயையுள்ள சர்வேசுரன் நமது பேறுக்கு அளவாயல்ல, தமது அளவில்லாத் தயாள இரக்கத்துக்கு ஏற்றவகையில நன்மை செய்கிறார். ஆனால், தம்பீ, நாளைக்கு உனக்குச் சமபவிக்கப போவதைப்பற்றி நீ என்ன நினைத்திருககிறாய்?"

"நான் என்ன நினைக்கலாம? அண்ணேன், இந்த ஆச்சரியத்தைக் கேளுங்கள். இப்போது இந்த இருண்ட சிறைக்குள்ளே, கை காலில விலங்சோடு அடைபடடுக் கிடக்கும நான, நாளைச் சூரியன அஸ்தமிக்குமுன் மோட்சத்திற்குப் போய் அங்கே அரச. வாகள் மத்தியில், நானும் ஒருவனுயிருநது சமமனசுகள் பாடுந் தேவசங்கீத கீர்த்தனைகளைக் கேட்டு, நானும அவாகளோடு கூடக் கலந்து சோந்து பாடி மோட்சானநத பாக்கியம அனுபவித்துக் கவலையின்றி, வருத்தமின்றி, பயமின்றி, நித்திய காலம் வாழ்வேனென்று நினைக்குமபோது இது நமபக்கூடாத விஷயமாக எனக்குத் தோனறுகிறது. இவ்வித ஆனந்த பாக்கியம மற்றவர்களைப்பற்றி நாம வாசித்துங் கேடடும் இருக்கலாம். ஆனால் இதுவெல்லாம எனக்கு இன்னஞ் சில மணி நேரத்துக்குள் உண்டாகப போகின்றதென்று நினைப்பது வெகு கடினமாய் இருக்கின்றது."

"இவ்வளவு தானு, பஙகிராஸ், நீ அனுபவிக்கும் மோட்சானந்த பாக்கியம்?"

"ஓ! அண்ணேன, இதிலும இன்னம அதிகம் இருக்கின்றது. கேளுங்கள். நானு சிறுபையன் பள்ளிக்கூடத்தின் மணம் இன்னம எனனைவிட்டு நீங்கவில்லை. சேசுநாதர்

சுவாமிக்காக இதுமட்டும் நான் யாதொன்றுஞ் செய்ததில்லை. செய்யாதிருந்தும், நாளைக்கு நான் சேசுநாதரை முகமுகமாய்ப் பார்த்து, அவரை ஆராதித்து, என் இருதயத்தின் பூரண பட்சத்தோடு அவரை சிநேகிப்பேன் என்றும், அவரும் எனக்கு வெற்றி முடி சூட்டி, என்னைத் தமது கிட்டக் கூப்பிட்டு தமது இருதயத்தோடு என்னைச் சேர்த்து அன்பாய் அணைப்பாரென்றும, நான் நினைக்கும் போது இவையெல்லாம் எனக்குச் சம்பவிக்குமோ, அல்லது இதுவெறுங் கனவோவென்று சந்தேகப்பட இடமாய் இருக்கிறது. ஆகிலும், அண்ணேன், எல்லாம் மெய். எல்லாம் எனக்கு நடக்கும, அதுவும் நாளைக்கு."

"இதுமட்டுந்தானே, தம்பீ, உனக்கு வரப்போகிற பாக்கியத்தின் அளவு?"

"ஓ! இன்னம அதிகம் இருக்கிறது. நாளை முதல இந்த உலக மனுஷர்கள் முகத்தைப பாராமல், சர்வேசுரனுடைய தேவப்பிரகாச ஒளி வீசுஞ் சுந்தர முகத்தின் முன் இருப்பேன் என்றும, நமமைப் பழித்து பகைக்கு மனிதர்கள் முகத்தைப் பார்க்காதபடி நாளை நான் கண்ணை மூடினபின்பு, மோட்சத்தில் சகல பாக்கிய நன்மை சுருபியான சர்வேசுரனைப் பார்க்குமபடியாய் கண்ணைத் திறப்பேனென்றும் நான் நினைக்கையில, இது அற்புத சரித்திரங்களில் நாம் வாசிககும் விநோத காட்சியைப் போல் தோன்றுகிறதே அன்றி, நாளை எனக்குச் சம்பவிப்பதாகக் காணவில்லை. நாளைக்கா? ஏன்? அதோ நடுச்சாமம ஆயிற்றென்று காவற்காரன் சொல்லிக்கொண்டு போகிறான். அப்போ, இன்றைக்கு, அண்ணேன், இன்றைச்குத் தான் இதுவெல்லாம் நடக்கும். ஓ பாககியமுள்ள நாளே!

ஓ! அதிர்ஷ்டமுள்ள நாளே! ஓ நான் மோக்ஷத்திற்குப் போகுஞ் செல்வநாளே! உன்னை நான் ஆவலோடு தேடினேன்! உனக்காக நான் இதுமட்டும் ஆசையுடன் காத்திருந்தேன்! வா, வா, உதித்து எழுந்து சீக்கிரம் வா !"

"பாக்கியம் பெற்ற பங்கிராஸ்! நீ மோக்ஷத்துக்குப் போகுமுன்னமே அதின் இன்பத்தை இப்போதே அனுபவிக்கின்றாய்."

பங்கிராஸ் சிபஸ்தியாா சொன்னதைக் கவனியாதது போல் சொலவான் :

"அண்ணேன்! சர்வேசுரனுக்காக இநதப் பால்ய வயதில் நான் சாவது எவ்வளவு மேலான பாக்கியமென்று உங்களுக்குத் தோன்றுதா? ஆ! இநதப் பூமியில் நிறைந்திருக்கும் அக்கிரமங்களையும் பாவஙகளையுந், தேவ துரோகஙகளையும, அஞ்ஞானததையும், பாாக்காதபடி இளம் பிராயத்திலேயே சர்வேசுரனிடத்தில போய் இருபபது எனக்குக் கிடைதத விசேஷ அதிர்ஷ்டமல்லவா? ஒன்று மாத்திரம எனக்கு இப்போது துக்கம உண்டாக்கததக்கது. அம்மாளைத் தன்னந் தனியே விடப்போவதுதான் ஆனல் சர்வேசுரன் இருக்கிறாா. பயமென்ன? அண்ணேன் நீங்கள் சொன்னதுபோலே அமமாளைக் கூட்டிவாருங்கள். நான் சாகுமுன்னே கடைசிவிசை அவாகளைப் பார்த்து ஆசீர்வாதம் பெறவேண்டும."

பங்கிராஸ் இபபடி தன் தாயாரைப்பற்றி நினைக்கும் போது, உள்ளங் கனிந்து கண்களிலிருநது தண்ணீா அருவி ஓடிவர, பின் கண்ணைத் துடைத்து சந்தோஷ முகத்தோடு சிபஸ்தியானை நோக்கிக் கேட்பான்:

"அண்ணேன்! ஏதோ ஓர் இரகசியம் இருக்கிறதென்றும் அதை ஒருநாள் எனக்குச் சொல்லுவீர்களென்று

முன்னொருவிசை நீங்கள் எனக்குச் சொன்னது ஞாபகம் இருக்கின்றதா? அந்த இரகசியம் ஏது? இதுதான் எனக்குக் கடைசி நாள்.”

“பங்கிராஸ், எந்தச் சந்தர்ப்பத்தில் நான் இப்படிச் சொன்னேனென்று உனக்கு நினைவிருக்கிறதா?”

“நினைவுண்டு. கமபானியாவுக்கு என்னை நீங்கள் அனுப்பும்போது, ஏன் இந்த வேளையில் உரோமாபுரியை விட்டு அனுப்புகிறீர்களென்று நான் கேட்டதற்கு, இதின் விவரம் பிற்பாடு சொலலுவதாக நீங்கள் சொன்னீர்கள்.”

“மெய்தான் பங்கிராஸ். அந்தச் சமயத்தில் உன்னை நான் இராஜதானியிலிருந்து வெளியே அனுப்பாவிடில் நீ இராஜ சட்டத்தைக் கிழித்ததற்காக, சேவகாகள் உன்னைப் பிடித்து நீதிசாலேயில கொண்டுபோய் விட்டு, உனக்குச் சாவின் தீர்ப்புச் சொலலி இருப்பாகள். அப்போது இராஜ கட்டளையை எதிர்த்த துரோகியாக நீ தண்டிக்கப்பட்டிருப்பாய். சேசுநாதா சுவாமிக்காக மரிக்கும் பாக்கியம உனக்கு வந்திராது. அன்றியும, அப்போது உன்னைப் பார்த்தவர்கள் உன்னை மெச்சுப் பேசி, தாசிய சேவகனை எதிர்த்துப் போராடின பாலியவீரன் அதோவென்று உன்னைச் சுட்டிக்காட்டிப் புகழ்ந்து பேசுவார்கள். இது உன காதில விழுந்தால் உன் மனதில் சிலவிசை சிலாக்கியமான எண்ணம் உண்டாகி, உன்னை நீ கனமாய் மதிப்பாய். சேசுநாதர் சுவாமிக்காக சாகிறவர்களின இலக்ஷணமும் அலங்காரமுமாகிற நிந்தை அவமானம் உனக்கு இருக்கமாட்டாது. உன் வெற்றிமுடியில் இருக்க வேண்டிய இராஜரத்னம் மங்கிப்போகும்.”

“ஓ அண்ணேன்! நீங்கள் காட்டிய பட்சம் எவ்வளவு மேலானது!”

"ஆனால் அதற்குப்பின் நீ சேசுநாதருக்காக சிறையில் இருப்பவர்களுக்கு உதவி செய்யும்போது அஞ்ஞானிகள் உன்னைப் பிடித்து, அடிமையைப்போல் கை காலில் விலங்கு மாட்டி, தெருவீதி வழியாய் உன்னை இழுத்துப் போக, வழியிலிருந்த ஜனங்கள் உன்னைப் பழித்து நிந்தித்தார்களென்றும், அதிகாரி மற்றக் கிறீஸ்துவர்களோடு உன்னைச் சேர்த்து, அவர்களைப் போல் நீயுங் கிறீஸ்துவனாயிருப்பதின் நிமித்தம், உனக்குச் சாவின் தீர்ப்புப் படித்தாரென்றும் நான் அறிந்தபோது, உன்னை அறநெறிபயிற்சியில் ஸ்திரப் படுத்தும்படி நான் முயன்ற அலுவல் அனுகூலமாய் முடிந்ததென்று சந்தோஷங் கொண்டு சர்வேசுரனுக்கு நன்றி அறிந்த ஸ்தோத்திரஞ் செய்தேன."

பங்கிராஸ் மனமிளகி, தன்னை இவ்வளவு அன்புடன் பாராட்டி, அறநெறியில வளர்த்து வந்த செபஸ்தியாரைக் கட்டி அணைத்து கண்ணீர் மழை சொரிந்து சொல்வான்:

"அண்ணேன்! நீங்கள் எனக்குக் காண்பித்த சிநேகம் எவ்வளவு மேலானது! இன்னம் ஒரு உபகாரமாத்திரங் கேட்கிறேன். இன்றைக்கு நான சாகுமட்டும நீங்கள் என் கிட்டவேநின்று என் தாயாருக்கு என் கடைசி ஆசையை அறிவிக்கவேண்டும்."

"பங்கிராஸ்! உன் ஆசைபோல் நான் செய்கிறேன். என் உயிர்போனாலும் நான் தப்பமாட்டேன்."

இந்தச் சமயத்தில செபஸ்தியார் அனுப்பிய தியாக்கோன் வந்து, அந்தச் சிறையிலே தேவபலி ஒப்புக்கொடுக்க வேண்டியதெல்லாந் தயாராயிருக்கின்றதென்று சொல்லும்போது, பங்கிராஸ் ஆச்சரியத்துடன் சுற்றுமற்றும் பார்த்தான். சிறையிலிருந்த லூசியானஸ் என்ற குரு, கிழே

படுக்க அவர் அசையாதபடி அவர் சரீரத்தைக் கயறுக ளால் தரையோடு சேர்த்துக் கட்டினார்கள். தியாக்கோன் அவர் நெஞ்சில் பீடத்தின் மேல விரிக்கு மூன்று தூய வெண்மையான துண்டுகளை விரித்து, அதின்மேல ஒஸ்தியை யும் பாத்திரத்தையும் வைத்து பிடித்துக்கொண்டிருந்தார். படுத்திருந்த குரு பூசையின் ஜெபங்களை வாசிக்கும்படி யாய் அவர் தலையை ஒருவர் சற்றுத்தூக்கிப் பிடித்திருந் தார். இநதஸ்திதியில குரு பூஜைசெய்து சிறையிலிருநத சகலருக்குந் தேவ நன்மைகொடுத்தார.

சேசுநாதர் சுவாமி ஸ்தாபித்த சத்திய திருச்சபை யின் ஏற்பாடுகள் எவ்வளவு சிறந்தது. இதோ ஓர் குரு, சேசுநாதர் சுவாமியைப்போல் பலியின் பீடமும் பலியிடுங குருவுமாயிருந்தார. வேதசாட்சியாக ஆவலோடு காத்திரு ந்த இந்தக் குருவின் நெஞ்சே சேசுநாதருடைய பீடமா யிருநதது. அவா இருதயம இன்னம் பதைத்து துடித்தா லும, அவா தம்மை முநதியே ஓா பலியாய் நேர்ந்ததால, அவர் மரித்தவா போலானா. வேதசாட்சிகளாய் மரிக்கக் காத்திருநதவாகளுககு வழித் துணை ஆதாரமான மோட்ச மதுர நிறைநத போஜனம் இதிலும் உன்னத வகையாய் எவ்வாறு உண்டாக்கிப் பரிமாறக்கூடும்?

---

## ௰எ-ம். அதிகாரம்.

### கடைசி யுத்தம்.

---

மறுநாள் காலமே ஆதித்தன் பிரகாச ஒளியோடு குணதிசையினின்றெழுந்து கோடிக் கிரணங்களை பூமியின நாற்றிசையிலும் பரப்பி, மாளிகைகளுங், கோபுரங்களும்,

வீடுகளும், மரங்களின் கிளைகளும், இலைகளும், நவமணி பதித்த பொன் ஆபரணங்கள்போல விளங்கச் செய்ய அதற்கு இசைவாய் இராஜதானியிலுள்ள ஜனங்கள் எல்லாரும் அலங்கார விநோத வஸ்திர பூஷணாதிகளுடன தங்களைச் சிங்காரித்து, பற்பல தெருக்களிலிருநது விநோத வேடிக்கைக்காக அமைக்கப்பட்டிருந்த மாலுக்குப் பெருங கூட்டமாய் வந்தார்கள். வருகிறவாகள் எல்லாரும் பல வாசல்கள் வழியாய் உள்ளே போய அவனவன் தனக்குச் சீட்டால் குறிக்கப்பட்ட ஆசனத்திலிருநதான். இம்மால வட்ட வடிவுள்ள விலாச மணடபம. இதில ஜனங்கள் இருக்கும்படி ஆசனஙகள் ஒன்றுக்குமேல ஒன்றாய படிப்படியாய் சுற்றிலுங் கட்டி இருநததால இதில இலட்சம் பேருக்குக் குறையாமல இருக்கலாம. இன்று கூடிய ஜனங்கள் எல்லோருங் கிறீஸ்துவாகள் சிநதும இரத்தத்தையும மிருகங்களின் நகங்களில பிடிபட்டு படும் அவஸ்தையையுங் கண்ணாரப் பாாத்து களிகூறுமபடி வநத கல நெஞசரான மிலேச்சா. அரசனும அவன் மநதிரி பிரதானிகள் முதலிய ஆஸ்தான சமஸ்தான உத்தியோகஸ்தருந் திருநாளும் பெருநாளுமான இநத சுபநாளில பட்டாடை அணிந்து, உல்லாசமாய் எழுநது, கிறீஸ்துவாகளை மிருகங்களுக்கு இரையாய்ப்போடும தமாஷாவைப் பாாக்குமபடியாய் வந்தார்கள்.

இந்தப் பாரிமாலின் மத்தியில வீட்டின் முறறம்போல நிறந்த விசாலமான இடமுண்டு. இதைச் சுறறிலுங கீழ் அறைகள் மிருகங்கள் இருக்க, தடுத்துத் தடுத்துக் கட்டி இருந்தன. சில மிருகங்களை உருளையுள்ள இருப்புக் கூட்டில் அடைத்து நடு முற்றத்துக்குக் கொண்டுவருவார்கள்

சேவகர்கள் சிறையில் இருந்த கிறீஸ்துவர்களை அதி காலமே வேறே அறைக்குக் கூட்டிப்போனார்கள். இதில் இருக்குங்கால், வேதசாட்சிகள் ஒருவரொருவருக்கு ஆறு தல் சொல்லி, தேவஸ்தோத்திர சங்கீத கீர்த்தனைகளைப் பாடி குறித்த நேரம் வருமட்டுங் காத்திருந்தார்கள்.

இச்சமயத்தில் கோர்வீனன், தன் எதிரியின்மேல் ஜெயங்கொண்டவனைப்போல ஆணுவமேட்டிமையோடு பங்கிராசிடம் வந்து சொலவான் :

"ஆஹா! பங்கிராஸ்! அங்கு தப்பி இங்கு தப்பி கடை சியிலே அகப்பட்டுக்கொண்டாய. என் பழி தீரப்போகின் றது. நான் கட்டிய கங்கணத்தை அவிழ்க்கப் போகி றேன். நாம் இரண்டு பேரும் வெகு காலமாய், யார் ஜெலி ப்பார், பார்க்கலாமெனறு சணடைக்கு நின்றோம். கடை சியில் இனறு நான் ஜெயித்தேன்."

"கோர்வீனு! என்ன சொல்லுகிறாய்? எப்போ நான் உன்னோடு சண்டை செய்யத்தேடினது? சொலலு பார்க்க லாம்?"

"எப்போ வா? எப்போதும, எங்கும், நீ என்னைத் தொடர்ந்து வந்தாய. நான் போன இடமெல்லாம் நீ என் சனியனாய் இருநதாய். என் கனவிலும் நினைவிலும நீ என்னை விடாமல் துறததினாய், உன்னைப் பிடிக்க நான் வரு ம்போது என் கைக்கு மாயமாய்த் தப்பி மறைந்தாய். நான் உன்னைப்பார்த்த நாள் முதல் ஜன்மப் பகையோடு உன்னைப் பகைத்தேன். நீ நாசமாய்ப் போகவேண்டுமென்று மண் ணை வாரித் தூற்றினேன். இப்போது நான் பழிவாங்கும் நாள் வந்திருக்கின்றது.' ஆஹா! யார் ஜெயித்தது? நீயா, 'நானா?"

இதைக்கேட்ட செல்வன் பங்கிராஸ் புன்சிரிப்புடன் சொல்வான்: "ஜெயம் பெறும்படி இருவருஞ் சண்டை செய்திருக்கவேண்டும். ஆனால் சண்டைக்கு வேண்டிய யாவுஞ் செய்தவன் நீ மாத்திரம். நானோ நீ சொல்வதில் ஒன்றுஞ் செய்ததில்லை."

"நீ செய்யவில்லையா? யார் இதை நம்புவார்? நான் போன இடமெல்லாம் என் காலைச்சுற்றின பாமபுபோல் நீ என்னைக் கடிக்கும்படி தேடவில்லையா?"

"எங்கே சொல்லு?"

"எஙகும: பள்ளிக்கூடத்தில, அக்நேசி வீட்டில், சந்தைத் தெருவில, சுரங்கத்தில, என் தகப்பனா கச்சேரியில், குரோமாசியன கிராமத்தில, எங்கும, எங்கும், என்னைத் தொடாந்தாய்."

"இவ்வளவுதானா? உன் வண்டியில் இருந்து நீ ஓடையில் விழுநது, சேற்றில அமிழ்நதி, எழுநதிருக்க சக்தியின்றி, நீ கீழே பிரஞ்ஞாபங்கமாய்க் கிடக்கும்போதும உன காலைச் சுற்றின பாமபுபோல நான உன்னைத் தொடாந்ததை நீ மறநதாபோனாய்?"

"அடா துஷ்டா! நீ தானா என் பின்னாலே வநது என் குதிரைகள் மருளும்படி அனறு செய்தவன்?"

"கேள்; கோர்வினா, வீணாய்ப பதறி உதறுதே. இது தான் கடைசிவிசை நாம இருவரும் பேசுவது. நான் என உபாத்தியாயர் காசியானை க்ஷேமித்த பின்பு, பட்டணத்துக்கு வரும்போது, குதிரையும் வண்டியும் விழுஞ் சப்தங் கேட்டு உடனே அந்த இடத்துக்குத் தீவிரமாய் வந்து பார்க்கும்போது, நீ தண்ணீருக்குள் அமிழ்ந்திப்போகும் ஆபத்தில் இருந்தாய். அப்போது உனக்கு சுய அறிவில்லை.

என் பிரிய உபாத்தியாயனை இரக்கமின்றி கொடுமையாய்க் கொன்ற படு கொலைஞன் என் கைக்குள் இருந்தான். தேவ கோபாக்கினை அவனைத் தொடர்ந்து வந்து தண்டிப்பதாய் இருந்தது. நான் பழிவாங்கும்படி எனக்கு வந்த நாள் அந்த நாள். நானும் என் ஆசையைப் பூரணமாய் நிறைவேற்றினேன்."

"ஓ! ஓ! அதெப்படி? சற்றே சொல்லு."

"எப்படியா? கேள். உன்னைத் தண்ணீரில் இருந்து தூக்கிக் கரையில வைத்து, உனக்கு உயிரும அறிவுந் திரும்பி வரும்படியாய் உன் சரீரத்தை நன்ருய்ச் சூடு பிறக்கத் தேய்த்து, அதன்பின்பு உன் ஊழியர்கள் கையில் உன்னை ஒப்புவித்தேன்."

"இதெல்லாஞ் சுத்தப் பொய். என் ஊழியர்கள், தாங்களே எனனைத் தூக்கி எடுத்து இரட்சித்ததாக எனக்குச் சொன்னாகள்."

"உன்னை நான் வெளியே எடுத்த பின்பு கீழே விழுந்து கிடந்த உன் பணப்பையை அவாகள் கையிற் கொடுத்து உனக்குக் கொடுக்கும்படி சொன்னேன். அவர்கள் கொடுத்தாாகளா?"

"இலலே. தண்ணீர் அதை அடித்துக்கொண்டு போய்விட்டது என்ருாகள்."

"அந்தப் பைக்குள் இருநத என் கத்தியை நான் எடுத்துக்கொண்டேன். இதோ பார். தண்ணீரில் கிடந்ததால் இன்னம துருப்பிடித்திருக்கின்றது. நான் 'சொலவது மெய்யென்று இப்போதாகிலும் நம்புவாயா? சொல, கோர்வினு, உன் காலைச் சுற்றின பாமபுபோல் நான் இருந்தேனு?"

இதைக் கேட்டவுடன் கோர்வீனன் எதுவும் மறுத்துச் சொல்ல வாயின்றி, இந்த விசையும் பங்கிராஸ் தனது உதார குணமுள்ள தர்ம நடக்கையால் தன்னை ஜெயித்தான் என்று நினைத்து அவன்முன் நிற்க சக்தியின்றி, தலை கவிழ்ந்து, வெட்கி, முகம்வாடி, லாகிரி கொண்டவன் போல் தடுமாறி, வந்த வழியே நழுவிப்போனான். போகையில் வாயில் வந்தபடி எல்லாரையும் வைதான்: விநோத வேடிக்கையையும், அரசனையும், திரண்டு கூடிய ஜனங்களையும், தான் சவாரி செய்த வண்டியையும், தன் தகப்பனையுந் தன்னையுங் கூட சபித்தான். எல்லாரையுஞ் சபித்தவன் பங்கிராஸ் ஒருவனை மாத்திரஞ் சபிக்க அவன் நா எழவில்லை.

கோர்வீனன் கதவின் கிட்டச் சென்றபோது பங்கிராஸ் அவனைக் கூப்பிட, திரும்பிப பார்க்கையில் கோர்வீனன் முகத்தில் துக்கமும், பங்கிராஸ் மட்டில் ஓர்வித பூஜித வணக்கமும் இருப்பதாகத் தோன்றினது. செலவன் பங்கிராஸ் அவன் கையைப பிடித்துச் சொலவான்:

"கோர்வீனா! நான் உன்னை மனப்பூரணமாய் மன்னிக்கிறேன். ஆனால் சர்வ வல்லவரான அதி உன்னத சர்வேசுரன், உன் பாவங்களுக்காக நீ மனஸ்தாபப்படாவிடில், உன்னை மன்னிக்கமாட்டார். அவர் கிருபையாய் உன்னை மன்னிக்கும்படி பிரார்த்தித்துக்கேள். அப்படிக் கேளாவிடில நான் இன்று எவ்விதஞ் சாவேனோ அவ்விதமே நீயுஞ் சாவாய் என்பதை மறந்து போகாதே."

கோர்வீனன் வெட்கி நாணி, வெளியே போய், அடிபட்ட நாயைப்போல் ஒளிந்துகொண்டான். இந்த நாளிலே பங்கிராஸ் சிந்தும் இரத்தத்தைக் கண்ணாரப் பார்க்கி

ஆவலாய் பலநாள் தபஞ் செய்து காத்திருந்த அவன், தன் மனக்கவலையை மாற்ற வெறி எடுக்கு மட்டுங் குடித்து ஒரு மூலையிலே நாள் முழுதும் படுத்துக் கிடந்தான்.

இந்தச் சமயத்தில் சேவகன் ஒருவன் சிறையில் இருந்தவர்களைக் கூப்பிடும்படி வந்தான். இவாகள் எல்லாரும் இருவர் இருவராய் நடக்கும்போது சேவகன் பின் இருந்து சாட்டையால் அடிப்பான். கிறீஸ்துவர்களை ஒருவரொருவராகவுஞ், சில சமயங்களில், இரண்டு மூன்று பேராயுங் கட்டி மிருகங்களுக்குப் போடுவார்கள். ஒரோவிடத்துப் பெண்பிள்ளைகளை ஒரு வலைக்குள் சுற்றி மிருகங்கள் முன் உருட்டிவிடுவார்கள். ஜனங்களுக்கு எது பிரியமோ, எப்படிப் பிரியமோ, அப்படியே செய்து அவர்களுக்கு இஷ்ட பூர்த்தி செய்வார்கள். இத்துஷ்ட மிருகங்கள் சில சமயங்களிலே கிறீஸ்துவர்கள் மேல பாய்ந்து இரத்தத்தைக் குடித்து உடனே கொன்று போடும். வேறு சமயத்தில் ஒன்றுஞ் செய்யாமல தங்கள் துஷ்ட சுபாவத்தை மறந்து வெகு சாதுவாய் அவாகள் கால் அடியில் வந்து படுத்துக்கொள்ளும். நமது பாலிய போாவீரன பங்கிராசுக்கு நடந்ததை மாத்திரம் இங்கு விரிவாய்ச் சொலலுவோம்.

பங்கிராஸ் எல்லோருடன் வேடிக்கை காட்சி மாலுக்குப் போகும் பாதையில ஒரு மூலையில் சிபஸ்தியாரும் அவருடன் முக்காட்டுப் போாவையால் தன்னை முழுது மூடியிருந்த பெருமாட்டியும் நிற்பதைக் கண்டான். அவாகள் சமீபத்தில் வநதவுடன், அங்கிருநதவள் தன் இனிய தாயார் என்று அறிந்து அவள் முன் முழங்காலில் இருந்தான். தாயும் மகனுங் கடைசிவிசை சந்தித்தார்கள். கலவாரி மலையின் பாதையில் முன்னொருவிசை சந்தித்த தாயையும் மகனையும் இவ்விருவரும் நினைத்து தங்கள் மன

தைத் திடப்படுத்திக்கொண்டார்கள். பங்கிராஸ் தன்னைப் பெற்று வளர்த்து, அறநெறிப் பயிற்சியில் அணு அளவும் பிசகாதபடி கவலையாய்க் காப்பாற்றிய தன் பிரிய தாயின் கையை எடுத்துப் பக்தியாய் முத்தி செய்து சொல்வான் :

" அம்மா! என் இனியதாயே! நீங்கள் எனக்கு முன்னிதாய் அறிவித்த பாக்கியமான நாள் வந்தது. இப்போது எனக்கு உங்கள் கடைசி ஆசீர்வாதங் கொடுங்கள்."

அதற்கு லூசீனாள், அன்பும் அருளும் பொங்கும் மனதோடு தன் செல்வ மகனை மனங்கனியப் பார்த்துச் சொல்வாள் :

" மகனே, பங்கிராஸ், பார், அதோ மோட்சம். சேசுநாதர்சுவாமி அங்கே உனக்காகக் காத்திருக்கின்றார். சம்மனசுகளும் மோட்சவாசிகளும் உன் வருகைக்கு எதிர்பார்த்திருக்கின்றார்கள். மகனே! உன் ஆத்தும இரட்சணியத்துக்காக நன்றாய் யுத்தஞ் செய். உன் திவ்விய இரட்சகரின் சிநேகத்தில் பிரமாணிக்கந் தவராதவன் என்று காண்பி. சத்திய வேதத்துக்காக இரத்தஞ் சிந்தி மரித்த உன் பிரிய தந்தையை மறவாதே. உன் கழுத்தில் தொங்கும் அவர் இரத்தம் உனக்கு மனத்திடன் கொடுப்பதாக."

" அம்மா ! என் மதுரதாயே ! பயப்படவேண்டாம். இன்னம் ஒரு மணி நேரமாகுமுன், நீங்களே முன் சொன்னதுபோல், என் தந்தையின் இரத்தமும் என் இரத்தமுங் கூடிக் கலந்து சேர்ந்திருக்கும். இந்த சிமிழ் உங்களுக்கு இனி இருமடங்கு பிரியமுள்ளதாகும்."

சாட்டையைக் கையிலெடுத்துப்பின்னே வந்த சேவகன் பங்கிராஸ் நிற்பதைக் கண்டு அவன் முதுகில் சுரீர் என்று

அடித்துச் சொல்வான் : "அடா பயலே, நடந்து போடா, வழியில் உனக்கு என்னடா வேலை?"

வேதசாட்சியின் செல்வத்தாய் சற்றுப் பின்னிட, செபஸ்தியார் பங்கிராசின் கையை அன்பாய்ப் பிடித்து அவன் காதுக்குள் சொல்வார்: "பங்கிராஸ் என் பிரிய மித்திரா! தைரியமாயிரு. சர்வேசுரன் உன்னை ஆசீர்வதிப்பாராக. நான் அரசன் பின்னே அவன் சமீபத்தில் நிற்பேன். கடைசிவிசை அந்தப் பக்கமாய் நீ என்னைப் பார்த்து உன் ஆசீர்வாதம் எனக்குக் கொடுக்கவேண்டும்."

செபஸ்தியார் இப்படிச் சொலலும்போது, இவர் பின் நின்ற ஒருவன் கூளிப் பிசாசுபோல் கெக் கெக் என்று சிரிக்குஞ் சப்தங் கேட்டார். திரும்பிப் பார்க்கையில் தூண் மறைவில் நின்ற ஒருவனுடைய வஸ்திர மாத்திரந் தெரிநதது. யார் அவன் என்று அப்போது அவருக்குத் தெரியவில்லை. அங்கு மறைந்து நின்று சிரித்த பேயன் புல்வியன். செபஸ்தியார் கிறீஸ்துவன் என்பதை உருஜுப் படுத்த, இவன் தேடி வைத்திருந்த பல நியாயாதாரங்களுக்கு இது கடைசி முடிவான பலத்த ஆதாரமென்று நிச்சயமாய் அறிந்துகொண்டான்.

கிறீஸ்துவர்கள் எல்லாரையும் மிருகங்களுக்கு இரையாய்ப் போட்டபின் கடைசியில் பங்கிராஸ் முறைவந்தது. வேடிக்கை மாலின் நடு முற்றத்தில் பங்கிராஸ் நிற்க, இவனைச் சுற்றிலுங் கொடிய கோரரூபிகளான கொலைஞர் வந்து அவன் கைகால்களில் இருந்த விலங்குகளை நீக்கி அவனைத் தனியே விட்டார்கள். பங்கிராஸ் தன் கைகளை விரித்து சற்றும் அசையாமலும், இங்கும் அங்கும் திரும்பிப் பாராமலும் ஜெபம் பண்ணினான். துஷ்ட மிருகங்களை

ஒன்றுக்குப் பின் ஒன்ருய் இவன் மேல் ஏவிவிட்டார்கள். இவைகள் கர்ச்சித்து முழங்கி, பாய்ந்து குதித்து, பங்கிராஸ் கிட்டச் சேர்ந்தவுடனே, யாரோ அவைகளின் வாயைக் கட்டினற்போல், பின்னல் வெருண்டு மருண்டு போயின.

சூழநின்ற ஜனங்கள் பொங்கும் வெகுளியோடு இந்த விநோத நவத்தைப் பார்த்தார்கள். மிருகங்கள் பங்கிராசைச் சுற்றிச் சுற்றி கர்ச்சித்து, கண்களில் நெருப்புப் பொறி பறக்கப் பார்த்து, வாலைச் சுழற்றி இருபக்கமும் வீசி அடிக்க, இவனே ஏதோ ஓர் மாயாஜால சக்கரத்துள் இருப்பவன்போல் சற்றுங் கலங்காமல் நின்ருன். அதன் பின்பு மகா உக்கிரமுள்ள கொடிய ரிஷபமொன்றைப் பங்கிராசின மேல் தூண்டிவிட்டார்கள். இம்மிருகங் கோபாவேசமாய் விரிந்த தன கொமபுகளை கீழே தாழ்த்தி, தாண்டிக் குதித்து, பாலியன் சமீபம வநததும் பாறை மேல முட்டி மோதினதுபோல தடைபட்டு மறிபட்டு,மணலைத் தன் முன்னங் காலால் சுரண்டி, நாலுபக்கமும் இறைத்து, முக்காரத் தொனியோடு இடியோசைபோல் குமுறினது.

மாக்சீமியன் கோபவெறிகொண்டு கதறிச் சொல்வான்: "அடா, கதுலா, மூடப்பயலே, அந்தரிஷபத்தைச் சாட்டையால் அடித்து கோபமூட்டி, அவன் மேல் பாயும்படி தூண்டடா."

இதுமட்டுந் தியான யோகத்தில் பரவச நிலையில் நின்ற செல்வன் பங்கிராஸ், விழித்துப் பாாத்து தன்னைக் கொல்லும்படி ஏவிவிட்ட ரிஷபத்தைக் கண்டவுடனே இருகரங்களையும் விரித்து அதன் கிட்ட ஓடும்போது, அக்காட்டு மிருகம், தன்மேலே மிருகேந்திரனை சிங்க ஏறு

பாயவந்தாற்போல பயந்து ஓட்டம்பிடிக்க, வழியில் எதிரே நின்ற காவற்காரனை தன் கொம்புகளால் தூக்கி அப்பால் எறிந்து குகைக்குள் நுழைந்தது.

இவ்வாச்சரியத்தைப் பார்த்த ஜனங்கள் திகைத்துநிற்க, பங்கிராஸ் முன்போல ஜெபத்தியானத்தில் பரவசமாக, கும்பலிலிருந்து ஒருவன் சத்தமாய் இரைந்துபேசி, அதோ அந்தப் பாலியன் தன் கழுத்தில மந்திரஜால இரட்சாபந்தனங் கட்டி இருக்கிறுன், என்று சொல்லவே, ஜனங்களெல்லாரும இதெல்லா மந்திரவித்தை, மாயாஜாலம், என்று கூவ மாக்சீமியன் கடுங்கோபத்துடன் அதட்டிப்பேசி சொல்வான் .

" அடா ஜாலகாரா ! உன் கழுத்தில தொங்கும் அந்த இரட்சாபந்தனத்தை நீயா அவிழ்த் தெறிவாயா, அல்லது நான் அது தானேகீழே விழும்படி செய்யட்டுமா ?"

அபபோது பங்கிராஸ் யாழிசைபாடும இனிய குரலோடு பேச, அவன பேசின சப்தம கிணுணென்றுெலிக்க, அவ்விசாலமான வேடிக்கை மண்டபத்தில கூடியிருந்த இலட்சம் ஜனங்களும நிசப்தமாயிருந்து கேட்டாாகள் :

" ஓ இராஜனே ! என் கழுத்தில தொங்குவது மநதிர ஜால இரட்சா பநதனமலல. என் பிரியதந்தையின் ஞாபக அறிகுறி. அவா இதே இடத்தில சத்திய வேதத்துக்காகத் தமது இரத்தத்தைச் சிந்தி உயிரைக் கொடுத்தார், நான் கிறீஸ்துவன். சேசுக்கிறீஸ்துநாதர் சுவாமி தேவனுமனுஷனுமொன்றுன என் ஆண்டவர். அவருக்காக நான் என் ஜீவனைச் சந்தோஷமாய்க் கொடுப்பேன். என்னிடமிருக்கும் இந்த பிதிரார்ச்சித பொக்கிஷததை எடுக்கவேண்டாம். இது நான் சிந்தும் இரத்தத்தால் மேன்

மை பெற்று இன்னொருவர் வசமாகவேண்டிய பொருள். மகா இராஜா ! இன்னொரு விசை துஷ்ட மிருகத்தை என் மேல் பாயவிடச் சொல்லும். என் பிரிய தகதைக்கு மோட்ச வாசலைத் திறந்த மிருகம் ஓர் வேங்கை. அதுவே எனக்கும் மோட்ச வாசலைத் திறக்கலாம்.”

பங்கிராஸ் பேசி முடியவும் எங்கும் ஏக மௌனம் பூரணமாய் நிறைந்திருந்தது. அங்கு கூடியிருந்த ஜனங்களின் கல்நெஞ்சு சற்று இளகினதாகத் தோன்றியது. அங்க இலக்ஷண வடிவுள்ள சௌரிய பாலியன் நின்ற பரவசநிலையும், அவன் முகத்தில் சுடா விட்டெரிந்த மோக்ஷானந்த பிரகாச காந்தியும, யாழிசை தொனியினும் இனிமையும், மலரினின்றிழியுந தேனினும மதுரமும், நிறைந்த அவன் குரல் சப்தமும், அவன் வணங்கி ஆராதித்து வழிபடுஞ் சுவாமியின் பேரில் அவன காட்டிய பக்தி விசுவாசமும், ஆகிய இவையாவும் அந்த மூட ஜனங்களின மனதைசற்று இளக்கின. பங்கிராஸ் இமமாற்றத்தைக் கண்டு அஞ்சினன். அன்றே தான் மோட்சத்துக்குப் போவதாய் ஆவலுடன் நம்பி இருந்தபின் அவன் ஆசைப் பிரதிகூலமாய் முடியவோ ? தன் இருகரங்களையு முன்போல விரித்து, கண்களிலிருந்து தண்ணீா ஓடி வர, தன் மனதின் பெருந துயரத்தைப் பின் வருமாறு பாடிப் புலமபுமபோது, சூழ இருந்த ஜனங்கள் மனங்கனிய கேடடாாகள்.

1. தானாய்த் தனியே உலகாளுஞ் சர்வேஸ்பரனே தனிமுதலே!
ஞானந் தயையும் அருள் அன்பும் நலங்கள் யாவு நிறை
[வோனே !

வானம் அதிலே நான் சேர வரம் நீ தரவே இது நாளே
ஆனதாலே தயைசெய்து அடியான் வரவே அருள்வாயே.

2. உன்றன் வரம்பில்லா ஞானம் ஒப்புமில்லா வல்லமையை
என்றன்பால் நீ காட்டினையே ஏகாதிரித்வா உனை ஸ்துதித்
[தேன்;

குன்று உனது சத்யமறை குடைக்கீழ் எல்லோர் நிதம் வாழ
இன்றே என்னை ஓர் பலியாய் இறைவா நேர்ந்தேன் ஏற்
[பாயே.

" ஓ வேங்கை, வேங்கை, " என்று ஒருவன் பெருங் குரலோடு சொல்ல, " வேங்கை, வேங்கை " என்று நூறு பேர்கள் இணைந்து பேசி முழங்கிக் கூவ, "வேங்கை, வேங்கை" என்று நூறாயிரம் ஜனங்கள் மலையின்கொடு முடி, நிலைபெயர்ந்து உருண்டு பிரண்டு விழுவதுபோல் சப்தித்தொலிக்கக் கூப்பிட்டார்கள். உடனே நடு முற்றத்தின் அடியிலிருந்து இருப்புக்கூடு ஒன்று மந்திரமாயத்தால் வந்தாற்போலத் தோன்றினது. கூடு வெளிப்பட்டதும், அதின் நாலு பக்கத்துக் கதவுகளுந் தாமே திறந்துபோக அதற்குள் அடைபட்டிருந்த கொடும் வேங்கை தாவித்தாண்டிக் குதித்துக் கொண்டு வெளியே பாய்ந்தது. இதுமட்டும் இருப்புக்கூட்டில் சாப்பிட இரை இன்றி இருண்ட குகைக்குள்ளே அடைபட்டிருந்ததால், கோபாக்கினி நிறைந்திருந்தாலும், மணல் தரை முற்றத்தில் வந்ததும், தன் துஷ்ட சுபாவத்தை மறந்ததுபோல நாலு திசையிலும் தாவிக் குதித்து தாண்டிப் பாய்ந்து சப்தமின்றி ஓடி ஆடி விளையாண்டது. கடைசியில் தனக்கிரையாய் நின்ற செல்வ பாலியனைக் கண்ணுற்றது. கண்டதும் அம்மிருகஜாதிக்கியல்பாயுள்ள கபடுங் கொடுமையுந் துஷ்ட சுபாவமுந்திரும்பி வர, எலியைக் கண்ட பூனை பதுங்கி, ஒளிந்து வருவது போல், வேங்கையும் பதுங்கிப் பதுங்கி, நாலு பக்கமுஞ் சுற்றிச்சுற்றி, முன்னங்காலை மெதுவாய்த் தூக்கி வைத்

தும், தலையைத் தரையில் ஊன்றி நின்றும், சப்தமின்றி எழுந்து தாவி இடத்தை மாற்றியும், வரும்போது மேலே இருந்த ஜனங்களெல்லோரும் நிசப்தமுடன் கண் இமையாமல கருத்தாய்ப் பார்த்திருக்க, அநத விசாலமான வேடிக்கை மால் வனவாசி இருக்கும் தனிவாசமான குகைபோல் தோன்றினது.

பங்கிராஸ் தானிருந்த இடத்திலே அரசனுக்கு எதிரே அசையாது நிற்கையில, அவன் கருத்தும எண்ணமும் மோக்ஷானந்த பாக்கியத்தின்மேல் ஊன்றியிருந்ததால, தன்னைச் சுற்றி பதுங்கி வநத வேங்கையைக் கவனிக்கவில்லை. கொடிய வேங்கை அங்கு பலியாய் நின்ற வேதசாட்சியின் மேலே பின் நினறு பாய்வது கௌரவக் குறை என்றதுபோல் அவன் முன்னே வந்தது. வந்த மிருகம் மார்போடு நகர்ந்து, காலமேல் கால மெதுவாய் எடுத்து வைத்து, தாண்டிப் பாய்வதற்குத் தனக்கு இசைவான ஏற்ற தூரத்தில் வந்து, சற்றுநேரம் மூச்சுவிடாமல் நின்ற நிலையிலிருந்தது. அதன்பின்பு உறுமிக் கர்ச்சித்து, மின்னலைப்போல் பளிச்சென்று ஒரு நொடியில தாண்டிக் குதித்து, பங்கிராசின் மேல் பாய்ந்து, தன் முன்னங்கால இரண்டையும் வேத சாட்சியின் மாரபில ஊன்றி அவன் மிடற்றை வாயால் கவ்விப் பிடித்தது.

பங்கிராஸ் ஒரு நிமிஷம் அசையாமல் நின்று, தன் வலதுகையைத் தூக்கி வாய்க்குக் கொண்டு வந்து, சிபஸ்தியரை அன்பாய்ப் பார்த்து ஒரு முறுவல் கொட்டி, அதன் பின் தன் கையை வாயினின்றெடுத்து இவவிதமாய் தன் கடைசி முத்தங் கொடுத்து கீழே விழுந்தான் அவன் கழுத்தில ஓடின இரத்த நாமபுகள் அறுபட்டன கீழே விழு

ந்த செல்வன் பங்கிராஸ் கண்விழி இதழ்களில் வேதசாட்சியின் நித்திய சமாதான நித்திரை அமைந்து தங்கினது. நதிப்பிரவாகம்போல் வடிந் தோடிய செல்வமகனின் இரத்தம், அவன் கழுத்தில இவன் தாயார பாக்கியவதிபோட்ட சிமிழிலிருந்த தந்தையின் இரத்தத்தோடு, கலந்து கூடி இரண்டும் இளகிச் சேர்ந்து, தங்கம் பொன்னிலுமிக்க சிரேஷ்டமாய் மேன்மை பெற்றொளிர்ந்தது. தாயார் நேர்ந்து கொடுத்த தன் உயிருக்குயிராம் பலியை தயையுள்ள சர்வேசுரன் கிர்பையாய் ஏற்று அங்கீகரித்தார்.

---

## ௰அ-ம். அதிகாரம்.

### கிறீஸ்துவப் போர்வீரன்.

---

செல்வ பாலியன் பங்கிராஸ் வயதில இளைஞனாயினும் அறநெறி ஒழுக்கத்தில் மூதறிவுளனாய்ச் சிறந்து விளங்கி, அஞ்சாமனத் துணிவுடனே சத்திய வேதத்தின உண்மைக்காகப் போராடி, இரததஞ் சிந்தி உயிரைப் பலியாய்க்கொடுத்து வேதசாட்சியின முடிபெற்று, இப்போது திருச்சபையில் அர்ச்சியசிஷ்டருக்குரிய பூஜித வணக்கம் பெற்று வருகின்றார. அவர் பிரேதம் க்ஷேமமான இடத்தில் பிற்காலத்தில் அலங்காரமான கோவில கட்டப்பட அதில் அவருடைய வணக்க ஸ்துதி இதுகாறும் நடந்தேறி வருகின்றது.

இவர் மரணமானதின் பின்பு வேதகலகம் முன்னிலும் அதிக உக்கிரமாய்ப் பொங்கி எழும்பினதால், நாம் இந்நூல் வாயிலாய அறிந்த அநேகம் பேர்கள் வேதசாட்சிகளாகும் பாக்கியம் பெற்றார்கள். குரோமாசியின் கிராமத்திலிருந்தவர்களில் பலர் பிடிபட்டு இறந்தார்கள். ஊமை

யாயிருந்து குணம் அடைந்த ஜோயே அம்மாளும், அவள் பத்தாவும், அவர்கள் வீட்டார் மூன்று பேர்களும், கிரான் குயிலீனனும அவன பிள்ளைகளும, இன்னும் அநேகம் பேர்களும் பிடிபட்டு கொடிய வேதனை அனுபவித்து உயிரைப் பலியாய்த் தந்தார்கள்.

இப்படி நிஷ்டூரமாய் கிறீஸ்துவர்களை உபாதித்த துன்ப இடையூறுகள் மததியில் சிபஸ்தியார், போர்க்களத்தில் அணி அணியாய வகுக்கப்பட்ட பெருஞ் சேனையை நடத்தும் பராக்கிரமமுள்ள தளபதிபோல, கடைசியில் தமக்குப் பூரண ஜெயம வருமென்ற தளரா நமபிக்கையோடு இருந்தார். தாம மோட்சததுக்கு அனுப்பினவாகள் எல்லாரும், பூமியில இருக்குந் தங்கள் சகோதரருக்காக சாவேசுரனிடத்தில பிரார்த்திப்பாாகள் என்று எண்ணி இருந்தார. முக்கியமாய்த் தமது பிரிய நணபன் பங்கிராசைப் பற்றிப் பலமுறை நினைப்பார. அவருடைய மாசற்ற ஒழுக்கமும, மனத்திடனுந, திடநத குணமுஞ், சௌரிய வீரமும், சிறந்த யௌவன பருவமும், எலலாம் சிபஸ்தியார ஞாபகத்தில் வர, அவரைத் தாம இப்போது தமது கண்ணுற் காணுவிடினும, அவா மோட்சத்தில இருந்து தம்மையும் மற்றவாகளையும மறவாமல் சாவேசுரனிடம பிரார்த்திப்பார என்றும, அவருடைய ஜீவியத்தின சிறநத தர்ம ஒழுக்கம மற்றவர்களுக்கு ஓா மேல வரிச் சட்டம்போல் இருக்குமென்றும், அதினிமித்தம பங்கிராஸ் மரித்தவராயினும், உயிர் உள்ளவர்போல எல்லாருக்கும் உறுதியுந் துணையும் ஆறுதலுமாய் இருப்பாா என்றும், நம்பி இருநதார்.

செல்வன் பங்கிராஸை சிபஸ்தியாா ஒரு காவல் தூதன் போல் வெகு கவலையுடன் பராமரித்துக் காப்பாற்றி மோ

ட்சத்துக்கு அனுப்பிய பின்பு, இனித் தானும் சத்திய வேத த்துக்காக இரத்தஞ் சிந்தி மரிக்கும் பாக்கியம தனக்கு அதிசீக்கிரத்தில் வருமெனறு அந்த நாளுக்கு ஆவலோடு காத்திருந்தார். தமக்கு இருந்த சொத்துகளை அதிகாரிகள் அபகரித்துப் பறிமுதல் செய்யு முனனே தாமே அவைகளை எல்லாம் எளியவர்களுக்குத் தர்மமாகக் கொடுத்துவிட்டார்.

உளவஞன புல்வியன் வேத கலக காலத்தில் பணம் ஏதேஷ்டமாய்க் கொள்ளை அடிக்கலாமெனறு எண்ணி இருந்தாலும் அவன் எண்ணியபடி பணம் வநது குவியவில்லை. ஆகிலும் இராஜ சேனையின் அதிபதி, கிறீஸ்துவன் என்று காட்டிக்கொடுத்தால அவரிடத்தில இருக்குந் திரண்ட ஐசுவரியத்தில தனக்குப் பெரும பாகம வருமென்ற மனப்பால் குடித்து வநதான.

இவன் ஆசைக்கு இசைவாய் ஏற்ற சநதர்ப்பமும ஒன்று வாய்த்தது. சமீபத்தில இராஜ சமஸதான உத்தியோகஸ்தர்கள் ஏதோ ஓா முக்கிய விசேஷம நிமித்தஞ் சபா மண்டபத்தில வந்து கூடினார்கள். இவாகளோடு கூட புல்வியனும் வநதிருந்தான். மாக்சீமியன புல்வியனைப் பாாத்தவுடனே, பகை மூட்டி வளாக்கும் நரிக்குட்டியைக் கண்டாற்போல, கோபித்து நிநதிக்கும்போது; புலவியன் சற்றுத்துணிவோடு இராஜ சமுக முன வந்து ஒரு முழங் காலைத் தரையில் ஊனறி வணங்கிச் சொல்வான் :

“ ஓ! இராஜேந்திரனே ! நான் என் அலுவலைச் சரியாய்ச் செய்வதில்லையென்றும் என்னாலே தாங்கள் பொக்ஷத்துக்குப் பணஞ் சேரவில்லையென்றும் பலமுறை என்னைக் கடிந்து பேசி திட்டி இருக்கிறீர்கள். ஆனால் தங்களது

தேவத்துவ மகத்துவத்துக்குச் சமீபத்திலே அக்கிரம மான பெருந்துரோகம் ஒன்று இருப்பதாக நான் அறியலா னேன்."

இதைக் கேட்ட இராயன் பொங்கின வெகுளியோடு அதட்டிப்பேசி சொல்வான்: "அடா மூடா! என்னடா உன் வாய்க்குள்ளே முறுமுறுக்கிறாய். தெளிவாய்ப் பே சுவாயா, இல்லாவிடில் ஓர் குறடுகொண்டு உன் வாயக்கு ள்ளிருக்கும் வார்த்தைகளை ஒவ்வொன்றாய்ப் பிடுங்கச் செய்யவோ?"

புல்வியன் எழுந்து அரசன் பக்கத்தில நின்ற சிபஸ் தியாரைச் சுட்டிக் காட்டி சொலவான்: "மஹா இரா ஜா! அதோ தங்கள் பக்கத்தில நிற்கும தளபதி சிபஸ்தியார் கிறீஸ்துவன்."

அரசன இடியோசை கேட்ட நாகம்போல திடுக்கிட்டு கலங்கி கோபாவேசமாய்க் கணகளிலிருந்து அக்கினி கக்கி புலவியனை உறுக்கி நோக்கிச் சொல்வான:

"அடா புலவியா, மதிகேடா, நமது பராக்கிரம சே னுபதிபேரில் நீ சொலலும அவதூறு மெய்யென்று உருஜு வாக்காதே போனால், நாம உன்னை எவனையும் பாடு படுத் தாத வகையாய், சித்திர வதைசெய்து கொல்லுவோம்."

புல்வியன் இராயன் கிட்டப்போய் தான் வைத்திருந்த ஒரு பத்திரச் சீட்டைக் காண்பித்து "மகா இராஜனே! நான் சொல்வது மெய்யென்று உருஜுப்படுத்த போது மான நியாயாதாரங்கள் இருக்கின்றன," என்று சொல்ல, மாக்சீமியன் அவனைக் கோபித்துத் துறத்தப் போகுஞ் சமயத்தில், சிபஸ்தியார் சற்றுங்கலங்காமல், கௌரவ மே னமை முகத்தில் துலங்க, அரசன் முன வந்து பதறற மின்றி சாதுவாய்ப் பேசிச் சொல்வார்:

"அரசனே! தாங்கள் உருஜுவைத்தேட அவசியமில்லை. நான் கிறீஸ்துவன். கிறீஸ்துவனாயிருப்பது என் பாக்கியம்."

மாக்சீமியன் போர்க்களத்தில் சமர்த்தனாயினும், படிப்பில்லாத அறிவிலி ஆதலால் உரோமானர் பாஷையை சாதாரணமாய்ப் பேசும்போதும் திருத்தமாய்ப் பேசமாட்டாதவன், கோபாவேசமாய்ப் பதறி உதறும்போது, வார்த்தைகள் தொடர்பின்றி வர, இழிமொழிச் சொற்களை நடுவிற் கூட்டி வெகு விகாரமாய்ப் பேசுவான். இவ்வித ஸ்திதியிலிருந்தவன் சிபஸ்தியாரை வாய் கூசாமல் வைது ஏகதேசமாய்ப் பேசி, சகலவகையான அக்கிரமங்களும் அவர் செய்ததுபோல் அவரைத் துரோகியென்றும், பழிகாரனென்றும், பாதகனென்றும், வஞ்சகனென்றும், இப்படிப் பலவாறாய்க் கோபித்துச் சொல்லும்போது, இரணவீரசூரன், முன் எவ்விதம் யுத்தகளத்தில் படையின் முதல் அணியிலிருந்து, போர்வீர ஆண்மையோடு, சத்துருக்களை எதிர்த்து நின்றாரோ, அவ்விதமே மாக்சீமியன் பேசி முடிக்குமட்டுஞ் சற்றும் அசையாமல் நின்ற நிலையில் இருந்தார். அதன்பின்பு அஞ்சாத் துணிவுடன் சொல்வார் :

"மகத்துவ இராஜனே! நான் சொல்வதைப் பதறாமல் கேளுங்கள். சிலவிசை இதுதான் நான் கடைசிவிசை பேசுவதாக்கும். நான் கிறீஸ்துவன் என்றேன். அதுதான் தங்களது ஜீவனை இதுமட்டுங் காப்பாற்ற ஏற்ற சாதனமாய் இருந்தது."

"அடா! நன்றிகெட்ட துரோகி! என்ன சொல்லுகிறாய்?"

"நான் சொல்வது இதுதான் : இராஜனே ! தங்களது ஜீவனைக் காப்பாற்றும்படி பிரமாணிக்கந் தவறாத மெய்க் காவலரான போர்வீரர் தேவையாகில், சிறைக்கூடங்களில் விலங்கு மாட்டி கட்டப்பட்டுக் கிடக்குங் கிறீஸ்துவர்களை யுங், கூர்மையுள்ள ஆணிகள் அழுத்திய சக்கரங்களில் சுழற்றப்பட்டு சரீராதி எங்கும் ஏக காயமாய் அவஸ்தை யாய்க் கிடப்பவர்களையும், வேடிக்கை மாலில் துஷ்டப் புலிகளால் கடியுண்டு குற்றுயிராய்க் கிடப்பவர்களையுங், கூட்டிச் சேர்த்து, இவர்கள் தங்கள் காலை ஊன்றி நிற்கும் படி வேண்டிய பலன் தந்து, இவர்கள் கைகளில் ஆயுதங் களைக் கொடுத்து, உங்களைச் சுற்றிலும் மெய்க்காவலராக இவர்களை நியமித்தால், இந்த அறை குறையான தேகமு ள்ள கிறீஸ்துவப் போர்வீரர், உரோமானர் இராணுவத்தி லுள்ள எந்த ஜாதிப் போர்வீரரைப் பார்க்கிலும் அதிக பிர மாணிக்கத்தோடும் இராஜ பக்தியோடும் அரசன் உயிரைக் காப்பாற்றி, அவசியமானால் தங்களுடைய இரத்தத்தைக் கடைசி துளி மட்டுஞ் சிந்தப் பின்வாங்கார்கள். தங்கள் தேகத்தில் இருந்த பாதி இரத்தத்தைச் சிந்தின பின்பு, மீதியாயிருக்கும் பாதி இரத்தத்தையுந் தங்கள் அரசனுக் காகச் சிந்தத் தயாராய் இருப்பார்கள்."

"எல்லாம் பொய், சுத்த அபத்தம். கிறீஸ்துவர்களை என் மெய்க்காவலராய் வைப்பதைப் பார்க்கிலும் புலிகளை யுங் கரடிகளையும் வைப்பேன். உன் துரோகமே இதற்கு திருஷ்டாந்தம்."

"இராஜனே! என் அரசனுக்குத் துரோகஞ் செய்யும் படி நான் எத்தனித்திருந்தால், அப்படி இதுமட்டு நான் செய்யாதபடி என்னைத் தடுக்கக் கூடியதென்ன? தங்க ளுடைய இராஜ சமுகத்தில் இரவும் பகலும், எந்த வேளை

யிலும் நான் வரவில்லையா? எப்போதாவது தங்களுக்கு நான் துரோகம் நினைத்ததுண்டா? ஓ அரசே! தங்கள் ஊழியத்தில் என்னைப்போல் பிரமாணிக்கந் தவராதவன் வேறெவனுமில்லை. ஆனால் தங்களைப் பார்க்க அதி உன்னத மகத்துவமுள்ள இராஜன் ஒருவர் இருக்கிறார். தங்களுக்கும் எனக்கும் அவரே நியாயாதிபதியாய் இருந்து தீர்ப்புச் சொல்லுவார். தங்கள் சட்டத்தைப் பார்க்கிலும் அவருடைய நீதிப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படிவது எனது கடமை."

"அப்படியானால நீ கிறீஸ்துவன என்பதை ஏன் மறைத்து வேஷம் போட்டு வந்தாய்? கிறீஸ்துவர்களுக்கு விதித்திருக்குங் கொடிய சாவுக்கு நீ பயந்தல்லவா இப்படி நடந்தாய்?"

"மகா இராஜா! அதற்கல்ல. நான் எப்படித் தங்கள் ஊழியத்தில் பிரமாணிக்கமுள்ளவனோ, அப்படியே அஞ்சாத்துணிவுள்ள போர்வீரன் என்பது தங்களுக்கு நன்றாய்த் தெரிந்த விஷயம். என்னைச் சேர்ந்த கிறீஸ்துவர்களான சகோதரர்கள் அநேகம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு உறுதியும், பலனும், மனத்திடனும், ஆறுதலுந் தரும்படி அவர்கள் மத்தியில் நான சிலகாலம் இருப்பது அவசியமென்று தோன்றினது ஆனால இன்று புல்வியன் நான் கிறீஸ்துவன் என்று அறிவித்ததால், இதோ மனப்பூரணமாய் சத்திய வேதத்தின் உண்மைக்குச் சாட்சி சொல்ல வந்திருக்கிறேன்."

"நல்லது. உனக்குச் சாவின் தீர்ப்பு நாமே சொல்வோம். அந்தச் சாவுங் கொடுமையுடன், பயங்கர ரூபமாய், உன்னைப் பிடித்து உன் உயிரை அணு அணுவாய்

உண்ணும். ஆகிலும் (இராயன் தனக்குள்ளே பேசுவது போல் சொல்லி) இந்த விஷயம் பயிரங்கமாகாதபடி அந்த ரங்கத்தில் செய்வது யுக்தம். இராணுவ சேவகர் முரண் கொண்டு எழும்பி கலகஞ் செய்யலாம். ஓ குவாத்ராத்துஸ்! உன் சேனைத் தலைவன் சிபஸ்தியான், கிறீஸ்துவனும். இவனைப் பிடித்து விலங்கு மாட்டி காவலில் வை. அடா முட்டாள்! என்னடா பேதை போல் விழிக்கிறாய்? நாம் சொன்னது உன் காதில் விழுந்ததா? அசைந்து நடடாதடியா?"

" இராஜனே! நானுங் கிறீஸ்துவன்."

கிறீஸ்துவன் என்பதை மாக்சீமியன் கேட்டதும் பொங்கிய கோபவெறியோடு தூஷணங் கக்கி, வசை கூறி, இராக்ஷஸ போர்வீரனை வெளியே இழுத்துப் போய், தாமதமின்றி, உடனே தன் கண் முன்னே தடியால் அடித்துக் கொல்லும்படி கட்டளை இட்டான். சிபஸ்தியாருக்கு வேறு வகையான ஆக்கினை விதிக்க எண்ணியிருந்ததால் ஓர் சேவகனைக் கூப்பிட்டு, நுமீதியரான விற்போர்வீரரின் தலைவன் அபாக்யனை தக்ஷணமே கூட்டி வரும்படி அனுப்பினான். அபாக்யனும் இராஜசித்தம் அறிந்தவுடனே ஓடி வந்து, இராஜ மகத்துவத்துக்குத் தண்டஞ் சமர்ப்பித்து ஏவல் பணிக்குக் காத்து நின்றான்.

அரசன் முன் நின்ற அபாக்யன், ஆபிரிக்கா தேசத்தில் இருந்து உரோமானர் சேனையிற் சேவிக்கும்படி வந்த விற்போர் வீரரின் தலைவன். ஸ்தூலித்த தேகமும் அதற்கேற்ற வளர்த்தியுமுள்ள இராக்ஷஸப் பிறவி. அச்சம் உறுத்துங் கோர ரூபமுள்ள எமகாதகன். இடுப்பில் சுற்றி இருந்த ஓர் துணி தவிர வேறு வஸ்திரமின்றி, கையில் நீண்ட பாரி வில்லும், இடையில் பலவர்ணச் சிறகுகளால்

சிங்காரம் பெற்ற அம்புக்கூடும், கட்டாறியும், சமுதாடும் ஆகிய இவ்வித ஆயுதபாணியாய் வந்து இராஜன் முன் நின ஞன்.

இவ்வித இலக்ஷணங்கள் அமைந்த பெரும் மிலேச் சனை அரசன் பார்த்துச் சொல்வான் :

"வீர அபாக்யா! நாளை அதிகாலையில் உனக்கு ஓர் அலுவலிருக்கின்றது. அதை அறைகுறையின்றி நீ செய்ய வேண்டும்."

விலவீரன் தந்தம்போன்ற தன் பற்களை எல்லாம் வரி சையாய்க் காட்டி, தலையை அசைத்து, மகா இராஜா! தங் கள் சித்தம், என் பாக்கியம், என்று வணங்க, மாக்சீமியன் சொல்வான் :

"வில்வீரா! அதோ நிற்கும சிபஸ்தியான், நமது சே னைத்தலைவன், உனக்குத் தெரியுமலலவா?"

தெரியும் என்பதின் அடையாளமாக அபாக்யன் தன் தலையை அசைத்து ஆட்டினன்.

" இந்த சிபஸ்தியான் கிறீஸ்துவனும்."

கிறீஸதுவன் என்பதைக் கேட்கவும், அபாக்யன், அடைகாக்கும் நாகத்தைத் தெரியால் தலையில் மிதித்தார் போலும், கொள்ளித்தேளை அறியாமல் கையிற் பிடித் தாற் போலுந் திடுக்கிட்டு நடுங்கினன். அவலக்ஷண கோர ரூபங்களைத் தெய்வமாக சமைத்து வணங்கியும், எவ்வித அசுத்த மோக லீலைகள் அடங்கிய கதாப் புராணங்களை வேதாந்த மறைநூலென்று தலைமேல் தூக்கி வைத்தும், பழி பாவத்துக்கு அஞ்சாமல் எவ்வித துர்மார்க்கத்திலும் பன்றிபோல் உழன்றும், நிஷ்டூர துஷ்ட செய்கைகளைச் சதாச் செய்தும் வந்த இம்மிலேச்சன், தன் சமீபத்தில்

ஒரு கிறீஸ்துவன் நிற்பதாகக் கேட்டவுடனே பரம யோக்கியன் போல் பதறித் துடித்தான் !!!

அரசன் செபஸ்தியாருக்கு எவ்வித ஆக்கினை இடவேண்டுமென்று சொல்லும்போது, அபாக்யன், பாட்டுக்குத் தாளம் போட்டாற்போல், ஒவ்வொரு வார்த்தைக்குந் தன் தலையை அசைத்து வந்தான. அரசன் சொல்வான் :

" அபாக்யா, கேள். செபஸ்தியானை உன் இனத்தார் இருக்குந் தெருவுக்குக் கூட்டிபபோய், நாளை அதிகாலமே—நன்றாய் நாஞ் சொல்வதைக் கேள்—நாளை, இன்று அலல, ஏனென்றால் நீயும் உன்னைச் சேர்ந்தவர்களும் இன்று சாயராட்சை குடி வெறியில் இருப்பீர்கள்—நாளை அதிகாலமே, உன் சேவகர் சித்தஸ்வாதீனத்தோடிருக்கும் போது, உங்கள் தெருவின் சமீபத்தில் இருக்குஞ் சோலைக்குள் இவனைக் கூட்டிப்போய் மரத்தோடு சேர்த்துக்கட்டி, அமபுகளால் இவனை ஆத்திரமின்றி மெதுவாய் எய்து கொல்லவேண்டுமட. கூர்மையுள்ள அமபுகளை இவன் தலையிலாவது நெஞ்சிலாவது எய்து ஒரு நிமிஷத்தில் கொல்லாதே. சரீரத்தில உயிர நிலையான இடங்கள் தவிர மற்ற இடங்களில பல அம்புகளை எய்து, இவன் தன் இரத்தமெல்லாந் துளித் துளியாய்ச் சிந்தி, உயிர இமமி அளவாய்ப் போகவேண்டும். நாம சொலவது இன்னதென்று உனக்கு விளங்குதா? நல்லது, உடனே இவனைக் கூட்டிப்போ. அபாக்யா! இவையெல்லாம் வெகு அந்தரங்கமாய் இருக்க வேண்டும். இல்லாவிடில பட்டணத்தில் பெரும்......அதிருக்கட்டும். நீ போய் உன் அலுவலை ஜரூராய்ச் செய்."

## ௰௯-ம் அதிகாரம்.

### சிறை மீட்சி.

சிபஸ்தியார் கிறீஸ்துவனைகப் பிடிபட்டு மறுநாள் காலையில் அம்பால் எய்து கொல்லப்படுஞ் சங்கதி இரகசிய மாய் இருக்கும்படி எவ்வளவு முயன்ற போதிலும், அது எப்படியோ அரண்மனை வேலையைச் சேர்ந்த சகலருக்கும் அன்றே விசதமானது. இச்சங்கதியை அறிந்தவர்களில் பபியோலாவைப் போல் திகைத்து திணறி துக்கத்தில அமிழ்ந்தி நின்றவர்கள் வேறொருவருமில்லை. அவள் மன தில் பலவாறுன யோசனைகள் வந்து மொய்த்தன :

"சிபஸ்தியார் கிறீஸ்துவரா? இது நம்பக் கூடியவிஷ யமா? உன்னத கௌரவ மேன்மையுஞ், சிறந்த அறிவுந, தீக்ஷண்ணிய பத்தியும், நிறை தவரா ஒழுக்கமுமுள்ள அந் தப் புருஷோத்மன், கிறிஸதுவர்களான இழிகுலத்தாரின் நீச மதத்தில் சேர்ந்தவராவாரா? ஆகிலும் இது மெய் என் பதாய்த் தோன்றுகின்றது.

"அப்படியானல், அவர் வெளிக்கு மாத்திரம் யோக் கியதை உள்ளவாபோல வேஷம் போட்டு நடித்து வந்தவ ராய் இருப்பாரோ? அவரிடத்தில் விளங்கிய நற்குணம், நற் செய்கைகள், அறநெறி ஒழுக்கம், எலலாம் வீண் கோல மோ? சீ! இப்படி சிபஸ்தியாரைப்பற்றிக் கனவிலும் நினை ப்பது தோஷம். அவர் எதார்த்த நடக்கையுள்ளவர் என் பதற்கு ஆயிரந் திர்ஷ்டாந்தங்கள் நான் என் கண்ணுலே பார்த்திருக்கிறேன். அவர் சுயமான நல்ல தங்கமே அன்றி வெறும் பொற்பூச்சு அல்ல.

"இது வாஸ்தவமானல், கிறீஸ்துவ மதத்தைச் சேர் ந்தவன் எப்படி இவ்வித கௌரவ மேன்மையுந் தர்ம குண

முழுள்ளவனாய் இருக்கலாம்? பிரகாசமும் இருளுங் கூடி வாழுமோ?''

இவ்விதந் தனக்குள் யோசிக்கும்போது அவள் மனந் தாமரை இலைத் தண்ணீர்போல் தளம்பிக் கொண்டிருந்தது. சிபஸ்தியார் கிறீஸ்துவனாய் இருந்ததின் நிமித்தமே இவ்வளவு சிறந்த நற்குணம், நற்செய்கை உள்ளவராய் இருக்கக்கூடும் என்பது ஒன்று மாத்திரம் பபியோலாவின் புத்தியிற்படவில்லை. இன்னம் விபரீதமான பலயோசனைகள் அவள் மனதில் வந்தது:

“மாஜி நகராதிகாரியோடு நான் பேசிக்கொண்டிருந்த காலத்தில், அவர் சொன்னதுபோல கிறீஸ்துவர்களின் வேதம நான் அறிந்திருப்பதற்கு முழுதும் விரோதமாய் இருக்கலாம். அவர்கள் வேதம் இபபடிப்பட்டதென்று நானே படித்து அறியாமல், அம்மத விரோதிகள் சொல்வதை மெய்யென்று நம்பி அமமதத்தை இழிவாய்ப் பேசுவது என் புத்திக்குச் சரியென்று தோன்றவிலலை. கிறீஸ்துவர்கள் பழி பாவத்துக்கு அஞ்சாத துரோகிகளென்று இந்த ஜனங்கள் சொல்லுகிறார்கள். ஆகிலுஞ் சிபஸ்தியாரிடம் விகாரமானது யாதொன்று நான் கண்டதே இல்லை. சில விசை எங்கள் மதத்தில், மேன குலத்தாருக்கு நாகரீக விர்த்திபெற்ற மதமும, இழிகுலத்தாரான சமானிய ஜனங்களுக்கு தூர்க்கந்த அவலெட்சணமுள்ள மதமும இருப்பதுபோல், கிறீஸ்துவர்களிடத்திலும் இரண்டு வகையான மதங்கள் உண்டோ? அப்படியானல் சிபஸ்தியார் மேன் குலத்தார் மதத்தைச் சேர்ந்தவராய் இருக்கலாம்.

“அந்தோ! கிறீஸ்துவர்களின் மத விஷயங்களைப் பற்றி நான் சிபஸ்தியாரோடு கலந்து பேசி இருந்தால், அவர் எனக்குச் சகலமும் விவரமாய்ச் சொலலி இருப்பார்.

இனி என்ன செய்யலாம்? நாளை அதிகாலமே அவரைக் கொல்லப் போகிறார்கள். அவர் இறந்த பின்பு யாரை நம்பிக் கேட்கலாம்?"

பபியோலா இவ்வாறு யோசிக்க யோசிக்க அவள் மனம் புண்ணாய் நைந்தது. துக்கமுங் கவலையுங் கார்மேகம போல் அவளைச் சூழ்ந்தது. தணல் அடுத்த வெண்ணெய் போல உருகி வாடினாள். இனமபிரிந்த மான்போலுஞ் சிறகு பறிகொடுத்த பறவைபோலும போக்குத் தாக்கற்று, தன்னந்தனியாயிருநது, தன செயல மறந்து, தளர்ந்தாள்.

இந்தச் சமயத்தில வேலைக்காரி அபிரா தன் எஜமானிக்கு இராச்சாப்பாடு கொண்டு வந்து மேஜைமேல் வைத்த பின்பு மெதுவாய் பபியோலா கிட்டவநது சொல்வாள் :

"அம்மா ! செய்தி கேடடீாகளா ?"

"என்ன செய்தி ?"

"நாளை அதிகாலமே சிபஸ்தியானை அம்பால் எய்து கொல்லப்போகிறாாகள். ஐயோ பாவம ! கிரம்பவும அழகு வடிவுள்ள உத்தமன்."

"அடியே அபிரா, உன் வாயை மூடிக்கொண்டு சும்மா விழுந்து கிடடி. உனக்கென்னடி தெரியும ?"

"ஆமா, எனக்கெனன தெரியும்? ஆனால், அம்மா, அவர் கிறீஸ்துவனென்பது உங்களுக்குத் தெரியுமா ?"

"அடியே, நீ சும்மா இருக்கமாட்டாயா? உனக்குத் தெரியாததைப் பற்றி உளற வராதே."

"நல்லது உங்கள் சித்தம். அவா இருந்தாலென்ன, இறந்தாலென்ன? உங்களுக்கு எலலாஞ் சரிதான். எனக்குத்தான் என்ன? எங்கள் ஆப்பிரிக்கா தேசத்து விற்சேவகர் அநேகம் பேர்களைக் கொன்றிருக்கிறார்கள், சிலரைத்

தப்பவும் விட்டிருக்கிறார்கள். ஆனால் அதைப்பற்றி உங்களுக்குக் கவலை என்ன?"

அபிரா இப்படிப் பேசும்போது அவள் மனதில் ஏதோ ஒருகருத்து இருப்பதாக பபியோலா அறிந்துகொண்டாள். முதல்விசை இபபெண்மணி தன் அடிமையின் முகத்தைக் குறிபபாய் நோக்கி அதிலே ஏதாவது அறியலாமாவென்று உற்றுப் பார்த்தாள். அபிராவின் கருத்த முகத்தில் யாதொரு அடையாளமுந தோன்றவில்லை. அதன் பின்பு பபியோலா கேடபாள்·

"அபிரா! நீ என்னமோ சொன்னாயே. அதென்ன?"

"ஒன்றுமிலலை அம்மா. எனக்கென்ன தெரியும்? நான் புழுகசை வேலை செய்து பிழைக்கும் அடிமை."

"அதெலலாமிருக்கட்டும. அபிரா, வா, வா, அதென்ன சங்கதி?"

அபிரா பபியோலாவின் கிட்ட வந்து, சுற்றுமற்றும் பார்த்து அவள் காதுக்குள் சொலவாள்.

"அமமா, சிபஸ்தியாா சாகாதபடி அவர் உயிரைக் காப்பாற்ற உங்களுக்கு மனதா?"

பபியோலா சநதோஷ அக்களிப்போடு, அதற்குஞ் சீந்தேகமா, என்றபோது, அபிரா சொலவாள்:

"அம்மா! மெதுவாய்ப் பேசுங்கள். ஆனால் அதற்கு பணம் நிரம்பவுஞ் செல்லும்."

"எவ்வளவு வேணடும்?"

"அம்மா, ஆயிரம் ரூபாய்க்குக் குறையாது. அபபுறம் எனக்கு ஸ்வாதீனமுங் கொடுக்கவேண்டும்."

"நல்லது, உன் நிபநதனையை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆனால் நீ சொலவதுபோல் செய்வாய் என்பதற்கு என்ன ஆதாரம் உண்டு?"

" செபஸ்தியார் நாளைக்காலமே சாகாமல் அதற்குப் பின் இருபத்தினுலுமணி நேரம் உயிரோடிருந்தால் மாத்திரம் நீங்கள் பணங்கொடுங்கள். இல்லாவிடில் வேண்டாம்."

" நல்லது, சம்மதந்தான். நீ தீவிரமாய்ப்போய் செய்ய வேண்டிய ஏற்பாடெல்லாஞ் செய்."

" ஆத்திரப்பட அவசியமில்லை", என்று சொல்லி அபிரா தன் வேலையைச் செய்து முடித்தபின்பு, விற்சேவகரின் தலைவன் இருந்த தெருவுக்குப் போனுள்.

அபாக்யன் இவளைக் கண்டவுடனே கேட்பான்:

" அபிரா! என்ன விசேஷம்; இந்த இராத்திரியிலே இவ்வளவு தூரம் என்ன அலுவலின்பேரில் வந்தாய்? இன்று கூத்து நடனம் இங்கே ஒன்றுமில்லையே."

" அது எனக்குத் தெரியும், அபாக்யா. ஆனல் ஓர் முக்கிய காரியத்தைப் பற்றி உன்னிடம் பேச நான் வந்தேன்."

" அதென்ன காரியம்?"

" அது உன்னையும், என்னையும், அதோ அங்கே நித்திரை செய்யும் செபஸ்தியானையும் அடுத்தது."

" பார் அவனை, சற்றும்பயமின்றி, மெய் மறந்து, அயர்ந்து நித்திரை செய்கிறுன். அவனைப் பார்த்தால் நாளை அதிகாலமே சாகப்போகிறவனென்று யாராவது சொல்வார்களா? கலியாணம் பண்ணப்போகிறவன் கவலையின்றித் தூங்குவதுபோல் இவனுந் தூங்கிறுன்."

" அபாக்யா! நல்ல செய்தி. நம்மிருவருக்கும் கலியாணம் நடக்கப்போகிறது."

" உன்னையா நான் கலியாணஞ் செய்ய? அபிரா, வெறுங் கை முழம்போடாது. அதற்குப் பல காரியங்கள் வேண்டும்."

"என்னவேண்டும், சொல்?"

"முதலில, நீ ஸ்வாதீனம் பெறவேண்டும். அடிமையை நான் கலியாணஞ் செய்பலாமா?"

"அது பழுத்திருக்கிறது. வேறே என்னவேண்டும்?"

"அப்புறம் உன் கலியாணத்துக்கு நல்ல சீதனங்கொண்டு வரவேண்டும. எனக்கு இந்தச் சமயத்தில பணம் மெத்த அவசியம்."

"அதுவும பழுத்திருக்கிறது எவ்வளவு நான சீதனங் கொண்டு வரவேணடும, சொல?"

"ஐநநூறு ரூபாய் கொண்டு வநதால போதும்."

"நலலது, நான அறுநூறு ரூபாய் கொணடு வருகிறேன்."

"மெத்த சிரேஷ்டம. அபிரா, இவ்வளவு பணம் எங்கே கொள்ளை அடித்தாய்? யார வாயிலே மண்போட்டாய்? யாருக்காகிலும நஞ்சு கொடுத்து எமலோகத்துக்கு அனுப்பிவிட்டாயோ?"

"அதெலலாமிலலை."

"அப்போ நாளைக்கே கலியாணத்தை முடித்துப் போடலாமே."

"ஆத்திரப்படாதே. இநதப் பணம நான் யோக்கியமாயச் சம்பாதித்த பணம. ஆனால் இதை அனுபவிக்கும்படி சில நிபநதனைகளுணடு. அதிலே சிபஸ்தியான் கலந்திருக்கிறான்"

"அவன் எப்படி இதில கலந்தவன்?"

"இந்தப் பணம வேண்டுமானால அவன் நாளை சாகக் கூடாது."

அபாக்யன் இதைக்கேட்டவுடனே கோபவெறியோடு அபிராவைப பார்த்து, அவள மயிரைப் பிடித்து இழுத்துக்

கீழேதள்ளி காலால் நன்ருய் உதைத்து துறத்தலாமா வென்று யோசிக்கும்போது, அபிரா சற்றும் பயப்படாமல் அவனைத் தன் கண் பார்வையால மயக்கி அடக்கும்படி வெறிக்கப் பார்த்து நின்ருள்.

சற்றுநேரம இருவரும இப்படி நின்ற பின்பு கடைசி யில் அபாக்கியன் சொல்வான் :

" உனக்கென்ன பயித்தியமா? அவனைக் கொல்லா மல நான் விட்டால என் தலை அலலோ போய்விடும். கொ டிய அரசன் இநதக் கட்டளையை எனக்குக் கொடுக்கும் போது அவன சொன்னதை நீ கேட டிருநதால இப்படி நீ பேசமாட்டாய்."

" அப்பா ! இதென்ன பிரமாதம்! அவன் செத்தது போல் காட்டி, 'இராயனுக்கு அவன் செததான் என்று சொல்லிப் போடலாம.''

" ஆனல் அவன் உயிர வநது பிற்பாடு வெளிப்பட டால் ?"

" அதைபபற்றி நீ கவலைப்படவேண்டாம். அவனைச் சேர்ந்த கிறீஸ்துவர்கள் அவனை மறைத்து வைத்துக் கொ ள்ளுவாரகள்."

" அவன் இருபத்திஞலுமணியா உயிரோடிருக்கவே ண்டும ? பனிரெணடுமணி என்ருலும் போகடடும் என்க லாம் "

" இருபத்திஞலுக்குக் குறையக கூடாது. அதற்கு மேல் பட்டால் பாதகமில்லை."

"அபிரா! இது கூடாது. பெருமோசமான செய்கை."

" அப்போ, நல்லது நான் போகிறேன். அறுநூறு ரூபாய் சும்மா பூப்போல வருவதை வேண்டாமென்று எறி ந்துபோடு. எனக்கென்ன ?" என்று சொல்லி அவள் திரும

ம்போது, அபாக்யன் பணப்பேய் ஆவேசங்கொண்டு அவளை நிறுத்திச் சொல்வான் :

" அறுநூறு ரூபாயா? இதிலே நம்ம பயல்களுக்குப் பாதி போய் விடுமே?"

" அப்படி அவர்களுக்காக துணடாய் இருநூறு ரூபாய் வைத்திருக்கிறேன்."

" அப்படியா ! அபிரா ஆ ! என் மடக்கிளியே, மாங் குயிலே, சற்கண்டே, கருங்காக்காய், தித்திக்குந்தேன் இருட்டே, நமக்கு அதிரஷ்ட காலம் பிறநதிருக்கிறது. அநதப் பயலகளுக்கு நூறுரூபாய் போதும, மற்றதெல் லாம் நாமே வைத்துக் கொள்ளலாம."

" அதென்னமோ உன் பாடு. ஆனால் நான் சொன்ன நிபநதனைப்படி நடக்கவேண்டும். இலலாவிட்டால் அரைக் காசும் வராது "

" நல்லது, உன் மனம்போல நடக்கும். அவன் இராப் பகல் அறுபது நாழிகை உயிரோடிருப்பான். அதற்குப் பின் நம்முடைய கலியாண அமர்க்களம் சமபிரமமாய் நட க்கும்."

இருவரும் இவ்விதம் பேசிக் கொண்டிருக்கும்போது சிபஸ்தியாா அந்தநாள் வேலையால வெகுவாய் களைத்துப் போயிருந்தால் கீழே கட்டாந் தரையிலே படுத்து அயர் ந்து நித்திரை செய்தார. நித்திரை செய்து கொஞ்சம் இளைப்பாறினபின்பு எழுந்திருந்து இருகைகளையும விரி த்து ஜெபஞ் செய்தார்.

வேதசாட்சி செய்யும் ஜெபஞ் சாவுக்கு ஆயித்தமான ஜெபம் அல்ல. தன் பாவுங்களுக்குப் பொறுத்தல பெறும் படி சர்வேசுரனைப் பார்த்து இவர் பிரார்த்திக்கவில்லை.

தன் ஜீவனைச் சேசுநாதர் சுவாமிக்காக பலியாய்க் கொடுப்பது உத்தம சிநேகத்தின் அடையாளமானதால், இந்தத் தேவ சிநேகம், மனதிலிருக்கும் மாசுகளையெல்லாம் அறவே நீக்கிப் போடும். இதினாலேதான் வேதசாட்சி சிந்தும் இரத்தம் இரண்டாம் ஞானஸ்நானமென்று சொல்வார்கள்.

அன்றியுஞ் சிபஸ்தியார் தமக்கு உறுதியும் பெலனும் உண்டாகும்படியாவது அந்த ஜெபஞ் செய்யவில்லை. துணிவுகுன்றா இப்போர வீரனுக்குப் பயமென்பது இன்னதென்று தெரியாது. தான் சேவித்த அஞ்ஞான அரசனுக்காகப் படையின் முதல் அணியில் பயமின்றி நின்று ஜெயங்கொண்டு வந்தவர் சேசுநாதர் சுவாமிக்காக எந்தத் துன்பமும் அனுபவிக்கப் பின் வாங்குவாரா?

ஆகையால் சிபஸ்தியார் அப்போது செய்த ஜெபம், மோக்ஷத்திலிருக்கும் தேவ தூதர்கள் சர்வேசுரனுடைய சிம்மாசனமுன், என்றும் ஸ்துதியும், புகழ்ச்சியும், வாழ்த்துதலும், நமஸ்காரமுஞ் செய்வது போல, நன்றி அறிதலான ஸ்துதி நிறைந்த ஜெபம்.

வானத்தின் கண்களைப்போல பிரகாசித்த கோடான கோடி நட்சேத்திரங்களையும், மரங்களின் கிளைகளில் வீசுங் குளிர்ந்த தென்றலையும், மலையினின்றிழிந்து நில்லாமலோடும் வெள்ளி வடம் போன்ற நதிகளையும், தம்மோடு சர்வேசுரனை ஸ்துதிக்கக் கூப்பிடுவார். விடியற்காலம் உதிக்கும் நேரமாகின்றதென்றும், தாம் சர்வேசுரனுக்குப் பலி ஒப்புக்கொடுக்குஞ் சமயம் அடுத்து வருகின்றதென்றும் நினைத்து சந்தோஷிப்பார். தமது சரீரத்தில் பாயும் அம்புகளையும், காயங்களில் இருந்து வடிந்தோடும் இரத்தத்

தையும், முன்னதாகவே, திருச்சபையின் அனுகூல விர்த்திக்காகவும், அஞ்ஞான உரோமானர் மனந்திரும்பவும், ஒப்புக்கொடுப்பார்.

இதன் பின்பு, தமது கண்கள் முன்னே மோக்ஷவாசல் திறக்கப்பட்டதுபோல அதின் செல்வ பாக்கியத்தையும், அப்பாக்கிய ஸ்தலத்தில் இருப்பவர்களையும், இவர்களுக்கு ஆனந்த சந்தோஷமாய் இருக்கும் சேசுநாதனையும் அவருடைய பரிசுத்த தாயாரையும் பார்ப்பதாகத் தோன்றுவார். அவர் முகமுங் கண்களும் பரவச நிலையில் இருப்பதாகவுந் தம்மைவிட்டு முந்திப் போன தமது சகோதரர் எல்லாரையும் அத்தியந்த ஆனந்த பாக்கிய மத்தியில பார்ப்பதாகவும் விளங்கினர்,

இந்த மோக்ஷானந்த காட்சியில் அவருடைய வதன கமலம் மலர்ந்து சூரியனை போல் பிரகாசித்தது. இவர் இவ்விதம் ஜெபத்தியானத்தில பரவசநிலையில இருக்கும்போது, அபாக்யன் அவர் இருந்த அறையின் கதவைத் திறக்கவந்தான். வந்தவன் இந்த தேவலோக காட்சியைக் கண்டு, பிரமித்து அச்சாதிசயத்துடன் செபஸ்தியார முன் சாஷ்டாங்கமாய் விழுந்து அவரை ஓர் தெய்வமாக ஆராதித்திருப்பான்.

இவன் தன்னிடத்தில் இருந்த வில்வீரரில் மகா சமர்த்தரான ஐந்து பேர்களைத் தெரிந்துகொண்டு அவர்களுக்குத் தன் அபிப்பிராயத்தை விளக்கிக் காட்டி, ஒவ்வொருவனுக்குந் தான் கொடுக்கும் பணம் இவ்வளவென்று சொல்லி, அவர்களைத் தன் பக்கமாய் இணக்கினுன். இந்தத் தொகையுமன்றி கிறீஸ்துவர்கள், தங்கள் கையில் செபஸ்தியாரை ஒப்புவித்தால், வேறே பெருந் தொகை கொடுப்ப

தாகச் சொல்லி இருக்கிறார்களென்றுஞ் சிபஸ்தியாரை உடனே தூக்கிப் போவதற்கு இரண்டு அடிமைகள் வந்து காத்திருப்பார்கள் என்றும், இவையெல்லாம் வெகு இரகசியமாய், இராயனுக்குத் தெரியாமல் நடத்தவேண்டுமென்றும் அவர்களுக்கு வற்புறுத்திச் சொன்னான்.

எல்லாந் திட்டப்படுத்தின பின்பு சிபஸ்தியாரை அடுத்த சோலைக்குள் கூட்டிப்போய், அவா அணிந்திருந்த வஸ்திரங்களைக் களைந்து ஒரு மரத்தோடு அவரைச் சேர்த்துக் கட்டினார்கள். இவருக்கு எதிரே அபாக்யன் தெரிந்த ஐந்து வில்வீரரும் வில்லும் அம்புங் கையில் பிடித்து தயாராய் நின்றார்கள்.

சிபஸ்தியாருக்கு விதித்த இவ்வகை மரணம் மகா கொடுமையுள்ளது. இவர் கிட்ட சிநேகிதராவது அறிமுகள்ள எவராவது இருக்கவில்லை. அங்கே இவரை அன்றி வேறு கிறீஸ்துவனுங் கிடையாது. வேடிக்கை மாலில் மிருகங்களுக்கு இரையாய் வேதசாட்சிகளைப் போடும் போதோவெனில, கிறீஸ்துவர்கள் செய்யும் யுத்தத்தைப் பார்க்கும்படி பதினாயிரம் பேர்கள் சூழ்ந்திருப்பார்கள். கிறீஸ்துவர்களே, வேதசாட்சிகளின் கடைசி வார்த்தைகளைக் கேட்டு மனதில் வைத்துக்கொள்ளும்படி கவனத்துடன் சூழ்ந்து நிற்பார்கள். இவையெல்லாம் வேதசாட்சிக்குத் தைரியமும் வீரமுங் கொடுக்கும். மிருகங்கள் கர்ச்சிக்கும் பேரொலி முழக்கமும், ஜனங்கள் சொல்லும் நிந்தையான வசை மொழிகளும் முதலாய் வேதசாட்சிக்கு மனத்திடன் கொடுக்க ஏதுவானவைகள். ஆனால், அதிகாலமே, இருண்ட சோலைக்குள், துஷ்ட மிலேச்ச ஜனங்களின் மத்தியில், ஒரு மிருகத்தைப் போல் மரத்தோடு சேர்த்துக்கட்டப்பட்டு, அம்பால் எய்து கொல்லப்பட்டு

சாவது, திருடர் கையில் அடர்ந்த காட்டுக்குள் அகப்பட்டுச் சாவதற்குச் சமானமே அன்றி, சத்திய வேத உண்மையைப் பகிரங்கமாய் அங்கீகாரஞ் செய்து, சேசுநாதருடைய திருநாமத்தை எல்லாருங் கேட்கச் சொல்லி, சாகும் வேதசாட்சியின் மரணம்போல் தோன்றவில்லை.

ஆனால் கிறீஸ்துவப் போர்வீரனான செபஸ்தியார் இதைப்பற்றிச் சற்றுங் கவலைப்படவில்லை. சேசுநாதர்சுவாமிக்காக சாவது அவருடைய சர்வ ஆசையாதலால் அவர் ஒருவரோ பார்த்தால் போதுமென்று எண்ணியிருந்தார்.

அம்பு எய்யும்படி நின்ற ஐந்து பேரும, வில்லை வளைத்து குறிப்பாய்ப் பார்த்து ஒருவனுக்குப்பின் ஒருவனாய் எய்தார்கள். எய்த அம்புகளில் ஒன்றுந தப்பிப்போகாமல் எல்லாஞ் செபஸ்தியார சரீரத்தில் பாய, இரத்தம் கபகபவென்று ஓடிவந்தது. அம்புகள் சரமாரியாய்ப் பாய்ந்தாலும் உயிர் நிலையான ஸ்தானத்தில் படாததால், சரீராதி எங்குங் காயமாகி இரத்தத்தில் தோய்ந்திருந்ததே அன்றி அவர் சாகவில்லை. சூழ நின்ற ஜனங்கள் கை கொட்டி, கூத்தாடி, குரவையிட்டு, இடியோசையும் ஏங்கக் கதறினார்கள். செபஸ்தியார், அம்புகள் வந்து தமது சரீரத்தில் பாயும்போது மனந்தளராமலுஞ் சோம்பி வாடாமலும் சர்வேசுரனுக்குத் தமது உயிரைப் பலியாய் ஒப்புக்கொடுத்து, உடலைவிட்டு எப்போ ஆத்துமம் பிரியுமோவென்று ஆவசையோடு மோட்சத்தை அண்ணார்ந்து பார்த்து நின்றார்.

இவ்வளவு ஆசையோடு தேடிய சாவு இன்னம் வரவில்லை. மோட்சவாசலைச் சம்மனசுகள் எப்போ தமக்குத் திறப்பார்களென்று பார்த்திருந்தும் அதைத் திறக்கவில்லை. சாவின் நித்திரை வாராமல், சித்த ஸ்வாதீனந் தப்பி மூர்ச்

சையானார். வில்வீரர் தாங்கள் குறித்த அளவுக்குச் செபஸ்தியார் இடத்தில இன்னம் உயிர் இருக்கிறதென்று கண்டு, அவரைக் கட்டியிருந்த கயிறுகளை அவிழ்க்க அவர் செத்தவனைப்போல் பிரஞ்ஞையின்றிக் கீழே விழுந்தார். அவரைச் சுற்றிலும் அவர் சிந்திய இரத்தம் நதிப்பிரவாகம் போல் நிறைந்திருந்தது.

## உ௰-ம். அதிகாரம்.

### போன உயிர் மீண்டும் வரல்.

அபிரா தன் கல்யாணத்துக்கு வேண்டிய ஏற்பாடெல்லாஞ் செய்து முடித்து வெகு நேரமானபின் தன் எஜமானி வீட்டுக்கு அர்த்த சாமத்தில் திரும்பி வரும்போது, பனியுங் குளிருமெத்த இருந்ததால் தன்னை நன்றாய் மூடிக்கொண்டு நடந்து, தான் முன்னொரு விசை கோர்வினனோடு தனியே இரகசியமாய்ப் பேசிக் கொண்டிருந்த இடத்துக்குச் சமீபத்தில் வந்தாள். வந்ததும் முன் அங்கே நடந்த சங்கதிகள் அவள் நினைவில் வர கொல் என்று சிரித்தாள். இச்சமயத்தில் ஒருவன் இவள் கிட்ட வந்து இவள் கையைப் பிடித்துச் சொல்வான் :

“ அபிரா! நீ இப்படி மட மடவென்று சிரித்ததைக் கேட்டவுடனே, நீ தான் என்று அறிந்து கொண்டேன். அதோ கேள், நீ சிரித்ததும் உனக்கு இசைவாக உன் ஊரிலிருந்து வந்த உன் மாமன் மைத்துனன்மார்களாகிற காடி புலிகளுங் கர்ச்சித்துச் சிரிக்கிறார்கள். என்ன செய்தி? ஏன் இப்படி சிரிப்பாணி பொங்குகிறது?”

“ அப்பா, எல்லாம் உன்னைப் பற்றித்தான்.”

"என்னைப் பற்றியா ? ஏன் ?"

"நாம் இருவரும் முன் ஒருவிசை இந்த இடத்திலே அல்லவா சந்தித்துப் பேசினோம். அதற்குப் பின் நீ முட்டாள்ப் பயல் போல் குட்டிச் சுவரில் முட்டிக்கொள்ள வில்லையா ?"

"ஆ ! அபிரா, என் பேரில் உனக்கு எவ்வளவு பட்சம். நானு உன்னைப் பற்றி நினையாமல் அதோ மாலிலிருக்கும் உன் இனத்தாளைப பற்றி நினைக்கும் போது நீ என் மேல நினைவாயிருந்தது, ஆஹா ! எவ்வளவு தயவு."

"ஓய், அவரவர்க்குரிய பெயரைச் சொலலி மரியாதையுடன் பேசு. நான் இனி அடிமை அபிரா அல்ல. வில் போர்வீரரின் அதிபதியாகிய அபாக்யனுடைய பெண்சாதி ஜூபலாவாக்கும். தெரியுமா ?"

"மகா யோக்கியன் அவன். நல்லது, கழுதைக்கு வாழ்க்கைப் பட்ட பின்பு உதைக்கு இனிப் பின் வாஙகாதே. அதிருக்கட்டும் நமது சங்கதியைப் பற்றி ஒரு வார்த்தை உன்னைக் கேட்க வேண்டும். அந்த விசை நாமிருவரும் இங்கே கூடினபோது என்னமோ செய்து கொடுக்கிறேனென்று என்னைப் பசப்பி ஏய்த்து பணம் வாங்கினையல்லவா ? நான் கொடுத்தது மாற்றுப்பொன், நீ கொடுத்தது வெறும் வார்த்தை."

"நான் உனக்குப் பாஷாணஞ் செய்து கொடுக்கிறேன் என்று சொன்ன போது நீ வாஸ்தவமென்று நினைத்தாய் ?"

"ஏன் ? என்னை ஏய்க்கவா நீ அப்படிச் சொன்னாய் ?"

"அதிருக்கட்டும். என் மருந்தின் குணத்தைப் பார்த்தியா ? பாபியன் ஒரு நாளையிலே உருண்டு போனான்.

அவன் சொத்தெல்லாம் அவன் மகள் கையில் வந்திருக்கிறது. நமது காரிய சித்திக்கு இது முதல் படி."

"அப்போ, நீ தானா பாபியனை எமலோகத்துக்கு அனுப்பினவள்?"

"அது என்னமோ. நான் போகும் பாதையில் எனக்கெதிரே நிற்பவர்களுக்கெல்லாம் இது தான் கதி."

கோர்வீனன் இதைக் கேட்டு பயந்து: "நல்லது, நல்லது அபிரா, நான் போகிறேன்" என்று சொல்லும்போது வேலைக்காரி அவனை நிற்கச் சொல்லி கேட்பாள்:

"கோர்வீனா, நான் அந்த இராத்திரியிலே உனக்கு இரண்டு தங்கமான யோசனை சொல்லிக் கொடுத்தேன். நீ ஒன்றுக்கு நேர் விரோதமாய் நடந்தாய், வேறொன்றை நீ கவனிக்கவில்லை."

"அதெப்படி, அபிரா?"

"நீ கிறீஸ்துவர்களை ஓடி ஆடித் தொடராமல் கபடாய் வலைபின்னி உன் கைக்குள்ளே அவர்களை இழுக்கும்படி நான் சொன்னேன். புலவியன் நான் உனக்குச் சொன்னதுபோலச் செய்தான். அவனுக்கு அதிர்ஷ்டம் வந்தது. உனக்கென்ன வந்தது?"

"திட்டும், வசையும், அடியும், உதையுந்தான்."

"பார்த்தியா? நான் சொன்னதுபோல் ஏன் செய்யவில்லை? அது போகட்டும். நான் கொடுத்த இரண்டாம் யோசனைப் பிரகாரமாகிலுஞ் செய்."

"அதென்ன யோச்னை, திரும்பிச் சொல்லு."

"கேள், உன்கையில் பணம் வந்தவுடனே பபியோலாவிடம் போய் மணமுகூர்த்தம் பேசு. இதுமட்டும் அவளிடம் மணம் பேச வந்தவர்கள் பணமின்றி வெறுங்கை

யாய் வந்ததால், வெறுநாய் சந்தைக்குப் போனால் விளக்கு மாற்றால் அடிபட்டு வருவதுபோல், வெட்கிப் போய் வீட்டுக்குப் போனார்கள். பபியோலாவைக் கல்யாணஞ்செய்ய ஆசைப்படுகிறவன் இரண்டும் இரண்டும் கூட்டினால் நலா கும் என்ற யுக்தியை முன்னிட்டுப் போகவேண்டும். நான் சொல்வது, என்ன, விளங்குதா?"

"நன்றாய் விளங்குது. ஆனால் கையிலே முதல் இரண்டு வேணடுமே? அதற்கு நான் எங்கே போகிறது?"

"கோர்வீனு, உனக்கு நான் எல்லா உபாயமுஞ் சொல்லிக் கொடுக்கிறேன். உனக்கும் எனக்குங் குணத்தில் வெகு சம்பந்தமிருக்கிறது. நாமிருவரும் யாரையாவது பகைத்தால் அவன் உருப்படவே மாட்டான். நாமா, பழிபாவத்துக்கு, தொடை நடுங்கிப் பண்டாரங்களைப் போல, அஞ்சமாட்டோம. இந்த மூலைப் பக்கம் வா. யாராவது நாம் பேசுவதைக் கேட்கப் போகிறார்கள். புல்வியனுக்குக் கொழுத்தக் காசு பழுக்கப் போகிறது. அந்தக் காசு அவன் வாயில் விழு முன்னே, நீ தட்டிவிட்டு எடுத்துக்கொள்ளலாம். காசு பறிக்கு முன் செய்ய வேண்டிய படு கொலையை அவன் கையிலே விட்டுவிடு. அவன் வேலை முடித்தது பார்த்து, நீ நடுவில வந்து பணத்தைக் கவ்விக் கொள்."

இவ்விதமாய் தன் எண்ணத்தை அவன் காதுக்குள் விவரமாய்ச் சொலல, கோர்வீனன் துள்ளி மகிழ்ந்து, நேர்த்தி, நேர்த்தி யென்று குதித்தான்.

அபிரா அவன் ஆட்டத்தை அடக்கி அடுத்திருந்த வீட்டைக் காண்பித்து, அதோ அங்கே பார், என்று சொன்னாள். அங்கே ஒரு மூலையிலே புல்வியனும் அவன் பங்

காளியும் நின்று வெகு இரகசியமாய், செபஸ்தியார் சொத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

இதற்கு முன்னே அதே இடத்தில், தர்மகுண சிந்தையுள்ள வாலிபர் இருவர் நின்று கோர்வீனனும் அபிராவுஞ் செய்த துர் யோசனையைக் கேட்டார்கள். இப்போது அவ்விருவரும் அவ்விடத்தை விட்டுப் போய் விட்டார்கள். பங்கிராஸ் தன்னை க்ஷேமித்தஸ்தலத்தில் நித்திரை செய்கிறார். செபஸ்தியார் வேதசாட்சியாகும்படி ஆயித்தஞ்செய்கிறார். ஆ! கொடிய சாவு நல்லவர்களைத்தான் முந்திக் கூட்டிக்கொண்டு போகிறது. கெட்டவர்கள் விளக்கிலிட்ட திரிபோல் கடைசிமட்டும் எரிகிறார்கள். சுகந்த வாசனை வீசும புஷ்பம் மலாந்தவுடனே வாடி வதைங்கிக் விழுகின்றது. நஞ்சுள்ள பச்சிலை பழுத்துக் கீழே விழுபலநாட் செல்கின்றது.

மறுநாள் காலமே செபஸ்தியாரை இரண்டு அடிமைகள் இரேனேயென்ற புண்ணியவதி வீட்டுக்குத் தூக்கி வந்து உடனே வைத்தியனை அழைத்து அவா சரீரத்திலிருந்த காயங்களைக் கட்டி மருந்து போடும்படி செய்தார்கள். வைத்தியர் காயங்களைச் சோதிக்கையில் உயிருக்கு மோசமான காயம் ஒன்றுமில்லையென்றும், அவர் சரீரத்திலுள்ள காயங்களை எல்லாங் குணமாக்கலாமென்றும், அதற்குக்கொஞ்சம் நாள் பிடிக்கும் என்றுஞ்சொன்னார். அபிரா அந்த நாளில் பலமுறை செபஸ்தியாரைப் பார்க்க வந்து, கடைசியாய் இருபத்தினாலுமணிநேரமான பின்பு புபியோலாவைக் கூட்டி வந்து செபஸ்தியார் உயிரோடிருக்கிறாரென்று மெய்ப்பித்தாள். இருவருஞ் செய்த ஒப்பந்தப் பிரகாரம் அபிரா தன் ஸ்வாதீனமுஞ் சீதனமும் பெற்றுக் கொண்டு அபாக்யனைத்தேடிப் போய் அன்று இராத்திரி

முழுதுங் கல்யாண அமர்க்களமும், ஆட்டமும் பாட்டும், குடியுங் கூத்தும் இடியோசைபோல் அதிர்ந்து முழங்கினது.

பபியோலா இரேனே அம்மாள் வீட்டுக்கு நாள்தோறும் வந்து செபஸ்தியார் எப்படி இருக்கிறாரென்று விசாரித்து செலவுக்கு வேண்டிய பணந் தாராளமாய்க்கொடுத்துப் போவாள். அதுதான் முதல் விசை பபியோலா தன் மனதறிய கிறீஸ்துவர்கள் வீட்டில் வந்தது இரேனே அம்மாள் ஒரு விதவை. அவள் புருஷன் வேதகலக காலத்தில வேத சாட்சியாய் இறந்து போனார். இவளுக்கு இரண்டு பெண்கள். இவ்விருவருடைய நடக்கை மெத்த வித்தியாசமாயிருப்பதைப் பபியோலா கண்டு ஆச்சரியம் பட்டாள். மூத்தவள் அகங்காரஞ் சிலாக்கியமுள்ளவள், யாருக்குங் கீழ்ப படியாமல் அடங்காப் பிடாரியாய்த் திரிவாள் இளையவள் வெகு சாது, பட்சபாந்தவமுள்ளவள் தாய்க்குப் பணிந்து அமைந்து நடப்பாள். இவ்விருவருடைய தாய் அடக்க மரியாதை, சிநேக வாஞ்சையுள்ளவள். அவ்வளவு சாமர்த்தியமும் படிப்புமிலலாவிடினும தன அலுவலின் கடமைகளைச் சரியாய்க் குறைவின்றி செய்து குடும்பசம்ரட்சணையைப் பாது காத்துவந்தாள்.

பபியோலா தான் அறிந்த எந்த வீட்டிலாவது வீட்டின் குடித்தனம இவ்வளவு சீராயும் ஒழுங்காயும் நடந்தேறி வருவதைப் பார்த்ததேயில்லை. மூத்தமகள் மாத்திரம், நெல்லுக்குமியுண்டு, நீர்க்கும நுரையுண்டு, புஷ்பிதழ் பூவிற்கு முண்டு, என்பதற்கொப்ப இந்த வீட்டுக்குத் திர்ஷ்டிப் பரிகாரம் போலிருந்தாள். இதன் காரணமேதென்று பபியோலா விசாரித்தபோது அவ்வீட்டிலிருந்தவர்களில் மூத்

தவள் தவிர மற்றெல்லோருங் கிறீஸ்துவர்களென்று ஆச்சரியத்துடன் கேட்டு பிரமித்து நின்றுள்

இவ்வீட்டாரிடத்தில் விளங்கிய உத்தம இல்லறப்பயிற்சியைக் கண்டது முதல் பபியோலா மனதில் கிறீஸ்துவர்கள் பேரிலிருந்த பகையும் அரோசகமும் சற்றே தணிந்தது. ஆனுல் இந்தச் சமயத்தில் அவள் கருத்துங் கவலையுஞ் சிபஸ்தியானை எப்படியாவது காப்பாற்றவேண்டுமென்பதில் சார்ந்திருந்ததால், அவனைக் கம்பானியாவின் கிராமத்துக்குத் தூக்கிப் போய் அங்கே வேதத்தைப் பற்றித் தான் அறிய விரும்பிய விஷயங்களை அவரிடத்தில் சாவகாசமாய்க் கேட்கலாமென்று எண்ணியிருந்தாள். ஆனுல் அதற்கு ஓர் பெரிய விக்கினம் நடுவில் மலைபோல் வளர்ந்தது.

இரணவீரசூரன் சிபஸ்தியார், வேதசாட்சியின் கொடிய ஆக்கினைகளை யெல்லாம் அனுபவித்து, மோக்ஷத்துக்குப் போவது இதோ அதோ ஆயிற்றென்று ஆவலோடு காத்துக் கொண்டிருந்த பின்பு, திரும்பவும் இந்த நிர்ப்பாக்கிய நிறைந்த கண்ணீர்க் கணவாயில் இருக்கும்படி நேரிட்டதேயென்று நினைக்கும்போது அவர் பட்ட துக்கம் இவ்வளவென்று யாரால் கணிக்கக்கூடும்? அடர்ந்த இராவின் இருளில், பெருங்காற்றும் புசலும் அடிக்க ஆற்றிலுள்ள தண்ணீர் அலைகள் போலெழுந்து இருகரையிலும் மோத, ஒருவன் படகிலேறி அக்கரைக்குப்போகும்படி வெகு பிரயாசையுடன் தண்டு வலித்து படகைச் செலுத்தி, பெருஞ் சுழலுக்குள் அகப்பட்டு அமிழ்ந்திப் போவதாயிருந்தும் அதற்கெல்லாந் தப்பித்துப் போய், கடைசியில் விடிந்த பின் பார்க்கும்போது, தான் முன்னிருந்த இக்கரையிலேயே இருப்பதாகக் கண்டால் அவன் படுந்துக்கமுஞ,

சலிப்பும், எத்தன்மைத்தாயிருக்கும்? அப்போஸ்தலரான அர்ச். சின்னப்பர் வானத்தின் மூன்றும் மண்டலமட்டும் போய் அங்கிருந்து மனுஷர் கண்பார்க்காததும், செவிகேளாததும், இருதயம் உணராததுமான நித்தியானந்த மோட்ச பாக்கியம் இத்தன்மைத்தென்று பரவச நிலையினின்று அறிந்த பின்பு, திருமபவும இந்தப் பரதேசமாகிற பூமிக்கு எப்படி வந்தாரோ, அப்படியே சிபஸ்தியாரும் வந்து, தமது சகோதரர் மத்தியில இனனமிருக்கும்படி சர்வேசுரன் சித்தமானதால, முறைப்பாடின்றி தேவ சித்தத்தை ஆராதித்து, சர்வேசுரன் குறித்தநாளில் தாம் வேதசாட்சியாய்ச் சாகும பாக்கியந்தப்பாமல் வருமென்று நம்பியிருந்தார. இதினுலே அந்த இடத்தைவிடடு தப்பித்து ஒளிந்து கொள்ளுமபடியாய் மற்றவாகள் என்ன சொன்னுலும் அவர் கேளாமல் அவர்களுக்குச் சொல்வார :

“ வேத விரோதிகளை எதிர்த்து அவர்கள் செய்வது அக்கிரமமென்று அவர்கள் முகத்துக்கு முன்னே துணிவோடு சொல்லும்படியான சுதநதரம எனக்கு இப்போ இருக்கின்றது. கால ஊனறி நிற்க எனக்குப் பிலன் வரு முதல் நாளிலே நான் அப்படியே செய்வேன. அந்தநாள் சீக்கிரம் வரும்படி என் காயங்களை நனமுய்க் கட்டி குணம் வருமபடி ஜாக்கிரதை செய்யுங்கள்.”

---

## உக-ம் அதிகாரம்.

### வேதசாட்சியின் வெற்றி முடி.

---

அபிரர் கோர்வினனுக்குப் புபியோலாவை மணம் புரிய வேண்டும்பண்ணு சம்பாதிக்கும் வகை சொல்லித்

தந்தபோது, புல்வியன் ஏதோ படு கொலையொன்று செய்ய உத்தேசித்திருப்பதாகச் சொன்னாள் அல்லவா? அதின் மர்மம் இதுதான் : புல்வியன், அக்நேசி கிறீஸ்துவளென்று செசீலி வாயால் அறிந்த பிற்பாடு, இனி அவள் தன்னைக் கல்யாணஞ் செய்யும்படி பயம் உறுத்திக் கேட்கலாம் என்றும், அப்படி அவள் சம்மதியாப் பட்சத்தில் அவள் கிறீஸ்துவளென்று காட்டிக் கொடுத்து அவள் சொத்தை அபகரித்துக்கொள்ளலாமென்றும் உறுதியாய் எண்ணியிருந்தான்.

அக்நேசியுடன் அந்தரங்கத்தில் இவ்விஷயத்தைப் பற்றிக் கலந்து பேச ஏற்ற சந்தர்பபம் நேரிடாததால் அவளுக்கு ஒரு சீட்டெழுதி அதில அவள் பேரில் தனக்குள்ள பெருங் காதலை வெளிப்படுத்தி, எப்படியாகிலுந் தன் வேண்டுகோளை கையேற்று இஷ்டபூர்த்தி செய்யவேண்டுமென்றும், அப்படிச்செய்ய அவளுக்கு மனமில்லாவிடில் தான் கொடுமையான ஓர் உபாயம் பிரயோகிக்க நேரிடுமென்றுஞ் சொன்னான்.

இவன் அனுப்பிய சீட்டுக்குப் பதில் அக்நேசி எழுதி, அதிலே தான் அவனை ஒருபோதுங் கல்யாணம் பண்ணக் கூடாதென்றுந், தன் இருதயத்தின் சிநேகம் முழுவதையுந் தன் சிருஷ்டிகருக்குக் கொடுத்திருப்பதால், அவரை அன்றி வேறு எந்த சிருஷ்டியையுஞ் சிநேகிக்கமாட்டாள் என்றுந் தெளிவாய் அவனுக்குச் சொன்னாள். இதைப் புல்வியன் அறிந்ததும் இனித் தனக்கு ஒரே வழி மாத்திரம் உண்டென்று நினைத்து அதை யுக்தி யோசனையோடு சமர்த்தாய் செய்து முடிக்க வேண்டிய ஏதுக்களைத் தேடினான். இவ்விஷயத்தைப் பற்றித்தான் அபிரா கோர்வீனனோடு அந்த இராத்திரியில் பேசினாள்.

பபியோலா, செபஸ்தியார் தப்பித்து ஒளிந்து கொள்ளும்படி தானும் மற்றவர்களுஞ் சொன்னதெல்லாங் கேட்கவில்லை என்று அறிந்து, மாக்சீமியனிடம் போய் அவருக்காக மன்னிப்பு பெறும்படியாய் தானே முயலத் துணிந்தாள். மனிதன் மனதில் பகையும் பழியும் ஒருவிசை குடி ஏறின பின் அவைகள் எவ்வளவு பிலமாய் கோட்டை கட்டி உள்ளிருக்குமென்று பபியோலாவுக்குத் தெரியாததால், இக்கொடிய அரசன் தன் பகையைத் தீர்க்க அநியாயமாய் செபஸ்தியாரைக் கொல்லும்படி சொன்னபின், அவர் தேவாதீனமாய்த் தப்பினதால், திரும்பவும் அவரைக் கொல்லக் கற்பிக்கமாட்டான் என்றும், அவருக்காகத் தான் போய் கண்ணீர் சிந்தி அழுது கெஞ்சிக் கேட்டால் கல்நெஞ்சுங் கரைந்து இளகு மென்றும் மனப்பால் குடித்திருந்தாள். இதற்காக இராயனுக்கு ஒரு விண்ணப்பம எழுதி தனக்குத் தயவு செய்து பேடடி கொடுக்கும்படி பிரார்த்தித்தபின் அவனுக்குத் தட்சணையாக வெகு விலை உயர்ந்த முத்துப் பதித்த தங்க மோதிரம ஒன்று தன் தந்தை பெயரால் அனுப்பினாள். மாக்சீமியன் மோதிரத்தை வாங்கிக் கொண்டு, தான் அந்த மாசம் இருபதாந் தேதியில் அரண்மனையை விட்டிறங்கிக் கோவிலுக்குப் போகும்போது, விண்ணப்பங்கள் கொண்டு வழியில் நிற்குஞ் சாமானிய ஜனங்களோடு பபியோலாவும் வந்து காத்திருக்கும்படி சொல்லி அனுப்பினான். இந்த மறுமொழி பபியோலாவுக்குத் திர்ப்திகரமாய் இராவிடினும் தன்னால் கூடிய யாவுஞ் செய்து பார்க்கலாமென்று துணிந்து குறித்த நாளில கூட்டத்தோடு கூட்டமாய் இவளும் இராஜ பேட்டிக்குக் காத்திருந்தாள்.

அன்று விண்ணப்பங் கொண்டு வந்தவர்கள் பலபேர்கள். தாய்மார்களும், விதவைகளும், பிள்ளைகளும், சகோதரர் சகோதரிகளுந், தங்கள் உயிருக்கு உயிராய் இருக்கிறவர்கள் அநியாயமாய்ப் பிடிபட்டு, சிலர் சிறைக் கூடங்களிலுஞ், சிலர் கடலில் தண்டு வலிப்பதிலுஞ், சிலர் சுரங்கங்கள் வெட்டுவதிலும், அடிமைகளைப் போல கடின வேலை செய்து அவஸ்தைப்படுவதின் நிமித்தம் அவர்களுக்காக மன்னிப்புந் தயவுங் கேட்க பெருங் கூட்டமாய் வந்திருந்தார்கள். நிர்ப்பாக்கிய நிலையில் இருந்த இத்தனை பேர்களைக் கண்டவுடனே பபியோலாவின் இடமிருந்த சொற்ப நம்பிக்கையும் அறவே நீங்கினது. கொடிய அரசன் படியில் இருந்து கீழே இறங்கி வருகையில், பரிதாப நிலையில் இருந்த இந்த ஜனங்கள் தஙகள் விண்ணப்பத்தை அவனுக்கு நீட்டும்போது, இக்கல்நெஞ்சன் அவைகளை வாங்கிப் பார்த்தும் பாராததுமாய்க் கிழித்தெறிவான். ஓரோர் இடத்தில் மாத்திரந் தன் பின் வந்த காரிய தரிசிக்கு அவைகளைக் காட்டுவான். இவ்விதஞ் செய்து கொண்டு பபியோலா நின்ற இடத்துக்குச் சமீபத்தில் வந்தான். அவனுடைய கை விரல் ஒன்றில் பபியோலா அனுப்பிய கணையாழி மின்னித் துலங்கினது. இப்பெண்மணியின் மனம் பதைத்துத் துடிக்க, அவள் பயந்து நடுங்கி, என்ன சொல்வானே, ஏதுசெய்வானே, என்று கலங்கி நின்முள். இவள் அருகில் நின்ற ஒரு ஏழைப் பெண் கொடுத்த சீட்டை மாக்சிமியன் வாங்கும்படி தன் கையை நீட்டும்போது, யாரோ ஒருவன் தன் பெயலரச் சொல்லி மரியாதையின்றிக் கூப்பிடுஞ் சப்தங் கேட்டு இங்கும் அங்குஞ் சுற்றிப் பார்த்தான். பபியோலா அது யாருடைய குரல் சப்தமென்று அறிந்ததால் வீட்டின் மேன் மாடியைப் பார்த்தாள்.

அவளுக்கு எதிரே உயர்ந்து எழும்பிய வீட்டின் மேன் மாடியில் திறந்திருந்த ஓர் அறை இருந்தது. அதன் சுவர்கள் தூய வெண்மையான சலவைக் கற்களால் அமைக்கப்பட்டிருந்தன. இந்த அறைக்கு முன்னே இருந்த சாளரவாயிலில் தேவ லோக ரூபம் போன்ற ஓர் காட்சி தோன்றினது. முகம் இரத்தப் பசையின்றி வெளுத்து நிற்க, உடல் மெலிந்து வாடியிருக்க, சரீரத்தின் பல இடங்களில் காயமும இரத்தக் கறையுந் தோன்ற, கடுங் கோபங் கண்களில் மின்ன, இவ்வித உருவோடு அங்கு செபஸ்தியார் வந்து நின்றார்.

இராஜன் அரண்மனையில் இருந்து வெளியே வரும் போது சப்தித்த வாத்திய தொனியை செபஸ்தியார் கேட்டவுடனே, வெகு பிரயாசையோடு எழுந்து அவன் வரும்பாதைக்கு எதிரே வந்து, அவன் கிட்ட வந்ததும் தெளிந்த குரலோடு "மாக்சீமியா" என்று கூப்பிட்டார்.

· அரசன் அவர் நின்ற பக்கமாய், கண்களிலிருந்து நெருப்புப் பொறி பறக்க பார்த்து, சொல்வான்:

"யாரடா நீ, உன் இராஜன் பெயரை மரியாதை இன்றி இப்படி சொல்லத் துணிந்தவன்?"

"கொடுங்கோலா! கேள். தேவகோபாக்கினையுஞ் சாபமும் பழியும் உன் தலைமேல் விழப்போகின்றது. இந்தப் பட்டணத்தில் சர்வேசுரனுடைய ஊழியர்களின் இரத்தத்தைப் பயமின்றி நீ சிந்தினாய். அவர்களுடைய சரீரத்தை ஆற்றிலுங் குப்பை மேட்டிலும் நீ எறிந்தாய். சர்வேசுரனுடைய பரிசுத்த ஆலயங்களை நீ இடித்துத் தகர்த்தாய். தேவ பலி பீடத்தை நீ அவமதித்தாய். கோவில் திரவியத்தை நீ அபகரித்தாய். இந்த அக்கிரமங்களுக்காகவும்,

இனனம் நீ செய்த அநியாயங் கொடுமை அவலட்சண துர்க்கந்த முதலிய பழி பாவங்களுக்காகவுஞ் சர்வ வல்லபரான சர்வேசுரன் உனக்குத் தீர்ப்பு விதிப்பார். அவருடைய நீதியின் கோபம் உன் தலை மேல் இடிபோல் விழப்போகின்றது. நீ நிர்ப்பாக்கியனாய் சாவாய். உனக்குப் பின், சர்வேசுரன் தமக்கு மிக மனரஞ்சிதமுள்ள மகா இராஜன் ஒருவனை அனுப்புவார். உன் பெயரை உலக முழுதும் பகைத்து பழிக்கும். உலகத்தில் நீ உயிரோடு இருக்குமட்டும் உன்னை எல்லாருஞ் சபிப்பார்கள். துஷ்டா! இதோ, ஏற்ற சமயம் இருக்கும்போதே நீ செய்த அக்கிரமங்களுக்கு மனஸ்தாபப் படு. நீ பகைத்து பழிக்குஞ், சிலுவையில் அறையுண்டு மரித்த சேசுநாதர்சுவாமி பேரால் சர்வேசுரனிடம் மன்னிப்புக் கேள். அப்போத்தான் நீ தப்பிப்பாய்."

செபஸ்தியார் இவ்வாக்கியங்களைச் சொல்லி முடிக்குமட்டும், எங்கும் நிசப்தமாயிருக்க எல்லாருங் கவனமாய் உற்றுக்கேட்டார்கள். மாக்சிமியன் அச்சாதிசயமுடன், அசையாமலும், பார்த்த கண் நிமையாமலும், பிரமை பிடித்தவன் போலிருக்க, தன் முன் நின்றவர் செபஸ்தியார் என்று அறிந்ததால் அவர் தேவலோகத்திலிருந்து தன்னைச் சபிக்கும்படி வந்தவரோவென்று அஞ்சினான். ஆனால் சற்று நேரத்தில் சித்தப் பிரமை நீங்க பொங்கிய வெகுளியோடு சேவகனைக் கூப்பிட்டுச் சொல்வான் :

" அடா சேவகா ந தட்சணமே அங்கே போய் அதோ நிற்பவனை நமது சமுகமுன் இழுத்து வா.

"ஓ! அபாக்யா! எங்கே அந்தப் பயல்? சற்று நேரத்துக்கு முன் இங்கு நின்றவன் எங்கே போய் விட்டான்?"

அங்கு நின்ற அபாக்யன் செபஸ்தியாரைப் பார்த்தவுடனே தன் விடுதிக்குச் சடுதியில் ஓடிப்போனான்.

"ஓ! ஓ! அந்தப் பயல் ஓடியா போய்விட்டான்? அடே யார் அங்கே நிற்பவன்? வாடா தடியா. உன் பெயர் என்னடா?"

கோர்வீனன் பயந்து நடுங்கி தன் முதுகைத் தடவிக்கொண்டு இராஜ மகத்துவ முன் வந்தான்.

"அடே, நீ ஓட்டமாய் ஓடிப்போய் அபாக்யனைத் தாமதமின்றி உடனே கையோடு கூட்டிவா. காலைத் தூக்கி நடடா, போதுமாடே."

கோர்வீனன் அச்சத்தோடு நூமீதிய வில்வீரர் இருந்த தெருவுக்குப் போனான். அபாக்யன தன் விடுதிக்குச் சென்றதுந் தன் சேவகருக்குச் சங்கதியை அறிவிக்க, அவர்கள் எல்லாருந் தங்கள் உயிரைக் காப்பாற்ற ஓர் உபாயந் தேடினார்கள். அங்கு இருந்த நூறு வில் போர்வீரரும விசாலமான ஒரு சாலைக்குள் போய் அதில் ஒரேயொரு கதவு மாத்திரந் திறந்துவிட்டு, வில்லும் அம்புங் கையில் எடுத்து, திறந்திருந்த கதவுக்கு நேராய் குறி பார்த்து, இரண்டு வரிசையாய் நின்றார்கள். அபாக்யனும் ஜூபலாவும் இவ்வரிசையின் தலைப்பில் இருந்தார்கள்.

இவர்கள் இவ்வித பந்தோபஸ்தோடு நிற்கையில் கோர்வீனன் வந்து வெளியே நின்று வாய் குளறி, உடல் நடுங்கிச் சொல்வான்: "அபாக்யா, நமது தேவேந்திர இராஜன் உன்னைத் தட்சணமே கூப்பிடுகிறார்"

"நீ போய் அரசனிடம் என் பெயரால் இவ்விதஞ் சொல்: நாங்கள் செய்த தப்பிதங்களையெல்லாம் மகா

இராஜா பொறுத்துக்கொண்டார் என்பதின் அறிகுறியாய் ஓர் அடையாளம் அனுப்பாவிடில் யார் இந்த வீட்டுக்குள் கால் வைப்பானோ அவனை எங்கள் அம்புகளுக்கு இலக்காய் வைத்துக் குறி பார்ப்போம்.''

இவ்வார்த்தைகளை மாக்சீமியன் கேட்டபோது குலுங்க குலுங்கச் சிரித்துச் சொலவான்: "அந்த வில்போர் வீரர் என் படை அணியின் முக்கிய பாகம் என்பதால் அவர்கள் இவ்விதங் காவங்கொணடு பேசுகிறார்கள். கலகக்காரர் எவரையும் இவர்கள் உதவியின்றி அடக்குவது அசாத்தியம். நல்லது இருக்கட்டும். அடே வா, இந்த மோதிரத்தைக் கொணடு போய் அபாக்யனுடைய மனைவிக்கு நமது பேரால் கொடு.''

இபபடியே மாக்சீமியன் தன் விரலில் இருந்த பசி யோலாவின மோதிரத்தைக் கொடுத்து அனுப்பினான். கோர்வீனன் அதைக் கொண்டுபோய் கொடுத்தவுடனே விலவின் நாணிகள் தளார்ந்துபோக, அபாக்யன் இராஜ சமுகமுன் வந்து சொல்வான்:

"இராஜேந்திரனே! நீங்கள் எங்களுக்குக் கொடுத்த கட்டளையில் செபஸ்தியானுடைய தேகத்தில் உயிர் நிலையான இடத்தைத் தவிர மற்ற இடங்களில் மாத்திரம் அம்பு எய்யும்படி கற்பித்ததால், அவன் சாகாதே போனால் அது எங்கள் தப்பிதமல்ல.''

"போனது போகட்டும். இந்த விசை என் கண் முன்னே அவனைக் கொல்லுங்கள். அடா பயல்களா! நீங்கள் இருவரும் அந்தத் தடி எடுத்துப் போய் இரத்தங் கீழே சிதறுதபடி, ஒரே அடியில் அவன் தலையை உடைத்துக் கொன்று போடுங்கள்.''

இந்தச் சொன்னபின் தன் சமீபத்தில் விண்ணப்பத்தைக் கையில் ஏந்திக் காத்திருந்த பபியோலாவைக் கண்டு, அம்மா உனக்கு என்னவேணும், என்று கேட்க, பபியோலா தன் கண்முன் நடந்த படுகொலையைக் கண்டு மயங்கிச் சோம்பி, மகா இராஜா, என் விண்ணப்பம் இனி வீண், என்று சொன்னாள்.

ஏன் வீண் என்று அரசன் அவள் கொடுத்த சீட்டைப் பார்க்கவே, அவன் இரு விழிகள் அக்கினியைக் கக்க, கேட்பான் :

“இதென்ன காரியம்? செபஸ்தியான் உயிரோடு இருந்தது உனக்குத் தெரியுமா? நீயுங் கிறீஸ்துவளா ?”

பபியோலா தான் கிறீஸ்துவள் அலலவென்று சொல்லும்போது ஏன் அவள் நாக்கு மேலவாயோடு ஒட்டிக் கொண்டது?

ஆ! பபியோலா! சிறநத நற்குண செல்வ மாதே! இன்னம் நீ கிறீஸ்துவள் அல்லவா? அஞ்சேல, அஞ்சேல். அந்தப் பாக்கியமான நாள் சமீபத்தில இருக்கினறது.

பபியோலா அரசனிடஞ் செலவு பெற்றுக்கொண்டு மனதில் துக்கமுங் கண்ணில் தண்ணீரும பொங்க வீட்டுக்குத் திரும்பினாள்.

செபஸ்தியானைக் கொல்லும்படிபோன கொடிய துஷ்டன் தன் கையிலிருந்த பெருந்தடியால் அவர் தலையை உடைத்து நொறுக்கினான்.

இவ்விதம் செபஸ்தியார் தாம் மகா ஆசை ஆவலோடு தேடிய வேதசாட்சியின் வெற்றிமுடி பெற்று மோட்சா

னந்த நித்திய பாக்கியம் அனுபவிக்கப் போனார். ஆனால அவர் அடைந்த மரணம் உலகத்தார் கண் முன் எவ்வளவு ஈனமானது! இராயன் பேசிக்கொண்டிருக்கும் போது, யாதோர் ஆசார உபசாரமின்றி, பெருந்துரோகியைப்போல் தடியால் அடியுண்டு சாவது மகா இழிவானதாய்த் தோன்றினாலுஞ் சேசுநாதா சுவாமிக்காக இவ்விதஞ் சாவது அதி உன்னத மேன்மையுள்ளதாய் மோட்சத்தில் மதிக்கப் படும.

கொடுங்கோலன் சிபஸ்தியாருடைய சரீரத்தை கிறீஸ்துவாகள் எடுக்காதபடி அதிமேல வெகு பாரங் கட்டி அசுத்தங்கள் வந்து விழும் ஓர் பெருங் கிடங்கில் எறியும்படி கற்பித்தான். அப்படியே செய்தாாகள். ஆனால் அன்றிரா வில் சிபஸ்தியாா பரிசுத்த பதிவிரதை லுசீனாளுக்குத் தரிசனமாகி தமது சரீரம இருக்கும் இடத்தை அவளுக்குக் காட்டினா. அவள் அதை அந்த இராத்திரியே எடுத்து தக்க இடத்தில் க்ஷேமித்தபின், பிற்காலத்தில் சிபஸ்தியார் பேரால பிரமாண்டமான சிறந்த ஆலயங்கட்டி அதில் அவருக்கு ஸ்தோத்திர வணக்கமும் திருநாள் உற்சவமுஞ் செயது வருகிறார்கள்.

அர்ச். சிபஸ்தியாருடைய ஸ்துதிவணக்கம் நமது தேசத்திலும் எங்கும் பிரபலியமாயிருபபது யாவரும் அறிந்த விஷயம். விஷபேதி, கொள்ளைநோய், தொத்துவியாதி, முதலிய கொடும் பிணிகள், பரம்புங்காலங்களில், கிறீஸ்துவர்களும் இதர மதஸ்தர்களும் எல்லாருஞ் சேர்ந்து அர்ச். சிபஸ்தியாரைப் பிரார்த்தித்து மன்றாடும்போது அவர்கள் ஜெபம் அனுகூலம் பெறுவதை நாம் அநேக முறை பார்த்திருக்கின்றோம்.

அர்ச். செபஸ்தியாருக்கு ஸ்தோத்திர பாசுரம்.

1. சத்திய மறைஉண்மைக்காய் சாவது சிநேகங் காட்டும்
உத்தம முறையாமென்றுன் உயிரதைப் பலியாய் ஈந்து
நித்திய மோட்சானந்த பாக்கியம் நிறைந்துவாழும்
பத்தராஞ் செபஸ்தியாருன் பதமலர் ஸ்துதித்தோம் வாழி.

2. பேய் அரசாட்சிசெய்து பெரும் பழி செலுத்தித் தன்னைத்
தீயர்கள் வணங்க ஏய்த்து தீ நரகதனில் சேர்க்க
ஆய பல்மதங்கள் தோற்றி ஆளுமிந்நாட்டைப் பாராய்
நேயராஞ் செபஸ்தியாரே நேர்வழி இவர்க்குக்காட்டாய்.

3. துன்பமும் பிணியுங்கோர தொத்துநோய் பேதி வாந்தி
என்பதும் பலவுங்கூடி எங்களை வருத்தும்போது
அன்புள்ள தந்தையாம் நீ அருள்விழி நோக்கிப் பாராய்
உன் பெயர் கூவிச் சொல்வோர்க் குரியபல் உதவிசெய்வாய்.

---

## உஉ-ம். அதிகாரம.

### சிறைக்கூடத்தின் அலங்காரம்.

---

செபஸ்தியார் கொடியர் கையால் அடிபட்டிறந்த பின்பு, பபியோலா இரேனே அம்மாள் வீட்டுக்குப் போனாள். அவ் வீட்டார் வெகு துக்கமாயிருந்தாலும அவர்களுடைய துக்கத்துக்குந் தன் மனதிலிருந்த துக்கத்துக்கும வெகு பாரதூர வித்தியாசம் இருப்பதாகக் கண்டாள். அவர்களுடைய துக்கம் நம்பிக்கையோடுஞ் சந்தோஷத்தோடுங் கூடிய துக்கம். அவர்களைச் சூழ்ந்திருந்த மேகத்தில் சூரியனுடைய பிரகாசக் கிரணங்கள் சமயத்துக்குச் சமயம் பாய்ந்து ஒளி வீசினது. பபியோலாவின் துக்கமோ அடர்ந்து நெருங்கிய காரிருள்போலவு அவளை முழுதுஞ்சுற்றி மூடிக் கொண்டது. கிறீஸ்துவர்களின் வேதத்தைப்பற்றி

பெஸ்தியாரிடங் கேட்டு அறியலாமென்று அவளுக்கிருந்த ஆசையும் அவர் இறந்தவுடனே நீங்கினது.

கூட்டமெல்லாங் கலைந்து போன பின்பு, பபியோலா தன் வீட்டுக்குப்போய் தன் மனதில் நிறைந்த விசனத்தை மறக்கும்படி சில தர்ம சாஸ்திர நூற்களை எடுத்து வாசித்தாள். எதை வாசித்தாலும் அவள் மனதுக்குத் திர்ப்தி ஆவது ஆறுதலாவது வரவில்லை இப்படி இருக்கும்போது வேலைக்காரி கிரோசியா ஒரு சீட்டுக்கொண்டு வந்து எஜமானிக்குக் கொடுத்து, அவளிருந்த பரிதாப கோலத்தைக் கண்டு கிட்டநிற்க பயந்து, சற்று அப்பால் ஓர் மூலையில் போய் பார்த்துக் கொண்டு நின்றாள்.

செல்வமாது சீட்டை வாசித்தவுடனே திடுக்கிட்டு, சித்தந்தடுமாறி, தானிருந்த ரத்னகஜித மஞ்சத்தை விட்டு பரபரப்புடன் எழுந்து, நாலாபக்கமுஞ் சுற்றிப் பார்த்து, தன் அழகிய கூந்தலைச் சிதற விரித்து, தன் இருகைகளால் தலையைத் தாங்கிப் பிடித்து, அவஸ்தைப்படுகிறவளாகத் தோன்றி, பெருமூச்சுவிட்டபின், கீழே உட்கார்ந்து, பின் எழுந்து நின்று, சீட்டை இருகைகளிலும் எடுத்து திரும்பவும் வாசித்து சுய அறிவு அற்றவள்போல விழித்துப் பார்த்தபின் வேலைக்காரியைக் கூப்பிட்டுக் கேட்பாள்:

"யார் இந்தச் சீட்டைக்கொண்டு வந்தது?"

"அம்மா, ஓர் சேவகன்."

"அவனை உள்ளே வரச்சொல்."

அவன் வருகிறதுக்குள் பபியோலா தன் மனதைத் தேற்றி, பதற்றநீக்கி, விரிந்த தன் கூந்தலைச் சேர்த்துக் கட்டி முடித்து, சேவகன் வந்தபின் சித்தசமாதானத்துடன் கேட்பாள்:

"நீ எங்கே இருந்து வருகிறாய்?"

"அம்மா, நான் துல்லியன என்ற சிறைக்கூடத்தின் காவற் சேவகன்."

"யார இநதக் கடிதத்தை உன்கையில் கொடுத்தது?"

"அக்நேசி அமமாள்."

"எதின் நிமித்தம அசசுநதர மாது சிறையில் இருக்கிறாள்?"

"புல்வியன் என்ற ஒருவன் அவள் கிறீஸதுவளென்று சொன்னதின் பேரில."

"வேறொன்றுக்கு மல்லவா?"

"அம்மா, இதுதவிர வேறொன்று மிலலை."

"அப்படியானால காரியஞ் சீக்கிரம் முடியும. அக்நேசி கிறீஸ்துவள் அலலவென்று நானே தக்க உருஜு வோடு ஒப்பிக்க வலலேன. இதோ வருகிறேன் என்று அக்நேசி அமமாளுக்குப் போய்ச் சொல. இது உனக்கு இனும்."

பபியோலா உடனே ஜாக்கிரதையுடன் தன் மேல்ப் போர்வையை எடுத்துக்கொண்டு அக்நேசி இருந்த சிறைக் கூடத்துக்குப் போனாள்.

இருவரும உபசார வார்த்தை சொன்ன பின்பு பபியோலா கேட்பாள்:

"என்ன அக்நேசி, என, செலவப் பாங்கி, விசேஷம என்ன?"

"பபியோலா இரண்டு நாழிகைக்கு முன்தான் என்னைப் பிடித்து இங்கே கூட்டி வந்தார்கள்."

"அந்தப் புல்வியன் அவ்வளவு மூடனு? உன்மேல் இல்லாத பழி சுமத்தி உன்னைச் சிறையில் அடைக்கும்படி அவன் மடப்புத்தி எங்கே மேயப் போனது? நான் தட்சணமே அதிகாரியினிடம் போய் இதுவெல்லாஞ் சுத்த அபத்தமென்று சொல்லப் போகிறேன்."

"எது சுத்த அபத்தமென்று சொல்லப் போகிறாய்?"

"எதுவா? நீ கிறீஸ்துவள் என்பது."

"ஆ! பபியோலா! அப்படிச் சொல்லாதே. அம்மா நான் கிறீஸ்துவள். இதுதான் என் பாக்கியம்."

செல்வமாது இதைக் கேட்டபோது திடுக்கிட்டுத் திணறவில்லை. மனது கலங்கி பதைத்துத் தடுமாறவில்லை. அறநெறி ஒழுக்கத்தில் சாலச் சிறந்து சகல குணாதிசயங்களால் விளங்கிய செபஸ்தியானோ கிறீஸ்துவனென்று அறிந்த பின்பு, பெண்களுக்கு எல்லாம் நடுநாயகமாய், நிறை பொறை அடக்கம் கற்பு முதலிய சுகுண லெட்சணங்களால் அலங்கரிக்கப்பட்ட அக்னேசியுங் கிறீஸ்துவளென்று கேட்டபோது பபியோலா ஆச்சரியப்படவில்லை. இச்சுந்தர மாதின் மாசற்ற நடக்கையுங், கபடற்ற குணமும், பபியோலா நன்றாய் அறிந்திருந்தாள். பெண் பாலாரில் சிறந்த குண பூஷணியும், ஆண் பாலாரில் ஒழுக்கத்திற் சிறந்த புருஷோத்தமனும், ஒரே தோட்டத்தில் பயிராகி வளர்ந்த அருமையான பூஞ்செடிகளென்று பபியோலா அறிந்த போது அவள் மனதில் எழும்பிய ஆச்சரியங் குறைந்ததே அன்றி பெருகவில்லை.

இதன்பின் பபியோலா அப்பெண்மணி முன் நிற்கையில் ஏதோ ஒரு தேவலோகப் பெண் முன் நிற்பதுபோல் பூஜிதையுறறு அவளைப் பார்த்துக் கேட்பாள் :

"அக்நேசி, நீ எவ்வளவு காலமாய் இப்படிக் கிறீஸ்துவன்?"

"ஆ, பபியோலா, நான் பிறந்த நாள் முதல் சத்திய வேதத்தை நான் என் தாயார் ஊட்டிய பாலோடு உண்டு வளர்ந்தேன்."

"அப்படியானால், நீ ஏன் எனக்கு இது விவரஞ் சொல்லவில்லை?"

"ஏனென்றால் நீ கிறீஸ்துவர்களாகிற எங்களைப் பகைத்துப் பழித்தாய். எங்கள் வேதத்தை நீ படித்துக் கேட்டு அறியாமல, அது ஈனா மதம என்றும, அதை அனுசரிப்பவர்கள் இழி ஜனமெனறும, மூடரெனறும், ஜாதி கெட்டவர்களென்றும, எவ்வித அக்கிரமங்களையுஞ் செய்யும பரம துஷ்டர் என்றும எண்ணினய். எங்கள் சத்திய வேதம் எதார்த்தத்தில இன்னதென்று அறிய உனக்கு ஆசையும் இல்லை, மனமும இலலை. இவ்வித குணமுள்ள வளுக்கு நான் கிறீஸ்துவளென்று சொல்வதில் பயன் என்ன?"

"அக்நேசி, அப்படிச் சொல்லாதே. சிபஸ்தியாரும் நீயுங் கிறீஸ்துவர்களென்று நான் அறிந்திருந்தால், கிறீஸ்துவர்களையும் அவர்கள் வேதத்தையும் அவ்வளவு பகைத்திருக்கமாட்டேன். உன் நிமித்தம் உனனைச் சேர்ந்தவர்களை மதித்திருப்பேன். பூவோடு கூடிய நாரும் மணம் பெறும் என்பதை நீ கேட்டதில்லையா?"

"பபியோலா இப்போ நீ இவ்விதம் பேசுகிறுய். ஆனல் பொய்யும், வஞ்சனையும், அறைகுறையான அறிவும், மனிதர் மனதை எவ்வளவு மயக்கிக் கெடுத்துப போடுகின்றதென்று உனக்குத் தெரியாது. ஓ! எத்தனை பேர்

கள் மதியூகிகள், சிறந்த நற்குணமுள்ளவர்கள், கிறீஸ்துவர் களின் வேதம் இன்னதென்று தாங்களே படித்து அறியா மல் பிறர் சொல்வதை நம்புவதால், கிறீஸ்துவர்களேயும் அவர்கள் வேதத்தையும் பழித்து நிந்திக்கிறார்கள்."

"நல்லது, அக்நேசி, நீ இப்படி சிறையில் இருக்கும் போது உன்னுடன் வாக்கு வாதஞ் செய்வது சரியல்ல. புல்வியன் நீ கிறீஸ்துவளென்று சொல்வது போதாது. அவன் அதை உருஜுப் படுத்தவேண்டுமென்று நீ கேட் பாய் அல்லவா?"

"நான் ஏன் கேட்க வேண்டும்? நான் தான் கிறீஸ்து வள் என்று எல்லாருக்கும் பகிரங்கமாய்ச சொல்லி இருக் கிறேனே. நாளைக் காலமே இன்னம ஒருவிசை அப்படி யே சொல்லப்போகிறேன்."

"ஆ! நாளைக் காலமேயா? அவ்வளவு சீக்கிரத்திலா?"

"ஓ என் செல்வப் பாங்கி! நாளை அதிகாலமே என் னைக் கூட்டிப் போய் விசாரணை செய்து தீர்ப்புப் படிப் பார்கள். ஓ! எவ்வளவு சந்தோஷமான செய்தி!" இதைச் சொன்னபின், அக்நேசி தன் பாங்கியின் இரு கைகளேயுந் தன் கையில் பிடித்து ஆனந்த பரவச நிலையில் இருப்பவ ளாய்த் தோன்றி, வானத்தைப் பார்த்து யாழிசை பாடு வது போல் சொல்வாள் :

"ஓ! என் ஆசை இன்று அனுகூலமாய் முடியப்போ கின்றது. இதோ என் இருதயபத்தாவாய் நான் தெரிந்த வர் என்னை அழைக்க வருகின்றார். அவர் வதனகமல மல ர்ந்து என்னை அன்பாய்ப் பார்க்கிறார் ; சுவாமி இதோ நான் வருகிறேன் :

என்னை ஆட்கொண்ட என் உயிர்க்குயிரே
இனிய என் உயிர்நிலை அரசே !

"பின்னையார் எனக்கு நீ அல்லால் வேறு
பேருயிர்த் துணையுமே இல்லை ;
உன்னையே தெரிந்தேன் உன் அடி பணிந்து
உய்வது எனக்கிது உயிராம்
இன்னம் நீ அழையாதிருப்பது ஏனோ
ஏழைமேல கிருபையுமில்லையோ ?

2. தந்தையும் நீயே தாயும் மற்றெவர் நீ
சர்வ பாக்கியமும் நீ சுவாமி !
விந்தையார் வனப்பு நிறைந்தவன் நீயே !
விருப்பம் மேல் அளிப்பவன் நீயே !
சொந்தம் நீ என்று உன்னைநான் அணைந்தேன்
சோபன அழகுள்ள தாதா !
வந்து நீ என்னைப் பாரத்தபின் செல்வ
வானிலே சேர்த்திடா தேனோ ?

3. வானவர் மகிழும் ஆனந்தம் நீயே
மதுரமே உன்னைநான் பார்த்தேன்,
ஞானமார் தேவதாய் மரி இங்கு
நல்கியே எனை அழைககின்றாள்
தேனொழுகுனது திருமொழியாலே
தேற்றி உன்னிடம் வர அழைப்பாய்
நானும் இப்போது எழுந்து அக்களிப்பாய்
நாடி உன் பதந் தொழுவேனே.

ஐயோ தரிசனம் மறைந்தது. அவர் போய் விட்டார். ஆனால் நாளை அதிகாலமே திரும்பவும் வருவார். அதற் குப்பின் பிரியவே மாட்டோம்."

அக்னேசியின் ஆனந்தபூரிப்பைப் பார்த்து நின்ற பபியோலா இதன் அர்த்தம்இன்னதென்று அறியாதிருந்தாலும் இதில் ஏதோ மகா உன்னதமானது ஒன்றிருக்க வேண்டும் என்று மனதில் உணர்ந்தாள். அக்னேசி அவளை அனுப்

பும்போது மறுநாள் அதிகாலையில் தன்னைப் பார்க்கவரும் படி கேட்டுக் கொண்டாள்.

சிறையில் இவையெல்லாம் நடக்கும்போது நகர் அதிகாரியின் வீட்டில் தகப்பனும் மகனுங் கூடி வெகு ஆலோசனைபண்ணிக் கொண்டிருந்தார்கள். இதன் மர்மம் இன்னதென்றறிவது நலமாயிருக்கும்.

தோர்த்துல்லியன் தன் மகனுக்குச் சொல்வான் :

“ மகனே, அந்த மாயினி உனக்குச் சொல்லிக் கொடுத்த உபாயம் பலிக்கும்போல எனக்குத் தோன்றுகிறது. நான் பலகால அனுபோகத்தில், பார்த்தறிந்ததில் பணத்தால் கூடாதது ஒன்றுமில்லையென்பது என் துணிபு.”

“ அபபா, இதில் ஒரு விசேஷம் இருக்கிறது. பபியோலாவை மணங் கேட்கப் போனவர்கள் எல்லாரும அவள் பணத்தை யுத்தேசித்துத் தான் போனார்கள்.”

“ நீயும் அவர்களுக்குள் ஒருவன் அல்லவா?”

“ அப்பா, எனக்கு அக்நேசியின் சொத்தெல்லாம் வரும் பட்சத்தில் எனக்கும் அவர்களுக்கும் வெகு தூர வித்தியாசம் இருக்கும்.”

“ கோர்வீனு, நீ எடுத்தது நல்ல உபாயம். அக்நேசியின் சொத்தெல்லாம் நீ பபியோலாவுக்கு மூந்திக் கொடுத்த பிற்பாடு, அவள் வெகு தர்ம குணமுள்ள பிரபுமகளானதால், தன் நன்றியைக் காட்ட உன்னைத் தன் கணவனாய் ஏற்றுக்கொள்ள சம்மதிப்பாள். அப்படி ஏற்றுக்கொள்ள பிரியம் இல்லாவிடில், நீ அவளுக்குக் கொடுக்கும் ஆஸ்தியை உனக்கேவிட்டுவிடுவாள்.”

“ அப்பா, எவ்வளவு சூழ்ச்சியுள்ள உபாயம். எந்த வகையிலும் எனக்குப் பணம் வரும். ஆனால் அக்நேசி

சொத்தை அபகரிக்கும்படி பபியோலா வழியாய்த்தான் போகவேண்டுமோ? வேறு வழி கிடையாதா?"

"மகனே, வேறுவழியில்லை. புல்வியன் நடுவில வந்து தனக்குப் பங்கு கேட்பான். ஆனால் இராயன் அவனைப் பகைப்பதால் அவனுக்கு ஒரு காசுங் கொடுக்கமாட்டான். நான் போய் அக்நேசியின் சொத்துகளை அவளுக்குக் கிட்டின பந்துவாகிற பபியோலாவுக்குக் கொடுப்பது தான் கிரமம் என்று சொன்னால நான் சொல்வதைச் சிலவிசை கேட்கலாம்."

"நீங்கள் சொல்வது யுக்தமாகத் தோன்றுகிறது. ஆனால் அப்பா இதற்கு என்ன நியாயாதாரங் காட்டுவீர்கள் ?"

"கேள் மகனே, இந்த இராத்திரியிலே இராஜ கட்டளை ஒன்று தயார் செய்து, நாளை அக்நேசியைக் கொன்றவுடனே, அரசனிடம போய், உரோமைப் பிரபுவின் மகளான பாலிய சுந்தரியைக் கொன்றதால ஊரில் பெருங் கலகம் உண்டாகுமென்றும், இதுவெல்லாம் புலவியனால் வந்ததென்றும், இதற்கு ஒருவாறு பரிகாரஞ் செய்யும்படி அக்நேசியின் சொத்துகளை அவளுக்கு நெருங்கின பந்துப்பபியோலாவுக்குக் கொடுப்பதுதான் சுகிர்தமென்றுஞ், சொல்வேன். மாக்சீமியன் இந்த ஞாயத்தைக் கேட்பான்."

"வெகு நேர்த்தி. இன்று இராத்திரி கவலையின்றி நான் தூங்கப் போவேன். நாளை அனுகூலமானால் அது தான் என் ஜீவிய நாளின் சிறந்த நாளாகும்"

"மகனே், பபியோலாவுடன் நீ மண முடிக்கு முன் அவள் குணமும், நடிவும், எப்யோர்ப்பட்டதென்று நான் அறியக்கூடுமானால் மெத்த நலமாய் இருக்கும்."

"அப்பா, நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படவேண்டாம். பபியோலா உங்களுக்கு யோக்கிய மருமகளாயிருக்கத் தக்கவள்தான்."

இவ்விதம் அதிகாரி வீட்டில் தகப்பனும் மகனும் பபியோலாவைபபற்றிப் பேசிக்கொண்டிருக்கையில், புல்வியனும் அவன கூட்டாளி எவுரோட்டனும் தங்கள் வீட்டுக்குள்ளிருந்து அக்நேசியைப் பற்றி பின் வருமாறு பேசிக்கொண்டிருந்தார்கள் :

"என்ன புல்வியா? காயா, பழமா? அவள் உன்கைக்குள்ளே மாட்டிக் கொண்டாளா?"

"அவள் சிறையில் மாட்டிக் கொண்டாள். இது நிஜம். ஆனால் அவள் மனம் முன்போலவே பிடிவாதமாயிருக்கிறது."

"அதை நீ கவனியாதே. மனம் முரண்கொண்டால் வினைவைத்து அடக்கலாம். வினைக்காலம் வருங்காலம், மனைவழியுந் தெரியாது என்ற பழமொழியை நீ கேட்டதில்லையா? அதிருக்கட்டும். அவளை நீ எமலோகத்துக்கு அனுப்பினபின்பு அவள் சொத்து உனக்கு வருமென்பது நிச்சயமா?"

"நிச்சயமென்று சொல்லக்கூடாது. மாக்சீமியன் வெகு முரடன். அவன் மனம் பாசிபோல் நிலையின்றி தளம்பி அலையும். எனக்குக் கொடுப்பானோ அல்லது தன் வாயிலே எல்லாம் போட்டுக் கொள்வானோ யார் சொல்வத்தரம்?"

"உனக்கு ஒரு காசும் வராதேபோனால் நீ என்ன செய்வாய்?"

"அதை நினைத்தால் என் நாலைகுலை வேகின்றது. அப்படி வரமாட்டாது. இதற்காக நான் எவ்வளவு அக்கிர

மங்கள் செய்தேன். எத்தனை பொய் பித்தலாட்டஞ் சொன்னேன். இதுவெல்லாம் வீணாய்ப்போகுமா?"

"அது இருக்கட்டும். கைக்கெட்டினது வாய்க்கெட்டாததை நீ கேட்டதில்லையா? உனக்கு ஒரு காசும் வரவில்லையென்று வைத்துக் கொள்ளுவோம். அப்போ நீ என்ன செய்வாய்?"

"அப்படியானால் எனக்கு இனிப் பிழைக்க இங்கே வகையிராது. இதைவிட்டு ஓடிப் போகவேண்டும்."

"ஆனால் இந்த இபிராம என்ற யூதவர்த்தகனிடம் பெரியதொகை கடன் வாங்கியிருக்கிறாயல்லவா?"

"ஆமா, அக்நேசி சொத்து எனக்கு வருமென்ற நம்பிக்கையின் பேரில் இருபதினாயிரம் ரூபாய் மட்டுங் கடன் வாங்கினேன்."

"நீ கடனை உத்தரியாமல் ஓடிப்போக அவன் விட்டு விடுவானா?"

"நான் ஓடிப்போவதை அவன் அறிந்தால் விடமாட்டான். அதினாலே இரண்டாம் பேருக்குச் சொல்லாமல் இரகசியமாய் ஓடிப்போவேன்."

"புல்வியா, நானிருக்குமட்டும் பயப்படாதே. நாளையத்தினம் உனக்கு முடிவு கட்டு நாள். அதிலே நீ உயிரோடிருப்பதும் உயிரை மடிப்பதுந் தெரியவரும். நல்லது போ. துணிந்து எதையுஞ் செய். துணிந்தவனுக்குத் துக்கமுமில்லை வெட்கமுமில்லை."

## உ௩-ம் அதிகாரம்.

### அக்நேசியின் ஜனன நாள்.

புல்வியன் அன்று இரா முழுதுங் கண்ணில் தூக்கமின்றி, நெஞ்சம் பதறி, வாய் குளறி, உடம்பெல்லாம தணலாய் எரிய, படுத்துப் புரண்ட பின்பு, அதிகாலமே எழுந்து வெளியே போய் குளிர்ந்த காற்றில் உலாவலாமென்று புறப்பட்டான். யாதொரு விசேஷ கருத்தின்றி நடந்தவன் அகஸ்மாத்தாய் துல்லியன் என்ற சிறைக்கூடத்தின் பக்கமாய் வந்தான். வந்தவன் மனதில், அதில் அடைபட்டிருந்த அக்நேசியின் நினைப்பு வந்தது. பண ஆசையும், மனக்குத்தும், பழியும் பகையும், அவன் நெஞ்சில் புசல்போல் எழும்பி அவனைக் கலக்கின. "இந்தச் சிறுமியால் நான் அவமானம் அடைந்து பழி தாங்கவோ இந்தப் பாழும் உடம்பு எடுத்தேன்? ஆனால் ஐயோ பாவம்! என் பழியைத் தீர்க்க இந்தப் பாலிய சுந்தரி உயிரை மாய்ப்பது கொடுமை, கொடுமை! அவள் உயிரை இரட்சிக்க இன்னம் ஒரு விசை முயன்று பார்க்கலாம்."

இவ்வித யோசனையோடு சிறைக்கூடத்தின் காவற்காரனுக்கு நல்ல வார்த்தை சொல்லி உள்ளே பிரவேசித்தான். அக்நேசி இவனைக் கண்டவுடன் பயப்படவில்லை, பைரியைக் கண்ட பறவை போல் பதுங்கவில்லை, அச்சம் பயமின்றி, சாது அமரிக்கையுடன் இவனுக்கு எதிரே நின்று சொல்வாள் :

"புல்வியா, கேள், நான் சாகுமுன் இன்னஞ் சில நாழிகை மாத்திரமிருக்கின்றன. அதினால் சமாதான அமரிக்கையுடன் இருக்கவேண்டும்; என்னை வீணில் அலட்ட வாராதே."

"அம்மா, உங்களை நான் அலட்டும்படி வரவில்லை. உங்கள் ஆயுஸ் நாள் நெடுங்காலம் நீடித்திருக்கச் செய்வதே என் ஆசை."

"புல்வியா, என்னை நீ சாவுக்கு அளித்த பின்பு இவ் விதம நீ பேசுவது என்னை நகைப்பதுக்குச் சமானம்."

"ஓ செல்வமாதே! அப்படிச் சொல்லவேண்டாம். நீங்கள் சாவதும் உயிரோடிருப்பதும உங்கள் கையிலே இருக்கின்றது. ஏன் வீண் பிடிவாதம? நான் உங்களிடங் கேட்ட விஷயத்திற்குச் சம்மதித்தால் சாகமாட்டீர்கள். இதுதான் கடைசிவிசை உங்கள் சம்மதங் கேட்கவந்திருக் கிறேன்."

"நான் கிறீஸ்துவளென்று உனக்கு முந்தியே சொல் லவில்லையா? என் வேதத்தை மறுப்பதைப் பார்க்கிலும் ஆயிரம் விசை கூடுமானால் என் உயிரைக் கொடுப்பேன்."

"ஆனால அக்நேசி, உங்கள் வேதத்தை விடுவது அவ சியமில்லை. இதோ சிறையின் கதவு திறந்திருக்கிறது. என் னோடு கூட வாருங்கள். இராயன் கட்டளை இருக்கட்டும். நீங்கள் இஷ்டம்போல் கிறீஸ்துவர்களாயிருக்கலாம். நாம இருவரும் சுகமே வாழலாம்."

"புல்வியா, என் திவ்விய இரட்சகராகிற சேசுநாதர் சுவாமிக்கு நான் சொந்தமானவள் என்றும் அவர் ஒருவ ரையே என் முழு இருதயத்தோடு சிநேகிக்கும்படி வாக்கு க்கொடுத்திருக்கிறேன் என்றும் உனக்கு நான் தெளிவாய்ச் சொல்லவில்லையா?"

புலவியனுக்குப் பகையுங் கோபமும் பொங்கச் சொ ல்வான்:

"ஓ புத்தியில்லாத பேதைப் பெண்ணே! நல்லது, நல்லது. நீ உனது சிறந்த ஆபரணமாக, உன் உயிரினும்

அதிகமாய் மதிக்கும் அந்தப் பொக்ஷம்' என்னமர்ய்ப் போகுமென்று பார்க்கலாம்."

"நான் ஒன்றுக்கும் பயப்படமாட்டேன். என் உயிரினும் அதிகமாய் மதிக்கும் என் கற்பைப் பழுதின்றி காப்பாற்ற ஒரு தேவ தூதன் எப்போதும் என் அருகில் காவலாய் நிற்கின்றார். என் சரீரம் அசுத்தப்படாதபடி அவர் தற்காப்பார். நல்லது போதும் போ. வீண் வார்த்தை வளர்க்காதே."

புல்வியன், தன்னை ஒரு சிறு பெண் இவ்விதமாய் அடக்கித் துறத்துவதைக் கண்டு, வெட்கமுங் கோபமும் மனதில் நிறைந்து பொங்க, பதறி உதறி வாய் வழியாய் நுரையைக் கக்கி, பேய் ஆவேசங் கொண்டவன் போல் சொல்வான் :

"ஆஹா ? இவ்வளவு ஆணுவமா ! நான் சொல்வதை நீ கேட்க மாட்டாயா ? இதுதான் கடைசி விசை, சொல், உனக்கென்னவேணும், உயிரோ, சாவோ ?"

இவன் இப்படிக் கேட்கும்போது, பயோலா அக்நேசியைக் கடைசிவிசை பார்க்கும்படி சிறைக்கூடத்துக்கு வந்தவள், புல்வியனைக்கண்டதும் இவனுக்குப் பின் நின்று எல்லாங் கேட்ட பிற்பாடு, முன்னே வந்து சொல்வாள் :

"அடா புல்வியா, பரமதுஷ்டா ! அக்நேசி உன்னைக் கல்யாணஞ் செய்வதிலுஞ் சாவே அவளுக்கு 'ஆயிரம் வகையில் உத்தமமாகும்."

"நல்லது, அப்படியே சாவாள். நீயும் எனக்குச் சனியனாய் இன்னொரு விசைக் குறுக்கே வந்தால் உனக்கும் அதேகதி" என்று தன்கையை மடித்து, பல்லைக் கடித்து, பயம் உறுத்திச் சொன்ன பின்பு வெளியே போனான்."

பபியோலாவும் அக்நேசியுங் கடைசிவிசை பேசும்படி உட்கார்ந்தார்கள். அக்நேசியின் முகம் இச்சமயத்தில் முன்னிலும் அதிகமாய்க் காந்தி வீச மோக்ஷ பதவி பெற்றவள் போல் தோன்றினாள். கோபமோ, கலக்கமோ, பயமோ, கவலையோ, யாதொன்றும் அவள் முகத்தில் இல்லை. கண்கள் மணிபோல் விளங்க, இதழ்கள் மலர்ந்து விரிந்த நிலத்தாமரை போல் முறுவல் காட்ட ஆனந்த பூரிப்புடன் பேசினாள். இவள் இருந்த நிலையை பபியோலா கண்டு ஆச்சரியப்பட்டு இந்தப் பாலிய வயதில், இன்னம் ஒரு நாழிகைக்குள் சாகப்போகும் இச்சுந்தரமாது இவ்வளவு சந்தோஷ திர்ப்தியோடு இருப்பதற்குக் காரணம் ஏதென்று அறியாமல் மலைத்து நின்றாள். கவிபாடும் புலவர்கள் தேவலோகப் பெண்களைப்பற்றி வர்ணித்துப் புகழ்ந்து அணி அலங்கார வகையாய்ப் பேசுவதற்கும மேலான உன்னத ஸ்திதியில அக்நேசி இருப்பதாகக் கண்டாள்.

அக்நேசி தன் பிரிய பந்துவின் இருகரங்களையுந் தன் கையில் எடுத்து, நெஞ்சின் மேல் வைத்து, அவள் முகத்தை அன்புந் தயையும் பொங்கு மனதோடு உற்றுப்பார்த்துச் சொல்லுவாள் :

"பபியோலா, நான் சாகுமுன் உன்னிடம் ஓர் உபகாரங் கேட்கப் போகிறேன். நீ எனக்கு எதுவும் இல்லையென்று சொன்னதில்லை. இதையும் இல்லையென்று நீ சொல்லமாட்டாய்."

"ஆ என் செல்வ அக்நேசி! என்னிடம் உபகாரமா நீ கேட்கப் போகிறாய்? அல்ல, உனக்கு வேண்டியதை நீ கற்பிப்பது போல் சொல்."

"அப்போ, நீ உடனே தாமதமின்றி கிறீஸ்துவர்களின் வேத சத்தியங்களைக் கருத்தாய்ப் படிக்கவேண்டும்.

நீ அவைகளைப் படித்தால் கிறீஸ்துவளாவாய். கிறீஸ்துவளா னல் நீ இப்போது இருப்பதுபோல் என் கண்ணுக்குத் தோன்றமாட்டாய்.”

“எப்படி அக்நேசி நான் தோன்றுகிறேன்?”

“பபியோலா, கோபித்துக் கொள்ளாதே. உன்னைச் சுற்றிலுங் காரிருள் அடர்ந்து மூடியிருக்கின்றது. அது அஞ்ஞானம். உனக்குச் சிறந்த அறிவுங், தீக்ஷண்ணிய புத்தியும், எதார்த்த நடக்கையுஞ், சுகுண லெட்சணங்களும் இருக்க, இவ்வித சுபாவ நற்குணங்களைச் சுற்றிலும் இருள் அடர்ந்த சாவின் போர்வை இருப்பதை நான் பார்க்கும் போது என் மனம் பதைக்கின்றது. அந்தப் போர்வையை நீக்கிப்போடு. எல்லாந் தெளிந்த பிரகாசமாய் இருக்கும்.”

“ஓ! அக்நேசி, எனக்கும் அப்படித்தான் தோன்று கின்றது. உன் முன் நான் நிற்கையில் என் மனம் இருள் அடர்ந்த குகைபோல் இருக்கிறது. நான் கிறீஸ்துவளானல் உன்னைப் போல் நானும் பிரகாசத்தில் இருப்பேனே?”

“அபபோத்தான் மோக்ஷ பிரகாசம் உன் மனதில் பூரணமாய் உண்டாகும். இந்தப் பிரகாசத்தின் முன்னே அஞ்ஞான அந்தகாரம் அடியோடு நீங்கிப்போகும். உன்னிடத்தில் ஒரு புது ஜீவியம் உண்டாகும். சர்வேசுரன் எவ்வளவு நல்லவனென்றும், அவனை அறிவதும், சிநேகிப்பதும், எவ்வளவு பாக்கியம் என்றுங் கண்டு பிடிப்பாய். தேவப்பிரசாதமாகிற அற்புத ஜலம் உன் ஆத்துமத்தில் விழுந்து உன்னைப் பரிசுத்தமாக்கும். உலகங் கொடுக்க ஏலாதசமாதானமுஞ் சந்தோஷமும் உன் மனதில் இருப்பதாகக் காண்பாய். உன்னிடம் இருக்குஞ் சுபாவ குணங்கள் திவ்விய பிரகாச ஒளியில் மேன்மைபெற்று உத்தம

மார்கும்: அப்போது சத்திய வேதக் கிறீஸ்துவளாய் இருப்பது எவ்வளவு பாக்கியமென்று அறிவாய்."

"ஆ அக்நேசி! இதுமட்டும் நான் அறியாத நவமான உலகத்தை எனக்கு நீ திறந்து காண்பிக்கிறாய். ஐயோ! என்னை வெளியே தனியே நிற்க விட்டு நீ போகவோ போகிறாய்?"

அக்நேசி ஆனந்தப் பரவச நிலையில் நின்று சொல்வாள்: "அதோ வருகிறார்கள். நீ சேவகர்கள் வருஞ்சப்தத்தை கேட்கிறாய். நானோ, என் இருதய பத்தா வருஞ் சப்தங் கேட்கிறேன். அவரைச் சுற்றிலும் பரிசுத்த கன்னியர்கள் சூழ்ந்திருக்கிறாகள். மேகமண்டலத்திலிருந்து பிரகாச வடிவோடு என்னை அழைக்கவருகிறாகள். அவர்கள் என்னைக் கூப்பிட்டழைக்குங் கீதத் தொனியைக் கேள்:"

கன்னியர் பாட்டு.

1. கன்னிகாரத்தினம் ஆக விளங்கும் அக்நேசி கேளாய்,
திவ்விய
கர்த்தன் பதமலர் நித்தம் ஸ்துதித்திட வாராய், வாராய்.
2. சேசு உன் பங்கென தேடித் தெரிந்த அக்நேசி கேளாய்,
உந்தன்
திவ்விய பத்தாவின் பாதத்தை வாழ்த்திட வாராய்,வாராய்.
3. பூதல இன்பங்கள் தீதென்றொழித்த அக்நேசி கேளாய்,
உன்னைப்
பூரிக்கச் செய்திடும் பாக்கியம் பெற்றிட வாராய், வாராய்.

"ஓ இதோ நான் வருகிறேன்."

"அக்நேசி என்னைத் தனியே விட்டோ போகிறாய்."

"ப்பியோலா, அழாதே, அழாதே. சேசுநாதர் சுவாமிக்காகத் தன் உயிரைக் கொடுப்பது எவ்வளவு பாக்கியானந்தமென்று நீ இன்னம் அறியமாட்டாய். நல்லது, சஞ்

வேசுரன் உன்னை ஆசீர்வதிப்பாராக," என்று சொல்லி முதல்விசை அவள் நெற்றியில் சிலுவை வரைந்தாள். பபியோலா தன் பிரிய பாங்கியைக் கட்டிக்கொண்டு முத்துமாலைபோல் கண்ணீர் விட்டுத் தேம்பி அழுதாள். அதன்பின் ஒரு சேவகன அக்நேசியை வெளியே கூட்டி வந்து அதிகாரி முன் நிறுத்தினன். துன்மார்க்கச் சிந்தையுள்ள அவன் இந்தக் கன்னிய மங்கையின் பரிசுத்த கற்பைக் கெடுக்க வேசிகளிருந்த வீட்டுக்கு இவளை இழுத்துப் போகச் செய்தான். ஆனால் இப்பெண்மணிக்குக் காவலாய் இருந்த தேவதூதன் யாதொரு மோசம் வராதபடி அவளைக் காப்பாற்றினர்.

அதற்குப் பின் ஆக்கினைப் படுத்தும் ஸ்தலத்துக்கு அக்நேசியைக் கூட்டி வந்து நிறுத்த, இவளைச் சுற்றிலுந் திரண்ட ஜனக் கும்பல் இருந்தது. இவர்களுக்குள்ளே இரண்டு பேரை முக்கியமாய் எல்லாருங் குறிப்பாய் பார்த்தார்கள். வாலிபன் ஒருவன் மேல்ப் போர்வையால் தன் உடலையுந் தலையையும் நன்றாய் மூடிக்கொண்டு ஒருவருந் தன்னை அறியாதபடி நின்றான். இவனுக்கு எதிரில் மேன் குலத்திற் பிறந்த ஓர் செல்வப் பெருமாட்டி தன்மேல்ப் போர்வையாக இரத்னபரணங்களும் பொன் சரிகைகளும் இடையிட்டு நெய்த சித்திர பூம் பட்டாடை ஒன்று அணிந்திருந்தாள். இவள் அருகில் ஓர் வேலைக்காரி தன்னை முழுது மூடிக்கொண்டு நின்றாள்.

அக்நேசி கும்பலின் நடுவில் நிற்கும்போது, அவள் கருத்தும் எண்ணமும் மோட்ச பிரதாபத்தின் மத்தியில் சார்ந்திருந்தது. தன்னைச் சூழ்ந்திருந்தவர்கள் யார் எவர் என்று கவனிக்கவில்லை. அக்நேசியைப் பார்த்தவுடனே அதிகாரி காதலனைக் கேட்பான் :

"'அடா' கதுலா! ஏண்டா இவள் கை கால்களில் விலங்கு மாட்டவில்லை?"

"ஐயா, இவளுக்கு விலங்கு தேவையில்லை. யாதொரு பயமின்றி நடக்கிறாள் அப்புறம், ஐயா இவள் சிறு பெண்."

"இவள் சிறுமியாய் இருந்தாலுங் கிழவியைப் போல் பிடிவாதமுள்ளவள். அவள் கையில் விலங்கு மாட்டு."

கதுலன் வெகு இலேசான சங்கிலி எடுத்து வந்து அக்நேசி கைகளைக் கட்டினவுடனே, அச்சுந்தரமாது புன் சிரிப்புடன் தன் கைகளை மெதுவாய் அசைக்க, விலங்கு முறிந்து துண்டு துண்டாய்க் கீழே விழுந்தன.

"ஐயா, இப்பூங்கொடி மாதின் கைகளில் இருப்புச் சங்கிலி நிற்குமா? பொன் வளையலுந் தங்கக் காப்பும் அல்லோ போடவேணடும்." இதைச் சொல்லும்போது கைகளால தன் கண்ணைத் துடைத்தான்.

"கதுலா, நீ முட்டாள் பயல. உன் நெஞ்சு மெழுகு போல் இளகுகிறது. இந்த வேலைக்கு நீ உதவாது"—என்ற பின் அக்நேசிக்குச் சொல்வான்:

"அக்நேசி, நீ வெகு பாலியவயதுள்ளவள். பிரபுவின் மகள். உன் உயிரைக் காப்பாற்ற எனக்கு மெத்தவும் ஆசை. புத்தியுடன் முன் பின் யோசித்து நட. கிறீஸ்துவர்களின் வேதத்தைவிடு. நமது அரசன் சொற்படி கேட்டு இந்தத் தேசத்துத் தேவர்களை எங்களைப் போல் ஆராதி."

"ஐயா, என் மனதைமாற்ற பிரயாசப் படுவது வீண். நீங்கள் வணங்குந் தேவர்கள் நரகப்பசாசுகள். நீங்களே அவைகளைக் கூளியென்றும, பேயென்றுங் கூப்பிடுகிறீர்

கள். சுவாமியும் பேயும் உங்களுக்கு ஒன்றுதான். நானோ சுயஞ் சீவியான அதி உன்நத கடவுளை ஆராதிக்கிறேன். அவரே சர்வேசுரன். அவரே மெய்யான கடவுள். இதோ நான் அவரை முகமுகமாய்ப் பார்க்கப் போகிறேன் :

நித்தியா, நிமலா, நீதிஆதித்தா, நேரில்லா சர்வ வல்லவனே!

முத்தியாம் மோக்ஷ பாக்கியம் அளிக்கும், முதலவா என் உயிர் [க்குயிரே!

இத்தரை தன்னில் உனக்கு நான் அடிமை, என்னை உன்னி [டம் அழைத்திடவே,

சித்தம் நீ இரங்கி சிறந்தவான் வீட்டை, திறந்திட கிர்பை [செய்வாயே."

அக்நேசி இப்படிப் பாடும்போது, சூழ நின்ற ஜனங்கள் மனமிளகி அனுதாபப் படுவதை அதிகாரி கண்டு, கோபித்துச் சொல்வான் :

" அப்படியா பேதைப் பெண்ணே! நல்லது. உன் சாவின் தீர்ப்பைக் கேள் : அக்நேசி உரோமானர் தேவர்களை வணங்கமாட்டேனென்பதால் அவள் தலையை வாளால் வெட்டும்படி நாம் கற்பிக்கின்றோம்."

அக்நேசி தீர்ப்பைக் கேட்டவுடனே தன் கண்களையுங் கைகளையும் உயர்த்திச், சர்வேசுரனுக்கு நன்றி அறிந்த ஸ்தோத்திரஞ் செய்த பின்பு அங்கேதான் முழங்காலில் இருந்து விரிந்து தொங்கிய தன் நீண்ட கூந்தலை இரு பக்கத்திலும் வகுத்து தன் பிடரியைக் காட்டினாள்.

கொலைஞன் மனமிளகி கைநடுங்கி நின்றதால் வாளைத் தூக்க அவனால் சாத்தியப்படவில்லை. இச்செல்வமாது தூய வெண்மையான ஆடை அணிந்து, முழங்காலூன்றி, தலை கவிழ்ந்து, தன் இருகரங்களையும் அடக்கமுடன் தன் நெஞ்

சில் ஸ்வைத்திருக்க, அவளுடைய நீண்ட தோகைமயிர் தரைமட்டும் தொங்கி விழுவதைப் பார்த்தவர்கள், அது ஏதோ லீலிபுஷ்பம்போல் வெண்மையான தண்டின் நுனியிலிருந்து, பொன்போல் விளங்கும் புஷ்பங்களுள்ள சரங் கொத்தாய்த் தொங்கிவிழும் வெகு அபூர்வமான பூஞ்செடியோவென்று அதிசயித்து நின்றார்கள்.

அதிகாரி கொலைஞனைக் கோபித்து தன் அலுவலைச் சீக்கிரம் முடிக்கும்படி சொன்னான். அவனும் கண்ணைத் துடைத்து, மனதைக் கல்லாக்கி, கையை ஓங்கி, வாளை வீசினான். தண்டும் புஷ்பமும் வேறுபட, தரையில் இரத்தங் கபகபவென்று பொங்கி ஓடினது செல்வ அக்னேசி தன் திவ்விய பத்தாவைப் பார்க்கும்படியாய் ஆனந்த அக்களிப்புடன் மோக்ஷத்துக்குப் போனாள்.

போர்வையால் தன்னை மூடி நின்ற வாலிபன் அக்னேசி பிரேதமானதும் புன் சிரிப்புடன் ஜெயங் கொண்டவன் போல் தன் தலையை அசைத்தான். அவனுக்கு எதிரே நின்ற செல்வப் பெருமாட்டி, இதுமட்டுந் தலைகுனிந்து நின்றவள், பலி முடிந்ததுங் கூட்டத்தைக் கடந்து நடுவில் வந்து தன்மேல் சுற்றி இருந்த விலை உயர்ந்த பட்டுப் போர்வையை எடுத்து, கீழே உதிரத்தில் தோய்ந்து கிடந்த பிரேதத்தின் மேல் விரித்து, அதிகாரியைப் பார்த்துச் சொல்வாள் :

"ஐயா, ஓர் உபகாரம் நான் கேட்கிறேன். உம்முடைய சேவகர்களில் ஏவனும் இந்தப் பரிசுத்த சரீரத்தைத் தொடாதபடி தடுத்து நானே என் கையால் இவளைத் தூக்கிக்கொண்டு போகும்படி உத்தரவு கொடுக்க வேண்டும். சிறந்த கற்குணமுள்ள மாசற்றமாது இவள். என் உயிரினும் இவளை நான் அதிகமாய் மதித்தேன்."

"அம்மா, நீங்கள் யாரா இருந்தாலும் உங்கள் இஷ்டம் போல் நடவாது. கதுலா, இந்தப் பிரேதத்தை எடுத்து வழக்கம்போல் குப்பைமேட்டில் எறிந்து போடு."

அதற்கு அப்பெண் நாயகஞ் சொல்வாள்: "ஐயா அப படிச் செய்யவேண்டாம். உமது தாய் உமக்காக சிந்தின கண்ணீரைக் குறித்தும், நீர் வருத்தப்படும்போது உமது மகள் உமக்குச் செய்த உதவியைக் குறித்தும், என் வேண்டுகோளைத் தயவாய்க் கேட்குமபடி மன்றுடுகிறேன். இன்று நீர் வீட்டுக்குப் போய் உமது பெண்சாதி பிள்ளைகளைப் பார்க்குமபோது: "ஐயோ! நான் இன்று ஒரு மாசற்ற பூங்கொடியை வெட்டிக் கண்ட துண்டம் ஆக்கினேன். ஆனல் அவள் பிரேதத்துக்குப் பெண்ணின் ஆபரணமாகிற நாணத்தைக் காப்பாற்றி, அவமானம் உண்டாகாதபடி செய்தேன்" என்று பெருமையாய்ச் சொல்லலாம்.

தேர்த்துல்லியன் தன்னை இவ்விதமாய் பிரார்த்தித்த செல்வ மாதைப் பார்த்து, அம்மா, நீங்களுங் கிறீஸ்துவர்களா, என்றதற்கு பதிலோலா சற்று நின்று, அதன் பின் சொல்வாள்:

"நான் கிறீஸ்துவள் அல்ல. ஆனல் இன்று நான் பார்த்தது கிறீஸ்துவளாகும்படி போதுமான நியாயதாரம்."

"அதெப்படி அம்மா?"

"ஐயா, இந்தத் தேசத்தின் மதத்தைக் காப்பாற்றும்படி, சகல நற்குணங்களும் நிறைந்த இம்மாசற்றபெண் சாவதும், எவ்வித அக்கிரமங்களுஞ் செய்து மனுஷனென்ற பெயருக்கே அவமானம் வரும்படி நடக்குந் துரோகிகள் உயிரோடிருப்பதும், அவசியமானல், இப்படிப்பட்ட மதம் திறிவுள்ள மதமென்று சொல்லவும் வேண்டுமோ? ஓ!

இதோ இறந்து கிடக்கும் செல்வப் பெண், பெண்பாலார்க் குச்சிறந்த ஆபரணமானவளென்று நீர் அறிந்தால் அவளைக் கொன்றிருக்கமாட்டீர். ஈனகுலத்தானும் பரம துஷ்டனு மான ஒரு உளவன், இப்பெண்மணியை எங்குந்தொடர்ந்து போய் இவளைக் கல்யாணஞ் செய்து இவளுடைய சொத் தை யெல்லாம் அபகரிக்கும்படி பிரயாசப்பட்டான். இந்த அயோக்கியனை அக்நேசி கல்யாணஞ் செய்யமாட்டேனெ ன்றதின் நிமித்தந்தான இப்படித்தன் இரத்தத்தைச் சிந்தி இறந்தாள்."

இப்படி பபியோலா பேசும்போது தனக்கு எதிரே நின்ற புல்வியனைச் சுட்டிக் காட்டினள்.

புல்வியன் தாண்டிக் குதித்து நடுவில் வந்து :

" இதுவெல்லாம் பொய், அக்நேசி தான் கிறீஸ்துவ ளென்று சொன்னதினலே கொல்லப்பட்டாள்," என்று சொல்ல, பபியோலா மிக்க கௌரவ மேன்மையோடு சொல்வாள் :

" ஐயா அதிகாரியே, நான் சொல்லப்போகிற சங்கதி யைச் சற்றுக் கேட்டு அது மெய்யோ பொய்யோவென்று அறிய, அந்த நீசனுடைய முகத்தைக் குறிப்பாய்ப்பாரும். புல்வியா, இன்றுகாலமே, நீ அக்நேசி இடம் போய், அவள் உன்னைக் கல்யாணஞ் செய்யச் சம்மதித்தால் அவள் உயி ரை நீ காப்பாற்றுவாயென்றும், அவள் கிறீஸ்துவளாயிருப் பதில் பாதகமில்லையென்றும் நீ சொல்லவில்லையா?"

புல்வியன் இடியோசை கேட்ட நாகம்போல் பயந்து ஸ்தம்பாகாரமாய் நின்றான். எதுவும் மறுத்துச்சொல்ல அவன் நா எழவில்லை. அதிகாரி சொல்வான் :

" புல்வியா, உன் திருட்டு விழி நீ குற்றவாளியென்று காட்டுகிறது. நீ செய்தது பெருந் துரோகம். அதற்கு

உரியதண்டனை சாவு. நான் சாவின் தீர்ப்பு சொல்லுமுன் தப்பித்து ஓடிப்போ. இனி உன் முகத்தை எவர்க்குங் காட்டாதே. அம்மா நீதி சட்டப் பிரகாரம் இவனைத்தண் டிக்கவேண்டுமானால் சொல்லுங்கள். உங்கள் பெயரெ ன்ன?

"என் பெயர் பபியோலா."

பபியோலா என்றதைக் கேட்டதும் அதிகாரி, அவள் தனக்கு மருகி ஆவாள் என்ற நம்பிக்கையோடு வெகு பட் சங்காட்டிச் சொல்வான் :

"அம்மா, உங்களைப் பற்றி நான் வெகுவாய்க் கேட் டிருக்கிறேன். அக்னேசி உங்களுக்குச் சொந்த பந்துவெ ன்று எனக்குத் தெரியும். அவளுடைய சொத்து உங்க ளைச் சார்ந்தது."

பபியோலா அவனுக்கு நன்றி சொன்ன பின் சீராவு க்குச் சமிக்கை காட்ட, அவளும் நாலு வேலைக்காரிகளும் வந்தார்கள். அக்னேசியின் பிரேதத்தை பபியோலாவுஞ் சீராவுந் தூக்கி ஒரு பெட்டிக்குள் வைத்து, அதின் மேல் பட்டாடையை விரித்து வேலைக்காரிகள் தூக்கிக்கொண்டு போனார்கள்.

பிரேதத்தை எடுத்துப் போனவுடனே, சூழநின்ற கிறீ ஸ்துவர்கள், ஆண்பெண், பெரியவர் சிறியவர் அடங்கலும், நடுவில் வந்து சிந்தின இரத்தத்தை பஞ்சிலும் வெள்ளைத் துணியிலும் எடுக்கும்போது, சேவகர்கள் அவர்களைத் தடு க்க பிரம்புகளாலுஞ் சாட்டைகளாலும் அடித்தாலுங் கிறீ ஸ்துவர்கள் பயப்படாமல் இரத்தத் துளி ஒன்றும் விடா மல் எல்லாத்தையும் எடுத்து தங்கள் வீடுகளில் வெகுபூஜி தையுடன் வைத்துக் காப்பாற்றக் கொண்டுபோனார்கள்.

குபேரசம்பத்துள்ள அரசன் தனது பட்டாபிஷேக நாளில் பொன்னுந் தங்கமும், முத்துநவரத்னங்களும், எங்கும் இறைத்து கனகாபிஷேகஞ், சொர்ணபிஷேகஞ் செய்யும்போது, ஜனங்கள் எவ்விதம் ஆசையோடு இவைகளை எடுப்பார்களோ, அதிலும் பதின மடங்கதிகமாய் பூர்வீக காலத்துக் கிறீஸ்துவர்கள், வேதசாட்சிகள் சாவேசுரனுக்காகச் சிந்தும் இரத்தத்தை எடுக்க ஆசையுடன் வருவார்கள்.

## உசு-ம். அதிகாரம்.

### பகையும் பழியும் மதியை மயக்கும்.

---

செல்வ அக்நேசி இறந்ததும் தோத்துல்லியன் அரசனிடம்போய், உரோமைப் பிரபுமகளான பாலிய சுந்தரியின் இரத்தத்தைச் சிந்தினதாலே, ஜனங்களுக்குள்ளே அதிர்ப்தியுங் கலகமும உண்டாகிறதென்றும், இதற்கெலலாங் காரணம் புல்வியனென்றும் பலவாறாய்ச் சொன்னபின்பு, அக்நேசியின் சொத்து வெகு சொற்பமென்றும், இதை இராஜன் தானே எடுத்துக் கொள்ளாமல், அக்நேசியின் நெருங்கின பந்துவாகிய பபியோலாவுக்குக் கொடுப்பதால், மகா இராஜா, தம்பிரஜைகளின் உயிரைத் தம் உயிர்போலக் காப்பாற்றும் பரோபகார சிந்தையுள்ள தர்மிஷ்டரென்று எல்லாரும் மெச்சு பேசுவார்களென்றும், தவிரவும், பபியோலா கல்விசாஸ்திர நூற்களில் சாலச்சிறந்த பெண்மணியெனறுந், தேவர்களின் பேரில பக்தி சிரத்தையுள்ளவளென்றும், இராஜாக்களின் தேவத்துவத்துக்கு அனுதினம் பூஜா செய்பவளென்றும், இவ்விதமாக இராயனைப் பசப்பி மயக்கும்படிக்கு ஏற்ற முகஸ்துதிகளைக் கூறினன்.

மாக்சீமியன் இதைக் கேட்டவுடனே குலுங்கச் சிரித்துச் சொல்வான் :

" அந்தப்பேதைப் பெண் நேற்று எனக்கு ஒரு தங்க மோதிரம் அனுப்பி செபஸ்தியான் உயிரைக் காப்பாற்றவேண்டுமென்று, அவனை அடித்துக் கொன்ற பின்பு, கேட்கும்படி வந்தாள். பெரும் பேதை. நல்லது அதிகாரி, நீ ஒரு பத்திரந் தயார் செய்து கொண்டுவா. நாம் முத்திரை பதிந்து கொடுக்கிறோம்."

அதிகாரி தான் வைத்திருந்த பத்திரத்தைக் காட்டி :

" இராஜனே ! தங்களுடைய தயாளமும் உதாரகுணமும் நான் நன்றாய் அறிவதால், இதோ பத்திரத்தை முன்னிதாய் தயார் செய்துகொண்டு வந்திருக்கிறேன்," என்று சொல்ல, அரசன் அதற்கு முத்திரையிட்டபின் அதிகாரி வாங்கித் தன் மகன் கையில் கொடுத்தான்.

தேர்த்துல்லியன் இராஜ சமுகத்தைவிட்டுப் போன உடனே, புல்வியன் இராஜ பேட்டிக்கு வந்தான். இவன் அக்நேசி இறந்தபின்பு தன் வீட்டுக்குப்போய், உடையை மாற்றி, வாசனைத்திரவியங்களைத்தன்மேல் பூசி, அக்நேசி சொத்தில் தனக்கு வரவேண்டிய பாகத்தைக் கேட்கும்படியாய் வந்தான். வந்தவன் மனதில், காரியம் அனுகூலமாகுமென்கிற நம்பிக்கையில்லை. ஆகிலும் 'இது தன் கடைசிப் பிரயத்தனமாதலால், ஆயிரம் வருதோ ஆயிரம் போகுதோ அதைத்தான் பார்க்கலாமென்று துணிந்தான்.

கொலு மண்டபத்திற்கு வந்து அரசனுக்கு தீர்க்க தண்டஞ் சமர்ப்பித்து நிற்கும்போது, மாக்சீமியன் கடுங் கோபத்தோடு, அடா, உனக்கு என்ன வேணும் என்று கேட்க, புல்வியன் சொல்வான் :

"இராஜனே! அக்நேசி கிறீஸ்துவளென்று காட்டிக் கொடுத்தவன் நான். தேச சட்டப் பிரகாரம் அவளைக் கொன்றுபோட்டார்கள். அவள் சொத்தில் எனக்குவரவே ண்டிய பாகத்தை அட்டியின்றி கொடுக்க உத்தரவாகவே ண்டும்"

"அதெல்லாஞ் சரிதான். ஆனால் நீ இந்த அலுவலை முட்டாள் பயல்போல் செய்து கெடுத்துப் போட்டாயெ ன்றும், உன்னால ஜனங்களுக்குள் அதிருப்தியுங் கலகமும் உண்டாகின்றதென்றும் பிரஸ்தாபம். ஆனதால் நீ இச்ச ணமே நமது இராஜதானியைவிட்டு அப்பால் போகவேண் டும். நாம் ஒருவிசை சொன்னதை மறுவிசை சொல்ல மாட்டோம். தெரியுமா?"

"தங்களது இராஜ சித்தப் பிரகாரஞ் செய்ய நான் என்றுந் தயாராய் இருக்கிறேன். ஆனால் எனக்குச் சேர வேண்டிய பாகத்தைக் கொடுக்கும்படி உத்தரவு செய்யுங் கள். நான் நிரம்பவும் ஏழையாய்ப் போனேன், இரா ஜனே."

"மறுவார்த்தையின்றி வெளியே போ. நீ கேட்கும் பாகம் உனக்கு வரமாட்டாது. அக்நேசி சொத்து முழு தும் அவள் பந்து பபியோலா பெயரால் பதிந்து ஆயிற்று."

புல்வியுன் மறு வார்த்தையின்றி எழுந்து அரசனை வணங்கி, எல்லாம் முடிந்தது, இனி வேறு கதியில்லையெ ன்று வாய்க்குள் சொல்லிக்கொண்டு தன் வீட்டுக்குப் போனான்.

இவன் கூட்டாளி எவுரோட்டன் புல்வியனைப் பார் த்து இவன் மூக்கக் குறியால் நம்பிக்கை எல்லாம் அறவே நீங்கினதென்று அறிந்து, இனித் தம் ஊருக்குப் புறப்படுவ துதான் யுக்தமென்று வேண்டிய பிரயத்தனங்கள் செய்

தான். புல்வியன் ஊரை விட்டுப் புறப்படுமுன் 'தனக்கு ஒரு முக்கிய வேலை இருக்கிறதென்று வெளியே போனான். அச்சமயத்தில் எவுரோட்டனும் வில்போர்வீரர் இருந்த தெருவுக்குப் போய் ஜூபலாவை இரகசியமாய்க் கூப்பிட்டு, நஞ்சு கலந்த இரண்டு சிறு குப்பிகளை வாங்கிக்கொண்டான். அவள் இவைகளின் குணத்தைப்பற்றி ஏதோ சொல்லப்போகும் வேளையில், அபாக்யன் குடிவெறியோடு அங்கு வந்ததால், எவுரோட்டன் பயந்து குப்பிகளை மறைத்துக்கொண்டு வெளியே வந்தான்.

இதுநிற்க, பபியோலாவின் சங்கதி என்ன? அக்நேசி இறந்த பின்பு பபியோலா கிறீஸ்துவளானளா? இன்னம் ஆகவில்லை. கிறீஸ்து வேதத்தைப் பற்றி அவளுக்குத் தெரிந்தது எவ்வளவு சொற்பம்! சிபஸ்தியாரும், அக்நேசியும் கிறீஸ்துவர்களாய் இருந்தார்களென்றும், அதினாலே அவர்கள் குணமும், நடத்தையும் வெகு சீராய இருந்ததென்றும், மற்ற மதஸ்தரிடத்தில இல்லாத மன எழுச்சியுங், கௌரவ மேன்மையும், அறநெறி ஒழுக்கமுங், கிறீஸ்து மதஸ்தரிடத்தில் உண்டாய் இருக்கிறதென்றுங் கண்டாள். சீரா தனக்குப் பலமுறை சொன்ன வேத விஷயங்களை யோசித்துப் பார்க்கையில அவளும் அக்நேசியைப் போல் கிறீஸ்துவளாய் இருக்கக் கூடுமென்ற நினைவும் வந்தது. இவ்வளவு தான் பபியோலா கிறீஸ்து வேதத்தைப்பற்றி அறிந்தது.

சேசுநாதர்சுவாமி ஸ்தாபித்த வேதத்திலுள்ள ஆத்தும இரட்சணியத்துக்கு அத்தியாவசியமான பரம சத்தியங்களில் ஒன்றும் இவளுக்குத் தெரியாது. விசுவாசம், நம்பிக்கைத், தேவ சிநேகமென்ற வேத ஆதாரமான புண்ணியங்களைப்பற்றி இவள் கேட்டதில்லை. சர்வேசுரன் தேவ

சுப்ராவத்தில் ஒருவராயினும் அதி அற்புத வகையில் திரித்துவமாய் இருக்கிறுரொனறும், இரண்டாம் ஆளாகிய தேவசுதன் மனுஷர்களுக்காக மனிதனுய்ப் பிறந்து, துன்பப்பட்டு, தமது இரத்தத்தைச் சிந்தி, உயிரைப் பலியூாய்க் கொடுதது இவ்விதமாய் மனிதனை இரட்சித்தார் என்றும், பபியோலா இனனம் அறியவிலலே. சகல நனமை வரங்களே மனிதருக்குக் கொண்டுவருங் காலவாயும், மனுஷர்களுக்கெல்லாம் உத்தம தாயுமான தேவமாதாவைப்பற்றி ஒன்றுந் தெரியாது. சேசு மரியே சூசை என்னுந் தேனினும் இனிய இத்திரு நாமங்களேப் பபியோலா இன்னம் உச்சரித்ததில்லே. மனிதருக்கு இரட்சணிய உதவியாய் சேசுநாதர்சுவாமி ஏற்படுத்திய தேவத்திரவிய அநுமானங்கள் இவையென்றுந், திருச்சபையில் இருக்குஞ் செபதபம் இஷ்டப் பிரசாதமாகிற திரவிய பொக்ஷஙகள் இத்தன்மைதென்றும், இவளுக்குத் தெரியாது.

. ஆகையால் பபியோலா தன் வீட்டுக்குப் பெருந்துக்க பாரத்தோடு போனுளே அன்றி கிறீஸ்துவளாய்ப் போகவில்லே. வீட்டிற் சென்றவுடன் தன் வேலேக்காரரில் எவருந் தன்னிடம் வரக்கூடாதென்று கற்பித்து, அவர்களே வெளியே அனுப்பி, தன் அறைக்குள் தனிவாசமாயிருந்து அன்று நடந்த சங்கதிகளின்பேரில யோசனேயாயிருந்தாள். தாய் தன் கண்ணுக்குக் கண்ணுகவும் பிராணனுக்குப் பிராணனுகவும் வளர்த்தப் பிள்ளேயை இழந்தால் எவ்வளவு துக்கப்படுவாளோ, அவ்வளவு பபியோலா அக்நேசியை இழந்ததால் விசனப்பட்டு சொல்வாள் :

" ஆ அக்நேசி, எவ்வளவு நற்குணம், நற்செய்கையுள்ள செல்வமாது." கபடு சூது அறியாத மாசற்ற சுந்தரி. சர்வ இலெட்சணங்களும் அமையப் பெற்ற குணபூஷணி.

அக்நேசி என்னைவிட்டுப்போன பின் இப்போ எங்கே இரு க்கிறாள்? இந்த உரோமானா மதக் கொள்கைப் பிரகாரங் காற்றாய்ப் பறந்து மறைந்துபோனாளோ? அல்லது ஓர் மிரு கமாய் மாறி மறுபடியும் பிறக்கப்போகிறாளோ? அல்லது சுத்த சூனியமாய் அழிந்து போனாளோ? இவ்விதகதி அக் நேசிக்கு வருவது புத்தி ஞாயத்துக்கும புண்ணிய ஒழுக்க த்துக்கும் பரஸ்பர விரோதமாகும. இப்போ அக்நேசி மகா உன்னத பதவியிலிருந்து பாக்கியம் அனுபவிக்கவேண் டும்.

" நான் அறிந்தவர்களில், எதார்த்தமும், யோக்கிய தையும், நலலொழுக்கமுமுள்ள எல்லோரும், நீசர் மதமெ ன்று சொல்லுங் கிறீஸ்துவ மதஸ்தராயிருப்பது என்ன விகாரமானது? இன்னஞ் சீரா ஒருத்தி மாத்திரம் இருக்கி றாள். அவளை நாளைக்குக் கேட்கவேண்டும்.

" இவர்களைத் தவிர, நான் அறிந்த மற்றவர்களெல்லா ரும் எவ்வளவு அயோக்கியர். பொய், களவு, வஞ்சகம், துர்மார்க்கங், கொடுமை ஒனறுக்கும் அஞ்சாத பெருந் துஷ்டர். புல்வியனுங், தோத்துலவியனும், மாக்சிமியனுங், கல்பூரணனும் இவர்களைப்போன்றவர்களும், மனுஷ சுபா வத்துக்கு அவமானமான கொடிய பாபிஷ்டர்."

பபியோலா இவ்விதமாய் யோசிக்கும்போது, அவள் மனம் நிலையின்றி பாசிபோல் தளம்பி அலைந்தது. பாலை வனத்தின் மணற்காட்டுத்தரையில் நடக்கிறவன், அமிர்த ஜலமுள்ள ஊற்றைக் காணவிட்டால் உபத்திரவப் படுவது போல், இவளும் காய்ந்து, வரண்டு, தன் மனதின் ஆசை யைத் தணிக்க திவ்வியமான ஜலம் எங்கேயிருந்து வரக் கூடுமென்று அறியாததால் மயங்கிச் சோர்ந்தாள்.

இவ்விதஸ்திதியிலிருக்கும்போது, மகா இராஜாவினிட மிருந்து ஒரு தூது வந்திருக்கிறதாக காரியஸ்தன் அறிந்து, அவனைப் பபியோலாவினிடத்தில கூட்டிப் போகாவிடில், அது அரசனுக்கே அவமானமாகுமென்று பயந்து, உள்ளே அவனை அனுப்பினான்.

உரோமைச் சக்கரவாத்தியினிடமிருந்து தூதாய் வந்தவனையும், அவனிருந்த கோலத்தையும், பபியோலா பார்த்து அதிசயித்து நின்றாள். தூதாய் வந்தவன் கோர்வீனன். வெகு விகாரமான உடை அணிந்து, ஆசார உபசாரங்களைப் பெருமிலேச்சனைப்போல் செய்து, தான் மனப்பாடமாய் உருப்போட்டு வந்த அர்த்த சாரமற்ற இழிமொழிகளை அறைகுறையாய் படபடப்புடன் சொல்லி, கடைசியில் அக்நேசியின திரவிய பூஸ்திதிகளைப்பற்றிய இராஜ கட்டளையையுந் தனது எதார்த்தமான காதலையுஞ் செல்வமாதின் பாதத்தில வைப்பதாக முடித்தான்.

இம்மிலேச்சன் இராஜ கட்டளையையுந் தன்காதலையுங் கூட்டிச் சொன்னதின் பயன் பபியோலா கண்டுபிடியாமல், கோர்வீனனைப்பார்த்து, தான் அரசனுக்கு மெத்த நன்றி அறிந்திருப்பதாகவுங் கூடுமானபோது நேரே வந்து அவருக்கு வந்தனஞ் சொல்வதாகவுஞ் சொல்லி அனுப்பினாள்.

அதற்கு கோர்வீனன் மனந்தடுமாறிச் சொல்வான்: "அம்மா, பூங்கொடிமாதே, இந்த சொத்துகள் எல்லாம் பறி முதலானபோது என் தகப்பனார் தான் வெகு பிரயாசையுடன் உங்கள் பேருக்குப் பதியும்படி செய்தார்."

"இவ்வளவு பிரயாசை அவசியமில்லை, ஏனெனில் அக்நேசியின் சொத்துகள் எல்லாம் என் பேராலே வெகு

காலத்துக்கு முன் பதிவாய் இருக்கிறது. இதின் நிமித்தம் இவைகளைப் பறிமுதல செய்வது தேசசட்டத்துக்கு விரோதம்."

கோர்வீனன் என்ன சொல்வது என்று அறியாமல் திண்டாடி விழித்தான். அதன் பின்பு அவளைப் பாணிக்கிரகணம் பண்ண தனக்குள்ள காதலை மறைவாய்க் குளறும்போது, பபியோலா அதைக் கண்டு பிடியாமல் தன்னிடம் ஏதோ பரிசு கேட்கிறானுக்குமென்று, நல்லது, பார்த்துக்கொள்ளலாமென்று சொல்லி அனுப்பிவிட்டாள்.

கோர்வீனன் தான் கோரிப்போன மணமுகூர்த்தம் அனுகூலமாய் முடியுமென்று அக்களிப்புடன் வீட்டுக்குப் போனான்.

அவன் போன பின், பபியோலா தனியே இருந்து கடந்த விஷயங்களைப்பற்றி முன்போல் யோசித்துக்கொண்டிருந்தாள். சூரியன் அஸ்தமிக்க இன்னம் இரண்டு நாழிகைதான் இருந்தது. அன்று காலமே புல்வியனோடு நடந்த சம்வாதம் அவள் நினைவில் வந்தது. அதை நினைக்கவும் மனதில் கோபம் பொங்க, அதை அடக்கிச் சொல்வாள் : "அந்தப் படு பாவி முகத்தில் இனி நான் விழிக்கவே மாட்டேன். இன்றோடு துலைந்து போனான்."

இந்த வார்த்தைகளைச் சொல்லிமுடிக்கவே, கதவின் கிட்ட யாரோ ஒருவன் நிறபதாகக் கண்டாள். இது வெறுங் கனவோ நினைவோவென்று மனதில் போராடிக்கொண்டிருக்கையில், அங்கு நின்றவன் கிட்ட வந்து கேட்பான்:

"அம்மா, நீங்கள் யாரை நினைத்து அந்த ஆசீ வசனங் கூறினீர்கள் ?"

பபியோலா கடுங் கோபத்தோடு சொல்லுவாள் :

"புல்வியா, உன்னை நினைத்துத்தான். நீ தான் நான் இருக்கும் வீட்டுக்குள்ளும், அந்தரங்கமான அறையிலும் துராகிருதமாய்ப் பிரவேசிக்கிறவன். அக்நேசியை நீ இன்று கொன்றதைப்பற்றி நான் துக்கமாய் இருக்கும் நாளிலும் என் வீட்டுக்குள் வந்திருக்கிறாய். மறுவார்த்தையின்றி வெளியே போ. இல்லாவிட்டால என் ஊழியர்கள் வந்து உன் பிடரியைப் பிடித்து வெளியே தள்ளுவார்கள்."

"தள்ளும்போது பாாக்கலாம், ஆனால் நான் இப்போ சொல்லுவதைப் பதறாமல் கேள். இதுதான கடைசிவிசை நான் உன்னைப் பார்ப்பது. நம்மிருவருக்குமுள்ள பலநாள் கணக்கை தீர்க்கவேண்டும். உன் ஊழியா வந்து என் பிடரியைப் பிடித்துத் தள்ளுவதை நீ கவனிக்கவேண்டாம். அவர்களுக்கு நீ கொடுத்த உத்தரவுப் பிரகாரம எல்லாரும் வெளியே போய்விட்டாாகள். நீ கதறி அலறினாலும் அவர்கள் கேட்கமாட்டார்கள்."

புல்வியன சொன்னது மெய்தான. கோர்வினன் வெளியே வந்த சமயம் பார்த்து இவன் உள்ளே போய், தானும் இராஜ தூதாய் வந்ததாகச் சொன்னபோது, தூதின்மேல் தூது இன்று வருவதால ஏதோ விசேஷம இருக்க வேண்டுமென்று ஊழியர்கள் எண்ணி, ஆச்சரியப்பட்டுச் சற்றுத் தூரத்தில போய் சாவகாசமாய் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

புல்வியன் பபியோலாவுக்கு எதிரில் உட்கார்ந்து சொல்வான் :

"அம்மா, உன் வீட்டுக்குள்ளே உன் அனுமதியின்றி வந்ததைப்பற்றியும், நீ என்னைக் குறித்து சொன்ன வசை மொழிகளை நான் மறைவில் நின்று கேட்டதைப்பற்றியும்,

நீ ஆயாசப்படவேண்டியதில்லை. துல்லியன் என்ற' சிஸ்ற யில் நீ எனக்குப் படித்துக் கொடுத்த பாடத்தைத்தான் நான் உனக்கு ஒப்பித்தேன். ஆனால் என் கணக்கு அத ற்கு முந்தியே துவக்குகிறது. உன் தகப்பனார் வீட்டுக்கு முதல் விசை நான் வந்த போது அங்கே யிருந்த ஒப்பற்ற யௌவன சுந்தரியை நான் பார்த்தவுடனே அவள் பேரில் எனக்குக் காதல் உண்டாக, அவளும் என் ஆசைக்கு இசைவாய் வந்தாள்."

"அடா மூடா! உனக்கும் அக்நேசிக்கும் எள் பிர மாணமும் ஸ்நேகம் இருநததில்லை. நீ சொல்வது பொய்."

"கேள் பபியோலா. அக்நேசி மனதில் என் பேரில் காதல் இருந்ததென்று உன் தகப்பனாரே பலமுறை சொன் னார். அவர் எங்கள் இருவருக்கும் நல்ல முகூர்த்தத்தில் கல்யாணம் நடக்கவேண்டுமென்று ஆவலாய்க் காத்திருந் தார்."

"என் தகப்பனாருக்கு அக்நேசியின் குணமுங் கருத் தும் நன்றாய்த் தெரியாததால் இப்படிச் சொல்லியிருக்க லாம். ஆனால் அக்நேசி எனக்கு ஒன்றும் மறைத்தறி ல்லை."

"ஒன்று மறைத்ததில்லை. அவள் தான் கிறீஸ்துவள் என்பது ஒன்று மாத்திரம் மறைத்து வைத்திருந்தாள் அல் ல்வா?"

"போதும், புல்வியா, போதும். வீணில் வம்பளக் காதே. அக்நேசி உன்னைப் பார்க்கும்போதெல்லாம் நச் சு நாகத்தைப் பார்த்தாற்போல் அஞ்சினாள். இது வாஸ் தவம்."

"ஆமா. அதற்குக் காரணம் யார்? நீயுஞ் செபஸ்தியா னுங் கூடிக் கொண்டு, என்மேல் இல்லாததும் பொல்லா

தரும் அக்நேசியினிடஞ் சொல்லி அவள் மனதைக் கலக்கி, என்னை நீக்கி வைத்து, சிபஸ்தியானை அவள் மணமுடிக் கும்படியாய் நீங்கள் பிரயாசப்பட்டீர்கள். அவனுக்குத் தக்க தண்டனை கடைசியில வந்தது."

"புல்வியா........"

"வீணாய் கோபிப்பதில் பலனில்லை. நான் சொல்ல வேண்டியதெல்லாஞ் சொன்னபின தான் போவேன். நீ எனனை அவமானபபடுத்தினாய். அக்நேசி பேரில் என் மனதிலிருந்த சிநேகத்தைக் கடும் பகையாக்கினாய்."

"சிநேகமா? உன் மனதில் அக்நேசி பேரிலா? அக் நேசியின் எதார்த்தம, விவேக விளக்கம், கற்பு, நாணம், மாசற்ற குணமுதலிய சிறந்த இலட்சணங்களின் மணமும் நீ அறிவாயா? கொடிய கோநாய்க்கு ஆட்டுக் குட்டியின் சாது தெரியுமா? புறாவின் கபடமின்மையைப் பிராந்து மதிக்குமா? நீ ஆசைப பட்டு தேடினதெலலாம் அக்நேசி யின் சொத்து. இதற்காகத்தான நீ அம்மாதைச் சுற்றிச் சுற்றி, மாய நட்புக்காட்டி, கள்ளவேஷம்போட்டு, அவளை உன் வலைக்குள் இழுக்கமுயன்று வநதாய்."

"நீ சொல்வது பொய், அக்நேசியைக் கல்யாணம பண்ணும்படி வேண்டிய நிதி என் கையிலிருந்தது."

"சீ! புல்வியா, உன் பூர்வோத்திரமெல்லாம் ஊரெல் லாம் அறியுமே. புஷ்பகவிமானத்திலிருந்து குதித்தவன் போல் நீ வெகு டம்பமாய்த்திரிந்தாலும் இதுவெலலாம் மற் றவர் வாயில் மண்போட நீ எடுத்த வேஷமல்லவா? போ, இங்கே நிற்காதே. நீ கால் வைக்கும் இடத்தில் கொள்ளை நோய் உற்பத்தியாகும்."

"அவ்வளவு சீக்கிரம் நான் உன்னைவிட்டுப் போவதி ல்லை. கேள், ஆணவங்கொண்டபேதையே! நீ என் பிதை

ப்பைக் கெடுத்தாய். என்னை ஜாதிப் பிரஷ்டனுக்கினுய். எல்லாரும் என்னைப் பழித்து நகைக்கும்படி செய்தாய். நான் உளவனென்றுங், களவனென்றுங், துரோகியென்றுங், துன்மார்க்கனென்றும், ஊரெல்லாங் கேட்க பறை அடித் தாய். இன்று காலமே நாலுபேர் கூடிய சபையில், நகர் அதிகாரிமுன், நீ பெண்களுக்கு இயல்பாயுள்ள நாணத்தைக் காலால் மிதித்து, என்பேரில் பெரும்பழி சுமத்தி, எல்லார் பகையையுமூட்டி, தகாத வசைகளைச சொல்லி, வாயில் வந் தபடி தூஷித்தாய். ஆஹா ! இலட்சணமே ! குலமாதர்க் குரிய குணத்தால் சிறந்தவளே !"

"புல்வியா, கேள். இந்த இராஜதானியை விட்டு எவ் வளவு சீக்கிரத்தில் நீ போவாயோ அவ்வளவு சீக்கிரத்தில் தர்மமும் புண்ணியமுந் தழைத்துச் செழித்து ஓங்கி வளரு ம். நீல்லது என் வீட்டை விட்டுப் போ. நீ போகாவிட் டால் நானே போவேன்." என்று சொல்லி பபியோலா எழுந்திருந்தாள்.

"நானும போகமாட்டேன், நீயும் அசைய மாட் டாய்" என்று புல்வியன் சொல்லி, அவள் கையைப் பலா த்காரமாய்ப் பிடித்து அவள் இருந்த ஆசனத்தின் மேல் தள்ளினபின்பு சொலவான் :

"எச்சரிக்கை, என் கையை விட்டு நீ தப்பிக்கப் பார் த்தால், அல்லது யாரையாவது துணைக்குக் கூப்பிடும்படி நீ கூக்குரலிட்டால், அதுவே உன் உயிருக்குக் கடைசி முடிவாகும். கேள், நீ என்னை இவ்வளவு தூரம் அவமா னப் படுத்தின பின்பு எனக்கு வரவேண்டிய சொத்தையும் நீ அபகரித்துக் கொண்டாய் நீலி ! எனக்குச் சொந்தமா னதை நீ திருடிக்கொண்டாய்."

பபியோர்லா, பொங்கி எழும்பிய கோப மிகுதியால் தனக்கு வர இருந்த ஆபத்தைக் கவனியாமல் சொல்வாள்:

" அடா கொடியா, என் சொந்த வீட்டில் நீ இருந்து கொண்டு என்னைத் திருடி என்று சொல்லவுந் துணிந் தாயா ?"

" நீ திருடி, பெருந்திருடி. அதற்கு இதுதான் கணக்குக் கொடுக்கும் நாள். அக்நேசி சொத்தில எனக்குப் பங்கில்லையா? அக்கிரமத்தாலோ, அநியாயத்தாலோ, எவர் குடியைக் கெடுத்தாலோ, இருக்கட்டும், இதை நான் பெறும்படியாய், இராப் பகல் தூக்கமின்றி, மனக்குத்தின் உபத்திரவத்தால் அவஸ்தைப்பட்டு, பலபேருடைய வசை மொழிகளைத் தாங்கி, தக்க திர்ஷ்டாந்தந் தேடும்படி நாலு திசையிலும் நாய் போல் அலைந்து திரியவில்லையா? இவ்வளவு உழைத்த பின்பு எனக்குப் பங்கில்லாமற் போமா? இரத்தத்தைச் சிந்திய பழி பாதகத்தால் வந்த பணம் என் பாயோ ? இருக்கட்டும். நாய் விற்ற காசு குலைக்குமா ? நரகலில் முளைத்த செடி நாறுமா ?"

பபியோலா தன் முன் நிற்பவன் கோப மிகுதியால் வெறிகொண்டு, மதியிழந்து, தன் சுய அறிவின்றி, பேசுகிறான் என்று கண்டு சற்றுப் பயந்தாலும், மன நிலைமாறாமல், அஞ்சாத் துணிவோடு அமர்ந்து பேசி, புல்வியனை உற்று நோக்கிச் சொல்வாள் :

" புல்வியா, என் வீட்டை விட்டு தயவு செய்து போ. உனக்குப் பணம் வேண்டுமானால், நான் கொடுக்கிறேன்."

" அக்நேசியின் பணந்தான் எனக்கு உரிய பணம். நீ அதை அநியாயமாய் அபகரித்தாய். அதென்ன மேஜை மேல் இருப்பது ? இராஜ முத்திரையுள்ள பத்திரமா? என்

படி இவ்வளவு சீக்கிரத்தில் உன்னிடம் வந்தது? அக்நேசி சாகுமுன் இதைத் தயார் செய்து அவள் எப்போ தொலைந்து போவாள் என்று நீ காத்திருந்தாய் அல்லவா? ஆஹா! நீலி! வெளிக்கு மாத்திரம் தர்ம தேவதைபோல் நடித்தாய்! அக்நேசிபேரில் பட்ச பாந்தவமுள்ளவள் போல பதறி உதறினாய்! அவள் சிறையில் இருக்கும்போது வெகு துக்கப்பட்டவள் போல கள்ளக் கண்ணீர் சிந்தினாய்! வேஷம் போடுவதில் மகா சமர்த்தி! இவையெல்லாஞ் செய்துகொண்டே அக்நேசியின் சொத்துகளை எல்லாஞ் சுருட்டி மடக்கும்படி இரகசியமாய் இந்தப் பத்திரம் எழுதி, மாக்சீமியனுக்குத் தூபங் காட்டி மயக்கி இராஜ முத்திரைப் பதியச் செய்தாய்! ஆஹா பபியோலா! உன் பவுஷு எல்லாம் இவ்வளவு தானோ?"

"அடா புல்வியா, போதும், போதும், என் வீட்டை விட்டு வெளியே போ."

"இன்னங் கேள். இப்படி எனக்குச் செல்லவேண்டிய பணத்தை நீ கபடமாய் அபகரித்துக்கொண்டு, கையில் ஓடு எடுத்துப் பிழைக்கும்படியான ஸ்திதியில் என்னை விட்ட பின்பு, இப்போது என்மேல் இரக்கமுள்ளவள்போல் நீ எனக்குத் தர்மஞ் செய்ய வருவது மகா யோக்கியம்!"

பபியோலா போகும்படி மறுபடியும் எழுந்தபோது புல்வியன் அவள் கையை உன்மத்தன் போல் குரங்குப் பிடியாய்ப் பிடித்து, கண்களிலிருந்து நெருப்புப் பொறி பறக்கச் சொல்வான்:

"கேள், இது தான் உனக்காகிலும் எனக்காகிலும் கடைசி வார்த்தை. நீ அநியாயமாய் அபகரித்த சொத்தை எனக்குக் கொடு. துரோகஞ் செய்தவன் நானாகவும்

அதின் பலனை அனுபவிப்பவள் நீயாகவும் இருக்கக்கூடாது. என் அக்கிரம செய்கையால் நான் சம்பாதித்ததை என் பெயருக்குப் பதிந்து கொடு. அப்போத் தான் நான் போ வேன். இல்லாவிடில் நீயே உனக்குச் சாவின் தீர்ப்பைப் பதிந்து கொடுப்பாய்.''

பபியோலாவின் சௌரிய வீரமும், மனதின் திட்ப முஞ், சற்றுந் தளரவில்லை உரோமைப் பிரபு புத்திரிக்கு ரிய இராக்ஷஸ மன வலியும், அஞ்சாத் துணிவும், பேராண் மையும், ஆபத்து மிகவே அவையும் பெருகி மிகுந்தன. விரிந்து பரவிய தனது உடையைக் கூட்டிச் சேர்த்து, சிற ந்த கௌரவ ஆண்மை முகத்தில் விளங்கச் சொல்வாள் :

"புல்வியா, நான் சொல்வதைக் கேள். இதுதான் என் கடைசி வார்த்தையானாலும் இருக்கட்டும். அக்நேசி யின் பூஸ்திதியை உனக்கா கொடுக்கும்படி நீ கேட்கிறாய்? வழியிலிருந்து பிச்சை எடுத்துப் பிழைத்து வரும் எவனுக் காவது கொடுப்பேன். உனக்கு அக்நேசியின் சொத்தில் இருந்து ஒரு காசுங் கொடுக்கமாட்டேன். உன் கை எதை யுந் தொட்டால் அது அவலட்சணமாகும். எனக்குச் சொந்தமானதில் உனக்கு எவ்வளவு வேணடுமோ அவ்வ ளவு எடுத்துக்கொள். நேற்று இராத்திரி அக்நேசிக்கு நீ சொன்னதுபோல், எனக்கும் ஜீவனோ சாவோ எது வேண் டுமென்று கேட்கிறாய்? இவ்விரண்டில் எதை நான் கேட் பது யுக்தமென்று அக்நேசி எனக்குக் காண்பித்தாள். போ, என் வீட்டில் நிறகாதே.''

"போகவா? நான் பாடுபட்டுத் தேடிய சொத்தை உன் கையில் விட்டு நான் ஓடெடுத்து பிச்சைவாங்கவா? நீ செல்வமுள்ள சீமாட்டியாய் சுகமாய் வாழ, நான் கை

யில் காசின்றி காற்றுய்ப் பறக்கவா ? இது கூடாது. என்னைத் தரித்திர தசையிலிருந்து இரட்சிக்க உன்னுற் கூடாவிட்டால், நீ அநியாயமாய் அபகரித்த சொத்தை அனுபவியாதபடி தடுக்க என்னுற் கூடும். இதற்காகத் தான் நான் இங்கே வந்தேன். இதுதான் பழிவாங்க என்நாள். இதோ எமன் ஓலை, வாங்கிப்படி."

புல்வியன் இவ்விதம்பேசும்போது, தன் இடதுகையால் பபியோலாவைப் பிடித்து, வலதுகையால் தன் நெஞ்சின் உடையின் கீழ் மறைத்து வைத்திருந்த கட்டாரியை மெதுவாய் எடுத்து, பேசிமுடிந்ததும அவளைக் கீழே தள்ளி, தலைமயிரைக் கையால் பிடித்தான். பபியோலா அவனை எதிர்த்துப்போராடவில்லை. கதறி அலறிப் பதறவில்லை. சோமதாபமாய மயங்கினதாலும், உரோமைப் பிரபு புத்திரிக் கியலபான சுயயோக்கியதையாலும் ஒனறும் பேசவில்லை. கீழே விழுந்தவள் தன் கண்களை மூடும் போது மின்னலைப் போல் பளிச்சென்று ஏதோ ஒன்று மின்னுவதாகக் கண்டாள். புலவியனுடைய அக்கினி கக்குங் குரூர கண்களோ அலலது ஒளிவிட்டு மின்னிய கட்டாரியோ ?

கண்களை மூடின மறு நிமிஷத்தில் தன்மேல் ஏதோ பெரும் பாரம் விழுந்து கிடப்பதாகத் திணறி திக்கு முக்காட, அவள் மேல் இரத்தம் பொங்கி கொதித்து ஓடுவதை உணர்ந்தாள்.

அச்சமயத்தில் மெல்லிய குரல் சப்தம் இவள் காதில் சப்தித்தது : " ஆ! ஓரோன்சியா, கொல்லாதே, கொல்லாதே, நான் உன் சகோதரி மீரியா."

புல்வியன் கடுஞ் சினத்தோடு : "அது பொய், பொய், என் கையைத் தடுக்காதே, என்று சொல்ல, பபியோலா

அறியாத ஓர் பாஷையில் இருவரும் ஏதோ சொன்ன பின்பு, அவன் தன் பிடியை விட்டு, கையிலிருந்த கட்டாரியைக் கீழே வீசி எறிந்து, அந்த அறையை விட்டு வெளியே ஓடும்போது கதறிச் சொல்வான் :

"ஓ கிறீஸ்துவே ! நீயே என்னைப் பழிவாங்கினாய் !"

பபியோலாவுக்கு அறிவும் பெலனும் திரும்பி வர தன் மேல் கிடந்த பெரும் பாரத்தைக் கையால் தூக்கி கீழே தள்ளி, எழுந்து பார்க்கும்போது ஓர் பெண் இரத்தத்தில் தோய்ந்து செத்தாற்போல் கிடப்பதைக் கண்டாள்.

இப்படிக் கிடந்தவள் விசுவாசந் தவறாத சீரா. பபியோலாவும் புல்வியனும் சமவாதஞ் செய்து, புல்வியன் தன் கட்டாரியை எடுத்து வீசுஞ் சமயத்தில், சீரா தற்செயலாய் வந்தவள் தன் எஜமானியின் உயிரைக்காப்பாற்ற தன் உயிரைப் பலியாய்க் கொடுத்தாள்.

---

## உரு-ம் அதிகாரம்.

### குருவும் பண்டிதரும்.

---

தர்மகுண பூஷணி சீரா காண்பித்த உத்தம சிநேகத்தின் அடையாளத்தை பபியோலா கண்டு பிரமித்து நின்றாலும், அவள் பட்ட காயத்திலிருந்து இரத்தம் மளமளவென்று ஓடிவந்ததால், அதைத் தடுக்கும்படி கீழே கிடந்த துணியை எடுத்து காயத்தைக் கட்டிக் கொண்டிருக்கும்போது, வேலைக்காரர், புல்வியன் வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்த அலங்கோலத்தைக் கண்டு, ஏதோ மோசம் வந்திருக்கவேண்டுமென்று உள்ளே ஓடி வந்தார்கள்.

பபியோலா அவர்கள் எல்லாரையும் வெளியே நிற்கும்படி செய்து, யுபுரோசினுளையுங் கிரோசியாவையும் மாத்திரம் உள்ளே தனக்குத் துணையாய்க் கூப்பிட்டு வேலைக்காரரில் ஒருவனை, தியோனீசியுஸ் என்ற பண்டிதனை உடனே கையோடு அழைத்து வரும்படி அனுப்பினாள். வைத்தியர் வந்து சீராவின் காயத்தைச் சோதித்துப் பார்த்து இப்போதைக்கு அவ்வளவு மோசமில்லை என்று சொன்னார். புல்வியன் பபியோலாவின் நெஞ்சுக்கு நேரே தன் கட்டாரியை எய்யப் போகுஞ் சமயத்தில், இவன் செய்த சத்தத்தைக் கேட்டு அங்கு மெதுவாய் வந்த சீரா, தன் எஜமானிக்கு வர இருந்த பிராணபத்தை விலக்க, அவள் முன்னே பாய்ந்து வர, கட்டாரி இவள் கழுத்தில் பட்டது. புல்வியனுடைய கையிலிருந்த ஆயுதத்தைப் பறித்து அவனைத் தடுக்க தன்னுற் கூடாதெனறும், கூச்சலிட்டு மற்ற வேலைக்காரரைக் கூப்பிடுவதென்றால், அதற்குள் படுகொலை முடிந்துபோகுமென்றுஞ் சீரா நினைத்து, தன் செல்வ சீமாட்டியின் உயிரைக் காப்பாற்றத் தன் உயிரை பலியாய்க் கொடுக்கத் துணிந்து நடுவில் வந்தாள்.

ஆகிலுஞ் சகோதரனே தன் உடன் பிறந்த சகோதரியைக் கொல்லுங் கொடுந்துரோகத்துக்குப் புல்வியன் உள்ளாகாதபடி, தான் யாதொன்று அவனுக்கு அந்த சமயத்தில் சொல்லி அதின் திருஷ்டாந்தமாக அவன் அந்த வீட்டிலே சில வருஷங்களுக்கு முன்னே எடுத்த ஜரிகைத் துண்டின் விஷயத்தை அவனுக்கு ஞாபகப்படுத்தினாள்.

தியோனீசியுஸ் என்பவர், காயத்தைக் கட்டி பிரஞ்ஞையின்றிக் கிடந்த சீராவுக்கு வைத்தியோபசார பக்குவங்கள் செய்து, சித்தஸ்வாதீனம் அவளுக்கு வந்தபின், அவள் சத்தம் சந்தடி இன்றி அமர்ந்திருக்கவேண்டுமென்

றும, அடுத்தநாள் அதிகாலையில் அவளைப் பார்க்க வருவ தாகவுஞ் சொன்னபின், சீராவின் காதுக்குள் ஏதோ ஓர் இரகசியஞ் சொன்னார். அதைக் கேட்டவுடனே சீராவின் முகஞ் சந்தோஷத்தால் பூரிக்க, அவர் பிரயோகித்த ஏந்த அவுழ்தத்தைப் பார்க்கிலும இது அதி உத்தமமாகத்தோன் றினது.

பபியோலா சீராவை நவமணிகள் அழுத்திய அழகிய தன் மஞ்சத்தில கிடத்திவேலைக்காரர் எலலாரையும் வெளி யில் இருந்த அறைக்கு அனுப்பிவிட்டு, அகோராத்திரம் தன் அடிமையின் கிட்ட இருந்து அவளுக்கு வேண்டிய உதவி எலலாந் தன் கையாலே செய்தாள்.

இப்பெண்களின் நாயகம், தானே மிகவுங் களைத்துச் சோர்ந்து புல்வியனோடு செய்த சமவாதத்தால் சுரங்கொ ண்டவள் போலே வருநதினாலும, நடுச்சாமமட்டும் சீரா வின் கிட்ட இருந்து, பண்டிதர் குறித்த பல அவுழ்தங்க ளைக் கொடுத்து வந்தாள். அதன் பின் சற்று இளைப்பா றும்படி சீராவின் கட்டிலின கிடட படுக்கப்போனாள். அச் சமயத்தில பபியோலாவின் நினைவில், சீரா தனக்கு அற நெறி ஒழுக்கத்தைப்பற்றி சொன்ன தர்ம படிப்பினைகள் எல்லாம் வந்தது : பபியோலா சொல்வாள் :

"இவைகளை நான் கேட்டபோது, அவைகள் அதி அற்புதமான வெறுங் கோட்பாடுகளே அன்றி, அனுஷ்டிக் கத் தக்கவைகள் அல்லவென்று தோன்றின. புண்ணிய கிரியை செய்யும்போது, மனிதர் அதைப் பார்த்து மெச் சுக் கொள்ளத் தேடாமல், எங்கும் பிரசன்னராய் இருக் குஞ் சர்வேசுரன் ஒருவர் பார்த்தால் போதுமென்று என் ணிச் செய்வதே உத்தம தர்மம் என்று சீரா சொன்னதே

போது, இது கேட்கப் பிரியமானதாயினும், அனுசரிக்க'சா த்தியப் படாதென்று நான் எண்ணினேன். சீராவோ,அன்று எனக்குச் சொன்னதுபோல் இன்று நடந்து காண்பித்திருக் கிருள். எனக்குப் பதிலாய் சாகும்படி இவள் நடுவில வந்தபோது யாருடைய புகழ்ச்சியையுந் தேடி இவள் வரவில்லே. இவள் சொல்லுஞ் செய்கையும் என்றும் இசைவாய் வேறுபாடின்றி இருக்கின்றன. இவ்விதம் மனம், வாக்கு, செய்கை ஆகிய இம்மூன்றையுஞ் சரியான நிலேயில் சேர்த்து, ஒன்றுக்கொன்று பேதமின்றி, நல்லொழுக்கத்தில நடக்கும்படி செய்யத்தக்கது வீண் சாஸ்திர நூலாய் இருக்கக்கூடாது. இதுவே அதி உத்தம ஏற்பாடுகளும், மனச்சான்றைக் கட்டத் தக்க ஒழுங்குகளும், அடங்கிய ஓர் வேதமாய் இருக்கவேண்டும். அவ்வேதமுந் தனி முதற்கடவுளே அறிவித்துப் படிப்பிக்குஞ் சத்திய வேதமாய் இருப்பது அவசியம். சீராவின் வேதமும், அக்நேசி, சிபஸ்தியார் அனுசரித்த வேதமும் ஒன்ருய்த் தான் இருக்கவேண்டும். இம்மூவரும் ஒரே மரத்திலிருந்து காய்த்த திவ்வியமான கனிகள். சீராவுக்குக் கொஞ்சஞ் சௌக்கியமானவுடன் அவளிடத்தில் இதின் விவரங் கேட்கவேண்டும்.''

மறுநாள் அதிகாலேயில் பண்டிதர் சீராவைப் பார்க்க வந்தபோது அவளுடைய சௌக்கிய விர்த்தியைக் கண்டு சந்தோஷப்பட்டு, அங்கு இருந்தவர்கள் எல்லாரையும் வெளியே அனுப்பி, சீராவுடன் தனியே இருந்தார். மேஜை மேலே சுத்தமான வெள்ளேத் துணியை விரித்து, இரண்டு மெழுகு வத்தியில தீபம் ஏற்றி, தமது உடைக்குள் மறைத்துக்கொண்டு வந்த தங்கத்தாலான சிறு சிமிழை வெளியே எடுத்து மேஜைமேல் பூஜிதையுடனே வைத்து, முழந்

கர்லிலிருந்து தேவநற்கருணையில் மறைந்திருந்த சேசுநாதர்சுவாமியை ஆராதித்தார்.

அதன்பின் சீராவின் கிட்ட வந்து சொல்வார்: "மகளே! இதோ சேசுநாதர்சுவாமி உன்னைத் தேடி வந்திருக்கிறார். இவர்தான் மெய்யான பண்டிதர். இவரோ ஆத்துமத்திலுஞ் சரீரத்திலுமுள்ள வியாதிக்குப் பரம அவுழ்தம். தாய் தன் பிள்ளையை பால் ஊட்டி வளர்ப்பதுபோல சேசுநாதர்சுவாமி, தாயிலும் உத்தம தாயாய், உனக்குத் தமது சரீரத்தையும் இரத்தத்தையும் போஜனமாக இதோ அப்பத்தின் குணங்களுக்குள் வைத்துக்கொடுக்கப் போகிறார். மகளே, சேசுநாதரை உன் இருதயத்துக்குள் அழைக்க ஆசையாயிருக்கிறாயா?"

" ஓ! சுவாமி! மெத்த ஆசையாயிருக்கிறேன். இவரை என் முழு இருதயத்தோடு சிநேகிக்கிறேன். இவரிடத்தில் நான் அத்தியந்த விசுவாசமாயிருக்கிறேன். இவருக்கு நான் முழுதுஞ் சொந்தமானவள்."

" மகளே! உனக்குத் தீமை செய்தவனை நீ பூரணமாய் மன்னிக்கிறாயா? நீ செய்த தாம கிரியையைப்பற்றி உன் மனதில் வீண் பெருமையான நினைவு உண்டாகின்றதா? இந்த அதி உந்நத தேவநற்கருணையை நீ யோக்கியமாய்ச் சாப்பிடும்படி உன் மனது சுத்தமாயிருக்கின்றதா? பாவம் நீ ஏதாவது செய்ததாய் ஞாபகமிருக்கின்றதா?"

"சுவாமி நான் பெரும் பாவியாயிருந்தாலும் என் மனதறிய பாவம் யாதுஞ் செய்ததாக நினைவில்லை. எனக்குப் பொல்லாப்புச் செய்தவனை, நான் மன்னியாதே போனால் யார் மன்னிப்பார்? அவன் ஆத்துமத்தை இரட்சிக்க என் உயிரையே கொடுக்கவேண்டியிருந்தாலுங் கொடுப்பேன். நான் செய்ததைப் பற்றி ஏன் அகங்காரங் கொள்

ளவேண்டும்? என் ஆண்டவரின் அபாத்திர அடிமைநான். நான் செய்யும்படி கடமைப்பட்டிருந்ததைத் தான் செய்தேனே அன்றி வேறு நூதனம் ஒன்றுமில்லை.''

"மகளே! இதோ சேசுநாதர்சுவாமி! இதோ உனக்காக தமது உயிரைக் கொடுத்த தேவசுதன்! உன் இருதயத்தில் அவர் வரும்படி ஆசையாயிருக்கிறார். சீக்கிரம் வரும்படி ஆசையோடு கூப்பிட்டழை.''

"ஆண்டவரே! என் இருதயத்தின் மதுர சேசுவே! எழுந்தருளிவாரும். நான் உமது அடிமை. ஆண்டவரே! தேவரீர் என் குடிசைக்குள் வரும்படி நான் பாத்திரமல்லவே. ஒரே வார்த்தை மாத்திரம் சொன்னால் போதும். என் ஆத்துமம் பூரண சௌக்கியம் அடையும்.''

பண்டிதராய் வந்த குரு தேவநற்கருணையைத் தமது கையிலெடுத்து மீரியாவின் நாக்கில் வைத்தார். மீரியா தன் இருகண்களை மூடி தன் இருதயத்தில் எழுந்தருளி வந்தவரை ஆராதித்து ஸ்தோத்திரம் செய்தாள்.

சேசுநாதர் சுவாமி மீரியாவின் நிமித்தம் பபியோலா வீட்டுக்கு முதல்விசை எழுந்தருளி வந்து அந்த வீட்டை ஆசீர்வதித்தார்.

---

## உஎ-ம். அதிகாரம்.

### ஞானோதயப் பிரகாசம்.

---

மீரியா தேவ நன்மை வாங்கின அந்த நாள் ஆனந்த பரவச நிலையிலிருந்தவள் போல், தன்னைச் சந்திக்க அன்பாய் வந்த சேசுநாதர் சுவாமி பேரிலே நினைவாயிருந்தாள். செல்வமாது பபியோலா அவள் கிட்ட இருந்து

அவள் முகத்தில் தோன்றின பற்பல குறிகளைப் பார்த்து ஆச்சரியப்பட்டாள். இவ்வித நிலையில் அக்நேசி பல சமயங்களில் இருந்ததைப் பார்த்திருந்தாள். மீரியாவின் முகம் பிரகாச காந்தி வீசி ஜொலிக்க, கண்கள் மாணிக்க தீபம் போல் மின்ன, ஆனந்த பூரிப்பின் மேலீட்டினுல கண்ணீர ஓடிவர, மோட்ச பதவி அடைந்த தேவலோக வாசிபோல் தோன்றினுள்.

மீரியாவின் சமீபத்தில நின்ற பபியோலா இவள் முகத்தில் விளங்கிய மோட்சானந்த பாக்கியத்தின் பிரதிபிம்பத்தை அதிசயத்துடன் கண்டபின், அவளுக்கு ஆதாரமாக கொஞ்சம் போஜனங் கொடுத்தாள். மீரியா பசியோடு சாப்பிட்ட பிற்பாடு பபியோலா கேட்பாள் :

"மீரியா இன்று காலமே முதல உன் தேகாரோக்கியம் ஸ்திரமாகின்றது. பண்டிதர் உனக்கு திவ்வியமான அவுழ்தம் இன்று கொடுத்திருக்கவேணடும்."

" ஆமா அம்மா. எல்லா அவுழ்தங்களிலும் அது அதி உத்தமம். என் உயிருக்கு உயிரான அவுழ்தம். நீங்கள் சொல்வதுபோல திவ்வியமான அவுழ்தம்."

" மீரியா, நீ எனக்குச் செய்த மாறுதவி தேடாத பெருதவிக்குத் தக்க கைமாறு காட்டுவது என்னுல் கூடாது. இனி நீ என் அடிமையல்ல. என் சகோதரியாய் என் வீட்டிலிருப்பாய்."

" அம்மா உங்களுக்கு மெத்தவும் நன்றி அறிந்திருக்கிறேன். ஆனுல்,....."

"மீரியா, உன்னிடத்தில் ஒரு காரியங் கேட்கும்படி தக்க சமயத்துக்குக் காத்துக் கொண்டிருந்தேன். அக்நேசி, மாது சிரோமணி, கிறீஸ்துவளாக பிடிபட்டு இறந்து

போனது உனக்குத் தெரியுமே. சொல்லு மீரியா, நீயும் அவளைப்போல் கிறீஸ்துவளா ?"

" அம்மா, நான் கிறீஸ்துவள். இதுதான் என் சர்வ பாக்கியம். இந்த பாக்கியம் உங்களுக்கும் உண்டாகும் படி நான் என் உயிரைச் சர்வேசுரனுக்குப் பலியாய்க்கொடுத்திருக்கிறேன்."

" ஆ மீரியா ! என் உயிரைக் காப்பாற்ற நீ உன் உயிரைத்தரத் துணிந்தது உத்தமோத்தம பரோபகார தர்மம். இதிலும் மேலான தர்மம் உலகத்திலில்லை."

" அம்மா கேளுங்கள். நீங்கள் சொல்வதுபோல், நான் செய்தது எவ்வளவு உத்தமமாயினும் இதிலும் அதி உத்தமமானதொன்று இருக்கிறது. இதை ஒரு உபமானத்தால் விளக்கிக் காண்பிக்கிறேன். மகா நீசனும் இழிகுலத்தானுமான ஒருவன், அன்புங் கிர்பையும் அவதாரமானாற் போலிருந்த மகத்துவ அரசனது ஊழியத்திலிருக்கையில், அந்தரங்கத்தில் தன் இராஜனைக் குத்திக் கொல்லும்படி ஆலோசனை பண்ணி, வேண்டிய பிரயத்தனங்கள் செய்து கொண்டிருக்கையில், இவன் நினைத்த சதி துரோகம் வெளிப்பட, இவனைப் பிடித்து நீதி சட்டப் பிரகாரஞ் சிரச்சேதஞ் செய்ய வேண்டுமென்று தீர்ப்புச் செய்தார்கள். அவனைக் கொலைக்களத்துக்குக் கூட்டிப்போய் ' தலைவெட்டப் போகுஞ் சமயத்தில், இராஜா அங்கு வந்து, 'அந்தத் துரோகிக்குப் பதில், தான் சாவதாக ஏற்றுக்கொண்டால், இந்த அரசன் செய்ததைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் ?"

" ஓ மீரியா ! இது மனிதர் சபையில் நடக்கக்கூடிய செய்கை அல்ல."

"இன்னுங் கேளுங்கள். தயாளகுணமுள்ள அந்தப் பூமண்டலேஸ்வரன, இராஜ துரோகிக்குத் தான் செய்தது போதாதென்றாற்போல், தான் சாகுமுன்னே மரண சாதனம எழுதி அதில் தன்னைக்கொல்ல எத்தனித்த சுாமித் துரோகிக்குத் தனது திரவிய பூஸ்திதிகளையுஞ் சிறந்த பட்டங்களையுங் கொடுக்கவேண்டுமென்றும், அவனைத் தன் சகோதரனைப்போல நடத்தவேண்டுமென்றுங் கற்பித்தால் இவ்வரசனுடைய பரோபகார செய்கையைப்பற்றி, அம்மா நீங்கள் என்ன யோசிக்கிறீர்கள்?"

"மீரியா, மனிதர்களுக்குள்ளே இவ்வித அதி அற்புத உன்னத செய்கை நடக்கக் கூடுமென்று நம்பக்கூடாது. நீ சொல்வது போல் செய்யவல்லவர் தேவலோக கர்த்தாவாயிருக்கவேண்டும்."

மீரியா தன் எஜமானியின் கையை எடுத்துத் தன் நெஞ்சின்மேல் வைத்து, அவள் முகத்தை அன்போடு உற்றுப்பார்த்து, மோட்ச பிரகாச வடிவு முகத்தில் துலங்க, அமர்ந்த மெல்லிய குரலோடு சொல்வாள்: "சேசுநாதர் சுவாமி மனுஷருக்காக இதுவெல்லாஞ் செய்தார். இப்படிச் செய்த அவர் அதி உந்நத சர்வேசுரன்."

பபியோலா இதைக் கேட்டு தன் இரு கைகளால் முகத்தை மூடி வெகு நேரம் மௌனமாயிருந்தாள். சர்வேசுரன் அவளுக்கு தேவப் பிரகாசங் கொடுக்கும்படி மீரியா தன் மனதில் பக்தி விசுவாசத்தோடு பிரார்த்தித்தாள்.

பபியோலா தலை நிமிர்ந்து பார்த்தபோது, அவள் கண்களில் ஜலந்ததும்பி நின்றது. அப்போது மீரியாவுக்குச் சொல்வாள்: "மீரியா, நீ உபமானமாய்ச் சொன்னதின் பயன் தெளிவாய் நான் அறியும்படி எனக்கு உன்

வாயால் விவரித்துச் சொல். சேசுநாதர் சுவாமி மனுஷர்களுக்காக என்ன செய்தார்?”

“அம்மா கேளுங்கள். சர்வேசுரன் ஆதியில் மனுஷனைச் சிருஷ்டித்தபோது அவனுக்குச் சுபாவ நன்மைகளையுஞ் சுபாவத்துக்கு மேலான நன்மைகளையும் வெகு தாராளமாய்க் கொடுத்து அவனைத் தமது செல்வப்பிள்ளையாகவும், மோட்சத்துக்குச் சுதந்தரக் காரனாகவும், ஏற்படுத்தினார். ஆனால் மனிதன் நன்றியில்லாதவனாய்த் தன்னைச் சிருஷ்டித்த சர்வேசுரனை விரோதித்து அவருடைய தேவ கற்பனையை மீறி, துரோகியாய்ப் பாவஞ் செய்தான். பாவத்தைச் செய்த மனிதன் தேவ சாபத்துக்குள்ளாகி நரக பிராப்தியானான். இப்படி இருக்கும்போது அனந்த தயையுள்ள சர்வேசுரன், மனுஷன் பாவத்தால் கெட்டழிந்து போவதைக் கண்டு, அவன் மேல் அன்பு கூர்ந்து அவன் செய்த பாவத்துக்குத் தாமே பலியாய் வந்து தேவநீதிக்கு உத்தரிக்கச் சித்தமானார்.”

“ஓ மீரியா! மீரியா! இந்த நீச மனிதன் பேரில் சர்வேசுரனுக்கு இவ்வளவு சிநேகமா? மனிதன் கெட்டாலென்ன, வாழ்ந்தாலென்ன? சர்வ பாக்கிய நன்மையுஞ் சம்பூரணமாய் நிறைந்திருக்கும் அவருக்கு, மனிதன் தன் இஷ்டப் பிரகாரங் கெட்டுப் போவதால், வரும் நிறைவுங் குறைவும் ஏது?”

“ஒன்றுமில்லை. சர்வேசுரன் தம்மில் தாமாயிருந்து, சகல பாக்கியானந்த சந்தோஷத்தில் நித்திய காலமிருப்பவர். சிருஷ்டிகளில் ஒன்றும் அவருக்கு அவசியமில்லை. ஆனால் அவர் மனிதன்பேரில் அணைகடந்த பட்சம் வைத்து, அந்தப் பட்சத்தின் நிமித்தந்தான் இப்படிச் செய்ய சித்தமானார். அவர் செய்ததைக் கேளுங்கள். சர்வ

நன்மை சுரூபியாயிருந்தவர் மனிதர் செய்த பாவத்துக் குப்பலியாகும்படி, ஒரு சரீரத்தை, அதி அற்புத மேளை யாய்த் தமக்கு உருவாக்கி, மனிதனாய் இந்த உலகத்தில் பிறந்தார்.''

"மீரியா! சகல சுகுண லெட்சண சுரூபமானவர் மனுஷாவதாரமானால், மனிதனைப் போல் ஜன்மித்து உற்பவமாகிப் பிறப்பது அவருக்கு அழகல்லவே.''

"மெய்தான் அம்மா. இதினாலே தான் அதி அற்புத மேளையாய் சரீரத்தை உருவாக்கினார் என்று சொன்னேன். தமக்குத் தாயாராயிருக்கும்படியாய்ச் சகல இஷ்டபிரசாத நன்மை வரங்களால் சம்பூரணமாய் அலங்கரிக் கப்பட்டு, பாவத்தின் தோஷமும் நிழலுமில்லாமல் ஜன் மித்துப் பிறந்த பாக்கியவதியான ஓர் தேவகன்னியைத் தெரிந்து கொண்டார். இவள் உதரத்தில் அற்புதமாய் உற்பவமாகி அவள் கன்னிமைக்குப் பழுதின்றிப் பிறந்தார். இதின் நிமித்தம் உலகமெல்லாம் இவளைப் புகழ்ந்து, பாக் கியவதியான' கன்னிமாதாவே யென்று சதாஸ்துதி பாடி வாழ்த்துகின்றது

1. ஜென்மவினை தோஷமில்லாப் பிறந்த மாதா!
ஜெகதலத்தோர் தினம்போறறுந் தேவமாதா!
தின்மை நிறை பேய் தலையை மிதித்தமாதா!
தேவுலகோர் இராக்கினியாய்த் தியங்குமாதா!
நன்மை எல்லாம் வாரி எனக் கொண்டமாதா!
நம்பி வந்தோர்க் கடைக்கலமாய் அணைக்குமாதா!
வன்மனப் பேய் மதங்களெல்லாம் அடக்குமாதா!
வானில் ஒளிர் மதி மிதித்த மாதாவாமே!

2. அன்னை என வுலகத்தோர் ஏற்றும் மாதா!
அன்புடனே எம்மை நிதங் காக்குமாதா!

பொன்னுலக பாக்கியமாய்ச் சிறக்குமாதா !
பூவுலகோர்க்காபரணமானமாதா !
மன்னர்குலமேன்மை பெற்றுத் துலங்குமாதா !
மாசில்லா உற்பவமாய் வந்தமாதா !
என்னபுகழ் தாய் இவட்குச் சொன்ன போதும்
ஏற்றபுகழ் சொல்ல எவர்க்கியலும் பாலோ."

" மீரியா இந்தப் பாக்கியவதியான தேவ கன்னியின் பெயரென்ன ?"

" அம்மா, இந்தத் தேவதாயின் பெயர் மரி அம்மாள். என் பாஷையில் மீரியா என்பார்கள். மரியே என்பது தேனிலும் இனிமையுள்ள பெயர். கிறீஸ்துவர்கள், தாயையு மகனையுங் கூட்டிச் சேர்த்து, சேசுமரியே என்பார்கள். தேவகன்னிமரியின் பெருமையும் மேன்மையும், அவளுக்குள்ள சீருஞ் செல்வாக்கும, அன்புங் கிர்பையும் அவதாரமானதுபோல் தோன்றும் அவள் சுபாவமும், எல்லாம் நீங்கள் போகப்போக அறிந்து ஆச்சரியப்பட்டு இவளைப் புகழ்ந்து ஸ்துதித்து வாழ்த்தி, பாக்கியவதியே, மனுஷ ஜென்மத்துக்குஒரு அலங்காரமே,பெண்பாலார்களின் ஆபரணமே, என்று உலகமெலலாம் கூடிச் சேர்ந்து பாடுந் தேவசங்கீத கீர்த்தனையோடு, நீங்களுங் கலந்து ஒருநாள் பாடுவீர்கள்."

" உன் வாக்குப் போலாகக்கடவது. மீரியா, சேசுநாதர் மனிதருக்காகப் பலியானாரென்றாயே. எப்படி இந்தப்பலி நடந்தது ? யார் இந்தப்பலியைத் துணிந்து கொன்றவர்கள் ?"

" அம்மா சேசுநாதர் சுவாமி பிறந்தபின்பு முப்பத்தி மூன்று வருஷக்கால மனிதர்கள் மத்தியிலிருந்தார். அதில் கடைசி மூன்று வருஷங்களில், எங்குஞ் சுற்றித்திரிந்து தமது பரிசுத்த வேத சத்தியங்களை எல்லாருக்கும் போதி

த்தார். சூரிய பிரகாசஞ் சகல ஜீவபிராணிகளுக்கும் உயிரும் உணவுஞ் சந்தோஷமுங் கொடுத்தாலும், இருளில் வாழும் கோட்டான்களுக்குப் பொருந்தாது. அது போல வே சேசுநாதர் சுவாமி படிப்பித்த பரிசுத்த சத்தியங்களை விரோதித்து ஏற்றுக் கொள்ளாத சிலர் அவரைப் பகை த்துக் கொல்லும்படி எத்தனித்தார்கள். ஆனால் சேசுநா தர் சர்வ வல்லபமுள்ள சர்வேசுரன் ஆனதால் அவர் சித்த மின்றி துர்பலனுள்ள மனுஷன் என்ன செய்யக்கூடும்.

“ சேசுநாதர் சுவாமி மனுஷர் பாவங்களுக்கு ஓர் பலி யாய் வந்ததால், தாம் குறித்த நாளில், தமது இஷ்ட பூரணவிருப்பப் பிரகாரந் தமது சத்துருக்களின் கையில் தம்மை வலிய ஒப்புக் கொடுத்தார். இக்கொடியர் அவரை ப்பிடித்து நிந்தை அவமானப் படுத்தி, நிஷ்டூர உபாதைக ளால் வதைத்த பின்பு, அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றார்கள். இவ்விதமாய் மனிதர் செய்த பாவங்க ளால் சர்வேசுரனுக்கு வந்த அளவற்ற அவமானத்தைப் பரிகரிக்கச் சர்வேசுரனே தாம் எடுத்த மனுஷ சுபாவத் தில் தமது உயிரைப் பலியாய்க் கொடுத்து மரிக்கச் சித்த மானார்.”

மீரியா இதைச் சொல்லும்போது மனங் கனிந்து, கண்ணீர் சிந்தி அழ, பபியோலாவும் இளகிய மனதோடு, கண்கலங்கி பெருமூச்சு விட்டுச் சொல்வாள்:

“ஆ மீரியா! இவ்வளவு அன்புந் தயையும் இரக்க முஞ் சர்வேசுரனிடத்தில், மனிதர்பேரில் இருக்கக்கூடுமெ ன்று நான் ஒருபோதும் நினைத்ததில்லை. இதை நீ ஒருமேல் வரிச் சட்டமாய், உன் கண் முன் வைத்தல்லவா என் உயிரைக் காப்பாற்ற உன் உயிரைப் பலியாய்க் கொடுத் தாய்.”

"மெய்தான் அம்மா. அதி உன்னத சர்வேசுரனே எனக்காக இவ்வளவு செய்திருக்கையில், நான் அவருக்காக என்ன செய்தாலும் எல்லாம் வெகு சொற்பமாய்த் தானிருக்கும்."

"மீரியா, இன்னமொரு கேள்வி. நீ மெத்த களைப்பாயிருந்தால், சொல், வேறே சமயத்தில பேசிக் கொள்ளலாம்."

"அம்மா! இதில் என்ன களைப்பு? இதுதான் எனக்கு உயிர். இந்தப் பாக்கியமான நாளைப் பார்க்க பல வருஷ தபஞ் செய்தேன்."

"மீரியா, சேசுநாதர் சுவாமி உலகத்திலிருக்கும் போது தமது பரிசுத்த வேத சத்தியங்களைப் போதித்து வந்தாரென்றுயே. இந்தச் சத்தியங்களை எல்லாம், உலக முடியுநாள்மட்டும் இருக்குஞ் சகல ஜனங்களும், அவர் ஆதியில் படித்துக் கொடுத்தது போலே, அறியவேண்டுமல்லவா? அப்படியானல் இதற்குத் தக்க ஏற்பாடுகள், அனந்த ஞானமுள்ள சர்வேசுரனை அவர் செய்திருக்கவேண்டும். அப்படிச் செய்தாரா?"

"அம்மா, நமது அற்ப புத்திக்கு இது செய்வது அத்தியாவசியமென்று தோன்றினல், அளவற்ற ஞானமும் அறிவுமுள்ள சர்வேசுரனுக்குத் தோன்றுமல் போமோ? இதற்காகத்தான் அவர் உலகத்தில் இருந்த காலத்தில், சத்திய திருச்சபையை ஸ்தாபித்து அதற்குத் தமது பிரதிநிதியாயிருக்கும்படி தாம் தெரிந்த சீஷர்களில் ஒருவரை நியமித்து, அவருக்கு விசேஷ அதிகாரமும் வரங்களுங் கொடுத்து, வேண்டிய ஏற்பாடெல்லாஞ் செய்தது. போதாதென்று தாமே இத்திருச்சபைக்கு, உலகத்தின் ஈறுந்த கால

மட்டுங் துணையாயிருப்பதாகவும், இச்சபையை அழிக்க பசாசுகளுந் துஷ்ட மனிதருங் கூடிச் சேர்ந்து எவ்வளவு தான் பிரயாசப்பட்டபோதிலும் அவர்களாற் கூடாதென்றுஞ் சத்திய வாக்குக் கொடுத்திருக்கிறார்."

"மீரியா, சேசுநாதர் சுவாமி ஸ்தாபித்த இந்தச்சபையின் பெயரென்ன?"

"அம்மா, அதன் பெயர் கத்தோலிக்கு சபை. வானத்தில் விளங்குஞ் சூரியன் தனது ஒளி நிறைந்த கிரணங்களை எங்குந் தெளித்துப் பிரகாசம் வீசி, எல்லார் கண்ணுக்கும் புலப்படுதல்போல், கத்தோலிக்கு சபையும் ஏகமாய், பரிசுத்தமாய, சேசுநாதரால் ஸ்தாபிக்கப் பட்டதாய், எத்தேசத்திற்கும், எக்காலத்திற்கும், எவ்வித ஜாதியாருக்கும் பொதுவாய் நின்று, தனது தேவ உற்பத்தியைக் குறித்துக்காட்டும் இலட்சண கிரணங்களை எல்லாரும் பார்த்து அறியும் படியாய் பூமியின் நாற்றிசையிலும் பரப்பி வருகின்றது."

"ஆ! மீரியா, ஐயோ! கண்ணிருந்துங் காணாதவள் போல் நான் இதுமட்டும நடந்து வந்தேன். எல்லாம் எனக்குத் தெரியுமென்ற அகங்கார கர்வத்தால் சத்தியவேதம் இனனதென்று படிக்கவில்லை. இந்தத் தேசத்தார் அனுசரிக்கும் மதம் அக்கிரமமென்றும், அவலெட்சணமென்றும், அஞ்ஞானமென்றும், புத்தி ஞாயத்துக்குப் பரஸ்பர விரோதமுள்ளதென்றும், அறிந்திருந்தும், இதை விட்டு நீங்க மனத் துணிவின்றி பரம கோழையாயிருந்தேன். நீ வணங்குஞ் சேசுநாதர் படிப்பித்த சத்திய வேதத்தைப் பழித்தேன். அந்தோ! எனக்காகத் தமது உயிரைப் பலியாய்க் கொடுத்து என்னை இரட்சிக்கச், சிலுவையில் மரித்த சுவாமியை நான் இகழ்ந்து தூஷித்தேன். மீரியா! எனக்கு

மன்னிப்புண்டா ? நீ வணங்குஞ் சேசுநாதர் சுவாமி என்னைத் தயவாய் ஏற்றுக்கொள்ளுவாரா ?"

பபியோலா, இப்படிச் சொல்லும்போது, கோவென்று கண்ணீர் அருவி சிந்தி அழுதாள். அவள் அழுது சிந்துங் கண்ணீரால் மனதிலுள்ள துக்க பாரத்தைக் குறைக்கு மட்டும் மீரியா பேசாமலிருந்தாள். அதன் பின்பு மெல்லிய குரலோடும் அன்புந்தயையும் பொங்கு மனதோடுஞ் சொல்வாள் :

" அம்மா, சேசுநாதர்சுவாமி உங்களைத் தயவாய் ஏற்றுக்கொள்வாரோ என்று கேட்கிறீர்கள். ஆ ! அவர் இருதயத்திலிருக்கும் அன்பும் அருளுங் கிர்பையும் மனிதர் புத்திக்கு மேலிட்டது. இதற்கு ஒரு உதாரணங் கேளுங்கள்:

"சேசுநாதர்சுவாமி இவ்வுலகில் இருந்த காலத்தில் மரிய மக்தலேன் என்ற ஓர் பெண்பிள்ளை இருந்தாள். இவள், பெண்ணின் ஆபரணமென்று நீங்கள் உங்கள் உயிரினும அதிகமாய் மதிக்குங் கற்பை, இழந்துபோய். துன்மார்க்கத்தில் பிரவேசித்து வேசியாய் ஊருக்கு ஆவலாதியாய் நடந்தாள். இப்படி நடந்தவள் சேசுநாதரைப்பற்றிப் பல விஷயங்களை எப்படியோ கேட்டிருந்தாள். அவர் வெகு தயாள குணமுள்ளவரென்றும், பாவிகள் பேரில் விசேஷ பட்சமுள்ளவரென்றும், யாரும் எவரும் அவரிடத்தில் அச்சமின்றி எந்த நேரத்திலும் போகலாமென்றும், அவர் எல்லாருக்குந் தந்தையுந் தாயுமானவரென்றும், அறிந்து அவர்பேரில் ஸ்நேகம் வைக்கத் துவக்கினள். இந்த ஸ்நேகம் அதிகரிக்கவே அவரிடத்தில் போய் அவர் பாதத்தில், விழுந்து, தன் மனதிலுள்ள பாவத்தின் பாரகனைமயை, அவர் முன் இறக்கி வைக்கும்படி ஏற்ற சமயம் பார்த்துக், கொண்டிருந்தாள்.

" ஒருநாள் சேசுநாதர் ஓர் கனவான் வீட்டில் சாப்பிடப் போனபோது, பணச் செருக்கால் அவன் அவருக்குச் செய்யவேண்டிய மரியாதை செய்யாமலிருந்தான். அந்தச் சமயததில் மரிய மக்தலேன் அம்மாள் வீட்டுக்குள் வந்து, சேசுநாதர் பாதத்தில் விழுந்து, கண்ணீர் சிந்தி அழுது, சிநதிய கண்ணீரின் பெருக்கத்தால அவர் பாதத்தை நனைத்துக் கழுவி தனது விரிந்த கூந்தலால் அதைத் துடைத்தாள்."

" அப்போது சேசுநாதர் என்ன செய்தார்?"

" தயையுள்ள சுவாமி அவளை அன்பாய்ப் பார்த்து, அவள் செய்த பாவங்களை எல்லாம் மன்னித்து, அவள் மனதில் சமாதானமுஞ் சந்தோஷமுங் கொடுத்த பின்பு வீட்டுக்கு அவளைப் பாக்கியவதியாய் அனுப்பினார்."

" ஆ மீரியா! எவ்வளவு அன்பு! எவ்வளவு தயவு! அதன் பின அவளுக்கு என்ன சம்பவித்தது?"

" சேசுநாதர் சுவாமி கல்வாரி மலைமேல் சிலுவையில் அறையுண்டிருக்கும்போது அவர் சமீபத்தில் இரு பெண் பாலார்கள் நிற்கும் பாக்கியம் பெற்றார்கள். அவர்களில் முதல், அவரைப் பெற்று வளர்த்த மகா பரிசுத்த கன்னி மாதாவான மரி அம்மாள், இரண்டாவது பாவியாய் நடந்து திரிந்து பின் மனந்திரும்பின மக்தலேன் மரி அம்மாள். பாவமின்றி பரிசுத்தமாய் நடப்பவர்களும், பாவத்தைச் செய்து, பின் மனஸ்தாபப்பட்டு பொறுத்தல் அடைந்தவர்களுஞ் சேசுநாதர் சுவாமிக்குப் பிரியமுள்ளவர்களென்று இந்த அதிசய வர்த்தமானத்தால் காட்டச் சித்தமானார்."

மீரியா இவ்வளவு பேசினதால் களைத்துப் போய் அயர்ந்து நித்திரை செய்தாள். பபியோலா சேசுநாதர் காலு

பித்த அணைகடந்த சிநேகத்தை நினைத்து நினைத்து ஆச சரியமாய் நின்றாள். இவ்வித சிநேகப் பெருக்கத்தின் முன்னே, கிறீஸ்துவர்கள் தங்களுடைய சுவாமிக்காக என்னென்ன செய்தபோதிலும் அது மகா சொற்பமாகவே தோன்றுமென்று கண்டுபிடித்தாள். இந்தத் தேவபிர காச ஒளியில், செபஸ்தியார், அக்நேசி, சீரா, இவர்கள் நடக்கையில் தான் முன் கண்டுபிடியாத ஆச்சரிய விஷயங்க ளெல்லாந் தெளிவாய்ப் புலப்பட்டன.

இவ்வித யோசனையுடன் பபியோலா மீரியாவின் கால் அண்டையில் படுத்தாள். மீரியா விழித்தபோது பபியோலா இருந்த நிலையைக் கண்டு அதிசயப்பட்டாள். அகங்காரமுங் கர்வமும் நிறைந்த உரோமைப் பிரபுவின் செல்வ புத்திரி, இப்போது தன்னைத் தாழ்த்தி, தன் சொந்த அடிமையின் காலின் கீழ்படுத்தது, இவள் கிறீஸ்துவ ளாகும் மேலான பாக்கியம் பெறுவாளென்பதின் தவறா அடையாளம். மீரியா தான் சர்வேசுரனுக்கு நேர்ந்த பலி யைச் சர்வேசுரன் கிர்பையாய் ஏற்றுக் கொண்டதற்காக அவருக்கு நன்றி அறிதலான ஸ்தோத்திரஞ் செய்தாள்.

## உஎ-ம். அதிகாரம்.

### மீரியாவின் வரலாறு.

மறுநாள் காலமே பண்டிதர் வந்தபோது பபியோ லாவு மீரியாவும் முகக்களையுடன் சந்தோஷகரமாயிருப் பதைப் பார்த்து அன்றிராத்திரி இருவரும் நன்றாய் அயர்ந்து தூங்கி இளைப்பாறி இருக்கவேண்டுமென்று சொல்ல, இருவருஞ் சிரித்துக்கொண்டு, நன்றாய், அந்த இராத்திரி யில் தூங்காவிட்டாலும் தங்களுக்கு அது மகா பாக்கிய

நின்றந்த் இராத்திரியாயிருந்ததென்று சொன்னார்கள். அதன்பின் மீரியா செல்வமாதின் கையைப் பிடித்து பண்டிதர் முன் கூட்டி வந்து சொல்வாள் :

" சுவாமி, சர்வேசுரனுடைய பூஜித குருவே! இதோ சத்திய வேதத்தைக் கற்று, ஞானஸ்நானம் பெற்று, கிறீஸ்துவளாகும்படி ஆசையாயிருக்கும் பபியோலா."

பபியோலா ஆச்சரியத்துடன்: நீங்கள் பண்டிதருங் குருவுமானவரா? என்று கேட்க, விர்த்தாப்பியரான குரு சொல்வார் :

" அம்மா, நான் எவ்வளவு அபாத்திரனாயினுந் தயையுள்ள சர்வேசுரன் என்னைத் தமது குருவாகத் தெரிந்து கொள்ளச் சித்தமானார்."

பபியோலா உடனே அவர் முன் முழங்காலிலிருந்து அவர் கையை எடுத்து முத்தி செய்தாள். குரு தமது வலது கையை அவள் தலைமேல் விரித்துச் சொல்வார்:

" மகளே! தைரியமாயிரு. இந்த வீட்டிலிருந்த உன் இனத்தாரில் நீ தான் முதல் கிறீஸ்துவளென்று நினையாதே. சில வருஷங்களுக்கு முன் என்னை வைத்தியனாக ஒரு விசை இந்த வீட்டுக்குள் ஊழியக்காரி ஒருத்தி அழைத்து வந்தாள். அப்போது வியாதியாயிருந்தவள் உன் தாயார் தான். நான் வந்து அவளுக்குச் சத்தியவேதத்தை விளக்கிக் காட்டி அவள் சாகு முன் அவளுக்கு ஞானஸ்நானங் கொடுத்து கிறீஸ்துவளாக்கினேன். உன் பிரிய தாய் ஞானஸ்நானத்தின் மாசற்ற உடையோடு மோக்ஷத்துக்குப் போனாள்."

" ஓ! எவ்வளவு பாக்கியமான சுப செய்தி? என் தாய் தன் மகளை மறந்து போகாமல், எனக்காக சர்வேசுரனுடைய கிருபை சிம்மாசனமுன் இத்தனை வருஷமாய்ப் பிரா

ர்த்தித்து வந்தாள். எனக்குக் காவலாயிருக்கும் சம்மன சும் இந்தப் பாக்கியமான நாள் மட்டும் என்னைக் காப்பாற்றி வந்தார்."

பபியோலாவுடன் அவளுடைய செவிலித்தாய் எபுரோசினளும், அவள் அடிமை கிரேசியாவும், அக்நேசி வீட்டில் வளர்ந்த எம்மொன்சியாளும் ஞானஸ்நானம் பெறும்படி ஆயித்தஞ் செய்தார்கள். மீரியா வியாதியாயிருந்த காலத்தில் தன் வரலாற்றை பபியோலாவுக்குச் சொல்லிக் காண்பித்தாள். அதின் சில விஷயங்கள் நாம் முன் சொன்ன பல காரியங்களை நன்றாய் கண்டு பிடிக்கும்படி ஏதுவாயிருக்குமென்பதால் அவைகளை இங்கு கூறுவது யுக்தமாகத் தோன்றுகின்றது.

சீரியா நாட்டிலுள்ள அந்தியோக்கியா பட்டணத்தில திரவிய சம்பத்துள்ள கனவான் ஒருவனிருந்தான். இவன் மேன் குலத்தான் அல்லாதே போனலும், மேன் குலத்தாரோடு சகவாசஞ் செய்து நடமாடவேண்டுமென்ற விருப்பத்தால் வெகு சம்பிரமமாக வாழ்ந்து, டம்பமாகவும் பிலுக்காகவுந் திரிந்து, வீணில் தன் சொத்தைப் போக்கடித்த பின்பு, கடைசியில் பெருங்கடன் தொல்லையால் மிகத்துன்பப்பட்டான். இவனுக்கு வாழ்க்கைத் துணையாய் வாய்ந்தவள் சிறந்த குணமுள்ள சீமாட்டி.

இவள் கிறீஸ்துவ வேதத்தை இரகசியமாயப் படித்து, அதுதான் சத்தியவேதமென்று கண்டு பிடித்து, இவள் புருஷன் செய்த விக்கினங்கள் யாவையும் ஜெயித்து, கிறீஸ்துவளானள். இவளுக்கு இரண்டு பிள்ளைகளிருந்தார்கள். இவ்விருவருக்கும் வித்தியாப்பியாசமும், பாஷா ஞானமும், நல்லொழுக்கமும், வெகு ஜாக்கிரதையுடன் கற்றுக் கொடுத்தாள்.

மூத்தபிள்ளையின் பேர் ஓரோன்சியன். இவன் தன் தாயாரோடு பலமுறை கோவிலுக்குப் போக வர இருந்ததால் கிறீஸ்துவர்களுக்கடுத்த பல மதவிஷயங்களை நன்ருய் அறிந்திருந்தான். கபடும் வஞ்சகமுங் குடிகொண்ட நெஞ்சுள்ளவன். பெயருங் கீர்த்தியும் பிரதிஷ்டையும் பெற்று உலகத்தில் சுகித்து வாழ்ந்து அதின் இன்ப சந்தோஷங்களை உள்ளநாள் உள்ளமட்டும் அனுபவிப்பதே சதம் என்று எண்ணி வந்தான். ஆதலால் கிறீஸ்துவனுக இவனுக்குக் கிஞ்சித்தேனு மனமில்லை. சாஸ்திர நூலில் சாலச் சிறந்தவன். உரோமானர் பாஷையை வெகு திருத்தமாயும் மாதுரியமாயும் பேசுவான்.

இரண்டாம் பிள்ளையின் பெயர் மீரியா. ஓரோன்சியனுக்கு மூன்று வருஷத்துக்கு இளையவள். நூலைப்போல் சேலை, தாயைப்போல் பிள்ளை எனபதற்கு ஒப்ப, இவள் தன் தாயைப்போல கிறீஸ்துவள். அறிவு விர்த்தியிலுஞ், சாஸ்திரக் கியானத்திலும் மிகத் தேர்ந்தவள். சுசீல ஒழுக்கத்தில் விர்த்தி பெற்றவள். இவளுடைய தாய், தன் புருஷன் பணத்தை வீணில் இறைத்து, சொத்தைப் பாழாக்கிப் போடுவான் என்றும், தன் மகன் பொருளாசை கொண்டவனுய் குடும்ப சம்ரட்சணையைக் கவனிக்க மாட்டான் என்றுங் கிரகித்துக்கொண்டு, தான் சாகு முன்னே தனது பிரத்தி ஏகமான சொத்தைத் தன் மகளுக்கு முழுதும் விட்டு அவள் பெயரால் பத்திரம எழுதிக்கொடுத்து, தான் செய்த இந்த ஏற்பாட்டுக்கு விரோதமாய் ஒன்றுஞ் செய்யக்கூடாதென்று அவளுக்குப் பலவாருய் வற்புறுத்தி இருந்தாள்.

தாய் காலகதி அடைந்த பின்பு வீட்டின் காரியும் வெகு அலங்கோலையாய்ப் போனது. கடன் மேல் கடன்

வந்து கூட, கடன்காரர் பணத்தை நெருக்கிக் கேட்டார்கள். இச்சமயத்தில் எவுரோட்டன் இவ்வீட்டில் வந்து சேர்ந்தான். இவன் பல தேசங்களுக்குப் போய், வர்த்தகஞ் செய்து வெகு பணஞ் சம்பாதித்து, தன் தம்பி வீட்டுக்கு வந்தான். ஆனால் அவன் குடும்பத்தின் கேவல ஸ்திதியையுங் கடனையையுங் கண்டு, தம்பியைக் கோபித்துத் திட்டி, தன் சொந்தப் பணத்தைக் கொண்டு கடனை எல்லாம் இறுத்த பின்பு, இவனே இவ்வீட்டின் எஜமான் போல் காரியங்களை வகித்து வந்தான்.

ஓரோன்ஃசியனுடைய தகப்பன் சாகும்போது மகனை அழைத்து, அவனுக்குத் தான் கொடுக்கும்படியான பிதிரார்ஜித சொத்து ஒன்றும் இல்லை என்றும், இனிமேலாக எவுரோட்டனே" அவனைப் பாதுகாத்து நடப்பிப்பான் என்றுஞ் சொல்லி இறந்தான். எவுரோட்டனும் இவனைக் கூப்பிட்டு, இனிமேல் தனக்கு அவன் எவ்விஷயத்திலுங் கீழ்படிய வேண்டுமென்றும், பழி பாவத்துக்கு அஞ்சாமல் துணிந்து எதையுஞ் செய்து, தங்கள் குடும்பத்தின் பெயரை ஸ்தாபிக்க வேண்டுமென்றும் பல ஞாயங்களை அடுக்கிச் சொன்னான்.

தங்கள் கையில் செலவுக்கு வேண்டிய பணமில்லாததால் மீரியாவுக்கு அவள் தாய் விட்டுப் போன சொத்தை முழுதும் அபகரித்துக் கொள்ளும்படி இருவருங் கூடி ஆலோசனை பண்ணினார்கள். மீரியா தன் சொத்தைக் கொண்டு கன்னியாஸ்திரிகள் இருக்கும்படி ஓர் பெரிய மடங் கட்டி, அதின் சம்ரட்சணைக்கு வேண்டிய நிதி வருமானம் ஏற்படுத்தியபின், அதிலே போய் தன் ஜீவிய காலத்தை ஜெபதபத்தில் செலவழிக்கும்படி உத்தேசித்திருந்ததால், இருவருங் கூடிச் செய்த தந்திர உபாயங்கள் எல்

லர்ம் பலிக்கவில்லை. மீரியா, இவ்விருவருந் தன்னுடன் இருக்கச் சம்மதப்பட்டால், அவர்கள் செலவுக்கு வேண்டியது எல்லாந் தானே கொடுப்பதாகச் சொன்னாள். இது இவர்களுக்குச் சம்மதம் இலலாததால் இவளை எப்படியாவது தொலைத்து விட்டு அவள் சொத்தை முழுதும் எடுத்துக் கொள்வதுதான் யுக்தமென்று தீர்மானித்தார்கள்.

தன் உடன் பிறந்த சகோதரியைத் தொலைத்து விடுவது என்பதைக் கேட்ட ஓரோனசியன் திடுக்கிட்டு அஞ்சினான். எவுரோட்டஸ் அவனைத் தேற்றி, பழி பாவம் என்பதும், மனச் சான்றென்பதும் அர்த்தசாரமற்ற பதங்களென்று அவனுக்கு உபதேசித்து, பணந் தேடும்படி எவ்வித உபாயமும் பிரயோகிக்க வேண்டுமென்று நன்றாய் அவன் மனதில் சாரும்படி இடித்துச் சொன்னான்.

பூர்வீக காலத்துக் கிறீஸ்துவர்கள் வேத கலக காலத்தில் தேவநற்கருணையைத் தங்கள் வீட்டில் கொண்டுபோய் வைத்திருந்து தாங்களே நாள்தோறும் உட்கொள்ளுவது அக்கால வழக்கமென்று முன் நாம் சொன்னோம். மீரியாவின் தாய், தேவநற்கருணை வைத்திருக்கும்படியாய், சரிகை போட்டு முத்துக்கள் இடையிட்டு நெய்து பின்னிய பட்டுத் துண்டு ஒன்று வைத்திருந்தாள். தான் சாகு முன் இந்த மகளுக்குக் கொடுத்து வெகு பூஜிதை வணக்கத்துடன் இதைக் காப்பாற்றும்படி கற்பித்தாள். இப்பட்டுத் துண்டை பற்றிய சில விஷயங்கள் இந்நூலில் பல இடத்தில் வாசித்தது இன்னம் ஞாபகம் இருக்கலாம். சீரா தங்கச் சிமிழில் தேவநற்கருணையை வைத்து இப்பட்டுத் துண்டால் மூடி பெட்டிக்குள் வைத்திருப்பாள். ஒருநாள் இந்தப் பெட்டியின் கிட்ட ஜெபம் செய்யும்படி வந்தபோது, அது திறந்திருக்க உள்ளே இருந்த சிமிழைக் காணவில்லை.

மரியமக்தலேன் அம்மாளைப்போல் தன் சுவாமியைக் காணுததால் அழுதுகொண்டு இங்கும் அங்குந் தேடினுள். தேடும்போது கிட்ட ஒரு சீட்டுக் கிடந்தது. அதை எடுத்து வாசித்தாள். அப்பெட்டிக்குள் இருந்த சிமிழ் அவள் சகோதரன் கையில் பதனமாய் இருப்புதாகவும், அதை விலை கொடுத்து மீட்டுக்கொள்ளலாம் என்றும் எழுதி இருந்தது. உடனே அவனிடம் ஓடி, அவன் காலில் விழுந்து, தனது ஆஸ்தி திரவியம் யாவற்றையும் பார்க்க அதிகமாய் மதிக்கும் அந்தச் சிமிழைத் தன் கையில் கொடுக்கவேண்டும் என்று பிரார்த்தித்தாள். அவன் மனம் இரங்கிக் கொடுக்கப்போகுஞ் சமயத்தில், எவுரோட்டன் பயம் உறுத்தி அவனைத் தடுத்து, மீரியாவைப் பார்த்துச் சொலவான் :

"மீரியா நீ இப்போ சொன்ன வார்த்தை எதார்த்தமோ அல்லவோவென்று சோதிக்கப் போகிறேன். உன் ஆஸ்தி திரவியத்திலும் இந்தச் சிமிழ் மேலானதென்று சொன்னுய்?"

"ஓ! சர்வேசுரனுடைய திவ்விய மகத்துவத்துக்கு அவமானம் வராதபடி, என்ன கேட்டாலும் நான் கொடுப்பேன்."

"அப்படியானுல், இதோ இந்தப் பத்திரத்தில் உன் கையொப்பம் போடு."

மீரியா அந்தப் பத்திரத்தை ஒரு பார்வையில் வாசித்துப் பார்த்து தன் கையொப்பம் போட்டாள். அதிலே தனக்குச் சொந்தமாய் இருக்குஞ் சொத்தை முழுதும் எவுரோட்டனுக்குக் கொடுப்பதாகக் கண்டிருந்தது.

ஓரோன்சியன் இதை அறிந்து, எவுரோட்டன் தன்னிலும் அதிக கபடனுய் தான் எத்தாய்த் தேடிய சொத்

ந்த தினக்கு முந்தி அபகரித்தானே என்று பொறுமை கொண்டு புலம்பித் தவித்தான்.

இவ்விரு துரோகிகளும் மீரியாவைச் சில காலமட்டும் பராமரித்து வந்தார்கள். கடைசியில் மீரியா இவர்களோடு இருப்பது சரியல்லவென்று, தான் இருந்த அந்தியோக்கியா பட்டணத்தை விட்டு, ஜெருசலேம் பட்டணத்துக்குப் போய் கன்னியாஸ்திரிகள் மடத்தில சேர்ந்து சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்யலாம எனறு கப்பல் ஏறினாள். அந்த யாத்திரையில், பலவிதமான துன்பப்பட்டாலுந் தன்னோடு கூடக் கொண்டுபோன தங்கச் சிமிழில மோக்ஷானந்த பாக்கியம் இருநததால், மனந் தளராமல் சந்தோஷமாய் இருந்தாள்.

கப்பல் யாத்திரை செய்கையில் பெருங் காற்றும் புசலும் பிரசண்ட மாருதமாய் எழும்பி கப்பலை நாலுதிசையிலும் அலைக்கழிக்க கடைசியில அது ஒரு பாறைத்தீவில் மோதி உடைந்தது. இந்த ஆபத்திலிருந்து தப்பிப் பிழைத்தவர்கள் வெகு சொற்பப்பேர். அவர்களுக்குள் மீரியா தேவாதீனமாய்த் தப்பினது, தான் வைத்திருநத பரிசுத்த தேவநற்கருணையால் வந்ததென்று நிச்சயித்துக் கொண்டாள்.

அன்று தப்பினவர்களிற் சிலர் அந்தியோக்கியா பட்டணத்துக்குத் திரும்பிப் போனபோது, தாங்களேறிப் போன கப்பலுக்கு மோசம் வந்ததென்றும், அதிலிருந்தவர்களோடு கூட மீரியாவும் இறந்து போனளென்றும் எவுரோட்டனுக்கு அறிவித்தார்கள்.

மீரியா தப்பிப் பிழைத்து அத்தீவின் கரையில் சித்த ஸ்வாதீனமின்றி, கிடக்கும்போது அத்தீவிலிருந்த சில துஷ்ட ஜனங்கள், அவளைப் பிடித்து அடிமையைப்போல்

ஒரு வியாபாரிக்கு விற்றுப் போட்டார்கள். இவன் இவளை மேன்குலத்தானான ஒருவனுக்கு விற்க, அவன் பிற்பாடு, பாபியன் தன் மகளுக்குத் துணையாகவும் ஏவல் செய்பவளாகவும், படிப்பும் நாகரீக சுசிகரமுள்ள ஒரு வேலைக்காரியை என்ன விலை கொடுத்தும் வாங்கி வரும்படி தன் காரியஸ்தனை அனுப்பினபோது, அவனுக்கு மீரியாளை விற்ருன். அப்போது மீரியா சீரா என்ற பெயரொடுத்து, உரோமாபுரிக்கு பபியோலாவின் இரட்சணியமாகவந்தாள்.

## உ அ-ம். அதிகாரம்.

### சுகிர்தானந்த காலகதி.

பபியோலா தன் வீட்டிலிருக்கும்போது, ஒருநாள் அந்நியனான ஓர் விர்த்தாப்பியன் அவளோடு பேசும்படியாய் வந்திருப்பதாகக் கேள்விப் பட்டு அவனைப் பார்க்க வந்தாள். வந்தவனைநோக்கி பெயரென்னவென்றும், வந்த காரணமேதென்றுங் கேட்டதற்கு அவன் சொல்வான் :

" அம்மா, என் பெயர் இபிராம். அக்நேசி அம்மாளின் சொத்தின் பேரில் நான் பெருந்தொகை கடன் கொடுத்தேன். அவள் சொத்தெல்லாம் உங்களுக்கு வந்திருக்கின்றதாம். ஆனதால் எனக்குச் செல்லவேண்டிய தொகையைக் கேட்கும்படியாய் நான் வந்திருக்கிறேன். இது வராவிட்டால், நான் பரம ஏழையாய் பிழைக்க நிர்வாகமற்றவனாவேன்."

" இது நம்பக்கூடிய விஷயமல்ல. அக்நேசி அம்மாள் அப்படிக் கடன் வாங்குகிறவள் அல்லவே."

" அதற்கு அந்த யூதன் பன்னிப் பன்னிப் பேசி இங்குமங்கும் பார்த்துச் சொல்வான் :

"அக்னேசி கடன் வாங்கவில்லை. ஆனால் புல்வியன் என்ற ஒருவன், தனக்கு 'அக்னேசியின் சொத்தெல்லாம் வருமென்பதாய் எனக்குச் சொல்லி, அதின் பேரில் கடன் வாங்கினான்."

பணப் பேய் பிடித்த இந்தக் கொடிய யூதனைத் தன் வீட்டுக்கு வெளியே துறத்தும்படி பபியோலாவுக்கு யோசனை வந்தது. ஆனால் புல்வியனுடைய சகோதரியின் நிமித்தம் அப்படிச் செய்யாமல் அவனுக்குச் செல்லவேண்டிய தொகையைத் தான் கொடுப்பதாக ஏற்றுக்கொண்டு, தன் காரியஸ்தனைக் கூப்பிட்டு கணக்குப் பார்த்து யூதனுக்குச் செல்லவேண்டிய கடனைத்தீர்க்கும்படி சொன்னாள். இதுவுமன்றி தன தகப்பனாருடைய வரவு செலவுகளையெல்லாஞ் சோதிக்கச் செய்து, அதில் யாருக்காவது பணஞ் செல்லவேண்டியிருந்தால, அதைத் தக்க வட்டியோடு செலுத்தவும், அக்னேசி சொத்து பறி முதலாகாதபடி கோர்வீனனுடைய தகப்பன் சிரமப் பட்டதற்காக, கோர்வீனனுக்கு ஒரு பெருந் தொகை கொடுக்கவும் ஏற்பாடு செய்தாள்.

வீட்டின் காரியங்களையெல்லாஞ் சீர்ப்படுத்தினபின் தான் ஞானஸ்நானம் பெறுவதற்கு வேண்டிய ஆயித்தஞ் செய்வதிலும், மீரியாவின் சௌக்கியத்துக்கு ஏற்ற பக்குவங்களைக் கவனிப்பதிலுந் தன் நேரத்தைச் செலவழித்தாள். அக்னேசியின் கிராமத்திற்கு மீரியாவுடன் போய் அங்கே சிலநாள் சௌக்கியத்துக்காக இருவரும் இருந்தார்கள். அவ்வீட்டிலிருந்த வீர சிங்கம் அக்னேசி இறந்தநாள் முதல் சோர்கைபிடித்தாற்போல் சோம்பிப் போய்ப் படுத்திருக்கும். பபியோலாவும் மீரியாவுங் கடந்த காரியங்களை

ப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில் அக்நேசி பெய்ரைச் சொன்னால், உடனே சிங்கம் எழுந்து இரண்டு காதுகளையும் விரித்து, நாலு பக்கமுஞ் சுற்றிப் பார்க்கும். பார்த்தும் அக்நேசியைக் காணாததால், அழுவதுபோல் சத்தஞ் செய்து முன்போல் படுத்துக்கொள்ளும்.

வேத விஷயங்களைப் பற்றி இருவரும் பேசும்போது மீரியா தெளிவாயுந் திருத்தமாயு மனதில் பொங்கி நிறையும் பக்தி பற்றுதலோடும் பேசி, வேத விசுவாச சத்தியங்களையும் நல்லொழுக்கத்துக்கடுத்த முறைகளையும் விவரிப்பாள். அப்படியே ஞானஸ்நானசடங்கில் பலமுறை தீர்த்தத்தாலும் பரிசுத்த தைலத்தாலும் ஞானஸ்நானம் பெறுகிறவர்களின் நெற்றியிலும், நெஞ்சிலும், இன்னும் பல இடங்களிலுஞ் சிலுவை அடையாளம் போடுவதின் தாற்பரியத்தை விவரித்த பின்பு, இதின் அனுதின பயனாக, நாள்தோறும் எந்த முக்கிய அலுவலைச் செய்யுமுன்னும், ஆபத்து மோசமுள்ள வேளையிலுஞ், சோதனை தந்திரம் வரும்போதும், கிறீஸ்துவர்கள் சிலுவை அடையாளம் வரைவது சுகிர்தமென்று சொன்னாள்.

மீரியாவின் சௌக்கியம் நாள் அளவில் விர்த்தியாகாமல், குறைந்தே வந்தது. முகம் இரத்தப் பசை அற்றிருந்தது. சமயத்துக்குச் சமயம் இருமலும் உண்டானது. இராத்திரியிலே பலமுறை நித்திரையின்றி விழித்துக்கொண்டே இருப்பாள். இவள் இருந்த அறைக்கு நேரே அக்நேசியை க்ஷேமித்த இடமிருந்தது. அடிக்கடி அந்தப் பக்கமாய்ப் பார்த்து செல்வ அக்நேசியைப் பற்றி நினைப்பாள். இதற்குச் சமீபத்தில் ஒற்றடிப் பாதை ஒன்றிருந்தது. அடுத்த ஊருக்குப் போகிறவர்களுக்கு இதுதான் குறுக்குப் பாதை.

ஒருநாள் காலமே சில பாலியர்கள் அப்பாதை வழி யாய்ப் போகையில், முந்தி நடந்தவன் பிந்திவந்தவர்களைக் கூப்பிட்டுச் சொல்வான்:

" அதோ பாருங்கள். எவ்வளவு மறைந்த இடம். இப் பேர்பட்ட இடங்களில் தான் கிறீஸ்துவர்கள் பதுங்கி இரு ப்பார்கள். வாருங்கள், உள்ளே போய் யார் இருக்கிறு ரென்று பார்த்து வரலாம்."

" உள்ளே போவது எளிது. போய் தப்பித்து வெ ளியே வருவதல்லோ கஷ்டம்."

மீரியா இவர்கள் பேசினதை நன்றாய் கேட்கக் கூடாதே போனாலும், அவர்கள் செய்ததைப் பார்த்தாள். ஒருவன் உள்ளே போய் எதையோ பார்த்தபின்பு, சப்த மின்றி மற்றவர்களைக் கூப்பிட்டான். அவர்கள் பார்த்தவு டனே, ஒவ்வொருவனும ஒரு பெருங் கலலைத் தூக்கித் தாங்கள் பார்த்த வஸ்துவின்மேல் எறிந்து, சிரித்து, கை கொட்டி கூக்குரலிட்டுப் போனார்கள். ஏதோ பாம்பை யோ, விஷஜெந்துவையோ பார்த்து இப்படிக் கல்லால் எறி ந்து கொன்றார்களென்று மீரியா எண்ணியிருந்தாள்.

பிற்பாடு வேலையாட்களும் பபியோலாவும் போய்ப் பார்க்கையில், எம்மொன்சியாளுள் அக்நேசியின் கல்லறைக் குப்போய்ப் ஜெபஞ் செய்துகொண்டிருக்கும்போது அவ ளைத்தான் அப்பாதையில் போன கொடியர் கல்லாலெறி ந்து கொன்றுபோட்டார்கள். இவ்விதம் இச்சிறுமி திருச் சபையின் ஞானஸ்நானம் பெறுமுன்னே, தனது இரத்தத் தால் ஞானஸ்நானம் பெற்று மோட்சபதவி அடைந்தாள்.

பபியோலாவும் அவளோடு கூட வேத சத்தியங்க ளைப் படித்தவர்களும் வேண்டிய ஆயித்தஞ் செய்த பின்பு

ஞானஸ்நானம் பெற்றார்கள். அக்கால வழக்கப் பிரகாரம் ஞானஸ்நானம் பெறுகாளின் கால கோத்லை ஜெபதபத்தில் போக்கினபின், சாயரட்சையில் சடங்கு துவக்கும். பூமியின் கீழ் வெட்டப் பட்ட சதுர வடிவான கிணற்றில் நாலு அடி ஆளமட்டுந் தண்ணீரிருக்கும். இதில் இறங்கும் படி பல படிகளுண்டு. இதின் வழியாய் குருவும் ஞானஸ்நானம் பெற இருப்பவர்களும் ஒருவரொருவராய்க் கீழே இறங்கி மூன்று முறை தண்ணீருக்குள் முழுகி ஸ்நானஞ் செய்வார்கள்.

ஞானஸ்நான சடங்கு முடிந்த பின்பு உறுதிபூசுதலுங் கொடுப்பது வழக்கம். புதுநன்மை வாங்கும்படி இன்னுஞ் சில நாள் ஆயித்தஞ் செய்து அதன் பின்பு சேசுநாதருடைய திவ்விய பந்தியில் வந்து சம்மனசுக்களின் போஜனத்தை சாப்பிடும் பாக்கியம் பெறுவார்கள்

பபியோலாவுக்குப் பெரிய சனிக்கிழமையில் ஞானஸ்நான சடங்குகள் துவக்கி ஞாயிற்றுக் கிழமை சாயரட்சைதான் எல்லாம் முடிநதது. முடிந்தவுடனே மீரியா இருந்த கிராமத்துக்குப் போனாள். இருவரும் அநுபவித்த சந்தோஷம் எவ்வளவென்று வர்ணித்துச் சொல்லல் கூடுமானதல்ல. பாக்கிய நிறைந்த இந்த நாளில் பபியோலாவின் மனதிலிருந்த முக்கிய கருத்தேதென்றால், தனக்கு அடிமையாயிருந்தவளோடு, அன்று தான்சமமானஸ்திதியில் வந்து சேர்ந்தாளென்ற பெருமையான நினைவுதான். சமமான நிலையென்றால், புண்ணியத்திலாவது, சிறந்த நற்குண இலட்சணங்களிலாவது, மனதின் கௌரவமேன்மையிலாவது, தேவ ஞான அறிவிலாவது, பேறுபலன்களிலாவது, மீரியாவுடன் சமமாவது நின்றற் கூடாதென்று பபியோலா நிச்சயித்திருந்தாள். ஆனால் இருவருஞ் சர்வேசு

ரனுடைய பிள்ளைகளாகவும், மோட்ச பாக்கியத்துக்குச் சுதந்தரமுள்ளவர்களாகவுஞ், சத்திய திருச்சபையின் அவயவங்களாகவும, சேசுநாதர் சுவாமியுடைய விலைமதிப்பில்லாத திரு இரத்தத்தின் பலன்களில் பங்கு பெறும்படி தெரிந்து கொள்ளப்பட்டவர்களாகவுமிருப்பதால் சமமான ஸ்திதியிலிருப்பதாக சந்தோஷத்துடன் அந்த நாள் முழுதும் ஆனந்த பரவச நிலையிலிருந்தாள்.

மீரியா தன் பெலன் வர வரக் குறைவதைக் கண்டு தனது அந்திய காலஞ் சமீபத்தில் இருப்பதாக அறிந்து, தான் ஆசையோடு தேடிய காரியம் அநுகூலமாய் முடிந்ததால், அாச். சிமியோனைப்போல், ஆண்டவரே! இனி உமது அடியாள் உம்மிடம் வரும்படி கிர்பை செய்வீராக, என்ற தேவ சங்கீத கீர்த்தனையைப் பாடினாள். மறுநாள் பபியோலாவைக் கூப்பிட்டுச் சொல்வாள்: "அம்மா! என் கடைசி நாள் அடுத்து வருகின்றது. நான் போன பின்பு நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?"

பபியோலாக் கண்ணீர் சிந்தி அழுது சொல்வாள்:

"மீரியா, அதற்குள்ளே என்னை விட்டுப் போகிறாயா? நாம் இருவரும் வெகு வருஷங் கூடியிருந்து சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்வோமென்றல்லோ நம்பி இருந்தேன்."

"அம்மா, நான் துவக்கின வேலை முடிந்தது. இனி மோட்சத்துக்குத் தான் போகவேண்டும்."

"அப்படியானால், மீரியா, என்னையும் உன்னோடுகூட கூட்டிப் போ. நீ இல்லாதேபோனால் நான் தனியே இருந்து என்ன செய்வேன்?"

இப்படி இருவரும் பேசிக்கொண்டிருக்கையில் தியோனீசியுஸ் என்ற குரு வந்தார். காயத்தைச் சோதித்துப் பார்க்கையில், அது புனை ஓடி எலும்பு மட்டும் போய் வெகு ஆபத்தான ஸ்திதியில் இருப்பதாகக் கண்டார். பபியோலா இதைக் கேட்டு வெகு துக்கப்படும்போது, மீரியா அவளைத் தேற்றிச் சொல்வாள்: "அம்மா, அழவேண்டாம். சர்வேசுரன் சித்தமே நமது பாக்கியம். நான் போனால் அவர் உங்களைக் காப்பாற்றமாட்டாரா? அவர் ஒருவரோ உங்களுக்குப் போதாதா?"

பபியோலா அக்நேசியின் கல்லறைக்குப் போய், கண்ணீர் சிந்தி அழுது ஜெபஞ் செய்த பின்பு, மீரியாவின் கிட்ட வந்து சொல்வாள்:

"மீரியா, வல்லது, உன்னை அழைக்கச் சர்வேசுரனுக்குச் சித்தமானல், அவர் சித்தம் போலாகட்டும். நீ என்னை விட்டுப்போன பின்பு நான் என்ன செய்யவேண்டும்?"

மீரியா மோட்சத்தை அண்ணாந்து பார்த்து சற்று நேரம் ஜெபித்த பின்பு, தூர திர்ஷ்டி காட்சி பெற்றவள் போல் சொல்வாள்:

"என்னை அக்நேசி அம்மாளின் பாதத்தருகில் க்ஷேமித்த பின்பு எங்கள் இருவரையும் மறந்துபோகாதேயுங்கள். கடைசியில், கீழ்த்திசைத் தேசத்தில் இருந்து பரதேசி ஒருவன் சந்தோஷகரமான செய்தி கொண்டு வருவான்."

அடுத்த ஞாயிற்றுக்கிழமையில், குரு வியாதிக்காரியின் அறையிலே பூசை செய்து, மீரியாவுக்கு வழிக்காதார்மான அவஸ்தை நன்மை கொடுத்தார். பூசைக்குப்பின், கடைசி

தேவத்திரவிய அநுமானமும் ஜெபங்களுஞ் செய்து முடித்தார்.

இந்தச் சடங்குகள் நடக்கும்போது பபியோலாவும், அவள் வீட்டிலிருந்த வேலைக்காரர், எல்லாரும் வந்திருந்தார்கள். எல்லா முடிந்த பின் மீரியா தன் எஜமானியின் கையைத் தன் கையில எடுத்துச் சொல்வாள் : "அம்மா, நான் போகும்படி நேரமாயிற்று. நான் உங்களோடு இருந்த காலத்தில, என் தொழிலின் கடமைகளை நன்றாய் நிறைவேற்றாமலும், வீட்டில் உள்ளவர்களுக்கு நன் மாதிரிகை காட்டாமலும் இருந்ததற்காக மன்னிப்புக் கொடுக்க தாழ்மையாய்ப் பிரார்த்திக்கிறேன்."

இவ்வார்த்தைகளைப் பபியோலா கேட்டு வாய் விட்டு கோ என்று அழுதாள். வேலைக்காரி அவளைத் தேற்றிச் சொல்வாள் : "அம்மா, அழவேண்டாம. நான் பேசும்படி என நா எழாமல அவஸ்தையில இருக்கும்போது இந்தப் பாடுபட்ட சுரூபத்தை நான் முத்தி செய்யும்படி எனக்குக் காட்டுங்கள்.. சேசுமரியேசூசை என்ற திருநாமங்களை என காதின் கிட்ட வந்து சொல்லுங்கள். சுவாமீ, சர் வேசுரனுடைய குருவே, நீங்கள் எனக்குச் செய்த உபகாரங்களுக்கு எல்லாம் நான் மெத்தவும் நன்றி அறிந்திருக்கிறேன். நான் இறந்த பிற்பாடு என் ஆத்துமத்துக்காக உங்கள் பூசையில் வேண்டிக்கொள்ள மறந்து போகவேண்டாம்."

எல்லாரும் மீரியாவின் கட்டிலைச் சுற்றி முழங்காலில் இருந்து ஜெபஞ் செய்தார்கள். பேச்சுக் குறைந்தது. பாடுபட்ட சுரூபத்தை அடிக்கடி முத்தி செய்தாள். உதடுகள் மாத்திரம் அசைந்தன. கடைசியில் சந்தோஷமுஞ் சமாதானமும் அமரிக்கையுமுள்ள முகத்தோடு தனது

வலது கையைத் தூக்கி நெற்றியில் வைத்து, பின் நெஞ்சின் மேல் கொண்டு வந்து சிலுவை வரையும்போது, ஆ மரியே! நீர் தாயார் என்று காண்பியும், என்று தன் வாய்க்குள் சொல்ல, மீரியாவின் ஆத்துமம் உடலை விட்டுப் பிரிந்தது. அவள் முகத்தில் மின்னலைப் போல் மோட்ச பிரகாச ஒளி பளிச்சென்று பாய்ந்தது. சேசுநாதரையும் அவருடைய பரிசுத்த தாயாரையும் பார்த்த ஆனந்த சந்தோஷம அவள் முகத்தில் பதிந்திருந்தது. நல்ல கிறீஸ்துவர்கள் எக்காலத்திலும் மரிப்பதுபோல் பாக்கியமான மரணம் அடைந்து மோட்ச பதவியிற் சேர்ந்தாள்.

பபியோலா, இறந்த மீரியாவை நினைத்து பலநாள் துக்கப்பட்டாள். ஆனால் இந்த விசையில் அவள் மனதில் இருந்த துக்கம், மோட்சத்துச்குப் போய் அங்கே இறந்தவளைப் பார்ப்போம் என்ற நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்ட கிறீஸ்துவர்களின் அதி உத்தம துக்கம்.

இவ்வித பாக்கியானந்த கால கதியை நாமும் அடையும்படி பாவிகளின் தஞ்சமான தேவதாயார் துணைசெய்வாளாக.

1. அந்திய காலங் கிட்டி அடுத்துயிர் பிரியும் வேளை
சிந்தையுங் கலங்கிக் கண்கள் தெளிவில்லா மருளும்போதும்
வந்து நீ அருகில் நின்று வலக்கையில் என்னைத் தாங்கிச்
சொந்த உன் மகன் முன்பாகச் சேர்த்திடாய் தேவதாயே.

2. துக்கமுங் கவலை மிஞ்சித் துயர் விடும் ஆசை சூழ்ந்தெழப்
பக்கமும் வளைந்து ஓயாப் பயம் விடுத்தடிக்கும்போதும்
சிக்கிய கப்பல் போலே திகைத்து நான் தவிக்கும்போதும்
முக்தியைப் பேணுந் தாயுன் மடியினில் எனைச் சேர் அம்மா.

# மூன்றும் பாகம்—வெற்றிமாலை.

## முதல் அதிகாரம்

---

### கீழ்த்திசை அந்நியன்.

---

ஆ! நம்மோடு கூட இது மட்டும் இருந்து நமக்குத் துணையாய் நின்றவர்கள் எல்லாரும் ஒருவருக்கும் பின் ஒருவராய் நம்மைத் தனியே விட்டுப் போய்விட்டார்கள். அவர்களுடைய சொல்லுஞ், செய்கையும், அவர்கள் மனதின் கருத்தும், பற்றுதலும், நாம் எழுதிய இந்தக் கிரந்த நூலுக்கு ஆதாரமாய் இருந்து நமமை இவ்வளவு தூரங் கூட்டி வந்த பின்பு, இப்போது நாம் சுற்று மற்றும் பார்க்கையில் நிர்மானுஷியமான வனாந்தரத்தில் நாம் தன்னம் தனியே நிற்பதாகத் தோன்றுகின்றது.

ஆகிலும் இதில் ஆச்சரியப்பட ஞாயமில்லை. நாம் விவரித்த திருச்சபையின் சரித்திரஞ் சமாதான காலத்தை அல்ல, யுத்த காலத்தைச் சேர்ந்தது. நமது முன்னோர்கள் போர்க்களத்தில் இறங்கிச் சத்திய வேதத்துக்காக அஞ்சா மனத் துணிவுடன் யுத்தஞ் செய்த கஷ்ட காலம் அது. இந்த யுத்தத்தில் போர்வீரரும், இரணசூரரும், மடிந்து விழுந்து உயிரை இழந்தார்களென்பது விகாரமா

கத் தோன்றுமோ? அஞ்ஞான அரசர்கள் பேய் ஆவேசங் கொண்டவர்கள் போல் கிறீஸ்துவர்களைப் பகைத்து, அவர்கள் வேதத்தை அழித்து, அதன் பெயர் முதலாய் உலகத்தில் கேட்காதபடி செய்ய சபதங்கூறி, கெம்பீர ஜன்னி கொண்டெழுந்தார்கள். இக்கொடிய நிஷ்டூர செய்கையை முடித்தபின்பு, தாங்கள்கொண்ட ஜெயத்தின் அறிகுறியாக வானத்தை அளாவும் ஜெய ஸ்தம்பம் ஒன்று நாட்டி, அதன் மேல் "கிறீஸ்துவர்கள் சர்வ சங்காரமானார்கள்," என்று பெரும் அட்சரங்களால் எழுதி உலகத்துக்கு அறிவிக்கும்படி காத்திருந்தார்கள். இவ்வித கொடிய காலத்தில், பரிசுத்தராய் பாவமின்றி ஜீவித்த கிறீஸ்துவர்கள் பிடிபட்டு, உயிரைக் கொடுத்து, வெற்றிமாலை சூடி, மோட்ச முடி பெற்றார்களென்பது விநோதமாய்த் தோன்றுமோ?

நாம் விவரித்துக்காட்டிய கஷ்டகாலததுக்குப் பின்னும், முன்னிலும் அதிக கொடுமையுந் துன்பமும் நிறைந்த வேதகலகம வந்தது. கொடுங்கோலரான அரசாகளும், அதிகாரிகளும் ஒருவனுக்குப்பின் ஒருவனாய் வந்து, ஓரிடத்திலில்லாவிடில் வேறோரிடத்தில் கிறீஸ்துவர்களைக் கொடுமையாய் நடத்தி, அவர்களின் இரத்தத்தைச் சிந்தினார்கள். கீழ்த்திசைத் தேசங்களில் தியோக்கிலேசியன், கலேரியன், மாக்சிமீனியன் என்ற படுபாதகர்களும், மேல் திசைதேசங்களில் மாக்சீமியன், மாக்சென்சியன் என்ற கொடுங்கோலர்களுங் கிறீஸ்துவர்களுக்கு இளைப்பாறலின்றி துன்பத்தின் மேல் துன்பஞ் செய்துவந்தார்கள்.

மகா உக்கிரமுள்ள கொடும் புசல் பிரசண்ட மாருதமாய் எழும்பி, நாற்றிசையிலும் பரவி, தேசங்களெங்கும் சூறாவளிபோல் சுழன்று வீசி, தான் போன இடமெல்

லாழ், வீடுகளையும், விருட்ச ஜாதிகளையும் அடியோடு கீழேதள்ளி, பெருநஷ்டமுஞ் சேதமும் வருவிப்பதுபோல், அஞ்ஞான அரசர்கள் எழுப்பிய கொடிய வேதகலகங்கள் கிறீஸ்துவர்களிருந்த இடமெங்கும் பரவிப்போய், இத்தாலியாதேசத்திலிருந்து ஆப்பிரிக்காவுக்கும், மேல ஆசியாவிலிருந்து பலஸ்தீனுதேசத்துக்கும், அதிலிருந்து எஜிப்த் நாட்டுக்குஞ் சென்று, இடியைச் சூலாகக்கொண்ட காரமேகம் போல், எங்கும் அடர்ந்து சூழ்ந்திருந்தது.

இவ்வித துன்ப இடையூறுகள் மத்தியில் சத்திய திருச்சபை, வெள்ளம் பெருகப் பெருக தாமரைத் தண்டும் எழும்பி உயர்ந்து வளர்வதுபோல், செழித்துத் தழைத்து எங்கும் பரம்பி விர்த்தியானது.

அர்ச். பாப்புமார்கள் விடாத் தொடர்போடு ஒருவருக்குப்பின் ஒருவராய் அர்ச். இராயப்பா சிம்மாசனமீதிருந்து திருச்சபையை ஆண்டு வந்தார்கள். மேற்றிராணிமார்கள் அர்ச். பாப்பானவரிடத்தில் ஆலோசனை கேட்கும்படி தூர நாடுகளில் இருந்து பிரயாணமாய் வருவார்கள். பற்பல தேசங்களிலுள்ள கிறீஸ்துவ சபைகள் சகோதரவாஞ்சையுடன் ஒருவரொருவருடைய க்ஷேம சமாச்சாரங்களை விசாரிப்பார்கள். வேதகலக காலத்தில மரித்த குருக்களுக்குப் பதில் புதுக்குருக்களை ஏற்படுத்தி தேசங்களுக்கும் பட்டணங்களுக்கும் அனுப்புவார்கள். இவ்விதமாய் சேசுநாதர்சுவாமி ஸ்தாபித்த சபையானது காற்றுக்கும் புசலுக்கும், அசையாத வயிரமலைபோல ஓங்கி உயர எழும்பினது குளுந்த நிழலை நாற்றிசையிலும் பரபபினது.

இவ்வித கொடிய வேதகலக காலங்களில் அநேகங் கிறீஸ்துவர்கள் பட்டணங்களையும் ஊர்களையும் விட்டு வனு

ந்தரங்களுக்குப் போய் வனவாசிகளாய் ஜீவித்து, மடங்க ளேற்படுத்தி, ஒழுங்குகள் ஸ்தாபித்து, ஒன்றுகூடி ஒரு குடும்பத்தார் போல் வாழ்ந்து வந்தார்கள். இக்காலத்தில் தான் எஜிப்த் தேசத்தின் வனாந்தரத்தில் துறவோரின் சபைகள் உற்பத்தியாகி செழித்து வளர, காய்ந்து உலர்ந்த காடும் மலர்ந்து தளிர்த்து பூத்தாற் போல் தோன்றின.

திருச்சபை இவ்விதமாய் விர்த்தி அடைந்து, வெற்றி மாலைசூடி, ஜெயசீலியாய் ஆளும்போது, வேத விரோதிகள் ஒருவனுக்குப்பின் ஒருவனாய், நிந்தை அவமானப் பட்டு, வெறிகொண்ட நாயைப் போல் இறந்தார்கள். தியோக்கிலேசியன் நாடிழந்து, வீடிழந்து, கையில் கப்பரை எடுத்து, கஞ்சிக்குக்காற்றாய்ப் பறந்து இறந்தான். கலேரியன் உடம்பெல்லாம் உதித்து ஊதி, எங்கும் ரணமாய் கிருமிகள் உற்பத்தியாக, அவைகள் அவனை உயிரோடு சாப்பிட்டுக் கொன்றன. மாக்சீமியன் தானே தனக்கு சத்துருவாய், தன்னைச் சகிக்கமாட்டாதவனாய் நான்று கொண்டு செத்தான். மாக்சென்சியன் தீபேரி ஆற்றில் விழுந்து மடிந்து போனான். இப்படியாக சேசுநாதர் சுவாமியை விரோதித்து எதிர்த்த கொடிய அரசர்கள் எல்லோரும் அதோகதியாய் உருண்டு போனார்கள்.

கொன்ஸ்தந்தீன் என்றவா உரோமாபுரியின் சக்கரவர்த்தியானபோதுதான் கிறீஸ்துவர்களுக்குச் சமாதானமும், அமரிக்கையும், பிரஜைகளுக்குரிய சுதந்தர உரிமைகளெல்லாம் கொடுக்கப் பட்டன. வேதகலக நடந்த பத்து வருஷங்களில் இங்குமங்கும் பிரிந்து கலைந்து இருந்தவர்களெல்லாருந் திரும்பவுந் தங்கள் சொந்த ஊருக்கு வந்து சேர்ந்தார்கள். இதுமட்டும் அடைபட்டிருந்த கோ

விக்கள் திறக்கப்பட, பூஜை தேவாராதனை, பிரார்த்தனை ஜெபங்கள், பகிரங்கமாய் நடக்கத் துவக்கின. கொன்ஸ்தந்தீன் சக்கரவர்த்தி உரோமானரின் அரசர்களில் முதல் கிறீஸ்துவராய், வேதத்தின் பேரில் பக்தி, சிரத்தை, பற்றுதல் உள்ளவரானார். கிறீஸ்துவர்கள் பிரமாண்டமான தேவாலயங்களைக் கட்டி, அதி உன்னத சர்வேசுரனின் வாசஸ்தலமாயிருக்கத் தக்கதாய், அலங்காரமாய் சிங்காரித்து, வெகு சம்பிரமமாய் எழுப்பினார்கள்.

இதுமட்டுஞ் சுரங்கங்களுக்குள் ஒளிந்து மறைந்திருந்த திருச்சபை இப்போது வெளியே வந்து, வெற்றிமாலை சூடி, மணி மகுடம் புனைந்து பூவுலகாளுஞ் செலவ அரசியாய் முடி சூட்டப் பெற்றது. ஆனால் இவ்வெற்றியின் செலவ காலத்தை நாம் இந்நூலில விவரிதது் காட்டப் போகின்றோமென்று எண்ணவேண்டாம். திருச்சபை ஜெயவெற்றியின் முடிசூடி, அரசாண்ட சுபகாலத்தின் வைபவத்தை வர்ணித்து அலங்காரமாய எழுதுவது, நம்மிலும் அதிக சாமாத்தியமுந் திறமையுமுள்ள சாஸ்திர விற்பன்னரால இயலுங்கருமமாதலால், அவாகளுக்கு நாம் இப்பாகத்தை விடுகின்றோம். ஆனதால இம்மூன்றாம் பாகத்தில் நாம் சொல்லுமபடி இன்னம மீதியாயிருப்பது வெகு சொற்பம். இத்தோடு இந்நூலும் முடிவுபெறும்.

இரண்டாம் பாகத்தில் விவரித்த வேதகலக முடிந்து பதினைந்து வருஷங்களானபின்பு, இனிச் சொல்லும் வர்த்தமானங்கள் நடந்தேறின. இக்காலத்தில் திருச்சபையின் சட்டங்களும, ஆசார முறைமைகளும், ஸ்திரமாய் ஸ்தாபிக்கப் பட்டிருந்தன. வேதகலக காலத்தில் மனத்துணிவின்றி வேதத்தை மறுத்து அஞ்ஞானிகளான

சிலர், இப்போது மனந்திரும்பி தங்கள் தாயைத்தேடி வந்தார்கள். இராஜதானியின் தெருவீதிகளில் அந்நியரான சிலர், கைகால் பாதி வெட்டுண்டும், கண்விழிகள் அக்கினியால் சுடப்பட்டும், இனனம் பலவகையான அங்கக்குறைவோடும் நடந்து போவதைக் கிறீஸ்துவர்கள் பலமுறை காண்பார்கள். இவர்கள் வேதகலக காலத்தில் சேசுநாதர் சுவாமிக்காக யுத்தஞ் செய்து, காயம்பட்டு, இரத்தஞ் சிந்திய போர்வீரர்.

இப்படி இருக்கையில், ஒருநாள் பபியோலா தன் கிராமத்திலிருந்து வீட்டுக்கு வந்தபோது, அவள் வேலைக்காரனை துர்குவாதன் அவளிடம் வந்து, கவலையும் ஆத்திரபதற்றமும் முகத்தில் தோன்றச் சொல்வான்:

"அம்மா, கீழ்த்திசையிலிருந்து பரதேசி வருவானென்று காத்திருந்தீர்களே, அவன் வந்திருக்கிறதாகத் தோன்றுகிறது."

மீரியா சாகுமுன சொன்ன கடைசி வாக்கியத்தைக கருத்தாய் கேட்டு மனதில் வைத்திருந்த பபியோலா மிக ஆத்திரத்தோடு அவன் எங்கே என்று கேட்க, அவன் வந்து போய்விட்டானென்று அறிந்தவுடனே, அவள் முகம் வாட, துக்கத்துடன் ஊழியனை நோக்கி, வந்தவன் கீழ்த்திசைப் பரதேசியாக எப்படி அறிந்தானென்று அவனை விசாரித்தபோது அவன் சொல்வான்:

"அம்மா! இன்று காலமே நான் வெளியே போகையில், ஓரிடத்தில் சிலபேர் கூட்டமாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் நடுவில் ஒருவயோதிகன் நின்றான். அவனுக்கு இன்னம் ஐம்பதுவயசு இராது. ஆகிலுந் தபசாலுந் துக்கத்தாலும் களைதிரை விழுந்த விர்த்தாப்பிய

னிப்போல் தோன்றினன். அவன் தாடியின் உரோமம் நீண்டு வளர்ந்து தொங்கினது. அவன் உடை, கீழ்த்திசை தேசங்களின் சந்நியாசிகள் உடைபோலிருந்தது. இவன் அக்நேசி அம்மாள் கல்லறைக்கிட்ட வந்தபோது, கீழே விழுந்து, பெருமூச்சுவிட்டு, கண்ணீர் அருவிபோல் சிந்தி, அழுது பிரலாபித்தான். சூழ நின்றவாகள் அனுதாபப் பட்டு அவன் கிட்டப் போய் ஆறுதல் சொல்லி, "சகோதரனே நீ மிகவும் வருத்தப்படுகிறாயா? இபபடி அழாதே. இந்தப் புண்ணியவதி வெகு இரக்கமுள்ளவள். பயப்படாதே. உனக்காக நாங்கள் சர்வேசுரனைப் பிரார்த்திப் போம," என்றார்கள். ஆனால் அவன் இவர்கள் சொன்னதைக் கேளாமல் முன்னிலும் அதிகமாய் கண்ணீர் சிந்தி அழுதான்."

"அதற்கு பின் அவன் என்ன செய்தான்?"

"வெகுநேரம் இப்படி அழுத பின்பு, எழுந்து, தன் வஸ்திரத்துக்குள் மறைத்து வைத்திருந்த ஒரு மோதிரத்தை எடுத்து கல்லறைமேல் வைத்துப் போனான். அந்த மோதிரத்தை நான் அநேக வருஷங்களுக்குமுன் பாாத்ததாக எனக்குத் தோன்றுகிறது."

"அதன்பின் சம்பவித்ததென்ன?"

"அவன் எழுந்திருந்து போகும்போது என்னைப்பார்த்து, நான் யாரென்று என் வஸ்திரத்தால் அறிந்து, என் கிட்டவந்து, உடல் நடுங்கி, வாய் பதறி, என் முகத்தை ஏறிட்டுப்பார்க்காமல், "சகோதரனே சீரியா தேசத்திலிருந்துவந்த மீரியா என்னும் பெயருள்ள வேலைக்காரியின் கல்லறை எங்கே இருக்கிறதென்று உனக்குத் தெரியமா" என்று கேட்க, நான் அவனுக்குக் கல்லறையைக் காட்டி

னேன். அவன் வெகு துக்கத்தோடு சற்றுநின்றபின், என்னைநோக்கி, அவள் எதினுல்'இறந்தாளென்று கேட்ட தற்கு, அவள் க்ஷயரோகத்தால் இறந்தாளென்று நான் சொன்னேன்.' அப்போது அவன் தன் மனதிலிருந்த பெருந்துக்கபாரங் கீழே விழுந்தாறபோல் ஆறுதலடை ந்து, ஒருமணி நேரம் அந்தக் கல்லறையின் கிட்ட இருந்து அழுது, அதை அநேகம விசை முத்திசெய்து, கடைசியில எழுந்து போய்விட்டான்.

பபியோலா இவையெல்லாங் கேட்டபின் ஆத்திரத் தோடு சொல்வாள் :

“ துர்குவாதா, அவன்தான் நான எதிர்பார்த்திருந்த பரதேசி. நீ ஏன் அவனை நிறுத்தவில்லை ?”

“ அம்மா, அவன் முகத்தை ஒருவிசை பார்த்தபின், அவனோடு பேச எனக்குத் துணிவில்லை. ஆனுல் அவன திரும்பிவருவான். ஏதோ வேலையின் நிமித்தம் பட்டண த்துக்குள் போயிருக்கிறுன்.”

“அவனை எப்படியாகிலும் நீ தேடிப்பார்த்துக் கூட்டி வா. மீரியா சாகுமுன் இந்த சுபசெய்தியை தூர திர்ஷ்டி யால் அறிநது சநதோஷமாய் மரித்தாள்.”

## உ-ம். அதிகாரம்.

### வேத விரோதியின் அதோ கதி.

மறுநாள் காலையில் கீழ்த்திசையிலிருந்து வந்த பர தேசி சந்தைகூடும் இடத்தின் பக்கம் போகும்போது, அங்கே சில துஷ்டவாலிபரும் பிள்ளைகளுங் கூடிக்கொ ண்டு ஒரு மனிதனைப் பிடித்து இழுத்துச் சேறுஞ் சகதியும்

அவன்மேல் வாரி எறிந்து, பயித்தியம் பிடித்தவனைப் பாடு படுத்துவதுபோல் துன்பப் படுத்துவதைப் பார்த்தான். சந்தடி கூட்டமிருக்கும் இடத்துக்குச் சாதாரணமாய்ப் போகாத இவன், இந்த விசையில் தானமுன் அறிந்த ஒருவனுடைய பெயரை அந்தக்கூட்டத்தில் சொல்வதைக் கேட்டு, பார்க்கும்படி கிட்ட வந்தான். இந்தக் கும்பலின மத்தியில் உதித்து ஊதிப் பெருத்த தேகமுள்ள ஒருவன் நின்றான். வழுக்கைத்தலையனாய், முகமெல்லாம வீங்கி, கண்கள் சிவந்து போய், புண்ணும் இரணமும் புழுத்து வடிய, பார்க்க வெகு அசங்கிய கோலத்தோடு இருந்தான. அவன் கண்பார்வையு நடையும பூரத்தியாய்க்குடித்து வெறி கொண்டவனைக் காட்டினது. அவன் அணிந்த வஸ்திரம் அழுக்கடைந்து வெகு அலங்கோலையாயிருந்தது.

அங்கு கூடி நின்றவர்களில ஒருவன சொல்வான்:

"அடே கோவீனு! உனக்குத் தக்க கூலி வரப்போகின்றது. கொன்ஸ்தந்தீன் இராயர் உரோமாபுரிக்கு வருவாராம. வந்தால, பழிக்குப பழி வாங்கும்படி கிறீஸ்துவர்கள் முறைவரும். அப்போது உனக்கு வட்டியும முதலுஞ் சேர்த்துக் கொடுப்பார்கள்."

"போடா போ. அதைப்பற்றி எனக்குப் பயமே இல்லை. பழிவாங்குங் குணம் அந்தப பேதைக் கிறீஸ்துவர்களுக்குக் கிடையாது அதுவுமன்றி, கொன்ஸ்தந்தீன இராயன், மத விஷயங்களில் அவனவன் தன் இஷ்டம் போல் எந்த மதத்திலும் இருக்கலாமென்று சட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்."

"இதுவெல்லாம் மொத்தத்தில் சரிதான். ஆனால் போன வேத கலாபத்தில் முதன்மையாயிருந்து அக்கிர

மங்களை செய்தவர்களைத் தண்டியாவிட்டால் 'அது' தேச சட்டத்துக்கு விரோதமாகுமாம். அடிக்கு அடியும், இரத் தத்துக்கு இரத்தமும், புலிக்குப் புலியும், வருமென்று எல் லாருஞ் சொல்லுகிருர்கள்."

கோர்வீனன் இதைக் கேட்டு பயந்து, இது மெய் தானு? உனக்கு யார் இப்படி சொன்னது? என்று கேட்க, ஒருவன் சொல்வான :

"இதை யாராவது சொல்லவேண்டுமோ? இயல்பிலே இது நடக்க வேண்டிய விஷயமல்லவா? இது நீதி ஞாயத் துக்கு ஏற்ற ஒழுங்கு."

"ஆகிலும், எனக்கு அவ்வளவு பயமில்லை. காலத் துக்குத் தக்க கோலம் எடுக்க எனக்குத் தெரியும். நான் கிறீஸ்துவனுவேனென்ருல், எனக்கு ஒன்றுஞ் செய்யமாட் டார்கள். பாட்டுக்குத் தகுந்தாப்போல் ஆடுகிறேனென் ருல் யார் என்ன செய்வார்? ஆனல் ஒன்று மாத்திரம்..."

"என்ன ஒன்று? பங்கிராசைப் போல் வேங்கை க்கு—."

கோர்வீனன், கோப வெறியோடு, கண்களிலிருந்து நெருப்பைக் கக்கி, கையை மடித்துச் சொலவான் :

"அடே, அந்தப் பயல் பெயரை நீ இன்னொரு விசை சொல், பார்க்கலாம். உன் பலலை எல்லாம் உதிர்த்து உன் கையிலே எண்ணிக் கொட்டாதேபோனல் நானே கோர் வீனன்."

"ஏண்டா? அவன் பெயரைக் கேட்கும்போது உன் ஈரல் குலை பற்றி எரிகிறதோ? நீ எப்படி உருண்டு போவா யென்று அவன் சொன்னது உனக்கு ஞாபகம் இருக்கிற தல்லவா?"

சூழ நின்ற எல்லாரும், ஓ! ஓ! வேங்கை! வேங்கை! கோர்வீனன் மேலே வேங்கை!—என்று சொல்லிக்கொண்டு ஓடும்போது, கோர்வீனன் கல்லேயும் மண்ணேயும் எடுத்து அவர்களேத் துறத்தி பித்துக்கொணடவன் போல் ஓடினன்.

இப்படி ஓடின கோர்வீனன், மிருகங்கள் அடைபட்டிருந்த மாலுக்குச் சமீபத்தில் வந்தான். அங்கே இருப்புக் கூட்டுக்குள்ளே கொடிய வேங்கை ஒன்று அடைபட்டிருந்தது. அதைக் கண்டவுடனே, மதிமயங்கி பங்கிராஸ் இவன் வேங்கையால் கடியுண்டு சாவான் என்றதை நினைத்து, உன்மத்தனும் கூட்டின் கிட்ட வந்து, பல சேஷ்டைகள் செய்து, வேங்கைக்குக் கோப மூட்டி: ஓ! ஓ! நீ தானு வேங்கை? நீ தானு என்னைக் கொலலப் போகிருய? வா, பார்க்கலாம்—என்று கமபியின கிட்ட தலேயை வைத்து பல்லேக் காட்டி, நிற்கும்போது, கொடிய வேங்கை தாவிப் பாய்ந்து, கம்பி வழியாய் அவன் கழுத்தைப் பிடித்துக் காயப்படுத்தினது.

அந்தப் பக்கம் போனவர்கள் அவனேத் தூக்கி அடுத்த வீட்டுக்குக் கொண்டுபோனர்கள். இதெல்லாம் பார்த்த பரதேசி, அவன் பின்னலே போய், அவனுக்கு வேண்டிய உதவி எல்லாஞ் செய்து, காயங் கட்டின பின்பு: நான் யாரென்று உனக்குத் தெரியுமா?—என்று அவனேக் கேட்டான்.

"நீயா? யாரா? எங்கேயோ உன்னே நான் பார்த்திருக்கிறேன். எங்கே?—ஓ! நீ தான், நரிக்குட்டி, நாம் இருவருங் கூடி கிறீஸ்துவர்களேப் பிடிக்கும்படியாய் செய்த அக்கிரமங்களே நீ மறந்தா போனய்?"

"கோர்வீனு! அதைப்பற்றி பேசாதே: போனது போய்விட்டது. நான் இப்போ கிறீஸ்துவன்."

"நீ கிறீஸ்துவனு! நீயா! எவனுஞ் செய்யாத கொடுமை எல்லாஞ் செய்தவன் நீ அல்லவா! இதை எல்லாம் பொறுத்துக்கொண்டார்களா? அடே, நீ இராத்திரியில், கண்ணை மூடினலும் உனக்குத் தூக்கம் வருமா? நீ கொன்ற குலமக்களின ஆவி உன்னைப் பழிவாங்கத் தோன்றவில்லையா? இதுமட்டும் வராவிட்டால், இனிமேல் தப்பாமல் வருவார்கள். பகையும் பழியும் உன்னை விட்டு ஒழியுமா? நான் பட்ட அவஸ்தை நீயும படவேண்டாமா?"

"போதும், போதும், கோர்வீனு. நானும் உன்னைப் போல் பல துன்பப்பட்டேன். ஆனல், என் துன்பத்துக்குப் பரிகாரமான அவுழ்தம் எனக்குக் கிடைத்தது. அதை உனக்குங் கொடுக்கும்படியாய் நான் வந்தேன்."

இப்படிச் சொல்லி அவன் கிட்ட வந்து, சர்வேசுரன் எவ்வளவு தயை, இரக்கம் உள்ளவனென்றும், ஒருவன் எவ்வளவு தான் பாவங்களைச் செய்தாலும், அவன் மனந்திரும்பி வந்தால், சர்வேசுரன் அவனுக்குப் பொறுத்தல் கொடுப்பானென்றும், அதற்கு கண் கூடான திருஷ்டாந்தம் தானே என்றுஞ் சொல்லும்போது, கோர்வீனன் வெகு ஆச்சரியத்தோடு கேட்டான். அதற்குப்பின் கிறீஸ்துவேதத்தின் பிரதான சத்தியங்களை அவனுக்கு விவரித்து, கடைசியில் அவனை நோக்கி, கோர்வீனு, நான் சொன்னதை எல்லாம நீ விசுவசித்தால், ஞானஸ்நானம் பெறுவாய். அதின் தண்ணீர் உன் ஆத்துமத்தைச் சுத்தஞ் செய்யும், என்றபோது, கோர்வீனன், எது சுத்தஞ் செய்யும் என்று சற்று வெறுப்போடு கேட்டான்.

ஞானஸ்நானத்தின் தண்ணீர், என்று பரதேசி சொல்ல, கோர்வினன், தண்ணீரா! ஓ தண்ணீர் எனக்கு வேண்டாம். அதை அப்பால் கொண்டு போ என்று கதறி அலறி, வலிப்பெடுக்க ஊளையிட்டான்.

பரதேசி அவனைத் தேற்றி ஆறுதல் சொல்லி, பயப்படாதே, உன்னைத் தண்ணீரிலே அமிழ்த்தமாட்டார்கள் இதோ பார், இவ்வளவு தண்ணீர் தான் உன் தலையில் ஊற்றுவார்கள், என்று சொன்னாலுங் கோர்வினன் கேளாமல் துடித்துப் பதைத்து, இசிவும் வலியும் எடுத்து, பல்லை நெறு நெறென்று கடித்து, வாயில் இருந்து நுரை நுரையாய் கக்கி, மிருகத்தைப் போல் கூவிக் கர்ச்சித்தான்.

வேங்கைக் கடியின் பல் விஷவெறி அவனைப் பிடித்தது. வெறியின் மிகுதியால், வாயில வந்த தூஷணம் எல்லாஞ் சொன்னான்: "தண்ணீர் எனக்கு வேண்டாம். தண்ணீரா? தண்ணீர், எனக்கல்ல. அக்கினி, நெருப்பு, அது தான் எனக்குக் கதி. ஓ! அக்கினி அகோரமாயப் பொங்குகின்றது! ஓ எங்கே பார்த்தாலும அக்கினி மண்டி எரிகின்றது! இதோ கொழுந்து விட்டு சுவாலித்து எழும்பி என் கிட்ட வருகின்றது. ஐயோ! அக்கினிக்கு நான் இரையாய்ப் போகிறேன்!" என்று சொல்லி அக்கினிக்குத் தப்பும்படி இங்கும் அங்கும புரண்டான். கையையுங் காலையையும் உதறினன். வாயால் ஊதி அவிக்கும்படி முயன்றான். கிட்ட இருக்கிறவர்களைக் கூப்பிட்டு நெருப்பைத் தணிக்கும்படி கேட்டான்.

அந்த நாள் பகலும் இராவும் இப்படிப் புலம்புவதிலும் பினற்றுவதிலுங் நடந்தது. பித்தமுஞ் சுரமும் மேலிட்டு அதிகரித்தது. கோர்வினன் தான் இருந்த கட்டிலை விட்டு

எழுந்து உட்கார்ந்து, விழியைத் திரட்டி உருட்டி யாரை யோ பார்த்து, கோபமும் வெறியும் பொங்கினவனாய்ச் சொலவான் :

அடா, பங்கிராஸ், போ, போ, என்முன் நிற்காதே! உன்னைப் பார்க்கமாட்டேன். பழி வாங்கவோ வந்தாய்! நீ சொல்வதை நான் கேட்கமாட்டேன். அக்கினி தான் என் வீடு! ஓ! அதோ கொடிய வேங்கை! உக்கிரமாய்க் கர்ச்சித்து வாலைச் சுழற்றி பதுங்கிப் பதுங்கி, வருகின்றது. அடா, அதைப் பிடித்துக்கட்டு! ஓ! இதோ பாய்ந்து குதி த்து வருகின்றது! ஐயோ! என் தொண்டையைக் கவ்விப் பிடிக்கின்றது! ஐயோ! ஐயோ! நான் செத்தேன்" என்று கதறி அலறித் தன் மேல் பாய்ந்த வேங்கையைப் பிடித்து தள்ளுவதுபோலீ தன் கைகளை அசைத்த பின்பு, கீழே விழுந்தான். அவன் காயந் திறந்து அதிலிருந்து இரத்தம் கப கப வென்று ஓடிவர, கோர்வினன் நிர்ப்பாக்கியனாய் செத்து, அவலெட்சண அசங்கிய கோர ரூபமுள்ள பிரே தமானான்.

இதெல்லாம் பார்த்து நின்ற பரதேசி பயந்து நடுங்கி, சத்திய திருச்சபையை பகைத்துப் பழித்து விரோதிக்குந் துஷ்டன், மனந் திரும்பாவிடில், எப்படி அவலமாய்ச் சாவான் என்று கண் கூடாகப் பார்த்தான்.

**நரகில் விழுந்தவன் புலம்பி அழுஞ் சப்தம்.**

கார் இருள் அடர்ந்த பெருங்குகை நரகக்
கடுஞ் சிறை இடமிருந் தொலிக்கும்
பேர் இடி முழக்கம் நேர் அழுங்குரல் கேள்—
"பெயர்ந்து நான் இவ்விடம் விட்டு,
பாரிடம் ஒரு நாழிகை அளவிருந்தால்
பாவ நிவாரணம் அடைவேன்—"

கூர் அட்ர் நீயும் இவ்விதஞ் செய்துன்
றுகள் நடைத் தருள் பெறுவேனோ?

## ௫-ம். அதிகாரம்.

### பாக்கிய சம்பூரணம்.

வேத விரோதியின் நிர்ப்பாக்கிய சாவைப் பார்த்த கீழ்த்திசைப்பரதேசி, சர்வேசுரன் தன்னை இவ்வித கொடிய சாவினின்று காப்பாற்றினதற்காக நன்றி அறிந்த ஸ்தோத்திரஞ் செய்த பின், தான் உத்தேசித்து வந்த வேலையை முடிக்கும்படி யூதவர்த்தகர்கள் குடியிருந்த தெருவுக்குப் போனான் அங்கே ஒரு வீட்டுக்குள் நுழைந்து யூதவர்த்தகனிடம் போய், அவனுடைய கணக்குப் புஸ்தகத்தில், இத்தனை வருஷங்களுக்கு முன இன்னானுக்குக் கடன் கொடுத்ததின் விவரம் இன்னதென்று பார்க்கும்படி கேட்டான். பார்க்கையில் பதினைந்து வருஷங்களுக்கு முன் மேற்படி பெயருள்ள ஒருவன் கடன் வாங்கினதாகவும, அந்தக் கடனை அவன் பெயரால் பபியோலா வென்ற செல்வப் பெருமாட்டி தீர்த்ததாகவுங் கண்டிருநதது. பரதேசி ஆச்சரியப் பரவசமாய் நிற்கும்போது, யூதவாத்தகன் சொல்வான்:

"எனதுடைய பலநாளைய அநுபவ வாயிலாய் நான் அறிந்ததில், இதுதான் முதல விசை ஒருவன் கடன் வாங்கி, தவணை தப்பி ஓடிப்போய், பிற்பாடு தன் கடனைப் பற்றி விசாரிக்க வந்தது ஐயா, நீர் கிறீஸ்துவராய் இருக்கவேண்டும்."

"ஆமா ஐயா, சர்வேசுரனுடைய கிருபையால் நான் கிறீஸ்துவன்."

"ஐயா, உமக்குக் கடன் கொடுத்தவர் என் 'தகப்பனூர் இபிராம். இப்போது அவர் அபிராம் என்பவரிடம போய் விட்டார். உமக்குப் பணந் தேவையானுல், சொல்லும், சரசமான வட்டிக்குப் பணங் கொடுக்கிறேன்."

பரதேசி யூதனுக்கு வந்தனஞ் சொல்லி, பபியோலா வீட்டுக்கு நேரே போனுன். போகும் வழியில் வேலைக்காரன் துர்குவாதனைக் கண்டபோது, இருவருந் தங்களுடைய பழைய நாளையச் சங்கதிகளைப்பற்றி ஒரு வார்த்தையும் பேசவில்லை. கடந்தது எல்லாங் கடந்தாயிற்றென்று, அதை நினையாமல, பரதேசி பபியோலாவைக்கண்டு பேச அது தகுந்த நேரமாவென்று மாத்திரங் கேட்டான். இவனுக்காகவே பபியோலா வீட்டில் காத்திருந்ததால, துர்குவாதன் பரதேசியை வீட்டுக்குக் கூட்டிப்போனுன்.

பரதேசி வருவதைக் கண்டவுடனே பபியோலாவின் மனம் பதைத்துத் துடித்தது. அவன் அவள் முன் வந்து வெகு தாழ்மை வணக்கத்தோடு நின்று சொல்வான் :

"அம்மா, உங்களுக்கு ஞாய சட்டப்பிரகாரஞ் செல்ல வேண்டியதைச் செலுத்த வேண்டுமென்கிற கடனும், என் நன்றி அறிதலை உங்களுக்குக் காட்டவேண்டுமென்னுங் கிரம நீதியும் இல்லாவிடில் உங்கள் கண் முன் வரும்படி நான் ஒருபோதுந் துணிய மாட்டேன்."

"ஒரோன்சியா! இதல்லவா உன் பெயர். (அவன் ஆமா என்று தலையை அசைத்தான்) நீ எனக்குச் செலுத்தவேண்டிய கடன் ஒன்றும் இல்லை. நம்மிருவருக்கும் பொதுவான ஒரு கடன் ஏதென்முல், நாம் ஒருவரொருவரைச் சிநேகிக்கவேண்டும். இதுதான் வேத வாக்கியம்"

"அம்மா, உங்களுடைய சிறந்த தயாளகுணம் எத்தன்மைத்தென்று எனக்கு நன்முய்த் தெரியும். நீங்கள் என்

சகோதரியை உங்கள் வீட்டில் வைத்து, பெற்றதாயிலும் அதிக பட்ச பாந்தவத்துடன் காப்பாற்றி வந்தீர்கள்."

"ஓரோன்சியா, நான் உன் சகோதரிக்குச் செய்ததைப் பார்க்கிலும், அவள் என்னால் கணைதஜச் சொல்ல முடியாத வகையில் எனக்கு நன்மை செய்திருக்கிறாள். அவள்தான் சர்வேசுரனுடைய சம்மனசாய் என் வீட்டுக்கு இரட்சணியங் கொண்டு வந்தாள். என்னை அஞ்ஞான அந்தகாரத்திலிருந்து சத்திய வேத பிரகாசத்துக்குக் கூட்டிவந்தவள் அவளே."

" அம்மா, என் சகோதரிக்கு நீங்கள் இவ்வளவு செய்தது போதாதென்று, உங்கள் தயவுக்கு எவ்வகையிலும் அபாத்திரனை எனக்குங்கூட மாறுதவி தேடாத பேருதவி நீங்கள் செய்ததாக இன்று காலமேதான் நான் அறிந்தேன்."

" அப்படி நான் ஏதுஞ் செய்ததாக எனக்கு ஞாபகமில்லையே."

" அப்படியானால் நான் சொல்லுகிறேன், கேளுங்கள். பலஸ்தீனு தேசத்தின் சமீபத்தில பெரிய வனாந்திரம் ஒன்றிருக்கிறது. அதிலே அநேகம் பேர்கள், உலக சுகத்தை வெறுத்து, மடங்களிலிருந்து, ஜெபத்திலுந் தபத்திலும் பற்பல வேலைகள் செய்வதிலுந் தங்கள் ஜீவிய நாளைச் செலவழிக்கிறார்கள். இப்படிப்பட்ட தபசிகளின் மடங்களைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா ?"

" பலமுறை நான் கேள்விப்பட்டிருக்கிறேன. வனவாசிகளான சின்னப்பர், அந்தோனியார், இவர்களுடைய பெயர் இங்கே சிறுபிள்ளைகளுக்குந் தெரியும்."

" அம்மா நான் வனவாசி அந்தோனியாரின் சீஷர்களிலொருவன். பல வருஷம் அவர் மடத்தில் நானிருந்து

தபசு செய்தாலும், என் மனதில் ஒருகவலை, முன்போல் பதிந்து என்னை இராப்பகலாய் வருத்தினது. நான் உரோமையை விட்டுப் புறப்படு முன்னே ஒரு யூதவர்த்தகனிடத்தில் பெருந்தொகை அநீதமான வட்டிக்குக் கடன் வாங்கினேன். வாங்கின கடனைச் செலுத்தாமல் ஓடிப்போனேன். இப்போ பதினைந்து வருஷமாகின்றது. வட்டியுந் தொகையும் பெருகி ஏறிப்போய் விட்டது. கடனை உத்தரிப்பது நீதிசட்டம். ஆனால் வனத்திலிருந்து பாயுங் கூடையும் பின்னி முடைந்து பிழைப்பவனாலே எப்படிக் கூடும்?

"நான் வாங்கின கடனை இறுக்க ஒரு வழி மாத்திரம் எனக்கு உண்டு. எனக்குக் கடன் கொடுத்த யூதனிடம் வந்து, அவன் காலில் விழுந்து அவனுக்கு அடிமையாய் இருந்து, அடி உதைபட்டு தொண்டு செய்வது ஒன்றுதான் நான் செய்யக்கூடியது. சேசுநாதர்சுவாமியே எனக்காக மோட்சத்திலிருந்து வந்து தம்மை அடிமையாய் மனிதருக்கு விற்றபோது நான் இப்படிச் செய்ய அஞ்சலாமோ?

"இன்று காலமே யூதவர்த்தகனைத் தேடிப் போய் அவன் கணக்குப் புஸ்தகத்தைப் பார்க்கும்போது, நான் கொடுக்கவேண்டிய கடனை நீங்கள் முழுதுந் தீர்த்ததாக அதில் பதிந்திருந்தது. ஆனதால் யூதவர்த்தகனுக்கு அல்ல, அம்மா, உங்களுக்குத் தான் நான் அடிமை"—என்று சொல்லி, பபியோலா முன் சாஷ்டாங்கமாய் விழுந்தான்.

பபியோலா கண்ணீர் சிந்தி தேம்பி விம்மி அழுது அவனை அன்போடு தூக்கி: ஒரோன்சியா, எழுந்திரு, நீ எனக்கு அடிமையல்ல, சகோதரன் என்று சொல்லி, இருவரும் உட்கார்ந்தார்கள். பபியோலா அவனைப் பார்த்து, சகோதரா நீ எப்படி கிறீஸ்துவன் ஆனாய். உன் சரித்திரம் என்ன, என்று கேட்க பாரமேதசி சொல்வான்;

"அம்மா, என் சரித்திரத்தைச் சுருக்கமாய் உங்களுக்குச் சொல்லுகிறேன். நான் இந்த இராஜதானியை விட்டு, எனக்கு எம தூதனாய் வாய்ந்த எவுரோட்டனோடு இராத்திரியே புறப்பட்டு, கப்பல் ஏறி சைப்ரஸ் என்ற தீவுக்குப் போனோம். நாங்கள் போன இடம் எல்லாந் துர் அதிஷ்டமுங் கூட வந்தது. துர் அதிர்ஷ்டமா? இல்லை, அம்மா, அது தேவ சாபம். இதிலிருந்து பலஸ்தீனாதேசத்தின் காசா பட்டணத்துக்குச் சேர்ந்தோம். கையில் காசின்றி, குடிக்கக் கஞ்சியின்றி, மெத்த வருத்தப்பட்டோம். இப்படியிருக்கையில், அந்தப் பட்டணத்தில் கிறீஸ்துவர்களுக்கு விரோதமான பெருங்கலகமிருந்ததால், கிறீஸ்துவர்களைத் தேடிப் பிடித்து, காட்டிக் கொடுத்து, பணஞ் சம்பாதிக்கும்படி எவுரோட்டன் என்னைக் கூப்பிட்டான். இதுதான் என் ஜீவிய காலத்தில் முதல்விசை, நான் இவ்வித அக்கிரமஞ் செய்ய சம்மதிக்கமாட்டேனென்றது.

"ஒருநாள் எவுரோட்டன் என்னை அந்தரங்க இடத்துக்குக் கூட்டிப் போய் எனக்குச் சொல்வான்:

"ஒரோன்சியா கேள், நமது குடும்பத்தை நல்ல ஸ்திதிக்குக் கொண்டு வரக்கூடாவிடில், ஜீவிப்பதிலுஞ் சாவது உத்தமமென்று ஆணையிட்டிருந்தேன். அதை நிறைவேற்ற காலம் வந்தது. இதோ நஞ்சு கலந்த இரண்டு குப்பிகள். நீ இதைக் குடியென்று பெரிய குப்பியை எனக்குக் கொடுத்து, சின்னதை அவன் குடித்தான். நான் குடிக்கமாட்டேன் என்றேன். அவன் பேய ஆவேசங் கொண்டவன் போல், என்னைப் பிடித்து கீழே தள்ளி, செத்தால் நாம் இருவருங் கூடச் சாகவேண்டுமென்று என் வாய்க்குள்ளே குப்பிக்குள் இருந்ததெல்லாம் ஊற்றினான்."

"நான் பிரஞ்ஞை அற்று வெகு நேரங் கீழே கிடந்த பின்பு, கடைசியில் விழிக்கும்போது, நரை திரை விழுந்து, வளர்ந்து தொங்கிய தாடியுள்ள ஓர் ரிஷி என் கிட்ட நின்று, குளிர்ந்த ஜலங் குடிக்கும்படி எனக்குக் கொடுத்தார். எவுரோட்டன் எங்கே என்று பார்க்கும்போது பக்கத்தில் விழுந்து செத்துக் கிடந்தான். எப்படி அவனைப் போல் நானுஞ் சாகவில்லை என்று எனக்குத் தெரியாது."

"என் கிட்ட நின்ற ரிஷியின் பெயர் இலாரியன். இவர் அந்தோனியாருடன் எஜிப்த் தேசத்தில் பல வருஷம் இருந்து புண்ணிய ஒழுக்கத்தில் தேர்ந்த பின்பு பலஸ்தீன் தேசத்தில் ரிஷிகளின் மடம் கட்டும்படி வந்தவர். அவருடைய சீஷர்கள் பலபேர் அங்கே இருந்தார்கள். என்னைத் தங்கள் மடத்துக்குத் தூக்கிப்போய் ஆதரித்தார்கள். அவர்களுடைய தர்ம நடக்கையையும், பக்தி ஒழுக்கத்தையும் பார்த்தபோது, என் தாயார், சகோதரி, இவர்களின் ஞாபகம் வந்தது. நான் செய்த பாவாக்கிரமங்களுக்காக அழுதேன். ரிஷி என்னைத் தேற்றி, ஞான உபதேசங் கற்பித்து, எனக்கு ஞானஸ்நானங் கொடுத்தார்."

"ஆ! ஓரோன்சியா, நாம் இருவருஞ் சத்திய திருச்சபையாகிற தாயின் பிள்ளைகள். உன்னைப் போல் நானும் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறேன். இனி நீ என்ன செய்யப் போகிறாய்?"

"அம்மா, நான் செய்யும்படி வந்த அலுவலைச்செய்து முடித்தேன். என் கடனைத் தீர்க்கவும், அக்னேசி அம்மாள் கல்லறையில் ஒரு காணிக்கை வைத்து அவளைப் பிரார்த்

திக்கவும வந்தேன். இவ்விரண்டு முடிந்ததால் திரும்பி நான் வனத்துக்குப் போகிறேன்."

"ஆனால் இவவளவு தூரம் போகும்படி வேண்டிய பணம் உனக்கு இருக்கின்றதா?"

"அம்மா, வழியில் யாசகஞ் செய்து, தர்மமாக எனக்குக் கொடுப்பதை வாங்கிச் சாப்பிட்டுப் போவேன். கிறீஸ்துவர்களான சகோதரர் வெகு தயாளமும், இரக்கமும் உள்ளவர்கள். ஆனால் உங்கள் வீட்டுக்கு நான் வந்ததற்காக கொஞ்சங் கஞ்சித் தண்ணீர மாத்திரங் கொடுத்தால் போதும்."

இருவரும் எழுந்து போகும்போது, ஒரு பெண்பிள்ளை அலறிப் பதறி ஓடிவநது பபியோலாவின் காலில் விழுநது, அம்மா, அம்மா, என்னைக் காப்பாற்றுங்கள், என்னைக் கொல்லும்படி துறத்திக்கொண்டு வருகிறான் என்று சொன்னாள்.

பபியோலா அவளைத் தூக்கிப் பார்க்கும்போது, அவள் தன் வீட்டில் முன் வேலை செய்த அபிரா என்பவளென்று அறிந்து, என்ன விசேஷம், யார் துறத்தி வந்தது என்று விசாரித்தாள்.

அதற்கு அபிரா சொல்வாள்: "அம்மா, என் புருஷன், அபாக்யன், நாள்தோறுங் குடித்துப் போட்டு குடிவெறியில் என்னை அடிப்பது வழக்கம். ஆனால் இன்றைக்குச் செய்யாத கொடுமை எல்லாஞ் செய்து என்னைக் கொல்லும்படி அம்பும் வில்லும் எடுத்துக்கொண்டு துறத்தி வந்தான். நீங்கள் தான் என்னைக் காப்பாற்றவேண்டும்."

"அபிரா, பயப்படாதே. என் வீட்டில் இருக்கு மட்டும் உனக்கு மோசம் வராது."

"மெய்தான், அம்மா, அதினாலே தான் உங்களிடம் ஓடி வந்தேன். அம்மா, கிரேசியா கிறீஸ்துவளானதுபோல நானுங் கிறீஸ்துவளாக ஆசையாய் இருக்கிறேன்."

"வாஸ்தவமா, அபிரா? இந்த யோசனை எப்படி உனக்கு வந்தது?"

"பலநாளாய் எனக்கு இருந்தது. கிறீஸ்துவர்களை நான் பார்க்கும்போதெல்லாம், அவர்கள் முகத்தில் வசீகரகளையுஞ் சந்தோஷமும் இருப்பதைக் கண்டு, நானுங் கிறீஸ்துவளானால் எனக்கும் பூரண சந்தோஷமும் இருக்குமென்று யோசித்தேன். இது முதல், கிறீஸ்து வேதத்தின் பிரதான சத்தியங்களை எனக்கு அறிமுகமுள்ள ஒரு கிறீஸ்துவப் பெண் இரகசியமாய்ச் சொல்லிக் கொடுத்தாள்."

அப்போது ஒரோன்சியன் கேட்பான்: "ஐ—பலா எவ்வளவு காலம் உன் புருஷன் உன்னை இப்படி கிஷ்டேமாய் நடத்தி வந்தான்?"

"அநேக வருஷங்களுக்கு முன், எவுரோட்டன் என்ற ஒரு கொடியன் என்னை இரகசியமாய்க் கூப்பிட்டு, நஞ்சு கலந்த இரண்டு குப்பிகள் கேட்டான். அதில் ஒன்றில் தன பகைவனைக் கொல்லும்படி விஷமுள்ள நஞ்சும், வேறொன்றில் தன்னை மயக்கி சித்தஸ்வாதீனம் இல்லாமல் இருக்கும்படி செய்யத்தக்க நஞ்சுங் கலக்கும்படி சொன்னான். நான் அப்படியே செய்து, சின்னக் குப்பியில் கடும் விஷமும், பெரிய குப்பியில் மயக்கம் உண்டாக்கு நஞ்சுங் கலந்து அவன் கையில் கொடுக்கப் போகும் வேளையில், என் புருஷன் அந்தப் பக்கம் வந்ததால், இதை எவுரோட்டனுக்கு விவரிக்கச் சமயம் இல்லை. அவனுங் குப்பிகளை வாங்கிக்கொண்டு ஓடிப்போனான். இதினாலே யாருக்காவது பெரிய ஆபத்து வந்திருக்கலாம்."

ஒரோன்சியன் தன்னை இவ்விதங் காப்பாற்றின சர்வேசுரனுக்கு நன்றி அறிந்த ஸ்தோத்திரஞ் செய்தான். இப்படிப் பேசிக் கொண்டிருக்கையில் அபிரா, ஐயோ கொன்றான், என்று கதறிக் கீழே விழுந்தாள். பார்க்கும் போது அவள் நெஞ்சிலே ஒரு அம்பு பாய்ந்து, இரத்தம் நதிபோல் ஓடிவந்தது. அந்தச் சமயத்தில் நாமீதியன் ஒருவன் தன் வில்லை வளைத்துக்கொண்டு குதிரைமேல் ஏறி விரைவாய் ஓடினான்.

ஜூபலாவின் அவஸ்தையைக் கண்டு, பபியோலா கேட்பாள் :

"நீ கிறீஸ்துவளாய்ச் சாக ஆசையாய் இருக்கிறாயா?"

"ஆமா அம்மா, மெத்த ஆசையாய் இருக்கிறேன்."

"சர்வேசுரன் ஒருவர் என்றும், அவரிடத்தில் பிதா, சுதன், இஸ்பிரீத்து சாந்து வாகிற மூன்றாட்கள் இருக்கிறார்கள் என்றும் விசுவசிக்கிறாயா?"

"அம்மா, திருச்சபை படிப்பிப்பது எல்லாம், நான் உறுதியாக விசுவசிக்கிறேன்."

"சேசுக்கிறீஸ்துநாதர்சுவாமி நம்முடைய பாவங்களுக்காக மனிதனாய்ப் பிறந்து, பாடுபட்டு மரித்தார் என்று விசுவசிக்கிறாயா?"

"அம்மா, நீங்கள் விசுவசிப்பதெல்லாம் நானும் விசுவசிக்கிறேன்." இப்படிச் சொல்லும்போதே அவஸ்தை அதிகரித்தது. ஒரோன்சியன் ஓடிப்போய் ஊற்றிலிருந்து தண்ணீர் தன் கையில் அள்ளி வந்து அபிராவின் தலையில் ஊற்றி, ஞானஸ்நானங் கொடுக்கும்போது சொல்லும் வாக்கியத்தைச் சொன்னான்.

ஐ-யலா ஞானஸ்நானம் பெற்றவுடனே கண்ணை விழித்துப் பார்த்து, சந்தோஷத்தின் அடையாளங் காட்டி, தன் பாவத்துக்குப் பரிகாரமாகச் சிந்தின இரத்தத்தோடு ஞானஸ்நானத்தின் தண்ணீருங் கலந்து சேர, பாக்கியவதியாய் இறந்தாள்.

பிரேதத்தை எடுத்துக் கிறீஸ்துவர்களுக்குத் தக்க வகையாய் அடக்கஞ் செய்யும்படி தாகுவாதனுக்குச் சொல்லி, பபியோலாவும் பரதேசியும் வீட்டுக்குள்ளே போனார்கள். பபியோலாவின் வீடு முன இருந்ததற்கும், இப்போது இருப்பதற்குமுள்ள வித்தியாசத்தைக் கண்டு ஒரோன்சியன் அதிசயப்பட்டான். இப்போதோ, வீட்டில் விநோத காட்சிப் பொருள்களும, விஜித்திரங்களும், ஒன்றும் இல்லை. எல்லாம் வெகு சாதாரணமாய் இருந்தது.

இப்படி வீட்டைப் பார்த்து வரும்போது, ஓர் இடத்தில் முத்து நவரத்னங்களால் அலங்கரிக்கப்பட்ட ஓர் பெட்டி திரையால் மூடி இருந்தது. திரையை இழுத்துப் பார்க்க, பெட்டியின்மேல் பின்வரும் வாக்கியம் பதிந்திருந்தது.

"பாக்கியவதியான மீரியா கோடியர் கையால் சிந்தின இரத்தம்."

ஒரோன்சியன் இதை வாசித்தவுடனே, முகம் வெளுத்து, மனம் பதைத்து நிற்பதை பபியோலா கண்டு, அவனைத் தேற்றி, ஒரோன்சியா, நாம் இருவரும் நாணி வெட்கப்படும்படி செய்யத்தக்கது இந்தப் பெட்டிக்குள் இருக்கின்றது. ஆனால் அவநம்பிக்கைக்கு இடமில்லை, என்று சொல்லி பெட்டியைத் திறந்தாள். அதற்குள் மீரியாவின் ஜங்கத் துண்டும் அதின்மேல் இரத்தக் கறைபிடித்த கூர்மையான இரண்டு ஆயுதங்களும் இருந்தன. இவைகளில

ஒன்று, பபியோலா தன் யௌவன காலத்தில் கையில் வைத்திருந்த எழுத்தாணி போன்ற ஆயுதம். வேறொன்று புல்வியன் தன் இடையில் மறைத்து வைத்திருந்த கட்டாரி.

இவைகளைக் காட்டின பின்பு பபியோலா சொல்வாள் :

“ஒரோன்சியா, நாமிருவரும் அறியாமல் மீரியாவைக் காயப்படுத்தினோம். ஆனால் நான் அந்த நீஷ்டூர செய்கையைச் செய்த அந்த நாளில் உன் சகோதரி காட்டிய உத்தம தர்ம குணமே நான் மனந்திரும்ப ஏதுவாயிருந்தது. உனக்கும் அப்படித்தான் அல்லவா?”

“அம்மா, எனக்கும் அப்படியே. என் சகோதரி அந்நாளில் உங்கள் உயிரைக் காப்பாற்றத் தன் உயிரைக் கொடுக்கும்படி நடுவில விழுந்ததை நான் பார்த்தது முதல், சர்வேசுரனுடைய தேவ வரப்பிரசாத ஒளி என் மனதில் உதித்தது.”

“ஒரோன்சியா, தயையுள்ள சர்வேசுரன் இவ்வகையான உபாயங்களைத்தான் சாதாரணமாய்ப் பிரயோகிக்கின்றார். சேசுநாதர் சுவாமி சிந்தின இரத்தம் வேதசாட்சிகளுக்கு உறுதியுந் திடனுங் கொடுக்கின்றது. நாம் வேதசாட்சிகளின் இரத்தத்தைப் பார்த்து, அவரைத் தேடிப் போகின்றோம். வேதசாட்சிகளின் இரத்தம் நமக்காக சர்வேசுரனிடம் அபயமிடுகின்றது. சேசுநாதருடைய அளவில்லாப்பேறுள்ள திரு இரத்தம், நம்மைச் சுத்தமாக்கி அர்ச்சிக்கின்றது.”

“ஓ! கிறீஸ்துவர்கள், வேதசாட்சிகளாய் மரித்த பாக்கியவான்களை மறந்து போகாமல் அவர்களுடைய புண

ணிய ஒழுக்கத்தை என்றும் ஒரு மேல்வரிச்சட்டமாய் கண் முன் வைத்து சீரான பாதையில் நடப்பார்களாக.

“வேதசாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் வித்தாகி, சத்திய வேதந்தழைத்துச் செழித்து, எங்கும் பரம்பி, சகல ஜாதி ஜனங்களுக்கும் நித்தியானந்த பாக்கியங் கொடுப்பதாக.”

இதைச் சொன்னபின் இருவரும் முழங்காலில் இருந்து வெகு நேரம் ஜெபஞ் செய்தார்கள்.

அதன் பின்பு ஒரோன்சியன் எழுந்து புறப்பட்டு சீரியா நாட்டின் வனாந்தரத்துக்கு முன்போல் தபஞ் செய்யப் போனான். அங்கே மலையின கணவாயோரத்திலிருக்குங் கல்லறைக்குள், சர்வேசுரனிடஞ் சமாதானமாய் நித்திரை செய்கின்றான்.

பபியோலா, மீதியாயிருந்த தன் ஜீவிய நாட்களைப் புண்ணியதர்ம ஒழுக்கத்தில் செலுத்தியபின், தன் செல்வ பாங்கி அக்நேசி, மீரியா, இவர்களுடன் நித்திய சமாதானத்தில் இளைப்பாறும்படி பாக்கியவதியாய் தன் காலகதியை அடைந்தாள்.

# திருச்சபை வெற்றியின் அற்புதகாட்சி

1. முன்னெதிரிலே முறையொடு வரும் ஜெய காட்சி
என்னெதிரிலே இருப்பதால் இசைப்ப நான் கேளீர்!
தன்னெதிரிலாக் கதிரொளி விசும்பிடை தாவி
பொன்னெதிரொளி என அருணோதயம் போன்றே.

2. செம்மை வாமெஞளிச் சிறப்பினைக் கண்ட அச்சணமே
வெம்மையோடெரிதீயிலே வெருண்டெலாப்பேயும்
தம்மை மூழ்கியே ஒளித்ததில் துயரினைந்தாரா,
பொம்மை ஆடலபோல் துடித்தழுதயர்விலாப் பொடிப்
[பார்.

3. மூர்ந்தும் ஆதியை முறையில்லாப் பழித்துனை பேசி
நிந்தையானபோர் மதியிழந்தேவிய நீசச்
செந்துபோன்ற மானிடர் பவச் செய்கையை வெறுத்து
எந்தை ஆண்டவன் பதமலர் ஏற்றிடல் துணிவார்.

4. நீண்ட நாளளவாகவே மனத்தினில் நிறைந்து
தீண்டவே பெரும் நெருப்பென சுடுங்கடுங்கோபம்
ஆண்டு நீங்கிட அமர்ந்திடப் போர்வகை அனைத்தும்
வேண்டுமேல் அறம் விருப்பொடு எவரையுஞ்சேர்க்கும்.

5. தேவபத்தியுஞ் சீர் அருள் முதற் பல அறமும்
காவல் செய்துயிர் காத்திடும் நாணமும் நிறையும்
சிவ்னுக் கொளி தரும் கொடை சீர்மையும் அன்பும்
மேவிபொன்றிட வீட்டிடை வாழுவர் போன்றே.

6. சீர் எலாம் நிறை ஜெகம் புகழ் உரோமை மாநகரே !
பார் எலாம் நிகரற்றுயர் வெற்றியார் பதியே !
ஏர் எலா[illegible] திருமறை தாங்கும் இல்லிடமே !
நேரிலா ஜெய அரசியாய் நீடு நீ வாழ்வாய் !

7. இலங்கும் வான்சுடர் எரித்திடும் இந்தியா நாடே !
கலங்கி அஞ்சியே கவலையுற்றயாவது ஏனோ ?
துலங்கும் ஞானமாம் விளக்கம், நல்லொளி மிகத்தெளிக்க
நலங் கொண்டோங்கி நீ மெய் மறைக்குடையின் கீழ் [வாழ்வாய்.

முற்றிற்று.